உனக்குள் நான் உயிரே!

ரம்யா ராஜன்



உனக்குள் என் உயிரே!

ரம்யா ராஜன்

அன்பு இல்லம்

கே.கே.பி. காம்ப்ளக்ஸ்,
எண். 107/2, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
செல்: 9003145746

நூல் குறிப்பு

நூல் தலைப்பு	**உனக்குள் என் உயிரே!**
ஆசிரியர்	ரம்யா ராஜன்
மொழி	தமிழ்
முதற் பதிப்பு	செப்டம்பர், 2016
உரிமை	ஆசிரியருக்கு
தாளின் தன்மை	11.6 K.g. வெள்ளைத் தாள்
நூலின் அளவு	1 × 8 கிரவுன்
அச்சு எழுத்து	11 புள்ளிகள்
மொத்தப் பக்கங்கள்	**636**
பைண்டிங்	சாதா அட்டை

விலை: ரூ. 330.00

வெளியிடுவோர் **அன்பு இல்லம்**
கே.கே.பி. காம்ப்ளக்ஸ்,
எண். 107/2, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
செல்: 9003145746

கணினி அச்சு மாதா பிரிண்டர்ஸ், சென்னை - 69.
செல்: 8939427929

அச்சிட்டோர்: மஞ்சு ஆப்செட், சென்னை - 5.

உனக்குள் என் உயிரே!

1

ஆஸ்திரேலியா, மெல்போர்ன் நகரம். நேரம் நள்ளிரவு இரண்டு மணி. விடாமல் அடித்த தன் செல்போன் சத்தத்தில் எழுந்த அர்ஜுன், அழைத்தது யார் என்று பார்க்க, அழைத்தது அவனது நெருங்கிய நண்பன் சூர்யா.

"டேய்... இப்ப இங்க என்ன டைம் தெரியுமா...? இப்ப எதுக்குடா போன் பண்ற...?" என்று அர்ஜுன் கேள்விகளாகக் கேட்க, சூர்யாவிடம் இருந்து எந்தப் பதிலும் இல்லை.

"என்ன ஆச்சு சூர்யா...? அம்மா, அப்பா நல்லா இருக்காங்களா...? ஏதாவது பிரச்சினையா...?" என்றவனுக்கு, ஏதோ முக்கியமான காரணம் இருப்பதால் தான் சூர்யா இந்நேரத்தில் அழைத்திருக்கிறான் என்று புரிந்தது.

"எல்லோரும் நல்லா இருக்காங்க அர்ஜுன். நீ டி.வி. போட்டு, தமிழ் நியூஸ் சேனல் பார்த்திட்டு எனக்குப் போன் பண்ணு..." என்றவன், போனை வைத்து விட்டான்.

"டேய் சூர்யா... பச்..." 'எதுக்கு இப்ப நியூஸ் பார்க்கச் சொல்றான்...?' அலுத்துக்கொண்டே எழுந்த அர்ஜுன், டி.வி.யைப் போட்டுத் தமிழ் நியூஸ் தேடி வைக்க,

இன்றைய முக்கியச் செய்திகள். பெங்களூரில் இருந்து கர்நாடகா காட்டுப் பகுதிக்குச் சுற்றுலா சென்ற பள்ளிக்கூட மாணவிகள் பஸ்சுடன் கடத்தப்பட்டனர். அவர்களுடன் சென்ற நான்கு ஆசிரியர்களும், பஸ் டிரைவரும் கடத்தப்பட்டார்கள்.

யார் கடத்தியது ? என்ற விவரமோ, அவர்கள் கோரிக்கை என்னவென்றோ இன்னும் தெரியவில்லை. கடத்தப்பட்டவர்கள் விவரம் என்று டி.வி.யில் ஒவ்வொரு மாணவிகளின் புகைப்படமும், பெயரும் வர, அது முடிந்து, கடத்தப்பட்ட ஆசிரியர்களின் விவரம் வந்தது.

ஒவ்வொரு புகைப்படமாக வர, ஒரு புகைப்படத்தைப் பார்த்ததும் அதிர்ச்சி அடைந்த அர்ஜுன், "மீரா..." என்று கத்த, செய்தியாளரும் அந்தப் பெயரையே சொல்ல, அப்போது அவன் செல் திரும்ப அழைத்தது.

"சூர்யா... மீரா..." என்று மேலே பேச முடியாமல் அர்ஜுன் திணற,

"அர்ஜுன்... டென்ஷன் ஆகாத. அவ எங்க இருக்கான்னே தெரியாம இருந்தோம், இப்ப தெரிஞ்சிடுச்சு. கடத்தினவங்க ஒண்ணும் பெரிய தீவிரவாதிங்க இல்லை. நான் இப்பதான் எனக்குத் தெரிஞ்ச போலீஸ் ஆபீசர்கிட்ட விசாரிச்சேன். பயப்படும்படியா எதுவும் இல்லைன்னு சொல்றாங்க. நீ உடனே இங்க கிளம்பி வா..." என்றான் சூர்யா.

"சரிடா... நான் உடனே கிளம்பி வரேன்..." என்று போனை வைத்த அர்ஜுனுக்கு, மீரா கிடைத்ததை நினைத்துச் சந்தோஷப்படுவதா... இல்லை, இப்போது அவள் இருக்கும் நிலையை நினைத்து வருத்தப்படுவதா என்று தெரியவில்லை. யோசிக்க நேரம் இல்லாததால், வேகமாகக் கிளம்பினான்.

தன்னுடன் வேலை பார்க்கும் நண்பனுக்கு அழைத்து, தான் உடனடியாக இந்தியா செல்ல வேண்டி இருப்பதைச் சொன்னவன், வேகமாக டாக்ஸியில் விமான நிலையம் சென்று, அடுத்து இருந்த சிங்கப்பூர் விமானத் திற்குப் பயணச் சீட்டு வாங்கிவிட்டு சூர்யாவை அழைத் தான்.

"சூர்யா... நான் சிங்கப்பூர் போய் அங்கிருந்து பெங்களூர் போறேன்..."

"சரி அர்ஜுன், அப்படியே பண்ணு. நான் இப்ப கார்ல பெங்களூர் கிளம்பிட்டேன்..."

"டேய்... அவளுக்கு ஒண்ணும் ஆகாது இல்ல... பத்திரமா திரும்பிக் கிடைச்சுடுவா இல்ல..." அர்ஜுனின் குரலில் இருந்தே அவன் வேதனையை உணர்ந்த சூர்யா,

"அவ நல்லபடியா உனக்குக் கிடைப்பா, பயப்படாம வா..." என்று சொல்லிப் போனை வைக்க, அர்ஜுன் சென்று விமானத்தில் ஏறினான்.

விமானத்தில் ஏறியவன், 'மீரா... ஏன்டி இப்படிப் பண்ண...? உன்னை நான் திரும்பி இப்படியா பார்க்க ணும்...?' என்று நினைத்துக்கொண்டே கண்ணை மூட, அவன் விழிகளுக்குள் மீரா வந்தாள்.

அன்று கல்லூரியில் கிரிக்கெட் போட்டி. அர்ஜுன் தான் அவர்கள் காலேஜ் டீமின் கேப்டன். அவர்கள் கல்லூரிக்கும் இன்னொரு கல்லூரிக்கும் இடையே இறுதிப் போட்டி நடந்து கொண்டு இருந்தது.

முதலில் அந்தக் கல்லூரி பாட்டிங் செய்து 240 ரன்கள் எடுத்து விட, இப்போது அர்ஜுனின் டீம் ஆடிக் கொண்டிருந்தனர்.

அர்ஜுன்தான் முதலில் பாட்டிங் செய்ய இறங்கினான். அவனோடு பாட்டிங் செய்ய இறங்கியவர்கள் ஒவ்வொருவராக அவுட் ஆகிச் சென்றுவிட, அர்ஜுன் நிலைத்து நின்று ஆடி, அவன் மட்டுமே 100 ரன்கள் எடுத்திருந்தான். ஜெயிக்க இரண்டு பந்துகளில் நான்கு ரன்கள் தேவைப்பட்டது.

அர்ஜுன் மிகவும் டென்ஷனாக இருந்தான். சொதப்பிடக் கூடாதே என்று சாமி கும்பிட்டுக் கொண்டே

பந்தை எதிர் நோக்கிக் காத்திருந்தான். அப்போது எல்லோரும் "அர்ஜுன் ஃபோர்" என்று கத்த, அதில் ஒரு குரல் மட்டும் "அர்ஜுன்... அவுட்..." என்று கத்தியது.

அர்ஜுனுக்குச் சுள் என்று கோபம் வர, சட்டென்று திரும்பிக் குரல் வந்த திசையைப் பார்த்தான். அவன் பார்ப்பது தெரிந்ததும், அந்தக் குரலுக்குச் சொந்தக்காரி எழுந்து நின்று "அர்ஜுன்... அவுட்..." என்று சத்தமாக மீண்டும் கத்த, அர்ஜுன் பாட்டைத் திருப்பி அவள்புறம் காண்பித்தான். அந்தக் காலேஜ் பொண்ணு போல என்று நினைத்தவன், பந்தை அடிக்க ரெடி ஆனான்.

அந்தப் பந்தில் அவனால் ரன் எதுவும் அடிக்க முடியவில்லை. கடைசிப் பந்து. இந்த முறையும் அவள் "அர்ஜுன்... அவுட்..." என்று கத்த,

'ச்சே... இவ ஒருத்தி... அவுட் ஆக்காம விட மாட்டா போலிருக்கு...' என்று அவள் மேல் இருந்த எரிச்சலில் அர்ஜுன் பந்தை விளாச, அது சிக்ஸர். எல்லோரும் சந்தோஷக் கூச்சல் போட, அர்ஜுனின் டீம் அவனைத் தூக்கிக் கொண்டாடினார்கள்.

அர்ஜுன் கெத்தான பார்வையுடன் அவனைப் பார்த்து அவுட் என்று கத்திய பெண்ணைத் திரும்பிப் பார்க்க, அவள் சோகமாக இல்லாமல் சந்தோஷமாக ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தாள்.

'இவ என்ன லூசா? கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தான் அவுட் ஆகனும்னு கத்தினா... இப்ப சந்தோஷமா இருக்கா...' என்று நினைத்தவன், 'இந்தப் பொண்

ணுங்களைப் பத்திப் புரிஞ்சிக்க முடியாதுன்னு இதனால தான் சொல்றாங்களோ...?' என்று நினைத்தவன், அவளை மறந்து, அவன் நண்பர்களுடன் வெற்றியைக் கொண்டாடினான்.

"ஏய் மீரா... உனக்குக் கொஞ்சமாவது அறிவு இருக்கா? எதுக்குடி நம்ம காலேஜ் பையனைப் பார்த்து அவுட்னு கத்தின...?"

"கூல்... கூல்... டென்ஷன் ஆகாத கீத்து. அவனை எப்படி என்னைப் பார்க்க வைக்கிறதுன்னு தெரியலை, அதனாலதான் அப்படிக் கத்தினேன். திரும்பிப் பார்த்தான்... பார்த்த இல்ல..." மீரா பெருமையுடன் தன் சுடிதாரில் இல்லாத காலரைத் தூக்கிவிட,

"அவனுக்கு மட்டும் நீயும் இதே காலேஜ்னு தெரிஞ்சுது... மகளே உன்னைக் கைமா பண்ணிடுவான். பேசாம வா, அவன் பார்க்கிறதுக்குள்ள போயிடலாம்..." என்ற கீர்த்தனா, மீராவின் தோழி, அவள் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு செல்ல... மீரா, அர்ஜுனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றாள்.

"ஆள் சூப்பர் இல்ல... போன வருஷம் நான் காலேஜ் சேர்ந்த அன்னைக்கு, இவனத்தான் முதல்ல பார்த்தேன். இவன்தான் எனக்கு ரோஸ் குடுத்து வெல்கம் சொன்னான்..." மீரா பெருமையடிக்க,

"அன்னைக்கு ப்ரெஷெர்ஸ் டே. அவன் உனக்கு மட்டும் இல்ல, எனக்கும்தான் ரோஸ் குடுத்தான். ஏதோ

உனக்கு லவ் ப்ரொபோஸ் பண்ணி பூ குடுத்த மாதிரி ஃபீல் பண்ற...?" கீர்த்தனா அவள் மூக்கை உடைத்தாள்.

"ம்ம்.... நீ சொல்ற மாதிரி இருந்திருந்தாக் கூட நல்லாத்தான் இருக்கும்..." மீரா கண் சிமிட்டிச் சிரிக்க,

"எல்லாமே உனக்கு விளையாட்டுதான். உனக்கு அவனைப் பத்தி என்ன தெரியும்...?"

"எனக்கு அவன் வரலாறே தெரியும். அவன் அர்ஜுன் பி.டெக். ஃபைனல் இயர். அவனுக்குக் கூடப் பிறந்த அண்ணனும், ஒரு தங்கச்சியும் இருக்காங்க. அப்புறம் அவங்க அப்பா ஒரு பெரிய கார்மென்ட் பாக்டரி அண்ட் ஷோ ரூம் வச்சிருக்கார். அவங்க அம்மா ஹவுஸ் ஓய்ப்..."

"ஆமா... நீ எதுக்கு அவனைப் பற்றி இவ்ளோ விஷயம் தெரிஞ்சு வச்சிருக்க...?"

"சும்மாதான். அவனை நான் காலேஜ் திறந்த முதல் நாள் அன்னைக்கே பார்த்தேன். அப்புறம் அவனை நம்ம காலேஜ்ல நிறைய முறை பார்த்திருக்கேன். ரொம்ப ஸ்மார்ட், நல்ல டைப். எல்லோருக்கும் உதவி செய்வான். ரொம்ப ஆக்டிவ்..." மீரா மடை திறந்த வெள்ளமாக அர்ஜுனைப் பற்றிச் சொல்லிக் கொண்டே செல்ல,

கீர்த்தனா நடக்காமல் அதே இடத்தில் நின்று மீராவின் முகத்தையே பார்த்தாள். 'ரொம்ப உளறிட் டோமோ...' என்று நினைத்த மீரா, "கான்டீன் போலாமா...?" என்றதும், கீர்த்தனா அவளோடு நடந்தாள்.

இருவரும் கான்டீன் சென்றபோது அங்கே மற்ற தோழிகளும் இருக்க, எல்லோரும் சேர்ந்து அரட்டை அடித்துக் கொண்டே சாப்பிட்டனர்.

அப்போது அர்ஜுன் அவனின் தோழர்களுடன் அங்கே வர, மீரா மறைந்து உட்கார்ந்து கொண்டாள்.

அர்ஜுனும் அவன் நண்பர்களும் கூல் ட்ரிங்க்ஸ் வாங்கி அரட்டை அடித்துக் கொண்டே குடித்தவர்கள், வெளியே இருந்த காரிடாரில் அவர்களுக்குக் கிடைத்த பரிசுக் கோப்பையை வைத்துச் சுற்றி நின்று ஆட, அதை எல்லோரும் கைதட்டி ரசித்தனர். மற்ற மாணவர்களும் வந்து சேர்ந்து கொள்ள, கொஞ்ச நேரம் பாட்டாலும், நடனத்தாலும் அந்த இடமே அதிர்ந்தது.

அவர்கள் வெளியே ஆட, இங்கே மீரா அவள் தோழிகளுடன் உள்ளே ஆடிக் கொண்டிருந்தாள். ஆடிக் களைத்தவர்கள், மறுபடியும் கான்டீன் உள்ளே வந்து அமர்ந்தார்கள். மீராவின் தோழிகள், "கிளம்பலாமா...?" என்றதற்கு, 'இப்போது சென்றால் அர்ஜுனிடம் மாட்டிக் கொள்வோம்...' என்று நினைத்தவள், "இன்னும் கொஞ்ச நேரம் கழித்துப் போகலாம்..." என்றாள்.

"அர்ஜுன்... ஈசியா ஜெயிக்க வேண்டிய மேட்ச்... கடைசிப் பந்து வரை கொண்டு வந்து... இப்படி டென்ஷன் பண்ணிட்டியே..." கூட்டத்தில் ஒருவன் கேட்க,

"ஏன்டா சொல்ல மாட்டீங்க? நீங்க எல்லோரும் அவுட் ஆகிப் போயிடுவீங்க... நான் மட்டும் நின்னு ரன் எடுக்கணும். அதுவும் இன்னைக்கு ஒரு பொண்ணு நான்

அவுட் ஆகணும்னு சத்தமா கத்தினாடா... அந்தக் காலேஜ் பொண்ணா இருக்கும். இருந்தாலும் நம்ம காலேஜ் வந்திருக்கும் போது அப்படிக் கத்த தைரியம் வேண்டும். அவ மட்டும் நம்ம காலேஜா இருந்திருக்கணும்... நேரா போய் முகரையைப் பேத்திருப்பேன். தப்பிச்சிட்டா...” அர்ஜுன் கையை மடக்கிக் காற்றில் குத்த,

அதைப் பார்த்துக்கொண்டிருந்த மீரா, ‘போச்சு... இவன் கைல மாட்டினோம், செத்தோம்...’ என்று நினைத்தவள், கீர்த்தனாவைப் பார்க்க, அவள், ‘உனக்கு இது தேவையா...?’ என்பது போல் முறைத்துக் கொண்டு இருந்தாள்.

மேலும் சிறிது நேரம் அரட்டை அடித்து முடித்து அர்ஜுனும், அவன் நண்பர்களும் கிளம்ப, மீராவும் கிளம்பினாள். தோழிகளிடம் விடைபெற்றுக் கார் பார்க்கிங் செல்ல, அங்கே எதிரே அர்ஜுன் வந்து கொண்டிருந்தான். அவன் பார்ப்பதற்கு முன், அருகில் இருந்த காரின் பின் சென்று மறைந்தவள், அவன் முன்னே வர வர காரை மெதுவாகச் சுற்றி, அவன் பார்ப்பதற்கு முன் சென்று காரில் ஏறினாள்.

அர்ஜுன், அவளைப் பார்க்காமல் பைக்கில் ஏறிச் செல்ல, அவன் சென்றதும் மீராவும் அவள் காரை ஓட்டிக்கொண்டு சென்றாள். கல்லூரிக்கு வெளியே வந்த அர்ஜுன், அங்கே நின்ற தன் நண்பனுடன் வண்டியை ஓரமாக நிறுத்திவிட்டுப் பேச, அப்போது அவனைக் கடந்து ஒரு கார் சென்றது.

யாரோ என்று அலட்சியமாகப் பார்த்தவன், அதிலிருந்த மீராவைப் பார்த்ததும், ‘இவதான இன்னைக்கு என்னைப் பார்த்துக் கத்தினா... இவ்வளவு நேரம் இங்க என்ன பண்ணா...?’ என்று யோசித்தவன், திரும்பி அவளைப் பார்ப்பதற்குள், அவள் கார் சென்று விட்டது.

மீரா நேராக வீட்டிற்குச் செல்லாமல், வழியில் இருந்த கோவில் முன்பு காரை நிறுத்திவிட்டு, வெளியில் பொரி விற்றுக் கொண்டிருந்த பையனிடம் கொஞ்சம் பொறியை வாங்கினாள். அவள் அடிக்கடி இந்தக் கோவிலுக்கு வருவதால், அந்தப் பையனுக்கு அவளை நன்றாகத் தெரியும்.

“மீராக்கா... எப்பவும் போலப் பத்து ரூபாக்கு தானே...” என்றவன், அவளிடம் பொட்டணத்தைக் கொடுக்க, அதை எடுத்துக் கொண்டு கோவில் குளத்தின் கீழ் படியில் சென்று அமர்ந்தாள். அது வழக்கமாக அவள் வரும் நேரம் என்பதால், குளத்தில் மீன்கள் அவளுக்காகக் காத்திருக்க, மீரா பொரியை நீரில் தூவியதும், அங்கிருந்த மீன்கள் ஆவலாகச் சாப்பிட, மீரா அதை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அங்கே அரை மணி நேரம் இருந்தவள், பின்பு அங்கிருந்து கிளம்பித் தங்கள் வீடு இருக்கும் பகுதியில் உள்ள சிறுவர் பூங்காவுக்குச் சென்றாள். அங்கே விளையாடும் குழந்தைகளை வேடிக்கை பார்த்தவள், சிறிது நேரம் அவளும் குழந்தையாக மாறி, அவர் களுடன் விளையாட, குழந்தைகளின் தாய்மார்கள், மீரா

குழந்தைகளைப் பார்த்துக் கொள்வாள் என்ற நிம்மதியில் அரட்டை அடிக்க, ஒரு மணி நேரம் கழித்து மீரா வீட்டுக்குக் கிளம்பினாள்.

மீரா வீட்டுக்குச் செல்லும் போது மணி ஏழு. இப்போதும் அவளுக்கு வீட்டுக்குச் செல்ல இஷ்டம் இல்லை. ஆனால், இதற்கு மேல் அவளால் வெளியே இருக்க முடியாது. அதனால் வேறு வழி இல்லாமல் சென்றாள். ஏன்...?

அர்ஜுன் வீட்டிற்குப் பரிசுக் கோப்பையுடன் வந்ததும், அவனது அம்மா வித்யா, அவனுக்குத் திருஷ்டி கழித்தே உள்ளே செல்ல விட்டார்.

"அம்மா... உங்களுக்கே இது கொஞ்சம் ஓவரா தெரியலை. உங்க பையன் காலேஜ்ல விளையாடி கப் வாங்கினதுக்கு, ஏதோ ஐ.பி.எல்-ல விளையாடி ஜெயிச்ச மாதிரி பில்ட் அப் குடுக்குறீங்க. இது ரொம்ப த்ரீ மச்..." அர்ஜுனின் தங்கை ஆராதனா பொய்யாகக் கோபிக்க,

"நீ சும்மா இரு... உனக்கு ஒண்ணும் தெரியாது. இன்னைக்கு எல்லார் கண்ணும் அவன் மேலதான் இருந்திருக்கும், அதனாலதான் திருஷ்டி கழிச்சேன்..." என்றார் வித்யா.

"அம்மா... இவளுக்குப் பொறாமை மா. அதுதான் இப்படிச் சொல்றா..." என்ற அர்ஜுன் தொடர்ந்து,

"நீ இதுவரை விளையாடி ஜெயிச்சு ஒரு டீ கப்பாவது வாங்கி இருக்கியா ஆரு...? நீ எல்லாம் இதைப் பத்திப் பேசக் கூடாது..." அவன் தங்கையை வம்பு இழுக்க,

"நான் எதுக்குப் பிரதர் வாங்கணும்...? அதுதான் எனக்கும் நம்ம அண்ணனுக்கும் சேர்த்து நீங்க கப்பா வாங்கி வீடு முழுக்கக் குமிச்சி வச்சுருக்கீங்களே... பத்தாதா...? நாங்க வேற வாங்கணுமா...? இன்னைக்கு உங்க காலேஜ் பொண்ணுங்க எல்லாம் உங்களை ரொம்ப உற்சாகப்படுத்தி இருப்பாங்களே... ஒரே மஜாவா...?" ஆராதனா கண் சிமிட்டிக் கேட்க,

அர்ஜுனுக்கு மீரா சொன்ன 'அர்ஜுன் அவுட்' என்றது ஞாபகம் வர, அவன் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

"ஒரு அண்ணன்காரன்கிட்ட பேசுற மாதிரியா பேசுற...? ரொம்ப வாய் உனக்கு. அவனுக்கு இதெல்லாம் பிடிக்காது..." என்று வித்யா, தன் மகளுடன் சண்டைக்குச் செல்ல,

"பாருங்க... ஒரு நாள் லவ் பண்றேன்னு வந்து நிற்கப் போறான்... அப்ப தெரியும் உங்களுக்கு...?" என்றாள் ஆராதனா.

வித்யாவுக்கு மேலும் கோபம் வர, "பாருடா அர்ஜுன், எப்படிச் சொல்றான்னு..." என்றார்.

இதற்கு முன்பு ஆராதனா இப்படிச் சொல்லும்போது எல்லாம், 'நான் எங்க அம்மா சொல்ற பொண்ணத்தான் கல்யாணம் பண்ணுவேன்...' என்று சொல்லும் அர்ஜுன்,

இன்று, "அவ... சும்மா விளையாட்டுக்குச் சொல்றா மா, விடுங்க..." என்றவன், அவன் அறைக்குள் செல்ல... அவனை வித்யாவும், ஆராதனாவும் ஆச்சர்யமாகப் பார்த்தனர்.

"அம்மா... வாழ்த்துக்கள். உங்களுக்குச் சீக்கிரமா சின்ன மருமகள் வந்திடுவா போலிருக்கு..." ஆராதனா வித்யாவைச் சீண்ட,

"என் பையன் அப்படி எல்லாம் செய்ய மாட்டான்..." என்றார் வித்யா அழுத்தமாக.

"எல்லா அம்மாவும் இப்படித்தான் அவங்க பையனுங்களைப் பற்றி நினைப்பாங்க... ஆனா, பைய னுங்க கடைசியில கல்தா குடுக்கும்போதுதான் தெரியும்."

"எனக்கு அர்ஜுன் பற்றித் தெரியும். அவன், நான் பார்க்கும் பொண்ணத்தான் கல்யாணம் பண்ணுவான்..." என்றார் வித்யா நம்பிக்கையாக.

"அவனுக்கு வரப் போற மனைவியை அவன் தேர்ந்து எடுக்கிறது தப்பா...? ஏன்மா இன்னும் பழைய காலமாவே இருக்கீங்க...?" விடாமல் ஆராதனா வழக்கடிக்க,

"எனக்கு அதெல்லாம் தெரியாது ஆரு... எனக்கு என் பையனுக்கு வர்ற பொண்டாட்டிய நான்தான் தேர்ந்து எடுக்கணும்..." என்றவர்,

"எல்லாம் உங்க அப்பா உங்களுக்குக் கொடுக்கிற இடம். அதுதான் நீ இப்படிப் பேசுற. அவர் தான எப்பவும்

'என் பசங்க விரும்பினா, நான் கல்யாணம் செஞ்சு வைப்பேன்'னு சொல்றாரு. அதுதான் உங்களுக்குத் தைரியம்..." என்றார் வித்யா கடுமையான குரலில்.

"அப்பாவ எதுக்குமா திட்றீங்க?" ஆராதனா கேட்டுக் கொண்டு இருக்கும் போதே உள்ளே வந்த கணேசன், "உங்க அம்மா என்ன இன்னைக்குத்தான் என்னைப் புதுசா திட்றாளா...? அது கல்யாணம் ஆன நாள்ல இருந்துதான் திட்றா..." என்றவர், ஆராதனா அருகில் சென்று அமர்ந்தார்.

"இன்னைக்கு என் தலை உருளும் காரணத்தை நான் தெரிஞ்சிக்கலாமா...?" என்று அவர் கேட்டுக் கொண்டிருக்கும் போதே, அர்ஜுனும் அவர் அருகில் வந்து அமர்ந்தான்.

"இல்லப்பா... என் பசங்க யாரையாவது விரும்பினா நான் கல்யாணம் பண்ணி வைப்பேன்னு நீங்க சொன் னீங்கல்ல... அதுக்குத்தான் அம்மா திட்றாங்க." ஆராதனா சொன்னதைக் கேட்ட கணேசன்,

"ஏன், அதுல என்ன தப்பு...? என் பசங்களுக்கு நான் நல்லது கெட்டது சொல்லித் தந்து வளர்த்திருக் கேன்... அவங்க எதையும் யோசிச்சுத்தான் செய்வாங்க.

"அவங்களுக்கு அறியாத பருவத்தில் வரும் பப்பி லவ்வ அவங்க கடந்திட்டாங்க. அவங்களுக்கு இப்ப விவரம் தெரியும். கல்யாணம்கிறது ஒரு வழிப் பாதைன்னு அவங்களுக்குத் தெரியும். இனி அவங்க யாரையாவது விரும்பினா... அவங்க நல்லா யோசிச்சுதான் முடிவு

எடுப்பாங்க.... எனக்கு என் பிள்ளைங்க மேல நம்பிக்கை இருக்கு...” என்றார்.

“இப்படிப் பேசிப் பேசியே பசங்களைக் கெடுங்க...” வித்யா சலித்துக் கொள்ள,

“ஏன், நம்ம முதல் பையன் ஆதிகிட்டேயும் நான் இதேதான் சொன்னேன்... அதுக்காக அவன் லவ் பண்ணிட்டானா...? அவனுக்கு உன்னைத்தான பெண் பார்க்கச் சொல்லி இருக்கான்...

“நாம நம்ம விருப்பத்தை அவங்க மேல திணிக்காமல், அவங்களுக்குத் தேவையான சுதந்திரம் கொடுத்தா... அவங்களும் நிதானமா யோசிச்சுத்தான் முடிவு எடுப்பாங்க...” என்றார் கணேசன் விளக்கமாக....

“எனக்கு இதெல்லாம் சரி வரும்னு தோணலை. பசங்களுக்கு என்ன தெரியும்? அவங்க தேர்ந்தெடுக் கிறவங்க, குடும்பத்துக்கு ஒத்து வருவாங்களா...? நல்லவங்களான்னு அவங்களுக்குப் பார்க்கத் தெரி யுமா...?” வித்யா தன் குமுறலைக் கொட்ட,

“அவங்களுக்குத் தங்களோட வாழ்க்கைத் துணையைச் சரியாகத் தேர்ந்து எடுக்கத் தெரியலைன்னா, அது அவங்க தப்பு இல்லை... நம்ம தப்புதான்.

“பெத்தவங்கதான் பிள்ளைங்களுக்கு வழி காட்ட ணும். பாசம் வச்சு, சாப்பாடு போட்டு, அவங்க கேட்கிறதை வாங்கிக் கொடுக்கிறது மட்டும் பெத்தவங்க கடமை இல்ல. பிள்ளைங்களுக்கு நல்ல விஷயங்களைச் சொல்லிக் கொடுத்து வளர்க்கிறதும் பெத்தவங்க கடமைதான்.

“அவங்களுக்கு யாரு நல்லவங்க... யாரு கெட்டவங்கன்னு கூடக் கண்டு பிடிக்கத் தெரியலைன்னா... நாம அந்த லட்சணத்தில அவங்களை வளர்திருக் கோம்னு அர்த்தம்...” என்று கணேசன் கூடாகப் பதில் கொடுக்க... பதிலுக்கு வித்யாவும் பேச ஆரம்பிக்க...

அர்ஜுன், இருவருக்கும் குறுக்கே வந்து, “நம்ம வீட்ல நாங்க யாரும் இன்னும் லவ் பண்ணலை... அப்புறம் ஏன் நீங்க ரெண்டு பேரும் சண்டை போடறீங்க...? அதை அப்ப பார்க்கலாம்...” என்றதும், வித்யா எழுந்து உள்ளே சென்றார். கணேசனும் எழுந்து அவர் அறைக்குச் செல்ல... அர்ஜுனும், ஆராதனாவும் படிக்க உட்கார்ந்தனர்.

இரவு உணவிற்குப் பிறகு, வித்யா டி.வி. சீரியல் பார்க்க உட்கார்ந்து விட... மற்ற நான்கு பேரும் வெளியே தோட்டத்துக்குச் சென்று பேச ஆரம்பித்தனர்.

அது அவர்கள் வீட்டில் வழக்கமாக நடப்பதுதான். தங்கள் அப்பாவிடம் அன்று நடந்ததைச் சொல்லவில்லை என்றால், மூன்று பேருக்குமே தலை வெடித்துவிடும். கணேசனும் பிள்ளைகளிடம் நண்பனைப் போல் பழகு வார்.

“அப்பா... நான் இந்தத் தடவை அல்ஜிப்ரா பேப்பர்ல அரியர்தான். அந்த ப்ரொபஸர் சொல்லித் தர்றது ஒண்ணுமே புரியலை. இதுல பாதிக் கணக்கை மட்டும் அவர் போட்டு, மீதியை எங்களைப் போடச் சொல்லிட்டு என் பின்னாடி வேற வந்து நிற்கிறார்...

"நான் தினமும் புதுப் புதுப் பக்கமா திருப்பி... என்னோட நோட்ல நான் ஒரு பக்கம் மட்டும்தான் எழுதி இருக்கேன், இன்னொரு பக்கம் காலியாவே இருக்கு. என்னால முடியலை..." ஆராதனா அபிநயத்தோடு சொல்ல... ஆதியும் அர்ஜுனும் விழுந்து விழுந்து சிரித் தனர்.

கணேசனும் சிரித்துக் கொண்டே, "உனக்கு ரெண்டு அண்ணன்களை வச்சிக்கிட்டுக் கவலைப்படலாமா ஆரு...?" என்றவர், தன் மகன்களிடம் அவளுக்குச் சொல்லித் தரச் சொல்ல...

"அப்பா... நான் படிச்சதெல்லாம் மறந்திட்டேன். அர்ஜுனை சொல்லித் தரச் சொல்லுங்க..." என்றான் ஆதி.

அதற்கு அர்ஜுன், "சரி, ஆனா ஃபீஸ் ஒழுங்காக் குடுத்திடணும். அப்பதான் சொல்லித் தருவேன்..." என்றான் கேலியாக.

அடுத்து ஆதி, தங்கள் ஷோ ரூமில் இன்று வாடிக்கையாளர் ஒருவர் செய்த கலாட்டாவைச் சொன் னான்.

"ஆதி... கஸ்டமர் அப்படித்தான் பேசுவாங்க, பொறுமையை மட்டும் எப்பவும் விட்டுடாத. அவங்களிடம் அவங்களுக்கு ஏத்த மாதிரிப் பேசி, துணியை வாங்க வைக்கிறதுலதான் நம்ப வியாபாரத் திறமை இருக்கு. அதை மட்டும் மறந்திடாத..." கணேசன், மகனுக்குப் பாடம் சொல்ல, அதை ஆதியும் அக்கறையாகக் கேட்டுக் கொண்டான்.

அர்ஜுன் ஏதோ யோசனையாக இருக்க... அவனைப் பார்த்து ஆதி, "என்னடா யோசிக்கிற...?" என்றதும்,

இன்று மீரா... அவனைப் பார்த்து அவுட் என்று கத்தியதைச் சொன்னான். உடனே ஆதியும் ஆருவும், "கதை சூப்பரா இருக்கே... மேல சொல்லு..." என்றனர்.

"அவ எங்க காலேஜ் இல்ல. அவளை நான் இதுக்கு முன்னாடிப் பார்த்ததும் இல்ல... இனி பார்க்கப் போறதும் இல்ல. அதனால தேவை இல்லாம, நீங்க ரெண்டு பேரும் ரொம்ப யோசிக்காதீங்க..." என்றான் அர்ஜுன் பட்டென்று.

"அதை நீ இப்பவே முடிவு பண்ணாத அர்ஜுன். அவளை நீ பார்க்கணும்னு விதி இருந்தா, கண்டிப்பா பார்ப்ப..." என்றார் கணேசன்.

"ஆளு பார்க்க எப்படி இருந்தா? அதைச் சொல்லுங்க பிரதர்..." ஆரு ஆர்வமாக.

"தூரத்தில இருந்து தான் பார்த்தேன், சரியாத் தெரியலை. ஆனா நல்லாத்தான் இருந்தா..." என்றான்.

அர்ஜுன் சொன்ன பதிலைக் கேட்டு எல்லோரும் சிரிக்க.... ஆதியும், ஆருவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கண்சிமிட்டிக் கொண்டனர்.

மறுநாள் கல்லூரியில் வந்து வண்டியை நிறுத்திய அர்ஜுனுக்கு, மீராவின் நினைவு வந்தது. 'அவள் ஒரு வேளை இந்தக் கல்லூரியாக இருப்பாளோ...?' என்று சந்தேகம் தோன்ற, அங்கே நின்ற கார்களில் நேற்று

பார்த்த பச்சைக் கலர் செவ்ரோலட் எங்கேயாவது தென்படுகிறதா என்று பார்த்தான்.

அங்கே அந்தக் கார் இல்லை. 'சரி, பிறகு பார்த்துக்கலாம்...' என்று அங்கிருந்து சென்றான்.

அர்ஜுனுக்குத் தெரியாது, மீராவுக்கென்றே அவள் வீட்டில் மூன்று கார்கள் இருப்பதும், அதனால் அவள் இன்று கருப்பு நிற ஸ்விப்ட்டில் வந்ததும்.

2

ஒரு வாரம் வரை அர்ஜுன், மீராவைச் சந்திக்கவில்லை. ஆனால், மீரா தூரத்தில் இருந்து அவனைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தாள்.

அவன் கண்களில் மாட்டக்கூடாது என்று கவனமாக இருந்தாள்.

அர்ஜுன் வெள்ளிக்கிழமை அன்று கல்லூரியில் இருந்து வந்ததும், அவனது அம்மா, "இன்னைக்குப் பிரதோஷம்... கோவிலுக்குப் போகணும், கூட வர்றியா...?" என்று கேட்க, அர்ஜுனும் சரி என்று அவன் அம்மாவை அழைத்துக் கொண்டு கோவிலுக்குச் சென்றான்.

கோவிலைச் சுற்றிவிட்டுக் குளத்தின் படிக்கட்டில் சென்று அமர்ந்தனர். அப்போது அர்ஜுன் எதிர்ப்புறம் பார்க்க... அங்கே மீரா, குளத்தின் படிக்கட்டில் அமர்ந்து மீனுக்கு எப்போதும் போல் பொரியைப் போட்டுக் கொண்டு இருந்தாள்.

அர்ஜுன் அவளைப் பார்த்ததும், அவளிடம் ஓடத் துடித்த கால்களை... பக்கத்தில் அவன் அம்மா இருந்த தால் அடக்கிக் கொண்டு, அவளையே பார்த்துக் கொண்டி ருந்தான்.

மீரா எழுந்து கோவில் உள்ளே சென்று, ஒரு நிமிடம் மட்டும் கண்ணை மூடி நின்றவள், அடுத்த நிமிடம் வெளியே சென்றுவிட... அர்ஜுன், 'அச்சோ... இப்படிப் பார்த்தும் விட்டுட்டோமே...' என்று நொந்தான்.

ஞாயிற்றுக்கிழமை மீராவும் கீர்த்தனாவும் புரசைவாக்கத்தில் உள்ள ஷாப்பிங் மாலைச் சுற்றிக் கொண்டு இருந்தனர். அப்போது மீரா மூன்றாம் தளத்தில் இருந்து கீழே பார்க்க... அங்கே சூர்யாவோடு நின்று கொண்டிருந்த அர்ஜுன் அவளைப் பார்த்து விட்டான்.

சூர்யாவிடம் மீராவைக் காட்டி, "இவதான்டா அன்னைக்கு என்னைப் பார்த்து அவுட்னு கத்தினா..." என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே அர்ஜுனைப் பார்த்துவிட்ட மீரா, 'இவனிடம் மாட்டினோம்... செத்தோம்...' என்று நினைத்தவள்,

"கீத்து... அர்ஜுன் இங்க இருக்கான், நான் போய் மறைஞ்சுக்கிறேன்..." என்று ஓட, அவள் ஓடுவதைப் பார்த்த அர்ஜுன், "இருடா, வரேன்..." என்று சூர்யாவிடம் சொல்லிவிட்டு, அவளைப் பின் தொடர்ந்து சென்றான்.

மீரா அங்கிருந்த புட் கோர்ட் உள்ளே சென்றவள், வேறு வழியாக வெளியே வர... அவளைத் தேடிக் கொண்டு வந்த அர்ஜுன், எதிர்ப்புறம் நின்று கொண்டி

ருந்தான். மீரா, அவனைப் பார்த்ததும் வேகமாகத் திரும்பி ஓட...

அவளைப் பார்த்த அர்ஜுன், "ஹே... நில்லு..." என்று கத்த... மீரா நிற்காமல் இரண்டாம் தளத்திற்கு எஸ்கலேட்டரில் இறங்கினாள்.

அர்ஜுனைத் திரும்பிப் பார்த்துக் கொண்டே கால் வைத்தவள், தடுமாறி விழப் பார்க்க... ஒரு நிமிடம் அர்ஜுன் அரண்டு விட்டான்.

"ஹே... விழுந்துடாத... பார்த்துப் போ..." என்று கத்தியவன், அங்கயே நின்று விட்டான்.

மேலும் அவளைத் துரத்தினால் எங்கேயாவது விழுந்து வைக்கப் போகிறாள் என்று நினைத்து, அங்கேயே நின்றான்.

கீழே இறங்கிய மீரா, வேகமாகக் கார் பார்க்கிங் சென்று, அவளது காரில் ஏறி அமர்ந்து மூச்சு வாங் கியவள், கீத்துவை அழைத்துக் கார் பார்க்கிங் வரச் சொல்லிவிட்டுப் போனை வைத்தாள்.

அர்ஜுனின் தோளைத் தொட்ட சூர்யா, "என்ன ஆச்சு அர்ஜுன்...?" என்று கேட்க,

"ச்சே... இன்னைக்குப் பார்த்தும் அவளை விட்டுட் டேன், இனிமே எப்ப பார்ப்பானோ?" என்றான்.

"ஏன், நாளைக்கு நம்ம காலேஜ்ல பார்க்கலாம்..." சூர்யா கூலாகச் சொல்ல...

"டேய்... உளறாத. அவ நம்ம காலேஜ் இல்லைடா..." என்றான் அர்ஜுன் எரிச்சலாக.

"யாரு... நான் உளறுறேனா...? அவ பேர் மீரா... நம்ம காலேஜ்லதான் பி.இ., செகண்ட் இயர் படிக்கிறா..." என்றான்.

அர்ஜுன் நம்ப முடியாமல் சூர்யாவைப் பார்க்க...

"என்ன, இன்னும் நம்பிக்கை வரலையா...? மேட்ச் வின் பண்ண அன்னைக்கு, நீ வெளிய ஆடிட்டு இருந்த இல்ல... அப்ப இவ உள்ள ஆடிட்டு இருந்தா. அப்புறம் இன்னொண்ணு யோசி, வேற காலேஜ் பொண்ணா இருந்தா... அவ எதுக்கு உன்னைப் பார்த்துப் பயப் படறா...?" சூர்யா கேட்க...

யோசித்த அர்ஜுன், "ஆமா... கரெக்ட். ஆனா... உனக்கு எப்படிடா அவளைத் தெரியும்...?" அவன் ஆச்சர்யப்பட...

"அவ ஒண்ணும் சாதாரண ஆள் இல்லை... தி பேமஸ் ஷைன் பினான்ஸ் கம்பெனி ஓனர் ராம்நாத்தோட பொண்ணு. எங்க வீட்ல இருந்து கொஞ்சம் தள்ளித்தான் இவங்க வீடு இருக்கு. வீடு இல்ல, பெரிய பங்களா. வெளிய இருந்து பார்க்கவே சூப்பரா இருக்கும்."

சூர்யா சொன்னதைக் கேட்ட அர்ஜுன், 'அதுதான் அவ்வளவு திமிரா...? இருக்கட்டும், நாளைக்குக் காலேஜ் வருவா இல்ல... அங்க வச்சுப் பார்த்துக்கிறேன்...' என்று மனதில் நினைத்தான்.

இரவு படுக்கையில் படுத்திருந்த மீரா, அன்று மாலில் நடந்ததை நினைத்துப் பார்த்தாள். அவள் தடுமாறி விழப் பார்த்த போது... அர்ஜுன் அவளுக்காகப் பதறியது, அவள் மனதுக்கு இதமாக இருந்தது.

'போதும் அவனுடன் விளையாடிய கண்ணாமூச்சி... நாளை அவனிடம் நேரில் சென்று மன்னிப்புக் கேட்க வேண்டும்...' என்று நினைத்துக் கொண்டே தூங்கினாள்.

மறுநாள் கல்லூரியில் அர்ஜுனைப் பார்க்கப் போவதால், மீரா அவளுக்கு மிகவும் பிடித்த லாவெண்டர் கலர் சுடிதாரை அணிந்து, கண்ணாடியில் பத்து முறைக்கு மேல் சரி பார்த்துவிட்டே சென்றாள்.

மீரா சாதாரணமாகவே ஆள் ரதியைப் போல அழகாக இருப்பாள். அதுவும் இன்று பார்த்துப் பார்த்து செய்த அலங்காரம் அவளை இன்னும் மெருகேற்ற... பார்க்க பௌர்ணமி அன்று இருக்கும் முழு நிலவைப் போல் இருந்தாள்.

அர்ஜுனைப் பார்க்க மீரா நேராக அவனது வகுப்பறைக்குச் சென்றவள், வெளியே நின்றே உள்ளே எட்டிப் பார்க்க... அர்ஜுன் இன்னும் வந்திருக்கவில்லை, அதனால் அவனுக்காக வெளியே காத்திருந்தாள். அப்போது அங்கே வந்த சூர்யா, 'இந்தப் பொண்ணு ஏன் இங்க நிக்குது? ஒருவேளை அர்ஜுனைப் பார்க்க வந்திருப்பாளோ...?' என்று நினைத்துக் கொண்டே உள்ளே சென்றான்.

அர்ஜுன், வகுப்புத் தொடங்கப் போகும் நேரம் வரை வரவில்லை. மீரா வேறு வழி இல்லாமல் அவள் வகுப்பிற்குச் சென்றாள்.

அவள் அந்தப் பக்கம் செல்ல... அர்ஜுன் இந்தப் பக்கம் வந்தான்.

அர்ஜுன் சரியாக வகுப்புத் தொடங்கும் நேரத்திற்குத் தான் வந்தான். வகுப்பு தொடங்கிய சிறிது நேரத்தில், கடைசிப் பெஞ்சில் அமர்ந்திருந்த மாணவன், "டேய்... நம்ம பிரபு நம்மளைக் கீழ வரச் சொல்லி மெசேஜ் பண்ணி இருக்கான். ஏதோ பிரச்சனை போல... வாங்கடா, என்னன்னு பார்க்கலாம்..." என்று அவன் நண்பர்களை அழைத்துக்கொண்டு செல்ல...

மற்றவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. சிறிது நேரத்தில் வெளியே இருந்து வாக்குவாதம் நடைபெறும் சத்தம் வர... மற்றவர்களும் எழுந்து வெளியே சென்றனர். அவர்களோடு அர்ஜுனும் சூர்யாவும் சென்றார்கள்.

கீழ்த் தளத்தில் வாக்குவாதம் நடந்து கொண்டு இருந்தது. அங்கே சுற்றி சிறு கூட்டம். அர்ஜுனும், சூர்யாவும் என்ன சண்டை என்று எட்டிப் பார்க்க... அங்கே அவர்கள் வகுப்பு மாணவர்களுடன் சண்டை போட்டுக் கொண்டிருந்தது மீரா.

"நான் எத்தனை தடவை சொல்றது... அவன் வேணும்னே என் மேல மோதினான்... நான் அடிச்சேன். சும்மா இருக்கிறவனை அடிக்கிறதுக்கு நான் என்ன லூசா?" மீரா சத்தமாகக் கேட்க...

"தெரியாம மோதினதுக்கு வேணும்னு மோதின மாதிரி அடிச்சிட்டுப் பேசுறதப் பாரு... மரியாதையா சாரி கேளு... அப்பதான் நீ இங்க இருந்து போக முடியும்..." என்று அடி வாங்கியவனின் நண்பர்கள் மிரட்ட...

மீரா, முடியாது என்று அழுத்தமாக மறுத்தாள். அதைப் பார்த்த அர்ஜுனுக்குக் கோபம் வந்தது. 'பாரு, எவ்வளவு திமிரு...? ஆம்பிளைய கை நீட்டி அடிச்சிட்டு, சாரி கேட்க மாட்டாளாம்...' என்று மனதிற்குள் கொதித்துக் கொண்டு இருந்தான். அவனுக்குப் பிரபு தெரியாமல்தான் மோதி இருப்பான், மீராதான் தேவை இல்லாமல் பெரிது படுத்துகிறாள் என்று நினைத்தான்.

அப்போது அங்கே வந்த ஹெச்.ஓ.டி. என்ன நடந்தது என்று விசாரிக்க...

"சார்... நான் படிக்கட்டுல இறங்கிட்டு இருந்தேன்... அப்போ இவன் வேணும்னே என் மேல வந்து மோதினான். அதனால நான் அவனை அடிச்சிட்டேன். அதுக்குச் சாரி சொன்னாத்தான் போக விடுவேன்னு சொல்றான் சார். அவன் தப்பு செஞ்சான், நான் அடிச்சேன். நான் எதுக்கு சார் சாரி சொல்லணும்...?" மீரா கேட்க...

"சார்... நான் வேணும்னே மோதலை. தெரியாம கால் தடுக்கித்தான் விழுந்தேன். இந்தப் பொண்ணு தான் வேணும்னே அடிச்சிடுச்சு..." என்று அடி வாங்கிய மாணவன் பிரபு சொல்ல...

"பொய் சொல்லாத... அவ்வளவு பெரிய படிக்கட்டுல, நீ என் மேல தெரியாம விழுந்தியா...?" மீரா ஆவேசமாகக் கேட்க... பதிலுக்கு அந்த மாணவனும் பேச... அங்கே திரும்பத் தகராறு துவங்கியது.

"மீரா... நீ ஒரு சாரி கேட்டுட்டா பிரச்சினை முடிஞ்சிடும்... கேட்டுடேன்மா..." பிரச்சினை முடிந்தால் சரி என்ற எண்ணத்தில் ஹெச்.ஓ.டி. சொல்ல...

"நான் எதுக்கு சார் சாரி சொல்லணும், நான் தப்பு பண்ணலை..." என்றாள் மீரா கோபமாக.

"அது எப்படிக் கேட்பாங்க? அவங்கதான் பெரிய பணக்காரங்க ஆச்சே...! மன்னிப்புக் கேட்டா கவுரவம் குறைஞ்சிடுமே..." அர்ஜுன் சொல்ல... அவன் சொன்ன தைக் கேட்ட மீரா அதிர்ச்சி அடைந்தாள்.

ஹெச்.ஓ.டி. அடி வாங்கிய மாணவனிடம், "தெரியாம அடிச்சிடுச்சு... நீதான் விடேன்பா..." என்றார்.

"காலேஜ் படிக்கிற பையனைப் போய் ஏதோ பொறுக்கி மாதிரி சொல்றாங்க... அவங்க சொல்றதைப் போய் நம்புறீங்களே சார்... யாராவது காலேஜ்ல வச்சு அப்படிப் பண்ணுவாங்களா...? பிரபு தெரியாமத்தான் இடிச்சிருப்பான்... இவங்க வீட்ல இருக்கிற மாதிரியே வெளி இடத்திலேயும் சொகுசா இருக்க முடியாது. இது மாதிரி தவறு நடக்கிறது சகஜம்தான்... சரியா தெரிஞ்சிக் காம கைய நீட்டினது தப்பு. அவங்களை ஒழுங்கா சாரி கேட்கச் சொல்லுங்க..." அர்ஜுன் ஹெச்.ஓ.டி.-யிடம் சொல்ல...

மீரா, 'நீ என்னை நம்ப மாட்டியா...?' என்று பார்வையாலேயே கேட்க... அர்ஜுன், 'என்ன லுக்கு...?' என்பது போல் அவளைப் பார்த்தவன், "சீக்கிரம் சாரி சொன்னா... அவங்கவங்க வேலையைப் பார்க்கப் போகலாம்ல..." என்றான். மீரா அமைதியாக நின்றாள்.

"ஆமா... இவங்களுக்கு நம்ம டிபார்ட்மென்ட்ல என்ன வேலை...?" என்றான் அர்ஜுன் அடுத்து.

'உன்னைத்தான் பார்க்க வந்தேன்...' என்று சொல்ல வந்தவள், 'அதைச் சொன்னால் நம்ப மாட்டான்...' என்று மீண்டும் அமைதியாகி விட... அர்ஜுன், மீராவை முறைத்துக் கொண்டே நின்றான்.

"மீரா... பிரின்சிக்குத் தெரிஞ்சா பெரிய பிரச்சனை ஆகும். பரவாயில்லையா...?" ஹெச்.ஓ.டி. கேட்க...

பிரின்சிக்குத் தெரிந்தால்... விஷயம் தன் அப்பாவின் காது வரை போகும் என்பதை உணர்ந்த மீராவிற்கு, அதில் விருப்பம் இல்லை என்பதால், திரும்பி அர்ஜுனைப் பார்த்துக் கொண்டே "சாரி..." என்று சொல்லிவிட்டு அங்கிருந்து விடுவிடுவென்று சென்று விட்டாள்.

"அதுதான் பிரச்சினை முடிஞ்சிடுச்சுல்ல... எல்லோரும் கிளாஸ்க்கு போங்க. இதைப் பத்தி யாரும் இனி பேசக் கூடாது."

ஹெச்.ஓ.டி. சொல்ல... எல்லோரும் வகுப்பிற்குள் சென்றனர்.

வகுப்பிற்குள் வந்ததும் சூர்யா, "அர்ஜுன்... அவ உன்னைப் பார்க்கத்தான் இங்க வந்தான்னு நினைக்கி றேன்... நம்ம கிளாஸ் முன்னாடி ரொம்ப நேரம் நின்னுட்டு இருந்தா..." என்றான்.

"என்ன சொல்ற சூர்யா...? அவ நம்ம கிளாஸ் முன்னாடி நின்னுட்டு இருந்தாளா...? என்னைப் பார்த்து நேத்து ஓடினா, இன்னைக்கு எதுக்கு வந்தா...?" அர்ஜுன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ப்ரொபசர் வந்துவிட... அதற்கு மேல் அப்போது எதுவும் பேச முடியவில்லை.

மதிய உணவு இடைவேளையில் அர்ஜுனின் கிளாஸில் படிக்கும் சுபத்ரா, "அர்ஜுன்... உனக்கு அந்தப் பிரபுவைப் பத்தி தெரியாது... அவன் சுத்தப் பொறுக்கி. என்கிட்டேயே ஒரு தடவை அப்படி நடந்திருக்கான். ஆனா... பார்க்க ஆள் அப்பாவியா இருப்பான். நீ அவனைப் பத்தி தெரியாம அவனுக்குச் சப்போர்ட் பண்ணிட்ட... பாவம் அந்தப் பொண்ணு..." எனச் சொல்ல...

அதைக் கேட்ட அர்ஜுனுக்கு ரத்தம் கொதிக்க, சூர்யாவிடம், "அவன் இப்ப எங்க இருப்பான்...?" என்று கேட்டுக் கொண்டே எழுந்தான்.

"காண்டீன்லதான் இருப்பான்..." என்றதும், அர்ஜுன் வேகமாக வெளியே செல்ல... சூர்யாவும் அவனுடன் சென்றான்.

அர்ஜுன் வேகமாகப் படிக்கட்டில் இறங்கிக் கொண்டிருக்கும் போது, மேலே ஏறிக்கொண்டிருந்த பிரபு,

எதிரே வந்த பெண் மீது வேண்டுமென்றே மோத... அந்தப் பெண் திட்டிக் கொண்டே செல்ல... பிரபு சிரித்துக் கொண்டே மேலே ஏறினான்.

பிரபு வருவதைப் பார்த்து நின்ற அர்ஜுன், நேரிலேயே பிரபுவைப் பற்றித் தெரிந்து கொண்டவன், "நீ... காலேஜுக்குப் பொறுக்கித்தனம் பண்ணத்தான் வர்றியா...? இன்னைக்கு ஒருத்திகிட்ட அடி வாங்கியும் உனக்குப் புத்தி வரலை பாரு. உன்னை அவ கையால அடிச்சிருக்கக் கூடாது... செருப்பால அடிச்சிருக்கணும். அவ சொன்னதை நம்பாம... உன்னைப் போய் நம்பினேன் பாரு..." அவன் கோபமாகச் சொல்ல, அப்போதுதான் அர்ஜுனைப் பார்த்த பிரபு, அவன் சொன்னதைக் கேட்டதும் அதிர்ந்தான்.

அவனுக்கு அர்ஜுன் பற்றி நன்றாகவே தெரியும்... எல்லோரிடமும் நன்றாகப் பழகும் அர்ஜுன், தவறை மட்டும் பொறுக்கவே மாட்டான் என்று.

'இவனிடம் மாட்டினோம்... செத்தோம்...' என்று நினைத்த பிரபு திரும்பி ஓட... அர்ஜுன் அவனைத் துரத்தினான்.

பிரபு காலேஜ் கிரௌண்டில் ஓட... அவனை அர்ஜுன் துரத்திச் சென்று அடித்தான். மீரா சாப்பிடப் பிடிக்காமல் அவள் வகுப்பிலேயே தங்கி விட... கீர்த்தனா சாப்பிட்டு விட்டுத் திரும்பி வந்தவள், "மீரா... அர்ஜுன் கிரௌண்ட்ல ஒரு பையனைப் போட்டு அடிக்கிறான்..." என்றதும்... வேகமாக எழுந்த மீரா வெளியே ஓடினாள்.

மீரா கிரௌண்டிற்கு வந்தபோது பிரபுவை அடித்துக் கொண்டிருந்த அர்ஜுனை, சூர்யாவும் மற்ற நண்பர்களும் சேர்ந்து தடுத்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கே வந்த சில ப்ரொபசர்கள், என்ன நடந்தது என்று கேட்க... அர்ஜுன், மீரா பெயரை இழுக்காமல், "இவன் என்னைப் பத்தித் தப்பாப் பேசினான், அதனால அடிச்சேன்..." என்றான்.

பிரபுவும் அவன் சொன்னதை ஆமோதிக்க... அதோடு இருவரையும் விலக்கி, வகுப்புக்குச் செல்லச் சொல்லி விட்டு அவர்கள் சென்றனர்.

அர்ஜுன், பிரபுவை முறைத்துக் கொண்டே வகுப்பிற்குச் சென்றான். பிரபு அப்போதுதான் அங்கிருந்த மீராவைப் பார்த்தான். அவளிடம் சென்றவன், "சாரி மீரா... நான் பண்ணது ரொம்பத் தப்பு. உனக்காகத்தான் அர்ஜுன் என்னை அடிச்சான். அவன், நான் தெரியாம இடிச்சிருப்பேன்னு நினைச்சிதான் காலையில எனக்குச் சப்போர்ட் பண்ணான். ச்சே... ஆனா... நான்... மீரா, நான் இனிமே அப்படிப் பண்ண மாட்டேன்..." என்று உன்மையாகவே தன் தவறை உணர்ந்து சொன்னவன், அவன் வகுப்பிற்குச் செல்ல, மீராவிற்கு அர்ஜுன் தனக்காகத்தான் பிரபுவை அடித்தான் என்றது அவள் மனதிற்கு இதமாக இருக்க, மகிழ்ச்சியுடன் வகுப்பிற்குச் சென்றாள்.

மாலையில் கல்லூரி முடிந்ததும், அர்ஜுன் அவன் பைக்கை ஸ்டாண்டில் இருந்து எடுத்துக் கொண்டிருந்

தான். அப்போது, "அர்ஜுன்..." என்று யாரோ கூப்பிட, அவன் யாரென்று நிமிர்ந்து பார்க்க... மீரா சற்றுத் தூரத்தில் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தாள்.

லாவெண்டர் கலர் அனார்கலி மாடல் சிந்தடிக் சுடிதாரில், காற்றிற்குப் பறக்கும் தனது கூந்தலை ஒதுக்கி விட்டபடி, முகத்தில் புன்னகையுடன் வேகமாக நடந்து வந்தவளை ரசித்தவன், அவள் அருகில் வந்து நின்றதும், தன் உணர்வைக் கட்டுக்குள் கொண்டு வந்து, "என்ன...?" என்றான் இறுகிய குரலில்.

"அர்ஜுன்... நான் காலையிலையே உங்களைப் பார்க்க உங்க கிளாஸுக்கு வந்தேன். ஆனா... நீங்க அங்க இல்லை. திரும்பிப் போகும் போதுதான்..." என்று சொல்லிக் கொண்டே சென்றவளைத் தனது கையைக் காட்டித் தடுத்தவன், "இப்ப எனக்குக் கதை கேட்க எல்லாம் நேரம் இல்லை... நேரா விஷயத்துக்கு வாங்க..." என்றான் சிடுசிடுப்பாக.

அவன் சொன்னதைக் கேட்டுத் திகைத்த மீரா, "சாரி... அன்னைக்கு நான் சும்மா விளையாட்டுக்குத்தான் அவுட்னு கத்தினேன்..." என்றாள்.

"ரொம்பச் சீக்கிரம் சாரி கேட்டுட்டீங்க, பரவாயில்லை. சரி, அப்ப நான் கிளம்புறேன்." அர்ஜுன் கிளம்புவதிலேயே குறியாக இருந்தான். .

"அப்புறம் இன்னைக்கு எனக்காக நீங்க பிரபுவை அடிச்சதுக்குத் தேங்க்ஸ்."

"உங்களுக்காக அடிச்சேனா..." என்று ஆச்சர்யப் பட்டவன். "நான் உங்களுக்காக அவனை அடிக்கலை... அவன் வேற ஒரு பொண்ணு மேல வேணும்னே மோதினதைப் பார்த்தேன், அதுதான் அடிச்சேன். உங்களுக்காக அடிச்சதா கற்பனை பண்ணிக்க வேண்டாம்..." என்றான் முகத்தில் அடித்தது போல்.

மீராவின் முகம் வாட... கண்கள் லேசாகக் கலங்க ஆரம்பித்தது. அவளுக்குப் புரிந்தது, அவன் தன்னுடன் பேச விரும்பவில்லை என்று. தலையை மட்டும் சரி என்பதாக அசைத்தவள், திரும்பி நடந்தாள்.

துள்ளிக் குதித்து வந்தவள், சோர்ந்த நடையுடன் திரும்பிச் செல்ல... அர்ஜுன் தன் வண்டியை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

3

கல்லூரியில் மீராவிடம் கோபமாகப் பேசிவிட்டுப் பைக்கில் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்த அர்ஜுனுக்கு, தன் மீதே கோபம் வந்தது.

'ஆசையாகப் பேச வந்தவளை முகத்தில் அடித்தது போல் பேசிவிட்டோமே. ஒரு வேளை வருத்தப்பட்டு அழப் போகிறாள்...' என்று நினைத்தவனால், அதற்கு மேல் செல்ல முடியாமல், பைக்கைத் திருப்பிக் கொண்டு மீண்டும் கல்லூரிக்கே சென்றான்.

அங்கே மீராவின் கார் நின்று கொண்டிருப்பதைப் பார்த்து... இன்னும் அவள் வீட்டுக்குப் போகவில்லை

என்று உணர்ந்து, பைக்கை நிறுத்திவிட்டு மீராவைத் தேடிச் சென்றான். மீரா கான்டீனில் அமர்ந்து தோழிகளுடன் சிரித்துப் பேசி அரட்டை அடித்துச் சாப்பிட்டுக் கொண்டி ருந்தாள்.

அதைப் பார்த்ததும் நிம்மதி அடைந்தவன், 'நல்லாத்தான் இருக்கா... நாமதான் தேவை இல்லாம டென்ஷன் ஆகிட்டோம். மணி என்ன ஆகுது...? இன்னும் வீட்டுக்குப் போகாம இருக்கா பாரு... இவங்க வீட்ல தேட மாட்டாங்களா...?' என்று நினைத்தவன், திரும்பி வந்த வழியே சென்று, தன் வண்டியை எடுத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்றான்.

அவனுக்கு மீராவைப் பற்றித் தெரியவில்லை, மீரா தன்னுடைய வருத்தத்தை மற்றவர்களிடம் எப்போதும் காட்டிக் கொள்ள மாட்டாள்.

அன்று இரவு வழக்கம் போல் தோட்டத்தில் அமர்ந்து எல்லோரும் அன்று நடந்த கதையைப் பற்றிப் பேச, அர்ஜுன் இன்று பிரபுவை அடித்ததைப் பற்றி மட்டும் சொன்னவன், மீராவைப் பற்றி எதுவும் சொல்லவில்லை.

மீராவைப் பற்றிச் சொன்னால், அவளும் இதே கல்லூரி என்பது தெரிய வரும்... ஆதியும், ஆருவும் மீராவை பற்றியே பேசுவார்கள். இனி மீராவைப் பற்றி நினைத்தும் பார்க்கக் கூடாது என்று அர்ஜுன், மீராவைப் பற்றிப் பேசவில்லை.

மறுநாள் கல்லூரிக்கு வந்த அர்ஜுனைக் கல்லூரி யின் முதல்வர் அழைப்பதாகச் சொல்ல, அவன் அவரது

அறைக்குச் சென்ற போது, அங்கே ஏற்கனவே பிரபுவும், மீராவும் இருந்தனர்.

"சார், குட் மார்னிங். என்னை வரச் சொன்னீங் களா...?" அர்ஜுன் கேட்க,

"ஆமாம்... இரு அர்ஜுன், மீராகிட்ட பேசிட்டு உன்கிட்ட பேசுறேன்..." என்றார்.

"மீரா... நான் நேத்து காலேஜ் வரலை... இன்னைக்கு வந்ததும் நேத்து நடந்த விஷயத்தைக் கேள்விப்பட்டேன். நீ சொல்லு, என்ன நடந்தது?" ப்ரின்சி கேட்க, மீரா மௌனமாக நின்றாள்.

"உன்னைப் பிரபு வேணும்னே இடிச்சதாகவும், பதிலுக்கு நீ அவனை அடிச்சதாகவும். பிறகு பிரபுவுக்கும் உனக்கும் சண்டை நடந்ததாகவும், உனக்காக அர்ஜுன் அவனை அடிச்சதாகவும் கேள்விப்பட்டேன். சொல்லு, அதெல்லாம் உண்மையா...?"

மீரா, பிரபுவை பார்த்தாள். அவன் முகம் வெளிறி இருந்தது. அவன் தலை குனிந்து நின்றிருந்தான். திருந்தியவனுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தால், அவன் திருந்தியதற்கு அர்த்தமே இல்லை என்று நினைத்த மீரா,

"நான்தான் சார் தப்பா நினைச்சிட்டேன். பிரபு தெரியாமத்தான் மோதினாங்க, நான்தான் அவசரப் பட்டு அடிச்சிட்டேன். சாரி சார். அர்ஜுன் எனக்காக எதுக்குப் பிரபுவை அடிக்கணும்? அவங்களுக்கு என்னை யாருன்னே தெரியாது..." என்றாள்.

அவள் பேசியதை கேட்டு அர்ஜுன், பிரபு இரு வருமே அதிர்ந்தனர்.

நேற்று அவ்வளவு தூரம் சண்டை போட்டவள், இன்று இப்படிப் பேசுவது இருவருக்கும் ஆச்சரியமாக இருந்தது. பிரபுதான் இன்று தொலைந்தோம் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தான். படிப்பை முடிக்கப் போகும் நேரத்தில், தான் செய்த தவறான செயல், ஒரு கரும் புள்ளியாகத் தன் வாழ்க்கையில் இருக்கப் போவதை நினைத்து மனம் வருந்தியவன், தான் பெண்களை விளையாட்டாக நினைத்ததற்குத் தனக்குத் தண்டனை தேவைதான் என்று நினைத்துக் கொண்டிருக்கும்போது, மீரா சொன்னது அவன் நெஞ்சில் பால் வார்த்தது.

"நீ... நிஜமாத்தான் சொல்றியா...?" ப்ரின்சி, மீராவைப் பார்த்துக் கேட்க... அவள் ஆமாம் என்று தலையாட்ட... ப்ரின்சி, அர்ஜுனிடம், "நீ எதுக்குப் பிரபுவை அடிச்ச?" என்றார்.

அர்ஜுன், பிரபுவைப் பார்த்துக் கொண்டே, "அவனுக்கும் எனக்கும் பேசிட்டு இருக்கும் போது சண்டை வந்துடுச்சு, கோபத்தில அடிச்சிட்டேன்..." என்றான்.

ப்ரின்சி பிரபுவைப் பார்க்க... அவன் ஆமாம் என்று தயங்கிக் கொண்டே தலையாட்ட,

மீரா, அர்ஜுன் மற்றும் பிரபு மூவரையும், இனி இது போல் தவறு நடக்கக் கூடாது என்று ப்ரின்சி எச்சரித்து அனுப்பினார். மூவரும் சரி என்று சொல்லிவிட்டு வெளியே வந்தனர்.

வெளியே வந்த மீராவிடம் பிரபு, "தேங்க்ஸ் மீரா... நான் ரொம்பப் பயந்திட்டேன். எங்க அப்பா அம்மாவுக்குத் தெரிஞ்சா ரொம்ப வருத்தப்படுவாங்க. நான் இனிமே அது மாதிரி நடந்துக்க மாட்டேன்..." என்று மன்னிப்புக் கேட்க...

"நானும் எங்க அப்பாவுக்காகத்தான் நேத்து பிரச்சினையைப் பெரிசாக்காம விட்டேன். பிரபு, பொண்ணாப் பிறந்தாலே ஆயிரம் பிரச்சினை. நாங்க நிம்மதியா, சந்தோஷமா இருக்கிற ஒரே இடம் காலேஜ் தான். இங்கேயும் எங்களுக்குப் பாதுகாப்பு இல் லைன்னா... நாங்க எங்க போவோம்? தயவு செஞ்சு இனிமே இந்த மாதிரி நடந்துக்காதீங்க..." என்றவள், வேகமாக அங்கிருந்து சென்றாள்.

அர்ஜுன், மீரவையே பார்த்துக் கொண்டு நிற்க... பிரபு, "சாரி அர்ஜுன்..." என்றதும்,

அவன் பக்கம் திரும்பியவன், "கேட்டியா, என்ன சொன்னான்னு... இனிமேலும் நீ திருந்தலைன்னா... நீ மனுஷ ஜென்மமே இல்லை..." என்றான் கோபமாக.

"இல்லை அர்ஜுன்... நான் என் தவறை உணர்ந் திட்டேன். சத்தியமா இனிமே ஒழுங்கா நடந்துக்கிறேன். நீ என்கிட்டே பழைய மாதிரிப் பேசணும் அர்ஜுன்... பேசுவ தான...?" பிரபு கவலையாகக் கேட்க...

"நீ யாரிடம் தவறா நடந்தியோ, அவளே உன்னை மன்னிச்சிட்டா. இனி நான் என்ன சொல்ல...? வா, கிளாஸுக்குப் போகலாம்..." என்று அர்ஜுன், பிரபுவை அழைத்துக் கொண்டு தங்கள் வகுப்பிற்குச் சென்றான்.

அதன் பிறகு வந்த நாட்களில் அர்ஜுனும், மீராவும் ஒருவரை ஒருவர் பார்த்தாலும், பார்க்காத மாதிரியே சென்றனர்.

எப்போதும் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் மாலையில் ஷட்டில் விளையாடச் செல்லும் அர்ஜுன், அவனது அப்பா அவனை மாலை வேளையில் அவர்கள் ஷோ ரூமிற்கு வரச் சொன்னதால், இந்த வாரம் காலையில் சென்றான்.

அர்ஜுன் சென்ற போது மணி எழு. பொதுவாக அந்த நேரம் ரொம்பப் பேர் விளையாட வரும் நேரம் என்பதால், அங்கிருந்த பத்து கோர்ட்டிலுமே ஆட்கள் விளையாடிக் கொண்டு இருந்தனர். அர்ஜுன் அங்கிருந்த இருக்கையில் அமர்ந்து விளையாடுபவர்களை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்.

அர்ஜுன் ஒவ்வொரு கோர்ட்டாகப் பார்த்துக் கொண்டே வர... ஒரு கோர்ட்டில் மீரா மற்றும் இன்னும் சிலரும் சேர்ந்து டபுள்ஸ் விளையாடிக் கொண்டிருந்தனர். மீரா ட்ராக் பான்ட் மற்றும் டீ-ஷர்ட் அணிந்து, முடியை இழுத்துப் பேண்ட் மாட்டி இருந்தாள். மீரா விளையாட்டில் தீவிரமாக இருந்ததால் அர்ஜுனைக் கவனிக்கவில்லை.

அவள் கூட விளையாடிய மற்ற மூவரும் ஆண்கள். அவர்களை விட மீராதான் நன்றாக விளையாடினாள். அவள் லாவகமாக சர்வீஸ் போடுவதில் இருந்தே... அவள் ரொம்ப வருடமாக ஷட்டில் விளையாடுகிறாள் என்று நன்றாகத் தெரிந்தது.

அர்ஜுன், மீராவையே கண் எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். 'சரியான உயரத்தில், அதற்கேற்ற உடல்வாகுடன், பார்க்க சந்தனத்தில் குழைத்துச் செய்த சிலை போலத்தான் இருக்கிறாள்...' என்று நினைத்தவன், 'ச்சே... அவளிடம் இருந்து விலகி இருக்கணும்னு நினைச்சா இப்படித் திரும்பத் திரும்ப அவளையே பார்க்கிற மாதிரி இருக்கே...!' என்று நினைத்துக் கொண்டிருக்கும் போதே,

"ஹாய் அர்ஜுன்..." என்று சத்தம் கேட்க, அர்ஜுன் குரல் வந்த திசையில் பார்க்க, மீராவோடு இணைந்து விளையாடிய ஜீவாவை அப்போதுதான் கவனித்தான். 'அடப்பாவி... இவனும் இங்கதான் இருக்கானா...? இவனைக் கவனிக்கவே இல்லையே...' என்று நினைத்த வன், மீராவைப் பார்க்க... அவளும் அப்போதுதான் அவனைப் பார்த்தவள், 'அர்ஜுன மகாராசாவுக்கு இங்க என்ன வேலை...?' என்று நினைத்தாள்.

அர்ஜுன் எழுந்து அவர்கள் அருகில் சென்றதும், ஜீவா, "இவன் அர்ஜுன்... என்னோட ஸ்கூல் ப்ரெண்ட்..." என்று எல்லோருக்கும் அறிமுகம் செய்ய, அர்ஜுன் எல்லோரையும் பார்த்து ஹாய் என்றான்.

அர்ஜுன், ஜீவாவோடு நின்று பேசிக் கொண்டிருக்க, மீரா " யூ கய்ஸ் பிளே... ஐ அம் லீவிங்..." என்று கிளம்ப... ஜீவா, "ஏன் மீரா போற? நாம ஒருத்தர் மாத்தி ஒருத்தர் விளையாடலாம்..." என்றான்.

"எனக்காக யாரும் போக வேண்டாம்..." என்றான் அர்ஜுன்.

ஆனால் மீரா, "இல்ல... எனக்குத் தலை வலிக்குது, நான் கிளம்பறேன்..." என்றவள், எல்லோரையும் பார்த்து ஒரு பொதுவான பை-யுடன் கிளம்பிச் சென்றாள். வாசலுக்குச் சென்ற மீரா திரும்பி அர்ஜுனைப் பார்க்க... அப்போது அர்ஜுனும் மீராவைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான். இதை எதிர்பார்க்காத இருவரும், 'ஐயோ...! இப்படி மாட்டிக்கிட்டோமே...' என்று நினைத்தனர்.

மீரா சென்றதும் அர்ஜுனும் மற்றவர்களும் சேர்ந்து ஒரு மணி நேரம் விளையாடியவர்கள் பிறகு கிளம்ப... மற்ற இரு நண்பர்களையும் வழி அனுப்பிவிட்டு வந்த ஜீவா, "அர்ஜுன்... உன்னைப் பார்த்து எத்தனை நாள் ஆச்சு...? எப்படி இருக்க...? நீயும் இங்க மெம்பரா...? நான் இதுவரை உன்னை இங்க பார்த்தது இல்லையே...!" என்று கேள்விகளாகக் கேட்க...

"டேய்... ஒவ்வொரு கேள்வியாக் கேளுடா. நான் நல்லா இருக்கேன், ஆமா... இங்க நானும் மெம்பர், சாயங்காலம் வந்து விளையாடுவேன். இப்ப சீசன் டைம், அதனால கடையில ரொம்பக் கூட்டம்... அப்பா என்னைச் சாயங்காலம் கடைக்கு வரச் சொல்லி இருக்காரு... அதனாலதான் காலையில் வந்தேன்..." என்ற அர்ஜுன், ஜீவாவைப் பற்றி விசாரிக்க... தன்னைப் பற்றிச் சொன்னவன், "மீராவும்... உன் காலேஜ்தான், உனக்குத் தெரியுமா...? நீ அவளைப் பார்த்திருக்கியா...?" என்றான்.

"பார்த்திருக்கேன்..."

"அவளுக்கு உன்னைத் தெரியுமா...?"

"தெரியும்..."

"அப்புறம் ஏன்டா ரெண்டு பேரும் தெரியாதவங்க மாதிரி இருந்தீங்க...?" ஜீவா ஆச்சர்யப்பட...

"தெரியும், அவ்வளவுதான். சரி, அதை விடு. உனக்கு மீராவை ரொம்ப வருஷமாத் தெரியுமா...?" அர்ஜுன் பேச்சை மாற்ற,

"எனக்கு அவளை ஒரு வருஷமாத்தான் தெரியும். நாங்க கொஞ்ச பேர் இங்க விளையாட வந்து ப்ரெண்ட்ஸ் ஆகிட்டோம். நாங்க யாரும் ரெகுலரா வர மாட்டோம். ஆனா... மீரா எல்லா வாரமும் வருவா, அதுக்காக நாங்க ரொம்ப க்ளோஸ்னு நினைக்காத... எனக்கு அவ பெயரையும், காலேஜையையும் தவிர வேற ஒண்ணும் தெரியாது. மீரா அவ வீட்டைப் பத்தி ஒண்ணும் சொன்னது இல்லை... நாங்களும் கேட்டது இல்லை. வருவோம், விளையாடுவோம், பொதுவா சில விஷயம் பேசுவோம்... கிளம்பிடுவோம். அவ்வளவுதான்."

"சரி ஜீவா, கிளம்பலாம்..." அர்ஜுன், தன் வண்டியை நோக்கிச் செல்ல,

"நாளைக்கு வருவியா...?" ஜீவா, அர்ஜுனைக் கேட்க...

"வருவேன்..." என்றவன், தன் வண்டியை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

மறுநாள் காலை ஆறு மணிக்கு எழுந்த அர்ஜுன், ஒரே பரப்பரப்பாக இருந்தான். இன்று ஷட்டில் விளையாடப்

போகலாமா, வேண்டாமா என்று மூளையைப் போட்டுக் குழப்பியவனுக்கு, மீராவைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை மற்ற அனைத்தையும் பின்னுக்குத் தள்ள, வேகமாகக் கிளம்பிச் சென்றான்.

அங்கே அவன் சென்றபோது, நேற்று மாதிரி கூட்டம் இல்லாமல் இருந்தது. ஏன் என்று யோசித்துக் கொண்டே உள்ளே சென்றவன், அங்கே கோர்ட்டில் மீரா மட்டும் தனியாக அமர்ந்திருப்பதைப் பார்த்ததும், அவன் கால்கள் அவன் கட்டுப்பாட்டையும் மீறி அவளிடம் சென்று நின்றது.

தன் அருகில் யாரோ வந்து நிற்பதைப் பார்த்து நிமிர்ந்த மீரா, அங்கே நின்ற அர்ஜுனைப் பார்த்ததும், 'இவன் இனி இந்தப் பக்கமே வர மாட்டான்னு நினைச்சா, வந்திருக்கானே...!' என்று ஆச்சரியப்பட்டாள்.

அவளின் முகத்தில் இருந்தே அவள் தன்னை எதிர்பார்க்கவில்லை என்பதை உணர்ந்த அர்ஜுன், இப்போது என்ன செய்வது என்று தெரியாமல் நிற்க... மீரா எழுந்து கோர்ட்டின் மறுபுறம் சென்று விளையாடத் தயாராக நின்றாள்.

அவள் விளையாட நிற்பதைப் பார்த்த அர்ஜுனும் விளையாடத் தயாராக... இருவரும் சேர்ந்து விளையாடினார்கள். சிறிது நேரம் தனியாக விளையாடியவர்கள், வேறு இருவர் வந்து, 'சேர்ந்து கொள்ளட்டுமா...?' என்று கேட்டதும், சரி என்றனர்.

அர்ஜுன் சென்று மீராவின் பக்கம் நின்றான்.

சிறிது நேரம் பயிற்சி செய்துவிட்டு கேம் விளையாடத் தொடங்கினர்.

மீரா படப்படப்பாக உணர்ந்தாள். அவளுக்கு அர்ஜுனோடு சேர்ந்து ஒரே அணியில் விளையாடுவது ஒரு மாதிரி இருந்தது. எங்கே அவனை இடித்து விடுவோமோ என்ற பயத்திலேயே ஆடினாள். அதேதான் அர்ஜுனின் நிலையும். இருவருமே மோதிவிடக்கூடாது என்று நினைத்து விளையாடியதால், சில ஷாட்டை அவள் எடுக்கட்டும் என்று அர்ஜுனும்... சிலதை அர்ஜுன் அடிக்கட்டும் என்று மீராவும் தவறவிட்டனர்.

இப்படியே சென்றால் தோற்றுவிடுவோம் என்று உணர்ந்த இருவரும் ஆட்டத்தில் கவனம் செலுத்த, இரண்டு முறை ஒருவர் மீது ஒருவர் மோதிக்கொண்டனர். முதல் முறை லேசாக மோதிக் கொண்டவர்கள், இரண்டாவது முறை பலமாக மோதிக்கொள்ள... கீழே விழப் பார்த்த மீராவை விழுந்துவிடாமல் பிடித்த அர்ஜுன், "வலிக்குதா...?" என்று கேட்க... மீரா இல்லை என்று தலை ஆட்டினாள்.

"ஹா... ஹா..." என்று கேட்ட சிரிப்புச் சத்தத்தில் இருவரும் நிமிர்ந்து பார்க்க... அங்கே ஜீவா நின்று கொண்டிருந்தான். "ரெண்டு பேரும் இன்னைக்குத் தான் புதுசா விளையாடுறீங்களா...? ஏதோ விளையாடத் தெரியாதவங்க விளையாடுற மாதிரி இருக்கு..."

ஜீவா போலியாக வியக்க... அர்ஜுனும், மீராவும் முழித்தார்கள்.

"நாங்க ரெண்டு பேரும் இதுவரை சேர்ந்து விளையாடியதில்லை இல்ல... அதனாலதான்..." அர்ஜுன் இருவருக்கும் சேர்த்துப் பதில் சொல்ல...

"டேய்... இந்தக் கதை வேண்டாம். நேத்து நீயும் நானும் விளையாடும்போது.. நீ என் மேல இப்படி மோதலையே...?" ஜீவா விடாமல் வம்பு இழுக்க...

"டேய்... நீ சொல்றதைப் பார்த்தா... நான் ஏதோ வேணும்னே மோதினேன்னு அவங்க நினைச்சுக்கப் போறாங்க..." என்ற அர்ஜுன், மீராவைப் பார்க்க...

"நான் ஒண்ணும் மத்தவங்களை மாதிரி அவசரப்பட்டு யாரையும் தப்பா நினைக்க மாட்டேன்." பட்டென்று சொன்ன மீரா, "நான் கிளம்புறேன்..." என்று அங்கிருந்து செல்ல...

அர்ஜுனுக்குக் கோபம் சுள்ளென்று தலைக்கு ஏறியது.

அர்ஜுன் கோபமாக மீரா போவதையே பார்க்க, "சரி, வா விளையாடலாம்..." என்று ஜீவா அவனை இழுத்துக்கொண்டு சென்றான். விளையாடி முடித்ததும் ஜீவா, "என்னடா நடக்குது... உங்க ரெண்டு பேருக் குள்ள...?" என்றான் ஆர்வமாக.

"ஒண்ணும் இல்லை. காலேஜ்ல நடந்த ஒரு பிரச்சினையில, நான் மீராவைத் தப்பா நினைச்சிட்டேன். அதைத்தான் மேடம் இப்ப சொல்லிக் காமிச்சிட்டுப்

போறாங்க. அதை விடு, நீ ஏன் இன்னைக்கு லேட்...?" அர்ஜுன் பேச்சை மாற்ற...

"சாரி அர்ஜுன், சனிக்கிழமை நைட் பார்ட்டிக்குப் போயிடுவேன். அதனால மோஸ்ட்லி சண்டே வர மாட்டேன். இன்னைக்கு உனக்காகத்தான் வந்தேன். அடுத்த வாரம் சீக்கிரம் வரேன்... ஓ.கே...?" ஜீவா சொல்ல...

"அப்படியெல்லாம் நீ ஒண்ணும் கஷ்டப்பட்டு சீக்கிரம் வர வேண்டாம்... நீ லேட்டாவே வா..." என்றான் அர்ஜுன்.

"கரடி மாதிரி உங்க ரெண்டு பேருக்கும் நடுவுல வராதேன்னு சொல்ற... ஓ.கே... ஓ.கே... என்ஜாய்..." என்ற ஜீவா வீட்டுக்குக் கிளம்ப, அர்ஜுனும் கிளம்பினான்.

அர்ஜுன் குழப்பத்துடனே வண்டி ஓட்டிக்கொண்டு சென்றான். 'இன்னைக்கு நல்லாத்தானே இருந்தா, அதுக்குள்ள என்ன ஆச்சு?' என்று நினைத்துக் கொண்டே வீட்டிற்குச் சென்றான்.

மீராவிடம் இருந்து விலகி இருக்க வேண்டும் என்று நினைத்தாலும் அவன் மனது அவன் பேச்சைக் கேட்காமல் அவளையே நாடியது.

இவன் வீட்டிற்குச் சென்று குளித்து விட்டு வரும் போது, உணவு மேஜையில் எல்லோரும் எதையோ பற்றித் தீவிரமாகப் பேசிக்கொண்டு இருந்தனர்.

அர்ஜுன் சென்று அமர்ந்தவன், "இங்க என்ன கலாட்டா?" என்றதும்,

"நம்ம ஆருவோட பரதநாட்டிய அரங்கேற்றம் இன்னைக்கு இருக்கு... அதுக்கு நாம எல்லோரும் போகணும்..." என்றார் வித்யா.

"நீ அரங்கேற்றம் பண்ற அளவுக்குக் கத்துக் கிட்டியா...? பரவாயில்லையே..." ஆதி தன் தங்கையைப் பாராட்ட...

அர்ஜுன், "நான் கடையைப் பார்த்துக்கிறேன், நீங்க எல்லோரும் போயிட்டு வாங்க..." என்றான்.

"அதெல்லாம் இல்லை, நீயும் கண்டிப்பா வரணும்..." என்றாள் ஆராதனா பிடிவாதமாக.

"ஆமா... இந்த அம்மா பெரிய நாட்டியப் பேரொளி பத்மினி... கத்துக்குட்டிங்க ஆடறது எல்லாம் என்னால உட்கார்ந்து பொறுமையாப் பார்க்க முடியாது." அர்ஜுன் அலட்டிக் கொள்ள,

"நாங்க அரங்கேற்றம் பண்றவங்க எல்லாம் குரூப்பாதான் ஆடுவோம்... அதைத் தவிர இன்னும் நிறையப் பேர் ரொம்ப வருஷமா கத்துக்கிட்டவங்க ஆடுவாங்க. நாட்டிய நாடகம் எல்லாம் இருக்கு, ரொம்ப நல்லா இருக்கும். வா அர்ஜுன், ப்ளீஸ்..." ஆராதனா கெஞ்ச...

"டேய், அவளை ஏன்டா கெஞ்ச வைக்கிற...?" என்ற கணேசன், "அதெல்லாம் அவன் வருவான்... நீ கவலைப்படாத செல்லம்..." என்றதும், தன் அப்பாவை எழுந்து சென்று கட்டிக்கொண்டாள் ஆராதனா.

4

மாலை ஆறு மணி. தி. நகரில் இருந்த ஏ.சி. ஹாலில், அர்ஜுன் தன் வண்டியை நிறுத்திவிட்டு உள்ளே செல்ல... அப்போதுதான் நிகழ்ச்சி தொடங்கியது.

'நல்லவேளை இன்னும் ஆரம்பிக்கலை...' என்று நினைத்தவன், தன் குடும்பத்தினர் எங்கே என்று தேட... அவர்கள் அனைவரும் முன் வரிசையில் அமர்ந்து இருந்தனர். அர்ஜுன் சென்று அவர்கள் அருகில் அமர்ந்தான்.

முதல் நிகழ்ச்சி வரவேற்பு நடனம், நான்கு பேர் சேர்ந்து ஆடினார்கள். அது முடிந்ததும் அடுத்த பாட்டுக்கு ஆராதனாவும், இன்னும் சிலரும் சேர்ந்து ஆடினார்கள். மொத்தமே பத்து நிமிடம்தான் ஆடினார்கள். ஆராதனாவிற்கு இதுதான் முதல் மேடை நிகழ்ச்சி, அதனால் அவள் முகத்தில் பயம் வெளிப்படையாகத் தெரிந்தது. நாட்டியம் நன்றாக ஆடினாள். ஆனால், முகத்தில் பாவத்தைக் கொண்டு வர முடியவில்லை. எல்லோரும் போகப் போகச் சரியாகிவிடும் என்று நினைத்தனர்.

ஆடி முடித்து வந்த ஆராதனாவை அவள் குடும்பம் மொத்தமும் கொண்டாடியது. 'நல்லா ஆடின, அழகா இருக்க, இந்த டிரஸ் உனக்கு ரொம்ப நல்லா இருக்கு...' என்று எல்லோரும் சொல்ல... ஆராதனா சந்தோஷத்தின் உச்சியில் இருந்தாள்.

அடுத்த நிகழ்ச்சியாக நாட்டிய நாடகம் தொடங்கியது. முருகன் வள்ளி காதலையும், திருமணம் முடிந்ததும்

வள்ளி, தெய்வானைக்கு இடையில் முருகன் படும் பாட்டையும், நாட்டியமாக ஆடினார்கள்.

முதலில் முருகன் வர, அடுத்து வள்ளியாக மேடைக்கு வந்தது மீரா. நரிக்குறவப் பெண்கள் மாதிரி உடை அணிந்து இருந்தாள். ஆனால், விலை உயர்ந்த ஆடையும், ஆபரணமும் அணிந்து அதற்கேற்றாற் போல் அலங்காரமும் செய்து இருந்ததால்... பார்ப்பதற்குத் தெய்வீகக் களையுடன் அழகாக இருந்தாள்.

மேடை ஏறிய மீரா, ஒரு இடத்தில் நிற்கவில்லை. சுற்றிச் சுழன்று ஆடினாள். காதல்... கோபம்... பொறாமை என்று எல்லாப் பாவனைகளையும் தத்ருபமாகக் காட்டினாள். அவள் ஆட்டத்தில் எல்லோரும் மெய்மறந்து அமர்ந்து இருந்தார்கள்.

பரதநாட்டியம் டி.வி.யில் வந்தாலே ஓடும் அர்ஜுன், இன்று தன்னை மறந்து ரசித்துக் கொண்டிருந்தான். முருகனும், தெய்வானையும் ஆடும் நேரத்தில் மீரா சென்று பரதநாட்டிய உடை மாற்றிவிட்டு வர, அதில் இன்னும் லட்சணமாக இருந்தாள். கடைசிக் காட்சியாக முருகன், வள்ளி - தெய்வானையுடன் சேர்ந்து நடனம் ஆடுவது போல் இருந்தது, அனைவர் மனதையும் கவர்ந்தது. அந்த நாட்டிய நாடகம் மட்டும் ஒரு மணி நேரத்திற்கும் மேல் நடந்தது.

அடுத்த நிகழ்ச்சி தொடங்க... மீரா கீழே சென்று முன் வரிசையில் அமர்ந்தாள். ஆராதனாவிற்கு இந்தப் பக்கம் மீரா அமர்ந்திருக்க, அந்தப் பக்கம் அவளது

அம்மா, அடுத்து அவள் அப்பா, அடுத்து ஆதி, கடைசியாக அர்ஜுன் அமர்ந்திருந்தான்.

ஆராதனாவிடம் அவளது அப்பா, "கால் வலிக்குதாடா...?" என்று கேட்க, அவள் இல்லை என்றாள்.

அடுத்து அமர்ந்திருந்த ஆதி, "நான் போய் ஜூஸ் வாங்கிட்டு வரட்டா...?" என்று கேட்க, ஆராதனா வேண்டாம் என்றாள்.

இவர்கள் அடிக்கும் கூத்தைப் பார்த்த வித்யா, "பத்து நிமிஷம் ஆடினதுக்கு இந்த உபசரிப்பா...? அதோ அந்தப் பொண்ணு ஒரு மணி நேரம் ஆடிட்டு வந்து, அவ பாட்டுக்கு உட்கார்ந்திருக்கா... இதுல நடுவுல வேற போய் டிரஸ் மாத்திட்டு வந்தா, அவகிட்ட இப்படிக் கேட்டா கூடப் பரவாயில்லை, உங்களுக்கே கொஞ்சம் ஓவராத் தெரியலை...?" என்றார்.

அவர்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்ட மீராவிற்குச் சிரிப்பாக வந்தது. அவளுக்குத் தெரியாது, அதுதான் அர்ஜுனின் குடும்பம் என்று. அந்த இடம் இருட்டாக இருந்ததால்... அவள் அர்ஜுனை இன்னும் பார்க்கவில்லை. அர்ஜுனும் அவள் கீழே வந்து உட்கார்ந்ததைக் கவனிக்கவில்லை.

விழா முடிந்ததும்... எல்லோருக்கும் நினைவுப் பரிசு கொடுக்கப்பட்டது. மீராதான் அந்த நாட்டியப் பள்ளியில் சீனியர் என்பதால், முதலில் அவளுக்குத்தான் நினைவுப் பரிசு கொடுத்தனர். அவள் மேடைக்குச் சென்று பரிசு

வாங்கிய போது, அவளைப் பற்றி ஒலிபெருக்கியில் ஒருவர் பேசினார்.

மீரா, அவர்களது நாட்டியப் பள்ளியிலேயே சிறந்த மாணவி என்றும், அவள் பல விருதுகளையும், பரிசுகளையும் வாங்கித் தங்களைப் பெருமைப்படுத்தி யுள்ளதாகவும், அவள் தனது எட்டு வயதில் இருந்து நாட்டியம் கற்று வருவதாகவும், அவள் பரதம் மட்டுமின்றி இன்னும் பிற மாநில நடனங்களிலும் தேர்ச்சி பெற்றவள் என்றும் அறிவித்தார்.

மீரா பரிசு வாங்கிய போது, அந்த அரங்கத்தில் இருந்த அனைவருமே கைதட்டி அவளை உற்சாகப் படுத்தினார்கள். அர்ஜுன், மீராவின் குடும்பத்தினர் வந்திருப்பார்கள் என்று அவளையே பார்க்க... மேடையில் இருந்து இறங்கியவள், கீழே வந்து ஆராதனா பக்கத்தில் அமர்ந்து, அவளுக்கு அடுத்து அமர்ந்திருந்த பெண்ணிடம் பேசிக்கொண்டிருந்தாள்.

பிறகு மற்றவர்கள் சென்று பரிசு வாங்க, ஆராதனாவும் சென்று வாங்கி வந்தாள். நிகழ்ச்சி முடிந்து எல்லோரும் வெளியே வந்தனர். அர்ஜுன் வீட்டில் எல்லோரும் காரில் வந்திருந்தனர். அதனால் அவர்கள் கார் பார்க்கிங் செல்ல... அர்ஜுன் தனது பைக்கை எடுக்கச் சென்றான்.

கார் பார்க்கிங்கில் ஆராதனா வாங்கிய நினைவுப் பரிசை அவளது அப்பா, அம்மா, ஆதி என்று எல்லோரும் மாற்றி மாற்றி அவர்கள் கையில் வாங்கி

அழகு பார்க்க, அதைப் பார்த்த மீரா முகத்தில் புன்னகை மலர்ந்தது. மீராவைப் பார்த்த வித்யா, "நீ ரொம்ப நல்லா ஆடினம்மா..." என்று சொல்ல... மீரா பதிலுக்கு "தேங்க்ஸ்..." என்றாள்.

ஆராதனாவும், மீராவும் வேறு வேறு நேரங்களில் நாட்டியப் பள்ளிக்குச் செல்வதால், இன்றுதான் ஒருவரை ஒருவர் சந்தித்தனர். "ரொம்ப நல்லா ஆடினீங்க மீரா... நீங்க ஆடும் போது மத்தவங்க ஆடுறதைப் பார்க்க முடியலை, கண்ணு உங்களை விட்டு நகர மாட்டேங்குது." ஆராதனா சொல்ல... அவள் சொன்னதைக் கேட்டுச் சிரித்த மீரா, "நீங்களும் நல்லா ஆடினீங்க..." என்றாள்.

அப்போது ஆதியின் செல் அடிக்க, எடுத்துப் பேசியவன், "வந்துட்டே இருக்கோம்டா.." என்று சொல்லிப் போனை வைத்தவன், "போலாமா...?" என்று கேட்க... ஆராதனா, மீராவிடம், 'பை' என்று சொல்லிக் காரில் ஏறினாள். கேட் அருகில் பைக்குடன் நின்ற அர்ஜுனின் அருகில் சென்று ஆதி காரை நிறுத்த...

"எவ்ளோ நேரம் வெயிட் பண்றது...? கார் எடுத்திட்டு வர இவ்வளவு நேரமா...?"

"சாரி அர்ஜுன், நான் மீராகிட்ட பேசிட்டு இருந்தேன், அதுதான் லேட்..." என்று ஆராதனா சொல்ல... மீரா என்றவுடன் ஆர்வமாய், 'என்ன பேசின...?' என்று கேட்க வந்தவன், 'இப்போது வேண்டாம், அப்புறம் கேட்போம்...' என்று நினைத்து, "நீங்க வீட்டுக்குப் போங்க... நான் கடைக்குப் போயிட்டு வரேன்." அர்ஜுன் சொல்ல... சரி என்று ஆதி காரைக் கிளப்பிக் கொண்டு சென்றான்.

ஆதி சென்றதும், அர்ஜுன், மீராவைத் தேட... அப்போது அவனைக் கடந்து சென்ற காரில், பின் சீட்டில் மீரா கண் மூடிச் சாய்ந்து அமர்ந்திருந்தாள். வண்டியை டிரைவர் ஓட்டிக்கொண்டு சென்றார்.

அர்ஜுனுக்கு நினைக்க நினைக்க ஆச்சரியமாக இருந்தது. 'இவ்வளவு சிறப்பா மீரா நடனம் ஆடுவதைப் பார்க்க, அவங்க வீட்ல இருந்து ஏன் யாரும் வரலை? ஒரு வேளை... மீரா இப்படி அடிக்கடி மேடையில் ஆடுறது வழக்கம் என்பதால் வரலையா...? இல்லை, பணக்காரங்களுக்குப் பிள்ளைங்களோட நிகழ்ச்சிக்குப் போக நேரம் இருக்காதா...?' என்று யோசித்துக் கொண்டே சென்றான்.

அன்று இரவு தோட்டத்தில் கணேசனும், ஆதியும் தங்கள் தொழிலைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்க... அர்ஜுன் மெதுவாக ஆராதனாவிடம், "இன்னைக்கு ப்ரோக்ராம் நல்லா இருந்துச்சு இல்ல..." என்று ஆரம்பிக்க...

"ஆமாம்... சூப்பர் இல்ல. அதுவும் மீரா ஆடின நாட்டியம் ரொம்ப அழகு. அவ குறத்தி வேஷத்திலேயும் எவ்வளவு அழகா இருந்தா. நான் அவளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கேன், இன்னைக்குத்தான் பார்க்கிறேன்." ஆராதனா அவளாகவே மீராவைப் பற்றிப் பேச...

அதற்காகக் காத்திருந்த அர்ஜுன், "அப்ப நீ இன்னைக்குத்தான் அவளை நேர்ல பார்க்கிறியா...? உனக்கு அவளைப் பற்றித் தெரியாதா...? அப்ப

இன்னைக்கு அவகிட்ட நீ என்ன பேசின...?" என்று கேட்டவனின் குரலில் இருந்தே... அவனின் ஏமாற்றத்தை உணர்ந்த ஆராதனா, "உனக்கு மீராவைத் தெரியுமா?" என்று கேட்க...

திடுக்கிட்ட அர்ஜுன், ஆராதனாவைப் பார்க்க... அவள் அர்ஜுனை ஆராயும் பார்வை பார்த்துக் கொண்டிருந்தாள். இனி இவளிடம் இருந்து மறைக்க முடியாது என்பதை அறிந்த அர்ஜுன், "அவ எங்க காலேஜ்தான், அதுதான் கேட்டேன்..." என்றான்.

"மீரா உங்க காலேஜா...? ஐயோ... நானும் உங்க காலேஜ்ல சேர்ந்திருக்கக் கூடாதா...? நானும், மீராவும் ப்ரெண்ட்ஸ் ஆகி இருப்போமே..." ஆரு சந்தோஷத்தில் குதிக்க...

அர்ஜுன், "எங்க காலேஜ்ல மக்குப் பசங்களைச் சேர்த்துக்க மாட்டாங்க..." என்றவன், ஆரு அவனைப் பார்த்து முறைப்பதைப் பொருட்படுத்தாமல், "நீ டான்ஸ் கிளாஸ்ல மீராவைப் பார்த்தது இல்லை...?" அவன் சந்தேகமாகக் கேட்க...

"இல்லை, நான் காலையில பேட்ச், மீரா சாயந்திரம் பேட்ச். ஆனா... எப்பவும் எங்க மேம் மீராவைப் பத்திப் புகழ்ந்து பேசுவாங்க, அதனால தெரியும்..." என்றாள்.

"ஓ...! அப்படியா...?" என்று அர்ஜுன் சொன்ன போது... கணேசன், "தூங்கலாம்... இன்னைக்கு ரொம்ப லேட்..." என்றதும், எல்லோரும் உள்ளே சென்றனர்.

மறுநாள் கல்லூரிக்குச் சீக்கிரம் வந்த அர்ஜுன், இன்னும் யாரும் வராததால் அப்படியே பெஞ்சில் கால் நீட்டிப் படுத்து விட்டான்.

சிறிது நேரத்தில் யாரோ அவனைத் தட்டியதும் கண் திறந்து பார்க்க, எதிரில் சூர்யா நின்றிருந்தான்.

"என்ன அர்ஜுன், காலையில தூங்குற?"

"ஹாய் சூர்யா.... நேத்து தூங்க லேட் ஆகிடுச்சு, அதுதான் கொஞ்சம் டயர்டா இருக்கு..."

"அப்படியா...? சரி, வா... கான்டீன் போய் டீ குடிச்சிட்டு வரலாம், கொஞ்சம் பிரெஷ்ஷா இருக்கும்..." சூர்யா சொல்ல, அர்ஜுனும் சரியென்று அவனுடன் கான்டீன் சென்றான். டீ வாங்கிக் கொண்டு இருவரும் ஓரமாக இருந்த இருக்கையில் சென்று அமர்ந்தனர்.

"ஏதாவது ப்ராப்ளமா அர்ஜுன்...? நீ இந்த மாதிரி டல்லா இருந்து பார்த்ததே இல்லை... அதுதான் கேட்கிறேன்."

"ம்ம்... என்னை மீரா ரொம்ப டிஸ்டர்ப் பண்றா சூர்யா. நான் அவளைப் பத்தி நினைக்கவே கூடாதுன்னு நினைச்சேன்... ஆனா... இப்ப அவளைத்தான் ரொம்ப நினைக்கிறேன். இத்தனை நாள் என் கண்ல படாதவ, நான் படிப்பு முடிக்கக் கொஞ்ச நாள் இருக்கும் போது, எதுக்கு என் கண்ல படணும்?"

"அர்ஜுன், நீ மீராவை லவ் பண்றியா...?"

அர்ஜுன் மௌனமாக ஜன்னல் வழியே வேடிக்கை பார்த்தவன், பிறகு சிறிது நேரம் சென்று, "ஆமாம்..." என்றான்.

"அதை ஏன்டா அர்ஜுன் இவ்வளவு வருத்தமா சொல்ற...? கொஞ்சம் சந்தோஷமாத்தான் சொல்லேன். மீரா என்ன அவ்வளவு மோசமாவா இருக்கா...? இல்லையே... அழகாத்தான இருக்கா..." சூர்யா யோசிப்பது போல் பாவனை செய்ய...

அதைக் கேட்டு வாய் விட்டுச் சிரித்த அர்ஜுன், "அவளுக்கு என்ன.... அவ அழகுதான். நான் அதை நினைக்கலை... அம்மா ஃபீல் பண்ணுவாங்க. அப்புறம் மீரா ரொம்பப் பெரிய இடம், அதுதான் யோசிக்கிறேன், ரெண்டு குடும்பத்துக்கும் ஒத்து வருமா...?"

"ஏன், நீங்க மட்டும் என்ன சாதாரணக் குடும்பமா? அவங்க அளவு வசதி இல்லைன்னாலும், நீங்களும் பெரிய இடம்தான். அதெல்லாம் ஒண்ணும் பிரச்சினை இல்லை... அப்புறம் எந்தப் பெற்றோர்தான் லவ் பண்றோம்னு சொன்னதும், சரின்னு சொல்வாங்க. அவங்ககிட்ட எடுத்துச் சொன்னாப் புரிஞ்சிக்கப் போறாங்க. இதுக்குப் போய் ரொம்ப ஃபீல் பண்ணிட்டு... சரி, சொல்லு... உங்க அம்மாவுக்குப் பிடிக்கலைன்னா... நீ மீராவை விட்டுடுவியா...?"

"இல்லை... எனக்கு எங்க அம்மா, மீரா ரெண்டு பேருமே முக்கியம். நான் ரெண்டு பேரையும் விட்டுத் தர மாட்டேன்."

"அப்புறம் எதுக்குக் குழப்பிக்கிற? சரி, நீ இவ்வளவு உறுதியா இருக்க... ஆனா... மீரா உன்னை லவ் பண்றாளான்னு தெரியலையே..."

"எனக்குத் தெரியும், அவளும் என்னை லவ் பண்றா... என்னோட யூகம் சரின்னா, மீராவுக்கு என்னை முன்னாடியே தெரியும்."

"அப்படியா சொல்ற...?" என்ற சூர்யா, "அர்ஜுன், அந்தக் கடைசி டேபிளைப் பாரு..." என்றதும், அர்ஜுன் திரும்பிப் பார்க்க... அங்கே மீரா உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

"இவளைப் புரிஞ்சிக்கவே முடியலைடா. நேத்து ஒரு பெரிய நாட்டிய நிகழ்ச்சி இருந்தது. அதுல அவ்வளவு அற்புதமா ஆடினா. ஆனா... அவங்க வீட்ல இருந்து யாருமே பார்க்க வரலை. ப்ரோக்ராம் முடியும் போது ஒன்பது மணி இருக்கும், கார்ல தனியா டிரைவரோட போறா. இப்ப பாரு, காலையில டிபன் கான்டீன்ல உட்கார்ந்து சாப்பிடுறா... இவளை இப்படியே விடக் கூடாது, வா..." என்ற அர்ஜுன் எழுந்து மீராவை நோக்கிச் செல்ல... அவனுடன் சூர்யாவும் சென்றான்.

"ஹாய் மீரா..." என்ற அர்ஜுன், மீராவின் எதிரில் இருந்த இருக்கையில் அமர, அவனுக்கு அடுத்த இருக்கையில் சூர்யா அமர்ந்தான்.

அர்ஜுனை அப்போது எதிர்பார்க்காத மீரா, "ஹாய்..." என்றாள் தயக்கத்துடன்.

"என்ன மீரா... அர்ஜுனுக்கு மட்டும்தான் ஹாய்யா...?" என்ற சூர்யா "ஐ அம் சூர்யா... அர்ஜுனோட ப்ரெண்ட்..." என்று கையை நீட்ட... மீராவும் அவன் கையைப் பற்றிக் குலுக்கினாள்.

அதைப் பார்த்த அர்ஜுனின் காதில் இருந்து புகை வர, ஒரு நிமிடம் என்ன செய்வது என்று யோசித்தவன், "நானும் முறையா அறிமுகம் பண்ணிக்கிறேன்..." என்றவன், மீராவிடம், "ஹாய்... நான் அர்ஜுன், ஃபைனல் இயர்..." என்று சொல்லிக் கையை நீட்ட... அவன் செய்கையில் மீராவுக்குச் சிரிப்பு வர, அதை அடக்கிக் கொண்டு, அர்ஜுன் கை நீட்டியதைக் கவனிக்காதது போல், தண்ணீரை எடுத்துக் குடித்தாள்.

ஆனால், அர்ஜுன் கையை எடுக்காமல் நீட்டிக் கொண்டே இருக்க... வேறு வழியில்லாமல் அவன் கையைப் பற்றி மீரா குலுக்க... பற்றிய கையை விடாமல், "நேத்து நீ ரொம்ப சூப்பரா டான்ஸ் ஆடின..." என்று இயல்பாக அர்ஜுன் ஒருமைக்குத் தாவ... அவனை ஆச்சரியமாகப் பார்த்த மீரா, "உங்களுக்கு எப்படித் தெரியும்...? நீங்களும் வந்து இருந்தீங்களா என்ன...?" என்றாள் ஆச்சர்யமாக.

"ஆமாம்... என் தங்கையும் நேத்து டான்ஸ் ஆடினா..." என்றான்.

மீரா, 'இவன் தங்கையா...? யாரு...?' என்று யோசிக்க... "நேத்து உன் பக்கத்தில உட்கார்ந்து இருந்தாளே ஆராதனா... அவதான் என் தங்கை..." என்றதும்,

மீராவுக்கு நேற்று பார்த்த குடும்பம் பளிச்சென்று நினைவுக்கு வர, "ஆமாம்... ஆராதனாவை நேத்துப் பார்த்தேன்... ஆனா... அங்க நீங்க இல்லையே..."

"நான் அங்கதான் இருந்தேன். நான் பைக்ல வந்திருந்தேன், அதுதான் நீ என்னைப் பார்க்கலை..."

'அர்ஜுன் கொடுத்து வச்சவன், இந்த மாதிரி நல்ல குடும்பம் அவனுக்குக் கிடைக்க...' என்று நினைத்தவள், அப்போதுதான் அர்ஜுன் இன்னும் அவள் கையைப் பிடித்துக் கொண்டிருப்பதைக் கவனித்தாள். "அர்ஜுன், கொஞ்சம் கையை விடுறீங்களா...?" என்றதும்,

அர்ஜுன், "ஓ...! சாரி, மறந்திட்டேன்..." என்றவன், அவள் கையை விட... அப்போது வகுப்பு தொடங்கும் நேரம் என்பதால் மணி அடிக்க... அர்ஜுன் வேறு வழி இல்லாமல் மீராவிடம் விடைபெற்றுத் தன் வகுப்பிற்குக் கிளம்பினான்.

இருவரும் எதிர் எதிர் திசையில் நடக்க... அந்த நடைபாதையின் முடிவில் அர்ஜுனும், மீராவும் திரும்பி ஒருவரை ஒருவர் பார்க்க... இருவர் முகத்திலும் புன்னகை மலர்ந்தது. இருவரும் மலர்ந்த முகத்துடன் தங்கள் வகுப்புக்குச் சென்றனர்.

வகுப்பிற்குள் வந்த மீராவைப் பார்த்து கீர்த்தனா, "என்னடி... உன்னோட முகம் ஜொலிக்குது. இன்னைக்கு அர்ஜுனைப் பார்த்தியா என்ன...?" என்றாள் ஆர்வமாக.

ஆமாம் என்று தலை ஆட்டிய மீரா, "அவங்களே இன்னைக்கு என்கிட்டே வந்து பேசினாங்க..." என்றாள் வெட்கத்துடன்.

"என்னது, அவங்களா...? ரொம்ப மரியாதை எல்லாம் தர்ற... நீ அர்ஜுனை லவ் பண்றதான...?"

"ஆமாம், நான் அவங்களை லவ் பண்றேன், எனக்கு முதல் தடவை அர்ஜுனைப் பார்க்கும் போதே, புதுசா பார்க்கிற மாதிரி இல்லை. ரொம்ப க்ளோஸாத்தான் நினைக்கத் தோணிச்சு. அர்ஜுன் என்னைப் பார்ப் பாங்களா... அவங்களுக்கு என்னைப் பிடிக்குமான்னு பயந்திட்டே இருந்தேன். அதுவும் இல்லாம அவங்க வேற கொஞ்ச நாளா என் மேல கோபமா இருந்தாங்களா... நான் ரொம்பப் பயந்திட்டேன், அர்ஜுனுக்கு என்னைப் பிடிக்கலைன்னு. இப்ப தான் நிம்மதியா இருக்கு..." என்றாள் மீரா மகிழ்ச்சியுடன்.

"இனி எங்களை எல்லாம் மறந்திடுவ, அர்ஜுனோட இனிமே கனவில தினமும் டூயட்டா...?"

"கீத்து... அவங்க இன்னும் என்னை லவ் பண்றேன்னு சொல்லலை..."

"ஆமாம் மீரா, எதுக்கும் நீ கொஞ்சம் ஜாக்கிரதை யாவே இரு... இந்த ஆம்பளைங்களை நம்ப முடியாது. அர்ஜுன், 'நான் ப்ரெண்டாத்தான் பழகினேன்'னு சொல்லிட்டாங்கன்னு வை, வீணா உனக்குத்தான் மனக் கஷ்டம். பார்த்து நடந்துக்கோ..."

கீர்த்தனா சொன்னதைக் கேட்ட மீராவுக்கு மனதில் கலக்கம் ஏற்பட்டது. அவள் கண் முன்னே அர்ஜுனின் குடும்பம் வந்தது. 'அவங்க குடும்பத்தில நானும் சேர

முடியுமா...? அர்ஜுன் என்னை விரும்புவாங்களா...?' என்று யோசிக்க ஆரம்பித்தாள்.

அங்கே அர்ஜுனிடம் சூர்யா, "அப்புறம்... எப்ப உன் லவ்வை மீராட்ட சொல்லப் போற...?" என்று கேட்க...

"இப்ப உடனே சொல்லப் போறது இல்ல... முதல்ல அவகிட்ட ப்ரெண்டாத்தான் இருக்கப் போறேன்... அப்புறம் மெதுவாச் சொல்லணும்..." என்றான்.

அன்று மாலை மீரா கல்லூரி முடிந்து அவள் தோழிகளுடன் வந்தவள், க்ரௌண்டில் அர்ஜுன் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்து மெதுவாக நடந்தாள்.

அர்ஜுன் அவளைப் பார்க்கிறானா என்று ஓரக் கண்ணால் பார்க்க... அவன் தீவிரமாக விளையாடிக் கொண்டிருந்தான்.

மீரா ஏமாற்றமாக உணர்ந்தாள். 'நாம தான் ரொம்ப எதிர்பார்த்திட்டமோ...? அர்ஜுன் சாதாரண மாகத்தான் காலையில வந்து பேசி இருப்பாங்களோ...? அப்புறம் ஏன் கைய விடாம பிடிச்சிருந்தாங்க...?' என்று குழம்பிக் கொண்டே சென்றாள்.

இங்கே அர்ஜுன், 'என்ன இவ, நம்மைக் கண்டுக்காம போறா...? இது சரி இல்லையே...!' என்று நினைத்தான்.

அடுத்து வந்த சில நாட்கள் அர்ஜுனும், மீராவும் பார்த்துக் கொள்ள முடியவில்லை. இருவருக்கும் கல்லூரியில் இன்டர்னல்ஸ் நடந்து கொண்டிருந்தது. மீராவால் அந்த வாரம் ஷட்டில் விளையாடவும் போக முடியவில்லை. அவளுக்குப் பெண்களுக்கு வரும் மாதாந்திரப் பிரச்சினை... அதனால் செல்லவில்லை.

அர்ஜுன், 'இவ ஏன் வரலை? போனவாரம் வேற கோபமாப் போனா... அப்புறம் காலேஜ்ல நல்லாத்தானே இருந்தா...? ஒருவேளை நான் வருவேன்னு வர லையா...? ஏன் வரலை...?' என்று மனதிற்குள் புலம்பிய வன், எரிச்சலை ஜீவாவிடம் காமிக்க...

"டேய்... உன் ஆளு வரலைன்னு கோபத்தை என் மேல காமிக்காதே. மீராவுக்கு உடம்பு சரி இல்லையோ என்னவோ...?" ஜீவா சொல்ல... அர்ஜுன் அதற்கும் தவிக்க ஆரம்பித்தான். 'ஒரு வேளை உடம்பு சரி இல்லையோ...? ச்சே...! போன் நம்பர் கூட இல்லை, முதல்ல அவ நம்பர் வாங்கணும்...' என்று நினைத்துக் கொண்டான்.

வீட்டிற்கு வந்த அர்ஜுன், ஆரு டான்ஸ் கிளாஸுக்குக் கிளம்புவதைப் பார்த்து, 'இவளுக்கும் சாயங்காலம் வகுப்பா இருந்தா... இவளை விடுற சாக்குல மீராவைப் பார்க்கலாம்...' என்று நினைத்தவன், "நீ காலையிலேயே போய் தையத் தக்கன்னு குதிக்க ணுமா...? ஏன், சாயங்காலம் போனா ஆகாதா...?" அர்ஜுன் கடுப்புடன் கேட்க...

"யாரு, நான் தையத் தக்கான்னு குதிக்கிறேனா...?" ஆரு கோபமாகக் கேட்க...

"ஆமா, நீ ஆடினது அப்படித்தான் இருந்தது. நீ காலையில பேட்ச் போய்... மதியம் அம்மா என்ன சாப்பாடு செஞ்சிருப்பாங்கன்னு நினைச்சிக்கிட்டே ஒழுங்கா கத்துக்க மாட்றியோ என்னவோ... நீ சாயங்காலம் பேட்ச் போனா... நல்லாப் பொறுமையாக் கத்துக்கலாம். அன்னைக்கு ஒரு பொண்ணு நல்லா ஆடிச்சே, அது கூடச் சாயங்காலம் பேட்ச்தான்..." அர்ஜுன் சொல்ல...

"அந்தப் பொண்ணு பேரு என்னடா...?" ஆதி கேட்க...

"பேரெல்லாம் ஞாபகம் இல்லை, ஆனா.... அந்தப் பொண்ணுதான் நல்லா ஆடிச்சு..." என்றான் அர்ஜுன்.

ஆதி, ஆரு இருவருக்குமே அர்ஜுன், மீராவைத் தான் சொல்கிறான் என்று புரிந்தது. ஆனால் அவள் பேரை மறந்தது போல் ஏன் நடிக்கிறான்? என்றுதான் புரியவில்லை. சரி, விட்டுப் பிடிப்போம் என்று நினைத் தார்கள்.

காலை உணவு முடிந்ததும் ஆரு, "அர்ஜுன்... என்னை டான்ஸ் கிளாஸ்ல விட முடியுமா...?" என்று கேட்க...

அர்ஜுன், "இல்லை, என்னால முடியாது. நீ ஆதியோட போ..." என்றான்.

"ஆமா... ஆரு, அவனால முடியாது. நீ சாயங்காலம் கிளாஸுக்குப் போனா விடுவானா

இருக்கும்... இல்லை அர்ஜுன்...?" என்று ஆதி ஒரு மாதிரி குரலில் கேட்க... உஷாரான அர்ஜுன், ஆரு பேட்ச் மாற மாட்டாள் என்ற நம்பிக்கையில், "அப்பவும் முடியாது..." என்றான் கெத்தாக. அவனுக்குத் தெரியவில்லை, அடுத்த வாரமே தான் ஆருவிடம் சென்று கெஞ்சப் போகிறோம் என்று.

5

ஞாயிறு அன்றும் மீரா வரவில்லை என்றதும் அர்ஜுன், சூர்யா வீட்டிற்குச் சென்றான். அர்ஜுனை எதிர்ப்பார்க்காத சூர்யா, "டேய் அர்ஜுன், என்ன திடீர்னு இந்தப் பக்கம்? நீ என்னைப் பார்க்க வந்தேன்னு சொன்னா... நான் நம்ப மாட்டேன். ஒழுங்கா உண்மையைச் சொல்லு..." என்றான்.

சூர்யா சொன்னதைக் கேட்ட அர்ஜுன் சிரிக்க... அப்போது சூர்யாவின் அக்கா மது கையில் காபியோடு வந்தவர், "ஹாய் அர்ஜுன்... எப்படி இருக்க...?" என்றார்.

"நான் நல்லா இருக்கேன் அக்கா, நீங்க எப்படி இருக்கீங்க? எப்ப வந்தீங்க...?" அர்ஜுன் பதிலுக்குக் கேட்க...

"நல்லா இருக்கேன் அர்ஜுன்..." என்றவர், ஏதோ சொல்ல வந்து தயங்க...

"அவங்க இப்ப ரெண்டாவது குழந்தை உண்டாகி இருக்காங்க, அதுதான் ரெஸ்ட் எடுக்க வந்திருக்காங்க..." சூர்யா சொல்ல...

அர்ஜுன், "அப்படியா! கங்கிராட்ஸ் அக்கா, என் னோட டார்லிங் எங்க?" என்று கேட்க...

"இப்பதான் எழுந்தா..." என்ற மது, "ப்ரீத்தி... இங்க வந்து பாரு, அர்ஜுன் மாமா வந்திருக்காங்க..." என்று சத்தமாகக் குரல் கொடுக்க... உள்ளே இருந்து ஓடி வந்த மூன்று வயதுப் பெண் குழந்தை, அர்ஜுனின் மடியில் சென்று அமர்ந்தது.

"ஹாய் ப்ரீத்தி செல்லம்... எப்படி இருக்கீங்க...? இந்த மாமாவை ஞாபகம் இருக்கா...?" அர்ஜுன் கேட்க... இருக்கு என்று தலை ஆட்டிய குழந்தை, சாக்லெட் என்று கை நீட்ட...

"நீ வந்திருக்கேன்னு மாமாவுக்குத் தெரியாது. நீ கிளம்பி வா... மாமா உன்னைக் கடைக்குக் கூட்டிட்டுப் போய் வாங்கித் தரேன்..." அர்ஜுன் சொல்ல...

ப்ரீத்தி, "அம்மா... எனக்கு வேற டிரஸ் போட்டு விடுங்க..." என்று மதுவிடம் ஓடினாள்.

வேறு உடை மாற்றிக் கொண்டு வந்த ப்ரீத்தியை அழைத்துக் கொண்டு அர்ஜுனும், சூர்யாவும் கடைக்குக் கிளம்பினார்கள். வெளியே வண்டியின் அருகே வந்ததும்,

"அர்ஜுன், இந்தப் பக்கம் ஒரு கடை இருக்கு, அந்தப் பக்கம் ஒரு கடை இருக்கு, அதோட அந்தப் பக்கம்தான் மீரா வீடும் இருக்கு, உனக்கு அந்தப் பக்கம் தானே போகணும்..." சூர்யா கேட்க...

சிரித்த அர்ஜுன், "எப்படிடா கண்டு பிடிச்ச...?" என்றான்.

"ஆமா... இதுக்கு ஜோசியம் பார்க்கணும் பாரு... நீ ரொம்ப நாளா இந்தப் பக்கம் வராதவன் வந்தா தெரியாதா...?" என்று சொல்லிக் கொண்டே சூர்யா வண்டியை எடுக்க... முன் பக்கத்தில் ப்ரீத்தியும், பின் பக்கம் அர்ஜுனும் உட்கார்ந்தார்கள். சூர்யா வண்டியை மீரா வீடு இருக்கும் திசையை நோக்கி ஓட்டினான்.

தூரத்தில் இருந்தே சூர்யா, "அங்க பாரு... அந்த வெள்ளைக் கலர் பில்டிங், அதுதான் மீரா வீடு.;.." என்றதும், அந்த வீட்டைப் பார்த்த அர்ஜுன் மலைத்து விட்டான். 'இவ்வளவு பெரிய வீடா...?' என்று நினைத்தவன், மீரா எங்காவது தென்படுகிறாளா என்று வீட்டையே பார்த்துக் கொண்டு வந்தான். ஆனால் மீராவைப் பார்க்க முடியவில்லை.

கடைக்குச் சென்று சாக்லெட் வாங்கிக் கொண்டு திரும்பி வரும் போதும் பார்த்துக் கொண்டே வந்தான், அப்போதும் மீராவைப் பார்க்க முடியவில்லை. "என்னடா, மீராவைக் காணோம்..." அர்ஜுன் ஏக்கமாகச் சொல்ல...

"ஆமா... அவளுக்கு நீ வருவேன்னு தெரியும் பாரு, வாசல்ல நிக்க... இவ்வளவு பெரிய வீட்ல அவ வெளிய நின்னாலும் தெரியாது..." என்றான் சூர்யா.

சூர்யாவை வீட்டில் இறக்கி விட்டுவிட்டு அர்ஜுன் வாசலில் இருந்தே வீட்டுக்குக் கிளம்புவதாகச் சொல்ல... சூர்யாவின் அக்கா மது, "சாக்லெட் வாங்கிட்டியா...?" என்று ப்ரீத்தியைப் பார்த்துக் கேட்டுக் கொண்டே வெளியே வந்தார்.

"வாங்கிட்டோம்மா... அப்படியே மீரா வீட்டைப் பார்த்தோம்... ஆனா மீராதான் இல்லை..." ப்ரீத்தி சொல்ல... அதைக் கேட்ட அர்ஜுன், சூர்யா இருவரும் அதிர்ந்தனர்.

'அய்யய்யோ... இந்தக் குட்டிச் சாத்தான் எல்லாத் தையும் கேட்டுட்டே இருந்துச்சா...?' என்று சூர்யா நினைக்க... அர்ஜுன், "நான் கிளம்பறேன், அம்மா தேடுவாங்க..." என்று வண்டியைக் கிளப்பிக் கொண்டு சென்று விட்டான்.

மது, "யாருடா மீரா...?" என்று குறுகுறுப்புடன் பார்க்க... 'சூர்யா என்னை மாட்டி விட்டுட்டுப் போயிட் டானே...' என்று நினைத்தவன், "அவ எங்க காலேஜ் பொண்ணு, அவ்வளவுதான். நீ பாட்டுக்குக் கற்பனையை வளர்த்துக்காதே..." என்று தன் அக்காவுடன் உள்ளே சென்றான்.

அன்று மாலை பக்கத்தில் இருந்த பார்க்கிற்குத் தன் அக்கா மற்றும் ப்ரீத்தியை அழைத்துக் கொண்டு சென்ற சூர்யா, "அக்கா... நீ ஊருக்குப் போறவரை டெய்லி சாயங்காலம் இங்க வாக்கா... உனக்கும் பொழுது போகும், ப்ரீத்திக்கும் பொழுது போகும்..." என்றான். மது சரி என்று தலை ஆட்ட... ப்ரீத்தி துள்ளிக் குதித்து உள்ளே ஓடியது.

ப்ரீத்தி ஒவ்வொரு விளையாட்டிலும் ஆர்வமாகச் சென்று விளையாட... மதுவும், சூர்யாவும் ஓரமாக இருந்த பெஞ்சில் சென்று அமர்ந்தனர்.

அப்போது அங்கே சில குழந்தைகள் மண்ணில் வீடு கட்டி விளையாட, ப்ரீத்தியும் ஆர்வமாக அங்கே சென்றாள். அங்கே குழந்தைகளோடு உட்கார்ந்து மீரா கதை பேசிக்கொண்டே மணலில் வீடு கட்ட, அதைப் பார்த்த ப்ரீத்தி, "ஹை... நானும் வீடு கட்டுவேன்..." என்று மீராவின் அருகே சென்று அமர்ந்தாள்.

"ஹாய் குட்டி.... நீங்க புதுசா...? நான் இப்பதான் உங்களைப் பார்க்கிறேன்..."

"ஆமா... நான் பெங்களூர்ல இருக்கேன்... எங்க தாத்தா வீட்டுக்கு வந்திருக்கோம்..." மீராவும், ப்ரீத்தியும் பேசிக்கொண்டே மணலில் வீடு கட்ட... சிறிது நேரம் கழித்து மதுவும், சூர்யாவும் ப்ரீத்தியைத் தேடிக்கொண்டு வந்தவர்கள், அவள் மணலில் விளையாடுவதைப் பார்த்து அங்கே வந்தனர்.

மது, ப்ரீத்தியைப் பார்த்து, "இப்படி மண்ணுல விளையாடலாமா...? பாரு, டிரஸ் எல்லாம் அழுக்கு..." என்று கடிந்து கொள்ள...

"அவளைத் திட்டாதீங்க... பாவம், அவள் நாங்க விளையாடுறதைப் பார்த்துதான் வந்தா..." என்றாள் மீரா.

மதுவும், சூர்யாவும் அப்போதுதான் மீராவைப் பார்த்தனர். மீராவும் அப்போதுதான் சூர்யாவைக் கவனித்தாள்.

"ஹாய் மீரா, என்னதிது... இப்படிக் குழந்தைங் களோட சேர்ந்து மண்ணுல விளையாடுற...?" சூர்யா ஆச்சர்யப்பட...

"சும்மாதான்... எனக்கும் மண்ணுல விளையாடப் பிடிக்கும்..." என்றாள் மீரா.

'அங்க ஒருத்தன் இவளை நினைச்சு உருகிட்டு இருக்கான். இவ இங்க மண்ணுல விளையாடிட்டு இருக்கா...? இது எங்க போய் முடியப் போகுதோ...?' என்று நினைத்த சூர்யா, "அக்கா, இவங்க மீரா... எங்க காலேஜ்..." என்று அறிமுகப்படுத்த... மீராவும், மதுவும் ஒருவரை ஒருவர் பார்த்து ஹாய் என்று சொல்ல...

"நீங்கதான் மீராவா...? காலையில அர்ஜுன் மாமா உங்களைப் பார்க்க, உங்க வீட்டுக்கு வந்தாங்க. ஆனா நீங்க இல்லை..." ப்ரீத்தி மழலையில் சொல்ல...

மீரா, ப்ரீத்தி சொன்னதை நம்ப முடியாமல் சூர்யாவைப் பார்க்க... அவன், 'ஐயோ...! இந்தக் குட்டிச் சாத்தான் இப்படிக் காலையில இருந்து போட்டுக் குடுக்குதே...' என்று பதறியவன், என்ன சொல்வது என்று தெரியாமல் முழிக்க...

"இல்லை, காலையில அர்ஜுன் எங்க வீட்டுக்கு வந்தான், அப்போ இவ சாக்லெட் கேட்டா... அது வாங்க உங்க வீட்டுப் பக்கமா போனபோது, சூர்யா உங்க வீட்டை அர்ஜுனுக்குக் காட்டினான் போல... அதைத்தான் சொல்றா..." என்று மது விளக்கிச் சொல்ல...

அதைக் கேட்டுச் சிரித்த மீரா, 'அதுதானே பார்த்தேன்... அவனாவது என்னைப் பார்க்க வர்ற தாவது...?' என்று மனதில் நினைத்தாள்.

மறு நாள் மீரா கல்லூரிக்குச் சீக்கிரமே வந்து விட்டாள். அவளுக்கு நேற்று ப்ரீத்தி சொன்ன, 'அர்ஜுன் மாமா உங்களைப் பார்க்க வந்தாங்க...' என்பதை நினைத்துச் சிரிப்பு வந்தது. 'அவனாவது என்னைப் பார்க்க வர்றதாவது...' என்று நினைத்தவள், 'அர்ஜுன் மனசுல நான் இருக்கேனா...? இல்லையா...? இதை எப்படித் தெரிஞ்சுக்கிறது...?' என்று யோசித்துக் கொண்டே சென்றாள்.

அன்று கல்லூரியில் ஏதோ விழா என்று எல்லோரும் ஆடிட்டோரியத்தில் குழுமி இருந்தனர். மீரா, அர்ஜுன் வருகிறானா என்று வாசலையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் எதிர்பார்த்தபடி அர்ஜுன் சூர்யாவோடு வந்தான். மீரா மறைந்து அமர்ந்து கொண்டு, அர்ஜுன் தன்னைத் தேடுகிறனா என்று பார்த்தாள்.

அர்ஜுன் வந்தவன் உள்ளே சென்று அமராமல், அங்கேயே நின்று முதல் வரிசையில் இருந்து பார்த்துக் கொண்டே வந்தான். அவன் கண்களுக்கு மீரா நடு வரிசையில் அமர்ந்து இருந்தது தெரியவில்லை. மீரா வுக்கு, அவன் தன்னைத்தான் தேடுகிறான் என்று புரிந்தது.

அவள், அவன் தேடுவதை ரசித்துப் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

'மீரா இங்கில்லை, ஒரு வேளை மேலே இருக் கிறாளோ...?' என்று நினைத்த அர்ஜுன், பின் பக்கம்

சென்று அங்கிருந்த படி வழியாக மாடிக்குச் சென்றான். மீரா, 'அர்ஜுன் பின்னாடி சென்று அமர்ந்திருக்கிறான்...' என்று நினைத்தவள், திரும்பிப் பார்க்க... அர்ஜுன் அங்கே இல்லை. அவன் எங்கே உட்கார்ந்திருக்கிறான் என்று தேட ஆரம்பித்தாள்.

அர்ஜுன் மேலே சென்று தேடியவன், அங்கேயும் மீரா இல்லை என்றதும், பால்கனி ஓரத்தில் நின்று, கீழே மீரா இருக்கிறாளா என்று பார்த்தான். கீழே நடு வரிசையில் மீரா அமர்ந்திருப்பதைப் பார்த்து முகம் மலர்ந்தவன், அப்போதுதான் கவனித்தான், மீரா யாரையோ தேடுவதை. சற்றுத் தள்ளி நின்று கொண்டு அர்ஜுன் கவனிக்க, மீரா பின்னாடி திரும்பி யாரையோ தேடிக்கொண்டிருந்தாள்.

'ஒரு வேளை தன்னைத்தான் தேடுகிறாளோ...?' என்று நினைத்த அர்ஜுன், வேகமாகக் கீழே இறங்கித் திரும்பி முன் வாசல் வழியாக வந்து, மீராவின் பார்வை படும்படியான இடத்தில் சென்று நின்றான். அமர்ந்த நிலையிலேயே பின்னாடி திரும்பி அர்ஜுனைத் தேடிக் கொண்டிருந்த மீரா, அவனைக் காணாமல் சலிப் படைந்தாள். 'எங்கே போனான்...?' என்று நினைத்துக் கொண்டே முன் பக்கம் திரும்பி அமர்ந்தவள், அப் போதுதான் கவனித்தாள், அர்ஜுன் வாயில் அருகே நிற்பதை.

'இவன் இங்கதான் இருக்கானா...? இவ்வளவு நேரம் எங்க போனான்...?' என்று நினைத்துக் கொண்டே மீரா

அர்ஜுனை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டு இருந்தாள். இவ்வளவு நேரம் பின்னாடி திரும்பி யாரையோ தேடிக் கொண்டிருந்தவள், தன்னைப் பார்த்ததில் இருந்து பின் பக்கம் திரும்பாமல் அமர்ந் திருக்கும் அழகிலேயே, அவள் தன்னைத்தான் தேடி இருக்கிறாள் என்று புரிந்து கொண்ட அர்ஜுன், மீரா உட்கார்ந்து இருந்த வரிசையில் இருந்து நான்கு வரிசைகளுக்குப் பின் அமர்ந்திருந்த சூர்யாவின் அருகே சென்று அமர்ந்தான்.

மீரா அடிக்கடி திரும்பி அர்ஜுனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அர்ஜுன், மீராவுக்குத் தெரியாமல் அவள் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்த வன், "சூர்யா... மீரா திரும்பி யாரையோ பார்க்கிறா, யாருன்னு பாரு...?" என்றான்.

சூர்யாவும் மீராவைச் சிறிது நேரம் கவனித்தவன், "உன்னைத்தான் அர்ஜுன் பார்க்கிறா..." என்றதும், அந்த இடத்தில் இருந்து எழுந்த அர்ஜுன், மீராவை நோக்கிச் செல்ல... அவன் கை பிடித்துத் தடுத்து அமர வைத்த சூர்யா,

"டேய்...! ஏற்கெனவே நேத்து நீ அவளைப் பார்க்க வந்ததை ப்ரீத்தி அவகிட்ட சொல்லிட்டா..." என்றதும்,

ஆச்சர்யப்பட்ட அர்ஜுன், "எப்ப? அவளுக்கு எப்படி மீராவைத் தெரியும்...?" என்று கேட்க...

சூர்யா நேற்று பார்க்கில் நடந்ததைச் சொன்னான்.

அதைக் கேட்டுச் சிரித்த அர்ஜுன், "இரு, நான் போய்ப் பேசிட்டு வரேன்..." என்றவன், மீராவின் அருகே அமர்ந்திருந்த பெண்ணைத் தள்ளி அமரச் சொல்லிவிட்டு அவள் பக்கத்தில் அமர்ந்தான்.

மீராவிற்கு அர்ஜுன் வந்தது தெரியாது. அவள் திரும்பிப் பின்னாடி பார்த்தவள், அங்கே அர்ஜுன் இல்லை என்றதும், 'இவன் எங்க அடிக்கடி காணாமப் போயிடறான்...?' என்று எரிச்சல் பட்டுக் கொண்டு திரும்ப...

அவள் மறு பக்கம் அமர்ந்திருந்த கீர்த்தனா, "மீரா... அந்தப் பக்கம் பாருடி..." என்று சொல்ல, எந்தப் பக்கம் என்று தெரியாமல் மீரா முழிக்க, "உன் பக்கத்தில பாருடி..." கீர்த்தனா பல்லைக் கடித்துக் கொண்டு சொல்ல, அவள் சொல்வது புரியாமல் குழம்பிய மீரா, திரும்பி தன் மறுபக்கத்தைப் பார்க்க, அங்கே அர்ஜுன் அமர்ந் திருந்தான்.

அர்ஜுனைப் பார்த்துத் திடுக்கிட்ட மீரா, அவன் முகத்தைப் பார்க்க, அவள் புறம் திரும்பியவன், அவளைப் பார்த்து லேசாகக் கண் சிமிட்டினான். அவன் செய்கையில் அதிர்ந்த மீரா, "இங்க என்ன பண்றீங்க?" என்று மெதுவாகக் கேட்க...

"உனக்காகத்தான் வந்தேன், நீ கஷ்டப்பட்டுத் தலையைத் திருப்பி என்னைப் பார்த்திட்டு இருந்த... அது தான் வசதியா இருக்கட்டுமேன்னு இங்க வந்தேன். நீ இப்ப நல்லா பாரு..." என்றவன், மேடையைப் பார்க்க...

மீராவிற்கு, 'ஐயோ... இப்படி மாட்டிக் கொண் டோமே...' என்று இருந்தது. "நான் ஒண்ணும் உங்களைப் பார்க்கலை, என் ப்ரெண்ட்டைத்தான் பார்த்தேன்..." மீரா பொய் சொல்ல...

"பொய் சொல்லாதே மீரா... எனக்கு நல்லாத் தெரியும், நீ என்னைத்தான் பார்த்தே. ரொம்ப நேரமா நீ என்னைத் தேடினதும் தெரியும்."

"நீங்களும்தான் என்னைத் தேடினீங்க..."

"நான் உன்னைத் தேடினேனா...? எப்போ...?" அர்ஜுன் ஆச்சர்யமாகக் கேட்க...

"இப்ப கொஞ்ச நேரம் முன்னாடி வாசல்ல நின்னு என்னைத் தேடல...?" என்றாள் மீரா.

"நான் உன்னைத் தேடல... எங்க உட்கார இடம் இருக்குன்னு பார்த்தேன். அதைப் பார்த்து உன்னைத் தேடுறேன்னு நினைச்சியா...?" அர்ஜுன் அலட்சியமாகச் சொல்ல...

மீராவிற்குப் பற்றிக்கொண்டு வந்தது. "சரி, அப்ப நேத்து எதுக்கு எங்க வீட்டுப் பக்கம் வந்தீங்க? என்னைப் பார்க்கத்தானே...?" என்றாள்.

"இது நல்ல கதையா இருக்கே... நான் ப்ரெண்ட் வீட்டுக்கு வந்தேன், அப்படியே அவனோட கடைக்குப் போகும் போது உங்க வீட்டைப் பார்த்தேன். உங்க வீட்டுப் பக்கம் வந்தா... உடனே உன்னைப் பார்க்க வந்ததா அர்த்தமா...?"

அர்ஜுன் வேண்டுமென்றே கிண்டலாகப் பேச...

"அப்படியா, சரி... நானும் அது மாதிரிதான், பின்னாடி திரும்பி என் ப்ரெண்டைத்தான் பார்த்தேன்... உங்களை ஒண்ணும் பார்க்கலை..." என்றாள் அவளும் பதிலுக்கு வீம்பாக.

அர்ஜுனும், மீராவும் ஒருவரை ஒருவர் முறைத்துக் கொண்டு இருக்க... அங்கே விழா முடிந்து எல்லோரும் எழுந்து சென்றனர்.

"போலாமா மீரா...?"

கீர்த்தனா கேட்க, மீரா எழுந்து அவளுடன் செல்ல... அர்ஜுன், மீராவைப் பார்த்துக்கொண்டே சூர்யாவை நோக்கிச் சென்றான்.

"டேய்... அவகிட்ட போய் என்னடா பேசின? அவ ரொம்பக் கோபமா இருக்கிற மாதிரி இருக்கு..."

"என்னைத் திரும்பித் திரும்பிப் பார்த்திட்டு, போய்க் கேட்டா இல்லைன்னு சொல்றாடா. கோபம் வராதா...? அதுதான் நானும் பதிலுக்கு உன்னைப் பார்க்கலைன்னு சொன்னேன்... கோவிச்சிக்கிட்டுப் போறா..."

"நேத்து அவளுக்காகத் தெருத் தெருவா சுத்திட்டு, எதுக்குடா அவகிட்ட அப்படிச் சொன்ன...?"

"அவ மட்டும் ஒத்துக்கிட்டாளா என்னைத்தான் பார்த்தேன்னு. அவளுக்கு அவ்வளவு இருக்கும் போது, எனக்கு இருக்காதா...? பார்க்கலாம், நானா... அவளான்னு..." அர்ஜுன் வீம்பு பண்ண...

"என்னவோ பண்ணுங்க..." கடுப்புடன் சொன்ன சூர்யா வெளியே செல்ல... அவனோடு அர்ஜுனும் சென்றான்.

அங்கே வெளியே கீர்த்தனா, "அர்ஜுன் என்ன சொன்னாங்க மீரா?" என்று கேட்க...

"ம்ம்... நீ சொன்னது கரெக்ட் கீத்து, அவங்க என்னை லவ் எல்லாம் பண்ணலை... சும்மா சீண்டி விளையாடுறாங்க..." என்றாள் மீரா வேதனையுடன்.

"சரி, விடு மீரா... வா, போகலாம்..." என்ற கீர்த்தனா, மீராவை அழைத்துக் கொண்டு சென்றாள்.

அன்று சூர்யா இரவு உணவு சாப்பிடும் போது ப்ரீத்தி, "நாங்க இன்னைக்கு மீரா அக்காவைப் பார்த்தோமே..." என்று சொல்ல...

சூர்யா, அவன் அக்கா மதுவைப் பார்க்க, "ஆமாம்டா... மீரா இன்னைக்கும் பார்க்குக்கு வந்திருந்தா. ஆனா... நேத்து மாதிரி இல்லை, இன்னைக்கு அமைதியா ஒரு ஓரமா உட்கார்ந்திட்டுப் போயிட்டா..." என்றாள்.

"நான் போய்ப் பேசினேன், அவங்க ரொம்ப நல்ல அக்கா..." என்றாள் ப்ரீத்தி.

சூர்யா இரவு உணவிற்குப் பிறகு, அவன் அறைக்கு வந்து அர்ஜுனை அழைத்தான். "என்னடா... இந்த நேரத்துக்குப் போன் பண்ற...?"

"டேய்.... மீரா இன்னைக்கும் பார்க்குக்கு வந்திருக்கா... மது சொன்னா, ரொம்ப டல்லா இருந்தாளாம். எல்லாம் உன்னால அர்ஜுன். நீ அவளை லவ் பண்றியா இல்லையா...? அவகிட்ட ஒழுங்கா பேசுறதை விட்டுட்டு... இது என்ன அர்ஜுன் விளை யாட்டு...?" சூர்யா, அர்ஜுனைக் கண்டிக்க...

"கோபப்படாத சூர்யா, தப்பு என் மேலதான். நாளைக்கு நான் அவகிட்ட ஒழுங்காப் பேசுறேன்..." என்றவன், போனை வைத்துவிட்டு, 'மீரா செல்லம்... கோபமாடா...? உன்னை வருத்தப்பட வச்சிட்டேனா...?' என்று புலம்ப...

அங்கே மீரா கண்ணீரால் தலையணையை நனைத்துக் கொண்டிருந்தாள்.

6

மறுநாள் கல்லூரிக்கு வந்த அர்ஜுனின் கண்களில் மீரா படவே இல்லை.

மதியம் கான்டீனுக்கு அர்ஜுன், சூர்யாவை யும் அழைத்துக் கொண்டு மீராவைப் பார்க்கச் செல்ல... அங்கே மீரா அவள் தோழிகளுடன் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

அவள் கான்டீன் சாப்பாடுதான் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். 'அவ்வளவு பெரிய வீட்ல இருக்கா... வீட்ல சமையலுக்கு ஆள் இருக்கும், அப்புறம் ஏன் இங்க

வந்து சாப்பிடுறா?' என்று யோசித்துக் கொண்டே சென்றான்.

அர்ஜுனும், சூர்யாவும் வீட்டில் இருந்தே சாப்பாடு எடுத்துக் கொண்டு வருவார்கள். அன்றும் அதேபோல் அதைத் தங்கள் வகுப்பிலேயே அமர்ந்து சாப்பிட்டுவிட்டே வந்திருந்தனர். அதனால் ஆளுக்கு ஒரு ஐஸ்கிரீம் மட்டும் வாங்கிக்கொண்டு, மீராவின் பார்வையில் படும்படியான இடத்தில் சென்று இருவரும் நின்றனர்.

அர்ஜுன் கான்டீன் உள்ளே வரும் போதே மீரா பார்த்து விட்டாள். ஆனால், அவனைப் பார்க்காதது போலவே இருந்தாள்.

அர்ஜுன், அவள் பார்க்கவில்லையோ என்று நினைத்துச் சூர்யாவிடம் சத்தமாகப் பேச... அப்போதும் மீரா அவன் பக்கம் திரும்பவே இல்லை.

அர்ஜுனுக்குப் புரிந்தது, அவள் வேண்டும் என்றே தன் பக்கம் திரும்பாமல் இருக்கிறாள் என்று. 'கோபமா இருக்காளா...? சரி, சாப்பிட்டு முடிக்கட்டும் பேசுவோம்...' என்று நினைத்தவன், அவளுக்காகக் காத்திருக்க... மதிய வகுப்பு தொடங்கும் நேரம் நெருங்கும் வரை மீரா சாப்பிட்டே முடிக்கவில்லை. அவள் தோழிகளுடன் பேசிக்கொண்டு மெதுவாகச் சாப்பிட்டாள்.

அர்ஜுனுக்கு வகுப்புத் தொடங்கும் நேரம் ஆனதால், 'மாலை பேசுவோம்...' என்று நினைத்து, அவன் வகுப்பிற்குச் சென்றான். மாலை அர்ஜுன் தன் வகுப்பில் இருந்து வரும் முன்பே மீரா சென்றுவிட்டாள்.

இப்படியே மீரா அந்த வாரம் முழுவதும் அர்ஜுனுக்குப் போக்குக் காட்டினாள்.

அந்த வாரம் சனிக்கிழமை. அர்ஜுன், 'ஷட்டில் விளையாட மீரா வருவாளா, இல்லையா...?' என்று நினைத்துக் கொண்டே செல்ல... மீரா ஏற்கெனவே அங்கே வேறு சிலரோடு சேர்ந்து வேறு கோர்ட்டில் விளையாடிக் கொண்டிருந்தாள்.

மீரா, அர்ஜுனைப் பார்த்தும் பார்க்காத மாதிரியே விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போது அங்கே ஜீவாவும் வர... அர்ஜுனும், ஜீவாவும் சேர்ந்து விளை யாடினார்கள்.

அர்ஜுன், ஜீவாவோடு இன்னும் இருவர் வந்து சேர, கேம் விளையாடத் தொடங்கினார்கள். அப்போது பார்த்து மீரா வீட்டுக்குக் கிளம்ப, அர்ஜுனால் கேமைப் பாதியில் நிறுத்தி விட்டு அவள் பின்னே செல்ல முடியவில்லை.

அர்ஜுனுக்குக் கடுப்பாக வந்தது. அவன் விளை யாட்டில் விருப்பம் இல்லாமல் ஆடிக் கொண்டிருந்தான். விளையாடி முடிந்ததும் ஜீவா, "என்ன, உங்க சண்டை இன்னும் முடியலையா...?" என்று கேட்க, அர்ஜுன் அவனிடம் சிரித்து மழுப்பிவிட்டு வீட்டுக்குக் கிளம்பிச் சென்றான்.

அன்று ஆராதனா காலையில் நடனப் பள்ளிக்குச் செல்லவில்லை, அதைக் கூட அர்ஜுன் கவனிக்காமல் இருந்தான்.

மாலையில் அவள் கிளம்பிக் கொண்டிருக்கும் போது அங்கே வந்த அர்ஜுன், "எங்க போற...?" என்று கேட்க...

ஆராதனா, "டான்ஸ் கிளாஸுக்கு..." என்றாள்.

"நீ காலையில பேட்ச்தான...?" அர்ஜுன் சந்தேக மாகக் கேட்க...

"போன வாரம் போனபோது... இந்த மாசத்தில இருந்து சாயங்காலம் பேட்ச் வரேன்னு மாத்திகிட்டேன்..." என்ற ஆராதனா, "ஆதி அண்ணா, போலாமா...?" என்று கேட்டவள், அர்ஜுனை ஓரப்பார்வை பார்க்க... அவள் சொன்னதைக் கேட்டு அவன் முகம் மலர்ந்தது.

"நான் கொண்டு போய் விடுறேன்..." என்றான்.

ஆராதனா, "ஒண்ணும் தேவை இல்லை, நீ உன் வேலையைப் பாரு..." என்றவள், ஆதியிடம், "போலாமா அண்ணா...?" என்றாள்.

"ப்ளீஸ்... ப்ளீஸ் ஆரு... என் செல்லம் இல்லை, நான் வந்து விடுறேன்..." அர்ஜுன் கெஞ்ச...

"போன வாரம் நான் கேட்டபோது நீ வந்தியா...? இப்ப மட்டும் என்ன? நான் ஆதி அண்ணாவோடேயே போய்க்கிறேன்..." ஆரு கெத்தாகச் சொல்ல...

இவர்கள் இருவரும் பேசுவதைக் கேட்டுக் கொண்டு ஆதி சிரித்தபடி சோபாவில் அமர்ந்து இருந்தான். அன்று கணேசனும், வித்யாவும் ஒரு விசேஷத்திற்குச் சென்று

இருந்ததால், வீட்டில் இவர்கள் மூன்று பேர் மட்டும்தான் இருந்தனர்.

"ப்ளீஸ் ஆரு... திரும்பி வரும் போது உனக்கு எவ்வளவு ஐஸ்கிரீம் வேணும்னாலும் வாங்கிக்கோ..." அர்ஜுன் சொல்ல...

"ஓ...! திரும்பி வரும் போதும் நீயே கூப்பிட வர்றியா...?" ஆரு ஆச்சரியப்பட,

"அர்ஜுன், உண்மையைச் சொல்லு... நீ அங்க போனா மீராவைப் பார்க்கலாம்னுதானே ஆருவை நீ விடுறேன்னு சொல்ற...?" ஆதி, அர்ஜுனைப் பார்த்து நேரடியாகக் கேட்க...

அர்ஜுன், "ஆமாம்..." என்றவன், மீராவை முதல் நாள் சந்தித்ததில் இருந்து நடந்த அனைத்தையும் சொன்னவன், "நான் அவளை விரும்புறேன்..." என்றும் சொல்ல... ஆருவும், ஆதியும் சுவாரசியமாகக் கதை கேட்டனர்.

"அடப்பாவி...! இவ்வளவு நடந்திருக்கு, இத்தனை நாள் மறைச்சிட்டியே... பாவம் மீரா, அவளைப் போட்டு இப்படிப் படுத்தி வச்சிருக்கியே...? இனிமேலாவது அவ கிட்ட ஒழுங்காப் பேசு..." ஆரு, அர்ஜுனுக்கு அறிவுரை சொல்ல...

"அர்ஜுன், ஆரு... அம்மா காதுக்கு மட்டும் விஷயம் போகக் கூடாது. அப்புறம் பெரிய பிரச்சினை ஆகிடும்..." என்றான் ஆதி.

"ஆமாம் தெய்வங்களா...! என்னை அம்மாட்ட மாட்டி விட்டுடாதீங்க..." என்று அர்ஜுன் கை எடுத்துக் கும்பிட... "சரி பக்தா... உன்னுடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டோம்..." என்று அம்மன் போஸில் ஆரு நிற்க...

"இதையெல்லாம் பரத நாட்டியம் ஆடும் போது பண்ணாத, இப்ப பண்ணு..." என்ற அர்ஜுன், "வா, போகலாம். டைம் ஆகிடுச்சு..." என்றபடி ஆருவை இழுத்துக்கொண்டு செல்ல, ஆதி தங்கள் கடைக்குச் சென்றான்.

ஆருவை டான்ஸ் கிளாஸில் கொண்டு வந்து இறக்கி விட்ட அர்ஜுன், மீராவைத் தேட... அவளைக் காணவில்லை. "இரு அர்ஜுன், நான் போய் உள்ள இருக்காளான்னு பார்க்கிறேன்..." என்ற ஆரு, உள்ளே சென்று பார்க்க... மீரா சின்னக் குழந்தைகளுக்கு நடனம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

ஆரு, மீராவையே பார்த்துக் கொண்டு நிற்க, வகுப்பு முடிந்து வந்த மீரா, அப்போதுதான் ஆராதனாவைப் பார்த்தாள். மீராவிற்கு முதலில் நினைவு வரவில்லை. ஆனால், உடனே, 'இந்தப் பெண்ணை எங்கேயோ பார்த்திருக்கிறோம்... எங்கே...?' என்று யோசித்தவளுக்கு, பளிச்சென்று ஆருவின் குடும்பமே நினைவுக்கு வர, முகம் மலர்ந்தவள், அவள் அர்ஜுனின் தங்கை என்பதும் சேர்ந்து நினைவுக்கு வந்ததும் அவள் முகம் இன்னும் தாமரையாய் மலர்ந்தது.

'போய்ப் பேசலாமா, வேண்டாமா...?' என்று மனதிற்குள் பட்டி மன்றம் நடத்திய மீரா, ஆருவின் அருகே சென்று, "நீ ஆராதனாதானே...?" என்று கேட்க, ஆராதனாவும் முகத்தில் புன்னகையுடன், "ஆமாம்..." என்று தலை ஆட்டியவள், "நீங்கள் மீரா..." என்று சொல்ல... மீரா, "ஞாபகம் இருக்கா, சும்மா நீன்னே சொல்லு..." என்றவள், "நீ எந்தக் காலேஜ்...?" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"உன்னைப் போய் மறப்பேனா...? நான் எஸ்.ஜ. இ.டி. - பி.எஸ்சி., மேத்ஸ் செகண்ட் இயர்..." என்று சொன்ன ஆராதனா, வெளியே அர்ஜுன் காத்திருப்பதை மறந்து, மீராவிடம் தானும் மாலை நேர வகுப்பிற்கு மாறியது பற்றிச் சொல்ல... "மீரா, அப்ப நாம• இனிமே அடிக்கடி பார்க்கலாம்..." என்று சந்தோஷமாகச் சொன்னவள், "ப்ரெண்ட்ஸ்..." என்று கையை நீட்ட, ஆராதனா மனதிற்குள், 'இப்ப ப்ரெண்ட்ஸ்... அப்புறம் சின்ன அண்ணி...' என்று நினைத்துக் கொண்டு கை கொடுத்தாள்.

மீராவும், ஆருவும் நெருங்கிய சினேகிதிகள் போல் பேச ஆரம்பித்தனர். "நீ எப்படி வந்த ஆரு...?" என்று மீரா கேட்டதும்தான், அர்ஜுனின் நினைவு ஆருவுக்கு வந்தது.

'ஐயோ...! என்னைக் கொல்லப் போறான்...' என்று தன் தலையில் அடித்துக் கொண்டவள், "மீரா, அர்ஜுன் வெளிய இருக்கான், மறந்திட்டேன்... இரு, வரேன்..."

என்று வெளியே ஓட... மீராவிற்கு அர்ஜுனின் பெயரைக் கேட்டதும் அவனைப் பார்க்க வேண்டும் என்று தோன்ற, அவளும் வெளியே சென்றாள்.

சற்றுத் தள்ளி அர்ஜுனும், ஆருவும் ஏதோ பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தவள், தண்ணீர் குடிப்பதைப் போல் அங்கேயே நின்றாள். அவளுக்கு, அவர்கள் பேசுவது எதுவும் கேட்கவில்லை.

"சாரி அர்ஜுன், ப்ளீஸ்... ப்ளீஸ்... கோவிச்சிக்காத... மீரா கூடப் பேசினதும், நீ வெயிட் பண்றதை மறந்திட்டேன்... உனக்கு ஒண்ணு தெரியுமா...? நான் உனக்காகத்தான் பேட்ச் மாறினேன்."

ஆரு சொன்னதை நம்பாமல் அர்ஜுன் பார்க்க, "எனக்குக் கொஞ்ச நாளா உன் மேல சந்தேகம். மீராவைப் பற்றி நீ அன்னைக்கு என்கிட்டே பேசினது எல்லாத்தையும் நான் கவனிச்சேன். அதனால உனக்காகத்தான் சாயங்காலம் பேட்ச் மாறினேன்..." என்றாள்.

அவள் சொன்னதைக் கேட்டு சிரித்த அர்ஜுன், "தேங்க்ஸ் ஆரு, நீ என்னை வெயிட் பண்ண வச்சது எனக்குக் கோபமே இல்லை. நீ மீராவை நல்லாப் பார்த்துக்கோ... அவளோட நீ ப்ரெண்ட் ஆனா எனக்கு ரொம்பச் சந்தோஷம். சரி, நான் கிளம்பறேன்..." என்றவன், அவள் பின்னே பார்க்க... அப்போதுதான் அங்கே மீரா அவனையே பார்த்துக் கொண்டு நிற்பதைக் கவனித்தான்.

அர்ஜுன் மீராவைப் பார்த்து, 'என்ன?' என்பது போல் புருவத்தை உயர்த்த, தடுமாறிய மீரா, என்ன செய்வது என்று தெரியாமல்... கையில் இருந்த டம்ளரை, 'தண்ணீர் குடிக்க வந்தேன்...' என்று தூக்கிக் காட்டினாள். அவள் செய்கையில் அர்ஜுனுக்குச் சிரிப்பு வர... மீராவும் லேசாகச் சிரித்தவள், வேகமாக உள்ளே ஓடிவிட்டாள்.

"ஆரு, நான் இன்னும் மீராகிட்ட பேசலை, ஞாபகம் வச்சிக்கோ, நீ எதுவும் தெரிஞ்ச மாதிரி காமிச்சிக்காத... கொஞ்ச நாள் போகட்டும், நானே அவள்கிட்ட பேசுறேன்..." அர்ஜுன் சொல்ல, ஆருவும் சரி என்றவள்... உள்ளே சென்றாள்.

உள்ளே மீரா சீனியர் மாணவிகளுடன் நடனப் பயிற்சி செய்ய, ஆராதனா அவள் பேட்ச் மாணவி களுடன் சென்று நடனப் பயிற்சி செய்ய ஆரம்பித்தாள். பயிற்சி முடிய இரண்டு மணி நேரம் ஆனது. அதன் பிறகு இருவரும் வெளியே இருந்த வரண்டாவில் அமர்ந்து பேச ஆரம்பித்தனர். மீராவின் கண்கள், அர்ஜுன் வருகிறானா என்று வாசலையே பார்த்துக் கொண்டிருந்தது.

ஆரு, அதைக் கவனித்தும் கவனிக்காத மாதிரி அமர்ந்து இருந்தாள்.

ஆராதனாவைக் கூப்பிட அர்ஜுன் வராமல் ஆதித்யா வர, மீராவின் முகம் வாடிவிட்டது. அதை ஆதி, ஆரு இருவருமே கவனித்தனர். "அர்ஜுன் வரலை யாண்ணா...?" ஆரு கேட்க...

"இல்லை... உன்னை விட்டுட்டுத் திரும்பிப் போகும் போது பைக் ஸ்கிட்டாகி கீழே விழுந்துட்டான். கால்ல அடி, அதுதான் நான் வந்தேன்..." என்றான் ஆதி.

ஆரு பேசுவதற்கு முன் பதறிய மீரா, "அர்ஜுனுக்கு ரொம்ப அடிபட்டுடுச்சா, இப்ப எங்க இருக்காங்க...? வீட்லேயா இல்லை ஹாஸ்பிடல்லையா...?" என்று மூச்சு விடாமல் கேட்க... அவளது தவிப்பைப் பார்த்த ஆதி,

"இல்லை, சின்னக் காயம்தான். வீட்லதான் இருக்கான்..." என்றதும்தான் அதுவரை இழுத்து வைத் திருந்த மூச்சை மீரா விட்டாள்.

"உனக்கு அர்ஜுனை முன்னாடியே தெரியுமா...?" ஆரு கேட்க...

"ஏன், உங்க அண்ணன் சொல்லலை...? நானும் அவர் படிக்கிற காலேஜ்லதான் பி.இ., செகண்ட் இயர் படிக்கிறேன். அதனால தெரியும்..." என்றாள்.

அப்போதுதான் ஆருவுக்கு நினைவு வர... அவள் மீராவை ஆதிக்கு அறிமுகம் செய்ய... இருவரும் ஒருவருக்கொருவர் ஹாய் சொல்லிக் கொண்டனர்.

"அர்ஜுனுக்குச் சின்னக் காயம்தான் இல்லை... ரொம்ப ரத்தம் வந்திடுச்சா...?" மீரா கவலையாகக் கேட்க,

"இல்லை..." என்ற ஆதி, மீராவின் கவலையை அறிந்து, "ஒரு நிமிஷம் இருங்க..." என்று தனது செல்லை எடுத்து அர்ஜுனை அழைத்தான். "அர்ஜுன், எப்படி இருக்க...? கால் வலிக்குதா...? என்னது, இப்ப

இல்லையா...? சரி, இந்தா ஆருகிட்ட பேசு..." என்று போனை அவன் ஆருவிடம் கொடுக்க...

"என்ன பிரதர்... ரோட்ல விழுந்து புதையல் எடுத்தீங்களாமே? எவ்வளவு எடுத்தீங்க...? கனவு கண்டுகிட்டே வண்டி ஓட்டினா இப்படித்தான் ஆகும்..." என்று ஆரு பேசிக்கொண்டே தள்ளிச் சென்றவள், "அர்ஜுன்... இங்கே மீரா உனக்கு அடிபட்டது தெரிஞ்சு ரொம்ப டென்ஷனா இருக்கா..." என்று சொல்ல...

"ஐயோ...! அவகிட்ட ஏன்டி சொன்ன...? அவ என்னைத் திங்கள்கிழமை காலேஜ்ல பார்க்கிறவரை பயந்திட்டே இருப்பா..." அர்ஜுன் வருந்த...

"நான் சொல்லலை, பிக் பிரதர்தான் சொன்னார், அவ ரொம்பக் கவலைப்படுறான்னுதான் உனக்கு இப்ப போன் பண்ணாங்க..." என்றதும்,

"நிஜமாவா ஆரு...? மீரா என்னைப் பத்திக் கேட்டாளா...?"

அர்ஜுன் ஆர்வமாகக் கேட்க...

"அதெல்லாம் கட்டின பொண்டாட்டி மாதிரிதான் விசாரிச்சா... போனை அவகிட்ட குடுக்கவா...?" ஆரு கேட்க...

அர்ஜுனுக்கு என்ன சொல்வது என்று தெரிய வில்லை. "இப்படித் திடீர்னு கேட்டா என்ன சொல்றது...?" என்றவன், "நீ அவ செல் நம்பர் வாங்கிட்டு வா, போதும்...!" என்றான்.

"சரி..." என்ற ஆரு போனை வைத்து விட்டு மீராவிடம் செல்ல... அங்கே ஆதி, மீராவிடம் பேசிக் கொண்டிருந்தான்.

ஆரு, ஆதித்யாவைப் பார்த்துக் "கிளம்பலாமா...?" என்று கேட்டவள், மீராவைப் பார்த்து, "என் செல் நம்பர் சொல்றேன், நோட் பண்ணிக்கிறியா...?" என்றதும், மீராவும் தனது செல்லை எடுத்து ஆருவின் நம்பரைப் பதிவு செய்ய ஆரம்பித்தாள்.

"இப்ப அதுல இருந்து எனக்கு மிஸ்ட் கால் கொடு..." என்றதும், மீராவும் மிஸ்ட் கால் கொடுக்க, "வந்திடுச்சு மீரா... சரி, நான் கிளம்பறேன்..." என்று ஆரு விடைபெற, ஆதியும் மீராவிடம் சொல்லிக் கொண்டு சென்றான்.

மீரா வீட்டுக்குச் செல்லாமல் கோவிலுக்குச் சென்றவள், கடவுளிடம் அர்ஜுனுக்காக வேண்டிக்கொண்டு இருந்தாள். அப்போது அர்ச்சனை யார் பேருக்கு என்று அர்ச்சகர் கேட்க... அர்ஜுன் என்ற பேர் காதில் விழ, மீரா கண் திறந்து பார்க்க... அங்கே அர்ஜுனின் அம்மா வித்யா எதிரில் நின்று கொண்டிருந்தார். மீராவிற்குப் புரிந்தது, அவரும் அர்ஜுனுக்கு அடிபட்டதால்தான் வந்திருக்கிறார் என்று.

இருவரும் சாமி தரிசனம் முடிந்து பிரகாரத்தில் சென்று அமர, வித்யாவின் முகத்தில் தெரிந்த கவலை யைப் பார்த்த மீராவிற்கு, அவரை அப்படியே விட்டுச் செல்ல மனமில்லாமல் அவரருகில் சென்று அமர்ந்தவள்,

"ஆன்டி... நீங்க ஆருவோட அம்மா தானே...?" என்று கேட்க...

அப்போதுதான் அவளைக் கவனித்த வித்யா, "ஆமாம்... நீ அன்னைக்கு டான்ஸ் ஆடின பொண்ணு இல்லை...?" என்றார்.

"ஆமாம்..." என்ற மீரா, "இன்னைக்கு ஆருவை டான்ஸ் கிளாஸ்ல பார்த்தேன்..." என்றாள்.

"ஆமாம் அவளும் இன்னையிலிருந்து சாயங் காலம் பேட்ச் போறா, நீ எப்படி இருக்க மீரா? யார் கூட வந்த...?" என்றவர், அவளது உடையைப் பார்த்து, "டான்ஸ் கிளாஸ்ல இருந்து நேரா வர்றியா...?" என்று கேட்க...

"ஆமாம் ஆன்ட்டி... தனியாத்தான் வந்தேன்..." என்றாள்.

"சரி, போலாமா...?" என்று வித்யா எழுந்து கொள்ள, மீராவும் அவருடன் வெளியே வந்தவள், "எப்படி ஆன்ட்டி போவீங்க...?" என்று கேட்க...

"ஆட்டோவில் வந்தேன்..." என்றவர், அங்கு ஏதாவது ஆட்டோ நிற்கிறதா என்று பார்க்க, ஒன்றையும் காணவில்லை.

"உங்க வீடு எங்க இருக்கு ஆன்ட்டி?"

"அடையார்ல இருக்கு மீரா."

"எங்க வீடு பெசன்ட் நகர்ல இருக்கு. வாங்க ஆன்டி, உங்களைப் போற வழியில இறக்கி விட்டுட்டுப்

போறேன்..." என்ற மீரா, அவருக்குக் கார் கதவைத் திறந்துவிட,

"உனக்கு ஒண்ணும் கஷ்டம் இல்லையே...!" என்று கேட்டவர்... மீரா, "இல்லை..." என்றதும், வித்யா ஏறி அமர... மறுபக்கம் சென்று ஏறிய மீரா காரைக் கிளப்பினாள்.

வித்யா வழி சொல்ல... மீரா காரைக் கொண்டு போய் அவரின் வீட்டின் முன் நிறுத்தினாள். 'அழகான வீடு...' என்று நினைத்தவளுக்கு, இது அர்ஜுனின் வீடு என்பதே சந்தோஷத்தைக் கொடுக்க... அது அவள் முகத்திலும் தெரிந்தது.

"வா மீரா... உள்ளே வந்திட்டுக் கொஞ்சம் நேரம் கழிச்சுப் போ, உங்க வீடு பக்கத்திலதான இருக்கு..." வித்யா கூப்பிட...

அர்ஜுனைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையில் மீராவும் மறுக்காமல் உள்ளே சென்றாள்.

வித்யாவோடு வந்த மீராவை மாடியில் இருந்து பார்த்துச் சந்தோஷ அதிர்ச்சி அடைந்த ஆரு, வேகமாக அர்ஜுனின் அறைக்குச் சென்று, "அர்ஜுன், மீரா வந்திருக்கா..." என்றதும்,

"சும்மா விளையாடாதடி.." என்றான் எரிச்சலாக.

"நிஜமாத்தான்டா..." என்றதும்... அதிர்ந்தவன்,

"மீராவா... இங்க எப்படி? அம்மா வந்துட்டாங் களா...?" என்று கேட்க,

"அவ அம்மாவோட தான் வர்றா... அப்போ அம்மா தான் அவளை அழைச்சிட்டு வந்திருக்கணும்..." ஆரு சொல்ல...

அர்ஜுன், "சரி, நீ போ. நான் வரேன்..." என்றான்.

மீராவை அங்கிருந்த சோபாவில் உட்காரச் சொல்லிவிட்டு வித்யா உள்ளே செல்ல... ஆரு கீழே இறங்கி வந்தவள், "வா மீரா, நீ இன்னைக்கு எங்க வீட்டுக்கு வருவேன்னு நான் நினைக்கவே இல்லை..." என்றாள்.

"ஆன்ட்டியைக் கோவில்ல பார்த்தேன், அவங்களை ட்ராப் பண்ணிட்டுப் போலாம்னு வந்தேன்..." என்று பேசிக்கொண்டே மீரா, அர்ஜுனைத் தேட... அப்போது அர்ஜுனும் கீழே இறங்கி வந்தான்.

காலைத் தாங்கித் தாங்கி நடந்து வந்தவனின் கை, முகம் எங்கும் சிராய்த்து இருந்தது. அவனைப் பார்த்ததும் மீராவிற்குக் கண்கள் கலங்கி விட்டன.

"இதுதான் சின்னக் காயமா..." அவள் ஆருவிடம் கேட்க...

"எனக்கும் தெரியாது மீரா... இங்க வந்ததும்தான் தெரியும். ரோட்ல மண் இருந்திருக்கு... அதுல சறுக்கி விழுந்திட்டான் போல..." ஆரு சொல்ல...

அப்போது வித்யாவும் கையில் ஜூஸ் எடுத்துக் கொண்டு ஹாலுக்கு வந்தவர், அங்கே அர்ஜுனைப் பார்த்து, "நீ ஏன்டா கீழ வந்த...?" என்று கேட்க...

"ரூம்ல போர் அடிச்சுதும்மா..." என்றான்.

"இந்தா மீரா ஜூஸ்..." என்று கொடுத்தவர், அர்ஜுனுக்கும் சென்று ஜூஸ் கொண்டு வந்தார். "இவன் அர்ஜுன்... என்னோட ரெண்டாவது பையன். இன்னைக்கு பைக்ல இருந்து கீழ விழுந்து அடிபட்டுட்டு வந்தான், அதுதான் மனசுக்குக் கஷ்டமா இருந்தது, கோவிலுக்கு வந்தேன்..." என்றவர்,

"நீ என்ன படிக்கிற மீரா...?" என்று கேட்க...

"நான் பி.இ. செகண்ட் இயர் படிக்கிறேன்..." என்றாள்.

"எந்தக் காலேஜ்...?" என்றதும், மீரா கல்லூரியின் பெயரைச் சொல்ல, "எங்க அர்ஜுனும் அங்கதான் படிக்கிறான்..." என்றவர், "உனக்கு அவனைத் தெரியுமா...?" என்று கேட்க...

மீரா, அர்ஜுனைப் பார்த்துக்கொண்டே, "தெரியாது..." என்றாள்.

"தெரியாதா...? என் பையன் காலேஜ்ல ரொம்ப ஃபேமஸ், கிரிக்கெட் எல்லாம் விளையாடுவான். நீ அவனைப் பார்த்ததில்லை...?"

மீரா, "எனக்குக் கிரிக்கெட்டே பிடிக்காது..." என்றாள்.

அதைக் கேட்டு அர்ஜுனுக்குக் குடித்துக் கொண்டிருந்த ஜூஸ் புரை ஏற, கஷ்டப்பட்டுச் சிரிப்பை அடக்கினான்.

'பாரு கொழுப்பை... அர்ஜுன் அவுட்னு கத்திட்டுத் தெரியாதாம்...' என்று நினைத்தவன், வித்யா சொல் வதைக் கவனிக்க...

"அர்ஜுன், இவளுக்கு உன்னைத் தெரியாதாமே.... உனக்கு இவளைத் தெரியுமா...?" வித்யா கேட்க,

"தெரியும்மா... காலேஜ்ல பார்த்திருக்கேன்..." என்ற அர்ஜுன், மீராவைப் பார்த்துக் கண் சிமிட்ட, மீரா அவனைப் பார்த்து முறைத்தாள்.

ஆரு, இதை எல்லாம் சிரித்தபடி பார்த்துக் கொண் டிருந்தாள்.

"சரி ஆன்ட்டி, நான் கிளம்பறேன்..." மீரா எழுந்து கொள்ள...

"சரிம்மா... அடிக்கடி வீட்டுக்கு வா..." என்ற வித்யா, "நீ பரவாயில்லை... தனியாவே வெளிய போயிட்டு வர... அதுவும் கார் வேற ஓட்ற... எங்க ஆரு எங்கேயும் வெளிய தனியா போக மாட்டா, அவளுக்கு எங்க போனாலும் அவ அண்ணனுங்க வேண்டும்..." என்றவர், அவள் தன் குடும்பத்தைப் பற்றி ஏதாவது சொல்வாள் என்று மீராவின் முகத்தைப் பார்க்க... அவள் சிரித்தாளே தவிர, அவள் குடும்பத்தைப் பற்றி எதுவும் சொல்ல வில்லை.

வித்யாவே மீண்டும், "உங்க அம்மாவை ஒரு நாள் வீட்டுக்குக் கூட்டிட்டு வா மீரா..." என்றார்.

மீரா அதற்குப் பதில் சொல்லாமல் ஆருவிடம், 'பை' என்றவள், அடுத்து அர்ஜுனைப் பார்த்து 'பை' என்றாள்.

அவள் கண்கள் கலங்கி இருந்தன. அதோடு அவள் முகத்தில் வேதனையின் சாயல் தெரிய, அதைப் புரிந்து கொண்ட அர்ஜுன், அவன் அம்மா மேலும் எந்தக் கேள்வியும் அவளிடம் கேட்டுவிடக் கூடாது என்று நினைத் தவன், "அம்மா... கால் வலிக்குது..." என்று காலைப் பிடிக்க... வித்யா, ஆரு, மீரா எல்லோரும் பதறினார்.

"ஒண்ணும் இல்லை... பெட்ல கால் நீட்டிப் படுத்தா சரி ஆகிடும்..." என்றபடி அர்ஜுன் மெதுவாக எழுந்து கொள்ள,

வித்யாவும் அவனோடு மாடியை நோக்கிச் சென்றார்.

"நான் போயிட்டு வரேன்..." என்று மீரா விடை பெற்றவள், ஹால் கதவின் அருகே சென்று திரும்பி அர்ஜுனைப் பார்க்க... மாடி ஏறிக்கொண்டிருந்தவன் அவளைப் பார்த்து, 'ஒண்ணும் இல்லை...' என்று கண் களால் சொல்ல... மீராவும் தலை அசைத்துவிட்டுச் சென்றாள்.

அன்று இரவு உணவிற்குப் பின் அர்ஜுனின் அறையில் ஆதியிடம், மீரா வந்ததைப் பற்றி ஆரு சொன்னாள். "நீங்க இல்லாம போய்டீங்க ஆதி அண்ணா... எனக்குத் தில்லானா மோகனாம்பாள் படம் லைவ் டெலிகாஸ்ட் ஆன மாதிரி இருந்தது..." என்றவள்,

"கண் பட்டதால் உந்தன் மேனியிலே புண் பட்டதோ அதை நான் அறியேன்..." என்று பாடிக்கொண்டே அபிநயம் பிடிக்க.. அதைப் பார்த்து ஆதியும், அர்ஜுனும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

கீழே இருந்து வித்யா, "இன்னும் தூங்காம என்ன பண்றீங்க?" என்று குரல் கொடுக்க... ஆதியும், ஆருவும் அவரவர் அறைக்குப் படுக்கச் சென்றனர்.

அர்ஜுன் கட்டிலில் படுத்தவன், தனது செல்லில் இருந்து மீராவுக்கு ஒரு மெசேஜ் அனுப்பினான். 'தூங்கி இருப்பாளோ...? பதில் வருமா...?' என்று யோசித்துக் கொண்டே படுத்திருந்தான்.

படுக்கையில் படுத்திருந்த மீராவிற்குச் செல் போனில் மெசேஜ் வந்த சத்தம் கேட்டதும், அவள் அதை எடுத்துப் பார்க்க... புதிய எண்ணில் இருந்து வந்திருந்தது. 'யாராக இருக்கும்...?' என்று யோசித்துக் கொண்டே திறந்தவள், அதில்,

I Will Always Be There For You. - Arjun

என்ற மெசேஜ் பார்த்ததும், இதுவரை இருந்த குழப்பம் எல்லாம் மறைய... துள்ளிக் கட்டிலில் இருந்து எழுந்து அமர்ந்தவள், அவனுக்குப் பதில் அனுப்பினாள்

I know. - Meera

என்று அனுப்பிவிட்டு, மீரா சிரித்த முகமாகத் தலை சாய, அர்ஜுனும் அவள் அனுப்பிய மெசேஜ் பார்த்துச் சந்தோஷத்தில் 'வாவ்' என்று கத்தியவன், பின் முகம்

முழுதும் புன்னகை மலர படுக்கையில் படுத்தவன், 'மீராவை அடுத்து எப்போது பார்ப்போம்...?' என்று நினைத்தான்.

7

மீரா நிம்மதியாகத் தூங்கிவிட, அர்ஜுன்தான் தூங்காமல் மீராவைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தான். மறுநாள் காலை எழுந்ததும் அர்ஜுன், மீராவிற்குக் குட் மார்னிங் என்று மெசேஜ் அனுப்ப, மீராவும் அவன் வாழ்த்துக்குப் பதில் அனுப்பினாள்.

அர்ஜுனுக்கு அன்று முழுவதும் மீராவைப் பார்க்காமல் ஒரு மாதிரி இருந்தது. 'ச்சே... இப்ப போய் அடிபட்டுடுச்சே... நாளைக்குக் காலேஜ் போனாத்தான் அவளைப் பார்க்க முடியும்...' என்று நொந்து போய் அமர்ந்திருந்தான்.

காலை உணவு முடிந்து தன் அறைக்கு வந்த அர்ஜுன், மீராவிற்கு, 'டிபன் சாப்ட்டியா...?' என்று மெசேஜ் பண்ண... 'இன்னும் இல்லை...' என்று அவள் பதில் அனுப்ப, 'மணி பத்தாகப் போகுது... இன்னுமா சாப்பிடலை? முதல்ல போய்ச் சாப்பிடு, சாப்பிட்டு வந்து எனக்கு மறக்காம மெசேஜ் பண்ணணும்...' என்று அர்ஜுன் திரும்ப மெசேஜ் அனுப்ப,

மீராவும் அவனுக்குச் சிறிது நேரம் கழித்துச் 'சாப்பிட்டுட்டேன்...' என்று பதில் அனுப்பினாள்.

இப்படியே அன்று முழுதும் 'சாப்பிட்டியா? டான்ஸ் கிளாஸ் போயிட்டு வந்துட்டியா? டின்னர் சாப்பிட்டியா...? வந்திட்டேன், சாப்பிட்டேன், நாளைக்குக் காலையில பார்க்கலாம்...' போன்ற தகவல்கள் இருவராலும் அனுப்பப்பட்டன.

அர்ஜுன் மறந்தும் மீராவிடம் அவள் குடும்பத்தைப் பற்றிக் கேட்கவில்லை, மீராவும் சொல்லவில்லை.

அடுத்த நாள் காலை எழுந்து அர்ஜுனும் மீராவும் ஒருவரை ஒருவர் பார்க்கப் போகும் மகிழ்ச்சியில் கல்லூரிக்குச் சீக்கிரமாகக் கிளம்பினார்கள். வித்யா, அர்ஜுனிடம், "என்னடா... இன்னைக்கு ஒரு நாள் லீவ் போட்டுட்டு வீட்ல இருக்கக் கூடாதா...? அதுவும் சீக்கிரம் வேற கிளம்பிட்ட...?" எனக் கேட்க...

"இன்னைக்குக் காலேஜ்ல ஒரு முக்கியமான வேலை இருக்கும்மா... நான் அங்கே கான்டீன்ல சாப்பிட்டுக்கிறேன்..." என்றவன், வெளியில் வேகமாகச் செல்ல...

"வண்டியைப் பார்த்து ஓட்டிட்டுப் போ..." என்று வித்யா குரல் கொடுத்தார்.

"அன்னைக்கும் பார்த்துத்தான்மா ஓட்டிட்டுப் போனேன். ரோட்ல மண்ணு இருந்தது... அதனாலதான் வழுக்கிடுச்சு, கவலைப்படாம இருங்க..." என்ற அர்ஜுன், தன் வண்டியைக் கிளப்பிக் கொண்டு சென்றான்.

மீரா கல்லூரியில் வந்து இறங்கும் போது மழை பெய்யத் தொடங்கியது. 'இனி மழைக் காலம். இன்னும்

ஒரு மாசம் இந்தப் பாடுதான்...' என்று நினைத்தவள், காரில் இருந்த குடையை எடுத்துக் கொண்டு இறங்கினாள்.

அன்று வழக்கத்தை விடக் கல்லூரிக்குச் சீக்கிரம் வந்திருந்தாள். அதனால் கல்லூரியில் வெகு சிலரே அங்கங்கே தென்பட்டனர். மீரா குடையைப் பிடித்துக் கொண்டு, உடையில் சேறு பட்டுவிடக் கூடாது என்று கவனத்துடன் கீழே பார்த்துக் கொண்டே நடந்தாள்.

திடீரென்று அவள் பிடித்திருந்த குடையை யாரோ உயரத் தூக்கிப் பிடிக்க... ஒரு நொடி பயந்தவள், அங்கே அர்ஜுன் நிற்பதைப் பார்த்ததும் முகம் மலர்ந்தாள். அவள் பிடித்திருந்த குடையைத் தனக்கும் சேர்த்து உயர்த்திப் பிடித்த அர்ஜுன், மீராவைப் பார்த்துப் புன்னகைக்க, மீராவிற்கு அவன் முதல் முறை அனுப்பியிருந்த மெசேஜ் ஞாபகம் வர, முகம் சிவந்தாள்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு உலகம் மறந்து நின்றனர். அப்போது மழை கொட்டத் தொடங்கியதும்... அர்ஜுன், மீராவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வேகமாக நடக்க, மீராவும் அவனோடு சேர்ந்து நடந்தாள். இருவரும் கான்டீன் சென்றனர்.

வெளியே வரண்டாவில் நின்று மழையைப் பார்த்துக் கொண்டிருந்த அர்ஜுன், மீராவைப் பார்த்துக் கண் சிமிட்டி, "கல்யாணம்தான் கட்டிக்கிட்டு ஓடிப் போலாமா... இல்லை, ஓடிப் போய்க் கல்யாணம்தான் கட்டிக்கலாமா...?" என்று பாட...

மீரா பதிலுக்குக் கண் அடித்து, "தாலியத்தான் கட்டிக்கிட்டு பெத்துக்கலாமா, இல்லை புள்ள குட்டி பெத்துக்கிட்டு கட்டிக்கலாமா...?" என்று பாட...

"அப்படிப் போடு அருவாள... நீ ரௌடின்னு எனக்குத் தெரியுமே..." என்ற அர்ஜுன் வாய் விட்டுச் சிரிக்க, மீராவும் சேர்ந்து சிரித்தாள்.

அர்ஜுன் அவளோடு கான்டீன் உள்ளே சென்று அமர்ந்தவன், "பசிக்குது, நீ சாப்பிட்டியா...?" என்று கேட்க... மீரா, "இல்லை..." என்றாள்.

அர்ஜுன் இருவருக்கும் சென்று பூரி வாங்கி வந்தான். இருவரும் சாப்பிடும்போது ஒருவரை ஒருவர் அடிக்கடி பார்த்துக் கொண்டனர்.

"உனக்கு எப்ப இருந்து மீரா என்னைத் தெரியும்...?"

"நான் காலேஜ் வந்த முதல் நாளே உங்களைப் பார்த்திட்டேன்... நீங்கதான் என்னைக் கண்டுக்கவே இல்லை."

"அப்படியா...? ஆனா நான் உன்னைப் பார்த்தது இல்லை. அன்னைக்கு நீ என்னைப் பார்த்து அவுட்னு கத்தின பார்... அன்னைக்குத்தான் பார்த்தேன். ஏன் மீரா அப்படிக் கத்தின...?"

"நீங்களா என்னைப் பார்க்கிற மாதிரியே தெரி யலை... இந்த வருஷம் ஃபைனல் இயர் காலேஜ் முடிச்சு நீங்க போயிடுவீங்க... அதனாலதான், உங்களைப் பார்க்க

வைக்கத்தான் அப்படிக் கத்தினேன்..." என்று சொன்ன மீரா, சாப்பிடுவதில் கவனம் செலுத்த...

மீரா சொன்னதைக் கேட்ட அர்ஜுன் அவளையே பார்க்க... நிமிர்ந்து அர்ஜுனைப் பார்த்த மீரா, அவன் தன்னையே பார்ப்பதைப் பார்த்து என்னவென்று புருவம் உயர்த்த... "நான் உன்னைக் கண்டுக்காம விட்டிருந்தா...?" என்றான்.

"தெரியலை...!" என்று உதடு பிதுக்கியவள், ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் முகத்தில் சிரிப்பு மறைந்து வருத்தம் தோன்றுவதைப் பார்த்த அர்ஜுன், "தெரியலையா...? பொய் சொல்லாத, என்னைக் கடத்திட்டுப் போய்க் கல்யாணம் பண்ணி இருக்க மாட்ட...?" என்றான் கேலியாக.

"அப்படியும் நடக்கலாம்..." என்று சொன்ன மீராவின் முகத்தில் மீண்டும் புன்னகை மலர்ந்தது.

அதைப் பார்த்து அர்ஜுனும் சந்தோஷப்பட்டவன். "கிளாஸுக்குப் போலாமா...?" என்று கேட்க, மீரா சரி என்று எழுந்தாள். இருவரும் வெளியே வந்து 'பை' சொல்லிக்கொண்டு அவரவர் வகுப்புக்குச் செல்லும் பாதையில் சென்றனர்.

அந்தக் காரிடார் முடிவில் சென்று மீரா திரும்பிப் பார்க்க... அர்ஜுனைக் காணவில்லை. அன்று மாதிரி இன்றும் திரும்பிப் பார்த்துச் சிரிப்பான் என்று நினைத்துக் கொண்டிருந்தவள், அவன் இல்லை என்றதும் ஏமாற்ற மாக உணர்ந்தாள்.

'அதுக்குள்ளேயா போய்ட்டான்...?' என்று நினைத்த வள், வேகமாக அவன் சென்ற வழியே சென்று... காரிடாரில் திரும்ப... அங்கே அர்ஜுன் நின்று கொண்டி ருக்க, மீரா அவனைக் கவனிக்காமல் அவன் மேல் மோதி நின்றாள்.

மீரா தன்னைத் தேடுகிறாளா என்று பார்க்கத்தான் அர்ஜுன் மறைந்து நின்றான். ஆனால் அவள் இவ்வளவு பதட்டப்படுவாள் என்று அவன் எதிர்பார்க்க வில்லை. அவள் கலங்கிய கண்களைப் பார்த்தவன், "என்ன மேடம்... விழுந்து அடிச்சு ஓடி வர்றீங்க, பயந்துட்டீங்களா...? இவன் நம்மளை உண்மையாத் தான் விரும்புறானான்னு நினைச்சதானே...?" அவன் கேட்க, மீரா மௌனமாக நின்றாள்.

அவள் அமைதியாக நிற்பதிலேயே அவளின் எண்ணத்தை அறிந்தவன், அவள் கண்களை நேராகப் பார்த்து, "ஐ லவ் யூ மீரா..." என்றான்.

மீராவின் கலக்கம் மறைய, முகத்தில் புன்னகை மலர, சரி என்று தலை ஆட்டியவள் திரும்பி நடக்க, அவள் கை பிடித்து நிறுத்திய அர்ஜுன், "நீயும் சொல்லு..." என்றான்.

முதலில் திகைத்த மீரா, தூரத்தில் யாரோ வரு வதைப் பார்த்தவள் வேகமாக, "ஐ லவ் யூ அர்ஜுன்..." என்று சொல்லிவிட்டு அங்கிருந்து செல்ல,

அர்ஜுன் அங்கேயே நின்று சிரித்துக் கொண் டிருந்தான்.

மீரா காரிடார் முடிவில் சென்று திரும்பிப் பார்க்க... அர்ஜுன் அவளையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தான். 'போங்க...' என்று ஜாடை கண்பித்தவள், சிரித்துக் கொண்டே சென்றாள். அவளைச் சிலர் ஒரு மாதிரி பார்க்க, அப்போதுதான் அவளுக்குக் கல்லூரியில் இருப்பது நினைவு வர, முகத்தைச் சாதாரணமாக வைத்துக் கொண்டு சென்றாள்.

அங்கே முகம் எல்லாம் புன்னகையுடன் வந்த அர்ஜுனைப் பார்த்து, "என்னடா... ரொம்பச் சந்தோஷமா இருக்க...?" சூர்யா கேட்க...

அர்ஜுன் நடந்ததைச் சொல்ல, "டேய்... ரெண்டு நாள்ல இவ்வளவு நடக்குமாடா...?" என்று ஆச்சரியப் பட்டவன், "அடுத்து என்ன, கல்யாணமா...?" என்று கேட்க....

பட்டென்று கனவு உலகத்தில் இருந்து இறங்கிய அர்ஜுன், "டேய் வெறுப்பேத்தாத எங்க அண்ணனுக்குக் கல்யாணம் பண்ணி, ஆருவுக்குக் கல்யாணம் பண்ணி, அப்புறம்தான் எங்களோடது. அதுக்கு இன்னும் ரொம்ப நா...ள் இருக்கு..." என்று பெருமூச்சு விட,

"ரொம்ப இழுக்காத... இதுக்கு நடுவில நாம ரெண்டு பேரும் ஆஸ்திரேலியா போய் ஹையர் ஸ்டடீஸ் படிக்க அப்ளை பண்ணி இருக்கோம். அது உனக்கு ஞாபகம் இருக்கா...?" சூர்யா கேட்க,

அதைக் கேட்டதும் அர்ஜுன் முகம் மாறினோன். அர்ஜுன்தான் சூர்யாவை ஆஸ்திரேலியா சென்று

படிப்போம் என்று சொன்னது. ஆனால், இப்போது அவனுக்கு மீராவை விட்டுச் செல்ல விருப்பம் இல்லை. அவனது நிலை அறிந்து ஆறுதலாக அவன் தோளில் தட்டிய சூர்யா, "ரெண்டு வருஷம்தான் அர்ஜுன்... சீக்கிரம் போயிடும்..." என்றான்.

அர்ஜுனுக்குக் கவலையாக இருந்தது. 'மீராவிற்குத் தெரிந்தால் என்ன சொல்வாளோ...?' என்று யோசிக்க ஆரம்பித்தான். மதியமும் அர்ஜுனும் மீராவும் சேர்ந்து தான் உணவருந்தினர். அர்ஜுன், அவளிடம் ஆஸ்திரேலியா செல்வது பற்றி எதுவும் சொல்லவில்லை. 'எதற்கு இப்போதே சொல்லி அவளை வேறு வருந்த வைக்க வேண்டும்...?' என நினைத்தான்.

அன்று மாலை வீட்டிற்கு வந்த அர்ஜுனின் முகம் பார்த்த வித்யா, "மதியம் சரியா சாப்பிடலியா...?" என்று கேட்க...

அர்ஜுன் "எப்படிம்மா தெரியும்? எனக்கு அந்தச் சாப்பாடு பிடிக்கவே இல்லை..." என்றதும்,

"எனக்குத் தெரியாதா உன் நாக்கைப் பத்தி. உனக்கு வக்கணையா வேணுமே... இரு, வரேன்..." என்றவர், உள்ளே சென்று தோசை ஊற்ற... அர்ஜுனும் அவரோடு உள்ளே சென்றவன், அங்கிருந்த சமையல் மேடை மீது ஏறி அமர்ந்தான்.

வித்யா அவனிடம் தோசையோடு தொட்டுக் கொள்ளச் சாம்பாரும், மிளகாய்ப் பொடியும் வைத்துக் கொடுக்க... அர்ஜுனுக்கு அப்போதுதான் பசி தெரிந்தது.

நான்கு தோசைகள் உள்ளே செல்லும் வரை அர்ஜுன், அவன் அம்மாவை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. வித்யா அவனையே வாஞ்சையாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆதியும் ஆருவும் சின்ன வயதிலிருந்து அவர்கள் அப்பாவிடமே நெருக்கமாக இருக்க... அர்ஜுன் எப்போதும் அவனது அம்மாவிடமே நெருக்கமாக இருப்பான்.

"அர்ஜுன், இன்னும் ரெண்டு தோசை ஊத்தட்டுமா...?"

"வேண்டாம்மா, வயிறு ஃபுல். நான் போய்ப் படிக்கிறேன்..." என்றவனிடம் வித்யா காபி கப்பைக் கொடுக்க, அதை எடுத்துக் கொண்டு மாடிக்கு அவன் அறைக்கு வந்தவன், காபியைக் குடித்துக் கொண்டே மீராவைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தான். 'இன்னைக்கு அவளும் கான்டீன்ல தானே சாப்பிட்டா... சாயங்காலம் வீட்ல போய் ஏதாவது சாப்பிட்டாளோ என்னவோ...?' என்று நினைத்தவன், அவளைச் செல்லில் அழைத்தான். அவன் எண்ணைப் பார்த்ததும் மீரா உற்சாகமாகப் பேசினாள்.

"ஹாய் அர்ஜுன், என்ன அதுக்குள்ள கால் பண்றீங்க?"

"சும்மாதான். ஆமா, 'பிரைட் ரைஸ் நல்லா இருக்கும்னு சொன்ன, அரிசி வேகவே இல்லை. நீ எப்படித்தான் அதை டெய்லி சாப்பிடுறியோ... ஒழுங்கா வீட்ல இருந்து இனிமே சாப்பாடு கொண்டு வா.உன்னால

முடியாதுன்னா சொல்லு, நான் இனிமே உனக்கும் சேர்த்து லஞ்ச் கொண்டு வரேன்."

"இல்லை அர்ஜுன், நானே கொண்டு வரேன்."

"சரி, அதோட இனி காலை டிபனும் வீட்ல சாப்பிட்டிட்டு வரணும்..." அர்ஜுன் சொல்ல, மீரா சரி என்றாள்.

அப்போது சிறுவர்கள் விளையாடும் சத்தம் அர்ஜுனுக்குக் கேட்டது. "நீ பார்க்ல இருக்கியா மீரா...? இப்ப மணி 6.30. இன்னும் வீட்டுக்குப் போகாம அங்க என்ன பண்ற?"

"சும்மாதான் வந்தேன்... இதோ கிளம்பிட்டேன்... சரி, 'பை'." மீரா போனை வைக்க, 'இவளுக்கு என்ன பிரச்சினைன்னே தெரிய மாட்டேங்குது? சரி, அவளே சொல்லட்டும்...' என்று நினைத்தவன், புத்தகத்தை எடுத்துக்கொண்டு படிக்க உட்கார்ந்தான்.

மறுநாள் மீரா கல்லூரிக்குள் சென்று காரை நிறுத்த, அப்போது அர்ஜுன் அங்கே வந்தான். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து மலர்ந்த புன்னகையுடன் ஹாய் சொல்லிக்கொள்ள... அர்ஜுன், மீராவையே பார்த்துக் கொண்டு நிற்க, மீரா, அர்ஜுனின் முகத்திற்கு நேராகக் கையை அசைக்க... அதில் கலைந்தவன், "இந்த ப்ளூ கலர் சுடிதார்ல அழகா இருக்க மீரா..." என்றான்.

அவன் சொன்னதைக் கேட்டு மீராவின் முகம் சிவக்க ஆரம்பித்தது. அதை மறைக்க, "சரி, நான் கிளாஸுக்குப் போறேன்..." என்றாள்.

அர்ஜுன், "அதுக்குள்ள எதுக்கு...? இரு, போக லாம்..." என்றவன்,

"இன்னைக்கு லஞ்ச் கொண்டு வந்தியா...?" என்று கேட்டதற்கு, மீரா பதில் சொல்லாமல், வேகமாகக் காரில் இருந்து உணவு டப்பாவை எடுத்துக் கொடுக்க... அர்ஜுன் அதை வாங்கித் திறந்து பார்க்க.... அதில் வெஜ் புலாவ், குருமா, தயிர் பச்சடி இருந்தது. "ம்ம்... வாசனை ஆளைத் தூக்குது... எனக்கு ரொம்பப் பிடிச்சது..." அர்ஜுன் சொல்ல...

மீரா, டப்பாவை வாங்கி மூடியவள், அதை அவனிடம் குடுத்து, "அப்ப இதை நீங்களே சாப்பிடுங்க..." என்றாள்.

"வேண்டாம், நீ சாப்பிடு. எனக்கு எங்க அம்மா லஞ்ச் கொடுத்திருக்காங்க..." என்றான்.

அவன் சொன்னதைக் கேட்டு மீரா முகம் வாட, அதைப் பார்த்த அர்ஜுன், "சரி, முகத்தைத் தூக்கி வச்சிக்காத... பார்க்க சகிக்கலை..." என்றவன், அவள் முறைப்பதைப் பொருட்படுத்தாமல், அவன் வீட்டில் இருந்து கொண்டு வந்த உணவை அவளிடம் கொடுத்து விட்டு, அவளுடையதை வாங்கிக் கொண்டான்.

"இப்ப சந்தோஷமா...?" அர்ஜுன் கேட்க, மீரா சந்தோஷமாகச் சிரித்தாள்.

"காலையில சாப்பிட்டியா மீரா...?"

மீரா, "சாப்பிட்டேன்..." என்றாள்.

அர்ஜுன் சந்தேகமாக அவள் வயிற்றைப் பார்க்க... "சாப்பிட்டேன் அர்ஜுன்... ப்ராமிஸ்..." மீரா சொல்லிக் கொண்டே அவள் துப்பட்டாவை இழுத்துவிட...

அதைக் கவனித்த அர்ஜுன், "நான் ஒண்ணும் தப்பாப் பார்க்கலை... குழந்தைகள் சாப்பிட்டா வயிறு பெருசா இருக்கும்... உனக்கும் அப்படி இருக்குதான்னு தான் பார்த்தேன்..." குறும்புப் புன்னகையுடன் சொல்ல...

"நான் உங்களை ஒரு நாளும் தப்பா நினைக்க மாட்டேன்... கூச்சமா இருந்தது, அதுதான்..." என்ற மீரா, அவன் முகத்தைப் பார்க்காமல் எங்கேயோ பார்த்துக் கொண்டு சொல்ல,

அர்ஜுன் "நான் இங்கே இருக்கேன்... நீ அங்கே யார்கிட்ட பேசுற...?" என்றவன் சிரிக்க... மீரா முகம் சிவந்தாள்.

மீராவிற்கு, அர்ஜுன் அவள் மேல் காட்டும் அன்பும், அக்கறையும் அவளை நெகிழச் செய்ய, 'எங்கே அவன் முன்பு அழுது விடுவோமோ...?' என்று நினைத்தவள், "அர்ஜுன், எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு, நான் கிளாஸுக்குப் போகட்டுமா...?" என,

மீராவைப் பார்த்த அர்ஜுன், அவள் சொல்வது பொய் என்று தெரிந்தும், "சரி, போ..." என்றான்.

மீரா, விட்டால் போதும் என்று அங்கிருந்து வேகமாகச் சென்றாள்.

அர்ஜுனும், மீராவும் கல்லூரியில், ஷட்டில் விளையாடும் இடத்தில், நாட்டியப் பள்ளியில் என்று

இருவரும் ஒருவரோடு ஒருவர் அதிக நேரம் இருந்தனர். அது அவர்கள் காதலை மேலும் வளர்க்க உதவியது. இப்படியே சில நாட்கள் செல்ல...

ஒரு நாள் வார இறுதியில் மீராவிற்கு ஒரு நாட்டிய நிகழ்ச்சி இருந்தது. ஆரு, வித்யாவிடம் சொல்லிவிட்டு அதற்குச் செல்ல... அவள் துணைக்குச் செல்வது போல் அர்ஜுனும் ஆருவுடன் சேர்ந்து சென்றான்.

வழக்கம் போலவே மீரா அருமையாக ஆடினாள். அவள் ஆடி முடித்ததும் அரங்கத்தில் இருந்த எல்லோரும் கைதட்ட, மற்றவர்கள் தட்டி முடிந்த பிறகும் விடாமல் எழுந்து நின்று அர்ஜுனும், ஆருவும் கை தட்டினார்கள். அவர்களின் செயல் மீராவிற்கு, 'உனக்கு நாங்கள் இருக்கிறோம்...' என்றும், அங்கிருந்த மற்றவர்களுக்கு, 'மீராவைக் கொண்டாடவும் ஆள் இருக்கிறது...' என்றும் காட்டியது.

இது எல்லோருக்கும் சாதாரணமாக நடப்பதுதான். ஆனால், மீராவிற்கு இப்போதுதான் முதல் முறை. 'உனக்காக நாங்கள் இருக்கிறோம்...' என்று ஆருவும், அர்ஜுனும் எழுந்து நின்று கைதட்டுவதைப் பார்த்ததும்... மீராவிற்குக் கண் எல்லாம் கலங்கிவிட்டது. அவள் கஷ்டப்பட்டுத் தன்னைச் சமாளித்துக் கொண்டு அர்ஜுனின் அருகில் சென்று அமர்ந்தாள்.

வேறு ஒருவர் நாட்டியம் ஆட, மீரா அதைப் பார்ப்பது போல் அமர்ந்திருந்தாள். ஆனால், அவளது

கண்கள் கண்ணீரால் நிரம்பி இருந்தன. அதைக் கவனித்த அர்ஜுன், ஆருவிடம் சொல்லிவிட்டு மீராவை அழைத்துக் கொண்டு வெளியே வந்தான்.

இருவரும் ஆள் இல்லாத இடத்திற்குச் சென்று அமர, மீரா வேகமாக அர்ஜுனின் மடியில் சாய்ந்து அழ ஆரம்பித்தாள்.

அர்ஜுனின் சமாதானங்கள் எதையும் ஏற்கும் நிலையில் மீரா இல்லை. 'சரி, இத்தனை நாள் போட்டுக் கொண்டிருந்த முகமூடியையை இன்றாவது கழட்டி னாளே...' என்று நினைத்த அர்ஜுன், அழுதாவது அவள் சோகத்தைக் குறைக்கட்டும் என்று அமைதியாக அவளைத் தட்டிக் கொடுத்துக் கொண்டு இருந்தான்.

சிறிது நேரம் சென்று அவள் அழுகை கொஞ்சம் ஓய்ந்ததும், "நாங்க உனக்குச் சப்போர்ட் பண்ணா.... நீ சந்தோஷப்படுவேன்னு நினைச்சோம் மீரா... நீ இப்படி அழுவேன்னு நினைக்கலை..." அர்ஜுன் சொல்ல... மீரா கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள்.

"எதுக்கு மீரா இப்படி அழற? நான் உனக்கு இல்லையா...?" அர்ஜுன் வருத்தமாகக் கேட்க,

"நீங்க மட்டும்தான் அர்ஜுன் இருக்கீங்க..." மீரா சொல்ல, அதிர்ந்த அர்ஜுன், "அப்ப உங்க அப்பா, அம்மா..." என்றான், அவர்கள் இல்லையோ என்று நினைத்து.

"இருக்காங்க, ஆனா... எனக்கு இல்லை..." மீரா புதிராகச் சொல்ல, அப்போது சரியாக உள்ளே நிகழ்ச்சி முடிய,

"சரி, உனக்கு நான் இருக்கேன்னு, நீ என்னை நம்புறதானே...?" அர்ஜுன் கேட்க... மீரா ஆமாம் என்று தலை அசைக்க...

"அப்ப கவலைப்படாம இருக்கணும்... நாம நாளைக்கு வெளிய எங்காவது போயிட்டு வரலாம். அங்க போய் மத்ததைப் பேசிக்கலாம். நாளைக்கு முழு நாளும் நான் உன் கூடவே இருப்பேன், சரியா...?" என்ற அர்ஜுன் எழுந்து கொள்ள... மீராவும் சரி என்று அவனோடு எழுந்து உள்ளே சென்றாள்.

8

அர்ஜுன் அன்று இரவு படுக்க வரும்போதே மணி பதினொன்று. அப்போது அவனது செல்லில் மெசேஜ் வர, அவன் அதை எடுத்துப் பார்க்க.... மீராதான், 'தூங்கிட்டீங்களா...?' என்று அனுப்பி இருந்தாள். அர்ஜுன் உடனே மீராவை அழைத்தான்.

"என்ன மீரா இந்த நேரத்தில...?"

"நாம நாளைக்கு வெளிய போறோம்தானே அர்ஜுன்...?"

"ம்ம்... ஆமா மீரா, போகலாம்."

"எத்தனை மணிக்குக் கிளம்பணும்...?"

"வீட்லேயே டிபன் சாப்பிட்டுட்டு ஒரு ஒன்பது மணிக்கு அடையார் வந்திடு. நான் வந்து உன் கார்ல ஏறிக்கிறேன். உன்னோட கார்ல போலாம்தானே மீரா, ஒண்ணும் பிரச்சினை இல்லை இல்ல...?"

"ஒண்ணும் பிரச்சினை இல்லை அர்ஜுன்... கார்லயே போலாம்..." சொன்ன மீராவின் குரலில் இருந்த துள்ளலை உணர்ந்த அர்ஜுன், "நாளைக்குப் போறதையே நினைச்சுக்கிட்டு இருக்காம, ஒழுங்கா தூங்கு மீரா..." என்றான்.

மீரா சரி என்று சொல்லிப் போனை வைத்தவள், 'நாளைக்கு முழுவதும் அர்ஜுனோட இருக்கப் போறோம்...' என்று சந்தோஷத்தில் மிதந்தவள், சிறிது நேரம் கழித்து உறங்கினாள்.

மறுநாள் காலை எழுந்தது முதல் மீரா பரபரப்பாக இருந்தாள். அர்ஜுன் அவனது வீட்டில், 'ப்ரெண்ட்ஸ் கூட வெளிய போறேன், சாயங்காலம் வந்திடுவேன்' என்று சொல்லிவிட்டு வந்தான். மீரா அவன் சொன்ன இடத்தில் காத்திருக்க... அர்ஜுன் அவன் வீட்டில் இருந்து நடந்து வந்தவன், மீராவின் காரில் சென்று ஏறிக்கொள்ள, மீரா அவனைப் பார்த்துப் புன்னகையுடன் ஹாய் என்றவள்,

"எங்க போகலாம் அர்ஜுன்?" என்றதற்கு,

"மகாபலிபுரம் போவோம்..." என்றான்.

சரி என்று காரை எடுத்த மீரா, மகாபலிபுரம் செல்லும் சாலையில் திரும்பியதும் காரை ஓரமாக

நிறுத்த... அர்ஜுன், ஏன் என்று அவளைப் பார்க்க.... "நீங்க ஓட்றீங்களா அர்ஜுன்...?" என்றாள்.

"நான் உன்னளவுக்கு எக்ஸ்பெர்ட் இல்லை... என்னை நம்பி காரைத் தர்ற... பரவாயில்லையா...?" என்றதற்கு,

"அதெல்லாம் நீங்க நல்லாத்தான் ஓட்டுவீங்க..." என்ற மீரா, காரின் கதவைத் திறக்க முயல... "இரு, என்ன பண்ற? காரிலிருந்து இறங்காமலே சீட் மாறலாம்..." என்றான்.

'காரில் இருந்து இறங்காம எப்படி மாறுவது...?' என மீரா அவனை ஆச்சரியமாகப் பார்க்க... அவன் உட்கார்ந்து இருந்த சீட்டைப் பின்னுக்குத் தள்ளியவன், மீராவை இந்தப் பக்கம் வா என்று சொல்ல... மீரா அந்தப் பக்கம் செல்ல... அர்ஜுன் டிரைவர் சீட்டில் சென்று அமர்ந்தான்.

"பார்த்தியா...? கீழ இறங்காமலே மாறியாச்சா...? இதுக்குத்தான் மூளைய யூஸ் பண்ணணும்..." என்றவன், காரை ஓட்ட... மீரா சீட்டை முன்னுக்கு இழுத்துச் சரி செய்தாள்.

அர்ஜுன் காரை ஓட்ட, ப்ளேயரில் பாட்டு ஓடிக் கொண்டிருந்தது. மீரா, அர்ஜுனோடு இருக்கும் இந்த நேரத்தை மனதிற்குள் ரசித்தவள், அடிக்கடி அவனைத் திரும்பிப் பார்க்க... அர்ஜுன் காரை ஓரமாக நிறுத்தினான்.

"இப்படி நீ என்னைப் பார்த்திட்டே இருந்தா... நான் எப்படிக் கார் ஓட்றது...?"

"நீங்க மட்டும் என்ன செய்றீங்க? நீங்களும்தான் என்னைப் பார்க்கிறீங்க."

"வேண்டாம் மீரா... என்னைச் சீண்டாத... நான் நல்ல பையனா இருக்கணும்னு நினைக்கிறேன்... என்னைக் கிளப்பி விடாத, அப்புறம் உனக்குத்தான் கஷ்டம்."

"என்ன பண்ணுவீங்க?" மீரா, அர்ஜுனை அலட்சிய மாகப் பார்க்க...

அர்ஜுன் பதில் சொல்லாமல், அவள் இதழ்களில் தன் பார்வையைப் பதிக்க... மீரா அரண்டு விட்டாள். அர்ஜுனுக்கு அவளின் நிலையைப் பார்த்துச் சிரிப்பு வர... சிரித்துக் கொண்டே காரை எடுத்தான். மீரா அதற்குப் பிறகு அவன் பக்கம் திரும்பவே இல்லை. வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தாள்.

சிறிது தூரம் சென்றதும், அர்ஜுன் ஒரு கையால் காரை ஓட்டிக்கொண்டே... மறுகையால் மீராவைப் பிடித்து அவனருகில் இழுத்தவன், அவளைத் தன் மேல் சாய்த்துக் கொண்டு, "பயந்திட்டியா...?" என்று கேட்க... மீரா அவன் தோளில் சாய்ந்து கொண்டு, இல்லை என்று தலை ஆட்டினாள். அதன் பிறகு இருவரும் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டே சென்றனர்.

அர்ஜுன் மகாபலிபுரம் ரோட்டில் இருந்த ஒரு ரெசார்ட்டுக்குள் காரை விட... மீரா அவனைக் கேள்வி யாகப் பார்த்தாள். அர்ஜுன் காரை நிறுத்தி விட்டு மீராவிடம், "இங்க பிரைவேட் பீச் இருக்கு மீரா... அதோட

நிறைய கேம்ஸ் இருக்கும், லஞ்ச் அவங்களே தந்திடுவாங்க. நல்ல பிளேஸ், வா..." எனக் காரில் இருந்து இறங்க, மீராவும் அவனோடு இறங்கி உள்ளே சென்றாள்.

அர்ஜுன் சென்று இருவருக்கும் ஆளுக்கு ஆயிரம் என்று இரண்டாயிரம் பணம் கட்ட, மீரா, "எதுக்கு அர்ஜுன் இவ்வளவு செலவு செய்யணும்? நாம பொதுவான பீச்சுக்குப் போலாம்..." என்றாள்.

மீரா, நான் பணம் தருகிறேன் என்று சொல்லி, தான் அவனை விட வசதியானவள் என்று காண்பிக்காமல்... அதே சமயம் அவனுக்கு அதிகச் செலவோ என்று அவள் கவலைப்படுவதையும் பார்த்த அர்ஜுன், தான் சரியான துணையைத்தான் தேர்ந்து எடுத்திருக்கிறோம் என்று சந்தோஷப்பட்டான்.

நல்ல வேளை... 'ரொம்பப் பணம் இருக்கிற இடத்தில குணம் இருக்காதுன்னு நினைச்சு இவளைப் போய் வேண்டாம்னு நினைச்சேனே...' என்று யோசித்தவன், மீராவிடம், "கவலைப்படாத... இது என்னோட பாக்கெட் மணி இல்லை... நான் லீவ் நாள்ல எங்க கடைக்குப் போய் வேலை பார்ப்பேன், அதுக்கு எங்க அப்பா கொடுக்கிற பணம்தான் இது. என்னோட சம்பாத்தியம்..." என்றவன், அவளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

உள்ளே நிறைய விளையாட்டுகள் இருக்க... அர்ஜுனும், மீராவும் சென்று ஒவ்வொரு விளையாட்டிலும் ஆர்வமுடன் பங்கேற்றனர். அங்கே இவர்களைப் போல்

காதலர்கள், புதுமணத் தம்பதியர் மற்றும் சிலர் குடும்பத்துடனும் வந்திருந்தனர்.

எல்லோரும் சேர்ந்து குழு விளையாட்டில் பங்கேற்றனர். விளையாடிக் களைத்தவர்கள், நேரத்தைப் பார்க்க, மதிய உணவு நேரம் ஆகி இருந்தது. "அர்ஜுன், சாப்பிடலாமா...? ரொம்பப் பசிக்குது." மீரா கேட்க... அர்ஜுன் அவளை அழைத்துக் கொண்டு சாப்பிடச் சென்றான்.

இருவரும் ஆளுக்கு ஒரு தட்டில் உணவை எடுத்துக் கொண்டு வெளியே கார்டனில் அமர்ந்து இயற்கையை ரசித்துக் கொண்டே சாப்பிட்டனர்.

சாப்பிட்டதும் பீச்சுக்குச் சென்றவர்கள், அப்போது வெயில் நேரம் என்பதால் அங்கிருந்த குடிலில் சென்று அமர்ந்து பீச்சை வேடிக்கை பார்த்தனர். மீரா அமைதியாகக் கடலையே பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால், அவள் மனதிற்குள் அலை அடிப்பதை உணர்ந்த அர்ஜுன், அவளை இழுத்துத் தன் மடியில் போட்டுத் தட்டிக் கொடுக்க... மீரா மெதுவான குரலில் தன்னைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தாள்.

மீராவின் அம்மா ஷ்யாமளா பெரிய பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர், மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டவர். ஆனால், மீராவின் அப்பா ராம் நாத்தோ சிறு வயதில் மிகவும் கஷ்டப்பட்டு வளர்ந்தவர். சமுதாயத்தில் தனக்கு என்று ஒரு அந்தஸ்து வேண்டும் என்று அதிகமாக உழைத்தார்.

போதாததற்கு ஷ்யாமளா வேறு எப்போதும், 'உங்களைப் போய் என் தலையில கட்டிட்டாங்க. எங்க அந்தஸ்துக்கு நீங்க சமமா...?' என்று வார்த்தையால் ராம்நாத்தை நோகடிக்க... அவருக்கு இன்னும் தான் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற வெறி அதிகமாகியது.

ராம்நாத் வெறியாக உழைக்க... அதைப் பார்த் ததும் ஷ்யாமளாவுக்கு வெறுப்பாக இருந்தது. 'இப்படி வேலை... வேலைன்னு அலைஞ்சா, வாழ்க்கையை எப்ப அனுபவிப்பது...?' என்று அதற்கும் குறை சொன்னாள்.

அவளுக்கு வெளிநாட்டில் போய் இருக்க வேண்டும் என்று ஆசை. தன் கனவை நிறைவேறவிடாமல்... ஜாதகம் பொருந்தி இருந்த காரணத்தால், ராம்நாத்தைத் தனக்குத் திருமணம் செய்து வைத்தவர்கள் மீது அவளுக்குக் கோபமாக வந்தது.

மீராவும் பிறந்து விட்டாள். அப்போதும் ஷ்யாமளா வால் ராம்நாத்தோடு மனம் ஒத்து வாழ முடியவில்லை. நினைத்த வாழ்வு கிடைக்கவில்லை என்றால்... கிடைத்த வாழ்க்கையை விரும்பி வாழ வேண்டும் என்பதை ஷ்யாமளாவால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

விருப்பம் இல்லாமலே ராம்நாத்துடன் வாழ்ந்தாள். இதனால் இருவருக்குள்ளும் எப்போதும் சண்டைதான். மீராவை இருவரும் கவனிக்கவில்லை. ஷ்யாமளாவுக்கு விருப்பம் இல்லை, ராம்நாத்திற்கு நேரம் இல்லை. நல்லவேளை ராம்நாத்தின் பெற்றோர் இருந்ததால்... அவர்கள் மீராவைப் பார்த்துக்கொண்டனர்.

ஒரு கட்டத்தில் இருவருக்கும் இனி தாங்கள் சேர்ந்து இருப்பது நடக்காது என்று புரிந்துவிட... சரி, பிரிந்து விடுவோம் என்று நினைத்தனர். அதன்படி இருவரும் விவாகரத்துச் செய்ய முடிவு எடுத்துப் பெரியவர்களிடம் சொல்ல, அவர்களும் இத்தனை நாள் இவர்கள் வாழ்ந்த வாழ்க்கையைப் பார்த்ததால்... நாம் சொல்லி ஒன்றும் ஆகப் போவதில்லை என்று உணர்ந்து சம்மதம் சொல்ல... ராம்நாத்தும், ஷ்யாமளாவும் பிரிந்தனர்.

மீரா யாரிடம் இருப்பது என்ற கேள்வி வர, ராம்நாத்தின் அம்மா, 'இவ இங்க இருக்கும் போதே... பெத்த பெண்ணை ஒழுங்கா கவனிக்கலை... இதுல இவ இன்னொரு கல்யாணம் வேற செஞ்சா உருப்பட்ட மாதிரி தான்...' என்று நினைத்தவர், இன்னொன்றும் யோசித்தார்.

மீரா பெண் குழந்தை. அதனால் அவளின் பாதுகாப்புக் கருதி "நீ இன்னொரு கல்யாணம் செய்து கொள்ளும் முடிவில் இருந்தால், மீராவை எங்களிடமே விட்டுவிடு. ஏனென்றால் அவள் பெண் குழந்தை, என்னால் அவளை வேறு ஒரு வீட்டில் வளர அனுமதிக்க முடியாது..." என்று சொல்லிவிட, ஷ்யாமளாவும் சரி என்று மீராவை ராம்நாத்திடமே விட்டுச் சென்றாள்.

சில மாதங்கள் கழித்து ஷ்யாமளா வெளிநாட்டில் இருக்கும் தன் தூரத்து உறவினர் ஒருவரைத் திருமணம் செய்து கொண்டு வெளிநாட்டில் சென்று செட்டில் ஆக... இங்கே ராம்நாத், தன் மனைவி வேறு ஒருவனைத்

திருமணம் செய்து கொண்டாள் என்ற ஆத்திரத்தில், தன் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள... அவரைவிட வசதி குறைவான ஆனால் அழகான பெண்ணை (மீனாட்சி) இரண்டாவது திருமணம் செய்து கொண்டார்.

வசதி குறைவான பெண் தனக்கு அடங்கி இருப்பாள் என்று நினைத்து அவர் திருமணம் செய்ய... அவளும் அவருக்கு அடங்கித்தான் இருந்தாள். அவரைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக்கொண்டாள். ஆனால், மீராவைப் பார்க்கும் போது மட்டும் வெறுப்பைக் காட்டினாள். அவளுக்கு மீராவைப் பார்க்கும் போது எல்லாம்... தான் இரண்டாம் தாரம் என்பது நினைவுக்கு வர, இவள் மட்டும் இல்லை என்றால் தன் வாழ்வில் ஒரு குறையும் இல்லை என்று நினைத்தவள், 'இவள் அம்மா போனது போனா.... அவ பெத்த பெண்ணை இங்க ஏன் விட்டுட்டுப் போனா?' என்று மனதிற்குள் வெம்பினாள்.

மீனாட்சிக்கு ஒரு வருடத்தில் ஆண் குழந்தை பிறக்க, அவளைக் கையிலேயே பிடிக்க முடியவில்லை. மீராவைக் குழந்தையின் அருகே கூட நெருங்க விட மாட்டாள். அவளைப் பார்த்தாலே எரிந்து விழுவாள். மீனாட்சியின் மகன் வருண் நடக்க ஆரம்பித்த பிறகு, மீரா அவனுடன் விளையாடினால், வருணுக்குத்தான் அடி விழும். அதைப் பார்த்தே மீரா அவனுடன் விளையாடப் பயப்படுவாள்.

மீராவிடம் மீனாட்சி காட்டும் வெறுப்பைப் பார்த்து வருத்தம் அடைந்த ராம்நாத்தின் அம்மா, "நீ உன்

மனைவியுடன் தனிக்குடித்தனம் போய்விடு...” என்று சொல்ல... ராம்நாத், “ஏன்...?” என்று கேட்க...

“இங்க இருந்தா ரெண்டு குழந்தைகளும் கஷ்டப்படும். அதை விட நீ தனியாப் போனா... வருணுக்காவது அவனோட அம்மா பாசம் கிடைக்கும். மீராவை நானும், உங்க அப்பாவும் வளர்க்கிறோம். ஆனா... எங்களுக்கு ஏதாவது ஆகிட்டா, நீ மீராவை நல்லாப் பார்த்துக்கணும். அவளுக்குப் பிடிச்ச வாழ்க்கை யைத்தான் நீ ஏற்படுத்தித் தரணும். அவளும் அவ அம்மா மாதிரி பிடிக்காத கல்யாணம் செஞ்சிட்டுக் கஷ்டப்படக் கூடாது. எனக்குச் சத்தியம் பண்ணு...” என்று சொல்ல, ராம்நாத்தும் சத்தியம் செய்தார்.

அவருக்கு மகளை விட்டுத் தனியே செல்ல விருப்பம் இல்லைதான். ஆனால், மீனாட்சியின் வெறுப்பில் மீரா வளர்வதை விட... தனது பெற்றோரின் பாசத்தில் வளரட்டும் என்று நினைத்து மீனாட்சியை அழைத்துக் கொண்டு தனிக்குடித்தனம் சென்றார்.

மீராவும் பெற்றோரிடம் வளராமல் தாத்தா, பாட்டியிடம் வளர்ந்தாள். செல்லமாக வளர்த்தால், எங்கே மீராவும் அவள் அம்மா மாதிரி இருப்பாளோ என்று அவளைக் கண்டிப்புடன் வளர்த்தனர். மீராவும் சிறு வயதிலேயே தன்னுடைய பெற்றோரைப் பற்றிப் புரிந்து கொண்டதால்... தனது ஆசைகளை எல்லாம் மனதிற் குள்ளேயே புதைத்துக் கொண்டு வாழப் பழகிக் கொண் டாள்.

மீரா தன்னுடைய குடும்பத்தைப் பற்றி யாரிடமும் சொல்ல மாட்டாள். அதனால் அவள் படித்த பள்ளியிலோ, கல்லூரியிலோ அவள் பெற்றோரைப் பற்றித் தெரியாது. மீராவிற்குச் சிறு வயதில் இருந்தே மனதில் ஒரு வைராக்கியம், தன்னைப் பற்றி நினைக்காத பெற்றோர் பற்றித் தானும் நினைக்கக் கூடாது என்று. அதனால், அவளாக எதற்கும் அவர்களிடம் போய் நிற்க மாட்டாள். ஆனால், அவளின் பெற்றோர் தங்களின் தவறை மறைக்க... மீராவிற்கு அதிகமாகச் செலவு செய்தனர்.

ஷ்யாமளா வெளிநாட்டில் இருந்தாலும், மகளுக்குத் தனது பெற்றோரிடம் சொல்லி அவளுக்குத் தேவையான உடைகள், நகைகள் எல்லாம் வாங்கிக் கொடுக்க... ராம்நாத்தும் மகளுக்கு அதிகமாகச் சேர்த்து வைத்தார். அதோடு அவளுக்குத் தேவையானதை வாங்கியும் கொடுத்தார்.

மீரா எதையும் கண்டு கொள்ள மாட்டாள். பாசத்தைக் காட்டாமல் வெறும் பணத்தைத் தரும் பெற்றோர் மீது அவளுக்கு வெறுப்புதான் வளர்ந்தது. மற்ற குழந்தைகள் பெற்றோருடன் சந்தோஷமாக இருப்பதைப் பார்த்து அவள் மனதிலும் எழும் ஏக்கத்தை மறைக்கக் கற்று கொண்டாள். மற்ற குழந்தைகளுடன் அவர்கள் வீட்டிற்குச் சென்று விளையாடினால், அவர்கள் தன் பெற்றோரைப் பற்றிக் கேட்கிறார்கள் என்று, யார் வீட்டுக்கும் போக மாட்டாள். அதனால்தான் சிறு வயதிலேயே நாட்டியப் பள்ளிக்குச் சென்றது. அவளு டைய நேரத்தை அவள் தன் திறமையை வளர்த்துக்

கொள்ளப் பயன்படுத்தினாள். மீரா நன்றாக ஓவியமும் வரைவாள்.

மீராவின் தாத்தா, பாட்டி அவளை வீட்டில் நன்றாகப் பார்த்துக் கொண்டனர். ஆனால், அவளை வெளியே அழைத்துச் செல்வது அதெல்லாம் அவர்களுக்கு முடியவில்லை. மீராவும் சிறு வயது முதல் தன் வேலைகளைத் தானே செய்து பழகிக் கொண்டாள். யாரையும் சார்ந்து இருக்காமல் தனியே வாழக் கற்றுக் கொண்டாள்.

விடுமுறை நாட்களில் கூட வீட்டில் இருக்காமல், எதாவது கிளாஸுக்குச் சென்று விடுவாள். இப்படியே வருடங்கள் செல்ல... முதலில் அவள் தாத்தா இந்த உலகை விட்டுச் செல்ல, அடுத்து இரண்டு வருடத்தில் அவள் பாட்டியும் மறைந்தார். மீரா அப்போது பன்னிரண்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தாள். ராம்நாத், அவளைத் தன்னுடன் அழைத்துக்கொண்டார்.

அவர் அப்போதுதான் புதிதாக, இப்போது இருக்கும் பெரிய வீட்டைக் கட்டி இருந்தார். அதனால் எல்லோரும் சேர்ந்து அங்கே சென்றனர். மீரா திரும்பி மீனாட்சியின் வெறுப்புக்கு ஆளானாள். மீனாட்சி, மீராவை ஏதாவது ஹாஸ்டலில் சேர்க்கச் சொல்ல.... ராம்நாத்தான் தன் தாயிடம் சத்தியம் செய்து தந்திருப்பதைச் சொல்லி மறுத்து விட்டார்.

மீனாட்சி, வருணைக் கொண்டு போய் ஊட்டி கான்வென்ட்டில் சேர்த்து விட்டாள்.

மீரா, மீனாட்சியின் கண்களிலேயே படாமல் இருக்கப் பழகி கொண்டாள். அவளது அறை இரண்டாம் தளத்தில் இருக்க... அவள் கீழேயே வர மாட்டாள். எதற்குத் தன்னைப் பார்த்து மீனாட்சி டென்ஷன் ஆக வேண்டும் என்று நினைத்து, மேலே தனது அறையிலேயே இருந்து கொள்வாள்.

கல்லூரிக்குச் சென்ற நேரம் போக... மற்ற நேரம் வீட்டில் அதிகம் தங்காமல் பார்த்துக் கொள்வாள்.

காலையில் டிபன் சாப்பிடக் கீழே சென்றால்.. மீனாட்சியைப் பார்க்க வேண்டும்... அப்புறம் அவள் பேசும் பேச்சையும் கேட்க வேண்டும்... பிறகு அந்த நாள் இருவருக்கும் நன்றாக இருக்காது என்றுதான், காலை உணவைக்கூட வீட்டில் அருந்துவது இல்லை. கல்லூரியிலேயே சாப்பிட்டுக் கொள்வாள். விடுமுறை நாட்களில் வேறு வழி இல்லாமல் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

இப்போது அர்ஜுன் சொல்லித்தான் மற்ற நாட்களிலும் வீட்டில் சாப்பிட ஆரம்பித்து இருக்கிறாள்.

மீரா சொன்ன எல்லாவற்றையும் கேட்ட அர்ஜுனுக்கு, இப்படியும் கூடப் பெற்றோர்கள் இருப்பார் களா என்று ஆச்சரியமாக இருந்தது.

"உங்க அப்பா, அம்மா பிரிஞ்ச போது உனக்கு என்ன வயசு மீரா...?"

"ஐந்து..."

'ஐந்து வயதுக் குழந்தையை எப்படி இவங்களால விட முடிந்தது...?' தான் எட்டாம் வகுப்பு வரை... தன் அம்மாவைக் கட்டிப் பிடித்துக்கொண்டு தூங்கியது அவனுக்கு நினைவு வந்தது.

மீரா, அர்ஜுனின் மடியில் படுத்துக்கொண்டே எல்லாவற்றையும் சொன்னவள், எழுந்து உட்கார்ந்து அர்ஜுனைப் பார்க்க... அவள் கண்ணீரால் அவனின் தொடைப் பகுதியில் ஈரமாக இருந்தது.

'ஐயோ...! இப்போ என்ன செய்றது...?' என்று அவள் யோசிக்க, அப்போது ஒரு மூன்று வயதுச் சிறுவன் ஒருவன் அவர்களின் அருகே வந்தான். அவனை ஏற்கெனவே விளையாடும் இடத்தில் இருவரும் பார்த்திருந்ததால்... மீரா கண்ணீரைத் துடைத்துவிட்டு அவனைப் பார்த்து வா என்று அழைக்க... அருகில் வந்தவன், அர்ஜுனின் உடையில் இருந்த ஈரத்தைப் பார்த்து, "ஹய்...! அங்கிள் டிரஸ்லேயே ச்சூச்சூ போயிட்டாங்க..." என்று சொல்லிச் சிரிக்க...

அவன் சொன்னதைக் கேட்டு அதிர்ந்த அர்ஜுன், இல்லை என்று தலை ஆட்ட... மீரா சிரிப்பை அடக்கிக் கொண்டு ஆமாம் என்று தலை ஆட்டினாள். அதைப் பார்த்தவன், "இவ்வளவு நேரம் மடியில படுத்துப் பிழியப் பிழிய அழுதிட்டு, இப்ப என்னையே மாட்டி விடுற..." அர்ஜுன் சொல்ல...

மீரா எழுந்து கொண்டே "அவசரம்னா சொல்ல வேண்டியதுதான அர்ஜுன்... அதைவிட்டு இப்படியா பண்ணுவீங்க...?" என்று கேட்டவள் ஓட...

அர்ஜுன், "அடிங்க... இருடி வரேன்..." என்று அவளைத் துரத்த... அந்தச் சிறுவனும் அவர்களின் பின்னே ஓடினான்.

மீரா கடற்கரை ஓரமாக ஓட... அர்ஜுன் அவளைத் துரத்திப் பிடித்தான். இருவரும் அங்கேயே நீரிலேயே அமர... அந்தச் சிறுவனும் ஓடி வந்து மீராவின் மடியில் அமர்ந்தான். அர்ஜுனும், மீராவும் மூச்சு வாங்கியபடி சிரிக்க... அந்தச் சிறுவனும் அவர்களோடு சேர்ந்து சிரித்தான்.

மீரா, தாங்கள் இப்போது இருக்கும் நிலையைப் பார்த்தவள், 'தங்களுக்குத் திருமணம் முடிந்து குழந்தை பிறந்தால்... தாங்களும் இப்படித்தானே குடும்பமாக இருப்போம்...' என்று நினைத்தவள், 'அது நடக்குமா?' என்ற எண்ணம் தோன்ற, அவள் அர்ஜுனை ஏக்கமாகப் பார்க்க... அவள் என்ன நினைக்கிறாள் என்பதை உணர்ந்த அர்ஜுன்,

"எல்லாம் நல்லபடியா நடக்கும்..." என்றவன், அவளைத் தோளோடு சேர்த்து அணைத்தான்.

மீராவின் மடியில் இருந்த சிறுவன், "உங்க பாப்பா எங்கே...?" என்று கேட்க... மீரா வெட்கப்பட...

அர்ஜுன், "ம்ம்... இப்போதைக்கு நீதான் எங்க பாப்பா... இன்னொரு பாப்பா அப்புறமா வரும்..." என்று சொல்லி அந்தக் குழந்தையைத் தூக்கி முத்தமிட்டவன், சற்றுத் தள்ளி அமர்ந்திருந்த அந்தக் குழந்தையின்

பெற்றோரிடம் சென்று குழந்தையைக் கொடுத்துவிட்டு, மீராவை அழைத்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பினான்.

வீட்டிற்குக் கிளம்பும் முன் அங்கிருந்த ரெஸ்ட் ரூம் சென்று இருவரும் தலை வாரி, முகம் கழுவி வர... அர்ஜுனிடம் தன் மன பாரத்தை இறக்கி வைத்ததால், மீரா பார்க்கத் தெளிவாக இருந்தாள். காரில் சென்று இருவரும் ஏற...

அர்ஜுன் அவளைத் தோளோடு சேர்த்து அணைத்தவன், "மீரா... நான் உனக்கு எதுவும் சொல்ல வேண்டியது இல்லை. நீ ரொம்பத் தைரியமான பொண்ணு. இதே உன்னுடைய இடத்தில வேற யாராவது இருந்திருந்தா ஒண்ணு மனசு ஒடிஞ்சு போய்... அவங்களுக்குத் தாழ்மை உணர்ச்சி வந்திருக்கும். இல்லைன்னா தங்களுடைய சோகத்தை மறைக்க... இவ்வளவு பணம் கையில இருக்கும்போது தவறான வழிக்குப் போய் இருப்பாங்க. ஆனா... நீ உன்னைப் பற்றி ஒரு குறையும் சொல்ல முடியாதபடி நீயே உன்னைப் பார்த்துப் பார்த்துச் செதுக்கி இருக்க...

"இனி நானும், என் குடும்பமும் உனக்கு இருக்கோம். என் அம்மா, அப்பா, அண்ணன், தங்கை எல்லோரும் இனி உனக்கும் சொந்தம் என்பதையும் மனசுல வச்சிக்கோ... இனி உன்னோட சந்தோஷமோ, துக்கமோ... பகிர்ந்துக்க நாங்க இருக்கோம். நீ இது வரை

பட்ட கஷ்டமே போதும், நான் உன்னை நல்லாப் பார்த்துப்பேன்..." என்றவன், அவள் நெற்றியில் இதழ் ஒற்ற... அவனின் முதல் முத்தத்தை மீரா கண் மூடி ரசித்தாள்.

வழக்கம் போல் அன்று இரவு உணவிற்குப் பிறகு தோட்டத்தில் அமர்ந்து பேசிகொண்டிருக்கும் போது, அர்ஜுன் அமைதியாக அமர்ந்திருந்தான். ஆனால், அவன் மனதிற்குள் ஒரு சூறாவளி சுழன்று கொண்டு இருந்தது.

மீராவின் பெற்றோரைப் பற்றி நினைக்க நினைக்க, அவனுக்கு ஆத்திரமாக வந்தது. நேரில் சென்று மீராவின் அப்பாவிடமே கேட்டுவிடலாமா என்கிற அளவிற்கு ஆத்திரம்.

ஆனால், 'இப்போது ஏதாவது செய்யப் போய்... அது மீராவிடம் இருந்து தன்னைப் பிரித்து விடக் கூடாது. கல்யாணம் முடியட்டும்... அவங்களை நாக்கைப் பிடுங்கிற மாதிரி நாலு கேள்வியாவது கேட்டுடணும்...' என்று நினைத்துக் கொண்டான்.

அவனின் முகத்தில் தோன்றும் விதவிதமான பாவங்களைக் கவனித்த கணேசன், "என்ன அர்ஜுன்... எதையோ மனசில போட்டுக் குழப்பிக்கிற மாதிரி இருக்கு? என்ன சொல்லு?" என்றதற்கு,

"இல்லைப்பா... ஒண்ணும் பிரச்சினை இல்லை. ஒரு விஷயம் சொல்லணும், ஆனா... இப்ப இல்லை,

கொஞ்சம் டைம் கொடுங்க...” என்றான். கணேசனும் சரி என்று அவன் தோளில் தட்டிவிட்டு உள்ளே சென்றார்.

ஆதியும், ஆருவும் அன்றைக்குப் பிறகு அர்ஜுனிடம் மீராவைப் பற்றி எதுவும் கேட்கவில்லை. அர்ஜுனும், மீராவும் பழகுவதில் இருந்தே அவர்கள் இருவரும் ஒருவரிடம் ஒருவர் தங்கள் காதலைச் சொல்லிக் கொண்டனர் என்பது மட்டும் புரிந்தது. இன்று அர்ஜுன் தங்கள் அப்பாவிடம் சொன்னது, கண்டிப்பாக மீராவைப் பற்றித்தான் என்பதும் இருவருக்கும் புரிந்தது.

அர்ஜுன், மீராவை நன்றாகப் பார்த்துக்கொண்டான் என்று சொல்வதை விட... தன் கண்களுக்குள் வைத்துப் பார்த்துக் கொண்டான் என்று சொல்வதுதான் உண்மை. அர்ஜுன், மீராவின் பெற்றோர் பற்றி யாரிடமும் சொல்லவில்லை. பிறகு தெரிந்து கொள்ளட்டும் என்று விட்டுவிட்டான்.

அர்ஜுனுக்கு மீராவைப் பற்றி நினைக்கும் போது ஆச்சரியமாக இருந்தது. ‘மனதிற்குள் இவ்வளவு வருத்தத்தை வைத்துக் கொண்டு வெளியில் எப்படி இவளால் சாதாரணமாக இருக்க முடிகிறது...?’ என்று யோசித்தான். மீராவும் அர்ஜுனைத் தவிர தன் சோகத்தை யாருக்கும் தெரிய விட்டது இல்லை. எப்போதும் சந்தோஷமாக இருப்பது போல் தான் நடந்து கொள்வாள். அதனால் மற்றவர்கள் பெரிய பணக்கார வீட்டில் பிறந்து வளரும் செல்ல மகளாகத்தான் மீராவைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தனர்.

இப்படியே சில நாட்கள் சென்றன. தசரா பண்டிகையும் அடுத்துத் தீபாவளியும் வருவதால் அர்ஜுனின் தந்தையின் கடையில் கூட்டம் அலை மோத... அர்ஜுனும் சென்று அவன் அப்பாவிற்கு உதவி செய்தான்.

ஆதி, கார்மெண்ட்ஸ் பார்த்துக் கொள்ள, கணேசனும், அர்ஜுனும் கடையைப் பார்த்துக் கொண்டனர். கல்லூரி விடுமுறை என்பதால், மீராவால் அர்ஜுனை இரண்டு நாட்களாகப் பார்க்க முடியவில்லை. என்ன செய்வது என்று யோசித்தவள், ஆருவிடம், “எனக்குக் கொஞ்சம் டிரஸ் வாங்கணும். உங்க கடைக்குப் போகலாமா...?” என்று கேட்க... ஆருவிற்கு அவள் எதற்குச் சொல்கிறாள் என்று புரிந்ததால், சரி என்று அழைத்துச் சென்றாள்.

அன்று விடுமுறை நாள். அதோடு பண்டிகையும் நெருங்கி வருவதால் கடை அதிகக் கூட்டமாக இருந்தது. கீழ்த் தளம் முழுதும் பெண்களுக்கான உடைகள் இருந்தது. மீரா கடைக்குள் சென்றதும் அர்ஜுனைத்தான் தேடினாள். அவன் அங்கே இல்லை. மீரா மேல் தளத்திற்குச் செல்ல... அவளைத் தடுத்த ஆரு, “இப்ப எதுக்கு மேல போற? இங்கதான் லேடீஸ் செக்ஷன். இங்கேயே பாரு...” என்று சொல்ல...

“இரு ஆரு... நான் இப்ப தான முதல் தடவை வந்திருக்கேன்... கடை ஃபுல்லா பார்த்திட்டு அப்புறம் டிரஸ் பார்க்கலாம்...” என்றாள் மீரா.

ஆரு மனதிற்குள், 'நீ யாரைத் தேடுறேன்னு எனக்குத் தெரியாதா...?' என்று நினைத்தவள், "சரி, வா போகலாம்..." என்று மீராவை அழைத்துக் கொண்டு மேல் தளத்திற்குச் செல்ல... அதில் குழந்தைகளுக்கான உடைகள் இருந்தன. அங்கேயும் அர்ஜுன் இல்லை.

மீரா அங்கே தேடிவிட்டு, அங்கேயும் அவன் இல்லை என்றதும், அதற்கும் மேல் தளத்திற்குச் செல்ல... அங்கே ஆண்களுக்கான உடைகள் இருந்தன. அங்கேதான் அர்ஜுனும் இருந்தான். பணம் வாங்கும் கவுண்டரில் அமர்ந்து மும்முரமாக வேலை பார்த்துக் கொண்டிருந்தான்.

அர்ஜுன், மீரா வந்ததைக் கவனிக்கவில்லை. கடை வேறு ரொம்பக் கூட்டமாக இருந்தது. மீரா, அர்ஜுனைப் பார்த்துக்கொண்டு அங்கேயே ஓரமாக நின்றுவிட்டாள்.

ஆரு அவளைத் தொல்லை செய்யாமல், அங்கு வேலை செய்யும் பெண்களிடம் சென்று பேச...

அர்ஜுன் உள்ளுணர்வு ஏதோ சொல்ல... நிமிர்ந்து பார்த்தவன், அங்கே சற்றுத் தள்ளி தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் மீராவைப் பார்த்ததும் ஆச்சரியம் அடைந்தான்.

மீராவைப் பார்த்துப் புருவத்தை உயர்த்தியவன், அவன் செல்லில் அவளை அழைத்தான். மீரா போனை எடுத்து ஹலோ என்றதும், "என்ன மேடம் திடீர் சர்ப்ரைஸ், நாங்க எல்லாம் ஒழுங்கா வேலை செய்றோமான்னு பார்க்க வந்தியா...?" என்று கேட்க...

"ஆளையே பார்க்க முடியலை, அதுதான் வந்தேன்..."

மீரா சிணுங்கலாகச் சொல்ல... அவள் பேச்சில் இருந்தே அவள் தன்னை எவ்வளவு தேடி இருக்கிறாள் என்று உணர்ந்தவன்,

"இரு, கொஞ்ச நேரத்தில வரேன்..." என்று சொல்லிப் போனை வைத்தான்.

மீரா, ஆருவிடம் சென்று நிற்க, அவள் மீராவை அழைத்துக் கொண்டு அதற்கு மேல் தளத்திற்குச் சென்றாள். அங்கேதான் குடோன் இருந்தது.

அங்கே சில பெண்கள் அமர்ந்து துணிப் பார்சல் களைப் பிரித்து அடுக்கிக் கொண்டு இருந்தனர்.

ஆருவைப் பார்த்ததும் அந்தப் பெண்கள் சிரித்துக் கொண்டே வந்து, "ஹாய் ஆருக்கா... எப்படி இருக்கீங்க?" என்று கேட்க...

ஆருவும், "நல்லா இருக்கேன், நீங்க எல்லாம் எப்படி இருக்கீங்க.;..?" என்று கேட்டாள்.

"நல்லா இருக்கோம்..." என்று சொன்னவர்களின் பார்வை மீரா மீதே இருக்க, ஆரு, "இவங்க மீரா, என்னோட ப்ரெண்ட்..." என்று அவர்களுக்கு மீராவை அறிமுகப்படுத்த... மீரா அவர்கள் ஒவ்வொருவரிடம் கைகுலுக்க.... அவர்களும் மாலா, ஷீபா, சித்ரா, வாணி என்று தங்கள் பெயர்களைச் சொல்லிக் கை குலுக்கி அறிமுகமாகினர்.

கொஞ்ச நேரத்திலேயே அவர்களோடு இயல்பாகப் பழகிய மீராவை அவர்களும் இயல்பாக மீரா அக்கா என்று அழைத்துப் பேச ஆரம்பித்தனர்.

ஆரு, தான் கீழே சென்று தன் அப்பாவிற்கு உதவப் போவதாகச் சொன்னவள், மீராவையும் "வருகிறாயா...?" என்று கேட்க...

மீரா, "நீ போ... நான் இங்கேயே இருக்கேன்..." என்றாள். ஆரு கீழே சென்றுவிட... மீரா அங்கிருந்த இருக்கையில் அமர்ந்து, அவர்கள் வேலை செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரம் வேடிக்கை பார்த்தவள், அந்தப் பெண்கள் எந்தப் புடவையைப் பொம்மைக்குக் கட்டுவது என்று பேசிக்கொள்வதைப் பார்த்து எழுந்து அவர்கள் அருகில் சென்றவள், அங்கிருந்த புடவையில் ஒன்றை எடுத்து அதைப் பிரித்துப் பார்க்க... அந்தப் புடவை நீல நிறத்தில் வெள்ளைக் கல் வைத்த டிசைனர் புடவை. ரொம்ப அழகாக இருந்தது. விலை பத்தாயிரம்.

மீரா அந்தப் புடவையை எடுத்துக் கொண்டு அங்கிருந்த பொம்மை அருகில் சென்றவள், அங்கிருந்த பொம்மைக்குக் குஜராத்தி மாடலில் அந்தப் புடவையின் டிசைன் வெளியே தெரியும்படி அழகாகக் கட்டினாள்.

அதைப் பார்த்த அங்கிருந்த பெண்கள் "ஹை... ரொம்ப அழகா இருக்கு மீராக்கா..." என்று சொல்ல... மீரா அந்தப் பொம்மையின் தலையில் செயற்கை முடியை வைத்து, அதோடு தன் நெற்றியில் இருந்து

பொட்டையும் எடுத்து வைக்க... அந்தப் பொம்மை பார்க்க நிஜமான பெண் போல அழகாக இருந்தது. அப்போது அர்ஜுன் அங்கே வர... அவனைப் பார்த்த பெண்கள் அனைவரும் சென்று தங்கள் வேலையைப் பார்க்க... அர்ஜுன் வந்ததைப் பார்க்காத மீரா, பொம்மையை ரசித்துக் கொண்டிருந்தாள்.

அங்கே வந்த அர்ஜுன் சுற்றிப் பார்க்க... பெண்கள் அனைவரும் அவர்கள் வேலையில் கவனமாக இருந்தனர். அர்ஜுன் மெதுவாக மீராவின் பின்னே சென்று நின்று, அவள் முடியைப் பிடித்து லேசாக இழுக்க... மீரா வலியில் "ஸ்..." என்றவள் திரும்பிப் பார்க்க... அங்கே அர்ஜுன் நிற்பதைப் பார்த்ததும் முகம் மலர்ந்தாள்.

அவளைப் பார்த்து அர்ஜுன் ரசிக்க... மீரா அவனைப் பார்த்துச் செல்லமாக முறைத்தவள், "எதுக்கு முடியைப் புடிச்சு இழுத்தீங்க...?" எனப் பொய்யாகக் கோபம் கொள்ள... "பொம்மைன்னு நினைச்சு இழுத்திட்டேன், நீயும் பார்க்க இந்தப் பொம்மை மாதிரி தான் இருக்க..." என்றான்.

"எப்ப அர்ஜுன் ஃப்ரீ ஆவீங்க, உங்களைப் பார்க்காம இருக்க முடியலை..." மீரா அவனுக்கு மட்டும் கேட்கும் குரலில் சொல்ல...

"கொஞ்ச நாள் பொறுத்துக்க மீரா... இன்னும் நாலு நாள்ல ஃப்ரீ ஆகிடுவேன். அப்புறம் திரும்பி தீபாவளிக்குத்தான்..." என்று சொன்னவன், அப்போது

தான் மீரா நெற்றியில் பொட்டு இல்லாமல் இருப்பதைக் கவனித்தான்.

"எங்க மீரா பொட்டு...?" என்றதற்கு மீரா, "பொம்மைக்கு வச்சிட்டேன்..." என்றாள்.

அர்ஜுன், மீராவைப் பார்த்து முறைத்தவன், பொம்மையில் இருந்த பொட்டை எடுத்து மீராவின் நெற்றியில் வைக்க... அதை அங்கே வேலை செய்யும் பெண்கள் கண்டும், காணாதவர்கள் போல் வேலை செய்து கொண்டு இருந்தனர்.

"அந்தப் பொம்மைக்கு இப்ப பொட்டு இல்லை..." மீரா சிணுங்க... அர்ஜுன், வாணியை அழைத்து அவளிடம் பத்து ரூபாயைக் கொடுத்து "போய்ப் பொட்டு வாங்கிட்டு வா..." என்றான்.

"பெரிய கல் வச்ச பொட்டு வாங்கிட்டு வா, மத்த பொம்மைகளுக்கும் வைக்கலாம்..." என்றவள், அடுத்து "வாணி, வளையல் வாங்கிட்டு வா..." என்றாள்.

"அர்ஜுன், இன்னும் ஒரு நூறு ரூபாய் கொடுங்க... அப்படியே செயினும் வாங்கிட்டு வா... போட்டா அழகா இருக்கும்..." என்று வரிசையாக அடுக்க... அர்ஜுன் மீராவைப் பார்த்து முறைத்தவன், தன் பர்ஸை எடுத்து அவள் கையில் கொடுத்து, "நீ என்னமும் பண்ணு, எனக்கு வேலை இருக்கு..." என்று சென்றுவிட...

மீரா சிரித்துக் கொண்டே அவன் பர்ஸைத் தன் தோல் பையில் வைத்தவள், "நீ இரு வாணி, நான் போய் வாங்கிட்டு வரேன்..." என்று அங்கிருந்து செல்ல...

அவள் சென்றதும், அங்கிருந்த பெண்கள் தங்களுக்குள் ஏதோ பேசிச் சிரித்துக் கொண்டிருந்தனர்.

அரை மணி நேரம் கழித்து வந்த மீரா, அழகான பொட்டுக்கள், வளையல், கம்மல், செயின் என்று நாலைந்து டிசைன்கள் வாங்கி வந்தவள், அதிலிருந்து எடுத்து அந்தப் பொம்மைக்குப் போட... அந்தப் பொம்மை பார்க்க கல்யாணப் பெண் போலவே இருந்தது.

அதைப் பார்த்த சித்ரா, "மீரா அண்ணி... இந்தப் பொம்மையை ஏதாவது பையன் பார்த்தா நிஜமான பொண்ணுன்னு தள்ளிட்டுப் போயிடப் போறான்..." என்று கேலி செய்ய...

"அண்ணியா...? இது எப்ப இருந்து...?" மீரா வாயைப் பிளக்க...

"அது... அர்ஜுன் அண்ணன் உங்களைத் தேடி வந்து பார்த்திட்டுப் போனாரே... அப்ப இருந்து..." என்று ஷீபா கண் சிமிட்ட...

"எங்களுக்கு அர்ஜுன் அண்ணன் பத்தி தெரியாதா...? அவர் இதுக்கு முன் யார்கிட்டேயும் இப்படிப் பழகி நாங்க பார்த்தது இல்லை. இதுக்கு முன்னாடியும் ஆரு அக்கா ப்ரெண்ட்ஸ்... அர்ஜுன் அண்ணாவோட படிக்கிற பொண்ணுங்க எல்லாம் வந்திருக்காங்க. ஆனா... அர்ஜுன் அண்ணன் யார்கிட்டேயும் இப்ப உங்ககிட்ட பேசின மாதிரிப் பேசி நாங்க பார்க்கவில்லை..." மாலா சொல்ல...

மீராவிற்கு என்ன சொல்வது என்று தெரிய வில்லை. அவள் ஆமாம் என்றும் சொல்லவில்லை... இல்லை என்றும் சொல்லவில்லை. அவள் பாட்டிற்கு அந்தப் பொம்மைக்கு நெற்றிச் சுட்டி வைத்துக் கொண்டிருந்தாள். ஆனால், அவள் முகம் சிவந்து, மலர்ந்து இருந்தது. அப்போது அங்கே ஆரு வர... பெண்கள் தங்கள் வேலையைப் பார்க்கச் சென்றனர்.

"சூப்பர்...! நீயா மீரா டிரஸ் பண்ண...?" ஆரு கேட்க... மீரா, ஆமாம் என்றாள். ஆரு, வாணியை அழைத்து, "இதைக் கொண்டு போய்க் கீழே டிஸ்ப்ளே வை..." என்று சொல்ல... வாணி அந்தப் பொம்மையை எடுத்துக் கொண்டு லிப்ட்டில் கீழே சென்றாள்.

"உனக்குப் போர் அடிக்குமேன்னு வந்தேன்." ஆரு சொல்ல...

"இல்லை ஆரு... எனக்கு இந்த வேலை செய்யப் பிடிச்சிருக்கு. நீ போய் அங்கிளுக்கு ஹெல்ப் பண்ணு. நான் இன்னும் ரெண்டு, மூணு பொம்மைக்கு டிரஸ் பண்ணிட்டு வரேன்..." என்ற மீரா, அடுத்து எந்தப் புடவை கட்டுவது என்று தேடிக் கொண்டிருந்தாள்.

அப்போது கீழே சென்ற வாணி மீண்டும் அந்தப் பொம்மையோடு மேலே வர... ஆரு, "ஏன்...?" என்று கேட்க... யாரும் எதுவும் சொல்லிவிட்டார்களோ என்று மீரா கவலையாகப் பார்க்க...

"இந்தப் பொம்மையைப் போய்க் கீழ தான்கா வச்சேன். உடனே ஒரு பொண்ணு வந்து இந்தப் புடவை

மாதிரி இன்னொண்ணு இருக்கான்னு கேட்டுச்சு... அப்ப இன்னொரு பொண்ணு வந்து அதுக்கும் இந்தப் புடவை தான் வேணும்னு கேட்குது... அதுதான் உங்க அப்பா இந்தப் புடவையையே பேக் பண்ணிக் குடுக்கச் சொல்லிட்டாரு.... இதே மாதிரி புடவை இன்னொண்ணு இருக்கு, அது அந்த இன்னொரு பொண்ணுக்கு..." என்ற வாணி, வந்த வேலையைப் பார்க்க...

"மீரா, உன்னாலதான் ரெண்டு புடவை வித்திருக்கு." ஆரு சந்தோஷமாகச் சொல்ல...

"அந்தப் புடவை ரொம்ப நல்லா இருக்கு. அதனால தான்." என்ற மீரா... அடுத்து இளம் மஞ்சளில், ஆரஞ்சு கலர் பார்டர் வைத்து உடல் முழுதும் தங்க வேலைப் பாடுகள் செய்து இருந்த புடவையை எடுத்துப் பொம்மைக்குக் கட்ட ஆரம்பித்தாள்.

இப்படியே வரிசையாக மீரா தேர்வு செய்து பொம்மைக்குக் கட்டிக் கீழே அனுப்பிய மூன்று புடவைகளும் அப்போதே விற்றுவிட... மீராவை அந்தப் பெண்கள் தலையில் வைத்துக் கொண்டாடினார்கள்.

மாலை ஆரு வந்து மீராவை அழைத்துக் கொண்டு முதல் தளத்தில் இருந்த அலுவலக அறைக்குச் செல்ல... அங்கே கணேசனும், அர்ஜுனும் இருந்தனர்.

ஆரு, மீராவை அறிமுகப்படுத்த வாய் திறக்க... அதற்குள் அர்ஜுன் வேகமாக, "அப்பா... இவ மீரா..." என்றான்.

9

மீரா, கணேசனை பார்த்து வணக்கம் என்று கரம் குவித்தாள்.

கணேசன், "வா மீரா... நாம ஒருவருக் கொருவர் நேரடியாக அறிமுகம் ஆகலையே தவிர... உன்னை எனக்கு நல்லாத் தெரியும். ஆரு எப்பவும் உன்னைப் பத்திதான் பேசுவா..." என்றார்.

அவர் சொன்னதைக் கேட்டு மீரா புன்னகைக்க... "அப்பா, ஆருவுக்கு முன்னாடி மீராவை எனக்குத்தான் தெரியும். மீராவும் எங்க காலேஜ்தான் படிக்கிறா. அன்னைக்குக் காலேஜ்ல என்னைப் பார்த்து ஒரு பொண்ணு அவுட்னு கத்தினான்னு சொன்னேன்ல... அவ இவதான்." அர்ஜுன் சொல்ல....

'எப்படிப் போட்டுக் குடுக்கிறான் பாரு...' என்று நினைத்த மீரா, சங்கடமாகக் கணேசனை பார்க்க...

அவர் "ஹா... ஹா... ஹா... நீதான் அந்தப் பொண்ணா, நான் அன்னைக்கே சொன்னேன். நீ பார்க்கணும்னு விதி இருந்தா... கண்டிப்பா அந்தப் பெண்ணைத் திரும்பிப் பார்ப்பேன்னு. அதே மாதிரி ஆகிடுச்சு..." என்றவர், "உட்காரு மீரா..." என்று எதிரில் இருந்த இருக்கையைக் காட்ட, மீரா சென்று அதில் அமர்ந்தாள்.

"என்ன மீரா, பார்க்க ரொம்பக் களைப்பா இருக்க...? எங்கேயாவது வெளியே போயிட்டு வர் றியா...?" கணேசன் கேட்க...

மீரா இல்லை என்று தலை ஆட்ட...

"அவ மதியமே வந்திட்டாப்பா... மேல பொம்மை களுக்குப் புடைவை கட்டினா... இன்னைக்கு மீரா கட்டின புடவைகள் மட்டும் நாலு வித்து இருக்கு." ஆரு பெருமையாகச் சொல்ல...

"நீ ஏன்மா அந்த வேலை எல்லாம் பார்க்கிற...? நீ புடவை மட்டும் செலக்ட் பண்ணிட்டு... அங்க வேலை செய்யற பொண்ணுங்களைக் கட்டச் சொல்லி இருக்கலாமே... பாரு, ரொம்பக் களைப்பா இருக்க..." என்ற கணேசன்... அர்ஜுனிடம், "அவளுக்குக் காபி கொடு!" என்று சொன்னவர், "வேற ஏதாவது சாப்பிடுறியா...?" என்று கேட்க...

மீரா, "வேண்டாம், எனக்கு அந்த வேலை ரொம்பப் பிடிச்சுது..." என்றாள்.

அர்ஜுன், மீராவிடம் காபி கப்பைக் கொடுக்க, மீரா அதை வாங்கிக் குடிக்க ஆரம்பித்தாள்.

"நானே பார்த்தேன்... இன்னைக்குத்தான் இப்படி டிஸ்ப்ளே வச்சிருந்த புடவை எல்லாம் சேல் ஆகி இருக்கு... உன்னோட செலக்ஷன் ரொம்ப நல்லா இருக்கு மீரா..." கணேசன் சொல்ல... அவர் பின்னே நின்றிருந்த அர்ஜுன், அவன் ஷர்ட் காலரைத் தூக்கி விட... அதைப் பார்த்த மீரா மெலிதாகச் சிரித்தாள்.

"சரி, நீங்க பேசுங்க, நான் போகணும்..." என்ற கணேசன், "மீரா, எங்க வீட்டுக்கு ஒரு நாள் மதியம் சாப்பிட வரணும்..." என்று அழைத்துவிட்டுச் சென்றார்.

"எனக்கு'ம் போகணும் மீரா, ஆருவை நீ போகும் போது வீட்ல விட்டுடு..." அர்ஜுன் சொல்ல...

ஆரு, "இல்லை... நான் இருக்கேன். நைட் உங்க கூட வரேன்..." என்றாள்.

சரி என்று மீரா மட்டும் கிளம்பினாள். அர்ஜுன், அவளை வழி அனுப்பச் சென்றவன், வெளியில் வந்ததும் அங்கிருந்த ஜூஸ் கடைக்கு அழைத்துச் சென்று, ஜூஸ் வாங்கிக் கொடுத்தான்.

"இன்னைக்கு உனக்கு ரொம்ப வேலை... ரொம்பக் களைப்பா இருக்க. போனதும் குளிச்சிட்டு, மறக்காம சாப்பிட்டுட்டுத் தூங்கு."

"நான் தூங்க மாட்டேன்... நீங்க நைட் போன் பண்ணுவீங்கல்ல...?"

"நான் போன் பண்ண மாட்டேன், ஒழுங்கா போய்த் தூங்கு. உன் கண்ணைப் பார்த்தாலே தெரியுது, நீ எவ்வளவு களைப்பா இருக்கேன்னு..." அர்ஜுன் சொல்ல... மீரா முகம் வாடினாள்.

அதைப் பார்த்த அர்ஜுன், "நாளைக்கு மதியம் இங்க வா... உனக்கு ஒரு வேலை இருக்கு..." என்றான்.

அதைக் கேட்டு மீரா முகம் மலர, "விட்டா நீ எங்க கடையில வேலைக்குச் சேர்ந்திடுவ போலிருக்கு..." என்று அர்ஜுன் கிண்டல் செய்ய...

மீரா, "கண்டிப்பா நான் படிச்சு முடிஞ்சதும், இங்க தான் வேலைக்குச் சேரப் போறேன்..." என்றாள்.

"நீ எதுக்கு வேலைக்குச் சேரணும் மீரா... இது உன்னோட கடைதானே...?" அர்ஜுன் சொல்ல...

மீரா வேகமாக ஆமாம் என்றாள்.

அர்ஜுன் அவளைப் பார்த்துச் சிரித்தவன், "சரி கிளம்பு, நாளைக்கு மதியம் பார்க்கலாம்..." என்றவன், ஆருவுக்கும் ஜூஸ் வாங்கிவிட்டு பர்ஸைத் தேட... "உங்க பர்ஸ் என்கிட்டே இருக்கு..." என்ற மீரா... அவன் பர்ஸை எடுத்துக் கொடுத்தாள்.

"ஏதாவது பணம் மிச்சம் இருக்கா... இல்லைன்னா எல்லாத்தையும் காலி பண்ணிட்டியா...?"

"இருக்கு... இருக்கு... ஆயிரம் ரூபாய்தான் எடுத்தேன்..." என்ற மீரா, சந்தோஷமாக அர்ஜுனிடம் விடை பெற்றுச் செல்ல...

அர்ஜுன், 'ரெண்டு நாளே பார்க்காம இருக்க முடியலைன்னு சொல்றா... இதுல நான் ஆஸ்திரேலியா போனா என்ன ஆவா?' என்று யோசித்துக் கொண்டே சென்றான். 'சரி, அவளால மட்டும்தான் உன்னைப் பார்க்காம இருக்க முடியாதா...? உன்னால அவளைப் பார்க்காம இருக்க முடியுமா...?' என்று கேட்ட மனச்சாட்சியிடம், 'என்னாலேயும் அவளைப் பார்க்காம இருக்க முடியாது!' என்பதை ஒத்துக்கொண்டான்.

மறுநாள் மதியம் வந்த மீராவிடம், புடவைகளின் மாடல்கள் இருந்த ஒரு பெரிய புத்தகத்தைக் கொடுத்த அர்ஜுன், "இதில் இருந்து எந்தப் புடவைகள் நல்லா

இருக்குன்னு செலக்ட் பண்ணிக் கொடு, ஆர்டர் போட ணும்..." என்றான்.

மீராவும் அலுவலக அறையில் அமர்ந்து ஆர்வமாக அந்த வேலையைச் செய்தாள். அப்போது வித்யா, ஆருவுடன்... கணேசனுக்கும், அர்ஜுனுக்கும் அங்கேயே மதிய உணவு கொண்டு வந்தார்.

வித்யா, மீராவிடம், "நீ இங்க என்ன பண்ற?" என்று கேட்க...

ஆரு, "நேத்துல இருந்து மீரா நம்ம கடையில வேலைக்குச் சேர்ந்திருக்கா..." என்று சொல்ல...

வித்யா புரியாமல் பார்க்க... "இல்லைம்மா... நேத்து மீரா, ஆருவோட இங்க வந்தாள், அப்ப சில புடவைகள் அவ செலக்ட் பண்ணி மாடல் பொம்மைக்குக் கட்டி டிஸ்ப்ளே வச்சது எல்லாம் அப்பவே வித்துடுச்சு. அது தான் இன்னைக்குத் தீபாவளிக்கு ஆர்டர் போட புடவை செலக்ட் பண்ணித் தரச் சொன்னேன். அதுதான் வந்திருக்கா..." என்றவன், "எனக்குப் பசிக்குது... சீக்கிரம் சாப்பாடு போடுங்க..." என்றான்.

வித்யா, அர்ஜுனுக்குச் சாப்பாடு எடுத்து வைத்தவர், "மீரா, நிறையச் சாப்பாடு கொண்டு வந்திருக்கேன், நீயும் சாப்பிடு..." என்றதற்கு,

"இல்லை ஆன்ட்டி, வீட்ல இருந்து சாப்பிட்டுட்டு தான் கிளம்பினேன்..." என்றவள், அவள் வேலையில்

கவனம் செலுத்த... வித்யா, கணேசனைச் சாப்பிட அழைக்கச் சென்றார். அவரோடு ஆருவும் சென்றுவிட... அர்ஜுனும் மீராவும் மட்டும் இருந்தனர்.

"மீரா..." அர்ஜுன் அழைக்க, திரும்பிப் பார்த்தவளிடம்,

"நிஜமா சாப்பிட்டியா...?" என்றான்.

அர்ஜுனைப் பார்த்துச் சிரித்த மீரா, "ப்ராமிஸ் அர்ஜுன், சாப்பிட்டுத்தான் கிளம்பினேன். எனக்கு இப்ப தான் நீங்க இருக்கீங்கல்ல... நான் மத்தவங்களைப் பற்றிக் கவலைப்படறது இல்லை. நான் பாட்டுக்கு என் வேலையைப் பார்க்கிறேன். அவங்க ஏதாவது பேசினாலும் கண்டுக்கிறது இல்லை. நல்லா வயிறு புல்லா சாப்பிட்டுத்தான் வந்தேன். நீங்க ஒழுங்கா சாப்பிடுங்க..." என்றவள், தொடர்ந்து, "அர்ஜுன், இப்ப தசரா பெஸ்டிவெல் வருது இல்ல... அதுக்கு ஒரு தீம் மாதிரி செஞ்சு வெளியே ஷோ கேஸ்ல டிஸ்ப்ளே வைப்போமா...?" என்றாள் ஆர்வமாக.

"தீம்னா... என்ன...? தெளிவாச் சொல்லு.."

"தசரான்னா கொலுதானே... நாமும் கொலு படிக்கட்டு வச்சு, சுத்தி பொம்மைகளுக்கு டிரஸ் பண்ணி வச்சா பார்க்க அழகா இருக்கும்... அது வாடிக்கை யாளர்கள் கவனத்தையும் கவரும்..." மீரா சொல்ல...

அப்போது கணேசனோடு வித்யாவும், ஆருவும் உள்ளே வந்தனர்.

வித்யா, கணேசனுக்குச் சாப்பாடு பரிமாற... அர்ஜுன், மீரா சொன்னதைக் கணேசனிடம் சொல்ல.... அவரும், "நல்ல ஐடியாதான். ஆனா... இப்ப கடையில இருக்கிற கூட்டத்திற்கு வேலை ஆளுங்க எல்லாம் பிஸியா இருக்காங்க. யாரை வச்சு பண்றது...?" என்று கேட்க...

"நான், ஆரு அப்புறம் ஆன்ட்டி மூணு பேரும் சேர்ந்து செய்றோம்." மீரா வேகமாகச் சொன்னவள், சொன்னதும்தான், தான் அதிகப்படியாகப் பேசி விட்டோமோ என்று நினைத்தவள், வித்யாவைப் பார்க்க...

அவர், "செய்யலாம் மீரா... நீ சொன்னதும்தான் எனக்கே இதெல்லாம் முன்னாடியே செஞ்சிருக்கலாம்னு தோணுது. ஆம்பிளைங்களுக்கு இதெல்லாம் தெரியாது. நாமதான் இதெல்லாம் செய்யணும்..." என்றவர்,

"என்ன செயலாம்னு சொல்லு..." என்று கேட்க... மீராவும் ஆர்வமுடன் விளக்க ஆரம்பித்தாள்.

கணேசன், வாணியையும், ஷீபாவையும் அவர்களுக்கு உதவச் சொன்னார். மீரா பயந்து கொண்டிருந்தாள். எங்கே வித்யா முன்பு வாணியும், ஷீபாவும் தன்னை அண்ணி என்று அழைத்து விடுவார்களோ என்று...! ஆனால், அவர்கள் மீரா அக்கா என்றுதான் அழைத்தனர். அதன் பிறகுதான் மீராவிற்கு நிம்மதியான மூச்சு வந்தது.

வித்யா தங்கள் வீட்டிற்குச் சென்று சில பொம்மைகள் எடுத்து வந்தார். மீரா, மூன்று படிக்

கட்டுகளில் வாணியைப் பொம்மைகளை அடுக்கச் சொன்னாள். மேலிருந்த குடோனில் ஒரு மாடல் பொம்மைக்கு மடிசார் புடவை கட்டியவர்கள், மற்றொரு பொம்மைக்கு டிசைனர் புடவையைக் கட்டினார்கள். ஒரு ஆண் பொம்மைக்கு வேஷ்டி சட்டையும், மற்றொரு பொம்மைக்குக் குர்தா பைஜாமாவும், சின்னக் குழந்தைகள் பொம்மைக்குப் பட்டுப் பாவடை, சட்டையும் போட்டு விட்டனர். அதோடு இன்னும் ஒரு ஆண் பொம்மைக்குப் பேன்ட் ஷர்ட்டும், பெண் பொம்மைக்கு அழகான அனார்கலி சுடிதாரும் போட்டு விட்டனர். எல்லாப் பொம்மைகளுக்கும் ஆபரணங்கள் போட்டவுடன், பார்க்க நிஜமான மனிதர்கள் போலத்தான் இருந்தது.

ஏற்கெனவே கீழே ஷோகேஸை, மீரா சென்று வாங்கி வந்த லேஸ் துணியால் அலங்கரித்து வைத்திருந்தனர். அதில் கொலு படிக்கட்டுகள் ஒரு புறமும் அதைச் சுற்றி விதவிதமான உடைகளில் மாடல் பொம்மைகள் நிற்பது போல் செய்தவுடன், பார்க்க நிஜமாக வீட்டில் நடக்கும் விழா போல்தான் இருந்தது.

மீரா அதுவரை மேலே குடோனில் இருந்துதான் வேலை பார்த்தாள். எல்லாம் அவள் சொன்னபடி செய்திருக்கிறார்களா என்று கீழே வந்து பார்த்தவள், அசந்துவிட்டாள். சிறிது நேரம் அங்கேயே நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது அங்கே வித்யாவும், ஆருவும் அவளோடு வந்து நின்று பார்த்தனர்.

"ரொம்ப நல்லா இருக்கு மீரா..." வித்யா மனம் திறந்து பாராட்ட...

"சூப்பர் மீரா... நம்ம கடைதான் மத்த கடையைவிட ஜொலிக்குது..." ஆரு சந்தோஷ ஆரவாரம் செய்ய... மீரா எல்லாவற்றையும் அமைதியான புன்னகையுடன் பார்த்திருந்தாள்.

எல்லாம் சரியாக இருப்பதை உறுதி செய்தவுடன், உள்ளே அலுவலக அறைக்குச் சென்றனர். அப்போது அர்ஜுன் அங்கே வந்தவன், மூன்று பெண்களும் களைப்பாக இருப்பதைப் பார்த்து... ஒரு ஆளை அனுப்பி ஜூஸ் மற்றும் சாப்பிட சமோசா வாங்கி வரச் சொல்லி அனுப்பினான்.

"இன்னைக்கு எவ்வளவு செலவு பண்ணின...?"

"ரெண்டாயிரம்..." அர்ஜுன் அவன் பர்சில் இருந்து பணத்தை எடுத்துக் கொடுக்க... மீராவும் மறுக்காமல் வாங்கிக் கொண்டாள்.

ஆதி மாலை எழு மணி போல் கார்மென்ட்ஸில் இருந்து தங்கள் கடைக்கு வந்தவன், கடையின் ஷோ கேஸ் அலங்காரத்தைப் பார்த்து அசந்து விட்டான். அவனும் அலுவலக அறைக்குள் வர, அங்கிருந்த எல்லோரையும் பார்த்து, "இன்னைக்கு உங்களுக்கு எல்லாம் என்ன ஆச்சு? கடை ஜொலிக்குது... அம்மா வேற இங்கே இருக்காங்க... என்ன விஷயம்?" என்று கேட்க...

எல்லோரும் சேர்ந்து மீரா சொன்ன யோசனையையும் அதன்படி எல்லோரும் சேர்ந்து வேலை செய்ததையும் சொல்ல.... ஆதி மனதார மீராவைப்

பாராட்டினான். "இனி ஒவ்வொரு பண்டிகைக்கும் இப்படி அலங்காரம் பண்ணிடலாம்..." என்றான். அப்போது கணேசனும் அங்கே வர... எல்லோரும் சேர்ந்து சமோசாவும், ஜூஸும் சாப்பிட்டனர்.

சாப்பிடும் போது, "நீ ரொம்ப நேரம் இங்க இருக்கியே, உங்க அம்மாட்ட சொல்லிட்டுத்தானே வந்த மீரா... அவங்க உன்னைத் தேட மாட்டாங்களே...?" வித்யா கேட்க...

சட்டென்று முகம் மாறிய மீராவின் பார்வை, அர்ஜுனிடம் சென்றது. "அதெல்லாம் சொல்லிட்டுத்தான் வந்திருப்பா..." என்றான் அர்ஜுன்.

அப்போது கணேசன், "உங்க அப்பா பேரு என்ன மீரா? என்ன செய்றார்?" என்று கேட்க...

மீரா, "ராம்நாத்..." என்றதும்,

"ஷைன் பைனான்ஸ் கம்பெனி வச்சிருக்காரே... அந்த ராம்நாத்தா...?" என்றார் சந்தேகமாக.

மீரா, "ஆமாம்..." என்று சொல்ல...

"அவ்வளவு பெரிய இடத்துப் பொண்ணா இருந்திட்டு எங்க கடையில வேலை பார்க்கிறியே... உங்க அப்பாவுக்குத் தெரிஞ்சா எங்களைத்தான மீரா தப்பா நினைப்பார்..." கணேசன் சொல்ல... மீரா அமைதியாக இருந்தாள்.

'ஆமாம்... பொண்ணு மேல ரொம்ப அக்கறை இருக்கிறவர்தான்...' என்று நினைத்து அர்ஜுன் பல்லைக் கடித்தான்.

"நான் உங்க அப்பா அம்மாவை நிறையத் தடவை பிசினஸ் விருந்துல பார்த்திருக்கேன். உங்க அப்பா ஏ.ராம்பப் பிஸியா இருப்பார். அதனால அவரோட பேசினது இல்லை. ஆனா உங்க அம்மாவோட பேசி இருக்கேன். அவங்களுக்கு ஒரு பையன்தானே இருக்கான்னு சொன்னதா ஞாபகம்... ஒரு வேளை நான் சரியா கேட்கலையோ...?" கணேசன் சொல்ல...

அவர் சொன்னதைக் கேட்டு முகம் வெளுத்த மீரா, "நீங்க சரியாத்தான் கேட்டு இருக்கீங்க. அவங்க சொன்னபடி அவங்களுக்கு ஒரு பையன்தான். அவங்க என்னோட அம்மா இல்லை... எங்க அப்பாவோட ரெண்டாவது மனைவி...." என்றாள்.

அதைக் கேட்ட அர்ஜுனைத் தவிர மற்றவர்கள் அதிர்ந்தனர்.

"அப்ப உங்க அம்மா இல்லையா மீரா...?" வித்யா பரிதாபத்துடன் கேட்க...

"இருக்காங்க, அவங்களும் வேற கல்யாணம் பண்ணி வெளிநாட்டில செட்டில் ஆகிட்டாங்க..." மீரா அவள் உணர்வுகளை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சொல்ல... அதைக் கேட்டு அங்கிருந்தவர்களுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

எல்லோரும் மௌனமாக இருக்க... மீரா, "சரி, நான் கிளம்பறேன்..." என்றவள், யாரையும் நிமிர்ந்து பார்க்காமல் தன்னுடைய ஹாண்ட் பேக்கை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

அர்ஜுன், மீரா செல்வதைத் தடுக்க முடியாமல்... அவள் போவதையே வேதனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

மீரா அங்கிருந்து சென்ற சிறிது நேரம் வரை யாரும் எதுவும் பேசவில்லை. வித்யா, ஆருவைப் பார்த்து, "இனி மீராவிடம் இருந்து விலகி இரு... நமக்கு இந்த மாதிரி குடும்பத்துடன் எல்லாம் ஒத்துவராது..." என்று சொல்ல... அர்ஜுனுக்குச் சுள்ளென்று கோபம் வந்தது.

"அம்மா.... மீராவோட அம்மா, அப்பா வேற கல்யாணம் பண்ணிக்கிட்டாங்கன்னா அது அவங்க விருப்பம். அவங்க வாழ்க்கை... அவங்களுக்குள்ள ஒத்துவரலை, அதனால பிரிஞ்சிருப்பாங்க. ஆனா... அதுக்கு மீரா என்ன செய்வா...? அவளோட குணம் சரி இல்லை... நீ அவளோட சேராதேன்னு சொன்னா நியாயம். அவங்க அம்மா, அப்பா பண்ண தப்புக்கு அவ என்ன பண்ணுவா...? நீங்க இப்படிப் பேசுவீங்கன்னு நான் நினைக்கவே இல்லைம்மா..." என்ற அர்ஜுன், அங்கிருந்து கோபமாக வெளியே செல்ல...

வித்யா, 'அர்ஜுனா தன்னிடம் இப்படிக் கோபமாகப் பேசியது...?' என்று அதிர்ச்சியில் இருந்தார். "இவன் எதுக்கு இப்படிக் கோபப்படுறான்...?" என அவர் கேட்க...

"வித்யா, நீ பேசினது தப்பு தான். மீராவோட அம்மா, அப்பா எப்படி இருந்தா நமக்கு என்ன? அவங்களோட செயல் மீராவைக் கண்டிப்பா பாதிச்சிருக்கும். மீராவோட சித்தி என்கிட்டே மீராவைப்

பத்தி சொல்லவே இல்லை. இதுலேயே அவங்களுக்கு அவ மேல வெறுப்பு இருக்குன்னு தெரியுது. அப்ப அவங்க அவளை எந்த லட்சணத்தில கவனிப்பாங்கன்னு யோசிச்சுப் பாரு..." என்றார் கணேசன்.

அப்போது ஆரு, "ஆமாம்பா... மீரா வீட்லேயே இருக்க மாட்டா... ஏதாவது கிளாஸ் போயிட்டே இருப்பா.... சனி, ஞாயிறு கூட வீட்ல இருக்க மாட்டா. காலையில ஷட்டில், மதியம் குக்கிங் கிளாஸ், சாயங்காலம் பரதம் அப்படின்னு எதுக்காவது போயிடுவா... இப்பதான் தெரியுது எதுக்குன்னு. ஆனா... மீரா இது வரை அவ வீட்டைப் பத்திப் பேசினதும் இல்லை... தன்னோட கஷ்டத்தை வெளிய காண்பிச்சதும் இல்லை..." என்றாள்.

"பார்த்தியா வித்யா, அவ வீட்ல அவளுக்குப் பிரச்சினை இருக்கிறதுனாலதான அங்க இருக்காம வெளிய அதிகமா இருக்கா. அப்பவும் பாரு... வசதியான வீட்டுப் பொண்ணு, அவ நினைச்சா அவளுக்கு வேற விதமா பொழுது போக்கத் தெரியாதா...? அப்படி இருந்தும் அவ தன்னோட நேரத்தையும், பணத்தையும் நல்ல வழியிலதானே செலவழிக்கிறா...

"அவ குடும்பத்தில கிடைக்காத பாசம் நம்மகிட்ட கிடைக்குதுன்னு தானே இங்க வரா... அவளாத்தானே எல்லா வேலையும் இழுத்துப் போட்டுச் செஞ்சா... அதுக்கு என்ன அர்த்தம்...? அவங்க வீட்ல கிடைக்காத உரிமையும், சுதந்திரமும் நம்ம கிட்ட கிடைக்குதுன்னு தானே அர்த்தம்...? நாமும் அவளை ஒதுக்கி வைக்க

லாமா...? நீயே சொல்லு..." என்ற கணேசன், யோசிச்சு முடிவு எடுக்கட்டும் என்று எழுந்து வெளியே செல்ல... வித்யா யோசிக்க ஆரம்பித்தார்.

"வாங்கம்மா... உங்களையும், ஆருவையும் வீட்ல விடுறேன்..." ஆதி அழைக்க... அவனோடு வீட்டுக்குக் கிளம்பினார்.

அன்று இரவு அனைவரும் சேர்ந்து உணவு அருந்தும் போது... "நான் மீராவைப் பற்றிச் சொன்னது தவறுதான். பாவம் மீரா... அவ தாராளமா நம்ம வீட்டுக்கு வரட்டும், போகட்டும்." வித்யா சொல்ல... அப்போதும் அர்ஜுன் அமைதியாக இருக்க...

"டேய்... என்னடா இப்பவும் உம்முன்னு இருக்கே..." என்றார் வித்யா.

"அம்மா, நீங்க அவ மேல பரிதாபத்தைக் காமிச்சாலும் மீரா நம்மகிட்ட இருந்து விலகிடுவா..." அர்ஜுன் சொல்ல... மற்றவர்கள் யோசிக்க... வித்யா புரியாமல் பார்த்தார்.

"அம்மா... மீரா இதுவரை ஆருகிட்ட கூட அவ அப்பா, அம்மாவைப் பத்தி பேசியது இல்லை. அப்படி இருகிறவ தன்னைப் பார்த்து யாரும் பரிதாபப்படுவதைக் கண்டிப்பா விரும்பமாட்டா. அதனால அவகிட்ட எப்பவும் போல இருங்க. அவங்க அப்பா, அம்மாவைப் பத்தியோ... இல்லை அவளுக்கு ஆறுதல் சொல்றேன்னு அவ கடந்த காலத்தைப் பற்றியோ பேசாதீங்க." அர்ஜுன்

சொல்ல... அவன் சொல்வதை எல்லோரும் புரிந்து கொண்டனர். அதன் பிறகு எல்லோரும் கலகலப்பாகப் பேசிக்கொண்டே சாப்பிட்டனர்.

வித்யா, "ஆதிக்குத் திருச்சியில் இருந்து ஒரு வரன் வந்திருக்கு..." என்றவர், "அவங்களுக்கு ரெண்டு பொண்ணுதான். முதல் பொண்ணுக்குத்தான் இப்ப வரன் பார்க்கிறது. பேரு ரஞ்சனா... பி.இ. முடிச்சிட்டு வீட்லதான் இருக்கா. அவங்க அப்பாவும் நம்மை மாதிரி பிசினஸ் தான் பண்றார். நம்ம குடும்பம் மாதிரிதான் அவங்க குடும்பமும். நீங்க என்ன சொல்றீங்க...?" என்று கணேசனிடம் கேட்க...

கணேசன், "சரி, நானும் விசாரிக்கிறேன், அப்புறம் நேர்ல போய்ப் பார்க்கலாம்..." என்றார்.

சரி... தீபாவளி முடிந்து பெண் பார்க்கச் செல்வது என்று உறுதியானதும், வித்யா சென்று ரஞ்சனா போட்டோவை எடுத்து வந்து கணேசனிடம் கொடுத்தார். அவருக்குப் பார்த்ததும் பிடித்தது. அவர் ஆதியிடம் கொடுக்க... அவனிடமிருந்து போட்டோவைப் பிடுங்க அர்ஜுனும், ஆருவும் போட்டி போட்டனர்.

ஆதி, அவனே போட்டோவை ஆருவிடம் கொடுத்தான். ஆருவோடு சேர்ந்து நின்று அர்ஜுனும் பார்க்க... ஆரு, "பிக் பிரதர்... சூப்பர் போங்க... கலக்குங்க, எனக்கு வர்ற அண்ணிங்க எல்லாம் ரொம்ப அழகாவே இருக்காங்க..." என்று வாய்விட... ஆதியும், அர்ஜுனும் அதிர்ந்து போய்த் தங்கள் பெற்றோரைப்

பார்க்க... நல்ல வேளை அப்போது வித்யா அங்கில்லை... கணேசன் மட்டும்தான் இருந்தார்.

அவருக்கு ஆரு சொன்னது சரியாகப் புரிய வில்லை. அதனால் எதுவும் கேட்கவில்லை. அர்ஜுன், 'நல்லவேளை...' என்று பெருமூச்சு விட்டவன், ஆருவைப் பார்த்து முறைக்க... அவள், "சாரி... ப்ளீஸ்..." என்று கண்களால் கெஞ்ச...

அர்ஜுன், "சரி, போட்டோவை ஆதிகிட்ட கொடு, அவனும் பார்க்கட்டும்..." என்றான்.

ஆதி போட்டோவைப் பார்க்க... அப்போது அங்கே வந்த வித்யா, "பிடிச்சிருக்கா ஆதி...?" என்று கேட்க... ஆதி, "பிடிச்சிருக்கு..." என்று சொல்ல... அர்ஜுனும், ஆருவும் "ஓ... ஓ..." என்று கத்தினார்கள்.

வித்யா, "சரி, நேர்ல போய்ப் பார்க்கலாம்..." என்றவர், ஆதியிடம் இருந்து போட்டோவை வாங்க, அவன் முகம் வாடியது.

அதைக் கவனித்த வித்யா, "கல்யாணம் உறுதி ஆகட்டும் ஆதி, உன்கிட்ட கொடுக்கிறேன்..." என்று சொல்ல.... ஆதி, சரி என்று தலை ஆட்டினான்.

அர்ஜுன் அன்று இரவு தன் அறைக்கு வந்ததும், மீராவை செல்லில் அழைத்தான். அவனுக்குத் தெரியும், அவள் ரொம்பக் கவலையாக இருப்பாள் என்று. அதனால் மீரா போனை எடுத்ததும் அதைப் பற்றிப் பேசாமல், "மீரா... இன்னைக்கு ஒரு வேலை கொடுத் தேனே... அதை முடிச்சிட்டியா...?" என்று கேட்க...

அவள், "இல்லை, பாதிதான் முடிச்சேன்..." என்றாள்.

"சரி, நாளைக்குக் காலையில பதினொரு மணிக்கே கடைக்கு வந்திடு, நாளைக்குக் கண்டிப்பா முடிச்சிடணும்..." என்றான்.

மீராவிற்கு அவன் அம்மா, அப்பா தன்னைப் பற்றி ஏதாவது சொன்னார்களா என்று கேட்க ஒரு மாதிரி இருந்தது. 'சரி, நாளைக்கு நேரில் சென்று பார்ப்போம். அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்பது தெரிந்தால்... இனி அவர்கள் கடைக்கோ, வீட்டிற்கோ செல்லக்கூடாது...' என்று முடிவு எடுத்தவள், அர்ஜுனிடம், "சாப்பிட்டீங்களா...?" என்றாள்.

"சாப்பிட்டேன், நீ சாப்பிட்டியா...?" அர்ஜுன் கேட்க... மீரா, "ம்ம்..." என்றாள்.

அர்ஜுனுக்கு அவள் மனதில் இருப்பது தெரியும் என்பதால்... அவன் வேறு பேச்சுப் பேச ஆரம்பித்தான்.

"மீரா, ஆதிக்குக் கல்யாணம் முடிவு ஆகப் போகுது."

"அப்படியா...? யாரு பொண்ணு...?" மீரா ஆர்வமாகக் கேட்க... அர்ஜுனும் அவன் அம்மா சொன்ன எல்லாவற்றையும் சொல்ல....

"போட்டோ பார்த்தீங்களா... எப்படி இருக்காங்க?" என்றாள்.

"போட்டோ பார்த்தோம், நல்லா இருக்காங்க..." என்றவன், இன்று ஆரு உளறியதையும் சொல்ல...

"ஆருவுக்கு நம்ம விஷயம் தெரியுமா...?" மீரா கேட்க...

"ஆருவுக்கு மட்டும் இல்லை, ஆதிக்கும் தெரியும்..." என்றான் அர்ஜுன்.

"எப்ப இருந்து அவங்களுக்குத் தெரியும்...?"

"உனக்குச் சொல்றதுக்கு முன்னாடியே அவங்ககிட்ட சொல்லிட்டேன்."

'அடிப்பாவி ஆரு... தெரிஞ்சிக்கிட்டேதான் தெரியாத மாதிரி இருந்தியா...?' என்று நினைத்த மீரா, "அர்ஜுன், உங்க அண்ணாகிட்ட என்னோட வாழ்த்துக்கள் சொல்லிடுங்க..." என்று சொல்ல...

"ஏன், உனக்கு வாய் இல்லையா...? நீயே நேர்ல பார்க்கும்போது சொல்லு..." என்றான்.

மீராவும் சரி என்றாள்.

அர்ஜுனுக்கு, மீராவைச் சீண்டும் எண்ணம் தோன்ற...

"மீரா... அடுத்த வாரம் எனக்குப் பிறந்தநாள் வருதே... அதுக்கு எனக்கு என்ன கிப்ட் தருவ...?"

'என்ன கிப்ட் தரலாம்...?' என்று மீரா யோசித்தவள், "டிரஸ் வாங்கித் தரட்டுமா...?" என்றாள்.

"ட்ரெஸ்ஸா... துணி கடை வச்சிருக்க எனக்கே நீ டிரஸ் எடுத்துத் தரியா... எங்க கடையில இல்லை பாரு..." அர்ஜுன் சலிக்க...

மீரா, "அப்ப வாட்ச்...?" என்றதும்...

"நான் வாட்ச்சே கட்ட மாட்டேன். என்ன மீரா... எல்லாம் சின்னச் சின்னதா சொல்ற... கோடீஸ்வர அப்பாவை வச்சிக்கிட்டு இப்படிக் கஞ்சத்தனமா இருக்க..." அர்ஜுன் சீண்ட...

மீரா, "செல்போன் வாங்கித் தரட்டுமா...?" என்றாள்.

"நீ தேறமாட்ட... அதனால நானே கேட்கிறேன், நீ அதைக் கொடு..." அர்ஜுன் ஒரு மாதிரி குரலில் சொல்ல...

அதைப் புரிந்து கொள்ளாத மீரா, 'ஐயோ...! அர்ஜுனுக்கு என்ன கிப்ட் கொடுக்கிறதுன்னு கூடத் தெரியலையே...!' என்று தன்னையே நொந்தவள்... 'சரி, அவன் கேட்பதையே கொடுத்துவிடுவோம்...' என்று, அவன் வீசிய வலையில் விழுந்தாள்.

"சரி அர்ஜுன்... நீங்க கேட்கிறதையே கொடுக்கி றேன்..." என்றாள்.

"வாக்கு மாற மாட்டியே... நான் கேட்கிறது கொடுக்கணும்..." அர்ஜுன் அழுத்திச் சொல்ல... மீராவிற்குச் சந்தேகம் வந்தது.

'அப்படி என்ன கேட்கப் போறான்?' என்று யோசித்தாள்.

அவள் ரொம்ப யோசித்தால் தனக்கு ஆபத்து என்று உணர்ந்த அர்ஜுன், "மீரா, நாளைக்கு மறக்காம கடைக்கு

வந்திடு..." என்று சொல்லிப் போனை வைக்க... மீராவும் சந்தோஷமாகப் போனை வைத்தாள்.

மீரா மறுநாள் கடைக்கு வந்து... முதல் நாள் அர்ஜுன் அவளுக்குக் கொடுத்த வேலையை அவர்கள் அலுவலக அறையில் அமர்ந்து செய்து கொண்டி ருந்தாள். மதியம் சாப்பாடு கொண்டு வந்த வித்யா, மீராவிடம் எப்போதும் போல் நன்றாகப் பேச... மீராவிற்கு நிம்மதியாக இருந்தது. அதே போல் கணேசனும் மீராவிடம் நன்றாகப் பேசினார். வித்யா, அவளையும் அங்கேயே சாப்பிடச் சொல்ல... மீராவும் மறுக்காமல் சாப்பிட்டாள். வித்யா மதியம் சிறிது நேரம் இருந்தவர் வீட்டுக்குக் கிளம்ப... மீரா அவள் வேலையைத் தொடர்ந்தாள்.

மாலையில் மீரா வேலையை முடித்ததும் அர்ஜுனுக்குப் போனில் அழைத்துச் சொல்ல... அவன் அவள் இருக்கும் இடம் வந்தான். வந்து மீராவுடன் பேசிகொண்டிருந்த போது... ஆதியும், ஆருவும் அங்கே வந்தனர். எல்லோரும் சேர்ந்து அமர்ந்து பேசும்போது தான் மீராவிற்கு ஆதிக்குப் பெண் பார்த்திருப்பது நினைவில் வர... அவள் ஆதியை எப்படி அழைப்பது என்று தெரியாமல், "ஆதி, அண்ணா..." என்று குழப்ப...

"அம்மா தாயே! நீ அவனை அண்ணான்னு கூப்பிட்டா... எங்க அம்மா என்னையும் அண்ணான்னு உன்னைக் கூப்பிடச் சொல்வாங்க, நீ இப்ப அவனை அத்தான்னும் கூப்பிட முடியாது, அதனால நீ ஆதின்னே சொல்லு..." என்றான் அர்ஜுன்.

மீரா, சரி என்று தலை ஆட்டியவள், எதற்கு வம்பு என்று ஆதியைப் பார்த்து வெறுமனே "கங்க்ராட்ஸ்..." என்றாள்.

மீராவின் முகத்தைப் பார்த்ததும்... வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு ஆதி பதிலுக்கு, "தேங்க்ஸ்..." என்றான்.

10

மீரா, அர்ஜுனின் குடும்பத்தில் இயல்பாகப் பொருந்தினாள். ஆருவிற்கு நல்ல தோழியாக, வித்யாவின் கண்களுக்கு நல்ல பெண்ணாக, கணேசனுக்கும், ஆதிக்கும் திறமை வாய்ந்தவளாக. அர்ஜுனுக்கு உயிராக என்று அவர்கள் எல்லோரோடும் நல்ல உறவை ஏற்படுத்திக் கொண்டாள்.

அடுத்த வார்த்தில் கல்லூரியும் திறந்து விட... எல்லோரும் அவரவர் வேலையில் கவனம் செலுத்தினர். இப்படியே நாட்கள் செல்ல... அர்ஜுனின் பிறந்த நாளும் வந்தது. மீரா, அர்ஜுனிடம் கடந்த ஒரு வாரமாக "உங்களுக்கு என்ன கிப்ட் வேண்டும்...?" என்று கேட்டு அலுத்து விட்டாள்.

அர்ஜுன் இன்னும் என்ன வேண்டும் என்று சொல்லவில்லை. மீரா கேட்கும்போது எல்லாம், 'பிறந்த நாள் அன்று சொல்கிறேன்...' என்று மழுப்பி விட்டான்.

மீராவும் எத்தனையோ முறை, "அர்ஜுன்... பிறந்தநாள் அன்னைக்குச் சொன்னா, நான் போய் வாங்க லேட் ஆகிடும். நீங்க இப்பவே சொல்லுங்க, நான் முன்னாடியே வாங்கி வச்சிடுறேன்..." என்று கேட்டுப் பார்த்தாள்.

ஆனால் அதற்கு அர்ஜுன், "அதை அப்புறம் பார்த்துக்கலாம். அது உடனே உன்னால கொடுக்க முடியும்... கவலைப்படாதே..." என்று சொல்லி அவள் வாயை அடைத்து வி .. மீராவிற்கும் காத்திருப்பதைத் தவிர வேறு வழி இல்லாமல் போய்விட்டது.

பிறந்த நாளுக்கு முன் தினம் அர்ஜுனை வரச் சொல்லி மீரா போன் செய்திருந்தாள். அர்ஜுன், தங்கள் கடையில் தீபாவளி விற்பனை நடப்பதால் அதில் பிஸியாக இருந்தவன், மீரா பார்க்க வேண்டும் என்றதும் தன் அப்பாவிடம் சிறிது நேரத்தில் வருவதாகச் சொல்லி விட்டு மீராவைப் பார்க்க அவர்கள் கடையின் அருகே இருக்கும் காபி ஷாப் வந்திருந்தான்.

அங்கே மீரா, "அட்வான்ஸ் பர்த்டே விஷஸ்..." என்று சொல்லி, அவன் கையில் ஒரு கிப்ட் பாக்ஸ் கொடுக்க....

"ஏய்... நான்தான் நானே கேட்கிறேன்னு சொன்னேன் இல்லை, அப்புறம் எதுக்கு இது...?"

"ஆமாம்... இப்படியேதான் ஒரு வாரமா சொல்றீங்க. ஆனா கேட்குற வழியைக் காணோம். எனக்கு உங்க பர்த்டேக்குக் கிப்ட் கொடுக்கணும்னு ஆசை இருக்கும்

இல்ல... அதனால எனக்குத் தெரிஞ்சதை நான் வாங்கினேன். நீங்க கேட்கிறதும் தரேன்."

அர்ஜுன், "ஓ...! டபுள் கிப்ட்டா...? ஓ.கே..." என்று முகம் மலர்ந்தவன், "என்ன கிப்ட் வேணும்னு நாளைக்குச் சொல்றேன்..." என்றான்.

"அர்ஜுன், நாளைக்கு சண்டே இல்ல... எங்கேயாவது வெளியே போகலாமா?" மீரா ஆசையாகக் கேட்க...

"சாரி மீரா.... எப்பவும் பர்த்டே அன்னைக்குக் காலையில எல்லோரும் சேர்ந்து கோவிலுக்குப் போயிட்டு, மதியம் ஹோட்டல்ல சாப்பிட்டுட்டு அப்புறம் அப்படியே எங்கேயாவது வெளிய போயிட்டுச் சாயங்காலம்தான் வருவோம். இது எங்க வீட்ல எல்லார் பிறந்த நாளைக்கும் நாங்க ஃபாலோ பண்றது. இப்ப திடீர்னு மாத்த முடியாது இல்ல... ஆனா நாளைக்கு நாம கண்டிப்பா மீட் பண்ணலாம். எங்கன்னு உனக்கு நான் போன் பண்றேன்..." என்றான் அர்ஜுன்.

அர்ஜுன் சொன்னதைக் கேட்டு மீராவிற்கு ஏமாற்றமாக இருந்தது. ஆனால், அதை அவனிடம் காண்பித்துக் கொள்ளாமல், "சரி அர்ஜுன்... நீங்க போன் பண்ணுங்க..." என்றவள், கிளம்பிச் செல்ல...

அர்ஜுனுக்கு, 'நேரம் ஆகிறது... கடைக்குச் செல்ல வேண்டும்...' என்ற எண்ணமே மனதில் இருந்ததால்... அவன் மீராவை சரியாகக் கவனிக்காமல் கிளம்பிச் சென்றான்.

அர்ஜுன் கடைக்குச் சென்றதும், தங்கள் அலுவலக அறையில் அவனுக்கென்று இருக்கும் கப்போர்ட்டில், மீரா கொடுத்த கிப்ட் பாக்ஸை வைத்து விட்டுத் தன் வேலையைப் பார்க்கச் சென்றவன், இரவில் வீட்டிற்குச் செல்லும் போது அந்தக் கிப்ட்டை எடுத்துக் கொள்ள மறந்துவிட்டுச் சென்றான். மீரா, அர்ஜுனே கிப்ட் பாக்ஸைப் பிரித்துப் பார்த்துவிட்டுப் போன் செய்வான் என்று காத்திருக்க... அர்ஜுனிடம் இருந்து போனே வரவில்லை.

இங்கே அர்ஜுனின் வீட்டில் ஒரே கொண்டாட்டமாக இருந்தது. அன்று இரவு ஒரு பெரிய விருந்தே வித்யா தயார் செய்திருக்க... எல்லோரும் அரட்டை அடித்துக் கொண்டே உணவை அருந்தியவர்கள், வெளியே தோட்டத்தில் அமர்ந்து ஆதியின் திருமணத்தை எப்படிச் செய்வது, அதில் என்னவெல்லாம் செய்யவேண்டும் என்று பேச... நேரம் போனதே தெரியவில்லை.

சரியாகப் பன்னிரண்டு மணி ஆனதும், ஆரு ஒரு பெரிய கேக்கைக் கொண்டு வந்து டேபிளில் வைக்க... அர்ஜுன் அதை வெட்டி எல்லோருக்கும் ஊட்டி விட்டான். அர்ஜுனுக்கு அப்போது மீராவின் ஞாபகம் வந்தது. கேக் வெட்டி முடித்ததும் கணேசனும், வித்யாவும் படுக்கச் சென்றுவிட, அர்ஜுன்... ஆதி, ஆருவோடு ஒரு மணி வரை அரட்டை அடித்துவிட்டுப் படுக்கச் சென்றான்.

தன் அறைக்கு வந்த அர்ஜுன், தன் செல்லைத் தேடி எடுத்துப் பார்க்க... அதில் மீராவிடம் இருந்து மூன்று முறை அழைப்புகள் வந்திருந்தது. சரியாகப் பன்னிரண்டு

மணிக்கு அழைத்திருந்தாள். அர்ஜுன் தலையிலேயே அடித்துக் கொண்டான். 'இப்படியா செல்லை மறந்து ரூம்லேயே வைப்பேன்?' என்று நொந்தவன், அப்போது தான் மீராவிடம் இருந்து மெசேஜ் வந்திருப்பதைக் கவனித்தான்.

அதைத் திறந்து பார்க்க... மீரா, அவனுக்குப் பிறந்தநாள் வாழ்த்து அனுப்பி இருந்தாள். 'போன் எடுக்கலைன்னு மெசேஜ் அனுப்பி இருக்கா... ரொம்ப ஃபீல் பண்ணி இருப்பா... இப்ப போன் பண்ணு வோமா...?' என்று யோசித்தவன், 'வேண்டாம்... ரொம்ப நேரம் ஆகிடுச்சு, தூங்கி இருப்பா. காலையில பேசலாம்!' என்று நினைத்து அவனும் படுத்தான்.

மறுநாள் அர்ஜுன் எழுந்திருக்கும் போதே மணி எட்டு. வேகமாக எழுந்து குளித்து விட்டு வந்தவன்... வித்யா, பிறந்த நாளுக்கு என்று அவனுக்காக வாங்கி வைத்திருக்கும் புது உடையை எடுத்து அணிந்து கொண்டு கீழே வந்தான். கீழே வந்தவனுக்கு எல்லோரும் மீண்டும் வாழ்த்துச் சொல்லிப் பரிசைக் கொடுக்க... அப்போதுதான் மீரா கொடுத்த கிப்ட்டை கடையிலேயே வைத்து விட்டது நினைவுக்கு வந்தது.

'ச்சே...!' என்று தன்னையே நொந்தவன், 'மீரா நேத்து போன் பண்ணும் போதும் எடுக்கலை, அவ கொடுத்த கிப்ட்டையும் எடுத்திட்டு வரலை. மீராவுக்குத் தெரிஞ்சா திட்டப்போறா...' என்று நினைத்தவன், வேகமாக டிபன் சாப்பிட்டு விட்டு மாடிக்குத் தனது அறைக்குச் சென்று மீராவை அழைத்தான்.

இரண்டு முறை அழைத்தும் மீரா எடுக்கவில்லை என்றதும், ஒருவேளை கோபமா இருக்காளோ என்று நினைத்தவன், மீண்டும் அழைக்க... அப்போதும் மீரா எடுக்கவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் அர்ஜுன் குழம்பிக் கொண்டிருந்தபோது... மீராவே போன் செய்தாள்.

மீரா அழைப்பதைப் பார்த்ததும்தான் அர்ஜுனுக்கு நிம்மதி ஆனது. சந்தோஷமாகப் போனை எடுத்து ஹலோ என்றான். மீரா, அர்ஜுன் குரல் கேட்டதும், "மெனி மோர் ஹேப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் த டே அர்ஜுன்..." என்று வாழ்த்த,

"தேங்க்ஸ் மீரா... சாரி நேத்து செல்லை மேலே வச்சிட்டுப் போயிட்டேன். அதுதான் நீ போன் பண்ணும் போது எடுக்கலை..." அர்ஜுன் சொல்ல...

மீரா, "பரவாயில்லை அர்ஜுன்... விடுங்க..." என்றாள்.

"எங்க மீரா இருந்த? போனை எடுக்க ஏன் இவ்வளவு நேரம்?..."

"கோவில்ல இருக்கேன் அர்ஜுன். அதுதான் செல்லை சைலென்ட்ல போட்டிருந்தேன்..." என்றதும், 'தனக்காகத்தான் கோவிலுக்குச் சென்றிருக்கிறாள். ஆனால் தான் அவள் போன் செய்த போது கூட எடுக்கவில்லை...' என்பதை நினைக்கும் போது அர்ஜுனுக் குத் தன் மீதே கோபம் வந்தது.

"நாங்க இப்ப வெளிய கிளம்பறோம் மீரா... நான் சீக்கிரம் வர ட்ரை பண்றேன். தப்பா எடுத்துக்காதடா... இன்னைக்கு உன் கூட ஃபுல்லா இருக்க முடியலை..." அர்ஜுன் உண்மையிலேயே வருந்திச் சொல்ல...

"இதுல என்ன இருக்கு அர்ஜுன், நான் தப்பா நினைக்க....? நீங்க உங்க குடும்பத்துக்கும் முக்கியத்துவம் தரணும் இல்லையா...? நான் எங்க போகப் போறேன்... நீங்க போயிட்டு வாங்க, நான் வெயிட் பண்றேன்..." என்று போனை வைத்தாள்.

அர்ஜுன் கீழே இறங்கி வர... அங்கே எல்லோரும் கோவிலுக்குச் செல்லத் தயாராகி நின்றனர்.

அர்ஜுன் மெதுவாக வித்யாவிடம், "அம்மா, கோவிலுக்குப் போயிட்டு அப்படியே ஹோட்டல்ல சாப்பிட்டிட்டு மட்டும் வந்திடலாமே... சினிமாவுக்கு இன்னொரு நாள் போகலாம். இப்ப தீபாவளி டைம், கடைல கூட்டம் இருக்கும் இல்ல..."

மதியமாவது மீராவுடன் இருக்கலாம் என்று நினைத்துச் சொல்ல... யோசித்த வித்யா, "சரி, அப்பாவும், ஆதியும் கோவிலுக்கும் அப்படியே ஹோட்டலுக்கும் வந்து சாப்பிட்டிட்டு கடைக்குப் போகட்டும். நீ, நான், ஆரு மூணு பேரு மட்டும் சினிமாவுக்குப் போகலாம்..." என்றார்.

அர்ஜுனுக்கு வேறு வழி இல்லாததால், அவர் சொன்னதுக்குச் சரி என்று தலை ஆட்டினான்.

அர்ஜுனின் நினைவு மீராவைச் சுற்றியே இருந்தது. அவனுக்குப் படம் பார்க்க விருப்பமே இல்லை. வேண்டா

வெறுப்பாக அமர்ந்திருந்தான். படம் முடிய 5.30 ஆகி விட்டது. அர்ஜுன் அவனது அம்மாவையும், ஆருவையும் வெளியே செல்லச் சொல்லிவிட்டுக் காரை எடுக்கச் சென்றவன், வேகமாக மீராவிற்கு அழைத்து, "மீரா... உங்க வீட்டுப் பக்கத்தில இருக்கிற பார்க்குக்கு 6.30 மணிக்கு வந்து கார்லயே வெயிட் பண்ணு, நானும் வந்திடுறேன்..." என்று சொல்லிப் போனை வைத்தான்.

வீட்டில் வந்து வித்யாவையும், ஆருவையும் இறக்கி விட்டவன், வேகமாக முகம் கழுவி, தலை வாரி வெளியே கிளம்ப, "அதுக்குள்ள எங்கடா கிளம்பிட்ட...?" வித்யா கேட்க...

"எனக்கும் ப்ரெண்ட்ஸ் இருக்காங்க... நான் அவங்களையும் பார்க்கணும்..." என்ற அர்ஜுன், வேகமாகக் கிளம்பிச் சென்றான்.

அர்ஜுன் பார்க்கிற்கு வந்து தன் பைக்கை நிறுத்தி விட்டு மீராவின் காரில் சென்று ஏறியதும, அர்ஜுனை ஆர்வமாகப் பார்த்த மீராவின் முகம் வாடியது. ஆனால், அதைக் கவனிக்காமல் அர்ஜுன் "காரை எடு மீரா..." என்றான்.

மீராவும் காரைக் கிளப்பினாள். "பெசன்ட் நகர் பீச் போ..." என்றவன், சீட்டில் சாய்ந்து அமர்ந்து நன்றாக மூச்சை இழுத்து விட்டவன், "ஹப்பா... இன்னைக்கு உன்னைப் பார்க்க முடியாமப் போயிடுமோன்னு பயந்திட்டேன்..." என்று சொல்லிப் புன்னகைக்க... மீராவும் பதிலுக்குப் புன்னகைத்தாள்.

பெசன்ட் நகர் பீச் சென்று மீரா கார் பார்க்கிங்கில் காரை நிறுத்தியதும், அர்ஜுன், "இங்கயே உட்கார்ந்து பேசலாம் மீரா..." என்று தன் சீட்டை நன்றாகப் பின்னுக்குத் தள்ளி, சாய்ந்து அமர்ந்தவன், மீராவையும் அப்படியே செய்யச் சொல்ல... அவளும் அவன் சொன்னபடியே செய்தாள்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்கும்படி பக்கவாட்டில் திரும்பி அமர்ந்து சீட்டில் வசதியாகச் சாய்ந்து கொண்டனர். அர்ஜுன், அப்போதுதான் மீராவை நன்றாகப் பார்த்தான். கருப்பு கலர் ஜீன்ஸும் அடர் நீல நிறத்தில் ஷார்ட் டாப்பும் அணிந்து, ஷாம்பூ போட்டு அலசி இருந்த கூந்தலில் ஒரு கிளிப் மட்டும் போட்டு, முடியை விரித்து விட்டு, காதில் பெரிய வளையம் போட்டு, முகத்தில் லேசாக ஒப்பனை செய்து இருந்தாள்.

அர்ஜுன், மீரவையே பார்த்துக் கொண்டிருக்க... மீரா என்ன என்று புருவத்தை உயர்த்த, "அழகா இருக்கடி..." அர்ஜுன் கண்ணடிக்க... மீரா செல்லமாக அவனை முறைத்தாள்.

அர்ஜுன், தான் வாங்கி வந்திருந்த கேக்கை எடுத்து மீராவிற்கு ஊட்டி விட்டான். மீராவும் அர்ஜுனுக்குக் கொடுக்க... இருவரும் சேர்ந்து கேக் சாப்பிட்டனர். பின் அர்ஜுன் மீராவின் வலது கையை எடுத்துத் தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டவன், அதில் அவள் அணிந்து இருந்த கைக் கடிகாரத்தைப் பார்த்து, "புதுசா...? நல்லா இருக்கு..." என்று சொல்ல... மீரா பதிலுக்குப் புன்னகைத்தாள்.

"என்ன மீரா... இன்னைக்கு ரொம்ப அமைதியா இருக்க..." என்ற அர்ஜுன் நேற்று இரவில் இருந்து தன் வீட்டில் நடந்த கதையைச் சொல்ல... மீரா கேட்டுக் கொண்டிருந்தாள்.

"சாரி மீரா... நீ கொடுத்த கிப்ட்டை நேத்து கடையிலேயே வச்சிட்டேன். இப்ப வரும் போது கடைக்குள்ள போய் எடுக்கப் போனா, வெளிய வரமுடியாது. அதனாலதான் எடுக்கலை, நைட் போகும் போது எடுத்திட்டுப் போறேன்." என்றான்.

"சரி, கிளம்பலாமா...? வீட்டுக்கு போகணும்..." மீரா சொல்ல,

அர்ஜுன், "அதுக்குள்ளேயா...?" என்றவன், நேரம் பார்க்க, மணி 7.30.

"என்ன கிப்ட் வேணும்னு கேட்டியே... இப்ப ஒண்ணும் அதைப் பற்றிக் கேட்கலை..." அர்ஜுன் கண்களில் காதலோடு மீராவைப் பார்க்க...

"ஆமா... கொடுத்த கிப்ட்டையே பார்க்கல... முதல்ல அதைப் போய்ப் பாருங்க. அப்புறம் வேற கிப்ட் வாங்கலாம்..." மீரா சொல்ல...

அர்ஜுன் அதிர்ந்தவன், "ஏன் மீரா என் தலையில இப்படிக் குண்டைத் தூக்கிப் போடுற? நான் எவ்வளவு ஆசையா இருந்தேன் தெரியுமா...?" என்றான்.

"சரி, சொல்லுங்க... என்ன வேண்டும்?" அர்ஜுன், மீராவின் கையில் இதழ் ஒற்ற... மீரா, அர்ஜுனைப் பார்த்தவள், "சீக்கிரம் சொல்லுங்க..." என்றாள்.

"உனக்குப் புரியலையா மீரா...?" என்ற அர்ஜுன், மீராவின் முகத்தின் அருகே தன் முகத்தைக் கொண்டு வந்தான். மீராவிற்கு உண்மையிலேயே புரியவில்லை. அவள், 'எதுக்கு இப்படிக் கிட்ட வரான்...?' என்று நினைக்கும் போதே, அர்ஜுனின் பார்வை அவள் இதழ்களில் பதிய... மீராவிற்குப் புரிய ஆரம்பித்தது.

அவள் அர்ஜுனைப் பார்த்து முறைக்க, "ஒண்ணே ஒண்ணு மீரா... ப்ளீஸ்..." அர்ஜுன் கெஞ்ச... மீரா அவனைத் தள்ளி விட்டவள், தன் சீட்டைச் சரி செய்து கொண்டு காரைக் கிளப்பினாள்.

"ராட்சஸி... ஒரே ஒரு முத்தம் தந்தா என்னவாம், போடி... உனக்கு நான் நம்ம பர்ஸ்ட் நைட்ல கூட முத்தம் தர மாட்டேன்." அர்ஜுன் புலம்ப... மீராவிற்குச் சிரிப்பு வந்தது.

அர்ஜுன், மீராவைப் பார்க்காமல் வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டு வர... மீரா, அர்ஜுனின் வண்டி நின்ற இடத்தில் சென்று காரை நிறுத்தினாள். அர்ஜுன் காரில் இருந்து இறங்க முயல... மீரா அர்ஜுனின் கையைப் பிடித்துத் தடுத்தவள், தன் பர்ஸில் இருந்து ஒரு மோதிரத்தை எடுத்து அவன் இடது கை மோதிர விரலில் மாட்டி விட்டாள்.

அர்ஜுன் தன் கையைத் தூக்கிப் பார்த்தான். அது ஒரு சின்ன வளையம்தான். ஆனால், அதைச் சுற்றி சிறு சிறு இதய வடிவத்தில் டிசைன் செய்யப்பட்டிருந்தது. அர்ஜுனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

"ரொம்ப அழகா இருக்கு மீரா."

மீரா, அர்ஜுனைப் பார்த்துப் புன்னகைத்தவள், அவன் சட்டையைப் பிடித்து அருகே இழுத்து, அவன் கன்னத்தில் அழுந்த இதழ் பதிக்க... அர்ஜுனும் பதிலுக்கு மீராவின் கன்னத்தில் இதழ் பதித்தான்.

"கோபமா...?" மீரா கேட்க...

'இல்லை' என்று தலை ஆட்டியவன், "உனக்கு ஒரு தடவை லிப்ஸ்ல முத்தம் கொடுத்தா... அப்புறம் நிறுத்த முடியுமான்னு எனக்கே தெரியலை. எனக்கு ஒண்ணு எல்லாம் பத்தாது, நிறைய வேண்டும்..." என்று தன் கை இரண்டையும் விரித்துச் சொன்னவன், "அதனால நான் கல்யாணத்துக்கு அப்புறமே வாங்கிக்கிறேன்..." என்றான்.

மீரா, அவன் சொன்னதைக் கேட்டுச் சத்தமாகச் சிரித்தாள்.

"இப்பதான் நீ நார்மலா இருக்க... இவ்வளவு நேரம் அமைதியா இருந்த..." அர்ஜுன் காரின் கதவைத் திறந்து கொண்டு வெளியே இறங்கியவன், "நீ கிளம்பு மீரா, நாம நாளைக்குக் காலேஜ்ல பார்க்கலாம்..." என்றான்.

மீராவும் "Bye அர்ஜுன்..." என்று தன் காரைக் கிளப்பிக் கொண்டு சென்றாள்.

அர்ஜுன் தங்கள் கடைக்கு வந்து... நேராக அலுவல் அறைக்குச் சென்று... மீரா கொடுத்த கிப்ட்டை எடுத்துக் கொண்டு அமர்ந்தவன், அதைத் திறத்து பார்க்க... உள்ளே முதலில் ஒரு பெரிய சாக்லெட்

இருந்தது. அடுத்து ஒரு அழகான வாழ்த்து அட்டையும், அதற்கும் அடுத்து அடர் நீல வர்ணத்தில் ஒரு ஷர்ட்டும், ஒரு கைக் கடிகாரமும் இருந்தது.

அர்ஜுன் அந்த வாட்ச்சை எடுத்துக் கையில் வைத்துப் பார்க்கும் போதுதான், மீராவும் இன்று அதே போல் வாட்ச் அணிந்து இருந்தது நினைவுக்கு வந்தது. அதோடு மீரா இன்று அணிந்து இருந்ததும் அடர் நீல வண்ண உடைதான்.

அர்ஜுன், தன் தலையை அழுந்தக் கோதியவன், 'இன்று இருவரும் ஒரே நிறத்தில் உடை அணிய வேண்டும் என்று ஆசையாக வாங்கி இருக்கிறாள். நேத்தே பார்த்திருந்தா ஒழுங்கா இன்னைக்கு அவளைப் பார்க்கும் போது போட்டுட்டுப் போய் இருக்கலாம். ரெண்டு பேருக்கும் ஒரே மாதிரி வாட்ச் வேற... எவ்வளவு ஆசையா எதிர் பார்த்திருப்பா...? அதுதான் அமைதியா இருந்திருக்கா... வாயைத் திறந்து ஏதாவது கேட்டிருந் தாலோ... இல்லை, சண்டை போட்டிருந்தாக் கூடப் பரவாயில்லை. அமைதியா இருந்திட்டாளே...' என்று நினைத்த அர்ஜுன், எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றான்.

இரவு உணவை வேகமாகக் கொறித்தவன், "நான் போய்த் தூங்கப் போறேன்... அலுப்பா இருக்கு..." என்று சொல்லிவிட்டு அறைக்கு வந்து வேகமாக மீராவை செல்லில் அழைத்தான்.

"சாரி மீரா... ரொம்ப சாரி. இப்பதான் உன்னோட கிப்ட் பார்த்தேன். ரெண்டு பேருக்கும் ஒரே மாதிரி வாங்கி

இருக்க... நான் போட்டிட்டு வருவேன்னு ரொம்ப எதிர் பார்த்திருப்ப இல்ல... உன்னை ஏமாத்திட்டேன்தானே... ஏன் மீரா சொல்லலை?"

"எதிர்பார்த்து, ஏமாறுறது ஒண்ணும் எனக்குப் புதுசு இல்லை... பழகின விஷயம்தான். அதனால என்னால சமாளிக்க முடியும்."

அவள் சொன்னதைக் கேட்ட அர்ஜுனுக்கு மனது வலிக்க.... தன் கண்களை இறுக மூடித் திறந்தவன், 'நானே என் மீராவை இன்றைக்கு ஏமாத்திட்டேனே...' என்று மிகுந்த வருத்தப்பட்டான்.

மீரா சொன்னதைக் கேட்டு மிகவும் வருந்திய அர்ஜுன், "என்னையும் உங்க அம்மா, அப்பா லிஸ்ட்ல சேர்த்திட்டியா...?" என்றான்.

அர்ஜுன் சொன்னதைக் கேட்டு மீரா புரியாமல், "என்ன சொல்றீங்க அர்ஜுன்...?" என்றதும்,

"மீரா நீ உங்க அம்மா, அப்பாகிட்ட உன்னோட விருப்பு வெறுப்பு சொல்ல முடியாம போன மாதிரியே என்கிட்டேயும் இருக்கலாம்னு முடிவு பண்ணிட்டியா. என்கிட்டே சொல்லறதுக்கு என்ன மீரா...? நம்ம ரெண்டு பேருக்கும் ஒரே கலர்ல டிரஸ் வாங்கி இருக்க... அதை நான் போட்டுட்டு வராததைப் பார்த்தும் அமைதியா இருக்க...? என்கிட்டே ஃப்ரீயா பேச என்ன மீரா தயக்கம்? என்கிட்டே உரிமையா சண்டை போட்டிருக்கலாம். இல்லைன்னா ஏதாவது சொல்லி இருக்கலாம். அதை விட்டுட்டு ஏதோ பெரிய தியாகி மாதிரி பேசுற...?

"சரி, மோதிரம் போகட்டும், இனிமே என்கிட்டே எல்லாத்தையும் ஷேர் பண்ணிப்பேன்னு சொல்லு... இப்படி மனசுக்குள்ளேயே வச்சு வருத்தப்படக் கூடாது. சரியா...?" அர்ஜுன் கேட்க... மீரா சரி என்றாள்.

மறுநாள் கல்லூரிக்குச் சீக்கிரம் வந்த மீரா... அர்ஜுனை பார்த்ததும் தன் கண்களை ஆச்சரியத்தில் பெரிதாக விரித்தாள். ஏன் என்றால், அர்ஜுன், மீரா வாங்கிக் கொடுத்த உடையை அணிந்து கொண்டு வந்திருந்தான். அர்ஜுன், மீராவை அழைத்துக் கொண்டு யாரும் இல்லாத இடத்திற்குச் சென்று அவனது வலது கையைத் தூக்கி, அதில் அணிந்து இருந்த கடிகாரத்தைக் காட்டியவன், "மோதிரம் எங்கே...?" என்று கேட்க...

மீரா புரியாமல் பார்க்க, "எல்லாமே ஒரே மாதிரி வாங்கி இருக்க... உனக்கு மோதிரம் மட்டும் வாங்காமலா இருப்ப...?" என்றதும், மீரா சிரித்துக் கொண்டே தன் பர்சில் இருந்து அர்ஜுன் மோதிரம் போலவே வாங்கி இருந்த இன்னொரு மோதிரத்தை எடுத்துக் கொடுக்க... அர்ஜுன் அதை வாங்கி மீராவின் இடது கை மோதிர விரலில் போட்டு விட்டான். இருவரின் கைகளையும் அருகருகே வைத்து, இருவர் விரலிலும் ஒரே மாதிரி இருந்த மோதிரத்தைப் பார்த்து ரசித்தனர்.

"மோதிரம் மாத்தியாச்சு... அப்ப இன்னைக்குப் பர்ஸ்ட் நைட்டா...?" அர்ஜுன் குனிந்து மீராவின் காதில் கிசுகிசுப்பாகக் கேட்க... மீரா, அர்ஜுனின் இடுப்பில் நறுக்கென்று கிள்ளினாள்.

"ஹே..." என்று அர்ஜுன் துள்ளியதைப் பார்த்துப் பயந்த மீரா,

"அர்ஜுன், வலிசிடுச்சா...? தெரியாம கிள்ளிட்டேன். சாரி..." என்று சொல்லிக் கொண்டே... அவள் கிள்ளிய இடத்தைத் தடவி விட... அர்ஜுன், 'இவ தெரிஞ்சு செய்றாளா... இல்லை தெரியாம செய்றாளான்னே புரிய மாட்டேங்குது...' என்று நினைத்தவன், தங்களைச் சுற்றிப் பார்க்க... அங்கே யாரும் இல்லை.

"அடிப்பாவி! காலேஜ்ல வச்சு பண்ற வேலையா இது...?" கோபமாகக் கேட்பது போல் அவன் மிரட்ட... மீரா, அவன் நிஜமாவே கோபமாக இருக்கிறான் என்று நினைத்து வேகமாகக் கையை எடுத்தாள்.

பெருமூச்சு விட்ட அர்ஜுன், "தனியா இருக்கும் போது தள்ளி வைக்கிற... காலேஜ்ல வச்சுக் கிள்ளி வைக்கிற... பதிலுக்கு என்னால கிள்ளக் கூட முடியாது. உன்னை என்னடி பண்றது?" அவன் ரைமிங்காகப் புலம்ப... மீரா, அவன் சொன்னதின் அர்த்தம் புரிந்து வெட்கப்பட்டவள், "ச்சே... லூசுதான் நானு..." என்று சொல்லித் தலையில் அடித்தாள்.

"பார்த்து மெதுவா அடி, தலையில இருக்கிற மண்ணெல்லாம் கொட்டிடப் போகுது..." அர்ஜுன் சொல்ல...

மீரா அவனை முறைத்தவள், "ஜோக்கா...? சிரிப்பே வரலை.." என்று வந்த சிரிப்பை வாய்க்குள் அடக்கிக் கொண்டே சொன்னாள்.

"அதுதான் பார்த்தாலே தெரியுதே..." அர்ஜுன் சொல்ல... மீராவால் அதற்கு மேல் அடக்க முடியாமல் வாய்விட்டுச் சிரித்தாள். இருவரும் சந்தோஷமான மன நிலையுடன் வகுப்பிற்குச் சென்றனர்.

அர்ஜுனும், மீராவும் ஒருவருக்கொருவர் கொஞ்சி, கெஞ்சி, சண்டை, சமாதானம் என்று நாட்களைச் சந்தோஷத்துடன் கழித்தனர். அவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த தீபாவளியும் வந்தது.

தீபாவளிக்குக் கடையை மீரா, வித்யா, ஆரு மூன்று பேரும் சேர்ந்து அலங்கரித்தனர். தீபாவளி அன்று மீராவைத் தங்கள் வீட்டில்தான் முழு நேரமும் இருக்க வேண்டும் என்று கணேசனும், வித்யாவும் சொல்லிவிட... மீரா காலையில் எழுந்து குளித்துத் தங்கள் வீட்டுப் பூஜையில் கடனே என்று கலந்து கொண்டு, அர்ஜுன் வீட்டிற்குக் காலை பத்து மணிக்கே வந்து விட்டாள்.

மீரா அரக்குக் கலரில் காக்ரா சோளி உடை அணிந்து, காது, கழுத்தில் வைரக் கற்கள் பதித்த நகைகள் அணிந்து மிகவும் அழகாக வந்திருந்தாள். அர்ஜுனின் பார்வை மீராவின் மீதே இருந்தது. அவன் கஷ்டப்பட்டு வித்யாவிடம் மாட்டிக்கொள்ளக் கூடாதே என்று பார்வையை வேறு பக்கம் திருப்பினான்.

மீரா அவளே செய்த ரசமலாய் கொண்டு வந்திருந்தாள். அது அர்ஜுனுக்கு மிகவும் பிடித்த ஸ்வீட் என்பது கூடுதல் விஷயம். "மீரா... நீ கொண்டு வந்த

ஸ்வீட்ட... நீயே எல்லோருக்கும் கொடு..." வித்யா சொல்லிவிட்டு உள்ளே செல்ல... மீரா கிண்ணத்தில் வைத்துக் கொண்டு வந்து எல்லோருக்கும் கொடுக்க... அர்ஜுன் மட்டும் அவள் வருவதைப் பார்க்காது போல் வேறு பக்கம் செல்ல... மீரா அவன் பின்னே சென்றாள்.

அர்ஜுன் சென்று மாடிப்படி அருகே நிற்க... மீரா சென்று ஸ்வீட்டை அவனிடம் கொடுத்தாள். ஸ்வீட்டை வாங்கிக் கொண்டே, "இதை நான் என் ரூம்ல வச்சிருப் பேன், நீயே வந்து ஊட்டி விட்டாத்தான் சாப்பிடுவேன்." அர்ஜுன் சொல்ல...

"இது உங்க வீடு, மறந்து போச்சா...? என்னால முடியாது, போடா..." மீரா சொல்லிவிட்டுத் திரும்ப...

அர்ஜுன், "வரவர நீ என்னை அடிக்கடி போடான்னு சொல்ற..." என்று பல்லைக் கடித்துக் கொண்டு சொல்ல...

மீரா மறுபடியும், "சரிதான் போடா..." என்றாள்.

அர்ஜுன், 'இருடி, தனியா மாட்டாமலா போவ...? அப்ப இருக்கு உனக்கு...' என்று மனதில் நினைத்துக் கொண்டான்.

மீரா சமையல் அறைக்குச் சென்ற போது, வித்யா தனியாக நின்று சமைத்துக் கொண்டிருந்தார். "நான் உங்களுக்கு ஹெல்ப் பண்ணவா...?" என்று கேட்டு மீரா அவர் அருகே செல்ல...

"எப்பவும் கூடமாட வேலை பார்க்க ஒரு பொண்ணு இருப்பா... இன்னைக்குத் தீபாவளின்னு அவளும்

வரலை. பாவம் அவங்களும் பண்டிகை கொண்டாடணும் இல்லையா...?" வித்யா சொல்ல... மீரா ஆமாம் என்று தலை ஆட்டியவள், அவருக்கு வெங்காயம் நறுக்கிக் கொடுத்தாள்.

"இன்னைக்கு மட்டன் பிரியாணியும், சிக்கன் வறுவலும்..." என்றவர், "கொஞ்சம் சாதமும் பண்ணிட லாம், தயிர் விட்டுச் சாப்பிட..." வித்யா சொல்ல...

"ஆன்ட்டி... நான் தயிர் சாதம் பண்ணட்டுமா...?" மீரா கேட்க... வித்யாவும் சரி என்று சொல்ல... மீரா குக்கரில் சாதம் வைத்து, பிறகு அதை ஆற வைத்துத் தயிர் ஊற்றிக் கிளறி தாளித்து வைத்தவள்... அப்பளம் வடகம் இருக்கா என்று கேட்டு, அதையும் வறுத்து வைத்தாள்.

வித்யா, பிரியாணிக்குத் தயார் செய்து கொண்டே மீராவைப் பார்த்துக் கொண்டிருந்தார். எதுக்கு இவ அப்பளம், வடகம் எல்லாம் பண்றா என்று யோசித்துக் கொண்டே சமையல் செய்தார்.

மீரா அவள் வேலை முடிந்ததும், "ஆன்ட்டி, நான் போய் டி.வி. பார்கிறேன்..." என்று சொல்லிவிட்டுச் செல்ல... வித்யாவிற்கு அவளது செயல் முகத்தில் புன்னகையை வர வைத்தது. 'இப்படி ஒரு அருமையான பெண்ணைப் பெத்திட்டு அவங்க அப்பா, அம்மாவால எப்படிப் பிரிய முடிஞ்சுது...?' என்று யோசித்தார்.

ஹாலில் அமர்ந்து எல்லோரோடும் டி.வி. பார்த்த மீராவை, அர்ஜுன் விழிகளால் பருகிக் கொண்டிருந்தான்.

வித்யா சமையல் முடித்ததும் எல்லோரையும் சாப்பிட அழைக்க... ஆருவும், மீராவும் அவருக்கு எல்லா வற்றையும் டேபிளில் அடுக்க உதவினர்.

வித்யா பரிமாற வர, "அம்மா, நீங்களும் உட்காருங்க... நாமே பரிமாறிப்போம்..." ஆதி சொல்ல... வித்யாவும் சரி என்று அமர்ந்தார்.

எல்லோரும் அவரவரே பரிமாறிக்கொள்ள... மீரா தயிர் சாதமும், அப்பளம், வடகம், ஊறுகாய் வைத்துக் கொண்டு சாப்பிட, அதைப் பார்த்து எல்லோரும் அதிர்ந்தனர்.

கணேசன், "என்ன மீரா? நேரா தயிர் சாதத்துக்குப் போயிட்ட...?" என்று கேட்க...

மீரா, "நாங்க சைவம் அங்கிள்..." என்றாள்.

"தப்பு என் மேலதான். நான் கேட்டு இருக்கணும்... கேட்கலை. நீயாவது சொல்லி இருக்கலாம் இல்ல மீரா..." வித்யா வருத்தப்பட...

"ஏற்கெனவே வேலை செய்றவங்க வரலை... இதுல நீங்க எனக்கு வேற தனிச் சமையல் செய்யணும்னா கஷ்டம்தானே... அதுதான் சொல்லலை. இதுல என்ன ஆன்ட்டி இருக்கு?. உங்களோட சேர்ந்து சாப்பிடுறேன்ல... அதுவே போதும்..." என்றாள்.

"உனக்கு நாங்க அசைவம் சாப்பிடறது கஷ்டமா இருக்கா மீரா...? நீ வேணா ஹால்ல உட்கார்ந்து சாப்பிடுறியா...?" கணேசன் கேட்க...

"அங்கிள், டெய்லி நான் தனியாத்தானே சாப்பிடு றேன். இன்னைக்கு உங்களோட சேர்ந்து சாப்பிடலாம்னு நினைச்சா... தனியா சாப்பிடச் சொல்றீங்களே..." என்றாள் மீரா.

அதைக் கேட்ட எல்லோருக்கும் உருகி விட்டது. "இல்லையில்லை, நீ இங்கயே சாப்பிடு... நான் உனக்கு அடுத்த வாரம் சைவச் சாப்பாடு செஞ்சு விருந்தே வைக்கிறேன்..." என்ற வித்யா, "இரு, முந்திரி பக்கோடா இருக்கு... எடுத்திட்டு வரேன்..." என்று உள்ளே சென்றார்.

அர்ஜுன், மீராவையே பார்த்துக் கொண்டிருக்க... அவன் தட்டில் இருந்து கோழி வறுவலை ஆதி எடுக்க... பிரியாணியை ஆரு எடுத்துக் கொண்டாள். அர்ஜுன் இருவரையும் பார்க்க...

"அதுதான் உன் ஆளு சைவம்னு தெரிஞ்சிடுச்சு இல்ல..." ஆதி சொல்ல...

ஆரு, "காதலிக்காக இது கூடப் பண்ண மாட்டீங்களா பிரதர்...?" என்றவள், தயிர் சாதத்தை எடுத்து அவன் அருகில் வைத்தாள்.

அர்ஜுன் சிரித்துக் கொண்டே தயிர் சாதத்தைப் போட்டுச் சாப்பிட ஆரம்பித்தான். மீரா, 'இவன் ஏன் தயிர் சாதம் சாப்பிடுறான்?' என்று நினைத்துக் கொண்டே அவனுக்கு அப்பளத்தையும் வடகத்தையும் கொடுத்தாள்.

வித்யா, பக்கோடாவைக் கொண்டு வந்து மீராவிற்குக் கொடுத்தவர், அர்ஜுனைப் பார்த்து, "நீ ஏன்டா தயிர் சாதம் சாப்பிடுற?" என்று கேட்க...

அர்ஜுன், 'நான் எங்கம்மா சாப்பிட்டேன்? என்னைச் சாப்பிட வச்சிட்டாங்க...' என்று மனதிற்குள் புலம்ப...

ஆரு, "அவனுக்குப் பிரியாணி போதுமாம்..." என்றாள்.

மதியம் சிறிது நேர ஓய்வுக்குப் பிறகு... மாலை வித்யா, மீராவிற்கு என்று ஸ்பெஷல் டிபன் செய்து இருந்தார். அதை எல்லோரும் சேர்ந்து சாப்பிட்டனர்.

ஆரு, "பட்டாசு வெடிப்போம் வா..." என்று அழைக்க... மீராவும் சரி என்று சென்றாள். ஆதியும், அர்ஜுனும் அவர்களோடு சேர்ந்து கொண்டனர். சிறிது நேரம் அந்தத் தெருவே அதிரும்படி பட்டாசு வெடித்தனர்.

மீரா சந்தோஷமாகக் கொண்டாடும் தீபாவளி இது தான். அவள் பட்டாசு வைத்து விட்டு வீட்டுக்குள் ஓடி வந்து காதை மூடிக்கொண்டு ஒளிந்து கொள்வாள், பின் பட்டாசு வெடித்ததும் சந்தோஷமாகத் துள்ளிக் குத்திப்பாள், அதைப் பார்த்து அர்ஜுனுக்குச் சிரிப்பாக வந்தது. 'எப்படிக் குழந்தை மாதிரி இருக்கா பாரு?' என்று நினைத்துக் கொண்டான்.

இரவு எழு மணி ஆனதும் இளையவர்கள் எல்லோரும் சேர்ந்து பெசன்ட் நகர் பீச்சுக்குச் சென்றனர். அங்கே அமர்ந்து பார்த்தால், விதவிதமான வாண வேடிக்கைகளைப் பார்க்கலாம் என்று அங்கே கிளம்பிச் சென்றனர். ஆள் நடமாட்டம் குறைவான இடமாகப் பார்த்து பீச் மணலில் சென்று அமர்ந்தனர்.

ஆருவும், மீராவும், வாண வேடிக்கை பார்த்துச் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது ஆரு, ஆதியிடம் பஜ்ஜி கேட்க... அவன் வாங்கச் செல்ல... அவனோடு ஆருவும் சேர்ந்து சென்றதால்... அர்ஜுனும், மீராவும் மட்டும் அங்கே இருந்தனர்.

"இது எனக்கு மறக்க முடியாத தீபாவளி மீரா... இன்னைக்குப் புல்லா நீ என்னோட... நம்ம குடும்பத்தோட சேர்ந்து இருந்தது எனக்கு ரொம்பச் சந்தோஷம். சீக்கிரம் நீ நம்ம வீட்டுக்கே நிரந்தரமா வந்திடணும். நீ இன்னும் கொஞ்ச நேரத்தில கிளம்பிடு வேன்னு நினைச்சாலே கஷ்டமா இருக்கு..." அர்ஜுன் உருக்கமாகச் சொல்ல...

"நானும் இதைத்தான் அர்ஜுன் நினைச்சேன். எனக்கும் வீட்டுக்குப் போகவே பிடிக்கலை..." என்றாள் மீரா.

அப்போது கூட்டமாகச் சில பையன்கள் வர... அதில் ஒரு பையன் மட்டும் மீராவைப் பார்த்து முறைத்துக் கொண்டே சென்றான். மீராவும் அவனை முறைத்தபடி இருக்க...

அதைக் கவனித்த அர்ஜுன், "யாரு..." என்று கேட்க...

மீரா, "வருண்..." என்றாள்.

'வருண் யாரு...?' அர்ஜுன் யோசிக்க...

மீரா, "என்னோட தம்பி..." என்றாள்.

11

மீராவின் தம்பி வருண் நல்ல உயரமாக, வெள்ளை நிறத்தில் இருந்தான். வருணின் பார்வை அவர்கள் மேலேயே இருந்தது. வருணுக்கு தன் சகோதரி மேல் உண்மையாக அக்கறை இருந்தால்... அவள் தனியே ஒரு ஆணிடம் அமர்ந்து பேசுவதைக் கண்டிப்பாக விரும்ப மாட்டான். அவன் அவர்களின் அருகே வந்து மீராவிடம் விசாரிப்பான்... அல்லது அப்படி அவனுக்கு மீராவின் மீது அக்கறை இல்லையென்றால்... வீட்டில் சென்று போட்டுக் கொடுப்பான் என்று அர்ஜுன் நினைத்தான்.

அர்ஜுன், வருணைப் பார்க்காதது போல் மீராவிடம் சுவாரசியமாகப் பேச... மீராவும் அவன் தம்பியைப் பார்ப்பதை விட்டு அர்ஜுனிடம் பேச ஆரம்பித்தாள். வருண், தன் நண்பர்களை அனுப்பிவிட்டு அவர்களை நோக்கி வந்தான். அவன் வருவதை ஓரக்கண்ணில் பார்த்த அர்ஜுனின் மனதில் நிம்மதியும், சந்தோஷமும் உண்டானது. அவன் வருவதைப் பார்க்காதது போல் மீராவிடம் பேசிக்கொண்டிருந்தான்.

"நீ இங்க என்ன பண்ற? யாரிது?" வருண் கேட்க... அவனை எதிர்பார்க்காத மீரா, திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தவள், வருண் அங்கே நிற்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள்.

அவளுக்கு, அவன் திடீரென்று வந்து பேசவும் என்ன சொல்வது என்று தெரியவில்லை. அவள்

மௌனமாக நிற்க... நடந்ததைப் பார்த்த அர்ஜுன், தன்னை அவனே வருணிடம் அறிமுகப்படுத்திக் கொண்டான்.

"ஹாய்... நான் அர்ஜுன். மீராவோட ப்ரெண்ட், நீங்க...?" என்றான் அவனைத் தெரியாதது போல்.

"நான் வருண், மீராவோட தம்பி..." அவன் சொன்னதைக் கேட்ட மீராவின் கண்கள் கலங்கிவிட்டன. அவள் வருணைப் பார்த்து முறைத்தாள். அந்தப் பார்வை, 'உனக்கு இது இப்போதுதான் நினைவு வருதா...? நீயும் உங்க அம்மா சொன்னதுனால என்னோட பேசாமத்தான் இருந்த...?' என்று கேட்பது போல் இருக்க... வருண் தலை குனிந்தான்.

"உன்னோட தம்பியா மீரா... உன்னைப் பார்த்தது ரொம்பச் சந்தோஷம் வருண்..." அர்ஜுன் மேலும் பேச்சை வளர்க்க... வருணுக்கு அர்ஜுனின் மேல் நல்ல எண்ணம் தோன்றவில்லை. அவன், அவனைச் சந்தேகமாகத்தான் பார்த்தான். அப்போது ஆதியும், ஆருவும் அங்கே வர, அர்ஜுன், அவர்களை வருணுக்கு அறிமுகம் செய்தான்.

"இது என்னோட அண்ணா ஆதி, இவ என்னோட தங்கை ஆராதனா..." என்றவன், "இவன் மீராவோட தம்பி வருண்..." அவனையும் அவர்களுக்கு அறிமுகம் செய்ய... வருணின் முகம் தெளிந்தது. அதைப் பார்க்காதது போல் பார்த்த அர்ஜுன், 'அவங்க அக்காவைத் தனியா தள்ளிட்டு வந்திட்டேன்னு நினைச் சிருக்கான்...' என்று புரிந்து கொண்டான்.

ஆதியும், ஆருவும், வருணின் படிப்பு பற்றி விசாரித்தனர். எல்லோரும் அங்கேயே அமர்ந்து பேச... "மீராவும் என் தங்கை ஆருவும் ஒரே டான்ஸ் கிளாஸ் தான் போறாங்க... அதனால ப்ரெண்ட்ஸ். மீரா எங்க வீட்டுக்குத்தான் இன்னைக்கு வந்திருந்தா... வான வேடிக்கை பார்க்கலாம்னு பீச்சுக்கு வந்தோம்." அர்ஜுன், வருணிடம் விளக்கிச் சொல்ல... வருணின் முகம் இப்போது மலர்ந்தது.

அதைப் பார்த்த அர்ஜுன், இவனுக்கு மீராவின் மீது பாசம் இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டான்.

எல்லோரும் ஆதி வாங்கி வந்திருந்த பஜ்ஜியை ஆளுக்கு ஒன்று என்று எடுத்துச் சாப்பிட... ஆரு, ஆதியிடம் இன்னொரு பிளேட் பஜ்ஜி கேட்டாள். "இன்னைக்கு அத... இத சாப்பிட்டிருக்கோம். அதுவும் பஜ்ஜி எல்லாம் நிறையச் சாப்பிட்டா... உடம்புக்கு ஒத்துக்காது..." ஆதி அறிவுரை வழங்க...

"ஆமாம், நான் பத்து பஜ்ஜி சாப்பிட்டேன் பாரு... ஒண்ணுதான சாப்பிட்டேன்." ஆரு பாவமாகச் சொல்ல... அவள் சொன்னதைக் கேட்டு அர்ஜுன், "நீ ஒண்ணு சாப்பிட்டா... பத்து சாப்பிட்ட மாதிரி ஆரு..." என்று சொல்ல... அதைக் கேட்டு எல்லோரும் சிரித்தனர்.

ஆரு, அர்ஜுனின் காதில், "உன்னோட மச்சான்கிட்ட உன்னோட லவ் மேட்டர் போட்டுக் கொடுத்திடவா...?" என்று கேட்க,

"அம்மா தாயே, அடங்கு..." என்றவன், சென்று இன்னொரு ப்ளேட் பஜ்ஜி வாங்கி வந்து கொடுத்தான்.

ஆதி, அர்ஜுன், ஆரு மூவரும் வாண வேடிக்கை யைப் பார்த்து, அதைப் பற்றிச் சந்தோஷத்துடன் பேச, மீராவும், வருணும் அமைதியாக அவர்கள் பேசுவதை வேடிக்கைப் பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தனர். அவர்களைப் பார்த்துப் பெருமூச்சு விட்ட அர்ஜுன், "சரி, கிளம்பலாமா...?" என்றவன், "மீரா... நீ உன் தம்பியோட போ, நாங்க ஆட்டோல போறோம்..." என்றான்.

"இல்லை... வேண்டாம். நான் தனியா போயிடு றேன்..." வருண் சொல்ல...

"நீங்க ரெண்டு பேரும் ஒரு வீட்டுக்குத்தான போறீங்க. அப்புறம் எதுக்குத் தனித் தனியா...? வருண், இப்பவே மணி ஒன்பது ஆகப் போகுது... மீரா இந்த நேரத்துக்குத் தனியா போறது நல்லது இல்லை..." அர்ஜுன் எடுத்துச் சொல்ல...

"சரி, நான் மீரா அக்காவோட போறேன்..." என்றான் வருண். அதைக் கேட்டு அர்ஜுன் புன்னகைத்தான்.

"எல்லோரும் சேர்ந்து என்னோட கார்லதான வந்தோம். நான் உங்களை ட்ராப் பண்ணிட்டுப் போறேன்." மீரா சொல்ல...

"வேண்டாம். எங்களை விட நீ அடையார் வந்திட்டு... திரும்பி பெசன்ட் நகர் வரணும். அதுக்கு நாங்க ஆட்டோல போயிடுவோம். நீ வருணோடு கிளம்பு." அர்ஜுனின் உறுதியான குரலில், அதற்கு மேல் மறுக்கமுடியாமல் மீரா, வருணைப் பார்க்க... அவன்

எல்லோரிடமும் சொல்லிக்கொண்டு மீராவின் கார் அருகே சென்று நின்றான்.

மீரா... ஆதியிடமும், ஆருவிடமும் சொல்லிக் கொண்டு கிளம்ப... அர்ஜுன், மீராவோடு நடந்து கொண்டே "போ மீரா... அவன் உன் தம்பி தானே... நான் உனக்கு நைட் போன் பண்றேன்... சரியா...?" என்றதும், மீரா சரி என்று தலை ஆட்டினாள்.

அவர்கள் எப்படிப் போவார்கள் என்று நினைத்து மீரா காரின் அருகே சென்று தயங்க... அர்ஜுன், மீராவைக் கண்டுகொள்ளாமல் ஒரு ஆட்டோ பிடித்து அதில் ஆதி, ஆருவோடு ஏறிச் சென்றுவிட்டான். மீரா அவர்கள் ஆட்டோ கண்ணை விட்டு மறைந்ததும்தான் காரில் ஏறினாள்.

காரில் ஒரு தர்ம சங்கடமான நிலைதான் இருந்தது. மீரா, வருண் இருவரும்... ஏதோ முன் பின் தெரியாதவர்களுடன் பயணம் செய்தால் எப்படி உணர்வோமோ அப்படித்தான் உணர்ந்தனர். வீட்டிற்குள் அவர்கள் இருவரும் சேர்ந்து வருவதைப் பார்த்து, மீனாட்சிக்கு எரிச்சல் வந்தது. 'இது ரெண்டும் சேரக் கூடாதுன்னு ஒண்ண ஹாஸ்டலுக்கு அனுப்பினா, இன்னைக்கு எப்படி ரெண்டும் சேர்ந்துச்சுங்க...?' என்று குழப்பத்துடன் வருணைப் பார்க்க... அவன் நிமிர்ந்து அவன் அம்மாவைப் பார்க்கவேயில்லை.

மீரா மாடி ஏற... "சாப்பிட்டுப் போயேன்..." வருண் சொல்ல, மீரா, மீனாட்சி இருவரும் அவனை ஆச்சரியமாகப் பார்த்தனர். அதைக் கண்டு கொள்ளாமல்,

வருண் சென்று கை கழுவி விட்டு சாப்பிட அமர... மீராவும் கை கழுவி விட்டு அவன் எதிரில் சாப்பிட அமர்ந்தாள்.

சாப்பிடும்போது இருவரும் ஒருவரோடு ஒருவர் பேசவில்லை. ஆனால் மீரா, வருண் சாப்பிடும் போது... அவனுக்குத் தேவையானதை அவன் அருகே தள்ளி வைத்தாள். அதே போல் வருணும் அவனுக்குப் பரிமாறிக்கொண்டு மீராவிற்கு வசதியாகப் பாத்திரத்தை அவள் அருகில் நகர்த்த என்று... இருவரும் ஒன்றாக உணவு அருந்தினர்.

மீரா அன்றுதான் அவள் வீட்டில் வயிறும், மனமும் நிறையச் சாப்பிட்டாள். மீரா சாப்பிட்டதும் வருணிடம் குட் நைட் சொல்லிவிட்டு மாடிக்குச் செல்ல... வருணும் பதிலுக்குக் குட் நைட் என்றான்.

மீரா மேலே சென்றதும் வருணிடம் வந்த அவன் அம்மா, "என்னடா இது புதுப் பழக்கம்? ரெண்டு பேரும் ஒண்ணா வர்றீங்க... ஒண்ணா சாப்பிடுறீங்க... என்ன விஷயம்?" என்று கேட்க...

"அவ என்னோட அக்கா... நான் அவளோட தம்பி... அது தான் விஷயம். உங்களுக்கு இது தெரியாதா...?" என்ற வருண், முதல் தளத்தில் இருக்கும் அவன் அறைக்குச் செல்ல... மீனாட்சி திகைத்து நின்றுவிட்டார்.

அர்ஜுன் வீட்டில் வழக்கம் போல் எல்லோரும் வெளியே தோட்டத்தில் உட்கார்ந்து பேச... வித்யா, "அலுப்பாக இருக்கிறது..." என்று படுக்கச் சென்றுவிட்டார்.

எல்லோரும் பேசிக் கொண்டிருக்கும்போது கணேசன், "ஆதிக்குப் பொண்ணு பார்க்க அடுத்த வாரம் போகலாம்..." என்றவர், "வரன் பார்க்கிறது பெரிய வேலை... இனி அடுத்து ஆருவுக்கும்... அதுக்கு அடுத்து அர்ஜுனுக்கும் பார்க்கணும்." அவர் மலைப்பாகச் சொல்ல...

"எனக்கு வேண்டாம், நீங்க ஆருவுக்கு மட்டும் பாருங்க..." என்றான் அர்ஜுன்.

"ஏன்டா? உனக்கு நீயே பார்த்துப்பியா...?" கணேசன் சிரித்துக்கொண்டே கேட்க...

ஆதி "அப்பா... அவன் சேர்ந்து தீபாவளியே கொண்டாடிட்டான். அவன்கிட்ட போய்ப் பொண்ணு நீயே பார்த்துப்பியான்னு கேட்கறீங்க, அதெல்லாம் பார்த் தாச்சு.... பார்த்தாச்சு..." என்றான்.

கணேசன் குழம்ப, அர்ஜுன் மெதுவாக அங்கே இருந்து நழுவப் பார்க்க... ஆரு, அவனைப் போக விடாமல் பிடித்தவள், "இரு, எங்க போற? மாட்டினியா...?" என்றாள்.

கணேசன், 'யாரா இருக்கும்...?' என்று யோசித்தவர், "மீராவா...?" என்று சந்தேகமாகக் கேட்க...

அர்ஜுன், "ஆமாம்பா, நல்ல பொண்ணு இல்லப்பா...?" என்றான்.

"நல்ல பொண்ணுதான்... ஆனா... பெரிய இடம். நம்ம ஆளுங்க இல்ல... அதனால அவங்க யோசிப் பாங்க."

"உங்களுக்கு ஓ.கே. தானப்பா... அதெல்லாம் நாம பார்த்துக்கலாம். மீரா ரொம்ப உறுதியா இருப்பா... அதனால பிரச்சினை இல்லை."

"ஆனா... உங்க அம்மா கண்டிப்பா ஒத்துக்க மாட்டா..." என்றார் கணேசன்.

"அம்மாவை நான் பார்த்துக்கிறேன். இப்ப எதுவும் சொல்ல வேண்டாம். நான் என் படிப்பை முடிச்சு... ஆருவுக்கும் கல்யாணம் பண்ணிட்டுத்தான் நான் பண்ணிக்கப் போறேன். எப்படியும் நாலஞ்சு வருஷம் ஆகிடும். அதுக்குள்ள அம்மாகிட்ட நான் சம்மதம் வாங்கிடுவேன்." அர்ஜுன் நம்பிக்கையோடு சொல்ல...

கணேசனும் இந்தக் காலத்தில் காதல் திருமணங்கள் அதிகம் நடப்பதால், ஒன்றும் பெரியதாகப் பிரச்சினை வராது என்றுதான் நினைத்தார். ஆனால், பிரச்சினை விஸ்வரூபம் எடுக்கப் போகிறது என்று பாவம் அவருக்கும் தெரியவில்லை.

வருண் இருந்த இரண்டு நாட்களும் ஒருவரை ஒருவர் லேசாகப் பார்த்துப் புன்னகைப்பதும், இரவு உணவை இருவரும் ஒன்றாகச் சாப்பிடுவதும் என்று நன்றாகப் பொழுது சென்றது. வருண் ஊட்டிக்குச் சென்றதும், மீராவிற்கு வீடு வழக்கம் போல் இருந்தது. வருண், மீராவை செல்லில் அழைத்துப் பேசினான். நேரில் போல் தயக்கம் இல்லாமல்... இருவராலும் பேசிக்கொள்ள முடிந்தது.

அந்த வார சனிக்கிழமை இரவு, ரெயிலில் ஆதிக்குப் பெண் பார்க்க அர்ஜுனைத் தவிர மற்ற அனைவரும் கிளம்பிச் சென்றனர். கடையைப் பார்த்துக் கொள்ள ஆள் வேண்டும் என்று அர்ஜுன் செல்ல வில்லை. வீட்டிற்கு ஒரு செக்யூரிட்டி ஏற்பாடு செய்துவிட்டு அர்ஜுன் கடைக்குச் செல்ல... மீராவும் கடைக்கு வந்து அலுவலக அறையில் அமர்ந்து, அர்ஜுன் கொடுத்த வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அங்கே காலையில் திருச்சியில் இறங்கி, ஒரு பெரிய ஹோட்டலில் ரூம் எடுத்துத் தங்கிய ஆதியின் குடும்பம், பத்து மணி ஆனதும் ரஞ்சனா வீட்டிற்குப் பெண் பார்க்கச் சென்றனர். அவர்களை வீட்டின் வாசலுக்கே வந்து ரஞ்சனாவின் பெற்றோர் வரவேற்றனர். அவர்களும் வேறு உறவினர்கள் யாருக்கும் சொல்லவில்லை என்பதால்... வெறும் இரண்டு குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே அங்கிருந்தனர்.

எல்லோரும் ரஞ்சனாவை ஆவலுடன் எதிர்பார்க்க... ரஞ்சனாவும் அழகுப் பதுமையாக வந்து ஹால் சோபாவில் அமர்ந்தாள். அவள் அப்பா எல்லோரையும் அறிமுகம் செய்ய... முகத்தில் புன்னகையுடன் கரம் குவித்தாள். எல்லோருக்கும் ரஞ்சனாவை நேரில் பார்த்ததும் ரொம்பத் திருப்தியாக இருந்தது. ஆதிக்கும் அவளை ரொம்பப் பிடித்துவிட்டது.

வித்யா, "பெண்ணைப் பிடிச்சிருக்கா...?" என்று கேட்க...

ஆதி, "பிடிச்சிருக்கு, ஆனா... நான் கொஞ்சம் தனியா ரஞ்சனாகிட்ட பேசணும்..." என்றதும், வித்யா அதற்குப் பெண் வீட்டில் சொல்லி ஏற்பாடு செய்தார்.

ரஞ்சனா வீட்டின் கீழே இருந்த ஒரு அறையிலேயே இருவரையும் பேசச் சொல்லி அனுப்பி வைத்தனர். ரஞ்சனா வெட்கப்பட்டு அமைதியாக நின்றாள். ஆதி சிறிது நேரம் நின்று அவளை ரசித்தவன், "உங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்கா...?" என்று கேட்க... ரஞ்சனா, "பிடிச்சிருக்கு..." என்று தயங்கிக் கொண்டே சொல்ல...

"உங்க அம்மா, அப்பாவுக்காகச் சொல்லாதே... உண்மையைச் சொல்லு. நிஜமாவே என்னைப் பிடிச்சிருக்கா...?" ஆதி மறுபடியும் கேட்க...

"பிடிச்சிருக்கு..." என்று இந்த முறை அழுத்தமாக ரஞ்சனா சொல்ல... ஆதி மலர்ந்த முகத்துடன், "எனக்கும் உன்னைப் பிடிச்சிருக்கு..." என்றான்.

"ரஞ்சனா, நாங்க கார்மெண்ட்ஸ் பாக்டரி அண்ட் ஷோ ரூம் வச்சிருக்கோம். எனக்கு ஒரு தம்பி இருக்கான். அவனும் படிச்சு முடிச்சுப் பிசினஸ்தான் பார்ப்பான். நான் எங்க அம்மா, அப்பாவை விட்டுத் தனிக் குடித்தனம் வர மாட்டேன். அதோட நானும், என் தம்பியும் சேர்ந்துதான் பிசினஸ் செய்வோம்.

"எதுக்கு இதெல்லாம் இப்பவே சொல்றேன்னா... ஒரு வேளை உனக்குத் தனிக்குடித்தனம் போகணும்னு

ஆசை இருக்கலாம்... அதே மாதிரி உன் கணவன் தனியா பிசினஸ் செய்யணும்னும் ஆசை இருக்கலாம். அதனால் அப்படி ஏதாவது இருந்தா இப்பவே சொல்லிடு. ஏன்னா... நம்ம எதிர்பார்ப்பு வேற வேறையா இருந்து, அப்புறம் நாம கல்யாணம் செஞ்சுக்கிட்டா பின்னாடி பிரச்சினை வரும். அதுக்கு நாம முன்னாடியே எல்லாத்தையும் தெளிவாப் பேசுறது நல்லது.

"அதே மாதிரி உங்க வீட்ல நீயும், உன் தங்கையும் தான். அதனால உங்க அம்மா, அப்பாவைப் பார்த்துக்கிற பொறுப்பு நமக்கும் இருக்கு... அதை நான் கண்டிப்பா மறுக்க மாட்டேன். நாம அவங்களை நல்லாவே பார்த்துக்கலாம். இப்ப நீ என்ன சொல்ற...? கல்யாணத்துக்கு ஓ.கே.வா...?" ஆதி கேட்க...

ரஞ்சனா, ஆதியின் பேச்சில் இருந்த உறுதியையும், தெளிவையும் பார்த்து மகிழ்ந்தவள், "சம்மதம்..." என்றாள்.

ஆதியும் ரஞ்சனாவும் சிரித்த முகத்துடன் அறையை விட்டு வெளியே வர... அவர்களைப் பார்த்த பெரியவர்களும் சந்தோஷப்பட்டனர். ஆதி, ஹாலில் வந்து அமர்ந்ததும், அவனுக்கு ரஞ்சனாவின் தங்கை சஞ்சனா ஜூஸ் கொண்டு வந்து கொடுக்க... ஆதி அப்போதுதான் அவளை நன்றாகப் பார்த்தான். அவள் ரஞ்சனா போல் அழகி இல்லை. ஆனால், பார்க்க நன்றாகத்தான் இருந்தாள்.

"எங்க அக்காவைப் பிடிச்சிருக்கா...?" ஆதியிடம் சஞ்சனா கேட்க...

"அதுக்குப் பதில் உங்க அக்காகிட்ட சொல்லி இருக்கேன், நீ அவளிடமே கேள்." ஆதி, ரஞ்சனாவை மாட்டிவிட... அங்கே அமர்ந்து அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருத்த ரஞ்சனா வெட்கப்பட்டாள்.

ஆரு, ரஞ்சனாவைக் கேள்வி கேட்டுத் திணறடித்துக் கொண்டிருந்தாள். அப்போது அர்ஜுனிடமிருந்து ஆதிக்குப் போன் வந்தது. ஆதி போனை எடுத்ததும், "ஆதி, பொண்ணு பார்த்துட்டீங்களா...? உனக்குப் பிடிச்சிருக்கா...? ஓ.கே. தானே...?" அர்ஜுன் கேள்வி மேல் கேள்வி கேட்க...

"பார்த்தாச்சு, பிடிச்சிருக்கு. ம்ம்... ஓ.கே..." என்று புன்னகையுடன் பதில் சொன்ன ஆதியையே எல்லோரும் பார்த்திருந்தனர். ஆதி, அர்ஜுனிடம் கடையைப் பற்றி விசாரிக்க... "ஒண்ணும் பிரச்சினை இல்லை... மீரா வந்து ஹெல்ப் பண்றா..." என்றதும்,

ஆதி "ஓ... சரி... சரி..." என்று சிரித்துக்கொண்டே போனை வைத்தான்.

ஆதி எல்லோருக்கும் பொதுவாக, "அர்ஜுன் போன் பண்ணான்..." என்று சொல்ல...

"அர்ஜுன், எங்க ரெண்டாவது பையன். பி.டெக்., கடைசி வருஷம் படிக்கிறான். அவனுக்காகத்தான் ஆதிக்குச் சீக்கிரம் கல்யாணம் பண்றோம். அவன் மேற்படிப்பு படிக்க ஆஸ்திரேலியா போயிடுவான். அவன் போறதுக்குள்ள கல்யாணம் வைக்கணுமாம். அப்பதான்

அவன் பிசினஸ் பார்த்துக்கிட்டா... அவங்க அண்ணன் அவங்க அண்ணியோட வெளிநாடு எல்லாம் ஃப்ரீயா சுத்திப் பார்க்க முடியுமாம். எங்க ஆதியும், அர்ஜுனும் அண்ணன் தம்பி மாதிரி இல்லாம நல்ல ப்ரெண்ட்ஸ் மாதிரிதான் இருப்பாங்க."

வித்யா பெருமையாகச் சொன்னவர், தன் மொபைலில் இருந்த அர்ஜுனின் போட்டோவை எடுத்துத் தன் வருங்கால மருமகளுக்குக் காட்ட...

ரஞ்சனா போட்டோவை வாங்கிப் பார்த்தவள், அவள் பெற்றோரிடம் கொடுக்க... அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே... அதை வாங்கிப் பார்த்த சஞ்சனா மனதில் சஞ்சலம் உண்டானது. அவள், அர்ஜுன் போட்டோவையே பார்க்க... ஆரு, அவளிடம் இருந்த செல்லை வாங்கியதும்தான் சஞ்சனா சுய நினைவுக்கு வந்தாள்.

ஆருவைப் பார்த்துச் சிரித்த சஞ்சனா, "ஏன் இவங்க மட்டும் வரலை?" அவள் ஆர்வமுடன் கேட்க...

"அவங்க வந்து என்ன செய்யப் போறாங்க? பொண்ணு ஆதி அண்ணனுக்குத்தானே பார்க்க வந்திருக்கோம்." ஆராதனா வெடுக்கென சொன்னவள், திரும்பிச் சென்று தன் அம்மாவின் அருகே அமர்ந்தாள். அவளுக்கு ஏனோ சஞ்சனாவைப் பிடிக்கவில்லை.

கல்யாணம் மே மாதம் வைத்துக் கொள்ளலாம் என்று பேசியவர்கள், நிச்சயம் தை மாதம் பிறந்ததும்

வைத்துக்கொள்வோம் என்று எல்லோரும் பேசி முடிவு செய்து, ஆதி குடும்பத்தினர் ரஞ்சனா குடும்பத்தாரிடம் விடை பெற்று... அன்று மதிய ரெயிலிலேயே சென்னைக்கும் திரும்பி விட்டனர்.

அர்ஜுனின் வீட்டில் நிச்சயத்திற்கு நாள் பார்ப்பது, கல்யாணத் தேதி குறிப்பது, வரவேற்புக்கு மண்டபம் பார்ப்பது என்று எல்லோருக்கும் வேலை சரியாக இருந்தது. நாட்களும் ரெக்கை கட்டிப் பறந்தது.

அர்ஜுனுக்கு அவனது செவன்த் செம் ரிசல்ட் வந்துவிட்டது. அவன்தான் அவர்களின் காலேஜ் டாப்பர். இன்னும் மீதி இருப்பது கடைசி செம்தான், இனி இன்டர்ன்ஷிப்தான் செல்ல வேண்டும்.

ஏற்கெனவே அர்ஜுன் ஆஸ்திரேலியா சென்று படிக்க ஸ்பான்சர் தரும் பொறுப்பை ஒரு பெரிய நிறுவனம் ஏற்றுக் கொண்டது. அர்ஜுன் படிப்பு முடிந்து அவர்கள் கம்பெனியில் இரண்டு வருடம் வேலை பார்த்து, தன் சம்பளத்தில் இருந்து சிறிது சிறிதாக அவர்கள் கொடுத்த பணத்தைக் கொடுத்தால் போதும். பிறகு அங்கே தொடர்ந்து வேலை செய்வதோ இல்லை அதை விட்டு விலகுவதோ அர்ஜுனின் விருப்பம்.

அர்ஜுனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை? அவன்தான் இந்தப் படிப்புப் படிக்க விரும்பினான். ஆனால், இப்போது மீராவை விட்டுச் செல்ல விருப்பம் இல்லை. 'ஏற்கெனவே தனியா

இருக்கா... இப்போ நானும் விட்டுட்டு ஆஸ்திரேலியா போயிட்டா ரொம்பப் ஃபீல் பண்ணுவா...' என்று நினைத்தான்.

அர்ஜுன்தான் சூர்யாவிற்கும் அதே நிறுவனத்திடம் சொல்லி மேல் படிப்புக்கு ஆஸ்திரேலியா செல்ல ஏற்பாடு செய்தான். ஆனால், இப்போது அவனே குழப்பத்தில் இருந்தான்.

அவனின் குழப்பத்தைப் பார்த்த சூர்யா... அர்ஜுன், அவனின் அண்ணனின் நிச்சயத்துக்குத் திருச்சிக்குச் சென்றிருந்த போது, கல்லூரியின் மதிய வேளையில் மீராவைச் சென்று பார்த்தவன், அர்ஜுனின் மேற்படிப்பு படிக்கும் ஆசை, அவனுக்குக் கிடைத்த ஸ்பான்சர்... ஆனால், இப்போது அர்ஜுன் மனதில் இருக்கும் குழப்பம் என்று எல்லாவற்றையும் சொன்னவன், "உன் கைல தான் மீரா இருக்கு, அர்ஜுன் ஆஸ்திரேலியா போறதும், போகாததும்..." என்று சொல்லிவிட்டு வந்தான்.

மீராவிற்கு, அர்ஜுன் ரெண்டு வருஷம் ஆஸ்திரேலியா போகணும் என்றதும், முதலில் அழுகைதான் வந்தது. தன்னால் அவனைப் பிரிந்து இருக்க முடியாது என்றே தோன்றியது. கல்லூரியில் இருக்க முடியாமல் வீட்டிற்கு வந்து விட்டாள். தனிமையில் தன் அறையில் அமர்ந்து அழுது கொண்டு இருந்தாள்.

மாலை வரை அழுதவள், பின் தன்னைத்தானே தேற்றிக்கொண்டாள். 'நல்ல வேளை சூர்யா சொன்னாங்க, இல்லைன்னா இதே அர்ஜுன் சொல்லிக் கேட்டிருந்தா...

"என்ன சொல்ற மீரா? புரியற மாதிரி சொல்லு..."

"இல்லை... என்னை ஒரு வேளை லவ் பண்ண லைன்னா போயிருப்பீங்கதானே... என்னாலதானே போக யோசிக்கிறீங்க."

"அப்படியெல்லாம் இல்லை, நீயா ஏதாவது கற்பனை பண்ணாதே..."

"பொய் சொல்லாதீங்க அர்ஜுன். எனக்குத் தெரியும், நீங்களே விருப்பப்பட்டு எல்லாம் பண்ணிட்டு இப்ப யோசிச்சா என்ன அர்த்தம்? என்னாலதானே. நானே உங்க முன்னேற்றத்துக்குத் தடையா இருக்கேனே..."

மீரா புலம்ப... அர்ஜுன் விஷயம் சீரியஸ் ஆவதை உணர்ந்தவன், யாரும் இல்லாத இடமாகச் சென்று நின்று, "மீரா... இப்ப எதுக்குடி இப்படிப் பேசுற? நீ இல்ல காரணம், போதுமா...?" என்றான்.

"இல்லை... நான்தான் காரணம். நீங்க ஆஸ்திரே லியா போயிட்டா நான் தனியா இருப்பேன்னு உங்களுக்குக் கவலை. அதனாலதான் போக யோசிக்கி றீங்க. உங்களுக்கு என் மேல பரிதாபம்தான் அர்ஜுன் இருக்கு. உங்ககிட்ட நான் காதலைத்தான் எதிர் பார்க்கிறேன், பரிதாபத்தை இல்லை..." மீரா மூச்சு விடாமல் தன் ஆதங்கத்தைக் கொட்ட... அதைக் கேட்ட அர்ஜுன் கண்கள் சிவக்கப் பல்லைக் கடித்துக் கொண்டு நின்றிருந்தான்.

மீரா பேசி முடித்து மூச்சு வாங்க... அர்ஜுன், "எல்லாம் பேசிட்டியா... இல்ல இன்னும் ஏதாவது பாக்கி

இருக்கா...? எனக்கு உன் மேல பரிதாபமா...? ஏன் மீரா? அது காதலா இருக்க முடியாதா...? எனக்கு உன்னை விட்டுட்டுப் போக இஷ்டம் இல்லைதான். ஆனா... அது உன் மேல இருக்கிற பரிதாபத்தில இல்லை, காதல்னால தான்.

"எனக்கு உன் கூடவே இருக்கணும், உன்னைப் பார்க்கணும், பேசணும், அப்புறம் அடிக்கடி உன்னைக் கட்டிக்கணும், முத்தம் கொடுக்கணும்... இதெல்லாம் நான் ஆஸ்திரேலியா போனா பண்ண முடியுமாடி. லூசு... வைடி போனை... நாளைக்கு இருக்கு உனக்கு..." என்றவன், போனை வைத்துவிட்டுக் கோபத்தை அடக்க முயன்று கொண்டிருந்தான்.

அப்போது அங்கே வந்த சஞ்சனா, "சாப்பிட வாங்க... எல்லோரும் சாப்பிடப் போயிட்டாங்க..." என்று சொல்ல, அர்ஜுன் எதுவும் பதில் சொல்லாமல் உள்ளே செல்ல... சஞ்சனாவும் அவனுடன் உள்ளே சென்றாள்.

அவர்கள் இருவரும் சேர்ந்து உள்ளே வருவதைப் பார்த்த சஞ்சனாவின் தோழிகள்..;. அவளையும், அர்ஜுனையும் சேர்த்து வைத்துக் கிண்டல் செய்ய, சஞ்சனா கனவு லோகத்தில் மிதந்து கொண்டு இருந்தாள்.

இதெல்லாம் தெரியாத அர்ஜுன், ஆருவின் அருகே அமர்ந்து பெயருக்குச் சாப்பிட்டு விட்டு எழுந்தான். அவனுக்கு எப்போதுடா மீராவைப் பார்ப்போம் என்று இருந்தது. எல்லோரும் சாப்பிட்டு முடித்துப் பெண் வீட்டாரிடம் விடைபெற்றுச் சென்னையை நோக்கிக் கிளம்பினர்.

மறு நாள் காலையில் அர்ஜுனும், மீராவும் கல்லூரியில் சந்தித்துக் கொண்ட போது, இருவரும் பேசாமல் ஒருவரை ஒருவர் பார்த்தபடி நின்றனர். அர்ஜுன், மீராவுடன் பொறுமையாகப் பேச வேண்டும் என்று நினைத்தான். அதனால், "சாயங்காலம் பார்க்கலாம் மீரா..." என்று சொல்லிவிட்டுத் தன் வகுப்பிற்குச் சென்றான்.

மாலையில் கல்லூரி முடிந்து வந்த மீராவைப் பார்த்த அர்ஜுன், "இங்கே பேச வேண்டாம், வெளியே எங்காவது போகலாம்..." என்றவன், அவளின் காரின் அருகே செல்ல,

"உங்க வண்டி...?" மீரா கேட்க,

"நான் இன்னைக்கு என் பைக்ல வரலை... சூர்யாவோட வந்தேன்..." என்றான்.

"நீங்க ஓட்டுங்க அர்ஜுன்." மீரா காரின் சாவியை அர்ஜுனிடம் கொடுக்க, சரி என்று அவன் காரை எடுக்க... மீரா அவன் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள்.

அர்ஜுன் காரைக் கொண்டு போய் ஒரு பெரிய ஷாப்பிங் மாலின் கார் பார்க்கிங்கில் சென்று நிறுத்தியவன், ஜன்னலைத் திறந்துவிட்டு, சீட்டை நன்றாகச் சாய்த்து அதில் சாய்ந்து அமர்ந்து கொண்டு, "ம்ம்... நேத்து ஏதோ சொன்னியே... இப்ப சொல்லு..." என்று கேட்க,

'பாருடா! ஏதோ சினிமா காட்ற மாதிரி உட்கார்ந்திட்டு கேட்கிறதை...' என்று நினைத்த மீரா,

அர்ஜுனின் தோளில் சென்று சாய... அவளை நிமிர்த்தி நேராக உட்கார வைத்தவன், "நேத்து நீ என்ன சொன்ன...? எனக்கு உன் மேல பரிதாபம்னு ஏதோ சொன்னியே... அதை முதல்ல சொல்லு. மத்தது அப்புறம் பார்க்கலாம்..." என்றான் குரலில் அழுத்தத்துடன்.

மீராவின் முகம் வாட, அர்ஜுன் அதைக் கண்டும் காணமல் இருந்தான். "பின்ன இதுக்கு முன்னாடி நீங்க ஆஸ்திரேலியா போக ரெடியாத்தானே இருந்தீங்க... இப்ப ஏன் போக இஷ்டம் இல்லை? நான் தனியா இருப்பேன்னுதானே..."

அர்ஜுன் பதில் சொல்லாமல் வேறு பக்கம் பார்த்துக் கொண்டு அமைதியாக இருந்தான்.

மீரா, அர்ஜுனின் முகத்தைத் தன் பக்கம் திருப்பியவள், "அர்ஜுன்... நீங்க உங்க அம்மாவோட ரொம்ப க்ளோஸ் இல்லையா...? அவங்களை விட்டு ஆஸ்திரேலியா போக முடிஞ்ச உங்களால... ஏன் என்னை விட்டுப் போக முடியலை? நான் தனியா இருப்பேன்னு தானே... அது பேர் பரிதாபம் இல்லாம வேற என்ன...?" என்றாள்.

அர்ஜுன், மீராவின் முகத்தையே பார்த்தவன், "திரும்பத் திரும்பப் பரிதாபம்னு சொன்ன, அறைஞ் சிடுவேன் மீரா. ஆமாம், நீ தனியா இருப்பேன்னு நினைச்சது உண்மைதான். அது பேர் பரிதாபம்னு நீ சொல்றதுதான் எனக்குக் கஷ்டமா இருக்கு."

"அர்ஜுன், உண்மையான காதல், தான் காதலிக்கி றவங்களை உயர்த்தத்தான் பார்க்கும். என்னால நீங்க உங்களுக்கு வர்ற நல்ல வாய்ப்பை மிஸ் பண்ணா... அது எனக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கும். நாளைக்கு இது உங்க வீட்ல தெரியும்போது, அவங்க என்னைப் பத்தி என்ன நினைப்பாங்க? அவங்களுக்கு என் மேல நல்ல எண்ணம் வருமா...? அர்ஜுன், உங்க முன்னேற் றத்துக்கு நான் தடையா இருப்பேனா...? இதுக்கு மேலேயும் நீங்க போகலைனன்னா... எனக்கு உங்களை விட்டு விலகிறது தவிர வேற வழி இல்லை..." மீரா கண் கலங்கிக் குரல் அடைக்கப் பேச...

அர்ஜுன், அவள் சொன்னதைக் கேட்டு அதிர்ந்து விட்டான். "நீ என்ன மீரா சொல்ற?" என்றவன், அவளை இழுத்து அணைத்துக் கொண்டு, "ஏதாவது லூசு மாதிரி பேசாதே... நான் ஆஸ்திரேலியா போறேன், போதுமா...? இனிமே இப்படிப் பேசாதே..." என்றவனின் கண்களும் கலங்க...

சிறிது நேரத்தில் தன்னை மீட்டுக்கொண்டவன், "மீரா, நம்ம கல்யாணம் ஒண்ணும் ஈஸியா நடந்திடாது, பிரச்சினை வரும். நாம அதைச் சேர்ந்து சந்திக்கலாம். ஆனா எப்பவும் என்னை விட்டுப் பிரிய மட்டும் நீ நினைக்கக் கூடாது. எனக்கு நீ மட்டும்தான் மீரா மனைவியாக வர முடியும். நாளைக்கு நம்ம கல்யாணத்துக்கு எதிர்ப்பு வருதுன்னு அப்பவும் நீ இந்த மாதிரி என்னை விட்டு விலக நினைச்சா....ஒண்ணு மட்டும் ஞாபகம் வச்சிக்கோ... நான் கடைசி வரை உன்னை

நினைச்சிட்டுத் தனியாத்தான் இருப்பேனே தவிர, வேற யாரையும் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்..." என்றான் உறுதியாக.

"எனக்குத் தெரியும் அர்ஜுன்..." என்ற மீரா, அவனை இன்னும் இறுக்கமாகக் கட்டி கொள்ள... சிறிது நேரம் அப்படியே இருவரும் இருந்தனர். அர்ஜுன், "போகலாமா...?" என்று கேட்க...

மீரா, "வேண்டாம் அர்ஜுன், எனக்கு இந்த மாதிரி மூட்ல வீட்டுக்குப் போக இஷ்டம் இல்லை..." என்றாள்.

அர்ஜுன், அவளை அழைத்துக் கொண்டு மாலின் உள்ளே சென்றான். இருவரும் அங்கே சேர்ந்து சிறிது நேரம் சுற்ற... இருவரின் மனமும் இயல்புக்குத் திரும்பியது. இருவரும் சென்று அங்கிருந்த புட் கோர்ட்டில் உணவு அருந்திவிட்டு வீட்டுக்குக் கிளம்பினர்.

அர்ஜுன், மீராவைக் காரை எடுக்கச் சொன்னவன், தான் வழியில் இறங்கி கொள்வதாகச் சொல்ல... மீரா ஏ.சி. போட்டுவிட்டுக் காரை ஸ்டார்ட் பண்ண... அர்ஜுன், "இருந்தாலும், நீ அப்படிப் பேசி இருக்கக் கூடாது மீரா. எனக்கு மனசு கஷ்டமா இருக்கு..." என்றான்.

மீரா காரை நிறுத்திவிட்டு அவன் முகம் பார்த்தவள், "சாரி அர்ஜுன், அதை மறந்திடுங்க... நான் தெரியாம சொல்லிட்டேன்..." என்றவள், அவன் முகம் வாடி இருப்பதைப் பார்த்து... அவன் முகத்தை அருகில் இழுத்து, "என்னோட பர்த்டேக்கு நான் தர வேண்டிய

ரிட்டர்ன் கிப்ட் இப்பவே தரட்டுமா...?" என்று கிசு கிசுப்பாகக் கேட்க, அர்ஜுனின் முகமும் மாறியது.

அவன், "உன் இஷ்டம்..." என்றான்.

மீரா வெளியே சுற்றிப் பார்க்க, அங்கே யாரும் இல்லை. அவர்களுக்கு எதிரேயும் சுவர்தான் இருந்தது. மீரா, அர்ஜுனின் நெற்றியில் தன் முதல் முத்தத்தைக் கொடுத்தவள், அடுத்த முத்தத்தை அவன் கன்னத்தில் பதித்தாள். அடுத்து அவன் இதழைப் பார்த்தவள், தயங்கிப் பின் வாங்க... அவள் எண்ணத்தைப் புரிந்த அர்ஜுன், சட்டென்று அவளை அணைத்து அவள் இதழோடு இதழ் பதிக்க... இருவரும் சிறிது நேரத்திற்கு இந்த உலகத்தில் இல்லை.

சிறிது நேரம் சென்று இருவரும் பிரிய... மீரா, "போகலாமா...?" என்று கேட்க...

அர்ஜுன், "இன்னும் ஒரு தடவை... ஒரு தடவை..." என்று வெற்றிகரமாக மூன்று சுற்றுகளை முடித்த பின்பு தான் மீராவைக் காரை எடுக்க விட்டான்.

இப்போது இருவர் முகமும் புன்னகையில் மலர்ந்து இருந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் ஓரக்கண்ணால் பார்ப்பதும், ரகசியமாகச் சிரிப்பதுமாக இருந்தனர். அர்ஜுன் வழியில் இறங்கிக்கொள்ள... மீரா அவள் வீட்டுக்குச் சென்றாள்.

அதன் பிறகு அர்ஜுன் முழுமூச்சாகத் தான் ஆஸ்திரேலியா கிளம்பும் வேலையைப் பார்க்க ஆரம்

பித்தான். அவனுக்கு இப்போது இன்டர்ன்ஷிப் நடப்பதால், அவன் தினமும் கல்லூரிக்கு வருவதில்லை. அதனால் மீராவை வார இறுதியில்தான் பார்க்க முடிந்தது. ஒரு பக்கம் அர்ஜுனின் வீட்டில் ஆதியின் கல்யாண வேலை வேகமாக நடந்தது. திருமணம் திருச்சியில்தான். வரவேற்பு இங்கே சென்னையில் ஒரு பெரிய மண்டபத்தில் நடத்த ஏற்பாடு நடந்து கொண்டு இருந்தது.

(இப்ப முதல் பகுதியை ஞாபகத்துக்குக் கொண்டு வாங்க...)

அர்ஜுன், மீரா கடத்தப்பட்டதை அறிந்து ஆஸ்திரேலியாவில் இருந்து சென்னைக்கு வந்து கொண்டிருந்த வனின் விமானம் சிங்கப்பூரை அடைய... அர்ஜுனும் தன் கடந்த காலத்தில் இருந்து நிகழ் காலத்திற்கு வந்தான்.

ப்ளைட் நின்றதும் முதல் ஆளாக வெளியே வந்தவன், வேகமாக சூர்யாவை அழைத்து மீராவைப் பற்றி விவரம் கேட்க... "அவங்க ஆள் ஜெயில்ல இருக்கானாம். அவனை வெளியே விட வைக்கத்தான் கடத்தி இருக்காங்க... மீராவோட அப்பா, பெரிய ஆளுங்க மூலமா முயற்சி பண்ணிட்டுதான் இருக்கார். அநேகமா நீ இந்தியா வந்து சேரும் போது மீராவும் வந்திடுவான்னு நினைக்கிறன்..." என்று அர்ஜுனின் நெஞ்சில் சூர்யா பால் வார்க்க...

அர்ஜுன் அதுவரை பயத்தில் அடக்கி வைத்திருந்த மூச்சை வெளியில் விட்டான்.

அர்ஜுன் சிறிது நேரம் சூர்யாவுடன் பேசிவிட்டுப் போனை வைக்க... அந்தப் பக்கம் சூர்யாவிடம் ஆரு, "அர்ஜுன் சிங்கப்பூர் வந்துட்டானா...?" என்று கேட்க...

அவன், "ஆமாம், நீ தூங்கு... இன்னும் கொஞ்ச நேரத்தில பெங்களூர் போயிடுவோம்..." என்று சொல்லி அவளைத் தன் மடியில் போட்டுத் தட்டிக் கொடுத்தான்.

அர்ஜுன் சிங்கப்பூர் ஏர்போர்ட்டில், அடுத்திருந்த பெங்களூர் விமானத்திற்காகக் காத்திருந்தவன் நியூஸ் சானல் பார்க்க... அதில் கர்நாடகாவில் பள்ளி மாணவர்கள் கடத்தப்பட்ட செய்திதான் ஓடிக்கொண்டு இருந்தது. அதில் மீராவின் பெயரைச் சொல்லிவிட்டு அவள் புகைப்படத்தைக் காட்ட... அர்ஜுனின் முகம் ஒளிர்ந்தது.

அர்ஜுன், தன் செல்லை எடுத்து ஆதியை அழைத்தான். அர்ஜுனிடம் ஆறுதலாகப் பேசிய ஆதி, "நீ கவலைப்படாத அர்ஜுன்... மீரா பத்திரமா திரும்பிக் கிடைச்சிடுவா... நானும் பெங்களூர் வரேன்னு சொன்னேன், சூர்யாதான் வேண்டாம்னு சொல்லிட்டுப் போயிட்டான்..." என்றவன், "இரு, அப்பா பேசணுமாம்..." என்று கணேசனிடம் போனைக் கொடுத்துவிட்டு, சற்று தள்ளி நின்றிருந்த ரஞ்சனாவைப் பார்த்து முறைக்க... அவள் தலை குனிந்தாள்.

"அர்ஜுன், டென்ஷன் இல்லாம வா... இங்க மீரா அப்பா எல்லா ஏற்பாடும் செஞ்சிட்டுதான் இருக்கார்..." கணேசன் சொல்ல,

"சரிப்பா... அம்மாவைக் கொஞ்சம் நியூஸ் சேனல் பார்க்கச் சொல்லுங்க..." என்று சொல்லிவிட்டு அர்ஜுன் போனை வைத்தான்.

கணேசன், அர்ஜுன் சொன்னதைச் சொல்லி நியூஸ் சேனல் வைக்க.... அதில் திரும்பத் திரும்ப மாணவர்கள் கடத்தப்பட்ட நியூஸ்தான் வந்து கொண்டிருந்தது. 'இதுல புதுசா பார்க்க என்ன இருக்கு...?' என்று எல்லோரும் கவனமாக நியூஸ் கேட்க...

மீராவின் புகைப்படம் வர... செய்தி வாசிக்கும் பெண், "திருமதி மீரா அர்ஜுன். இவர் பரத நாட்டியம் கற்றுத் தரும் ஆசிரியராக அந்தப் பள்ளியில் வேலை பார்கிறார்..." என்று சொல்ல, எல்லோரும் அதிர்ச்சியில் உறைந்து நின்றனர்.

அடுத்து பெங்களூர் செல்லும் விமானத்தில் ஏறிய அர்ஜுனின் நினைவு, தன் கடந்த காலத்தில் விட்ட இடத்திற்குச் சென்றது.

13

அன்று மீராவின் பிறந்த நாள். அவளுக்கு நினைவு தெரிந்து அவள் மிகவும் மகிழ்ச்சியோடு கொண்டாடும் பிறந்த நாள் இதுதான். விடியற்காலை பன்னிரண்டு மணிக்கே அர்ஜுன், ஆரு, ஆதி போனில் அழைத்து வாழ்த்து தெரிவித்திருக்க... வருணும் அழைத்து வாழ்த்தி இருந்தான்.

காலையில் வழக்கம் போல் மீராவின் அப்பா வாழ்த்தியவர், "இந்த வருஷம் பர்த்டேக்குக் கார் வாங்கலாமா...?" என்று கேட்க, மீரா அவரைப் பார்த்து முறைத்தாள்.

"இப்படித்தான் மூணு வருஷமா காரா வாங்கி இருக்கீங்க..." அவள் சொல்ல... ராம்நாத், மீராவை ஆச்சரியமாகப் பார்த்தார்.

மீரா இதுவரை அவளுக்கு இது வேண்டும், அது வேண்டும் என்று கேட்டதே இல்லை. அவராகத்தான் வாங்கிக் கொடுப்பார். இந்த முறை மகள் தன்னிடம் ஏதோ எதிர்பார்க்கிறாளோ என்று நினைத்தவர், "மீரா, உனக்கு ஏதாவது வாங்கணுமா...? நான் பணம் தரேன், நீயே வாங்கிக்கோ..." என்றார்.

"இல்லை, பணம் வேண்டாம். ஏற்கெனவே நிறைய என்னோட அக்கௌண்ட்ல இருக்கு. இன்னைக்கு என்னோட ப்ரெண்ட்ஸை வீட்டுக்குக் கூப்பிடட்டுமா...?" மீரா தயங்கிக் கொண்டே கேட்டாள். மீனாட்சி ஊரில் இல்லை... அதனால்தான் தைரியமாகக் கேட்டாள்.

ராம்நாத், "ஓ எஸ்... தாராளமா கூப்பிடு, இதுக்கு என்னைக் கேட்கணுமா...?" என்றவர், சமையல் செய்யும் அம்மாவை அழைத்து, "இன்னைக்கு மீரா ப்ரெண்ட்ஸ் வீட்டுக்கு வராங்க... அதனால நல்ல விருந்துக்கு ஏற்பாடு பண்ணுங்க...." என்றார்.

"மதிய லஞ்சுக்கு வராங்களா மீரா...?"

"இல்லைப்பா... காலேஜ் இருக்கு. அதனால நைட் டின்னர்க்குத்தான்."

மீரா அவள் அப்பாவையும், அர்ஜுனையும் சந்திக்க வைத்துவிட வேண்டும் என்று நினைத்தாள். அதனால், "நீங்களும் இன்னைக்கு நைட் எங்களோட டின்னர் சாப்பிடுங்க... ப்ளீஸ்ப்பா..." என்றாள்.

"நீ உன் ப்ரெண்ட்ஸ் கூட என்ஜாய் பண்ணு... நான் வர்ற வரை டின்னர் சாப்பிடாம வெயிட் பண்ண வேண்டாம். ஆனால், உன் ப்ரெண்ட்ஸ் போறதுக்குள்ள கண்டிப்பா வர முயற்சி பண்றேன்..." என்றார் ராம்நாத்.

அவர் சொன்னதைக் கேட்டு மீராவின் முகம் மலர்ந்தது. மீரா இதுவரை ராம்நாத்திடம் இது போல் கேட்டது இல்லை. அதற்காகவே இன்று சீக்கிரம் வந்து விட வேண்டும் என்று நினைத்துக் கொண்டே சென்றார்.

மீரா சமையல் செய்யும் அம்மாவிடம், என்னென்ன செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டு நேராக அர்ஜுன் வீட்டிற்குச் சென்றாள். வித்யா, அவளைச் சந்தோஷமாக வரவேற்றார். கணேசனும், வித்யாவும் அவளுக்குப் பிங்க் கலரில் சுடிதார் எடுத்து வைத்திருந்தனர். அதைக் கொடுத்து அவளை வாழ்த்தினர்.

ஆதியும், ஆருவும் வாழ்த்துச் சொல்ல... மீரா அவர்களுடன் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தாள்.

அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தாலும் பார்வை அர்ஜுனின் மேல்தான் இருந்தது. அவன் மாடிப்படி அருகே சுவரில் சாய்ந்து நின்று மீராவைத்தான் பார்த்துக்

கொண்டிருந்தான். மீரா தலைக்குக் குளித்துக் கரும் பச்சையில், மரூன் கலர் பூக்கள் போட்ட சுடிதார் அணிந் திருந்தாள். அவளுடைய நிறத்திற்கு அந்த உடை ரொம்ப எடுப்பாக இருந்தது.

வித்யா எல்லோரையும் சாப்பிட அழைக்க... எல்லோரும் சென்று காலை டிபன் சாப்பிட்டனர். "ஆன்ட்டி, இன்னைக்கு எங்க வீட்ல என்னோட ப்ரெண்ட்ஸுக்கு எல்லாம் டின்னர் கொடுக்கிறேன். இவங்க மூணு பேரையும் அனுப்புறீங்களா... ப்ளீஸ்..." மீரா வித்யாவிடம் கேட்க...

"எதுக்கு ப்ளீஸ் எல்லாம் சொல்ற மீரா... அவங்க வருவாங்க..." என்றார் அவர்.

மீரா மலர்ந்த முகத்துடன், "தேங்க்ஸ்..." என்றாள்.

"ஆருவும், அர்ஜுனும் முன்னாடி போகட்டும். நான் கொஞ்சம் லேட்டா போறேன்..." என்றான் ஆதி.

சாப்பிட்டதும் மீரா கல்லூரிக்குக் கிளம்ப... அர்ஜுன், "என்னோட வண்டி பஞ்சர். இரு, நானும் உன்னோட வரேன்..." என்று சொல்லி அவளுடன் காரில் கிளம்பினான்.

"மீரா... இன்னைக்கு உன்னால ஃபர்ஸ்ட் ஹவர் கட் பண்ண முடியுமா...?" அர்ஜுன் கேட்க... மீரா, "முடியும்..." என்றாள்.

"சரி, அப்ப கோவிலுக்குப் போகலாம்..." என்றான். இருவரும் அஷ்டலக்ஷ்மி கோவிலுக்குச் சென்று சாமி கும்பிட்டனர்.

அர்ஜுன், கோவில் அர்ச்சகரிடம் அர்ச்சனைத் தட்டோடு சேர்த்து அதில் ஒரு கவரையும் வைத்துக் கொடுத்தான். அர்ச்சனை முடித்து அர்ச்சகர் அர்ச்சனைத் தட்டைக் கொண்டு வந்து கொடுக்க... அதை வாங்கிக் கொண்டு இருவரும் அங்கேயே ஒரு ஓரமாக அமர்ந்தனர். அர்ஜுன், அர்ச்சனைத் தட்டில் இருந்த கவரை எடுத்துப் பிரித்தான். மீரா என்னவென்று ஆர்வமாகப் பார்க்க... அதில் ஒரு மெல்லிய செயின், அதோடு இதய வடிவத்தின் உள்ளே ஒரு பெரிய வெள்ளை நிறக் கல் வைத்த டாலர் கோக்கப்பட்டு இருந்தது.

"எனக்கா அர்ஜுன்...?" மீரா ஆர்வத்தோடு கேட்க... 'மொத்தமே ஒரு சவரன்தான். இதைப் போய் ஏதோ வைர நெக்லஸ் மாதிரி பார்கிறதைப் பாரு...' என்று நினைத்த வன், புன்னகையுடன், "ஆமாம்... உனக்குத்தான்..." என்றான்.

அர்ஜுன் அதன் கொக்கியைக் கழட்டிவிட்டு, கண் மூடி ஏதோ வேண்டியவன், மீராவின் கழுத்தில் அவனே போட்டுவிட்டான். மீராவிற்கு அந்த நிமிடம் அர்ஜுன், அவள் கழுத்தில் தாலி கட்டுவது போல்தான் இருந்தது. அவள் உடம்பெல்லாம் சிலிர்த்து, ஏதோ பரவச நிலைக்குச் சென்றாள். அப்போது கோவில் மணி அடிக்க, இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டனர்.

காலேஜுக்குப் போகலாம் என்று இருவரும் கிளம்பிக் காரில் வந்து ஏறினர். மீரா, அர்ஜுனைக் கார்

ஓட்டச் சொல்லிவிட்டுப் பக்கத்தில் அமர்ந்தவள், காரில் இருந்த கண்ணாடியைத் திருப்பி வைத்து, அந்தச் செயினை அழகு பார்த்துக் கொண்டே வந்தாள். அர்ஜுனுக்கு அதைப் பார்த்துச் சிரிப்பாக வந்தது. அவனுக்குத் தெரியும், மீராவைப் பொறுத்தவரை... அவன் கொடுத்த அந்தச் செயின் விலை மதிப்பில்லாத பொக்கிஷம் என்று.

அர்ஜுன் காரை கல்லூரிக்குச் செல்லும் வழியில் ரோடு ஓரமாக நிறுத்தியவன், திரும்பி அமர்ந்து மீராவிடம், "இன்னும் எவ்வளவு நேரம் அந்தச் செயினையே பார்ப்பே..." என்றான்.

செயினில் இருந்த டாலர், மீராவின் தொண்டைக் குழியியில் இருந்து சிறிது இறங்கி இருந்தது. அர்ஜுன், மீராவை அருகில் இழுத்து அந்த டாலர் இருந்த இடத்தில் முத்தம் வைக்க... மீராவிற்கு உடம்பெல்லாம் சிலிர்த்தது. அவனிடம் இருந்து மெதுவாக விலகியவள், "தேங்க்ஸ் அர்ஜுன், ரொம்ப நல்லா இருக்கு..." என்றாள். அர்ஜுன் சிரித்துக் கொண்டே காரை எடுத்தான்.

கல்லூரியில் சூர்யாவைப் பார்த்த மீரா, அவனையும் அன்று மாலை அவள் வீட்டுக்கு அழைத்தாள்.

"உங்க அக்கா இன்னும் இருக்காங்களா சூர்யா...?"

"ஆமாம் இருக்கா... டெலிவரி வரை இனிமே இங்கேதான் இருப்பா."

"அப்படின்னா.. அவங்களையும் ப்ரீத்தியையும் உங்களோட அழைச்சிட்டு வாங்க..."

மீரா சொல்ல... சூர்யா சரி என்றான்.

மீரா அவள் தோழிகளில் கீர்த்தனாவை மட்டும் தான் வீட்டிற்கு அழைத்தாள். மற்றவர்களுக்கு அன்று மதியமே கல்லூரியிலேயே ட்ரீட் கொடுத்துவிட்டாள்.

மாலை கல்லூரி முடிந்ததும், மீரா உடனே வீட்டுக்குக் கிளம்பிச் சென்று, எல்லாம் தயரா என்று பார்த்தாள். அவள் வீட்டுக்குச் சென்ற போது விருந்து தயாராகிக் கொண்டு இருந்தது.

"நான் ஏதாவது ஹெல்ப் பண்ணட்டுமா...?" மீரா கேட்க...

சமையல் செய்பவர், "நாங்களே இத்தனை பேர் இருக்கோம். அதெல்லாம் நாங்க பார்த்துக்கிறோம்..." என்று சொல்ல...

"வெளிய தோட்டத்தில் உட்கார்ந்து சாப்பிடுற மாதிரி அரேஞ்ச் பண்ணிடுங்க..." என்று சொல்லிவிட்டு மீரா தன் அறைக்குச் சென்றாள்.

மீனாட்சி, தன் உறவினர் வீட்டுத் திருமணத்திற்குச் சென்று இருக்கிறாள். வர மூன்று நாட்கள் ஆகும்.

மீரா குளித்து அர்ஜுனின் பெற்றோர் வாங்கித் தந்த சுடிதாரை அணிந்து கொண்டாள். கண்ணாடி முன் நின்று தலை வாரும் போது, அர்ஜுன் இன்று போட்டு விட்ட செயின் கண்ணில் பட... அதையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள். இன்று கோவிலில் வைத்து அவன் செயின் போட்டது மனதிற்கு இதமாக இருந்தது. 'செயின்

போடறதுக்கு முன்னாடி என்னவோ வேண்டினாங்களே...' என்னவா இருக்கும் என்று நினைத்துக் கொண்டே தயார் ஆனாள்.

அர்ஜுன், தங்கள் காரில் ஆருவை அழைத்துக் கொண்டு முதலில் சூர்யா வீட்டிற்குச் சென்றான். சூர்யா, ஆருவை எதிர்பார்க்கவில்லை. அவன் ஆருவைப் பார்த்து ரொம்ப நாட்கள் ஆகி இருந்தது. 'என்னமா வளர்ந்துட்டா...' என்று நினைத்துக் கொண்டே அவளைத் தன் பெற்றோருக்கும், அக்காவிற்கும் அறிமுகம் செய்ய... ஆரு அவர்களோடு இயல்பாகப் பழகினாள். சூர்யாவின் அம்மா, "காபி குடிங்க..." என்று சொல்ல... அர்ஜுன், "வேண்டாம்..." என்றான்.

"அம்மா... அவன் இன்னைக்கு மீரா வீட்ல சாப்பிட காலையில இருந்து விரதம் இருக்கான். அவனுக்கு வேண்டாம், நீங்க ஆருவுக்குக் கொடுங்க. ஆரு, நீ எங்க வீட்டுக்கு முதல் தடவை வந்திருக்க... கண்டிப்பா ஏதாவது சாப்பிடணும்..." சூர்யா சொல்ல... ஆரு, 'இவன் இவ்வளவு பேசுவானா...? எப்பவும் பார்த்தா அமைதியா இருப்பான்...' என்று நினைத்தவள், 'சரி...' என்று தலை யசைக்க... அவளுக்கு மட்டும் காபி வந்தது.

சிறிது நேரம் அங்கே பேசிக்கொண்டு இருந்துவிட்டு, மீரா வீட்டிற்கு எல்லோரும் சேர்ந்து ஒரே காரில் சென்றனர். அவர்களைப் பார்த்ததும் மீரா ஓடிவந்து மகிழ்ச்சியுடன் வரவேற்றாள். கீர்த்தனாவும் ஏற்கெனவே வந்திருந்தாள். மீராவிற்கு அர்ஜுன் தன் வீட்டிற்கு

வந்திருக்கிறான் என்பதை இன்னும் நம்ப முடியாமல் இருந்தாள். எல்லோரையும் அழைத்துச் சென்று ஹாலில் அமர வைத்தாள்.

மீரா சென்று எல்லோருக்கும் வறுத்த முந்திரியும், பாதாம் அல்வாவும் கொண்டு வந்து கொடுக்க, அர்ஜுன் செம பசியில் இருந்ததால்... வேகமாகச் சாப்பிட்டான். "ரொம்பப் பசியா...? இன்னும் கொஞ்சம் எடுத்திட்டு வரட்டுமா...?" மீரா கேட்க...

"வேண்டாம், அப்புறம் டின்னர் சாப்பிட முடியாது." மறுத்த அர்ஜுன், மீராவின் தட்டில் இருந்த அல்வாவை எடுத்துச் சாப்பிட்டான்.

மீரா எல்லோருக்கும் அவள் வீட்டைச் சுற்றிக் காட்டினாள். அவள் அறை இருந்த இரண்டாம் தளத்திற்கு எல்லோரையும் அழைத்துச் செல்ல... அவளது அறையின் உள்ளே வரவேற்பு அறை, படுக்கை அறை மற்றும் உடை மாற்றும் அறை என்று அந்த அறையே ஒரு வீடு மாதிரி இருந்தது.

எல்லோரும் சிறிது நேரம் மீராவின் அறையிலே அமர்ந்து அரட்டை அடித்தனர். "உங்க அம்மா, அப்பா வீட்ல இல்லையா...?" மது கேட்க...

"அம்மா ஊரில் இல்லை, அப்பா இன்னும் கொஞ்ச நேரத்தில் வருவாங்க..." என்றாள் மீரா.

"உன்னோட சின்ன வயசு ஆல்பம் கொடு பார்க்கலாம்..." மது கேட்க... மீரா சென்று ஒரு ஆல்பத்தை

எடுத்து வந்து கொடுத்தாள். அதில் எல்லாம் அவள் பரத நாட்டியம் ஆடிய படங்கள்தான் இருந்தன.

"உன்னோட சின்ன வயசு போட்டோஸ் ஆல்பம் கொடு." மது திரும்பக் கேட்க... மீரா சென்று வேறு ஒரு ஆல்பத்தைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு, அர்ஜுனிடம் சென்று பேசிக்கொண்டிருந்தாள்.

அந்த ஆல்பத்தில் இருந்த போட்டோவில் எல்லாம் மீரா மட்டும்தான் இருந்தாள். பார்த்துக் கொண்டிருந்த மதுவிற்கு ஒரே குழப்பம். அவள் சூர்யாவைப் பார்க்க... அவனுக்கும் அதே குழப்பம்தான்.

'என்ன... எல்லா போட்டோலேயும் தனியாவே இருக்கா? இவங்க அம்மா, அப்பாவோட எடுத்த போட்டோஸ் இல்லையா...?' என்று கேட்க வந்தவன், எதார்த்தமாக ஆருவின் முகத்தைப் பார்க்க... அவள் வேண்டாம் என்று தலை ஆட்ட... அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

சூர்யாவைத் தொடர்ந்து ஆருவின் முகத்தைப் பார்த்த மதுவும்... வேண்டாம், கேட்காத என்பது மாதிரி ஆரு தலை ஆட்டுவதைப் பார்த்து... 'ஏதோ விஷயம் இருக்கு...' என்று நினைத்தவள், அதற்கு மேல் தோண்டாமல் பக்கத்தில் இருந்த கீர்த்தனாவுடன் பேச ஆரம்பிக்க... சூர்யா திரும்பி மீராவைப் பார்க்க... அவள் அர்ஜுனுடன் சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

'எப்பவும் பார்த்தா சந்தோஷமா துள்ளிக் குதிச்சிட்டு இருப்பா... இவளுக்கு ஏதோ பிரச்சினை இருக்கா என்ன?' என்று நினைத்தான்.

ஆதி வருவதாக அர்ஜுனுக்குப் போன் செய்ய... எல்லோரும் கீழே இறங்கி வந்தனர். ஆதி வரும் போதே மணி எட்டு. அதனால் எல்லோரும் சாப்பிடலாம் என்று தோட்டத்திற்குச் செல்ல... அர்ஜுன் சென்று காரில் இருந்து ஒரு கவரைக் கொண்டு வந்தான்.

மீரா, இது என்ன என்று ஆவலாகப் பார்க்க... அர்ஜுன் கவரைப் பிரித்து, அதில் இருந்த அழகான பெரிய கேக் ஒன்றை எடுத்து வெளியில் வைக்க... மீராவின் கண்கள் பெரிதாக விரிந்தன.

மெழுகுவர்த்தியை ஏற்றிவிட்டு அர்ஜுன், மீராவை அழைத்துக் கேக்கை வெட்டச் சொல்ல... மீரா கேக்கை வெட்ட... அர்ஜுன் முதல் துண்டு கேக்கை எடுத்து மீராவிற்கு ஊட்ட... மீராவும் அர்ஜுனுக்குக் கொடுத்தாள். எல்லோரும் கைதட்டி மகிழ்ந்தனர்.

மதுவுக்கு இப்போது நன்றாகப் புரிந்தது, அர்ஜுனும், மீராவும் காதலர்கள் என்று. 'அடப்பாவி, எப்படி அவ வீட்டுக்கே வந்து தைரியமா கேக் ஊட்டி விடுறான் பாரு...' என்று நினைத்தவள், திரும்பி சூர்யாவை... 'நீயும் கூட்டா...?' என்பது போல் முறைக்க... சூர்யா வேறு பக்கம் திரும்பிக் கொண்டான்.

சூர்யா, 'மதுகிட்ட போனா அவ்வளவுதான்' என்று நினைத்தவன், ஆதியோடு சென்று நின்று கொண்டான். எல்லோரும் சாப்பிடச் சென்றனர். வித விதமான உணவு வகைகள் இருந்தது. எல்லோரும் அவர்களே பரிமாறிக் கொண்டு சாப்பிட்டனர். இன்றைய அதிகப்படியான

சந்தோஷத்தில் மீராவின் முகம் நிலவுக்குப் போட்டியாக ஜொலித்துக் கொண்டு இருந்தது. அர்ஜுன், அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

சாப்பிட்டதும் மீராவிடம் வந்த ஆதி, "எனக்கு என்ன வாங்குறதுன்னு தெரியலை மீரா...? அதனால நான் கிப்ட் கூப்பன்தான் வாங்கி இருக்கேன். நீயே உனக்குப் பிடிச்சதை வாங்கிக்கோ..." என்று ஒரு கவரைக் கொடுக்க...

"எதுக்கு அத்தான் நமக்குள்ள பார்மாலிட்டீஸ்..." மீரா கேட்க...

"ஆசையா கொடுக்கிறான் இல்ல... வாங்கிக்கோ..." அர்ஜுன் சொல்ல, மீரா வாங்கிக் கொண்டாள்.

"சரி, நான் கிளம்பறேன்..." என்று ஆதி விடை பெற்றுச் சென்றான்.

மதுவும், கீர்த்தனாவும் தோட்டத்தில் இருந்த பெஞ்சில் அமர்ந்து பேசிக்கொண்டிருக்க... அர்ஜுனும், மீராவும் அங்கிருந்த ஊஞ்சலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். சற்றுத் தூரத்தில் பௌண்டனில் இருந்து விழும் தண்ணீரில் ப்ரீத்தி விளையாடிக் கொண்டிருக்க... அவள் பக்கத்தில் ஆரு அமர்ந்து இருந்தாள்.

சூர்யா அவர்களின் அருகே சென்றவன், பிரீத்தியிடம், "என்னடா செல்லம் செய்றீங்க?" என்று கேட்டுக்கொண்டே ஆருவை பார்த்துப் புன்னகைக்க...

அவளும் பதிலுக்குப் போனால் போகிறதென்று லேசாகச் சிரித்து வைத்தாள்.

"ப்ரீத்தி, நீதான கேட்ட... இப்ப சாப்பிடாம விளையாடிட்டு இருக்க... இப்ப இந்தக் கேக்கை என்ன பண்றது?" என்று தட்டில் இருந்த கேக்கைக் காட்டி ஆராதனா கேட்க...

"நீ, சூர்யா மாமாவுக்கு ஊட்டி விடு..." என்று சொல்லிவிட்டு ப்ரீத்தி நீரில் விளையாட... அதைக் கேட்டு ஆரு திகைத்து விட்டாள். சூர்யா முகம் முழுவதும் புன்னகையுடன் ஆருவைப் பார்க்க... அவள் அவனைப் பார்த்து முறைத்துக் கொண்டே, "நீங்கதான் சொல்லிக் கொடுத்தீங்களா...?" என்று கேட்க...

பதறிய சூர்யா, "ஏய்... நான் எங்க சொல்லிக் கொடுத்தேன், அவளாத்தான் சொல்றா..." என்றான்.

அவர்கள் பேசுவதில் ஒரு காதை வைத்திருந்த ப்ரீத்தி, "அர்ஜுன் மாமாவும், மீரா அக்காவும் சாப்பிட்டாங்கல்ல... அது மாதிரி நீங்களும் சாப்பிடுங்க..." என்று சொல்ல...

"பார்த்தியா... நான் இல்ல காரணம், உங்க அண்ணன்தான்." சூர்யா மெதுவாகச் சொல்ல... ஆரு கோபமாக ஏதோ சொல்ல வர... சூர்யா தட்டிலிருந்த கேக்கை எடுத்து, ஆரு வாயில் வைத்து அடைத்தவன், "வேண்டாம்... எதுவும் சொல்லிடாத... இந்தப் பிசாசு அப்படியே போய்ச் சொல்லிடும்..." என்றவன்,

அங்கிருந்து வேகமாகச் செல்ல, ஆரு அவனைப் பார்த்து முறைத்துக் கொண்டே கேக்கைச் சாப்பிட்டாள்.

அப்போது உள்ளே ஒரு கார் வர... மீரா, "அப்பா வந்திட்டாங்க..." என்றதும், எல்லோரும் எழுந்து உள்ளே செல்ல... ராம்நாத் உள்ளே வந்தவர், எல்லோரையும் பார்த்து, "வாங்க, சாரி... கொஞ்சம் லேட் ஆகிடுச்சு..." என்றவர், மீராவைப் பார்த்து, "சாப்பிட்டாங்களா...?" என்று கேட்க...

மீரா, "சாப்பிட்டோம்..." என்றாள்.

மீராவின் அப்பா ராம்நாத் பார்க்க ஆள் கம்பீரமாக இருந்தார். எல்லோரும் உள்ளே வந்து சோபாவில் அமர்ந்ததும்... மீரா, அர்ஜுனைத்தான் முதலில் அறிமுகப்படுத்தினாள்.

"அப்பா... இவங்க அர்ஜுன், என்னோட காலேஜ் தான், பைனல் இயர் படிக்கிறாங்க. இவ ஆரு, அவங்களோட தங்கச்சி. நாங்க ரெண்டு பேரும் ஒரே டான்ஸ் கிளாஸ்தான் போறோம்..." என்றவள், அடுத்து "இவங்க சூர்யா, இவங்களும் எங்க காலேஜ்லதான் பைனல் இயர் படிக்கிறாங்க. இவங்க மது, சூர்யாவோட அக்கா..." என்றவள், அடுத்து கீர்த்தனாவை, "இவ என்னோட ப்ரெண்ட் கீர்த்தனா... நாங்க ரெண்டு பேரும் ஒரே க்ளாஸ்..." என்று எல்லோரையும் அறிமுகப் படுத்திவிட்டு, அவள் அப்பாவின் அருகே சென்று அமர்ந்தாள்.

"ஹோப் யு என்ஜாய்ட் தி டே..." ராம்நாத் பொதுவாக எல்லோரையும் பார்த்துச் சொல்ல... எல் லோரும் "ஆமாம்..." என்றனர்.

மீராவிற்கு அவள் அப்பாவும், அர்ஜுனும் பேசிக்கொள்ள வேண்டும் என்று ஆசை... அதை உணர்ந்த அர்ஜுன், அவனாகவே மீராவின் அப்பாவிடம் பேச்சை ஆரம்பிக்க....அவரும் அவனுடன் இயல்பாகப் பேசினார்.

அவர்கள் பேசட்டும் என்று மது, கீர்த்தனா, ஆரு மூவரும் மெதுவாக அங்கிருந்து தோட்டத்தில் சென்று அமர்ந்தனர். அர்ஜுன், தங்கள் குடும்பத்தைப் பற்றித் தங்கள் தொழிலைப் பற்றிச் சொன்னதும், ராம்நாத், "எனக்குக் கணேசனைத் தெரியுமே... ஆனா அவ்வளவா பேசினது இல்லை..." என்றவர், அர்ஜுனிடம் அவன் எதிர்காலத் திட்டத்தைப் பற்றிக் கேட்க... அவன் ஆஸ்திரேலியா போய் மேல் படிப்புப் படிக்கப் போவதாகச் சொல்ல... அதைக் கேட்ட ராம்நாத் அவனை உற்சாகப் படுத்தினார்.

ராம்நாத்திற்கு அர்ஜுனை மிகவும் பிடித்து விட்டது. அவன் பேசுவதிலேயே அவன் திறமைசாலி என்று கண்டுபிடித்தவர். "அர்ஜுன், எனக்கு முன்ன மாதிரி எல்லா வேலையும் பார்க்க முடியலை. எனக்கு நம்பிக்கையான வங்க யாராவது கூட இருந்தா நல்லா இருக்கும். நீ உன்னோட படிப்பு முடிஞ்சதும் என்னோட கம்பனியில சேர முடியுமா? உனக்கு நான் நல்ல போஸ்ட்டிங் அண்ட் பே தரேன்..." என்றார்.

அர்ஜுன், 'இவர் என்ன இப்படிக் கேட்கிறார்...?' என்று நினைத்தவன், மீராவைப் பார்க்க,

அவள், 'நீ ஆச்சு... எங்க அப்பாவாச்சு... எனக் கென்ன வந்தது...?' என்பது போல் உட்கார்ந்து இருந் தாள்.

"சாரி அங்கிள், நான் ஏற்கெனவே எனக்கு ஸ்பான்சர் பண்றவங்ககிட்ட ரெண்டு வருஷம் அக்ரிமென்ட் போட்டிருக்கேன்..." அர்ஜுன் சொல்ல...

"நான் உனக்கு ஸ்பான்சர் பண்றேன், அப்ப பிராப்ளம் இல்லையில்ல..." என்றார் ராம்நாத்.

அர்ஜுன் சிறிது நேரம் யோசித்தவன், "இல்லை அங்கிள், நான் படிச்சிட்டு எங்களோட பிசினஸ் பார்க்கப் போயிடுவேன். எனக்கு இன்னும் எங்க பிசினஸை மேலே கொண்டு வரணும்னு ஆசை. நான் இப்ப ரெண்டு வருஷம் ஆஸ்திரேலியா போறதே எங்க அப்பாவுக்கும், அண்ணாவுக்கும் அதிகமா வேலை இருக்கும்...

"நான் இருந்தா அவங்களுக்குக் கொஞ்சம் ரெஸ்ட் கிடைக்கும். எங்க பிசினஸுக்கே ஆள் தேவைப்படும் போது, நான் எப்படி வேற இடத்தில வேலை பார்க்க முடியும். அதனால என்னால உங்க கம்பெனியில சேர முடியாது..." என்று தெளிவாகச் சொல்ல.

ராம்நாத், "ஓ.கே... பரவாயில்லை..." என்றார்.

"ஏன் அங்கிள் வெளிய ஆள் தேடுறீங்க? உங்க வீட்லேயே ஆள் இருக்கே..." அர்ஜுன் சொல்ல...

"வருண் இன்னும் படிப்பு முடிச்சிட்டு வர ரொம்ப வருஷம் ஆகும்..." என்றார் ராம்நாத்.

"வருண் மட்டும் தான் உங்களுக்கு இருக்கானா...? மீரா இல்லை... ஏன் அவ பிசினஸ் பார்க்க மாட்டாளா?" அர்ஜுன் ஒரு மாதிரி குரலில் கேட்க...

'மீராவால முடியுமா...?' என்று ராம்நாத் யோசிக்க...

அதை உணர்ந்த அர்ஜுன், "அதெல்லாம் முடியும். அவ ரொம்பத் திறமைசாலி, நீங்க அவளை ட்ரெயின் பண்ணுங்க..." என்றவன், "சரி அங்கிள்... நாங்க கிளம்பறோம்..." என்று விடைபெற...

ராம்நாத் அவர் அறியாமலேயே, "அடிக்கடி வீட்டுக்கு வா அர்ஜுன்..." என்ற வார்த்தை அவர் வாயில் இருந்து வந்தது. அதைக் கேட்டு அர்ஜுன், மீரா இருவரின் முகமும் மலர்ந்தது.

எல்லோரும் விடைபெற்றுக் கிளம்ப... மீரா, கீர்த்தனாவை அவளுடைய காரில் டிரைவரோடு அனுப்பி வைத்தாள்.

அர்ஜுன் வீட்டுக்கு வந்து மீராவை செல்லில் அழைக்க... அவள், "எங்க அப்பாவையே கவுத்துட்டீங் களே..." என்று கிண்டல் செய்ய...

"அது இப்ப தெரியாது... நான் உன்னைப் பொண்ணு கேட்கும்போது, உங்க அப்பா சொல்ற பதில்ல தான் தெரியும், கவுந்துட்டாரா இல்லையான்னு." அர்ஜுன் சொல்லிவிட்டுச் சிரிக்க...

"ஓ...! அப்படி ஒண்ணு இருக்கோ...?" என்றாள் மீரா.

அர்ஜுன்... மீரா, அவள் தந்தை அவர்கள் கம்பெனியில் சேரச் சொன்னதைப் பற்றி ஏதாவது சொல்வாளா என்று எதிர்பார்க்க...

அவள் அதைப் பற்றி எதுவும் கேட்கவில்லை.

"மீரா, நான் உங்க அப்பா கம்பெனியில சேர மாட்டேன்னு சொன்னது உனக்கு ஒண்ணும் வருத்தம் இல்லையில்ல...?"

அர்ஜுன் தயக்கமாகக் கேட்க...

"இல்ல அர்ஜுன்... உங்களுக்கு ஒரு பிசினஸ் இருக்கும்போது... நீங்க எதுக்கு இங்க வேலை பார்க்கணும்?" என்று அத்தோடு அந்தப் பேச்சை முடித்துவிட்டு, மீரா வேறு பேசினாள்.

"அர்ஜுன், இன்னைக்குக் கையில செயின் வச்சிக் கிட்டு சாமிகிட்ட என்ன வேண்டினீங்க...?"

மீரா ஆர்வமாகக் கேட்க...

அர்ஜுன், "அது... அது..." என்று இழுத்தவன், "வேண்டினது வெளிய சொன்னா பலிக்காது. அதனால நம்ம கல்யாணத்துக்கு அப்புறம் சொல்றேன். **Bye...**" என்று போனை வைக்க...

மீரா, "போடா..." என்று சொல்லிவிட்டு, இனிய கனவுகளுடன் படுக்கச் சென்றாள்.

மறு நாள் அவர்கள் கடையில் மாலை வேளையில் டீ குடித்துக் கொண்டே... அர்ஜுன், கணேசனிடம் மீராவின் அப்பாவுடன் பேசியதைச் சொல்ல...

அதைக் கேட்ட ஆதி, "என்னடா உன்னோட மாமனார் விட்டா... உன்னை வீட்டோட மாப்பிள்ளை ஆக்கிடுவார் போலிருக்கு..." என்று கேலி செய்ய...

"மீரா என்ன சொன்னா அர்ஜுன்...? உன்னை அவங்க அப்பா கம்பெனியில சேரச் சொன்னாளா...?" கணேசன் கேட்க...

"இல்லை, அப்படி எதுவும் அவ சொல்லலை. நானா கேட்டதுக்கும் உங்களுக்குன்னு பிசினஸ் இருக்கும் போது, நீங்க எதுக்கு இங்க வேலை பார்க்கணும்னு தான் சொன்னா..." அர்ஜுன் சொல்ல... அதைக் கேட்ட கணேசன் மனதில் மீராவைப் பற்றி உயர்ந்த எண்ணம் தோன்றியது.

மறு நாள் ஊரில் இருந்து வந்த மீனாட்சியிடம், அந்த வீட்டில் வேலை செய்யும் பெண்... மீரா பிறந்த நாள் அன்று வந்த மீராவின் நண்பர்கள், பிறந்தநாள் கொண்டாட்டம், நடந்த விருந்து, கடைசியில் ராம்நாத்துடன் அவர்கள் பேசிவிட்டே சென்றது என்று எல்லாவற்றையும் சொல்ல... கேட்ட மீனாட்சிக்கு ஆத்திரம் வந்தது.

'எவ்வளவு தைரியம்? அதுவும் நான் இல்லாத போது...?' என்று கொதித்தவள், ராம்நாத்திடம், "பார்த்

தீங்களா... வீட்டுக்கே ஆம்பளைப் பசங்களைக் கூட்டிட்டு வந்து கொட்டம் அடிக்கிறதை...” என்று வத்தி வைக்க...

“உனக்குத் தெரியாம எதுவும் தப்பாப் பேசாத... கொட்டம் அடிக்கணும்னு நினைக்கிறவங்க... கூட அக்கா, தங்கையைக் கூட்டிட்டு வர மாட்டங்க. அதுவும் மீரா அப்படிப்பட்ட பொண்ணு இல்லை...” ராம்நாத், மீனாட்சியைக் கடிந்து கொள்ள... அவளுக்கு இன்னும் ஆத்திரம் பெருகியது.

அன்று இரவு உணவைச் சாப்பிட மீரா வந்த போது... மீனாட்சி வேண்டுமென்றே, “கண்டவங்க வீட்டுக்குள்ள வர ஆரம்பிச்சிட்டாங்க. என்னோட தங்க நெக்லஸ் ஒண்ணு காணோம். இன்னும் எனென்ன காணாமப் போகப் போகுதோ...?” என்று புலம்ப, மீராவிற்குக் கட்டுப்படுத்த முடியாத அளவிற்குக் கோபம் வந்தது.

அவள் அறைக்கு வேகமாகச் சென்றவள், கையில் அவள் வைர நெக்லஸ் கொண்டு வந்து மீனாட்சியின் முன் வைத்து விட்டு, “இந்த வைர நெக்லஸை எடுத்துக்கோங்க. என்னோட ப்ரெண்ட்ஸ் கீழேயும், மேலே என்னோட ரூமுக்கு மட்டும்தான் வந்தாங்க. அவங்க உங்க ரூம் முன்னாடிக் கூட வரலை... வீணா அவங்க மேல திருட்டுப் பழி போட வேண்டாம். அவங்க அப்படிப் பட்டவங்க இல்லை...

“நான் என்னோட படிப்பு முடிஞ்சதும், வேலை வாங்கிட்டு வெளியூர் போயிடறேன். அதுவரை என்னை

நிம்மதியா இருக்க விடுங்க...” என்றவள், அவள் அ றைக்குச் சென்று கதவைச் சாத்திவிட்டுப் படுக்கையில் விழுந்து குமுறி அழுதாள்.

ரொம்பச் சந்தோஷம் என்று நினைத்த மீனாட்சி, அந்த வைர நெக்லஸை எடுத்துக் கொண்டு அவள் அறைக்குச் சென்றாள்.

அர்ஜுன் அன்று இரவு போன் பண்ணும்போது மீரா எடுக்கவில்லை. போனை எடுத்தால், அர்ஜுன் அவள் குரலில் இருந்தே அழுதிருப்பதைக் கண்டுபிடித்து விடுவான் என்று நினைத்தவள், அவன், தான் தூங்கிவிட்டதாக நினைத்துக் கொள்ளட்டும் என்று பேசாமல் இருந்து விட்டாள். அர்ஜுனுக்குக் கண்டிப்பாகத் தெரியும், அவள் தூங்கி இருக்க மாட்டாள் என்று. ஏதோ பிரச்சினை என்றும் நன்றாகப் புரிந்தது.

மறுநாள் கல்லூரிக்குச் சீக்கிரம் வந்த மீராவிற்கும் முன்பாகவே அர்ஜுன் அங்கே வந்து அவளுக்காகக் காத்திருந்தான். மீரா காரை விட்டு இறங்கும் போதே எதிரே வந்து நின்றவன், அவளின் முகத்தையே பார்க்க... அதைப் பார்த்ததும் மீராவிற்குச் சிரிப்பு வந்து விட்டது.

“என்ன அர்ஜுன், என்னோட முகத்தையே பார்க்கிறீங்க?”

“நேத்து அழுதியா மீரா...?”

“இல்லையே...”

“பொய் சொல்லாத மீரா... நீ அழுதிருக்க... உன்னோட முகத்தைப் பார்த்தாலே தெரியுது, கண்

ணெல்லாம் வீங்கி இருக்கு, ஏதாவது பிரச்சினையா மீரா...? மறைக்காம சொல்லு..."

"அதெல்லாம் இல்லை... நான் ரொம்ப நேரம் துங்கினேன். அதனாலதான் கண்ணு வீங்கி இருக்கிற மாதிரி இருக்கு. வேற ஒண்ணும் இல்லை..."

அர்ஜுன், மீராவைச் சந்தேகமாகப் பார்த்தான். ஆனால் மீரா, அவனிடம் உற்சாகமாகப் பேச... "மீரா... நீ மத்தவங்ககிட்ட நடிக்கிற மாதிரி என்கிட்டே நடிக்காதே..." அர்ஜுன் கோபப்பட...

"அர்ஜுன்... நான் எப்பவும் உங்ககிட்ட மட்டும்தான் என்னோட இன்னொரு பக்கத்தைக் காட்டி இருக்கேன். நேத்து வழக்கம் போல எங்க சித்தி பேசினாங்க. நான் என்னைப் பத்திப் பேசி இருந்தா பொறுத்திருப்பேன். ஆனா அவங்க உங்க எல்லோரையும் ஒரு மாதிரி பேசிட்டாங்க. அதனாலதான் மூட் அவுட், இப்ப நார்மல் ஆகிட்டேன்..." என்றாள் மீரா.

"ரொம்பக் கஷ்டமா இருக்கா மீரா..."

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை, நான் நல்லாத் தான் இருக்கேன்..." என்று அர்ஜுனைச் சமாளித்து, அவன் இன்டன்ஷிப் செய்யும் கம்பெனிக்கு அனுப்பி வைத்தாள்.

ஆதியின் கல்யாணத்திற்கு முகூர்த்தப் புடவை எடுக்கப் பெண் வீட்டினரையும் வரச் சொல்லி அழைக்க... அவர்களும் நேராக ஹோட்டலில் வந்து இறங்கி

குளித்துக் கிளம்பி காலை உணவிற்குக் கணேசன் வீட்டிற்கு வந்தனர். அவர்கள் வீட்டில் ரஞ்சனாவைத் தவிர மற்ற மூவரும் வந்திருந்தனர்.

ஆதிக்கு, ரஞ்சனாவை அழைத்து வரவில்லை என்று வருத்தம். கணேசனும், வித்யாவும் வந்தவர்களை வரவேற்று டிபன் சாப்பிட அழைத்துச் சென்றனர். ரஞ்சனாவின் பெற்றோருக்கு, அவர்கள் வீட்டைப் பார்த்ததும் ரொம்பத் திருப்தியாக இருந்தது.

சஞ்சனா, அர்ஜுனைத் தேட... அவன் அங்கே இல்லை. அவளுக்கு யாரிடம் கேட்பது என்று தெரியவில்லை. ஆருவிடம் கேட்கலாமா என்று நினைத்தவளுக்கு, அன்று மண்டபத்தில் ஆரு பேசியது நினைவுக்கு வர... 'இவகிட்ட கேட்டா அவ்வளவுதான், நீ எதுக்குக் கேட்கிறேன்னு கேட்பா...' என்று நினைத்தவள், வாயை மூடிக்கொண்டாள். எல்லோரும் சாப்பிட்டு முடித்துச் சிறிது நேரம் கழித்துக் கடைக்குக் கிளம்பினர்.

ஆரு... அவளுக்குப் புடவை செலக்ட் செய்ய மீராவை வரச் சொல்லி இருந்தாள். அதனால் மீரா அவர்கள் புடவை எடுக்கச் சென்ற கடைக்கு வர... அர்ஜுனும் சிறிது நேரத்தில் அங்கே வந்தான். அர்ஜுனும், மீராவும் தெரு முனை வரை ஒன்றாகத்தான் வந்தனர். கடைக்குள் வரும் போதுதான் தனித்தனியாக வந்தனர். அர்ஜுனைப் பார்த்ததும் சஞ்சனாவின் முகம் மலர்ந்தது. அவன் எல்லோரையும் பார்த்து, "வாங்க..." என்று சொல்லிவிட்டு ஆதியின் அருகே சென்று நின்று கொண்டான்.

ரஞ்சனா வீட்டினருக்கு மீராவை ஆருவின் தோழி என்று வித்யா அறிமுகம் செய்தார். ஆருவும், மீராவும் பேசிக்கொள்வதைப் பார்த்து சஞ்சனாவுக்கு எரிச்சலாக வந்தது. ஆருவும், மீராவும் ஒரு பக்கமாக நின்று புடவை பார்க்க... இங்கே ரஞ்சனாவிற்குச் சஞ்சனா புடவை தேர்ந்து எடுத்துக் கொண்டிருந்தாள்.

அவள் எடுத்த புடவை எல்லாம் கண்றாவியாக இருந்தது. ஆதி நொந்து விட்டான். 'என்னோட அழகான ரஞ்சனா... இவ எடுக்கும் புடவையைக் கட்டினா அவ்வளவுதான்...' என்று நினைத்தவன், வித்யாவைப் பார்த்து, "என்னமா இது?" என்று புலம்ப...

அவர், "நீ செலக்ட் பண்ணுடா..." என்று சொல்லி விட்டு, ரஞ்சனாவின் அம்மாவோடு அந்தப் பக்கம் சென்றுவிட்டார்.

ஆதிக்கு, அவர்கள் அந்தத் துறையிலேயே இருந்தாலும், பட்டுப் புடவை தேர்ந்து எடுக்க எல்லாம் தெரியவில்லை. அவன் அர்ஜுனைப் பரிதாபமாகப் பார்க்க... அவன் மீராவை ஜாடை காட்டினான்.

"ஆரு..." என்று ஆதி அழைத்ததும், அவளோடு சேர்ந்து மீராவும் திரும்பி ஆதியைப் பார்க்க... அவன், "ஆரு... நீ வந்து புடவை செலக்ட் பண்ணு..." என்றவன், 'நீயும் செலக்ட் பண்ணு...' என்று மீராவிடம் ஜாடையில் சொன்னான்.

மீராவும் ஆருவோடு வந்து நின்று புடவை பார்த்தாள். வித்யா, முகூர்த்ததுக்கு ஒன்று, இங்கே

வரவேற்புக்கு ஒன்று என்று இரண்டு புடவைகள் தேர்ந்தெடுக்கச் சொன்னார்.

மீரா, நிச்சயதார்த்த போட்டோவில் ரஞ்சனாவைப் பார்த்திருந்ததால்... அவளுக்கு ஏற்ற மாதிரி புடவை பார்த்தாள். இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சஞ்சனாவிற்குக் கோபமாக வந்தது. 'இவள் யாரு என் அக்காவிற்குப் புடவை எடுக்க...?' என்று நினைத்தாள்.

அதனால் வேண்டுமென்றே மீராவைப் புடவை தேர்ந்து எடுக்கவிடாமல் அவள் குறுக்கே செல்ல... அதைக் கவனித்த அர்ஜுன், அவளைத் திசை திருப்பு வதற்காக அவளிடம் பேச்சுக் கொடுத்தான்.

அர்ஜுன், சஞ்சனாவுடன் பேச ஆரம்பித்ததும், சஞ்சனா புடவை பார்ப்பதை மறந்து விட்டு அர்ஜுனுடன் பேச ஆரம்பித்தாள். அர்ஜுன், அவள் படிப்பை பத்திக் கேட்க... அவளும் பதில் சொல்ல... அடுத்து அர்ஜுன் திருச்சியைப் பற்றிக் கேட்க... சஞ்சனாவும் திருச்சியின் புகழைப் பரப்பியவள், "நீங்க கல்யாணத்துக்கு வரும் போது... நான் உங்களுக்கு ஊரைச் சுற்றிக் காண்பிக்கிறேன்..." என்றாள்.

இவர்கள் இங்கே பேசி கொண்டிருக்கும் போதே மீரா புடவை தேர்ந்து எடுத்து விட்டாள்.

மீரா, முகூர்த்ததுக்கு இரண்டு புடவைகளைத் தேர்வு செய்தவள், வரவேற்புக்கும் இரண்டு புடவைகள் தேர்ந்து எடுத்தாள். நான்கையும் அங்கிருந்த டேபிளில் வைத்து விட்டு, செல்லில் போட்டோ எடுத்து ரஞ்சனாவிற்கு

அனுப்பி, "அவங்களுக்கு எந்தப் புடவை பிடிச்சிருக்குன்னு கேளுங்க... அவங்களோட கல்யாணப் புடவை அவங்க செலக்ட் பண்றதுதான் நல்லது. பிடிக்கலைன்னா வேற பார்க்கலாம்..." என்று ஆதியிடம் சொல்ல...

ஆதிக்கு மிகவும் சந்தோஷம். "நல்ல ஐடியா மீரா..." என்றவன், அர்ஜுனோடு சேர்ந்து அந்தப் புடவைகளை நன்றாக விரித்து வைத்து, செல்லில் போட்டோ எடுத்து... ரஞ்சனாவிற்கு அனுப்பிவிட்டு, ஆதி தனியாகச் சென்று அவளுக்குப் போன் செய்தான்.

தன் அக்காவிடம் சென்று, 'உனக்கு யாரோ ஒரு தெரியாத பொண்ணுதான் புடவை செலக்ட் பண்ணுச்சுன்னு போட்டுக் கொடுக்கணும்...' என்று நினைத்துக் கொண்டிருந்த சஞ்சனாவின் எண்ணத்தில் மீரா ஒரு லோடு மண்ணைப் போட்டுவிட்டு ஆருவிற்குச் சேலை பார்த்துக் கொண்டிருந்தாள்.

அர்ஜுன், அவர்களோடு நின்று பேசிக் கொண்டிருந்தான். ஆதி போன் பேசிவிட்டு வந்தவன், "அவளுக்கு அந்த மரூன் புடவை கல்யாணத்திற்கும், ப்ளூ புடவை வரவேற்புக்கும் எடுத்துகிறேன்னு சொல்றா..." என்று சொல்ல, எல்லோரும், 'கல்யாணப் பொண்ணுக்குப் பிடிச்ச மாதிரியே புடவை எடுத்தாச்சு...' என்று சந்தோஷப் பட்டனர்.

ஆருவுக்கு மீரா அழகான வண்ணங்களில் புடவை தேர்ந்து எடுத்துக் கொடுத்தாள். பின் வித்யாவுக்கும் இன்னும் சில நெருங்கிய உறவினர்களுக்கும் புடவை

எடுத்ததும் எல்லோரும் ஹோட்டலுக்குச் சாப்பிடச் செல்ல... மீரா அவள் வீட்டுக்குக் கிளம்பினாள்.

"நான் கடைக்குப் போறேன். நான் காலையில சாப்பாடே கொஞ்ச நேரம் முன்னாடிதான் சாப்பிட்டேன். அதனால இப்ப பசி இல்லை..." என்று சொல்லி, அர்ஜுன் அங்கிருந்து நழுவி விட்டான்.

மீரா சென்று அவள் காரில் ஏறியவள், காரை எடுக்காமல் காத்திருக்க... ஐந்து நிமிடம் கழித்து அர்ஜுன் வந்து காரில் ஏறினான். "எனக்குத் தெரியும், நீங்க வருவீங்கன்னு..." மீரா சிரித்துக்கொண்டே சொல்ல...

அவள் கன்னத்தைப் பிடித்துச் செல்லமாகக் கிள்ளிய அர்ஜுன், "என்னைக் கடையில விட்டுட்டுப் போ, அவங்க சாப்பிட்டதும் கடைக்குத்தான் வருவாங்க..." என்றான். மீராவும் அர்ஜுனை அவர்கள் கடை முன்பு விட்டு விட்டுச் சென்றாள்.

அர்ஜுன் நினைத்தது போல்... சாப்பிட்டதும் கார்மெண்ட்ஸ் ஃபேக்டரி சென்று பார்த்தவர்கள், அடுத்து கடைக்கு வந்தனர். சஞ்சனா, 'எவ்வளவு பெரிய கடை, பாக்டரி... நம்ம அக்கா குடுத்து வச்சவ...' என்று நினைத்தவள், 'நாமும் இந்த அர்ஜுனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா லைப்ல சூப்பரா செட்டில் ஆகிடலாம். அதுக்கு எப்படியாவது முயற்சி பண்ணணும்...' என்று நினைத்து அர்ஜுனிடம் பேசச் செல்ல...

"அப்பா எனக்குப் பசிக்குது, நான் போய்ச் சாப்பிட்டு வரேன்..." என்று அர்ஜுன் அங்கிருந்து சென்று விட்டான்.

சஞ்சனாவிற்கு எரிச்சலாக வந்தது. அர்ஜுனும் சரி, மீராவும் சரி.. சஞ்சனாவை ஒரு பொருட்டாக நினைக்கவே இல்லை. சிறிது நேரம் கழித்துச் சஞ்சனா வீட்டினரும் கடையில் இருந்தே விடை பெற்று அவர்கள் ஊருக்குக் கிளம்பினர்.

அந்த வருடத்தின் இறுதித் தேர்வுகள் முடிந்து, ஆதியின் கல்யாண வேலையில் எல்லோரும் பிஸியாக இருந்தனர். மீராவின் ரசனைகளும், தேர்வுகளும் சிறப்பாக இருப்பதால்... அவளிடம் மண்டபத்தின் அலங்காரப் பொறுப்பைக் கொடுத்தனர். அவளையும் அந்தக் குடும்பத்தில் ஒருத்தியாக நினைப்பதால்தான் அவளுக்கும் ஒரு வேலையைக் கொடுத்தனர். அதை நினைத்து மீராவிற்கு மிகவும் மகிழ்ச்சி. அவள் சந்தோஷமாக அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள்.

வருண் அந்த வருடத் தேர்வு முடிந்து லீவுக்கு அவன் வீட்டிற்கு வந்திருந்தான். ஒரு ஞாயிறு அன்று முடி வெட்ட சலூனுக்கு வந்தவன், அங்கே அர்ஜுனைப் பார்த்துவிட்டு, அவனே அர்ஜுனிடம் சென்று, "ஹாய்..." என்றான்.

பேப்பர் படித்துக் கொண்டிருந்த அர்ஜுன், குரல் கேட்டு யார் என்று நிமிர்ந்து பார்க்க... அங்கே வருண் நிற்பதைப் பார்த்து முகம் மலர்ந்தான்.

"ஹாய் வருண் ஊட்டியில இருந்து எப்ப வந்த?"

"நான் போன வாரமே வந்துட்டேன்..."

"அப்படியா...? இந்த மீரா கூட நீ வந்தது பத்தி ஒண்ணும் சொல்லலை... ஹப்பா... நீ வந்துட்டியா... உங்க அக்கா இனிமே ஒழுங்கா வீட்ல இருப்பா, இல்லைன்னா... பொழுது போகலைன்னு கோவில் குளத்துகிட்ட போய் உட்கார்ந்துக்கிறது, பார்க்ல சின்னப் பிள்ளைங்களோட சேர்ந்து விளையாடுறதுன்னு இருப்பா..." அர்ஜுன் சிரித்துக் கொண்டே சொல்ல... அதைக் கேட்ட வருண் முகம் மாறினான்.

அர்ஜுன், வருணுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கிளம்ப... வருணும் முடி வெட்டிக் கொண்டு வீட்டுக்குக் கிளம்பினான். வீட்டுக்கு வந்த வருண் ஏதோ யோசனையிலேயே இருந்தவன், மதியம் உணவு அருந்தும்போது... அவனே மீராவை இண்டர் காமில் சாப்பிட அழைத்தான்.

ராம்நாத் சாப்பிட வந்தவர், தன் இரண்டு பிள்ளைகளும் ஒன்றாக அமர்ந்து உணவு அருந்துவதைப் பார்த்து மகிழ்ந்தவர், அவரும் அவர்களுடன் சாப்பிட உட்கார்ந்தார். அதைப் பார்த்த மீனாட்சியின் முகத்தில் வெறுப்பு வெளிப்படையாகத் தெரிந்தது.

"அப்பா, நான் இந்த வருஷத்தில இருந்து சென்னையிலேயே படிக்கப் போறேன். எனக்கு இங்கேயே ஒரு ஸ்கூல்ல சீட் வாங்கிக் கொடுங்க..." வருண் சொல்ல...

"எதுக்கு இப்ப நீ ஸ்கூல் மாறணும்?" மீனாக்ஷி கேட்க...

"எனக்கு ஹாஸ்டல்ல இருக்கப் பிடிக்கலை... அதுவும் சென்னையிலேயே பெரிய ஸ்கூல்ஸ் இருக்கும் போது... நான் ஏன் ஹாஸ்டல் போகணும்...?" என்று வருண் பதில் கேள்வி கேட்க...

மீனாட்சி, "அதெல்லாம் இல்லை... நீ அங்கதான் படிக்கணும்..." என்றார்.

உடனே கோபப்பட்டுத் தட்டைத் தள்ளிவிட்டு எழுந்த வருண், "என்னைத் திரும்ப ஹாஸ்டல் போகச் சொன்னா... நான் வீட்டை விட்டு எங்கேயாவது ஓடிப் போயிடுவேன்..." என்று மிரட்ட...

இப்போது பதறிய மீனாட்சி, "டேய்... அப்படி எதுவும் பண்ணிடாதடா... நீ இங்கேயே இருந்து படி. நான் நாளைக்கே உனக்கு ஒரு நல்ல ஸ்கூல்ல சீட் வாங்கித் தரேன்..." என்று பணிந்து போக...

வருண், "அப்படி வாங்க வழிக்கு..." என்று சொல்லிச் சிரித்தவன், தட்டை எடுத்துக் கொண்டு சாப்பிட அமர்ந்தான்.

நடந்ததை எல்லாம் ராம்நாத்தும், மீராவும் பார்த்துக் கொண்டே சாப்பிட்டனர்.

வருண், மீராவுடன் நன்றாகப் பழகினான். விடுமுறை தினம் என்பதால் இருவரும் சேர்ந்து காலையில் ஷட்டில் விளையாடச் சென்றனர். அங்கே அர்ஜுனும் வர, மூவரும் சேர்ந்து விளையாடினர். அடிக்கடி வருணும், மீராவும் வெளியே செல்ல ஆரம்பித்தனர்.

மீனாட்சி ஏதாவது சொன்னால் வருண், "எனக்கு வீட்ல தனியா இருக்கப் போர் அடிக்காதா... நீ இப்படி ஏதாவது சொன்னா நான் வீட்டை விட்டுப் போயிடுவேன்..." என்று மிரட்ட... மீனாட்சி, இப்போது நாட்டில் இருக்கும் நிலவரத்தை அறிந்து, அதோடு வருணின் இரண்டும் கெட்டான் வயதை நினைத்து, ஏதாவது ஏடாகூடமா செஞ்சிடப் போறான் என்று அவனுக்குப் பணிந்து போனாள்.

அதோடு, 'மீராவும்தான் தன் படிப்பு முடிந்ததும் ஊரை விட்டுப் போறேன்னு சொல்லி இருக்காளே... அதனால ரெண்டு வருஷம்தானே... தொலையட்டும்...' என்று நினைத்துப் பேசாமல் இருந்தாள்.

மீரா இப்போது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தாள். அதைப் பார்த்து மகிழ்ந்த அர்ஜுன், 'ஹப்பாடா... இனிமே நிம்மதியா ஆஸ்திரேலியா போகலாம். மீரா தனியா இருக்கா மாட்டா...' என்று நினைத்துச் சந்தோஷப்பட்டான்.

திருச்சியில் சஞ்சனா, ரஞ்சனாவிடம் "அக்கா, நீ கல்யாணம் பண்ணிப் போயிட்டேன்னா நான் எப்படி உன்னை விட்டுட்டு இருப்பேன்...?" என்று கண் கலங்க...

அதை உண்மை என்று நினைத்த ரஞ்சனா, "இங்க இருக்கிற சென்னைதானே... நாம அடிக்கடி பார்க்கலாம், நீ வருத்தப்படாதே..." என்று தங்கைக்கு ஆறுதல் சொல்ல...

"அக்கா... நான் சென்னையில வந்து பி.ஜி. பண்றேன், அப்ப அடிக்கடி உன்னைப் பார்க்கலாம்... நீ

தான் அப்பாகிட்ட சொல்லி பர்மிஷன் வாங்கித் தரணும், ப்ளீஸ்...” சஞ்சனா கெஞ்ச... அவளின் திட்டத்தை அறியாத ரஞ்சனா சரி என்றாள்.

15

ஆதியின் திருமணத்திற்குப் பத்திரிகை கொடுக்கும் வேலை மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. மீராவின் வீட்டிற்குப் பத்திரிகை கொடுக்க கணேசன், வித்யா, அர்ஜுன் மற்றும் ஆரு சென்றனர். மீனாட்சிக்குக் கணேசனை நன்றாகத் தெரியும். அவள், அவர்களும் பிசினஸில் இருப்பதால் ராம்நாத்தைப் பார்க்க வந்திருப்பதாக நினைத்து, வந்தவர்களை வரவேற்று அமர வைத்து நன்றாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

அப்போது ராம்நாத்தும் அங்கு வந்து அவர்களை வரவேற்றுப் பேசிக்கொண்டிருந்தார். மீனாட்சி, அவர்களுக்குப் பழரசம் கொடுத்து உபசரித்தாள். மீராவிற்கு அவர்கள் வருவது தெரியாது. அதனால் அவள் அறையில் இருந்தாள்.

கணேசனும், ராம்நாத்தும் அவர்கள் தொழிலைப் பற்றிப் பேச, வித்யா வீட்டைச் சுற்றித் தன் பார்வையை ஓட்டினார். ‘மீரா இவ்வளவு வசதியான வீட்டுப் பொண்ணா...? ஆனால் அவள் ஒரு நாளும் அப்படி நடந்து கொண்டதில்லையே...!’ என்று நினைத்தவர்,

“மீரா எங்கே? கொஞ்சம் வரச் சொல்றீங்களா...? அவளுக்கு நாங்க வர்றது தெரியாது, நாங்க திடீர்னு

தான் கிளம்பி வந்தோம்...” என்று மீனாட்சியிடம் சொல்ல... மீனாட்சியின் முகம் மாறியது. ‘இவங்க எதுக்கு அவளைத் தேடுறாங்க...?’ என்று நினைத்துக் கொண்டே... அங்கே வேலை செய்யும் பெண்ணிடம் மீராவை அழைத்து வரச் சொல்லிவிட்டு வித்யாவையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அர்ஜுன், மீனாட்சியைத்தான் கவனித்துக் கொண்டு இருந்தான். ‘பாரு... மீரான்னு சொன்னதும், இந்த அம்மா மூஞ்சி மாறுவதை. இருக்கட்டும், கல்யாணத்திற்கு அப்புறம் உனக்கு இருக்கு கச்சேரி...’ என்று நினைத்துக் கொண்டான்.

வேலை செய்யும் பெண் வந்து தன்னை மீனாட்சி அழைப்பதாகச் சொல்லவும், மீரா, ‘இன்னைக்கு என்ன குற்றப் பத்திரிகையோ...? என்று பயந்து கொண்டே தன் அறையில் இருந்து வெளியே வந்தவள், மேலிருந்தே கீழே எட்டிப் பார்த்தாள்.

அப்போது அர்ஜுனும் மேலே பார்க்க... மீரா இடைவரை ஒரு சின்ன டாப்பும், த்ரீ போர்த் பாண்ட்டும் அணிந்து கொண்டு நிற்பதைப் பார்த்தவன், முகத்தில் சிரிப்பு வர, அதைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான்.

‘இவங்க வர்றதா சொல்லவே இல்லையே...’ என்று ஆச்சரியப்பட்ட மீரா, வேகமாக அவள் அறைக்குச் சென்று ஒரு சுடிதாரை மாட்டிக் கொண்டு கீழே இறங்கி வந்து கணேசனையும், வித்யாவையும் வரவேற்றுவிட்டு அர்ஜுனைப் பார்த்து புன்னகைத்தவள், ஆருவின் அருகே சென்று அமர்ந்து கொண்டாள். மீனாட்சி

இருந்ததால் மீரா அமைதியாக இருந்தாள். அது அர்ஜுன் குடும்பத்தினர் அனைவருக்கும் புரிந்தது.

மீனாட்சிக்குக் குழப்பமாக இருந்தது. 'இவளுக்கு இவங்களை ஏற்கெனவே தெரியுமா?' என்று யோசித்துக் கொண்டிருந்தாள். பொதுவான பேச்சு வார்த்தை முடிந்து கணேசன் தன் மூத்த மகன் திருமணத்திற்கு அவர்களை அழைக்க வந்ததாகச் சொன்னவர், பத்திரிகையை ஒரு தாம்பாளத்தில் வைத்துக் கொடுக்க... ராம்நாத்தும் சந்தோஷமாக வாங்கிக் கொண்டார்.

ராம்நாத் பத்திரிகையைப் பிரித்துப் பார்த்தவர், "கல்யாணம் திருச்சியிலா...?" என்று கேட்க...

கணேசன், "ஆமாம், ஆனா இங்க சென்னையில வரவேற்பு வச்சிருக்கோம்..." என்றார்.

ராம்நாத், தான் குடும்பத்துடன் வரவேற்புக்கு வருவதாகச் சொல்ல...

"மீராவை நீங்க எங்களோட கல்யாணத்துக்கு அனுப்பி வைக்கணும்... நான் அவளைப் பத்திரமா பார்த்துகிறேன்." வித்யா, மீராவின் அப்பாவிடம் கேட்க... அவர் மீராவை பார்த்தார்.

அவளுக்குப் போக விருப்பம் என்று அவள் முகமே சொல்ல... "சரி, அழைச்சிட்டுப் போங்க..." என்று அவர் சம்மதம் கொடுக்க... மீராவின் முகம் மலர்ந்தது.

மீராவும், அர்ஜுனும் ஒருவரை ஒருவர் பார்ப்பதைக் கவனமாகத் தவிர்த்தனர். இருவரும், மீராவின் வீட்டிற்கு

அவர்கள் காதலிப்பது இப்போது தெரிய வேண்டாம் என்று நினைத்தனர். 'மீராவும், ஆருவும் தோழிகள்... அதனால்தான் தெரியும் போல...' என்று மீனாட்சி நினைத்துக் கொண்டாள்.

கணேசன், ராம்நாத்திடம் விடைபெற... அவர், "சாப்பிட்டுப் போகலாமே..." என்றார்.

"இல்லை, இன்னொரு நாள் வரோம்... இப்ப நிறைய வேலை இருக்கு..." என்றவர், வித்யாவைப் பார்க்க...

அவர் மீனாட்சியிடம், "நீங்க எல்லோரும் கண்டிப்பா வரவேற்புக்கு வரணும்..." என்று சொல்லிக் கிளம்ப... அர்ஜுனும் ராம்நாத்திடம் சொல்லிக்கொண்டு கிளம்பினான். மீரா, அவர்களைக் கார் வரை சென்று வழி அனுப்பிவிட்டு வந்தாள்.

திருமணத்தை ஞாயிற்றுக்கிழமைதான் வைத்திருந்தனர். வெள்ளிக்கிழமை மதியமே ஒரு ஏ.சி. பஸ்சில் உறவினர்களுடன் கணேசனும், வித்யாவும் திருச்சியைக் நோக்கிக் கிளம்பினார்கள். இரவு உணவிற்குத் திருச்சிக்குச் சென்று விட வேண்டும் என்று நினைத்தனர். அங்கே மூன்று நாட்கள் ஹோட்டலில் தங்கினால் அதிகச் செலவு ஆகும் என்று ஒரு பெரிய வீட்டை வாடகைக்கு எடுத்து இருந்தனர்.

பஸ்சில் நெருங்கிய உறவினர்கள் மட்டும்தான் இருந்தனர். சிலர் திருமணத்தன்று வருவதாகவும் இன்னும்

சிலர் வரவேற்புக்கு வருவதாகவும் சொல்லி இருந்தனர். கணேசனின் தம்பி குடும்பம், வித்யாவின் பெற்றோர், வித்யாவின் அக்கா குடும்பம், இன்னும் சில உறவினர்கள்... அத்தோடு மீரா, சூர்யா மற்றும் ஆதியின் நண்பர்கள்தான் பஸ்ஸில் இருந்தனர். கணேசனும் அவரது நண்பர்களும் காரில் வந்தனர்.

முதலில் ஒரு பிள்ளையார் கோவிலில் நிறுத்திச் சாமி கும்பிட்டுவிட்டு, அருகில் இருந்த சரவணபவன் சென்று மதிய உணவு அருந்திவிட்டுக் கிளம்பினார்கள். வீட்டில் இவ்வளவு பேருக்கு பந்தி பரிமாறினால்... கிளம்ப நேரம் ஆகிவிடும் என்று ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டுக் கிளம்பினர்.

ஆதி, ஆதியின் நண்பர்கள், அர்ஜுன் மற்றும் சூர்யா எல்லோரும் கடைசி இரண்டு வரிசையில் அமர்ந்து இருந்தனர். உறவினர்களின் சின்னப் பிள்ளைகளுடன் சேர்ந்து மீரா விளையாடிக் கொண்டு வந்தாள். அர்ஜுன் அவளைப் பார்த்துக் கொண்டி ருந்தான்.

"டேய்... உன்னோட ஆளு என்னடா எப்பவும் சின்னப் பசங்களோடேயே விளையாடுறா...?" சூர்யா கிண்டல் செய்ய...

"ம்ம்... அதை ஏன்டா கேட்குற... நாங்க முதல் தடவை வெளிய போன போதும் அங்கிருந்த குட்டீஸ் கூடத் தான்டா விளையாடினா... எங்க போனாலும் இதே வேலைதான்..." அர்ஜுன் சலித்துக் கொள்ள...

"சீக்கிரம் உங்க குழந்தையோட விளையாட ஏற்பாடு பண்ணு..." என்ற சூர்யாவைப் பார்த்து முறைத்த அர்ஜுன்,

"டேய், எதுக்குடா இப்படிக் கிளப்பி விடுற... அவ இப்பதான் மூணாவது வருஷம் படிக்கிறா, எங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணிக்கிற வயசா...?" எனக் கேட்க...

"இல்லை, நீ அவளையே பார்த்திட்டு இருந்தியா... அதுதான் நீ என்ன நினைப்பில இருக்கேன்னு சும்மா டெஸ்ட் பண்ணக் கேட்டேன்..." என்றான் சூர்யா கூலாக.

"நீ எல்லாம் டெஸ்ட் பண்ற நிலைமையில நான் இருக்கேன்... எல்லாம் நேரம்டா..." அர்ஜுன் அவனுக்கு முன் சீட்டில் அமர்ந்து இருந்த சின்னப் பிள்ளைகளை எழுப்பி, "போங்க... அங்க ஒரு அக்கா இருக்காங்க பாருங்க, அவங்க கூடப் போய் விளையாடுங்க, உங்களை எல்லாம் பார்த்துக்கத்தான் அவங்க வந்திருக்காங்க..." என்று மீராவைக் கைகாட்டி அவர்களை அனுப்பிவிட்டு, அந்தச் சீட்டில் கால் நீட்டிப் படுத்து விட்டான். அவனுக்குக் கல்யாண அலைச்சல் அதிகம். அதனால் தூக்கம் கண்ணைச் சுழற்றியது.

சூர்யா, ஆருவைப் பார்க்க... அவள் யாருடனோ அரட்டை அடித்துக் கொண்டிருந்தாள். 'வாயே மூட மாட்டா போலிருக்கு...' சூர்யா நினைக்க...

அப்போது ஆருவும் எதேச்சையாகச் சூர்யாவைப் பார்த்தாள்.

இருவரும் சிறிது நேரம் ஒருவரை ஒருவர் பார்க்க... சூர்யா, 'என்ன?' என்பது போல் அவளைப் பார்த்துப் புருவத்தை உயர்த்த... 'ஒண்ணும் இல்லை...' என்று தலையசைத்த ஆரு, திரும்பி அருகில் இருந்தவருடன் பேச ஆரம்பித்தாள்.

சூர்யாவின் கண்கள் அவன் கட்டுப்பாட்டையும் மீறி அடிக்கடி ஆருவிடமே சென்றது. 'இது என்ன வம்பாப் போச்சு...' என்று நினைத்தவன், ஜன்னல் பக்கம் திரும்பி வேடிக்கை பார்க்கத் துவங்கினான்.

இரவு எட்டு மணிக்குத் திருச்சிக்குச் சென்று சேர்ந்தவர்களை ரஞ்சனாவின் அப்பாவும், சஞ்சனாவும் வந்து வரவேற்றனர். அவர்கள் வீட்டில் இருந்து பக்கத்தில் தான் இவர்களுக்குப் பார்த்த வீடு இருந்தது. இரண்டு மாடிகளைக் கொண்ட அந்த வீட்டில், உறவினர்கள் எல்லாம் கீழே இருந்த அறைகளிள் தங்கிக்கொள்ள, முதல் மாடியில் இருந்த அறைகளில் ஆருவும், மீராவும் ஒரு அறையிலும், மீதம் இருந்த இரண்டு அறைகளில் ஒன்றில் கணேசனும், அவரது நண்பர்களும் தங்கிக் கொள்ள... மற்றொரு அறையில் அர்ஜுனும், சூர்யாவும் தங்கிக் கொண்டனர். இரண்டாம் மாடியில் இருந்த அறைகளில் ஆதியும், அவன் நண்பர்களும் தங்கிக் கொண்டனர்.

எல்லோரும் அலுப்புத் தீரக் குளித்துக் கீழே இறங்கி வந்தனர். அவர்களுக்கு உணவு தயாராக இருந்தது. சாப்பிட்டதும் ஹாலில் ஆளுக்கு ஒரு

மூலையில் உட்கார்ந்து பேசிக் கொண்டு இருந்தனர். ஆருவுக்கு மீரா மெஹந்தி போட்டுவிட... அதைப் பார்த்து, வந்திருந்த உறவினர்கள் குழந்தைகளும் வந்து கை நீட்ட... மீரா குழந்தைகளுக்கு அராபிக் டிசைன் போட்டு விட்டாள்.

அவள் அழகாகப் போட்டுவிடுவதைப் பார்த்துப் பெரியவர்களும் வந்து கை நீட்ட... மீரா அவர்களுக்கும் போட்டுவிட்டாள். நிறையப் பேருக்குப் போட்டதில் அவள் விரல்கள் வலிக்கத் தொடங்கியது. அடிக்கடி விரல்களை நீட்டி, மடக்கிக் கொண்டாள். ஆனால், அப்போதும் கேட்பவர்களுக்குப் போட்டுவிட்டுக் கொண்டேதான் இருந்தாள்.

மீராவைக் கவனித்த வித்யாவின் அக்கா, "பாவம்... அவளை விடுங்க. எத்தனை பேருக்கு போடுவா... அவளுக்குக் கை வலிக்கும்..." என்றதும்தான் மனசில்லாமல் அவளை விட்டனர்.

"நாளைக்குக் காலையில போட்டு விடறேன், சாயங்காலம் தான ஃபங்ஷன். ஒரு மணி நேரம் வச்சிருந்தா போதும்..." என மீரா அவர்களுக்குச் சமாதானம் சொல்ல... அவளின் நல்ல குணத்தை அனைவரும் மெச்ச... வித்யா தனது அக்காவிடம், "மீரா எவ்வளவு வசதியான வீட்டுப் பொண்ணு தெரியுமா? இருந்தாலும் எல்லோர்கிட்டேயும் பிரியமா இருப்பா..." என்றார்.

எல்லோரும் படுக்கச் சென்ற பின்னர் மீராவும் ஆருவும் மொட்டை மாடிக்குச் சென்றனர். ஆதியும் அவன்

நண்பர்களும் இரண்டாவது மாடியின் ஹாலில் அமர்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர்.

மீரா, ஆருவின் இன்னொரு கைக்கு மெஹந்தி போட்டுவிட... அர்ஜுனும், சூர்யாவும் அங்கே வந்து அவர்களோடு அமர்ந்தனர்.

மீரா, மற்றவர்களுக்கு அராபிக் டிஸைன்தான் போட்டாள். ஆனால் ஆருவுக்கு கை முழுதும் நெருக்கமாகப் போட்டுவிட்டாள். ஆருவுக்குப் போட்டுவிட்டு தன்னுடைய இடது கையில் மீரா அவளே அவளுக்கு அராபிக் டிஸைன் போட்டுக் கொண்டாள். அப்போது ஆதியும் வந்து அவர்களுடன் உட்கார்ந்தான்.

மீராவிற்குக் கை ரொம்ப வலிக்க ஆரம்பித்து விட்டது. அதைக் கவனித்த அர்ஜுன், ஒரு கப்பில் சுடு தண்ணீர் கொண்டு வந்து மீராவை அதற்குள் சிறிது நேரம் கையை வைத்துக் கொள்ளச் சொன்னவன், அவள் விரல்களைப் பிடித்து நீவி விட்டான்.

"விடுங்க அர்ஜுன், யாராவது வரப்போறாங்க."

"அதெல்லாம் யாரும் வர மாட்டாங்க, எல்லோரும் தூங்கிட்டாங்க..." என்ற அர்ஜுன், ஆருவைப் பார்த்து, "நீ பியூட்டி பார்லர்ல போய் மெஹந்தி போட வேண்டியது தானே...? எதுக்குடி என் பொண்டாட்டி கையை உடைக்கிற?" என்று ஆருவை வம்பு இழுக்க...

ஆரு, "என்னது... பொண்டாட்டியா...?" என்று வாயைப் பிளந்தவள், "கல்யாணத்துக்கு முன்னாடியே

இப்படி இவளுக்குக் கூஜா தூக்குறியே... கல்யாணத்துக்கு அப்புறம் என்னை யாருன்னு கேட்ப போல..." அவள் பதிலுக்கு அர்ஜுனை வம்பு இழுக்க...

"அது என்ன கல்யாணத்துக்குப் பின்ன? இப்பவே கேட்கிறேன். நீ யாரு? கல்யாணத்திற்கு வந்திருக்கிற சொந்தக்கார பொண்ணா...?" அர்ஜுன் தெரியாதவர் களிடம் கேட்பது போல் கேட்டு வைக்க... அதைக் கேட்டு மற்றவர்கள் சிரிக்க... ஆரு, அர்ஜுனை அடிக்கக் கை ஓங்க... சூர்யா வேகமாக, 'கையில மருதாணி இருக்கு..." என்று ஆருவுக்கு ஞாபகப்படுத்தினான்.

சூர்யாவைப் பார்த்து "தேங்க்ஸ்..." என்றவள், "நாத்தனார்னா சும்மாவா... அதெல்லாம் நான் கொடுமை பண்ணுவேன்... ஏன், உன் பொண்டாட்டி என்ன தேஞ்சா போயிடுவா...?" ஆரு கெத்தாகக் கேட்க...

"நீ பெரிய கொத்தனாராவே இருந்தாலும், என் பொண்டாட்டியைக் கொடுமைப்படுத்துற வேலை எல்லாம் வச்சுக்காதே... உனக்குத்தான் இன்னொரு அண்ணி இருக்காங்கல்ல... நீ அவங்ககிட்ட உன்னோட வீறாப் பைக் காட்டு..." என அர்ஜுன் சொல்ல...

"ஏன், என் பொண்டாட்டி மட்டும் என்ன பாவம் செஞ்சா...?" ஆதி கேட்க...

"யு டூ பிக் பிரதர்...?" என்றவள், தொடர்ந்து, "நீங்க எல்லாம் எனக்கு அண்ணன்களா...? தூ... போங்கடா... எனக்கும் ஒருத்தன் வருவான், அப்புறம் இருக்கு உங்களுக்கு..." என்றாள் கெத்தாக.

"நாங்களும் அந்தப் பாவப்பட்ட ஜென்மம் யாருன்னு பார்க்க ரொம்ப ஆவலாத்தான் இருக்கோம்..." அர்ஜுன் நக்கலடிக்க... ஆருவுக்குக் கோபம் வந்து விட்டது. அவள் எழுந்து தனியே சென்று நின்று கொண்டாள். நடந்ததைப் பார்த்துக் கொண்டிருந்த சூர்யாவுக்கும் அர்ஜுனின் மீது கோபம்தான்.

"எதுக்கு இப்ப அவளை வம்பு இழுக்குறீங்க...?" மீரா, அர்ஜுன் முதுகில் அடித்தவள், "ஆரு, நீ இங்க வா... நான் உனக்குக் கை முன்னாடிப் பக்கமும் மெஹந்தி போடுறேன்." அவள் கூப்பிட... ஆரு திரும்பாமல் நின்றாள்.

ஆதியும், அர்ஜுனும் எழுந்து ஆருவின் அருகே சென்று, இருவரும் அவள் தோளில் கை போட்டுக் கொண்டனர். ஆதி, "சீ... இதுக்கெல்லாம் யாராவது கோவிச்சிப்பாங்களா...?" என்றான்.

அர்ஜுன், ஆருவை இழுத்துக் கொண்டு மீராவின் அருகே வந்து, "உனக்கு இல்லாத உரிமையா...? நீ மீராவைக் கொத்தனார் கொடுமை, சாரி... நாக்கு ஸ்லிப் ஆகிடுச்சு... நீ நாத்தனார் கொடுமை தாராளமா பண்ணிக்கலாம். வேணா ரெண்டு அடி கூட அடிச் சிக்கோ..." என்றவன், மீராவிடம், 'சும்மா...' என்று கண் ஜாடை காட்ட... மீரா அர்ஜுனைப் பார்த்துச் சிரித் தவள், ஆருவின் கையில் மெஹந்தி போட ஆரம் பித்தாள்.

"உனக்குக் கை வலிக்கும், வேண்டாம் மீரா..." ஆரு சொல்ல...

"நான் என்ன தினமுமா போடறேன், இன்னைக்கு ஒரு நாள் தானே... பரவாயில்லை. நான் இது மாதிரி கல்யாணத்திற்கு எல்லாம் போனது இல்லை. எனக்கு அஞ்சு வயசு இருக்கும் போதே எங்க அம்மா, அப்பா பிரிஞ்சுட்டாங்க. சின்ன வயசுல எங்க தாத்தா, பாட்டி கூடப் போய் இருக்கேன். அப்புறம் விவரம் தெரிஞ்சதுக்கப்புறம் என்கிட்டே எங்க அம்மா, அப்பாவைப் பத்தியே பேசுறாங்கன்னு... நான் யார் வீட்டுக் கல்யாணத்துக்கும் போனது இல்லை.

"இப்ப மூணு வருஷமாத்தான் எங்க அப்பா வோட இருக்கேன். எங்க சித்தி என்னை எந்தக் கல்யாணத்துக்கும் அழைச்சிட்டுப் போக மாட்டாங்க. நான் ரொம்ப வருஷம் கழிச்சு வந்திருக்கிற கல்யாணம் இது தான். அதுவும் இது நம்ம வீட்டுக் கல்யாணம். இதுல வேலை செய்ய எனக்கு ஒண்ணும் கஷ்டம் இல்லை... சந்தோஷம்தான்." மீரா, ஆருவுக்கு மெஹந்தி போட்ட படியே பேசிக்கொண்டிருந்தாள்.

அவள் இதுவரை தன்னைப் பற்றி அர்ஜுனைத் தவிர யாரிடமும் சொன்னது இல்லை. இன்றுதான் மனம் திறந்து பேசுகிறாள். அவள் சொன்னதைக் கேட்டு ஆளுக்கொரு சிந்தனையில் இருக்க... சூர்யாவிற்கு அன்றைக்குப் பார்த்த ஆல்பத்தில், மீரா எல்லாப் புகைப்படத்திலும் ஏன் தனியாக இருந்தாள் என்று இப்போது புரிந்தது.

"உங்க அம்மா எங்கே மீரா இருக்காங்க? அவங்க உன்னைப் பார்க்க வருவாங்களா...?" ஆரு கேட்க...

"அவங்க லண்டன்ல இருக்காங்க, அவங்களுக்கு ரெண்டு பசங்க இருக்காங்க. எப்பவாவதுதான் இந்தியா வருவாங்க. என்னை ஏதாவது பொது இடத்துக்கு வர வச்சுப் பார்த்திட்டுப் போயிடுவாங்க..." என்றாள்.

அவள் குரலில் வருத்தமோ, சோகமோ இல்லை. ஏதோ தகவல் சொல்வது மாதிரி சொல்லிவிட்டு, அவள் வேலையைப் பார்த்தாள்.

மீரா மெஹந்தி போட்டதும் எல்லோரும் எழுந்து படுக்கச் சென்றனர்.

மறு நாள் காலையில் மீராவும், ஆருவும் தாமதமாகத்தான் எழுந்தனர். மீரா நேற்று மெஹந்தி போடாமல் விட்டவர்களுக்கு இன்று போட்டுவிட்டுக் கொண்டிருந்தாள். ஆளுக்கொரு வேலை இருந்தது. சஞ்சனா இந்த வீட்டிற்கும், அவள் வீட்டிற்கும் நடையாக நடந்தும், அர்ஜுனுடன் அவளால் பேச முடியவில்லை. அவன் சூர்யாவோடே இருந்தான்.

மாலையில் முதலில் ஆண்கள் கிளம்பி மண்டபத்திற்குச் சென்று விட்டனர். பெண்கள் மட்டும் மெதுவாகக் கிளம்பிக் கொண்டு இருந்தனர். மண்டப வாசலில் காரில் இருந்து இறங்கிய மீராவைப் பார்த்த அர்ஜுன், "வாவ்...!" என்றான்.

மீரா, சந்தன நிறத்தில் அடர் சிகப்பு நிறப் பார்டர் வைத்த பட்டுப் புடவை அணிந்து இருந்தாள். அவள் அணிந்து இருந்த சிவப்பு நிற ஜாக்கெட்டில் அழகான வேலைப்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது. கழுத்தில் ஒரு

ஆரமும், சின்ன நெக்லஸும், அதற்குப் பொருத்தமான தோடும், கை நிறைய வளையல்களும் போட்டிருந்தாள்.

தலையில் மல்லிகைப் பூ வைத்து, மிதமான ஒப்பனையில் கண்ணையும், மனதையும் கவர்ந்தவளை விட்டுப் பார்வையை அர்ஜுனால் திருப்பவே முடிய வில்லை.

16

அர்ஜுன், மீராவையே பார்க்க... "அடங்குடா... இப்படிப் பார்த்தேன்னு வை, இன்னைக்கே உங்க அம்மாட்ட மாட்டிப்பே..." எனச் சொன்ன சூர்யா, தற்செயலாக நிமிர்ந்து பார்க்க... அங்கே காரின் மறு பக்கத்தில் இருந்து இறங்கிய ஆருவைப் பார்த்தான்.

அதோடு அவன் அர்ஜுனை மறந்து, ஆருவைப் பார்க்க ஆரம்பித்தான்.

ஆரு, அடர் பச்சையில் செல்ப் பார்டர் வைத்த புடவை அணிந்து, அதற்குப் பொருத்தமான தங்க நகைகளுடன், அவள் அண்ணனின் திருமணம் என்பதால் கூடுதலாக ஒட்டியாணம், கைகளில் வங்கி அணிந்து, ஜடையில் கற்களாலான சின்னச்சின்ன மயில்களை வரிசையாக வைத்திருந்தாள். ஆள் பார்க்க மிகவும் அழகாக இருந்தாள்.

மீரா, ஆருவோடு சேர்ந்து மற்றவர்களும் மண்டபத்தின் உள்ளே சென்றனர். அர்ஜுனும், சூர்யாவும்

தங்களுக்கு வந்த சோதனையை நினைத்துக் கொண்டே உள்ளே சென்றனர்.

ஆரு, ரஞ்சனாவைப் பார்க்க மீராவையும் அழைத்துக் கொண்டு சென்றாள். ரஞ்சனா இருந்த அறைக் கதவைத் தட்டிவிட்டு ஆரு திறக்க... லைட் ரோஸ் கலர் பட்டுப் புடவையில் மணமகள் அலங்காரத்தில் அசத்தலாக இருந்த ரஞ்சனா, அவளைப் பார்த்துப் புன்னகையுடன், "வா ஆரு... எப்படி இருக்க...? எப்ப வந்தீங்க...?" என்று தன் நாத்தனாரைப் பார்த்துக் கேட்டவள், மீராவை யாரென்று பார்க்க...

"நல்லா இருக்கேன் அண்ணி, இப்பதான் வந்தோம். இவ மீரா, என்னோட ப்ரெண்ட்..." ஆரு அறிமுகம் செய்ய... ரஞ்சனாவும், மீராவும் ஒருவருக்கொருவர் ஹாய் சொல்லிக் கொண்டனர்.

"அண்ணி... எங்க போட்டோகிராபர், உங்களைப் போட்டோ எடுக்க நீங்க ரெடியான்னு பார்த்திட்டு வரச் சொன்னார், நான் போய் அவரை அழைச்சிட்டு வரேன்..." என்ற ஆரு, மீராவை அங்கயே இருக்கச் சொல்லிவிட்டுச் சென்றாள்.

மீரா, ரஞ்சனாவைப் பார்த்து, "அழகா இருக்கீங்க..." என்று சொல்ல... அவளை அழகு என்று சொன்ன மீரா, தன்னைவிட மிகவும் அழகானவள் என்பதை ரஞ்சனா உணர்ந்தாள். பால் போல் வெள்ளை நிறத்தில், களையான முகத்துடன் லேசான ஒப்பனையிலேயே

ரதியைப் போன்று இருந்த மீராவைப் பார்த்து, 'இன்னைக்கு மண்டபத்தில எல்லோரும் இவளைத்தான் பார்க்கப் போறாங்க..." என்று நினைத்தாள்.

ஆரு போடோகிராபரை அழைக்கச் சென்றபோது அவள் எதிரில் வந்த சூர்யாவைப் பார்த்துப் புன்னகைக்க... "உங்க அண்ணன் கல்யாணமா...? இல்லை உனக்குக் கல்யாணமா...?" சூர்யா கேட்க...

ஆரு புரியாமல் அவனைப் பார்த்து, "ஏன் அப்படிச் சொல்றீங்க...?" என்றதும்,

"நீதான் பார்த்தா கல்யாணப் பொண்ணு மாதிரி இருக்க... ஒரு வேளை உனக்குத்தான் கல்யாண மோன்னு நினைச்சேன்..." என்றான். ஆரு அவனைப் பார்த்து முறைத்துவிட்டுச் சென்றாள்.

சற்று தூரம் சென்றதும் ஆரு திரும்பி சூர்யாவைப் பார்க்க... அவனும் அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான். ஆருவுக்கு அவனைப் பார்த்ததும் வெட்கம் வர, வேகமாக அங்கிருந்து சென்றாள்.

சஞ்சனா, அவள் அக்கா அறைக்கு வர... அங்கிருந்த மீராவைப் பார்த்து, 'இவ எதுக்கு இங்க இருக்கா...?' என்று நினைத்துக் கொண்டே உள்ளே வந்தாள்.

மீரா, சஞ்சனாவைப் பார்த்து "ஹாய்..." என்று சொல்ல.... அதைக் கவனிக்காதது போல் அவள் அக்காவிடம், "நீ ரெடியா ரஞ்சு... மேடைக்குப்

போலாமா...?" என்று கேட்க... அப்போது ஆரு போட்டோ மற்றும் வீடியோ எடுப்பவருடன் உள்ளே வந்தாள்.

சஞ்சனாவைப் பார்த்த ஆரு, அவளைப் பார்த்து லேசாகப் புன்னகைத்து விட்டு மீராவின் அருகே சென்று நின்று கொண்டாள். முதலில் ரஞ்சனாவை மட்டும் வைத்துத் தனியாகப் போட்டோ எடுத்ததும், அடுத்து ரஞ்சனாவும், ஆருவும் சேர்ந்து போட்டோ எடுத்துக் கொண்டனர்.

ஆரு, "நீயும் வா மீரா..." என்று மீராவையும் அழைக்க... ரஞ்சனா, ஆரு மற்றும் மீரா மூவரும் சேர்ந்து போட்டோ எடுத்துக் கொண்டனர்.

சஞ்சனா, அனார்கலி நெட்டெட் சுடிதார் அணிந்து இருந்தாள். சுடிதார் என்றால் சின்னப் பெண் மாதிரி இருக்கும் என்று நினைத்தாள். ஆனால் இப்போது ஆருவையும், மீராவையும் பார்த்ததும், தானும் புடவையே கட்டி இருக்கலாமோ என்று தோன்றியது.

அதற்கு ஏற்றாற்போல் ரஞ்சனாவும், "சஞ்சு... நீயும் புடவையே கட்டி இருக்கலாம்..." என்று சொல்ல... ரஞ்சனாவுக்குக் கோபம் வந்துவிட்டது.

அவள், "நான் என்ன கிழவியா, இப்பவே புடவை கட்டிக்க...?" என்று எரிந்து விழ...

"அப்ப உங்க அக்கா கிழவியா? அவங்களும் புடவைதானே கட்டி இருக்காங்க..." ஆரு கிண்டலாகக் கேட்க... சஞ்சனாவிற்கு என்ன சொல்வது என்று தெரிய வில்லை.

அவளைப் பார்த்த ரஞ்சனா, "சரி, மேடைக்குப் போகலாமா...?" என்று பேச்சை மாற்ற... அப்போது யாரோ கதவைத் தட்டினார்கள்.

சஞ்சனா சென்று கதவைத் திறக்க... அங்கே அர்ஜுன் நின்று கொண்டிருந்தான். சஞ்சனா, அர்ஜுனைப் பார்த்து முகம் மலர்ந்தவள், "ஹாய் அர்ஜுன்..." என்றாள்.

சஞ்சனாவிடம் பதிலுக்கு ஹாய் என்றவன், ரஞ்சனாவைப் பார்த்து "ஹாய் அண்ணி, நீங்க ரெடியா...?" என்று கேட்டதும்,

"ரெடி அர்ஜுன், ஒரு நிமிஷம்..." என்றவள், திரும்பிக் கண்ணாடியைப் பார்க்க...

அர்ஜுன், மீராவை ஒரு முறை தலையில் இருந்து கால்வரை கண்குளிரப் பார்த்து விட்டு ஆருவிடம், "அம்மா, உன்னை அண்ணியை அழைச்சிட்டு வரச் சொன்னாங்க..." என்றான். ஆருவும் சரி என்றாள்.

ரஞ்சனா போகலாம் என்றதும், அறையை விட்டு வெளியே வந்தனர். ரஞ்சனாவின் ஒருபுறம் சஞ்சனாவும் மறுபுறம் ஆருவும் நிற்க... ஆரு, "நீயும் வா மீரா..." என்றாள். மீராவும் சென்று ஆருவின் அருகே நிற்க, எல்லோரும் சேர்ந்து மேடையை நோக்கிச் சென்றனர். அர்ஜுன் சற்றுப் பின்னே நடந்து வந்தான்.

சஞ்சனாவிற்கு மீராவின் அழகு மேல் பொறாமை தோன்ற... 'இவ மேடைக்கு வந்தா எல்லோரும் இவளைத் தான் பார்ப்பாங்க...' என்று நினைத்தவள், மேடை அருகே

வந்ததும், "மேடையில கூட்டமா நின்னா நல்லா இருக்காது..." என்று மீராவைப் பார்த்துச் சொல்ல... மீரா விலகி நின்றாள்.

சஞ்சனா சொன்னதைக் கேட்ட ஆருவிற்குக் கோபம் வந்துவிட்டது. ஆரு பட்டென்று, "அப்படின்னா நீ வராதே..." என்றவள், ஒரு கையில் ரஞ்சனாவையும், மறு கையில் மீராவையும் பிடித்து அழைத்துக் கொண்டு மேடைக்குச் செல்ல... சஞ்சனா அங்கயே திகைத்து நின்று விட்டாள்.

ரஞ்சனா திரும்பி சஞ்சனாவைப் பார்த்து, "வா..." என்று அழைக்க... 'ஹப்பா...' என்று நினைத்த சஞ்சனா... அவள் அக்காவுடன் சென்று சேர்ந்து கொண்டாள்.

மீரா முகத்தில் எதையும் காண்பிக்கவில்லை, அமைதியாக இருந்தாள். மேடைக்குச் சென்றதும்... ஆரு, ரஞ்சனாவை ஆதியின் அருகே நிற்க வைக்க... மீரா மேடையில் இருந்து மெதுவாகக் கீழே இறங்கிப் பெண்கள் அமர்ந்திருக்கும் இடத்திற்குச் சென்றாள். மீராவைப் பார்த்த அர்ஜுனின் பெரியம்மா, மீராவைத் தன்னோடு அமர வைத்துக் கொண்டார்.

அர்ஜுன், ஆதியின் அருகே சென்று நின்று கொண்டான். மீரா மேடையைப் பார்ப்பதும், கீழே அமர்ந்து இருக்கும் பெண்கள் பேசுவதைக் கேட்பதுமாக இருந்தாள்.

அர்ஜுனின் பார்வை மீரா மீதே இருந்தது. அவன் இத்தனை நாள் பார்த்த பார்வைக்கும் இன்று பார்க்கும் பார்வைக்கும் நிறைய வித்தியாசம் இருந்தது.

அவன் பார்வையில் சிவந்த மீரா, "ஒரு நிமிஷம், இதோ வரேன்..." என் அர்ஜுனின் பெரியம்மாவிடம் சொல்லிவிட்டு, தனியாகச் சென்று அர்ஜுனை செல்லில் அழைத்தாள்.

அர்ஜுன், செல்லில் மீராவின் நம்பரைப் பார்த்ததும் மேடைக்குப் பின்புறம் சென்று போனை எடுத்தான்.

"என்ன மீரா? எதுக்குப் போன் பண்ண...?"

"எதுக்கு என்னையே பார்க்கிறீங்க அர்ஜுன்?"

"நீ பார்க்கிற மாதிரி இருக்க், அதுதான் உன்னையே பார்க்கிறேன். ஏன், நான் உன்னைப் பார்க்கக் கூடாதா?" என்றான் ஏக்கமாக.

அவன் குரலில் இருந்த தாபத்தை உணர்ந்த மீரா, "நீங்க இப்படி என்னையே பார்த்தா... இன்னும் கொஞ்சம் நேரத்தில, நீங்க என்னையே பார்க்கிறது எல்லோருக்கும் தெரிஞ்சிடும்... பரவாயில்லையா...?" என்றாள்.

"தெரிஞ்சா தெரிஞ்சிட்டுப் போகட்டும்." அர்ஜுன் கூலாகச் சொல்ல...

மீரா, "ப்ளீஸ் அர்ஜுன்... என்னையே பார்க்கா தீங்க..." என்றாள்.

"நான் இன்னைக்குத்தான் உன்னைப் புடவையில் பார்க்கிறேன். அதுதான் என்னவோ உன்னையே பார்க்கணும் போல இருக்கு. சரி, இனி கவனமா இருக்கேன்..." என்றதும் மீரா போனை வைக்க... அர்ஜுன் மேடைக்குச் சென்று ஆருவுடன் சேர்ந்து

ஆதியைக் கிண்டல் அடித்தவன், மீராவையும் யாருக்கும் தெரியாத மாதிரி பார்த்துக் கொண்டான்.

ஆதியின் நண்பர்கள் மேடைக்கு வந்ததும், அர்ஜுன், சூர்யாவை அழைத்துக் கொண்டு மீரா அமர்ந்திருந்த இடத்திற்குச் சென்று, அவனும் அங்கேயே அமர்ந்து கொண்டான். அர்ஜுனின் பெரியம்மா அவனைப் பார்த்து, "ஆஸ்திரேலியா போறியாம்..." என்று கேட்க...

"ம்ம்... ஆமாம் போறேன்." என்றான் உற்சாக மில்லாமல்.

"என்னடா, ரொம்ப அலுத்துக்குற... நீதானே போக ஆசைப்பட்ட..."

"அது அப்ப..." அர்ஜுன் சொல்ல...

அதைக் கேட்ட அவனின் பெரியம்மா, "அப்ப, இப்ப..." என்று அவனை ஆச்சரியமாகப் பார்க்க... அர்ஜுன், மீராவை ஒரு பார்வை பார்த்துவிட்டு அமைதியாக இருந்தான்.

அர்ஜுனின் பெரியம்மா, 'என்ன இவன், ஒரு மாதிரி பதில் சொல்றான்...' என்று நினைத்தவர், மீராவைப் பார்த்து, "நீ எப்ப கல்யாணம் பண்ணிக்கப் போற? படிப்பு முடிஞ்சதுமா...? இல்லை, படிச்சு முடிச்சு வேலைக்குப் போன பின்னாடியா...?" என்று கேட்க, அவர் திடீரென்று இப்படிக் கேட்டதும் மீராவிற்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. அவள் அர்ஜுனைப் பார்க்க...

"அவங்க அப்பா பெரிய பிசினஸ்மேன். அப்புறம் அவ எதுக்கு வெளியே வேலைக்குப் போகணும்? அவங்களோட பிசினஸ் பார்த்தாலே போதும்..." என்றான் அர்ஜுன்.

அர்ஜுனின் பெரியம்மா, 'அவளைக் கேட்டா இவன் பதில் சொல்றான்...' என்று நினைத்தவர், "சரி, நீ எப்ப கல்யாணம் பண்ணிக்கப் போற...?" என்று அர்ஜுனைப் பார்த்துக் கேட்க...

"நான் இப்ப கூட ரெடிதான் பெரியம்மா..." என்றான் அர்ஜுன் கூலாக.

"பொண்ணு பார்க்க வேண்டாமா...?" பெரியம்மா அர்ஜுனைப் பார்க்க...

"பொண்ணுதான... பார்த்துட்டாப் போச்சு..." அர்ஜுன், மீராவைப் பார்த்துக் கொண்டே சொல்ல... மீராவிற்குப் பயமாக இருந்தது.

'என்னடா இவன் இப்படிப் பேசுறான்? மாட்டி விட்ருவானோ...?' என்று நினைத்தவள், மேடையைப் பார்க்க... ஆரு, மீராவைப் பார்த்து, "வா..." என்று அழைத்தாள். மீரா, அர்ஜுனிடம் இருந்து தப்பித்தால் போதும் என்று மேடைக்குச் சென்றாள்.

மேடையில் ஆரு, "எனக்கு ரெஸ்ட் ரூம் போகணும் மீரா... நீ கொஞ்ச நேரம் மேல நின்னு, வர்ற கிட்ட வாங்கி வை, நான் கொஞ்ச நேரத்தில் வந்திடுறேன்..." என்று சொல்லிவிட்டுச் செல்ல... மீரா, ஆதியின் அருகே நிற்காமல், சற்றுத் தள்ளி நின்றாள்.

ஆதி, மீராவை அருகில் அழைத்து ரஞ்சனாவிற்கு அறிமுகம் செய்ய, ரஞ்சனா, "தெரியும்..." என்றாள்.

"அர்ஜுன் சொன்னானா...?" ஆதி சிரித்துக் கொண்டே கேட்க...

"இல்லை... ஆரு சொன்னாள்..." என்றாள் ரஞ்சனா.

சஞ்சனாவின் தோழிகள் மேடைக்கு வர... அவர்களைச் சஞ்சனா ஆதிக்கும், ரஞ்சனாவிற்கும் அறிமுகம் செய்தாள். போட்டோ எடுத்ததும், சற்றுத் தள்ளி வந்த தோழிகள் கூட்டம்... "சஞ்சு, உன்னோட ஆள் சூப்பர்... சஞ்சனா - அர்ஜுன் பேர் பொருத்தம் கூடச் சூப்பர்..." என்று சொல்லிச் சிரிக்க... மேடையில் ஓரமாக நின்ற மீரா, அவர்கள் பேசுவதைக் கேட்டு அதிர்ந்தாள்.

மேடையில் இருந்து கீழே இறங்கிய சஞ்சனாவும், அவள் தோழிகளும் அர்ஜுன் அமர்ந்திருந்த இடத்தின் அருகே சென்று அமர்ந்தனர். சஞ்சனா அப்போதுதான் அங்கிருந்த அர்ஜுனைப் பார்ப்பது போல் பார்த்து, "நீங்களும் இங்கதான் இருக்கீங்களா...?" என்றவள், அவள் தோழிகளிடம் அர்ஜுனை அறிமுகப்படுத்த...

அவள் தோழிகளில் ஒருத்தி, "நீங்க பார்க்க ஆக்டர் அஜித் மாதிரி இருக்கீங்க..." என்று சொல்ல.... அர்ஜுன் சத்தமாகச் சிரித்தான்.

"நான் அஜித் மாதிரி இருக்கேனா...?" என்றவன், அருகில் இருந்த சூர்யாவைப் பார்த்துக் கண் சிமிட்டி

விட்டு, "அப்புறம் வேற யார் மாதிரி இருக்கேன்...?" என்று ஆர்வமாகக் கேட்பது போல் கேட்க..

"நிஜமாத்தான் சொல்றேன்..." என்ற அந்தத் தோழி சஞ்சனாவைப் பார்த்து, "இவரு பார்க்க ஆக்டர் அஜித் மாதிரி தானே இருக்காரு...?" என்று கேட்க...

சஞ்சனாவும் "ஆமாம்..." என்று அர்ஜுனைப் பார்த்து வெட்கப்பட... இதை எல்லாம் மேடையில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த மீராவின் பி.பி. ஏறியது.

அர்ஜுனும், சூர்யாவும் அடக்க முடியாமல் சிரித்துக் கொண்டிருந்தனர். ஆரு மேடைக்கு வந்ததும், மீரா கீழே இறங்கி வந்தவள், அர்ஜுனின் பெரியம்மா அருகில் சென்று அமர்ந்தாள்.

"நான் அஜித் மாதிரி இருக்கேனா...? சரி, அப்படியே இந்த மண்டபத்தில யாரு ஷாலினி மாதிரி இருக்காங்கன்னு சொன்னீங்கன்னா, எனக்குக் கொஞ்சம் வசதியா இருக்கும்." அர்ஜுன் வேண்டுமென்றே சத்தமாகச் சொல்ல... மீரா, அர்ஜுனைப் பார்த்து முறைக்க...

அவன் மீராவைக் கண்டு கொள்ளாமல், "பரவாயில்லை, சொல்லுங்க..." என்று மீண்டும் கேட்க... தோழிகள் கூட்டத்திற்கு சஞ்சனாவின் பெயரைச் சொல்லலாமா வேண்டாமா என்று தெரியவில்லை. இன்னொன்று, அவர்களுக்கே அப்படிச் சொல்ல மனது இல்லை. அவர்கள் என்ன சொல்வது என்று தெரியாமல் முழிக்க...

அர்ஜுனின் பெரியம்மா, "நான் சொல்றேன்..." என்றவர், மண்டபத்தைச் சுற்றிப் பார்க்க, எல்லோரும் அவர் யாரைச் சொல்லப் போகிறாரோ என்று ஆவலாகப் பார்த்தனர். மீரா, 'இது வேறயா...?' என்ற நினைத்தவள், அர்ஜுனைப் பார்த்து மீண்டும் முறைத்தாள்.

அர்ஜுனின் பெரியம்மா, "நீ அஜித்னா... நம்ம மீரா தான் ஷாலினி..." என்று சொல்ல... அர்ஜுன், மீரா இருவரின் முகமும் மலர்ந்தது. ஆனால், அதை மற்றவர்கள் பார்க்கும் முன் மறைத்தனர். தோழிகள் கூட்டம், "யார் மீரா...?" என்று கேட்க... சூர்யா, மீராவைக் காட்டினான்.

மீராவைப் பார்த்ததும் சஞ்சனாவின் தோழிகள், "இவ்வளவு அழகா...?" என்று வியந்தவர்கள், சஞ்சனாவை சாரி என்பது போல் ஒரு பார்வை பார்த்துவிட்டு, அர்ஜுனிடம் விடைபெற்றுச் சென்றனர். சஞ்சனாவும் மேடைக்குச் சென்றாள்.

அர்ஜுன் அவன் பெரியம்மாவிடம், "மீராவைப் போய் எப்படி ஷாலினின்னு சொன்னீங்க...? மீரா பார்க்க அவங்களை மாதிரியா இருக்கா...?" என்று வியக்க...

"நீ மட்டும் என்ன பார்க்க அஜித் மாதிரியா இருக்க...?" என்று பதில் கேள்வி கேட்டார். அர்ஜுன் இல்லை என்று தலை ஆட்ட...

"அந்தப் பொண்ணுங்க உன்கிட்ட ஜொள்ளுவிட... உன்னை அஜித்னு சொன்னாங்க. நான், நீ மீராவைப்

பார்த்து ஜொள்ளு விடுறதை வைத்து... மீரா, ஷாலினி மாதிரி இருக்கான்னு சொன்னேன். நான் சொன்னது சரியா...?" பெரியம்மா, அர்ஜுனை ஆவலாகப் பார்க்க....

அர்ஜுன் சிரித்துக் கொண்டே தன் தலையைக் கோதியவன், "அப்படியா...?" என்று அவரையே பதிலுக்குக் கேட்டுவிட்டு அங்கிருந்து நழுவினான்.

'கத்தரிக்காய் முத்தினா கடைத் தெருவுக்கு வந்து தானே ஆகணும்...? அப்ப இருக்கு உனக்கு...?' என்று நினைத்த பெரியம்மா, மீராவைப் பார்க்க... அவள் இவர்கள் பேசியது எதையும் கேட்காதது போல் மேடையையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

பெரியம்மா, "என்ன ஒரு ஆக்டிங்டா சாமி. இப்பவே கண்ணைக் கட்டுதே..." என்று சொல்லிக்கொண்டே சாப்பிடச் சென்றார்.

17

இரவு ஒன்பதரைக்குக் கூட்டம் குறைந்தது. இரண்டு பக்க நெருங்கிய உறவினர்கள் மட்டும்தான் மண்டபத்தில் இருந்தனர். எல்லோரும் சேர்ந்து சாப்பிடச் சென்றனர். ஆதி, ரஞ்சனாவோடு ஆருவும், சஞ்சனாவும் சாப்பிடச் செல்ல... மீரா அவர்களோடு செல்லாமல், அர்ஜுனின் பெரியம்மாவின் அருகே சென்று அமர்ந்தாள்.

அப்போது அவளைப் பார்த்த வித்யா, "மீரா சாப்பிடுடா... உன்னைக் கவனிக்கவே முடியலை..." என்று மீராவிடம் அக்கறையாகச் சொல்ல...

அர்ஜுனின் பெரியம்மா, 'அதுதான் உன் பையன் அவளை மட்டும் தானே கவனிக்கிறான், அது பத்தாதா...?' என்று மனதில் நினைத்தவர், "நான் பார்த்துக்கிறேன் வித்யா, நீ கவலைப்படாதே..." என்றார். வித்யாவும் சரி என்று அங்கிருந்து சென்றார்.

அப்போது அர்ஜுன் அங்கே வந்தான். வந்தவன் எதிரில் இருந்த இருக்கைக்குச் செல்ல... அவனை அழைத்த பெரியம்மா, "அர்ஜுன்... இந்தப் பக்கம் உட்காரு..." என்று அவருக்கு அடுத்து இருந்த இடத்தைக் காட்ட... மீரா அவருக்கு அந்தப் பக்கம் அமர்ந்து இருந்தாள்.

"வேண்டாம்... நான் எதிர்லேயே உட்கார்த்துக் கிறேன்..." அர்ஜுன் சொல்ல...

"ஏன்டா நடிக்கிற? நான் உங்க அம்மாட்ட சொல்லிடுவேன்னு நினைக்கிறியா? நான் சொல்ல மாட்டேன்..." பெரியம்மா உருக...

"அதுக்கு இல்லை பெரியம்மா, இங்க உட்கார்ந்தா மீராவைச் சரியாப் பார்க்க முடியாது, எதிர்லன்னா நல்லா பார்க்கலாம்..." என்றதும், பெரியம்மாவின் முகம் போன போக்கை நான் சொல்லவும் வேண்டுமா...?

அவர்கள் பேசியதைக் கேட்ட மீரா, கஷ்டப்பட்டுச் சிரிப்பை அடக்கிக் கொண்டு அமர்ந்து இருந்தாள். அர்ஜுன், சூர்யாவோடு எதிர் வரிசையில் அமர்ந்தான். விதவிதமான உணவு வகைகள் வர... சுவையும்

அருமையாக இருந்தது. எல்லோரும் பசியில் இருந்ததால் நன்றாகச் சாப்பிட்டனர். அர்ஜுன், மீரா ஏன் ஆருவுடன் இருக்காமல் தனியாக இருக்கிறாள் என்று நினைத்தான்.

சாப்பிட்டதும் வித்யாவும், கணேசனும் உறவினர் களை அழைத்துக் கொண்டு தாங்கள் வந்த பஸ்சில் அவர்கள் தங்கி இருந்த வீட்டிற்குக் கிளம்பினார்கள். ஆதியையும், ரஞ்சனாவையும் வைத்து இன்னும் சில போட்டோஸ் எடுக்க வேண்டியது இருந்ததால்... அர்ஜுனும், ஆருவும் அவர்களோடு இருக்க... வித்யா, மீராவையும் அவர்களோடு காரில் வரச் சொல்லிவிட்டு மற்றவர்களுடன் கிளம்பினார். சூர்யாவும் அர்ஜுனோடு இருந்தான்.

மாடியில் இருந்த ஏசி ரூமில் ஆதியையும், ரஞ்சனாவையும் வைத்துப் போட்டோ எடுத்தனர். இருவரும் நெருக்கமாக இருக்கும் படங்கள் அவர் களுக்குச் சங்கடமாக இருக்கும் என்பதால்... அர்ஜுன், ஆரு, மீரா மூவரும் வெளியே வந்துவிட்டனர். சஞ்சனா மட்டும் அங்கேயே இருந்தாள்.

சூர்யா, பக்கத்தில் இருந்த ஏசி அறையில் இருந்தான். இவர்களும் அங்கே சென்றனர். அர்ஜுன், மீராவோடு சேர்ந்து போட்டோ எடுத்துக் கொள்ள ஆசைப்பட்டான். அதனால் சூர்யாவிடம் தன் மொபைலில் அவர்களைப் போட்டோ எடுக்கச் சொல்லியவன், மீராவோடு அங்கிருந்த சோபாவில் அமர, சூர்யா அவர்களைப் போட்டோ எடுத்தான்.

ஆதியும் ரஞ்சனாவும் போட்டோ எடுத்து முடித்ததும், எல்லோரும் வீட்டுக்குக் கிளம்பினர். ரஞ்சனா, இரவு மண்டபத்திலேயே தங்கிக் கொண்டாள்.

இவர்கள் வீட்டுக்குச் சென்ற போது... வித்யாவைத் தவிர மற்ற எல்லோரும் தூங்கி இருந்தனர். வித்யா அடுத்த நாளுக்குத் தேவையானதை எடுத்து வைத்துக் கொண்டிருந்தார். வீட்டுக்குள் வந்ததும் ஆதியும், சூர்யாவும் மேலே ஏறி அவர்கள் அறைக்குச் சென்றனர்.

"என்னோட ரூமுக்கு வந்து நகை எல்லாம் கழட்டிக் கொடுத்திட்டுப் போ..." வித்யா, ஆருவிடம் சொல்ல... அவள் வித்யாவோடு சென்றாள்.

மீரா மேலே தங்கி இருந்த அறைக்குச் சென்றவள், கதவை சாத்த முயல, அர்ஜுன் அவளைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்து கதவைச் சாத்தினான்.

"யாராவது வரப்போறாங்க, அர்ஜுன்." மீரா பயப்பட...

"டூ மினிட்ஸ்..." என்றவன், மீராவின் இடையில் கைகொடுத்து இழுத்து அணைத்துக் கொண்டான். அவள் கழுத்து வளைவில் முகம் புதைத்து, "ரொம்ப அழகா இருக்க மீரா... நான் உனக்குப் பொருத்தமா இருக் கேனா...?" அர்ஜுன் கேட்க...

மீரா, அவன் முகத்தை நிமிர்த்தி, அவன் இதழில் முத்தம் பதித்து, "நம்ம ரெண்டு பேரும் சூப்பர் ஜோடி தெரியுமா...?" என்றாள்.

அர்ஜுன், மீராவைப் போல் நிறம் இல்லை... அதற்காகக் கருப்பும் இல்லை... கோதுமை நிறம். அதனால் வந்த சந்தேகம்.

அர்ஜுன், மீராவின் நெற்றி, கன்னம், இதழ் என்று மாறி மாறி முத்தம் கொடுக்க... மீரா, "போதும் அர்ஜுன், போங்க... ஆரு வந்துடுவா..." என்றாள்.

அர்ஜுனுக்குப் போகவே இஷ்டம் இல்லை. ஆனால், வேறு வழி இல்லாததால் மீராவை ஒரு முறை இறுக்கி அணைத்து விட்டுப் பின் விலகி, கதவைத் திறந்து கொண்டு அவன் அறைக்குச் சென்றான்.

அர்ஜுன் சென்றதும் ஆரு வந்து விட்டாள். மீராவைப் பார்த்து "நீ இன்னுமா புடவை மாத்தலை?" என்று கேட்க...

இன்னும் அர்ஜுனின் முத்தத்தில் இருந்து வெளிவராத மீரா, "ம்ம்... மாத்தணும்..." என முனகியபடி உடை மாற்றச் சென்றாள்.

மறு நாள் காலை எல்லோருக்கும் மிகவும் பரபரப்பாக இருந்தது. மீராவும், ஆருவும் இன்றும் புடவை தான் கட்டிக் கொண்டனர். காலை ஆறு - ஏழு முகூர்த் தம் என்பதால்... எல்லோரும் விடியற்காலையிலேயே எழுந்து தயார் ஆகி மண்டபத்திற்குச் சென்றனர். எல்லாச் சடங்குகளும் முடிந்து, ஆதித்யா அக்னி சாட்சியாக ரஞ்சனாவைத் தன் மனைவி ஆக்கிக் கொண்டான்.

மீரா இன்றும் அர்ஜுனின் பெரியம்மாவோடு கீழேயே அமர்ந்து கொண்டாள், மேடைக்குச் செல்ல

வில்லை. சூர்யாவும் மீராவிற்கு அடுத்து அமர்ந்திருந் தான். மீரா, அர்ஜுனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் ஆதியையும் அவன் அண்ணியையும் கிண்டல் செய்து சிரித்துக் கொண்டிருந்தான்.

அர்ஜுனின் முகம் வெகு களையாக இருக்கும். அதுவும் அவன் சிரிக்கும் போது பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல இருக்கும். மீராவிற்கு அவன் இன்னும் சில நாட்களில் ஆஸ்திரேலியா சென்று விடுவான் என்பது ஞாபகம் வர... அவனது பிரிவை நினைத்துக் கண் கலங்கினாள். இருக்கும் இடம் அறிந்து கண்களைத் துடைத்தவள், சூர்யாவைப் பார்க்க... அவனும் மேடையைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் கண்களில் மின்னும் ஒளியை வைத்து, இவன் யாரை இப்படிப் பார்கிறான் என்று மீரா மேடையைப் பார்த்த போது... அங்கே ஆருதான் இருந்தாள். அவள் போகும் பக்கம் எல்லாம் சூர்யாவின் பார்வையும் போக, மீராவிற்கு உறுதியாகத் தெரிந்தது அவன் ஆருவைத்தான் பார்க்கிறான் என்று.

சஞ்சனா இன்று கொஞ்சம் அடங்கித்தான் இருந்தாள். அவள் அர்ஜுனை வழிக்குக் கொண்டு வருவதை விட... வீட்டுப் பெரியவர்களைக் காக்கா பிடித்தால், தான் நினைத்த காரியம் சாதிக்கலாம் என்று அவள் அக்கா கல்யாணத்தில் ஓடி... ஆடி வேலை செய்து கொண்டிருந்தாள்.

காலை பத்து மணிக்கு வந்த விருந்தினர் எல்லாம் சென்று, இரண்டு பக்க நெருங்கிய உறவினர்களும், நண்பர்களும்தான் மண்டபத்தில் இருந்தனர். புதுமணத் தம்பதிகளை அழைத்துக் கொண்டு ஜம்புகேஸ்வரர் கோவிலுக்குச் சென்றனர். அந்தக் கோவில் மிகவும் பழமை வாய்ந்த மற்றும் புகழ் பெற்ற பெரிய சிவன் கோவில்களில் ஒன்றாகும்.

ஆதியும், ரஞ்சனாவும் காரில் வர... அவர்களோடு ஆருவும், சஞ்சனாவும் சென்றனர். மற்றவர்கள் எல்லாம் அவர்கள் வந்த பஸ்சில் ஏற... மீராவும் சென்று பஸ்சில் ஏறினாள். மீரா ஜன்னல் வழியாக வேடிக்கை பார்த்துக் கொண்டே வந்தாள். அவள் முகம் மிகவும் வாடி இருந்தது. அர்ஜுன்... 'ஆரு, மீராவுடன் இல்லாததால் தான் மீரா அப்படி இருகிறாளோ...?' என்று நினைத்துக் கவலைப்பட்டான்.

கோவிலுக்குச் சென்று சாமி தரிசனம் செய்ததும், ஆளுக்கு ஒரு புறம் சென்றனர். பெரியவர்கள் எல்லோரும் ஒரு புறம் சென்று அமர்ந்தனர். எப்படியும் மதிய உணவுக்கு மண்டபம் சென்றால் போதும் என்பதால், கோவிலிலேயே அமர்ந்து விட்டனர். குழந்தை கள் அங்கே ஓடிப் பிடித்து விளையாட... இளையவர்கள் எல்லோரும் கோவிலைச் சுற்றி நடந்தனர்.

ஆதி, ரஞ்சனாவோடு சஞ்சனாவும் ஆதியின் நண்பர்களும் செல்ல... அர்ஜுன், மீரா, ஆரு மற்றும் சூர்யா அவர்கள் பின்னே மெதுவாக நடந்தனர். அர்ஜுன்

அமைதியாக வந்தான். அதைக் கவனித்த ஆரு, "என்ன ஒரு மாதிரி இருக்க...?" என்று கேட்க....

"நீ அண்ணி வந்ததும், மீராவைக் கழட்டிவிட்டுட்ட இல்ல..." என்றான். அவன் சொன்னதைக் கேட்ட மற்றவர்கள் திகைத்தனர்.

மீரா, அர்ஜுனைப் பார்த்து, "எதுக்கு இப்படிப் பேசுறீங்க...?" என்று கேட்க... ஆருவிற்கு அழுகை வந்துவிட்டது. அவள் அங்கேயே ஒரு ஓரமாகச் சென்று அமர்ந்து அழ ஆரம்பித்தாள்.

எல்லோரும் சென்று ஆருவின் அருகே அமர... மீரா, ஆருவைச் சமாதானம் செய்தாள். அர்ஜுன் அப்போதும் அமைதியாக இருந்தான். அவனைப் பார்த்த சூர்யா, "அர்ஜுன்... நீ ஓவராப் போற... அன்னைக்கும் இப்படித்தான் நீ அவளை வம்பிழுத்த..." என்று கோபப்பட... மீராவிற்கு இப்போது உறுதியாக சூர்யா, ஆருவை விரும்புகிறான் என்று புரிந்தது. ஆனால், கோபமாக இருந்த அர்ஜுனும், ஆருவும் இதைப் பற்றி யோசிக்கவில்லை.

"நானும் நேத்துல இருந்து பார்க்கிறேன்... இவ அண்ணியோடவே இருக்கா... மீரா தனியாவே இருக்கா... மீராவையும் அவளோட வச்சிக்கலாம் இல்லை..." அர்ஜுன் கேட்க...

"நான் ஒண்ணும் அவளைத் தனியா விடலை, அவதான் அந்தச் சஞ்சனா ஏதோ சொல்லிட்டான்னு

விலகி விலகிப் போனா... நான் என்ன பண்றது...?" ஆரு அழுது கொண்டே சொல்ல...

மீரா, அர்ஜுனைப் பார்த்து, "உங்களுக்கு இன்னைக்கு என்ன ஆச்சு? எதுக்கு இப்படிப் பேசுறீங்க...?" என்று கேட்க...

"நீ ஏன் டல்லா இருக்க...? உன் முகம் ரொம்ப வாடி இருந்தது. நீ தனியாவே இருந்த... ஒரு வேளை ஆருவாலதான் அப்படி இருக்கியோன்னு நினைச்சேன்..." என்றான் அர்ஜுன்.

"நான் ரொம்ப வருஷமா தனியாத்தான் அர்ஜுன் இருக்கேன், இப்ப புதுசா என்ன வந்தது என்னோட தனிமை பத்தி...? நான் அதுக்கெல்லாம் ஃபீல் பண்ணுவேனா...? ஆரு என்னைக் கூப்பிடத்தான் செஞ்சா.... நான்தான் விலகி இருந்தேன். அவ அண்ணன் கல்யாணம், அவதான் முன்னாடி நிற்கணும்.

"நான் அதுக்காக உம்முன்னு இல்லை... நீங்க இன்னும் கொஞ்ச நாள்ல ஆஸ்திரேலியா போறதைப் பத்தி நினைச்சுத்தான் உம்முன்னு இருந்தேன். போதுமா...? தெரியாம ஏதாவது உளறக் கூடாது, ஆருகிட்ட சாரி கேளுங்க." மீரா, அர்ஜுனை அதட்ட...

அர்ஜுன், ஆருவைப் பார்த்து, "சாரி ஆரு..." என்றான்.

"உன்னோட சாரியைத் தூக்கிக் குப்பைத் தொட்டியில போடு..." ஆரு கோபமாகச் சொல்லிவிட்டு அங்கிருந்து எழுந்து சென்று விட்டாள்.

எல்லோரும் கோவிலில் இருந்து மண்டபம் சென்றனர். அங்கே மதிய விருந்து தயாராக இருந்தது. அர்ஜுன், ஆருவிடம் சென்று பேச... ஆரு அவனோடு பேசத் தயாராகவே இல்லை.

எல்லோரும் சாப்பிடச் செல்ல... அர்ஜுனும் சென்று சூர்யா அருகில் அமர்ந்தான். அவன் எதிரில் மீரா அமர்ந்து இருந்தாள். அர்ஜுன், ஆரு முகத்தைப் பார்க்க... அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அர்ஜுன் சாப்பிடவேயில்லை. சூர்யா சொல்லியும் கேட்கவில்லை. அவனைப் பார்த்து மீராவும் சாப்பிட வில்லை. இருவரும் இலையை மூடிவிட்டு எழுந்து சென்றனர்.

புதுமணத் தம்பதிகள் அன்று பெண் வீட்டிலேயே தங்குவதால், மற்றவர்கள் எல்லோரும் அவர்களைக் கொண்டு போய்ப் பெண் வீட்டில் விட்டுவிட்டு சென்னைக்குக் கிளம்பினர். ஆதியும், ரஞ்சனாவும் நான்கு நாட்கள் கழித்துச் சென்னைக்கு வருவதாக ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டது. எல்லோரும் புதுமணத் தம்பதிகளிடம் விடைபெற்றுக் காரில் சென்று ஏறினர்.

பஸ்ஸில் மீராவும், ஆருவும் ஒரு சீட்டிலும்... அர்ஜுனும், சூர்யாவும் ஒரு சீட்டிலும் அமர்ந்து இருந்தனர். மீரா, ஆருவிடம் "தெரியாம சொல்லிட்டாங்க ஆரு, ப்ளீஸ்... அவங்ககிட்ட பேசு... என்னாலதானே இப்படி ஆச்சு... சாரி..." என்று எவ்வளவோ சொல்லியும், ஆரு அசையவே இல்லை. சிறிது நேரம் கழித்து மீராவும் அமைதியாக இருந்தாள்.

எல்லோரும் இரவு உணவு சாப்பிட இறங்க... அர்ஜுன் சீட்டில் படுத்துக் கொண்டு இறங்கவே இல்லை. மீரா, வித்யாவிடம் "எனக்குப் பசிக்கலை..." என்று சொல்லிவிட்டு அவளும் பஸ்சிலேயே இருந்துவிட்டாள்.

மீராவிற்கு உண்மையில் ரொம்பப் பசி. அவள் மதியமும் சாப்பிடாததால் பசி வயிற்றைக் கிள்ளியது. அதனால் ஒரு பாட்டில் தண்ணீர் முழுவதையும் குடித்தாள். சூர்யா அதைப் பார்த்துக் கொண்டே பஸ்சில் இருந்து இறங்கினான்.

ஆரு அங்கிருந்த ரெஸ்ட் ரூம் சென்று விட்டு வர... சூர்யா அவளிடம் சென்றான்.

"உன் அண்ணன் செஞ்சது தப்புதான். அதுக்காக வெளிய வந்த இடத்தில இப்படித்தான் பண்ணுவியா... அவன் மதியமும் சாப்பிடலை, இப்பவும் சாப்பிடலை. அதனால மீராவும் சாப்பிடலை. உங்க அண்ணன், தங்கை சண்டைக்கு மீராதான் கிடைச்சாளா...? பாவம், அவளை ஏன் ரெண்டு பேரும் வாட்டுறீங்க? அவள் பசிக்குத் தண்ணியைக் குடிச்சிட்டு உட்கார்ந்து இருக்கா..."

"அவன் மட்டும் அப்படிப் பேசலாமா...?"

"நானும் அவன் செஞ்சது தப்புன்னுதான் சொல்றேன். அவனுக்கு மீராவுக்கு ஆதரவா யாரும் இல்லைன்னு டென்ஷன். இப்போ அவளை விட்டுட்டு ஆஸ்திரேலியா போறோம்னு டென்ஷன். அதனால ஏதோ பேசிட்டான், விடு..." என்றதும், ஆரு பஸ்ஸை நோக்கிச் சென்றாள்.

ஆரு சென்று அர்ஜுனை எழுப்பி, "சாப்பிட வா..." என்று சொல்ல...

"பரவாயில்லை... உன்னைப் பேசினதுக்கு நான் தண்டனைன்னு நினைச்சிக்கிறேன், இன்னைக்கு ஒரு நாள் சாப்பிடாம இருந்துக்கிறேன்." அர்ஜுன் சொல்ல...

"சரி... நான் உன்னை மன்னிச்சிட்டேன், போதுமா? நீ மட்டுமா சாப்பிடாம இருக்க... உன்னால மீராவும் மதியத்துல இருந்து சாப்பிடலை..."

ஆரு சொன்னதும், அர்ஜுன் எழுந்து மீராவைப் பார்த்து, "வா மீரா, சாப்பிடலாம்..." என்று கூப்பிட... மீரா எழுந்திருக்காமல் இருந்தாள்.

அர்ஜுன், அவள் கையைப் பிடித்து இழுக்க... மீரா அழுதுகொண்டே வரமாட்டேன் என்று சொல்ல... அர்ஜுன் "ஏன் மீரா...?" என்றதும்,

"என்னாலதான்" மீரா சொல்ல...

அர்ஜுன், "நீ என்ன பண்ண? என்னாலதான்" என்றான்.

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே கையில் பார்சலோடு வந்த சூர்யா, "யாராலைன்னு அப்புறம் டிஸ்கஸ் பண்ணலாம். இப்ப எல்லோருக்கும் பிரைட் ரைஸ் வாங்கி இருக்கேன், சீக்கிரம் சாப்பிடுங்க. மத்தவங்க எல்லாம் சாப்பிட்டு வந்திடுவாங்க..." என்று சொல்லி பார்சலை ஆருவிடம் கொடுக்க... அவள் அதிலிருந்து எல்லோருக்கும் ஆளுக்கு ஒரு பாக்ஸ் எடுத்துக் கொடுத்தாள்.

எல்லோரும் சேர்ந்து சாப்பிட்டனர். அர்ஜுன் சாப்பிடும்போது மீண்டும் ஆருவிடம் மன்னிப்புக் கேட்டான். ஆருவும் முன் தினம் சஞ்சனா பேசியதைச் சொல்ல...

அர்ஜுன் அவளுக்குத் தெரிஞ்சது அவ்வளவு தான் என்று, அவன் அதற்கு மேல் சஞ்சனாவைப் பற்றி யோசிக்கவில்லை.

சிறிது நேரத்தில் அர்ஜுனும், ஆருவும் வழக்கம் போல் பேசிக்கொள்ள... மீராவிற்குத் தன்னால் அவர்கள் இருவருக்கும் இடையில் பிரச்சினை வந்ததை இன்னும் மறக்க முடியாமல் மனதில் வைத்துக் குழப்பிக் கொண்டிருந்தாள். அவள் மனதிலிருப்பது ஒரு நாள் வெடிக்கப் போவதை அறியாத அர்ஜுன், ஆருவோடு சிரித்துப் பேசிக்கொண்டிருந்தான்.

18

மீரா வீட்டுக்கு வந்ததும், வருண் அவளோடு பேசாமல் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்தான்.

மீரா, "என்ன வருண்... யார் மேல கோபம்?"

"உன் மேலே தான். என்னை விட்டுட்டு நீ மட்டும் கல்யாணத்துக்குப் போயிட்ட இல்லை... இங்க எனக்கு ஒரே போர் அடிச்சுது."

"எனக்குக் கூட உன்னை அழைச்சிட்டுப் போகணும்னுதான் ஆசை. உங்க அம்மா விட மாட்

டாங்கல்ல... நானே ரொம்ப வருஷம் கழிச்சு, இப்பத்தான் ஒரு கல்யாணத்துக்குப் போயிருக்கேன்."

"சரி விடு, கல்யாணம் எப்படி நடந்துச்சு...? நீ என்ஜாய் பண்ணியா...?"

"ம்ம்... ரொம்ப நல்லா நடந்தது. அவங்க சொந்தகாரங்க எல்லாம் ரொம்ப நல்ல மாதிரி. நல்லா என்ஜாய் பண்ணேன். வர்ற சண்டே இங்க வரவேற்பு இருக்கு, நாம ரெண்டு பேரும் போகலாம்." மீரா சமாதானம் சொல்ல... வருணும் சரி என்று கேட்டுக் கொண்டான்.

அன்று இரவு அர்ஜுன், மீராவிற்கு அவர்கள் இருவரும் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படங்களை செல்லில் அனுப்பி இருந்தான். இருவரும் ஒருவருக் கொருவர் பொருத்தமாக இருந்தனர். மீரா போட்டோ பார்த்துக் கொண்டிருக்கும்போதே... அர்ஜுன் போன் செய்தான்.

"ஹாய் மீரா... போட்டோ பார்த்தியா...? நல்லா இருக்கா...?"

"ம்ம்... சூப்பர்..."

"அப்புறம் நல்லா ரெஸ்ட் எடு... ரொம்ப அலைச்சல் இல்ல...."

"ஆமாம், நீங்களும் ரெஸ்ட் எடுங்க..."

"நான் எங்க ரெஸ்ட் எடுக்கிறது? ஆதி கொஞ்ச நாள் கடைக்கு வர மாட்டான். ஹனிமூன் போறான்.

நான்தான் அவனுக்குப் பதில் பார்த்துக்கணும். அப்புறம் ஆஸ்திரேலியா போகிற வேலையும் பார்க்கணும்..." என்றதும், மீரா அமைதியாகி விட...

"என்னடா சைலென்ட் ஆகிட்ட... ரெண்டு வருஷம் தானே... சீக்கிரம் போயிடும். முடிஞ்சா நான் நடுவுல வரேன்..." அர்ஜுன் சமாதானம் செய்ய... மீரா அப்போதும் மௌனமாகவே இருந்தாள்.

"மீரா, நான் இதுவரை வெளியே ஹாஸ்டல்ல கூடத் தங்கினது இல்லை. எனக்கே இப்ப வெளிநாடு போறது கஷ்டமா இருக்கு. இதுல நீ வேற இப்படி இருந்தா... எனக்குக் கிளம்பவே மூட் இருக்காது. இன்னும் நான் எதுவும் எடுத்து வைக்கவே ஆரம்பிக்கலை. விசா வந்துட்டா... நான் எப்ப வேணா கிளம்புற மாதிரி இருக்கும்."

மீரா தன்னைத் தேற்றிக் கொண்டு, "நீங்க நல்ல படியா போய் உங்க படிப்பை முடிச்சிட்டு வாங்க. இப்ப வருணும் இங்க வந்துட்டான். ஆரு, அங்கிள், ஆன்ட்டி, ஆதி அத்தான், ரஞ்சனா அக்கா எல்லோரும்தான் இருக்காங்களே... எனக்கு ஒண்ணும் கஷ்டம் இல்லை. நான் இருந்துப்பேன்..." என்றாள்.

"மீரா... நான் ஆஸ்திரேலியா போறது ஒரு வகையில நமக்கு ஸேப்தான். ஏன்னா... நமக்கு இன்னும் கல்யாணம் ஆக நாலு வருஷமாவது ஆகும். நீ இப்படி என்னைப் புடவை கட்டி எல்லாம் மயக்கினேன்னு வை, எனக்கு என்னைக் கன்ட்ரோல் பண்றது ரொம்பக் கஷ்டம்..." அர்ஜுன் சிரிக்க...

"நான் புடவை கட்டினா உங்களுக்கு என்ன கஷ்டம்...?"

"ஏன்னு உனக்குத் தெரியாது...? நான் சொல்லிக் கேட்கணும்னு ஆசைப்படற... ம்ம்... சரி, சொல்றேன். அது கல்யாணத்துக்கு முன்னாடியே..." என அர்ஜுன் ஆரம்பிக்க...

மீரா, "போதும் நிறுத்துங்க..." என்றாள்.

அர்ஜுன், "அதெல்லாம் முடியாது... நான் சொல்ல வந்ததைச் சொல்லிட்டுத்தான் விடுவேன்..." என வம்பு பண்ண...

"நீங்க ஒண்ணும் சொல்ல வேண்டாம். நீங்க என்ன சொல்ல வர்றீங்கன்னு... எனக்குப் புரிஞ்சிடுச்சு. நீங்க ரெண்டு வருஷம் இல்லை... நாலு வருஷம் கழிச்சு... நம்ம கல்யாணத்துக்கு முந்தைய நாள் வாங்க, போதும். ஆளை விடுங்க, குட் நைட்..." என்று சொல்லி மீரா போனை வைக்க.... அர்ஜுனும் சிரித்துக் கொண்டே போனை வைத்தான்.

மீரா அதன்பிறகு தினமுமே அர்ஜுன் வீட்டிற்கு வருவாள். இன்னும் ஆதியின் திருமண வரவேற்பு இருப்பதால்... நெருங்கிய உறவினர்கள் தங்கி இருந்தனர். அவர்களில் பெரியம்மாவும் ஒருவர். அவர் ஆருவோடும், மீராவோடும் சேர்ந்து கொள்ள... மூவரும் சேர்ந்து ஊர் சுற்றுவது... இல்லையென்றால் அரட்டை அடிப்பது என்று பொழுது நன்றாகவே சென்றது. மதிய வேளையில் அர்ஜுனும் இவர்களோடு சேர்ந்து கொள்வான்.

வெள்ளிகிழமை காலையில் ஆதித்யாவும் ரஞ்சனாவும் வந்தனர். வித்யா அவர்கள் இருவரையும் வாசலில் நிற்க வைத்து ஆரத்தி சுற்றி வரவேற்றார். ரஞ்சனா சந்தோஷமாக வலது கால் வைத்து உள்ளே வந்தாள். அவர்களோடு சஞ்சனாவும் வந்ததுதான் தொல்லை.

வித்யா, சமையல் அறைக்குச் சென்று அவர்களுக்குக் காபி கலக்க... "உன்னோட சம்பந்தி அம்மாவுக்குக் கொஞ்சம் கூட அறிவு இல்லையா... இப்படித்தான் புதுசா கல்யாணமாகி முதல் முதலா புகுந்த வீட்டுக்கு வர்ற பொண்ணோட கல்யாணம் ஆகாத பொண்ணைத் துணைக்கு அனுப்பி வைப்பாங்களா...?" பெரியம்மா புலம்ப...

"நானும் அதுதான் நினைச்சேன்கா. ஆனா... நாம என்ன செய்ய முடியும்? விடு, வேலையைப் பார்ப்போம்..." என்றார் வித்யா.

ஆதி, ரஞ்சனாவை அழைத்துக் கொண்டு அவன் அறைக்குச் செல்ல... வித்யா, ஆருவிடம் சஞ்சனாவை அவள் அறைக்கு அழைத்துக் கொண்டு செல்லச் சொன்னார். அவர் சொன்னதைக் கேட்டு அவரை முறைத்த ஆரு... அவளின் தாத்தா, பாட்டியிடம் சென்று, "நீங்க ரெண்டு பேரும் என்னோட ரூமுக்கு வாங்க..." என்று விடாப்பிடியாக அவர்களின் பெட்டிகளைக் கொண்டு போய் அவள் அறையில் வைத்தவள், சஞ்சனாவைக் கீழே இருந்த விருந்தினர் அறையில் தங்கிக் கொள்ளச் சொன்னாள்.

சஞ்சனாவிற்குமே ஆருவுடன் தங்க விருப்பம் இல்லை. அதனால் சந்தோஷமாக அவளுக்குக் கொடுத்த அறைக்குச் சென்றாள்.

அன்று ஆதியும், ரஞ்சனாவும் வருவதால்... மீரா காலை பத்து மணிக்கே அர்ஜுனின் வீட்டுக்கு வந்தாள். துள்ளலோடு உள்ளே வந்தவள், அங்கே சஞ்சனா ஹாலில் அமர்ந்திருப்பதைப் பார்த்ததும், அவள் துள்ளல் அடங்கி மெதுவாக நடந்து உள்ளே சென்றாள். சஞ்சனாவும், 'இவ எதுக்கு வர்றா...?' என்பதைப் போல் தான் மீராவைப் பார்த்தாள்.

மீரா நேராகச் சென்று வித்யாவின் அருகே நிற்க... வித்யா, "வா மீரா, சாப்பிடு..." என்றார்.

"இல்லை ஆன்ட்டி, சாப்பிட்டுட்டுதான் வந்தேன். எங்கே ரஞ்சனா அக்கா...?"

"மேலே அவ ரூம்ல இருக்கா, இன்னும் காலை டிபன் சாப்பிடலை, நீ போய் அவங்களைச் சாப்பிட வரச் சொல்றியா...?" என்றார். அவருக்குத் தெரியும், மீரா பார்த்து நடந்து கொள்வாள் என்று. அதனால்தான் அவளை அனுப்பினார்.

மீராவும் மாடிக்குச் சென்றவள், ஆதியின் அறை கதவைத் தட்டிவிட்டுத் தள்ளி வந்து நின்று கொண்டாள். ஆதி வந்து கதவைத் திறந்தவன், அங்கே யாரும் இல்லாததால் சற்று வெளியே வந்து பார்க்க... மீரா நின்று கொண்டிருந்தாள்.

மீராவைப் பார்த்ததும் முகம் மலர்ந்த ஆதி, "ஹாய் மீரா...வா..." என்று மீராவை உள்ளே அழைக்க...

அவள் உள்ளே செல்லாமல், "உங்களை டிபன் சாப்பிட வரச் சொன்னாங்க..." என்றாள்.

"பரவாயில்லை, உள்ளே வா..." என்றான் ஆதி.

மீரா தயங்கிக் கொண்டே உள்ளே செல்ல... அங்கே ரஞ்சனா முகத்திற்குப் பவுடர் போட்டுக் கொண்டிருந்தவள், மீராவைப் பார்த்துப் புன்னகையுடன், "வா மீரா..." என்றாள்.

"ஆன்ட்டி உங்களை டிபன் சாப்பிடக் கூப்பிடாங்க." மீரா அவளிடமும் சொல்ல...

"இதோ கிளம்பிட்டேன், வந்து கொஞ்ச நேரம் தூங்கிட்டோம், அதுதான் லேட் ஆகிடுச்சு..." என்றவள், நெற்றியில் பொட்டு வைத்துக் கொண்டு, "போலாமா...?" என்று கேட்க...

அப்போது அர்ஜுன், ஆதியின் அறைக் கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்தான். அர்ஜுன், ரஞ்சனாவைப் பார்த்து "வாங்க அண்ணி..." என்றான். ரஞ்சனா அர்ஜுனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

ஆதியும், ரஞ்சனாவும் வரும்போது அர்ஜுன் தூங்கிக் கொண்டிருந்தான். அதனால் அவர்களை இப்போதுதான் பார்க்கிறான். ஆதி, அர்ஜுன் அருகில் வந்து அவன் தோளில் கை போட.... அப்போது உள்ளே வந்த ஆரு, "ஆரம்பிச்சுடானுங்கடா பாசமலர் படம்

காட்ட...” என்றவள், அப்போதுதான் மீரா அங்கிருப்பதைப் பார்த்து, “ஹாய் மீரா... நீ எப்போ வந்தே?” எனக் கேட்க...

மீரா, “இப்பதான் வந்தேன்...” என்றாள்.

“திருச்சியில எங்கேயாவது வெளியே போனீங்களா ஆதி...?”

“ஆமாம் அர்ஜுன், முக்கியமா பார்க்க வேண்டிய இடம் எல்லாம் பார்த்தாச்சு.”

ஆரு, “சாப்பிடப் போகலாமா...? அம்மா ரொம்ப நேரமா வெயிட் பண்றாங்க...” என்றதும், எல்லோரும் கீழே சென்றனர்.

அவர்களைப் பார்த்த வித்யா, “வாம்மா ரஞ்சனா...” என்றவர், ரஞ்சனாவிற்கு அவரே கூந்தலில் மல்லிகைப் பூவை வைத்து விட்டார். எல்லோரும் சாப்பிடச் சென்று அமர்ந்தனர். அது ஆறு பேர் அமரும் டைனிங் டேபிள். ஆதியும், ரஞ்சனாவும் அருகருகே அமர, ரஞ்சனாவை அடுத்து ஆரு அமர்ந்தாள். ஆதிக்கு அடுத்து அர்ஜுன் அமர... அவனுக்கு அடுத்து சஞ்சனா அமர்ந்தாள்.

வித்யாவிற்கு உதவ சமையல் அறையில் இருந்து வெண் பொங்கலைக் கொண்டு வந்து டைனிங் டேபிளில் வைத்த மீரா... அப்போதுதான் அர்ஜுன் பக்கத்தில் சஞ்சனா அமர்ந்திருப்பதைப் பார்த்தாள்.

ஆரு பக்கத்தில் இருக்கும் சேர் காலியாகத்தான் இருந்தது.

அதில் உட்காராமல் அர்ஜுனின் அருகே அமர்ந்திருப்பதைப் பார்த்து, அவளுக்குக் கல்யாணத்தின் போது சஞ்சனாவின் தோழிகள் பேசியது நினைவுக்கு வர... அவள் அர்ஜுனைப் பார்த்து முறைத்தாள்.

அர்ஜுனுக்கு அவள் எதற்கு முறைக்கிறாள் என்று புரியவில்லை. வித்யா எல்லோருக்கும் வெண் பொங்கல் வைக்க... மீரா சட்னி ஊற்றிக்கொண்டே வந்தவள், அர்ஜுனுக்கு ஊற்றும்போது... ஒரு கரண்டி நிறையச் சட்னி எடுத்து, தட்டில் ஊற்றுவதற்குப் பதில் வேண்டுமென்றே அவன் மடியில் ஊற்ற...

“மீரா... என்ன பண்ற?“ அர்ஜுன் பதறி எழுந்தான்.

“சாரி அர்ஜுன், கவனிக்காம ஊத்திட்டேன்.” மீரா மன்னிப்புக் கேட்க...

வித்யா, “பரவாயில்லை, விடு மீரா...” என்றவர், அர்ஜுனிடம், “டிரஸ் மாத்திட்டு வா...” என்றார்.

ஆரு சிரித்துக் கொண்டே, “நீ தப்பிச்சடா... அவ மட்டும் சாம்பாரை ஊத்தி இருக்கணும்... வெந்திருக்கும்...” என்றதும், அர்ஜுனும் சிரித்துக் கொண்டே உடை மாற்றச் சென்றான்.

அர்ஜுன் உடை மாற்றிவிட்டு வரும்போது, மீரா படிக்கட்டில் நின்று கொண்டிருந்தாள்.

அர்ஜுன் அவளை ‘என்ன...?’ என்பது போல் பார்க்க... “திரும்பப் போய் அவ பக்கத்தில உட்கார்ந்தீங்க, இந்தத் தடவை சாம்பார்தான்.” மீரா மிரட்ட...

அர்ஜுன், "அப்ப நீ தெரியாம ஊத்தல... வேணும்னுதான் ஊத்தி இருக்க..." என்றதும், மீரா "ஆமாம்..." என்றாள்.

அர்ஜுனுக்குச் சுள்ளென்று கோபம் வந்தது. 'இப்ப அவ பக்கத்தில் உட்கார்ந்து சாப்பிட்டா என்ன? எதுக்கு இவ ஓவரா பண்றா?' என்று நினைத்தவன், சாப்பிடச் செல்லாமல் வெளியே செல்ல...

"எங்கடா போற...?" வித்யா கேட்க...

அர்ஜுன், "கடைக்கு..." என்றான்.

"டேய்... சாப்பிட்டுட்டு போடா...." வித்யா கத்த... அர்ஜுன் அவர் சொல்வதைக் காதில் வாங்காமல் சென்று கொண்டே இருந்தான்.

ஆரு எழுந்து வேகமாக வெளியே வந்தவள், "நீ இப்ப சாப்பிடாம போனா... எல்லோரும் நீ மீராவால தான் சாப்பிடாமப் போனேன்னு நினைப்பாங்க. அப்புறம் உன் இஷ்டம்..." என்றுவிட்டு உள்ளே செல்ல... அர்ஜுனும் அவளோடு உள்ளே வந்தான்.

உள்ளே வந்த அர்ஜுன், மீரா முகத்தைப் பார்க்க... அவள் அதிர்ந்திருப்பது அவள் முகத்தில் நன்றாகவே தெரிந்தது. அர்ஜுன் சென்று ஆருவின் அருகே அமர்ந்து சாப்பிட... மீரா ஹாலிலேயே அமர்ந்துவிட்டாள்.

"ஏன்டா சாப்பிடாமப் போனே?"

"மறந்து... ஏதோ ஒரு ஞாபகத்தில போயிட்டேன் மா..."

சஞ்சனா நடந்ததை வைத்து... அர்ஜுனுக்கு மீராவைப் பிடிக்காது போல என்று நினைத்துக் கொண்டாள்.

மீரா டி.வி. பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால், அவள் அழுகையை அடக்கிக் கொண்டு இருக்கிறாள் என்று அர்ஜுனுக்கு நன்றாகவே தெரிந்தது. அவள் முகம் சிவந்து இருந்தது. அவனுக்கே புரிந்தது, அவள் மேல் கொஞ்சம் அதிகமாகக் கோபப்பட்டு விட்டோம் என்று. ஆனால், இப்போது மீராவிடம் பேச முடியாது என்பதால்... பிறகு பேசுவோம் என்று கடைக்குக் கிளம்பினான்.

ஆதியும் ரஞ்சனாவும் சாப்பிட்டதும், வித்யா அவர்களை அஷ்டலக்ஷ்மி கோவிலுக்குச் சென்று வரும்படி சொல்ல... அவர்களோடு சஞ்சனாவும், ஆருவும் கிளம்பினார்கள். ஆரு, மீராவையும் அழைத்தாள். தான் வரவில்லை... தனக்குக் கல்லூரிக்குச் செல்லும் வேலை இருப்பதாகச் சொல்லி மீரா மறுத்து விட்டாள்.

அவர்கள் கோவிலுக்குச் சென்றதும்... மீரா, வித்யாவிடம் சொல்லிவிட்டு வீட்டுக்குக் கிளம்பினாள். பெரியம்மா, 'ஏன் ஒரு மாதிரி இருக்கா?' என்று நினைத்தார், அவருக்கு நடந்தது எதுவும் தெரியாது.

அர்ஜுன் மதியம் வீட்டுக்கு வந்த போது... மீராவைத் தேடினான். ஆனால் மீரா அங்கே இல்லை. ஆருவிடம் சென்று மீரா எங்கே என்று கேட்க...

"என்னைக் கேட்டா... நான் கோவில்ல இருந்து வரும்போதே அவ இங்க இல்ல. பாவம் மீரா, அண்ணியோட இருக்கலாம்னு ஆசையா வந்தா, நீதான் கோபப்பட்டு விரட்டிட்டே..." ஆரு சொன்னதைக் கேட்ட அர்ஜுன் வருந்தினான். அவன் மீரா கோபித்துக் கொண்டு சென்றுவிடுவாள் என்று நினைக்கவில்லை.

அர்ஜுன், வீட்டில் இருந்து கிளம்பியவன், சற்றுத் தள்ளிச் சென்று வண்டியை நிறுத்திவிட்டு மீராவை செல்லில் அழைக்க... மீரா தனது அறையில் படுத்திருந்தவள், செல்லை எடுத்துப் பார்க்க... அதில் மீரா காலிங் என்று வந்தது. மீரா எடுக்காமல் அழைப்பைத் துண்டித்தாள். அர்ஜுன் திரும்பத் திரும்ப அழைக்க... அப்போதும் மீரா எடுக்கவில்லை.

'நீ இப்ப போனை எடுக்கலைன்னா, நான் நேர்ல உங்க வீட்டுக்கு வருவேன் மீரா' என்று அர்ஜுன் மெசேஜ் அனுப்பிவிட்டு, இரண்டு நிமிடம் கழித்து அழைக்க.... மீரா இப்போது போனை எடுத்தாள். ஆனால், ஹலோ என்று கூடச் சொல்லவில்லை.

"சாரி மீரா..."

"....."

"ஏன் மீரா இப்படிப் பண்ற...?"

"....."

"நானா போய் அவ பக்கத்தில உட்கார்ந்தேன், அவ தானே என் பக்கத்தில வந்து உட்கார்ந்தா..."

"....."

"நீ என் மேல சட்னி ஊத்துனது எனக்குக் கோபமே இல்ல. ஆனா... உனக்கு என் மேல நம்பிக்கை இல்ல பார்த்தியா... அதுதான் வருத்தமா இருக்கு."

அர்ஜுன் கேட்ட எதுக்கும் மீரா பதில் சொல்ல வில்லை. "நீ என்னோட பேசமாட்ட இல்லை... சரி, உன் இஷ்டம்." என்றவன், போனை வைக்க... மீரா கட்டிலில் படுத்து அழுதாள்.

அன்று மட்டும் இல்லை... அதற்கு அடுத்து வந்த இரு நாட்களும் அர்ஜுனும், மீராவும் பேசிக்கொள்ள வில்லை. அர்ஜுன், 'அவளே கோபம் குறைந்ததும் போன் பண்ணட்டும்...' என்று இருந்தான்.

அந்த வார ஞாயிற்றுகிழமை ஆதி - ரஞ்சனா வரவேற்பு இருந்ததால்... வீட்டில் உறவினர் கூட்டம். அர்ஜுனுக்கு வேலை சரியாக இருந்தது. அவன் வெளி வேலையாக அலைந்து கொண்டே இருந்தான். வீட்டிலேயே தங்கவில்லை. ஆதியும் கடைக்குச் சென்று பார்த்துக் கொண்டான்.

ஆரு, ரஞ்சனாவை அழைத்துக் கொண்டு ப்யூட்டி பார்லர் சென்று, டெஸ்ட் மேக்கப் போட்டு எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்தாள். மீராவிற்கு எத்தனையோ தடவை போன் போட்டு அழைத்தும், அவள் வரவில்லை.

ஏதோ எடுக்க வீட்டிற்கு வந்த அர்ஜுனிடம், சஞ்சனா, "உங்க வீட்டுக்கு வந்திருக்கோம்... ஆனா

கண்டுக்கவே மாட்டேன்றீங்க... உங்க வீட்டுக்கு வந்திருக்க விருந்தாளிக்கு ஊர் சுற்றிக் காட்டும் பழக்கம் எல்லாம் இல்லையா...?" என்று ஆவலாக அவன் முகம் பார்க்க...

'உன் பக்கத்தில உட்கார்ந்ததுக்கே, என் மேல சட்னி ஊத்துனா... இதுல நான் உன்னைக் கூட்டிக்கிட்டு ஊர் வேற சுத்தினா... என் தலையில கல்லைத் தூக்கிப் போட்டுடுவா...' என்று நினைத்த அர்ஜுன், "எனக்கு அதுக்கு எல்லாம் நேரம் இல்லை... நீங்க ஆருவோட போயிட்டு வாங்க..." என்றவன், ஆருவை அழைக்க...

சஞ்சனா, "அவளா...?" என்று பதறியவள், "அதெல்லாம் வேண்டாம்..." என்று அங்கிருந்து ஓடி விட்டாள்.

ஞாயிறு அன்று மதியம் மீராவை செல்லில் அழைத்த வித்யா, "மீரா... என்ன வீட்டுப் பக்கமே காணோம், மண்டபத்தில அலங்காரம் நீ சொன்ன மாதிரி பண்ணி இருக்காங்களான்னு அங்கிள் உன்னைப் பார்த்திட்டு வரச் சொன்னார்..." என்றதும்,

மீரா, "போறேன் ஆன்ட்டி... இப்பவே போய்ப் பார்க்கிறேன்..." என்றாள்.

"சரி, சாயங்காலம் சீக்கிரம் மண்டபத்துக்கு வந்திடு..." என்று சொல்லி வித்யா போனை வைத்தார்.

மீரா மண்டபத்திற்குச் சென்றபோது, அங்கே அர்ஜுனின் பைக் நின்று கொண்டிருந்தது. மீரா உள்ளே சென்று மேடை அலங்காரத்தைப் பார்த்துக் கொண் டிருந்தாள்.

அவள் சொன்ன மாதிரி அழகாகச் செய்து கொண்டிருந்தனர். மீரா, அர்ஜுன் அங்கே வருவானா என்று பார்க்க... அர்ஜுன் அங்கே வரவில்லை. மீராவே அவனைத் தேடிக்கொண்டு சென்றாள்.

அர்ஜுன் அங்கே சமையல் அறையில் அவர்கள் வேலை செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தான். முகத்தில் இரண்டு நாள் தாடியுடன் ஆள் பார்க்கவே வாடி இருந்தான். மீராவிற்கு அவனைப் பார்த்ததும் கோபம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது.

மீரா, அர்ஜுனின் அருகே சென்று நிற்க... அர்ஜுன், யார் என்று திரும்பிப் பார்த்தவன், அங்கே மீராவை பார்த்ததும், அவன் கண்ணில் ஒரு ஒளி வந்தது. ஆனால், அவளிடம் எதுவும் பேசவில்லை. அமைதியாக இருந்தான்.

அர்ஜுன் சிறிது நேரம் அங்கே நின்றவன், திரும்பி நடக்க... மீராவும் அவனோடு சென்றாள். அர்ஜுன் முதல் மாடிக்கு வந்து மேடை அலங்காரத்தைப் பார்க்க... மீராவும் அவனோடு நின்று பார்த்தாள்.

அடுத்து அவன் இரண்டாவது மாடிக்குச் செல்ல... மீராவும் அவன் பின்னே சென்றாள். அர்ஜுன் அங்கிருந்த ஒரு அறைக்குள் செல்ல... மீராவும் அவனோடு உள்ளே சென்றாள்.

அவன் அந்த அறையின் ஜன்னல் அருகே சென்று வேடிக்கை பார்க்க... மீரா அவன் அருகில் சென்று அவன்

கையோடு கை கோர்த்து, அவன் தோளில் சாய்ந்து, "சாரி அர்ஜுன்..." என்றாள்.

அர்ஜுன் அமைதியாக இருக்க... மீரா, "என்னோட பேச மாட்டீங்களா...?" என்று அவன் முகத்தைப் பார்த்துக் கேட்க... அர்ஜுன் அப்போதும் மௌனமாக இருந்தான். மீரா அவன் மார்பில் சாய்ந்து அழ...

"நான் சாரி சொன்ன போது, நீ கேட்டியா...?" என்றான்.

மீரா, அவனை நிமிர்ந்து பார்க்க... அர்ஜுன் அவள் கண்ணைத் துடைத்து விட்டு, அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

"ஏன் மீரா இப்படிப் பேசாம இருந்த... என் மேல உனக்கு நம்பிக்கை இல்லையா...? எனக்கு எவ்வளவு கஷ்டமா இருந்தது தெரியுமா...? நான் ரெண்டு நாளா சரியா சாப்பிடலை, தூங்கலை, ஒரே வேலை. உன்னை நேர்ல வந்தும் பார்க்க முடியலை... போ மீரா, நீ ரொம்பப் படித்திட்டே..." என்றான் சலிப்பாக.

"சாரி அர்ஜுன், அன்னைக்குக் கல்யாணத்தில சஞ்சனாவோட ப்ரெண்ட்ஸ் உங்களையும் அவளையும் சேர்த்து வச்சுப் பேசினாங்க... அவ சந்தோஷமா கேட்டுட்டு இருந்தா... இன்னைக்கு ஆரு பக்கத்தில இடம் இருந்தும், அவ உங்க பக்கத்தில உட்கார்ந்தா... அவ மனசுல எதுவும் இல்லைன்னா... உங்க பக்கத்தில உட்கார்ந்தா தப்பில்ல. ஆனா... அவ மனசுல உங்களை நினைக் கிறா... அப்புறம் என்னால எப்படிப் பொறுத்துக்க முடியும்?

நீங்களே சொல்லுங்க..." மீரா சொல்லிவிட்டு மறுபடியும் அர்ஜுனின் மார்பில் சாய்ந்து கொள்ள...

அர்ஜுன், மீரா சொன்னதைக் கேட்டதும், சஞ்சனாவைப் பற்றி ஒவ்வொன்றும் நினைத்துப் பார்த்தான். தனது தோழிகளுடன் மண்டபத்தில் அவள் தன்னிடம் வலிய வந்து பேசியதை, இன்று காலை கூட வெளியே அழைத்துச் செல்லச் சொல்லிக் கேட்டதை... இத்தனை நாட்களாக அவள் தன்னிடம் தன் அக்காவின் கணவருடைய தம்பி என்ற முறையில்தான் பேசு கிறாள் என்று நினைத்தான். ஆனால், இப்போது மீரா சொன்னதும், 'அவள் மனதில் தன்னைப் பற்றி அப்படி ஒரு எண்ணம் இருக்குமோ...? அதனால்தான் தன் னிடம் வந்து வலியப் பேசுகிறாளா...? அப்படி இருந்தால் அதை வளர விடுவது நல்லது இல்லை...' என்று நினைத்தான்.

"ஏன் மீரா என்கிட்டே இதை முன்னாடியே சொல்லலை?"

"ஏற்கெனவே என்னால உங்களுக்கும் ஆருவுக்கும் சண்டை வந்தது. இப்ப இதைச் சொன்னா திரும்ப ஏதாவது என்னால பிரச்சினை வந்துடுச்சுன்னா... அதனாலதான் சொல்லலை."

"இனி என்கிட்டே இருந்து எதையும் மறைக்காதே. இந்த விஷயத்தை நான் பார்த்துக்கிறேன், நீ கவலைப் படாதே..." என்ற அர்ஜுன், அவள் கன்னத்தில் அழுத்தி முத்தமிட...

"தாடி குத்துது, விடுங்க..." என மீரா திமிறினாள். அர்ஜுன் அவளை விடாமல், "நல்லாக் குத்தட்டும், ரெண்டு நாளா என்னைத் தவிக்கவிட்ட இல்லை.." என்றவன், அவளது மறு கன்னத்திலும் அழுத்தி முத்தம் கொடுக்க...

மீரா அவன் முகத்தைப் பிடித்து நிமிர்த்தியவள், அவன் உதட்டில் அழுந்த முத்தமிட்டாள். அர்ஜுனுக்குப் பூஸ்ட் குடித்த தெம்பு வந்தது.

மீராவிடம், "நீயாதான் ஆரம்பிச்ச..." என்றவன், சிறிது நேரம் மீராவைப் போட்டுப் படுத்தி எடுக்க... மீரா அவனைத் தள்ளிவிட்டு வெளியே சென்றாள். அர்ஜுனும் வெளியே வர... இருவரும் சிரித்துப் பேசிக்கொண்டே கீழே சென்றனர்.

அர்ஜுன் அந்த மண்டபத்திற்கு எதிரில் இருந்த ஹோட்டலுக்கு மீராவை அழைத்துச் சென்றான். இருவரும் சேர்ந்து பேசிக்கொண்டே சாப்பிட்டனர். இரண்டு நாட்களுக்குப் பிறகு அன்றுதான் இருவரும் ஒழுங்காகச் சாப்பிட்டனர். இருவரும் திரும்பி மண்டபம் வந்து வேலை எல்லாம் முடிந்து விட்டதா என்று பார்த்துவிட்டு, மாலை வரவேற்புக்குக் கிளம்ப... அவரவர் வீட்டை நோக்கிச் சென்றனர்.

19

அர்ஜுன் உல்லாசமாக விசில் அடித்துக் கொண்டே வீட்டிற்கு வந்தான். அவன் முகத்தைப் பார்த்தே ஆரு, 'சமாதானம் ஆகிட்டாங்க போல...' என்று

நினைத்தாள். அர்ஜுன் தன் அறைக்குச் சென்றவன், அவன் கட்டிலைப் பார்த்து அதிர்ந்தான்.

அவன் கட்டிலில் மேக்கப் பாக்ஸ் திறந்து கிடந்தது, ஐ லைனர் ஒரு பக்கம் சரியாக மூடாமல் கொட்டிக் கொண்டிருந்தது, தலையில் வைத்து காய்ந்த பூ வேறு... அதோடு யாரோ உடையைக் கழட்டி அங்கேயே போட்டுவிட்டுச் சென்று இருந்தனர்.

"இது யார் வேலை?" அங்கிருந்த அவன் பெரியம்மாவிடம் அர்ஜுன் கேட்க...

அவர், "இங்க சஞ்சனாதான் டிரஸ் பண்ணா..." என்றதும், அர்ஜுனுக்கு வந்ததே ஆத்திரம்.

'அவள் எப்படித் தன் அறைக்குள் வரலாம்?' என்று நினைத்தவன், "அம்மா..." என்று அவன் போட்ட சத்தத்தில், வித்யா அலறி அடித்துக் கொண்டு ஓடி வந்தார். அவர் மட்டும் இல்லை சஞ்சனா, ஆரு இன்னும் அங்கிருந்த சிலரும் வந்தனர்.

"என்னடா? எதுக்கு இப்படிக் கத்துற?" என்றவரிடம், அவன் கட்டிலைக் காண்பித்தான். வித்யா, அவன் கட்டிலைப் பார்த்துத் திடுக்கிட்டார்.

"எனக்கு இதெல்லாம் பிடிக்காதுன்னு உங்களுக்குத் தெரியும்தானே... எதுக்கு என்னோட ரூமுக்குள்ள யாரையும் விடறீங்க...? இதெல்லாம் உங்களோட ரூம்ல வச்சுக்க வேண்டியதுதானே...? ரெண்டு நாளா நாயா அலையறேன், ஒரு பத்து நிமிஷம் படுக்கலாம்னு

வந்தா... இது வீடா இல்லை வேறெதுமா?" அர்ஜுன் கோபமாகக் கத்தியவன், ஒரு துண்டை எடுத்துக் கொண்டு குளிக்கச் சென்றான்.

அர்ஜுன் பேசுவதைக் கேட்டுக் கொண்டே வந்த ஆதி... ஆருவிடம், "இதெல்லாம் உன்னோட ரூம்ல வச்சுக்க வேண்டியதுதானே ஆரு... அவனுக்குப் பாவம் ஒரே அலைச்சல்... அதுதான் கத்துறான்..." என்றான்.

வித்யாவும், ஆருவும் சேர்ந்து வேகமாக அவன் கட்டிலை ஒழுங்கு படுத்தி, வேறு போர்வை விரிக்க... சஞ்சனா, அர்ஜுன் போட்ட சத்தத்தில் அரண்டவள், அந்த இடத்திலேயே சிலையாக நின்றாள்.

ஆரு, அவளின் பொருட்களை அவளிடம் கொடுக்க... அதை எடுத்துக் கொண்டு கீழே அவள் தங்கி இருந்த அறைக்குச் சென்றாள். அங்கே அவள் அம்மாவிடம் அவள் குறை சொல்ல... "நமக்குத்தான் இந்த ரூம் கொடுத்திருக்காங்கல்ல, நான் உன்னை இங்க தானே டிரஸ் பண்ணச் சொன்னேன்... நீ ஏன் அங்க போனே?" என்றார் அவர்.

"எங்க அக்கா வீடு, நான் எங்க வேணா போவேன். இருக்கட்டும்... ரஞ்சனா ப்யூட்டி பார்லர்ல இருந்து வரட்டும், அவகிட்ட எல்லாத்தையும் சொல்றேன்."

"அப்படியே வாயிலேயே ஒண்ணு போடுவேன். பொண்ணு கொடுத்த இடத்தில அடக்கமாத்தான் இருக் கணும். அவளுக்குக் கல்யாணம் ஆகி ஒரு வாரம் தான்

ஆகுது. அதுக்குள்ள ஏதாவது குழப்பம் பண்ண, கொன்னுடுவேன். நீ என் கூடத்தான் இருக்கணும்."

தன் அம்மா பேச்சில் கோபம் கொண்டு சஞ்சனா முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ள... "அன்னைக்கும் நான் சொல்லச் சொல்லக் கேட்காம, கல்யாணமாகி முதல் தடவை புகுந்த வீட்டுக்குப் போற உங்க அக்கா கூடவே போவேன்னு ஒரே அடம், ஒழுங்கா எங்களோட வந்திருக்கலாம்... இது என்ன நம்ம வீடா...?" என்று தொடர்ந்து அவளின் அம்மா அர்ச்சனை செய்ய... சஞ்சனா அடங்கி உட்கார்ந்தாள்.

ரஞ்சனா ரெடி ஆனதும் காரில் அவளை அழைக்கச் சென்ற ஆதி, "ரஞ்சு, உன் தங்கை இன்னைக்கு அர்ஜுன் ரூம்ல போய் டிரஸ் பண்ணிக் கிறேன்னு, அங்கேயே எல்லாத்தையும் விட்டுட்டு வந்திட்டா போல... அவன் கொஞ்சம் மூட் அவுட் ஆகி கத்திட்டான். சாரி... அவன் யாருன்னு தெரியாமத்தான் கத்திட்டான். நீ சஞ்சனாவைக் கொஞ்சம் சமாதானம் பண்ணிடு..." என்றவனின் குரலில், ரஞ்சனா சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமே என்ற தவிப்பே இருந்தது.

"அவ எதுக்கு அங்க போனா? நம்ம ரூம்ல டிரஸ் பண்ணி இருக்கலாம் இல்ல... எங்க வீட்ல அவ கொஞ்சம் செல்லமா வளர்ந்திட்டா... அதனால கொஞ்சம் பிடிவாதம் ஜாஸ்தி, எங்க வீட்ல நான் விட்டுக் கொடுப் பேன்... எல்லா இடத்திலேயும் அப்படி இருக்க முடியாது இல்ல... நான் சொல்லி வைக்கிறேன்."

ரஞ்சனா சொன்னதைக் கேட்ட ஆதிக்கு நிம்மதியாக இருந்தது. குளித்து முடித்து வெளியே வந்த அர்ஜுன், அவன் அறையைப் பார்க்க, நீட்டாக இருந்தது. உடையை மாற்றிக் கொண்டு கீழே வந்தவன், வித்யாவிடம் சென்று சாரி என்றான்.

அவர் அவனைக் கண்டு கொள்ளாமல் இருக்க... அர்ஜுன் சென்று அவர் கழுத்தைக் கட்டிக்கொண்டவன், "சாரிம்மா..." என்றான் மீண்டும்.

"கத்துறது எல்லாம் கத்திடு, அப்புறம் சாரி சொல்லு. பாவம் சஞ்சனா, பயந்திட்டா..." என்றவர், "சரி போ... இப்படியே மூஞ்சியைத் தூக்கி வச்சிக்காம, கலகலப்பா இரு..." என்றார்.

ஆதியின் அருகே வந்த அர்ஜுன், "சாரி ஆதி, உனக்குத்தான் தர்ம சங்கடமா இருந்திருக்கும். ரியலி வெரி சாரி..." என்றவன், ரஞ்சனாவையும் பார்த்து, "சாரி அண்ணி..." என்றான்.

அவள் "விடுங்க அர்ஜுன்..." என்றவள், எழுந்து அவள் தங்கையைத் தேடிச் சென்றாள்.

அர்ஜுன் வெளியே செல்ல... அவனோடு வெளியே வந்த ஆதி, "யாருன்னு தெரியாம கத்திட்ட... அதுக்கு ஏன்டா இவ்வளவு ஃபீல் பண்ற...?" என்றதும்,

அர்ஜுன் நிமிர்ந்து ஆதியின் முகம் பார்த்தவன், "சஞ்சனான்னு தெரிஞ்சுதான் கத்தினேன்..." என்று சொல்லிவிட்டு மேற்கொண்டு அங்கே நிற்காமல் பைக்கை எடுத்துக்கொண்டு சென்றான்.

ஆதிக்கு, அர்ஜுன் சொன்னது குழப்பமாக இருந்தது. அவன் நேராக ஆருவைத் தேடிச் சென்றான். அவளைத் தனியாக அழைத்துச் சென்று விசாரிக்க... ஆரு அன்று கல்யாண மண்டபத்தில் சஞ்சனா பேசியதைச் சொன்னவள், 'அர்ஜுனும் மீராவும் ரெண்டு நாள் பேசாம இருந்தாங்க. அதற்குக் காரணம் சஞ்சனான்னு நினைக்கிறேன்...' என்று அவள் மேலும் ஆதியைக் குழப்ப...

ஆதிக்கு இது சாதாரண விஷயம் என்று தோன்ற வில்லை. 'சரி... பிறகு பார்ப்போம்...' என்று நினைத்தான். ரஞ்சனா சென்று சஞ்சனாவைச் சமாதானம் செய்ய... "உங்க வீட்டு ஆளுங்க சுத்த மோசம்... எனக்கு எங்க அக்கா வீட்ல நினைச்ச இடத்தில டிரஸ் பண்ணிக்கக் கூட உரிமை இல்லையா...? நீ எப்படித்தான் இவங்களோட குப்பை கொட்டப் போறியோ..." எனச் சஞ்சனா வாய் ஓயாமல் பொரிய.

அவளது அம்மா, "அதெல்லாம் அவ நல்லாக் குப்பை கொட்டுவா... நீ உன் வேலையைப் பார்த்திட்டு இருந்தாலே போதும். எங்க இருந்திட்டு என்ன பேசுற? அவங்க யார் காதுலேயாவது விழுந்தா என்ன நினைப்பாங்க? என்னைத்தான் பெண்ணை ஒழுங்கா வளர்க்கலைன்னு சொல்வாங்க, பேசாம வாயை மூடு..." என்றார்.

வரவேற்புக்கு எல்லோரும் கிளம்பி மண்டபம் சென்றனர்.

எல்லோரும் ஐந்து மணிக்கே மண்டபம் வந்துவிட்டனர். ஆறு மணியிலிருந்துதான் வரவேற்பு. அதனால் ஆளுக்கு ஒரு ஏசி அறையில் சென்று அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். ஆதியும், ரஞ்சனாவும் ஒரு அறையில் இருந்தனர். அவர்கள் இருவரும் தனியாக இருக்கட்டும் என்று யாரும் அவர்கள் அறைக்குச் செல்லவில்லை.

ஆதி, ரஞ்சனாவிடம் சிலுமிஷம் செய்து அவளைச் சிவக்க வைத்துக் கொண்டிருந்தான்.

அப்போது சஞ்சனா வந்து அவர்கள் இருந்த அறைக் கதவைத் தட்ட... ஆதி சென்று கதவைத் திறந்தான்.

உள்ளே வந்த சஞ்சனா அவர்கள் இருவரும் தனியாக இருப்பதைப் பார்த்தும் வெளியே செல்லாமல், அங்கேயே உட்கார்ந்துவிட்டாள்.

ஆதிக்கு ஏமாற்றமாக இருந்தது. 'என்ன இவளுக்குக் கொஞ்சம் கூட இங்கிதமே தெரியலை...? இப்படித்தான் அவங்க வீட்ல இருக்கும் போதும் செய்வா... தனியா எங்கேயும் வெளிய போகவும் விடலை... எப்பவும் அவங்க அக்கா கூட ஒட்டிக்கிட்டே இருக்கா. சின்னப் பொண்ணுன்னா கூடப் பரவாயில்லை, காலேஜ் முடிச் சிட்டா.... இன்னும் இந்த விவரம் கூடவா தெரியாது...?' என்று மனதிற்குள் புலம்பிக் கொண்டிருந்தான்.

ரஞ்சனா, ஆதியின் முகம் பார்க்க... அவன் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்தான். அவனின்

நிலைமை அவளுக்குப் புரிந்தது. ஆனால், சஞ்சனாவைப் பார்த்தாலும் பாவமாக இருந்தது. அவள் சஞ்சனாவோடு பேச.... ஆதி அந்த அறையில் இருந்து வெளியே சென்றுவிட்டான்.

மண்டப வாசலில் வித்யா டேபிளில் பன்னீர், சந்தனம், குங்குமம், ரோஜாப் பூ எல்லாவற்றையும் அடுக்க... அவருக்கு ஆரு உதவிக் கொண்டிருந்தாள். அவர்கள் அருகில் ரஞ்சனாவின் அம்மா நின்று கொண்டிருந்தார். அப்போது ஆதி அங்கே வந்தான்.

"நீ எதுக்குடா வெளியே வந்த... வியர்க்கும், ஏசி ரூம்ல இருக்க வேண்டியதுதானே... ரஞ்சனா தனியாவா இருக்கா...?" வித்யா கேட்க...

"அவ தங்கச்சி கூட இருக்கா..." என்றான் ஆதி.

ஆதியின் குரலில் இருந்தே... அது அவனுக்குப் பிடிக்கவில்லை என்பதை வித்யாவும் உணர்ந்தார். அதே போல் ரஞ்சனாவின் அம்மாவும் உணர்ந்தார்.

"இன்னைக்குத்தான் அக்காவும், தங்கையும் பேச முடியும். இனி ரெண்டு பேரும் அடிக்கடி பார்க்க முடியாது. வேற ஊர் இல்ல... அவங்க ஆசை தீரப் பேசட்டும்..." என்று நல்லவிதமாக வித்யா ஆதியிடம் எடுத்துச் சொல்ல... அவனும் புரிந்து கொண்டான்.

அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டே இருந்த ரஞ்சனாவின் அம்மா, அவர் பெண்களைத் தேடிச் சென்றார். "மாப்பிள்ளையும், உங்க அக்காவும் தனியா

இருக்கும்போது, நீ எதுக்கு இங்க வந்த...?" என்று அவர் சஞ்சனாவைத் திட்ட...

"அம்மா, என்னை எப்பப் பாரு திட்றாங்க..." என்று அவள் அழ, "ஏன்மா அவளைத் திட்டுறீங்க?" என்று ரஞ்சனா சண்டைக்கு வந்தாள்.

"திட்டாமல் பின்ன கொஞ்சவா சொல்ற...? இவளுக்கும் அறிவு இல்லை, உனக்கும் அறிவு இல்லை. ரஞ்சனா... உன்னோட புகுந்த வீட்டு மனுஷங்க ரொம்ப நல்ல மாதிரி... கல்யாணத்துக்கு நம்ம ஊருக்கு வந்த போது கூட அவங்க நம்மை எந்தக் குறையும் சொல்லலை. இதே மத்தவங்களா இருந்தா... எவ்வளவு குறை கண்டுபிடிச்சிருப்பாங்க. அதனால அவங்ககிட்ட நல்லபடியா நடந்து நல்ல பேர் வாங்குற வழியைப் பாரு... இவளோட சேர்ந்தா நீயும் உருப்படமாட்ட..." என ரஞ்சனாவின் அம்மா அவளுக்கு ஒரு பெரிய சொற்பொழிவே ஆற்றினார்.

ரஞ்சனா எல்லாவற்றிற்கும் மண்டையை உருட்ட... சஞ்சனா அவள் அம்மாவைக் கோபமாக முறைத்துக் கொண்டிருந்தாள். அடுத்து சஞ்சனாவைப் பார்த்து, "நைட் வீட்டுக்குப் போனதும் உன் பெட்டியில எல்லாத்தையும் எடுத்து வைக்கிற... நாம நாளைக்குக் காலையில திருச்சிக்குக் கிளம்பணும்..." என்றார்.

அதைக் கேட்டுத் திடுக்கிட்ட சஞ்சனா, "நான் வர மாட்டேன், நான் இங்கேதான் பி.ஜி. சேரப் போறேன்..." என்றாள்.

"ஒண்ணும் நீ படிச்சுக் கிழிக்க வேண்டாம். அப்படிக் கிழிக்கிறதை அங்க வந்து கிழி. நீ இங்க இருந்தா, உங்க அக்காவை அவ குடும்பத்தில ஒழுங்கா வாழ விடமாட்ட... ஒழுங்கா என்னோட ஊருக்குக் கிளம்புற வழியைப் பாரு..." என்றவர், அந்த அறையில் இருந்து வெளியே சென்றார்.

நேரம் ஆனதும் விருந்தினர் வருகைக்காக வாசலில் வரவேற்க கணேசன், வித்யா, அர்ஜுன், ஆரு நின்றிருக்க... அவர்களோடு பெரியம்மாவும் நின்று கொண்டிருந்தார். அப்போது அங்கே ஒரு கார் வந்து நிற்க... அந்தக் காரின் பின் சீட்டில் இருந்து மீராவும், வருணும் இறங்கினர். மீரா, டிரைவரிடம் இரவு பத்து மணிக்கு வரச் சொல்ல... அவர் சரி என்று தலை ஆட்டிவிட்டுச் சென்றார்.

அர்ஜுன், வருணைப் பார்த்ததும், வேகமாக அவனிடம் சென்று, "ஹாய் வருண், வெல்கம்..." என்றான். அர்ஜுனும், வருணும் பேசிக்கொள்வதைப் பார்த்து மீரா முகம் பூரித்தாள். வாசலில நின்ற எல்லோரும் மீராவைத்தான் பார்த்துக் கொண்டிருந்தனர்.

மீரா வயலட் நிற டிஷ்யூ புடவையில் தங்க நிற பீட்ஸ் மற்றும் சிறிய வெள்ளை நிற கற்கள் பதித்த டிசைனர் புடவையில் வந்திருந்தாள். கழுத்தில் அர்ஜுன் கொடுத்த செயினோடு சிறு, சிறு பூக்கள் கோத்தது போல் வெள்ளைக் கற்கள் பதித்த வைர நெக்லஸும் மற்றும் அதற்குப் பொருத்தமான வைரத் தொங்கட்டான் காதில் போட்டிருந்தாள்.

தலைக்கு ஷாம்பூ போட்டுக் குளித்துக் கூந்தலை விரித்து விடாமல், மொத்தமாகச் சேர்த்துக் கற்கள் பதித்த ஒரு பெரிய க்ளிப் மட்டும் போட்டிருந்தாள். முகத்தில் லேசான ஒப்பனையுடன் அழகு ஓவியமாக வந்தவளை, எல்லோரும் மனதிற்குள் மெச்சிக் கொண்டனர்.

மீரா உள்ளே வரும் போது... சரியாக மண்டபத்தின் வெளியே இருந்த அனைத்து விளக்குகளும் ஒளிர... மீரா பார்க்க வானத்து நட்சத்திரம் போல் ஜொலித்தாள்.

"எவ்வளவு அழகா இருக்கா... யாருக்குக் கொடுத்து வச்சிருக்கோ...?" வித்யா சொல்ல...

"ஏன்மா... பேசமா உங்க ரெண்டாவது பையனுக்கே ஜோடி சேர்த்துட வேண்டியதுதானே..." என்று ஆரு சொல்லிவிட்டு, அவள் அம்மா இப்போது தனக்குச் செய்யப் போகும் அர்சனைக்காகக் காத்திருக்க...

வித்யா, ஆருவைப் பார்த்து முறைத்து விட்டு அமைதியாக இருந்தார். அவர் முகத்தில் கோபம் இல்லை... லேசான புன்னகையே இருந்தது. ஆருவிற்கு நம்பவே முடியவில்லை. இது நம்ம அம்மா தானா என்று தன் கையைக் கிள்ளிப் பார்த்தாள்.

அர்ஜுன், வருணோடு பேசும் ஆவலில் மீராவைச் சரியாகக் கவனிக்கவில்லை. மீரா உள்ளே சென்றதும் தான் அவளை நன்றாகப் பார்த்தான். 'அடிப்பாவி, என்னை வேலையே பார்க்க விடக் கூடாதுன்னு முடிவே பண்ணிட்டா போல...' என்று நினைத்துப் பெருமூச்சு விட்டான்.

விருந்தினர் வர ஆரம்பிக்க... எல்லோரும் அவர்களைக் கவனிக்க ஆரம்பித்தனர். மேடை அலங்காரம் கண்ணைப் பறித்தது. ஆதியும், ரஞ்சனாவும் மேடைக்கு வந்தனர். இருவரும் ஒருவருக்கொருவர் பொருத்தமான ஜோடியாகப் பார்த்தவர்கள் கண்களைக் குளிர்வித்தனர். வழக்கம் போல் ஆருவும், சஞ்சனாவும் அவர்களோடு மேடையில் நின்றனர்.

மண்டபமே களைகட்டியது. ஆதியின் நண்பர்கள், அர்ஜுனின் நண்பர்கள், ஆருவின் தோழிகள் என்று திருமண மண்டபமே இளமைப் பட்டாளத்தின் சரவெடிப் பேச்சில் அதிர்ந்தது. சூர்யாவும் வந்து அவர்களோடு சேர்ந்து கொண்டான். மீராவும் அவர்களோடுதான் அமர்ந்து இருந்தாள்.

இரவு எட்டு மணி ஆன போது... மீராவின் அப்பா ராம்நாத் தன் மனைவி மீனாட்சியுடன் வந்தார். வாசலில் நின்ற கணேசன், அவர்களை வரவேற்று உள்ளே அழைத்து வந்து முன் வரிசையில் அமர வைத்தார். வருண் அவர்களைப் பார்த்ததும் அவர்களோடு சென்று அமர்ந்து கொண்டான்.

வித்யா வந்து ராம்நாத்தை, "வாங்க..." என்று கேட்டு விட்டு, மீனாட்சியிடம் நலம் விசாரித்தார். ராம்நாத் முன் வரிசையில் அமர்ந்திருப்பதைப் பார்த்து அர்ஜுனும் வந்து அவரோடு பேசினான்.

சிறிது நேரம் சென்று கணேசன், ராம்நாத்தை மேடைக்கு அழைக்க... அவரோடு மீனாட்சியும் வருணும்

சென்றனர். அர்ஜுன், மீராவைப் பார்த்து, நீயும் வா என்றான். மீரா, வேண்டாம் என்று தலை ஆட்டினாள். அர்ஜுன் அவளைப் பார்த்து முறைத்தான்.

மேடைக்கு வந்த ராம்நாத், மீனாட்சியைப் பார்க்க... அவள் ஒரு தங்கக் காயின் இருந்த டப்பாவைத் தன் பேக்கில் இருந்து எடுத்துக் கொடுத்தாள். ராம்நாத் அதை ஆதியிடம் கொடுக்கப் போகும்போது...

"ஒரு நிமிஷம் அங்கிள்..." என்ற அர்ஜுன், எல்லோரின் முன்பே "மீரா... நீயும் வா..." என்று சத்தமாகக் கூப்பிட... மீராவும் வேறு வழியில்லாமல் சென்றாள். அவளுக்கு மீனாட்சியின் முகம் பார்க்கவே பயமாக இருந்தது. அவள் தலை குனிந்தபடி சென்று தன் அப்பாவின் அருகே நின்றாள்.

ராம்நாத், "நீ எங்க இருந்த மீரா... நீயா வரவேண்டாமா... பாரு, எல்லோரும் வெயிட் பண்றாங்க பாரு..." என்றவர், ஆதியிடம் அவர் வாங்கி வந்த பரிசைக் கொடுத்தார்.

ராம்நாத், மீரா அவர்கள் குடும்பத்துடன் நெருங்கிப் பழகுவதை அறிந்தே, அவர்களுக்கு நல்ல பரிசு கொடுக்க வேண்டும் என்று தங்கக் காயின் வாங்கி வந்திருந்தார். பரிசைக் கொடுத்ததும் இரண்டு குடும்பத் தினரும் சேர்ந்து நின்று போட்டோ எடுத்துக் கொண்டனர்.

உணவு அருந்தி முடித்தவுடன் ராம்நாத் எல்லோ ரிடமும் விடைபெற்றுக் கிளம்பி விட்டார். வருணும் அவர்களோடு சென்று விட்டான்.

மீரா, சந்தோஷமாகத் தன் கல்லூரி நண்பர்களோடு அரட்டை அடிக்க... சூர்யா, 'இந்த ஆரு நம்மளைக் கண்டுக்க மாட்டேன்றா... நாமும் அவளைக் கண்டுக்கக் கூடாது...' என்று நினைத்தான்.

அப்போது ஆருவே வந்து மீராவின் அருகே அமர்ந்தாள். சூர்யா ஆருவை ஓரக்கண்ணில் பார்த்துக் கொண்டிருந்தான். ஆரு, தாவணி மாடல் புடவை அணிந்து சூப்பராக இருந்தாள்.

சூர்யா, ஆரு வந்ததைப் பார்க்காதது போலவே அமர்ந்து இருக்க... ஆரு, 'என்ன ஆச்சு இவனுக்கு? ஏன் கண்டுக்கவே மாட்டேன்கிறான்...?' என்று நினைத்தவள், அவளே அவன் பக்கம் திரும்பி, "ஹாய் சூர்யா, எப்படி இருக்கீங்க?" என்று கேட்க...

சூர்யா சுற்றிலும் யாரையோ தேடுவதைப் போல் பார்த்தவன், "நீ என்கிட்டேயா பேசுன...?" என்று தெரியாதது போல் கேட்க... ஆரு, 'இவனுக்கு என்ன ஆச்சு...?' என்று நினைத்தவள், அவனைப் பார்த்து முறைத்தாள்.

"ஓ.கே... ஓ.கே... நோ வயலன்ஸ், நான் நல்லா இருக்கேன். நீ எப்படி இருக்க...?"

"ம்ம்... நல்லா இருக்கேன். உங்களுக்கு யாரும் ஆளு இல்லையா சூர்யா... இருந்தா உங்களுக்கும் ஜாலியாப் பொழுது போகுமே..."

ஆரு விளையாட்டாகக் கேட்டவுடன், சூர்யா சட்டென்று, "உனக்கு ஓ.கே.வா...?" என்றான்.

"என்னது...? எனக்கு ஓ.கே.வா...?" என்று ஆரு புரியாமல் பார்க்க...

'லவ் பண்ணத்தான் என்று சொல்ல ஒரு நிமிடம் ஆகாது. ஆனால், நண்பனின் தங்கையைக் காதலிப்பது தவறோ?' என்ற எண்ணம் சூர்யாவின் மனதில் இருந்த தால்... அவனால் ஆருவிடம் தன் மனதில் இருப்பதைச் சொல்ல முடியவில்லை.

அதனால் ஆருவிடம், "எங்க அம்மாவும், அப்பாவும் வந்திருக்காங்க... பார்க்க வர்றியா...?" என்று பேச்சை மாற்றினான்.

'இவன் இதுக்கு முன்னாடி என்ன சொல்ல வந்தான்...?' என்று யோசித்துக் கொண்டே... ஆரு அவனுடன் சென்றாள்.

சூர்யா, ஆருவைத் தன் பெற்றோரிடம் அழைத்துச் சென்றான். அவர்களுக்கு ஏற்கெனவே ஆருவைத் தெரியும் என்பதால்... அவர்கள் அவளோடு நன்றாகப் பேச... ஆரு, மதுவைப் பற்றிக் கேட்டாள்.

"அவளுக்குக் குழந்தை பிறந்திடுச்சும்மா... பையன். இங்க தான் இருக்கா... நாலு மாசம் கழிச்சுதான் போவா, ப்ரீத்தி அவங்க தம்பி பையனை விட்டு வர மாட்டேன்னு சொல்லிட்டா, நீ வீட்டுக்கு வந்து பாரேன்..." என்று அவன் அம்மா ஆருவை வீட்டிற்கு அழைத்தார்.

அப்போது ஆருவின் பெரியம்மா வந்து ஆருவிடம் ஏதோ கேட்க... சூர்யாவின் அம்மா அவரிடம், "நீங்க காயத்ரிதானே...?" என்றார்.

பெரியம்மா, "ஆமாம், நீங்க..." என்று இழுக்க...

"என்னைத் தெரியலையா...? நான் உங்க வீட்டுக்காரருக்குத் தூரத்துச் சொந்தம், தங்கச்சி முறை. மதுரையில ஒரு கல்யாணத்துக்கு வந்த போது கூட, உங்க வீட்டுக்கு வந்திருந்தேனே... ஞாபகம் இல்லை..." அவர் கேட்க...

"ஆமாம்... இப்ப ஞாபகம் வந்திடுச்சு. எப்படி இருக்கீங்க? பார்த்து ரொம்ப வருஷம் ஆகிடுச்சு இல்ல, அதுதான் தெரியலை... இது என் தங்கை பையன் கல்யாணம்தான், நீங்க அவங்களுக்கு சொந்தமா...?" காயத்ரி கேட்க...

"இல்லை, எங்களுக்கு அவங்களைத் தெரியாது, நாங்க சூர்யாவோட அப்பா, அம்மா..." என்றதும்,

"சூர்யா உங்க பிள்ளையா...?" என்ற காயத்ரி,

சூர்யாவிடம், "நான் உனக்கு அத்தை முறை ஆகணும்..." என்றதும், சூர்யாவிற்குத் தலையில் பூக் கூடையே கவிழ்ந்தது போல் இருந்தது.

'இவங்களும் ஆருவோட அம்மாவும் அக்கா, தங்கை. அப்ப எனக்கு ஆரு அத்தை பொண்ணு... கடவுளே, ரொம்பத் தேங்க்ஸ். இந்த மக்க... லவ் எல்லாம் பண்ண முடியாது... நேரடியா கல்யாணம்தான்...' என்று மனதிற்குள் குத்தாட்டம் போட்டவன், அந்தச் சந்தோஷச் செய்தியைப் பகிர்ந்து கொள்ள அர்ஜுனைத் தேடிச் சென்றான்.

அர்ஜுன், டைனிங் ஹாலில் இருந்தான். அவனிடம் வந்த சூர்யா, "அர்ஜுன்... உனக்குத் தெரியுமா...? நீயும், நானும் சொந்தக்காரங்க. உங்க பெரியம்மா எனக்கு அத்தை முறை..." என்றவன், அப்போதுதான் அர்ஜுனின் முகத்தைப் பார்க்க... அவன் சூர்யாவைப் பார்த்து முறைத்துக் கொண்டிருந்தான்.

"நான் எவ்வளவு சந்தோஷமான விஷயம் சொல்றேன், நீ ஏன்டா முறைக்கிற...?"

"இப்ப நீ எனக்கு முறைப் பையனா இருந்து என்னடா ஆகப் போகுது? நாம என்ன கல்யாணமா பண்ணிக்கப் போறோம்...?" சூர்யாவிடம் நக்கலாகக் கேட்டுவிட்டு அர்ஜுன் அவன் வேலையைப் பார்க்கச் செல்ல...

'இவனைக் கட்டிக்கணுமா...? ரொம்பத்தான் ஆசை இவனுக்கு. இவன் தங்கையைக் கல்யாணம் பண்ணிக்க மேப் போட்டா... பேசுறதைப் பாரு... இப்ப இந்தச் சந்தோஷமான விஷயத்தை யார்கிட்ட சொல்றது?' என்று யோசித்தவன், மீராவைத் தேடிச் சென்றான்.

மீராவின் அருகே அமர்ந்த சூர்யா, "மீரா, உனக்குத் தெரியுமா... நானும், அர்ஜுனும் சொந்தக்காரங்க. எனக்கே இப்பத்தான் தெரியும்..." என்றான்.

மீரா வேண்டுமென்றே, "அப்படியா? இத்தனை நாள் நீங்க ரெண்டு பேரும் ப்ரெண்ட்ஸ், இனி அண்ணன், தம்பி. ஹாய் ஜாலி..." என்றாள்.

சூர்யா வேகமாக, "அண்ணன், தம்பி இல்ல. அவங்க பெரியம்மா எனக்கு அத்தை முறை..." என்றான். அவன் சாதரணமாகச் சொல்ல நினைத்தாலும், அவன் குரலில் இருந்த துள்ளலை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. அவன் முகம் புன்னகையில் பூரித்திருந்தது. மீரா உண்மையிலேயே அவனுக்காகச் சந்தோஷப்பட்டாள்.

சூர்யாவும், மீராவும் சிரித்துப் பேசுவதைப் பார்த்த சஞ்சனா, ரஞ்சனாவிடம் அவர்களைக் காட்டி, "இவங்க ரெண்டு பேரும் லவ்வர்ஸ் போல..." என்று சொல்ல... அதைக் கேட்ட ஆதி, 'இவ அர்ஜுன்கிட்ட ஒதை வாங்காம ஊர் போய்ச் சேர மாட்டா போலிருக்கு... இதை மட்டும் அர்ஜுன் கேட்டான், ருத்ரதாண்டவம் ஆடிடுவான்...' என நினைத்தான்.

"ரஞ்சு, உன் தங்கைய தயவு செஞ்சு வாயை மூடச் சொல்லு... இவ ஏதாவது பேசி இழுத்து விடப் போறா... யார் காதுலேயாவது விழுந்தா அவ்வளவுதான்."

ரஞ்சனா, அவள் தங்கையிடம், "உனக்குத் தேவை இல்லாத விஷயத்துல தலையிடாத..." என்றாள். சஞ்சனா ஏதோ சொல்ல வர... ரஞ்சனா அவளைப் பார்த்து முறைக்க... சஞ்சனா வாயை மூடிக்கொண்டாள்.

இரு வீட்டு ஆட்களும் குடும்பப் படம் எடுத்துக் கொண்டனர். அர்ஜுனின் நண்பர்கள் அனைவரும் மேடைக்குச் சென்றபோது, மீராவும் அவர்களோடு சென்றாள். எல்லோரும் சேர்ந்து போட்டோ எடுத்துக்

கொண்டனர். நண்பர்கள் அனைவரும் கடைசிப் பந்தியில் அமர்ந்து ஒன்றாகச் சிரித்துப் பேசி உணவருந்தினர்.

ஆதித்யா, ரஞ்சனாவின் வரவேற்பு இனிதே முடிந்தது. இனி...?

20

வரவேற்பு முடிந்த மறுநாளே, வீட்டிற்கு வந்திருந்த விருந்தினர்கள் எல்லோரும் சென்றுவிட்டனர். ஆதியும், ரஞ்சனாவும் ஒரு வாரம் ஹனிமூன் சென்று வந்தனர். அர்ஜுன் அவர்கள் கடையையும் பார்த்துக் கொண்டு, ஆஸ்திரேலியா போகத் தேவையான வேலை களையும் பார்த்துக் கொண்டிருந்தான். அதனால் அர்ஜுனும், மீராவும் அடிக்கடி சந்திக்க முடியவில்லை.

அர்ஜுன் ஆஸ்திரேலியா செல்வதை நினைத்து, மீரா தனிமையில் அழுது கரைந்தாலும், நேரில் அர்ஜுனைப் பார்க்கும்போது, தான் சாதாரணமாக இருப்பதாகக் காட்டிக்கொள்வாள். இருவரும் தினமும் நள்ளிரவு வரை போனில் பேசிக் கொண்டிருப்பது வழக்கமாகியது.

ஆதியும், ரஞ்சனாவும் ஹனிமூனில் இருந்து திரும்பி வந்ததும், அவர்களின் இயல்பு வாழ்க்கை தொடங்கியது.

வீட்டு வேலைக்கு ஆள் இருந்ததால், சமையல் வேலையை வித்யாவும், ரஞ்சனாவும் சேர்ந்து செய்தனர்.

கணேசனுக்கும், அர்ஜுனுக்கும் மதிய உணவு கடைக்கே சென்றுவிடும். ஆதி மட்டும் வீட்டிற்கு வந்து சாப்பிடுவான். வித்யா, ஆதி வருவதற்கு முன்பே சாப்பிட்டுவிட்டு, அவர் அறைக்குச் சென்றுவிடுவார். ஆதியும், ரஞ்சனாவும் சேர்ந்து சாப்பிடுவார்கள். பின் ஆதி சிறிது நேரம் ஓய்வு எடுத்துவிட்டுக் கடைக்குச் செல்வான். இரவில் அனைவரும் எப்போதும் போல் சேர்ந்து உணவு அருந்துவார்கள்.

இப்படியே சிறிது நாட்கள் செல்ல... அர்ஜுன் ஆஸ்திரேலியா செல்வதற்கு விசா வந்தது. இன்னும் ஒரு வாரத்தில் அவன் கிளம்ப வேண்டும். வித்யா அவனுக்குத் தேவையான பருப்புப் பொடி, இட்லி மிளகாய்ப் பொடி, தனி மிளகாய்ப் பொடி, சாம்பார் பொடி எல்லாம் தயார் செய்தார்.

மீரா, அர்ஜுன் கிளம்பும் நாள் நெருங்க நெருங்க மிகவும் வாடி விட்டாள். அர்ஜுனும் அப்படித்தான் இருந்தான். அவர்கள் இருவரையும் கவனித்த கணேசன், அவர்களை அழைத்துக் கடையில் தன் அறையில் வைத்துப் பேசினார்.

"ரெண்டு பேரும் ஏன் இப்படி டல்லா இருக்கீங்க? இந்தப் பிரிவு நீங்க ஒருத்தர் மீது ஒருத்தர் வச்சிருக்கும் அன்பை இன்னும் அதிகமாக்கும். இப்படித் தள்ளி இருக்கும் போது கண்டிப்பா ஒருவரை ஒருவர் இன்னும் அதிகம் புரிஞ்சிப்பீங்க." கணேசன் எடுத்துச் சொல்ல... இருவரும் சரி என்று கேட்டுக் கொண்டனர்.

அர்ஜுன் ஆஸ்திரேலியா கிளம்பும் முன்தினம் இருவரும் பெசன்ட் நகர் பீச்சில் மீராவின் காரில் அமர்ந்து இருந்தனர். மீரா, அர்ஜுனின் தோளில் சாய்ந்து இருந்தாள்.

அர்ஜுன், மீராவை ஒரு கையால் அணைத்துக் கொண்டு, மறு கையால் அவளின் கைவிரலை வருடிக் கொண்டு இருந்தான்.

இருவரும் பேசாமல் மௌனமாக இருந்தனர். இருவருக்கும் பேசத் தெம்பும் இல்லை.

இருவருக்கும் இனி இரண்டு வருடம் கழித்துத்தான் பார்ப்போம் என்பதே மனதில் பாரமாக இருந்தது. இப்படியே இருவரும் இரண்டு மணி நேரம் இருந்தனர். அப்போது அர்ஜுனின் செல்லில் வித்யா அழைத்தார்.

"அர்ஜுன், மணி எட்டு ஆகுது, காலையில இரண்டு மணிக்கு உனக்கு ப்ளைட். இன்னும் வீட்டுக்கு வராம எங்க இருக்க...?" என்றதும்,

அர்ஜுன் அடைத்திருந்த தன் தொண்டையைச் சரி செய்து கொண்டு, "வரேன்மா..." என்றான். வித்யா, "சீக்கிரம் வா..." என்று போனை வைத்துவிட்டார்.

அர்ஜுன் கிளம்பப் போகிறான் என்றதும், மீரா அவனை இறுக்கமாக அணைத்துக் கொண்டாள். விட்டால் அவன் போய் விடுவானோ என்று பயம். அர்ஜுனுக்கு அவளின் தவிப்புப் புரிந்தது. ஆனால், அவனால் இப்போது வேறு என்ன செய்ய முடியும்?

அர்ஜுன், மீராவின் முகத்தை நிமிர்த்தியவன், "கிளம்பட்டுமா மீரா...?" என்றதும், மீராவின் கண்கள் கலங்க ஆரம்பித்தன.

"ப்ராமிஸ் மீரா... ரெண்டு வருஷம்தான். ப்ளீஸ், பொறுத்துக்கோ. அப்புறம் உன்னை விட்டு எங்கேயும் போக மாட்டேன்."

மீரா, அவனைத் தவிப்பாகப் பார்க்க... அர்ஜுன் அவள் நெற்றி, கன்னம் என்று முத்தமிட்டவன், கடைசியில் அவள் இதழில் ஒரு அழுத்தமான முத்தம் வைத்து அவளை விட்டு விலகியவன், இதற்கு மேல் இருந்தால், தன்னால் அவளை விட்டுப் போக முடியாது என்பதை உணர்ந்து... வேகமாகக் காரில் இருந்து இறங்கி, "Bye மீரா..." என்று சொல்லிவிட்டு, அவன் வந்த வண்டியில் சென்று ஏறினான்.

மீரா திகைத்து விழிக்க... அர்ஜுன், "ம்ம்... காரை எடு..." என்றதும், மீரா காரை ஓட்ட... அர்ஜுன் அவள் பின்னே பைக்கில் சென்றான். மீரா வீட்டின் அருகே வந்ததும், காரை நிறுத்திவிட்டு இறங்கித் திரும்பிப் பார்க்க... அர்ஜுன் அவளின் தெரு முனையில் பைக் கோடு நின்றவன், அங்கிருந்தே கை ஆட்டிவிட்டுச் சென்றான்.

அர்ஜுன் சென்றதும் மீரா சிறிது நேரம் அங்கேயே நின்றிருந்தாள், அர்ஜுன் திரும்பி வருவானோ என்று. ஆனால், அர்ஜுன் திரும்பி வரவில்லை. மீரா வீட்டிற்குள் சென்றவள், உணவு அருந்தாமல் நேராக அவள்

அறைக்குச் சென்று கட்டிலில் அமர்ந்ததும், இதுவரை கஷ்டப்பட்டு அர்ஜுனின் முன்பு அழுது விடக் கூடாது என்று அடக்கி வைத்திருந்த அழுகை, குமுறிக் கொண்டு வந்தது.

பைக்கை இரண்டு தெரு தள்ளி வந்து நிறுத்திய அர்ஜுன், அப்படியே பைக்கின் முன்பே சாய்ந்து படுத்து விட்டான். அவனால் மீராவிடம் போயிட்டு வரேன் என்று சரியாகச் சொல்லிக்கொள்ளக் கூட முடியவில்லை. 'எப்படித்தான் ரெண்டு வருஷம் அவளைப் பார்க்காம இருக்கப் போறோமோ...' என்று நினைத்தவன், வண்டி யைக் கிளப்பி வீடு நோக்கிச் சென்றான்.

அர்ஜுன் வீட்டிற்குள் வந்ததும், நேராக டைனிங் அறைக்குச் சென்று குளிர் சாதனப் பெட்டியில் இருந்து ஒரு பாட்டில் தண்ணீர் எடுத்துக் குடித்து, தன்னை நிலைப் படுத்திக் கொண்டான்.

வித்யா, "சீக்கிரம் சாப்பிட வா, அர்ஜுன்..." என்றதும், சாப்பிட அமர்ந்தவன், ஏதோ பெயருக்குச் சாப்பிட்டுவிட்டு எழுந்து கொண்டான். தன் அறைக்குச் சென்று எல்லாவற்றையும் சரி பார்க்க... மீரா ஒவ்வொன்றையும் அழகாக அடுக்கி வைத்திருந்தாள்.

அர்ஜுன், அவன் இரண்டு பெட்டிகளை எடுத்துக் கொண்டு கீழே வர... "பாஸ்போர்ட், டிக்கெட் எல்லாம் எடுத்துக்கிட்டியா...?" கணேசன் கேட்க...

அர்ஜுன் அவன் தோளில் இருக்கும் பையில் இருப்பதாகச் சொன்னான்.

வித்யா, அர்ஜுனை பூஜை அறைக்கு அழைத்துச் சென்று, சாமிக்குக் காணிக்கையை அவன் கையால் முடிந்து வைக்கச் சொன்னவர். "இதை நீயே நல்லபடியா உன் படிப்பு முடிச்சுத் திரும்பி வந்ததும், நம்ம கோவில் உண்டியல்ல போடறேன்..." என்று வேண்டிக்கச் சொன்னார்.

அர்ஜுன், அவர் சொன்னதோடு சேர்த்து, 'மீராவோட வந்து போடறேன்...' என்று வேண்டிக் கொண்டான். அர்ஜுனுக்கு அவன் அப்பா கணேசன் திருநீறு பூசி விட... அவன் தன் அம்மா, அப்பா காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினான்.

எல்லோரும் சேர்ந்து ஏர்போர்ட் வந்தனர். அர்ஜுனுக்கு முன்பே சூர்யா வந்திருந்தான். அவன் பெற்றோரும் வந்திருந்தனர். அர்ஜுன் வந்ததும் அவனும், சூர்யாவும் சென்று முதலில் முடிக்க வேண்டிய பார்மாலிட்டீஸ் முடித்து விட்டு வந்தனர். அர்ஜுன் கிளம்பும் நேரம் ஆனதும் எல்லோரிடமும் விடைபெற...

ஆரு அழுவதும், பின் கண்ணைத் துடைப்பதுமாக இருந்தாள். ஆதியும் டல்லாக இருந்தான். அர்ஜுன், ஆருவின் அருகே வந்தவன், அவளைத் தோளோடு அணைத்து, "கிளம்பட்டுமா...?" என்றான்.

ஆரு பதில் சொல்லாமல், சரி என்று தலையை மட்டும் ஆட்ட...

"ஏன் ஆரு என்னைப் போகும்போது டென்ஷன் பண்ற...?"

அர்ஜுன் கேட்க... ஆரு கண்ணீரை அடக்கிப் புன்னகைத்தாள்.

அர்ஜுனும் பதிலுக்குப் புன்னகைத்தவன், ஆதியிடமும், ஆருவிடமும், "மீராவை நல்லா பார்த்துக்கோங்க, ப்ளீஸ்..." என்று சொல்ல...

ஆதி, "அதை நீ எங்களுக்குச் சொல்லணுமா...? நாங்க பார்த்துப்போம், நீ கவலைப்படாம போயிட்டு வா..." என்றான்.

அர்ஜுன், சற்றுத் தள்ளி நின்ற ரஞ்சனாவிடம், "போயிட்டு வரேன் அண்ணி..." என்றதும்,

அவள் பதிலுக்கு, "சரி, பத்திரமா போயிட்டு வாங்க..." என்றாள்.

அர்ஜுன் தன் பெற்றோரின் அருகே சென்றவன், வித்யாவை அணைத்துக் கொண்டு, "போயிட்டு வரேன் மா..." என்று சொல்ல, வித்யா அழுதுவிட்டார்.

அவரை மற்ற எல்லோரும் சமாதானம் செய்ய... கண்ணைத் துடைத்தவர், "பத்திரம் அர்ஜுன், வேற நாடு... பார்த்து நடந்துக்கோ..." என்றார்.

அர்ஜுன், "சரிம்மா..." என்று கேட்டுக் கொண்டான்.

அர்ஜுன் எல்லோரிடமும் விடைபெற்றுக் கொள்ள... சூர்யாவும் எல்லோரிடமும் சொல்லிக் கொண்டவன், கடைசியாக ஆருவைப் பார்த்து, 'போயிட்டு வரேன்...'

என்று தலை அசைக்க... ஆருவும் பதிலுக்குத் தலை அசைத்தாள். அர்ஜுனும், சூர்யாவும் உள்ளே சென்றவுடன்தான் மற்றவர்கள் வீட்டிற்குக் கிளம்பினார்கள்.

அர்ஜுன் நடந்து கொண்டே தன் செல்லை எடுத்து மீராவை அழைத்தான். மீரா வேகமாகச் செல்லை எடுத்து, "அர்ஜுன்..." என்றாள்.

"மீரா... கிளம்பிட்டேன்டா, ஏர்போர்ட் வந்துட்டேன். எல்லோரும் என்னை வந்து ஏர்போர்ட்ல விட்டுட்டு, இப்போதான் கிளம்புறாங்க. நான் இங்க மத்த பார்மாலிட்டீஸ் முடிச்சிட்டு வந்து கால் பண்றேன்..." என்று சொல்லிவிட்டுப் போனை வைத்தான்.

அதே போல் எல்லா பார்மாலிட்டீஸும் முடிந்ததும், சூர்யாவின் அருகே தன் பையை வைத்துவிட்டு, சற்றுத் தள்ளி சென்று மீராவை அழைத்தான்.

மீரா முகம் கழுவி... தண்ணீர் குடித்து ஒருவாறு தன்னைத் தேற்றிக் கொண்டு அர்ஜுன் போனுக்காகக் காத்திருந்தவள், அவன் அழைத்ததும் உடனே எடுத்தாள். அர்ஜுனும் கிளம்பும் போது அவள் வருத்தப்படுவது மாதிரி பேச வேண்டாம் என்று கலகலப்பாகப் பேசினான்.

"அப்புறம் மீரா... இனிமே ஒரே ஜாலியா... என் தொல்லை இல்லாம நிம்மதியா இருப்ப..."

"ஆமாம், கண்டிப்பா..."

"எனக்கு ஆஸ்திரேலியால ஒரு அழகான கேர்ள் ப்ரெண்ட் கிடைக்கணும்னு ப்ரே பண்ணிக்கோ மீரா."

"உங்களுக்குத் தானே... நல்லலல... அழகானன... கிழவி கிடைக்கும்."

"பொறாமைப் படாத மீரா... உன்னைக் கழட்டி விட மாட்டேன்... ஆஸ்திரேலியால டைம் பாஸ் பண்ண ஆள் வேண்டாமா... நீயே சொல்லு."

"டேய்... வீணா ஆத்திரத்தைக் கிளப்பாத, நீ மட்டும் ஏதாவது கேர்ள் ப்ரெண்ட் பிடிச்ச... அடுத்த ப்ளைட் பிடிச்சு வந்து உன்னைக் கொன்னுடுவேன், ஞாபகம் வச்சிக்கோ."

"அதெல்லாம் இப்ப சொல்ல முடியாது. நான் அங்க கேர்ள் ப்ரெண்ட் வச்சிருந்தாலும், உனக்கு என்ன தெரியவா போகுது...?" அர்ஜுன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே மீரா போனை வைத்துவிட்டாள்.

அர்ஜுன், "ஹலோ மீரா..." என்று கத்திக் கொண்டிருக்க, சூர்யாவின் மொபைல் அடித்தது. அவன் அர்ஜுனைப் பார்த்து "மீரா..." என்றவன், போனை எடுத்து "ஹலோ..." என்றதும்,

"சூர்யா அண்ணா... அர்ஜுன் அங்க யாராவது பொண்ணு கூடப் பேசினா, நீங்க எனக்கு உடனே சொல்லிடணும். இது ஆரு மேல ப்ராமிஸ்..." மீரா வேகமாகச் சொல்ல... சூர்யா, 'அட ! இவளுக்கு எப்படித் தெரியும்?' என்று யோசிக்கும் போதே... அர்ஜுன் சிரித்துக் கொண்டே அவனிடம் இருந்து செல்லைப் பிடுங்கி,

"என்ன... என்னை வேவு பார்க்க ஆள் செட் பண்றியா...? அதெல்லாம் உதவாது, சூர்யாவை ஏமாத்த எனக்குத் தெரியாதா...?" என்றவன், தொடர்ந்து,

"ஏன் மீரா... என் மேல நம்பிக்கை இல்லையா...? நான் அப்படிச் செய்வேனா...?" அர்ஜுன் ஆழ்ந்த குரலில் கேட்க...

"நீங்க அப்படிச் செய்ய மாடீங்கன்னு தெரியும். இருந்தாலும்... இங்க ஒரு சஞ்சனா வந்த மாதிரி... அங்க ஏதாவது சபந்தனா வந்துட்டா..." மீரா கவலைப்பட...

அர்ஜுன், "எனக்கு அப்படி ஒரு அதிர்ஷ்டம் வரும்ன்னு நினைக்கிற..." என்று மேலும் மீராவை வம்பு இழுக்க...

"செருப்பு வரும். வேண்டாம்... என்னை அசிங்கமா திட்ட வச்சிடாதீங்க, அங்க ஒரு பொண்ணு கூட அழகா இருக்காது, எல்லாப் பொண்ணுக்கும் ஏற்கெனவே ஆள் இருக்கும், உங்களை ஒருத்தியும் திரும்பிப் பார்க்க மாட்டா..." மீரா பல்லைக் கடித்துக் கொண்டு சாபம் விட...

"போதும் தாயே... மலை இறங்கு. எனக்கு யாரும் வேண்டாம். என்னோட மீரா மட்டும் போதும். சந்தோஷமா...? நான் யாரையும் பார்க்கமாட்டேன், நிம்மதியா இரு..."

"எனக்குத் தெரியும், நீங்க சும்மா என்னை வம்பு இழுத்தீங்க."

"தெரியுதுல்ல... அப்புறம் என்ன? சரிடா, ப்ளைட்டுக்கு கால் பண்றாங்க, பத்திரமா இரு, தனியா சுத்தக் கூடாது, ஆருவோட போ. அடிக்கடி நம்ம வீட்டுக்குப் போயிட்டு வா... நாம டெய்லி ஸ்கைப்ல பேசலாம், போயிட்டு கால் பண்றேன். முழிச்சிட்டு

இருக்கக் கூடாது, தூங்கு...” அர்ஜுன் நடந்து கொண்டே பேச...

“சரி, நீங்க போயிட்டு மறக்காம கால் பண்ணுங்க...” என்றாள் மீரா.

“நான் உன்னை மறப்பேனா...? போனதும் கால் பண்றேன், bye...” அர்ஜுன் சொல்ல... மீராவும் “bye...” என்றாள்.

இருவரும் போனை அணைக்க மனம் இல்லாமல், அடுத்தவர் வைக்கட்டும் என்று காத்திருக்க... இருவருமே வைக்கவில்லை. அர்ஜுன் நடந்து கொண்டே, “மீரா...” என்று அழைக்க, மீரா, “அர்ஜுன்...” என்றாள்.

இப்படியே இருவரும் மாற்றி... மாற்றி ஒருவரின் பேரை மற்றவர் சொல்ல... சூர்யா, அர்ஜுனிடம் இருந்து போனைப் பிடுங்கி, “மீரா... ப்ளைட் உள்ள போகணும் bye...” என்று சொல்லி போனை அணைக்க...

அர்ஜுன், சூர்யாவைப் பார்த்து முறைத்துக் கொண்டே நடந்தான். மீரா, அர்ஜுனை நினைத்துக் கொண்டே படுக்கையில் விழுந்தாள்.

21

மீராவிற்கு அழுது அழுது கண்களில் கண்ணீரே வறண்டுவிட்டது. அழுது கொண்டே படுத்திருந்தவள், விடியற்காலையில்தான் தன்னையும் அறியாமல் உறங்கினாள்.

அர்ஜுன் காலை 6.30 மணிக்குச் சிங்கப்பூரில் சென்று இறங்கினான். அங்கிருந்து 9 மணிக்குத்தான் சிட்னி செல்லும் விமானம். அதனால் அவனும், சூர்யாவும் அடுத்த விமானத்திற்காகக் காத்திருந்தனர்.

அர்ஜுனுக்குத் தெரியும், மீரா லேட்டாகத்தான் தூங்கி இருப்பாள் என்று. அதனால் அவள் இன்னும் சிறிது நேரம் தூங்கட்டும், பிறகு பேசுவோம் என்று உட்கார்ந்திருந்தான்.

அர்ஜுன் உற்சாகம் இல்லாமல் இருப்பதைப் பார்த்த சூர்யா, “அர்ஜுன், நீ ரெண்டு வருஷம் படிக்க வந்திருக்க, படிச்சு முடிச்சிட்டுதான் இனி திரும்பிப் போக முடியும். முதல்ல நீ இதை உன் மனசில நல்லாப் பதிய வை. இப்படி நீ விருப்பம் இல்லாம இருக்கிறது பார்க்க நல்லாவே இல்லை... நான் ஏதோ உன்னைக் கட்டாயப்படுத்தி அழைத்து வந்ததைப் போல இருக்கு...” என்றான்.

“எனக்கு மீராவை நினைத்துத்தான் கவலை. உனக்கே தெரியும், நாங்க காதலிக்கும் முன் அவ எப்படி இருந்தான்னு? தனியாவே இருப்பா... இப்பதான் கொஞ்ச நாளா நல்லா இருந்தா... எனக்கு எங்கே அவ மறுபடியும் தனியா இருப்பாளோன்னு கவலை. வேற ஒண்ணும் இல்லை... நான் கொஞ்ச நாள்ல சரி ஆகிடுவேன், கவலைப்படாதே. நான் போய் வீட்டுக்கும் மீராவுக்கும் போன் பண்ணிட்டு வரேன்...” என்று அர்ஜுன் எழுந்து சென்றான்.

அர்ஜுன் முதலில் வீட்டுக்கு அழைத்தான். வித்யா தான் எடுத்தார்.

"அர்ஜுன், சிங்கப்பூர் போயிட்டியா...?"

"வந்துட்டேன்மா... ஒன்பது மணிக்கு ஆஸ்திரேலியா ப்ளைட், நான் போயிட்டு கால் பண்றேன், எல்லாரையும் கேட்டதாச் சொல்லுங்க, வச்சிடட்டுமா...?"

"ம்ம்... சரி அர்ஜுன், பார்த்துப் போ..." வித்யா போனை வைத்ததும், அடுத்து அர்ஜுன், மீராவை அழைத்தான். செல்லின் அழைப்புச் சத்தத்தில்தான் மீரா கண் விழித்தாள்.

போனை எடுத்துப் புது எண் என்றதுமே... அது அர்ஜுன் என்று தெரிந்ததால்... உற்சாகமாக, "ஹாய் அர்ஜுன், குட் மார்னிங்..." என்றாள்.

அவளின் உற்சாகம் அர்ஜுனையும் தொற்றிக் கொள்ள, புன்னகையுடன், "குட் மார்னிங், செல்லம், இப்ப தான் எழுந்துக்கிறீங்களா...?" என்று கேட்டான்.

"ம்ம்... ஆமாம், டைம் என்ன...?" என்றவள், அவளே மணி பார்த்துவிட்டு, "எட்டு மணியா...? இவ்வளவு நேரமா தூங்கிட்டேன்...?" என்று தலையில் அடிக்க...

அர்ஜுன், "சரி காலேஜுக்குக் கிளம்பு, நான் ஆஸ்திரேலியா போயிட்டு போன் பண்றேன்..." என்றான்.

மீரா, "நான் இன்னைக்குப் போகலை..."

"ஏன், விடிய விடிய அழுதது பத்தாதா? இன்னும் இன்னைக்குப் பகல்லையும் உட்கார்ந்து அழணுமா...? நீ காலேஜ் போ, அப்பதான் உன்னோட மூட் மாறும்."

"எனக்குக் காலேஜ் போகப் பிடிக்கலை. ப்ளீஸ் அர்ஜுன்... நாளைக்குப் போறேன்."

"நீ இன்னைக்குக் காலேஜ் போனாதான், நான் நைட் உனக்குப் போன் பண்ணுவேன். இல்லைன்னா பண்ண மாட்டேன். நீயே முடிவு செஞ்சுக்கோ... போறதா, வேண்டாமான்னு. நீ வீட்ல இருந்தா... என்னையே நினைச்சிட்டு இருப்ப, காலேஜ் போனா மூட் மாறும். கிளம்புடா..." என்றதும், மீரா அரை மனதுடன்தான் சம்மதித்தாள். அர்ஜுன், "நைட் கால் பண்றேன்..." என்று போனை வைத்தான்.

மீரா விருப்பம் இல்லாமல்தான் கல்லூரிக்குச் சென்றாள். ஆனால், அங்கே சென்றதும் அவள் மனம் வகுப்பிலும், பாடத்திலும் கவனம் செலுத்தியதால்... அவளால் அர்ஜுன் ஆஸ்திரேலியா சென்றதைச் சிறிது நேரம் மறக்க முடிந்தது. அவள் அழுகையும் நின்றது.

மாலையில் அர்ஜுனோடு கல்லூரியில் சேர்ந்து நின்று பேசிய இடங்களைப் பார்க்கும் போது ஏக்கமாக இருந்தது. அர்ஜுன் இன்னும் சிறிது நேரத்தில் அழைப்பான் என்பதால், வேகமாக வீட்டிற்கு வந்தாள்.

அர்ஜுனும் தன்னைத் தேற்றிக் கொண்டான். சென்னையில் இருந்து விமானம் ஏறியபோது அவன் சூர்யாவோடு கூடப் பேசாமல் அமைதியாகக் கண் மூடி

இருந்தான். சிங்கப்பூரில் இருந்து விமானம் ஏறும்போது சற்று இயல்பாக இருந்தான். அதனால் சூர்யாவோடு பேசிக்கொண்டே வந்தான்.

"சூர்யா... நாம போய்ச் சேரும் போது ராத்திரி ஆகிடும். நேரா நாம தங்கப் போற இடத்துக்குப் போய், இன்னைக்கே பெட்டி எல்லாம் பிரித்து அடுக்கி வச்சிட்டு, நாளைக்குக் காலையில எழுந்து காலேஜுக்குப் போயிட்டு வந்திடலாம்."

"சரி அர்ஜுன், அப்படியே பண்ணுவோம்."

இப்படியே இருவரும் தாங்கள் இனி என்ன என்ன செய்ய வேண்டும் என்று பேசிக்கொண்டே சென்றதில் நேரம் போனதே தெரியவில்லை. இருவரும் ஆஸ்திரேலியா நேரத்திற்கு இரவு ஒன்பதரை மணிக்குத் தரை இறங்கினர்.

அர்ஜுன் விமான நிலையத்தில் இருந்தே வீட்டிற்கும், மீராவிற்கும் அழைத்துத் தான் வந்து சேர்ந்ததைச் சொன்னவன், நாளை விரிவாகப் பேசுவ தாகச் சொல்லி வைத்துவிட்டான்.

விமான நிலையத்திற்கு அவர்கள் கல்லூரியில் படித்த சீனியர் ப்ரகாஷ் நேரில் வந்திருந்தான். விமான நிலையத்தில் இருந்து கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் பயணம் செய்த பிறகே... அவர்கள் தங்கப் போகும் அபார்ட்மென்ட் வந்தது.

ப்ரகாஷ் அங்கே வழியில் இருக்கும் ஒரு மாலில் நிறுத்தி, அவர்களுக்கு ஏதாவது வேண்டுமா என்று

கேட்க... அர்ஜுன், "நாங்க ப்ளைட்லேயே சாப்பிட்டோம் ப்ரகாஷ்..." என்றான்.

"இன்னைக்கு இல்லை... நாளைக்கு ஏதாவது தேவைன்னா இப்பவே வாங்கிக்கோங்க. காலையில கடை திறக்க லேட் ஆகும்..." என்றதும், சூர்யா மட்டும் ப்ரகாஷோடு இறங்கி உள்ளே சென்று பாலும், பழங்களும் வாங்கி வந்தான். அர்ஜுன் பெட்டிக்குக் காவலாக டாக்ஸியிலேயே இருந்தான்.

ப்ரகாஷ் அவர்களை அவர்கள் அபார்ட்மென்ட்டில் சென்று விட்டவன், "நான் அஞ்சாவது மாடியில இருக்கேன்... ஏதாவது வேணும்னா கால் பண்ணுங்க..." என்று தன் மொபைல் நம்பரையும், வீட்டு இண்டர்காம் நம்பரையும் கொடுத்து விட்டுச் சென்றான். அர்ஜுனும், சூர்யாவும் இருப்பது ஆறாவது மாடியில்.

அர்ஜுனும், சூர்யாவும் வீட்டைச் சுற்றிப் பார்த்தனர். அது ஒரு சர்வீஸ் அபார்ட்மென்ட். சின்ன ஹால், அதிலேயே திறந்த சமையல் அறை மற்றும் ஒரு படுக்கை அறை இருந்தது. அந்தப் படுக்கை அறையில் பாத்ரூமும், சிட்அவுட்டும் இருந்தது.

அர்ஜுனும், சூர்யாவும் தாங்கள் கொண்டு வந்த பெட்டியை எடுத்துக் கொண்டு படுக்கை அறைக்குச் சென்றனர். அதில் இரண்டு கப்போர்டு இருந்தது. ஆளுக்கு ஒன்றை எடுத்துக் கொண்டனர்.

அர்ஜுன், சூர்யாவின் மூன்று பெட்டிகளைப் பார்த்து "நீ கொண்டு வந்திருக்கிற பெட்டியைப் பார்த்தா.... நீ

ரெண்டு வருஷத்துக்கு மேலேயே இங்க இருப்ப போலிருக்கே...” என்று நக்கல் அடிக்க...

சூர்யா, அர்ஜுனைப் பார்த்து முறைத்தவன், அதிலிருந்த ஒரு பெட்டியை அர்ஜுனின் பக்கம் நகர்த்தி, “இது உனக்கு, மீரா கொண்டு வந்து கொடுத்தா... ஆஸ்திரேலியா போனதும்தான் சொல்லணும்னு சொன்னா...” என்றான்.

அவன் சொல்லியதைக் கேட்ட அர்ஜுனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. ‘அப்படி என்னதான் அனுப்பி இருக்கா?’ என்று நினைத்தவன், அந்த அறையிலேயே ஒரு மூலையில் சென்று அமர்ந்து, அந்தப் பெட்டியைத் திறக்க... சூர்யாவும் தன்னுடைய பெட்டியைப் பிரித்து அடுக்க ஆரம்பித்தான்.

அர்ஜுன், மீரா கொடுத்த பெட்டியைத் திறந்து பார்க்க... அதில் அர்ஜுனுக்கு நிறைய உடைகள், அவன் கல்லூரிக்குக் கொண்டு செல்ல இரண்டு வகையான தோள் பைகள், காலணிகள் என்று விதவிதமான பரிசுப் பொருட்கள் இருந்தன.

‘இவ எதுக்கு ஒரு கடையையே அனுப்பி இருக்கா...?’ என்று நினைத்தவன், அதோடு அதில் இருந்த ஒரு வாழ்த்து அட்டையை எடுத்துப் பார்த்தான். மீரா அவளுடைய காதலை விளக்குவது போல் இருந்தது அந்த வாழ்த்து அட்டை. அர்ஜுன் அதை நெஞ்சோடு அணைத்துக் கொண்டவன், சிறிது நேரம் கண் மூடிச் சாய்ந்து இருந்தான். பின் அவனும் சென்று சூர்யாவோடு அவன் பொருட்களை அடுக்கினான்.

இருவரும் சேர்ந்து அவர்கள் கொண்டு வந்த மளிகைச் சாமான் மற்றும் பாத்திரங்களைச் சமையல் அறை கப்போர்டில் அடுக்கி வைத்து விட்டு, அவர்கள் வாங்கி வந்த பாலைக் காய்ச்சிக் குடித்துவிட்டுப் படுக்கச் சென்றனர். இருவரும் இருந்த அலுப்பில் படுத்ததும் உறங்கியும் விட்டனர்.

மறுநாள் காலையில் எழுந்து இருவரும் நூடுல்ஸ் செய்து சாப்பிட்டுவிட்டு, ப்ரகாஷோடு கல்லூரிக்குச் சென்றனர். அங்கே வேலை எல்லாம் முடிய மதியமாகி விட்டது. பிறகு அங்கிருந்து கேன்டீனில் சென்று இருவரும் சாப்பிட்டுவிட்டு, அவர்கள் தங்கி இருந்த வீட்டிற்கு வந்தனர்.

அர்ஜுன் எப்போது இரவு ஆகும் என்று காத்திருந்தவன், மீராவை ஸ்கைப்பில் அழைத்தான். அர்ஜுனும் மீராவும் ஒருவரை ஒருவர் பார்த்ததும் இருவருக்கும் முதலில் பேச்சே வரவில்லை. அர்ஜுன் கட்டிலில் லேப்டாப்பை வைத்துக்கொண்டு படுத்திருந்தான். மீரா அவள் அறையில் உள்ள சோபாவில் அமர்ந்து இருந்தாள், மடியில் லேப் டாப் இருந்தது.

இருவருக்கும் இரண்டு நாளே ஏதோ மாதக் கணக்கில் பார்க்காதது போல் இருந்தது. முதலில் இருவரும் ஒருவரை ஒருவர் நன்றாகப் பார்த்துக் கொண்டனர். பின் அர்ஜுன்தான் முதலில் பேச்சை ஆரம்பித்தான்.

“எப்படி இருக்க மீரா...? ரொம்ப அழுதியா...? கண்ணெல்லாம் வீங்கி இருக்கு...”

"அதெல்லாம் இல்லை... நான் நல்லாத்தான் இருக்கேன்..." என்று சொல்லும் போதே மீராவின் குரலில் அழுகை எட்டிப் பார்த்தது.

அர்ஜுன் அதைக் கண்டுகொள்ளாமல் பேச்சை மாற்றினான். "எதுக்குடி இப்படி ஒரு கடையையே காலி பண்ணி அனுப்பி இருக்க...?"

"அந்த டிரஸ் எல்லாம் நீங்க ஸ்பெஷல் டேஸ் அன்னைக்குப் போட்டுக்க..."

"என்ன ஸ்பெஷல் டே? புரியற மாதிரி சொல்லு..."

"புரியலையா...? ஒரு டிரஸ் நீங்க காலேஜ் போற முதல் நாள் அன்னைக்கு, இன்னொரு டிரஸ் உங்க பிறந்தநாள் அன்னைக்கு, அப்புறம் தீபாவளிக்கு... இப்படி ஒவ்வொரு ஸ்பெஷல் டே அன்னைக்குப் போட்டுக்க வாங்கி வச்சிருக்கேன். இப்பவாவது புரியுதா...? கரெக்டா ரெண்டு வருஷத்துக்குத்தான் வாங்கி இருக்கேன். அதனால ரெண்டு வருஷம் முடிஞ்சதும் வந்திடணும்."

"உங்க அப்பா நிறையப் பணம் வச்சிருக்கார், அதை எப்படிக் காலி பண்றதுன்னு தெரியாம இதெல்லாம் பண்ற நீ."

"விடுங்க... அப்புறம் அவரு தர்ற டெளரியில கழிச்சிடலாம். சரி, அப்புறம் இன்னைக்கு என்ன பண்ணீங்க...?" மீரா, அர்ஜுனிடம் அன்றைய விஷயங்களைப் பற்றிப் பேச... அர்ஜுன் அன்று கல்லூரி சென்று வந்தது பற்றிச் சொன்னான். மீராவும், அர்ஜுனும் சிறிது

நேரம் பேசிவிட்டுத் தொடர்பைத் துண்டித்தனர். அர்ஜுன் அடுத்து ஆருவை அழைத்தான்.

"ஹாய் அர்ஜுன், எப்படிடா இருக்க...? அங்க உனக்குப் பிடிச்சிருக்கா, சாப்பாடு நல்லா இருக்கா...? நீ இல்லாம வீடு நல்லாவே இல்லை..." ஆரு புலம்ப...

அர்ஜுன், "எல்லாம் நல்லா இருக்கு, சாப்பாடு தான் அவ்வளவாப் பிடிக்கலை..." என்றான். அர்ஜுன் இந்தியாவில் இருந்தாலும் வெளியே சென்று சாப்பிட்டால் அப்படித்தான் சொல்வான். அவனுக்கு எப்போதும் வீட்டுச் சாப்பாடுதான் பிடிக்கும்.

அவன் சொன்னதைக் கேட்டு வருந்திய ஆரு, "உன்னோட ப்ரெண்ட்டைக் கூப்பிடு..." என்று சொல்ல...

அர்ஜுன், "சூர்யாவையா...? எதுக்கு...?" என்று கேட்க...

ஆரு, "நீ முதல்ல கூப்பிடு..." என்றாள்.

அர்ஜுன், சூர்யாவை அழைக்க, அவன் வந்து என்னவென்று கேட்டான். "இங்க வா..." என்று அவனை லேப்டாப் முன் அமர வைக்க... அதன் திரையில் ஆரு தெரிந்தாள்.

சூர்யாவுக்கு ஆருவைப் பார்த்ததும் சந்தோஷத்தை அடக்கவே முடியவில்லை. "ஹாய் ஆரு..." என்றான் புன்னகையுடன்.

"எங்க அண்ணாவுக்கு இந்த ஹோட்டல் சாப்பாடு எல்லாம் ஒத்து வராது, அதனால உங்களுக்குச் சமையல்

தெரியும்னு சொன்னீங்கல்ல, அவனுக்கு ஒழுங்கா சமைச்சுக் கொ நுங்க." ஆரு மிரட்ட...

"ஹே... என்ன மிரட்டல் எல்லாம் பலமா இருக்கு, நான் என்ன உங்க அண்ணனுக்குச் சமைச்சுப் போடவா வந்திருக்கேன்? அவனுக்கு வேணும்னா அவனையே சமைக்கச் சொல்லு." சூர்யா கோபமாகச் சொல்ல முயன்றாலும், அவன் குரல் குழைந்துதான் இருந்தது.

அவன் சொன்னதைக் கேட்ட ஆருவின் கண்கள் கலங்க... "அம்மா தாயே... அழாதே. நான் உங்க அண்ணனுக்கு நல்லா வக்கணையா சமைச்சுப் போடறேன்."

சூர்யா சொன்னதும்தான் ஆருவின் முகம் மலர்ந்தது. அவள் சூர்யாவிடம், "தேங்க்ஸ்..." என்று சொல்ல... சூர்யாவின் முகமும் புன்னகையில் விரிந்தது. அர்ஜுன் அவர்கள் பேசுவதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தான்.

"நான் உங்க அண்ணனுக்குச் சமைச்சுப் போடறேன். ஆனா... அவன் எனக்குக் காய் வெட்டித் தரணும், அப்புறம் பாத்திரம் கழுவறது எல்லாம் அவன் வேலை. அதை நீயே அவனிடம் சொல்லிடு..." என்று எழுந்து சென்றான்.

"டேய், அதுதான் அப்பவே செஞ்சு தந்தேனே... அப்புறம் என்ன...?" என்ற அர்ஜுன், ஆருவிடம் வித்யாவை அழைக்கச் சொல்ல... அடுத்து வித்யாவும், அர்ஜுனும் பேச ஆரம்பித்தனர்.

மறுநாள் அர்ஜுனுக்கும், சூர்யாவிற்கும் அவர்கள் கல்லூரி ஐ.டி. கார்டு கிடைத்தது. இருவரும் சென்று தங்கள் மொபைலுக்குப் புது சிம் கார்டு வாங்கினர். அர்ஜுனும், சூர்யாவும் வேலையைப் பகிர்ந்து செய்தனர்.

சூர்யா சமையல் வேலையை எடுத்துக் கொண்டதால்... அர்ஜுன் வீட்டைச் சுத்தம் செய்யும் வேலையை எடுத்துக் கொண்டான். இருவருக்கும் இன்னும் கல்லூரி திறக்காததால், காலையில் இருந்து மாலை வரை ஊரைச் சுற்றிப் பார்த்தனர்.

அவர்கள் ஆஸ்திரேலியா சென்ற மறுவாரம் கல்லூரி திறக்க, அர்ஜுனும் சூர்யாவும் ஆர்வமாகச் சென்றனர். அர்ஜுன், மீரா அனுப்பி இருந்த உடையில் இருந்து ஒன்றைத்தான் முதல் நாள் கல்லூரிக்கு அணிந்து சென்றான். அங்கே இந்தியாவில் இருந்து வந்த மாணவர்கள் நிறையப் பேர் இருந்தனர். அர்ஜுனுக்கும், சூர்யாவிற்கும் அவர்கள் கல்லூரியை ரொம்பப் பிடித்தது.

அந்த வார ஞாயிற்றுக்கிழமை மீரா ஒரு நாட்டிய நிகழ்ச்சிக்கு ஒத்துக் கொண்டிருந்தாள். ஆடி முடித்ததும் எல்லோரும் கை தட்ட... மீராவின் கண்கள் எப்போதும் போல் அர்ஜுனைத் தேடியது.

அவர்கள் இருவரும் காதலிக்க ஆரம்பித்த பிறகு, அர்ஜுன், மீராவின் ஒவ்வொரு நாட்டிய நிகழ்ச்சிக்கும் வந்து விடுவான். ஆடி முடித்து அவள் மேடையை விட்டு

இறங்கும் போது... அவளுக்காகக் காத்திருந்து, அவளைப் பாராட்டி உற்சாகப் படுத்துவான். ஆனால், இன்று மீண்டும் அவள் முன்பிருந்த தனிமைக்கே சென்று விட்டதைப் போலத் தோன்ற... மீராவிற்குக் கண்ணில் இருந்து நிற்காமல் கண்ணீர் வழிந்தது.

மீரா உடை மாற்றும் அறைக்குச் சென்று, அங்கிருந்த மேஜையில் தலை கவிழ்ந்து அழுதாள். அப்போது அவள் செல் அடிக்கும் ஒலி கேட்க... ஓடிச் சென்று தன் பையில் இருந்து செல்லை எடுத்துப் பார்த்தாள். அர்ஜுன்தான் அழைத்தான். அவனுக்கு இப்போது நள்ளிரவு நேரமாக இருக்கும்... அப்படியும் அவன் தன்னை அழைப்பதைப் பார்த்ததும், மீராவிற்கு மகிழ்ச்சியாக இருந்தது.

"மீரா, ப்ரோக்ராம் முடிஞ்சிடுச்சா...? நீ நல்லா ஆடினியா..." அர்ஜுன் கேட்க...

மீரா வெறும், "ம்...ம்.. என்று மட்டும் சொன்னாள்.

"அழறியா மீரா...?" என்றதும், மீரா விசும்ப...

"எனக்குத் தெரியும், நீ இன்றைக்கு என்னைத் தேடுவேன்னு... அதுதான் போன் பண்ணேன். ப்ளீஸ் மீரா... கொஞ்ச நாள்தான், அட்ஜஸ்ட் பண்ணிக்கோடா..." அர்ஜுன் கெஞ்சிக் கொஞ்சி சமாதானம் செய்ய... மீரா சரி என்றாள்.

மீரா அடிக்கடி அர்ஜுனின் வீட்டிற்குச் சென்று வந்தாள். அதனால் ரஞ்சனாவோடும் நன்றாகப் பழகும்

வாய்ப்பு அவளுக்குக் கிடைத்தது. மீரா, ஆரு, ரஞ்சனா சேர்ந்து சில நேரம் ஷாப்பிங், சினிமா என்று செல்வார்கள்.

அர்ஜுனுக்கும் கல்லூரி வாழ்க்கை நன்றாக இருந்ததால், அவனும் சந்தோஷமாக இருந்தான்.

இப்படியே மூன்று மாதங்கள் செல்ல... சஞ்சனா, ரஞ்சனாவைப் பார்க்க வந்தாள்.

22

ரஞ்சனா கருவுற்றிருந்தாள். அவளைப் பார்க்க அவளது பெற்றோருடன் சஞ்சனாவும் வந்தாள். ரஞ்னாவின் பெற்றோர் அன்றே கிளம்ப... ரஞ்சனா அவளது பெற்றோரிடம், "சஞ்சனாவுக்கு இப்ப காலேஜ் லீவ்தானே... அதனால அவ இன்னும் ஒரு வாரம் என்னோடு இருக்கட்டுமே..." என்று கேட்க, ரஞ்சனா ஆசைப்பட்டுக் கேட்டதால்... அவளது பெற்றோரும் சரி என்றனர்.

சஞ்சனாவிற்கு ஒரே மகிழ்ச்சி. அதைப் பார்த்த அவளது அம்மா, "ஒரு வாரம் உன்னோட வால் தனத்தை எல்லாம் மூட்டை கட்டி வச்சிட்டு, நல்ல பிள்ளையா இருக்கணும்..." என்று சொல்லிவிட்டுத்தான் சென்றார். ஆனால், சஞ்சனா கேட்கும் ஜென்மமா...?

மீரா அன்று கல்லூரியில் இருந்து நேராக அர்ஜுனின் வீட்டுக்குச் சென்று காலிங் பெல் அடிக்க... சஞ்சனா வந்து கதவைத் திறந்தாள்.

மீராவைப் பார்த்ததும் அலட்சியமாக முகத்தைச் சுளித்து, "ஆரு இல்லை... அவ வெளிய போய் இருக்கா..." என்றவள், மீராவிற்கு உள்ளே செல்ல வழி விடவில்லை.

மீரா, 'திரும்பிப் போய் விடலாமா...?' என்று நினைக்கும் போது... அங்கே ஹாலில் அமர்ந்து இருந்த ரஞ்சனா, மீராவைப் பார்த்து, "வா மீரா... ஏன் அங்கேயே நிக்கிறே...?" என்று அழைக்க...

மீரா, "ஹாய் கா..." என்றவள், உள்ளே சென்று ரஞ்சனாவின் எதிரில் அமர்ந்தாள்.

சஞ்சனா... ரஞ்சனாவை மீராவுடன் பேச விடக் கூடாது என்றே வீம்புக்கு ரஞ்சனாவின் அருகே சென்று அமர்ந்தவள், அவர்கள் சொந்தக்காரர்களைப் பற்றிப் பேச... மீரா அமைதியாக அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அப்போது அங்கே வந்த வித்யா, மீராவைப் பார்த்துவிட்டு, "வா மீரா... எப்ப வந்த? இரு, காபி தரேன்..." என்று சமையல் அறைக்குச் செல்ல... மீராவும் அவரோடு உள்ளே சென்றாள்.

"ஆரு எங்க ஆன்ட்டி...?" மீரா கேட்க...

"அவ ப்ரெண்ட் வீட்டுக்கு ஏதோ நோட்ஸ் வாங்கப் போய் இருக்கா, இப்ப வந்திடுவா..." வித்யா சொல்லிக் கொண்டே காபி கலக்கினார்.

மீரா ஹாலில் வந்து அமர்ந்து காபி குடிக்க... வித்யா அவளிடம், "ஆதி உன்னை ஞாயிற்றுக்கிழமை

அன்னைக்குக் கடைக்கு வந்து, இந்த வருஷம் நவராத்திரிக்கு எந்த மாதிரி ஷோகேஸ் அலங்காரம் பண்ணலாம்னு அங்க வேலை செய்றவங்ககிட்ட சொல்லச் சொன்னான். அப்புறம் அங்கிள் உன்னைத் தீபாவளி ஸ்பெஷல் ஆர்டர் போட புடவை டிசைன்ஸ் செலக்ட் பண்ணித் தரச் சொல்லி.... ஒரு பெரிய புக் வச்சிட்டுப் போய் இருக்கார். போன தடவை நீ செலக்ட் பண்ண புடவை டிசைன்ஸ் எல்லாம் நல்லா சேல் ஆச்சாம்..." என்றார் பெருமையாக.

"சரி ஆன்ட்டி, நான் சண்டே ஆருவோட கடைக்குப் போறேன். இந்த டிசைன்ஸ் செலக்ட் பண்றது டெய்லி காலேஜ் முடிஞ்சு, இங்க வந்து கொஞ்ச நேரம் பண்றேன். ஒரு மூணு நாள்ல முடிஞ்சிடும்."

மீரா சொன்னது போல் தினமும் கல்லூரி முடிந்ததும் அர்ஜுனின் வீட்டிற்கு வந்து டிசைன்ஸ் செலக்ட் செய்தாள்.

ஆருவும், மீராவும் சேர்ந்து அர்ஜுனின் அறையில் அமர்ந்துதான் டிஸைன் செலக்ட் செய்வார்கள். பின் இருவரும் அர்ஜுனோடு ஸ்கைப்பில் பேசுவார்கள். அவர்களோடு சூர்யாவும் சேர்ந்து கொள்வான்.

ஆரு வேண்டுமென்றே, "அர்ஜுன், நீ ஆள் மெலிஞ்சிட்ட மாதிரி இருக்கே, சாப்பாடு சரி இல்லையோ...?" என அவள் சூர்யாவை வம்பு இழுக்க...

"எனக்கு இவ்வளவுதான் முடியும். நீ வேணா கிளம்பி ஆஸ்திரேலியா வாயேன்... நீயே வந்து உங்க

அண்ணனுக்குச் சமைச்சுப் போடு. அப்படியே நானும் நல்ல சாப்பாடு சாப்பிடுவேன்." சூர்யா கிண்டலாகப் பதில் கொடுக்க...

"அதுக்கு வேற ஆளு பாருங்க..." என்றாள் ஆரு. அர்ஜுனும், மீராவும் இவர்கள் பேசுவதைக் கண்டு கொள்ளாமல் அவர்கள் உலகில் இருப்பார்கள்.

சஞ்சனா இத்தனை நாள் மீராவை ஆருவின் தோழி என்ற அளவில்தான் நினைத்துக் கொண்டு இருந்தாள். ஆனால்... மீரா அந்தக் குடும்பத்தில் எல்லோரிடமும் நன்றாகப் பேசுவதும், அந்தக் குடும்பத்தில் உள்ளவர்களும் அவளைத் தங்கள் குடும்பத்தில் ஒருத்தி போல் நடத்துவதையும் பார்த்து, அவளுக்குப் பொறாமையாக இருந்தது.

சஞ்சனா இங்கு வந்து தங்கியதற்குக் காரணமே எப்படியாவது வித்யா மனதில் இடம் பிடித்தால்... அவர் தன்னை அர்ஜுனுக்குத் திருமணம் செய்து வைப்பார் என்று நினைத்துத்தான். 'ஆனால், இந்த மீரா இங்கே வருவதால் எல்லோரும் அவளைத்தான் கவனிக்கின்றனர். அவளோடுதான் பேசுகின்றனர். இதற்கு ஏதாவது செய்து இந்த மீராவை இந்த வீட்டுப் பக்கம் வர விடக்கூடாது...' என்று நினைத்தாள்.

சஞ்சனா, ரஞ்சனாவிடம், "என்ன, உங்க வீட்டு ஆளுங்க மீராவைத் தலையில் தூக்கி வச்சிக்கிட்டு ஆடறாங்க? அவங்கதான் அப்படின்னா... உன்னோட வீட்டுக்காரர் கூட அவரோட கடை ஷோகேஸ் அலங்காரத்

துக்கு மீராவைத்தான் கூப்பிடுகிறார்..." என்று வேண்டு மென்றே வம்பிழுக்க...

ரஞ்சனாவிற்கு ஆதியைப் பற்றிச் சஞ்சனா சொன்னதைக் கேட்டுக் கோபம் வந்துவிட்டது.

"உனக்குத் தெரிஞ்ச மாதிரி உளறாத. மீரா அந்த மாதிரி வேலை எல்லாம் நல்லா செய்வா... அதோட அவ அப்பா, அம்மா ரெண்டு பேரும் டைவர்ஸ் பண்ணி வேற கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க. அதனால அவ மேலே இங்க இருக்கிறவங்களுக்கு ஒரு சாப்ட் கார்னர். வேற எதுவும் இல்லை..." ஒரு வேகத்தில் ரஞ்சனா, மீராவைப் பற்றிச் சொல்லிவிட...

சஞ்சனாவின் கண்கள் மின்னியது. 'இப்படி ஒரு விஷயம் இருக்கா...? இருடி, உன்னைப் பார்த்துக்கி றேன்...' என்று மனதில் நினைத்துக் கொண்டாள்.

அர்ஜுனும், மீராவும் காதலர்கள் என்று ஆதி, ரஞ்சனாவிடம் சொல்லவில்லை. 'அவள் சென்று அம்மாவிடம் சொல்லிவிட்டால்... அதனால் இப்போது தெரிய வேண்டாம், அர்ஜுன் திரும்பி வரட்டும், சொல்லலாம்...' என்று நினைத்தான்.

மீரா டிஸைன் செலக்ட் செய்யும் வேலை முடிந் ததும், அர்ஜுனின் வீட்டுப் பக்கம் வரவில்லை. சஞ்சனா ஊருக்குப் போன பிறகு போகலாம் என்று நினைத்தாள். அதனால் அந்தத் தடவை சஞ்சனாவால்... அவள் நினைத்த காரியத்தைச் செய்ய முடியவில்லை.

அர்ஜுனுக்கு ஆஸ்திரேலியாவில் இயல்பு வாழ்க்கை பழகியது. அங்கே அவனுக்கு வேறு எதுவும் வேலை இல்லாததால், நன்றாகப் படித்தான். அவன் வகுப்பில் இருந்த ஜூலிக்கு... அர்ஜுன் நன்றாகப் படிப்பதால், அவனை ரொம்பப் பிடித்தது. அவனை எப்போதும் ப்ரைனி என்றுதான் கூப்பிடுவாள்.

அர்ஜுன், அவளோடு நின்று பேசமாட்டான். அவள் ஹாய் என்றால் பதிலுக்கு ஹாய் என்று சொல்லிவிட்டுப் போய்விடுவான். தன்னிடம் வழியாமல் விலகிப் போகும் அர்ஜுனை ஜூலிக்கு இன்னும் நிறையப் பிடித்தது.

அர்ஜுனை சில மாதங்கள் கவனித்தவள், ஒரு நாள் அவனிடம் வந்து ப்ரொபோஸ் செய்ய... "சாரி... எனக்கு லவர் இருக்கா..." அர்ஜுன் சொல்ல... ஜூலி நம்ப மறுத்தாள்.

'நீ நம்பினா நம்பு, நம்பாட்டி போ...' என்று சொல்லத்தான் அர்ஜுன் நினைத்தான்.

ஆனால், 'இவள் தன்னைத் தொடர்ந்து வற்புறுத்துவாள்...' என்று நினைத்தவன், செல்லில் அவனும், மீராவும் சேர்ந்து எடுத்த போட்டோவைக் காட்டினான்.

"வாவ்...! ப்யூட்டிபுல், யூ ஆர் லக்கி, வாட் இஸ் ஹெர் நேம்...?" ஜூலி கேட்க...

அர்ஜுனின் வாய் எல்லாம் பல்லுதான். அவன் புன்னகையுடன், "மீரா..." என்றான்.

ஜூலி இதுவரை தன்னிடம் நின்று பேசாத அர்ஜுன் பேசியதும் மகிழ்ந்தவள், அர்ஜுனிடம் இன்னும் மீராவைப்

பற்றிக் கேட்க.... அர்ஜுனும் மீராவைப் பற்றி என்றதும் ஜூலியிடம் நன்றாகப் பேசினான். அதன் பிறகு வந்த நாட்கள் அர்ஜுன், ஜூலியைப் பார்த்தால்... நின்று ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசிவிட்டுச் செல்வான்.

இப்படியே சில மாதங்கள் செல்ல... ஒரு நாள் அர்ஜுனிடம் வந்த ஜூலி, "இன்னைக்கு நைட் நீ என்னோட அபார்ட்மென்ட்டுக்கு வந்து இரவு தங்கு..." என்று கூப்பிட...

அர்ஜுனுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. பின் புரிந்ததும், "ஜூலி... நான் ஏற்கெனவே சொல்லி இருக்கேன், எனக்கு லவர் இருக்கான்னு... அப்படி இல்லைன்னாலும் எனக்கு இதெல்லாம் பிடிக்காது..." என்றான் பல்லைக் கடித்துக் கோபத்தை அடக்கிக் கொண்டு.

"இருந்தா என்ன? அவ வேற எங்கேயோ இருக்கா.... நாம இங்க இப்படி இருக்கிறது அவளுக்கு எப்படித் தெரியும்? நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லிக் கேட்கலை.... ஜஸ்ட் இங்க இருக்கிறவரை என்ஜாய் பண்ணலாம் இல்லை..." ஜூலி சொல்ல... அர்ஜுனுக்கு ஜூலியின் கழுத்தை நெரிக்கும் அளவிற்கு ஆத்திரம் வந்தது.

"அவ எங்கேயோ இல்லை... இங்கே இருக்கா..." அர்ஜுன் தன் இதயத்தைத் தொட்டுக் காண்பித்தவன், "உங்க ஊர்ல வேணா கல்யாணத்துக்கு முன்னாடியே உங்களுக்கு இது எல்லாம் ஈஸியா இருக்கலாம், நீ

எத்தனை பேர் கூடவும் பழகலாம். ஆனா எங்க கல்ச்சர் வேற... எங்க நாட்ல நாங்க ஒருத்தனுக்கு ஒருத்தின்னு தான் வாழ்வோம். அது எங்க ரத்தத்துல ஊறினது. அது வேற நாட்டுக்கு வந்தா மட்டும் மாறிடுமா என்ன...?"

அர்ஜுனின் பேச்சைக் கேட்ட ஜூலிக்கு ஆச்சரியமாக இருந்தது. "டேக் இட் ஈஸி, நான் நீ இவ்வளவு எமோஷனல் ஆவேன்னு நினைக்கலை... லீவ் இட்..." எனச் சொல்லிவிட்டுத் தப்பித்தால் போதும் என்று ஜூலி அந்த இடத்தைவிட்டு ஓடிவிட்டாள்.

அர்ஜுனுக்கு மனசே ஆறவில்லை. 'அவள் தன்னிடம் வந்து அப்படித் தைரியமாகக் கேட்கிறாள் என்றால்... அதற்குத் தானும் ஒரு வகையில் காரணமோ...? அவளிடம் பேசியே இருக்கக் கூடாதோ...' என்று நினைத்து வருந்தினான்.

வீட்டுக்கு வந்தும் அவன் டென்ஷனாகவே இருக்க... சூர்யா என்னவென்று கேட்க... அர்ஜுன் அவனிடம் எல்லாவற்றையும் கொட்டினான்.

"ஹா... ஹா... அந்தப் பொண்ணு அப்படியா கேட்டுச்சு...? ஏன்டா, அந்தப் பொண்ணுக்கு என்னை எல்லாம் கண்ணுக்குத் தெரியலையா...? நானும் நல்லாத் தானேடா இருக்கேன்...?" சூர்யா பாவம் போல் சொல்ல... அர்ஜுன் சிரித்துவிட்டான்.

"அர்ஜுன், இதெல்லாம் இங்க சகஜம். நீ கண்டுக்காம இரு. கிட்டத்தட்ட நமக்கு ஒரு வருஷம் முடிஞ்சிடுச்சு... இன்னும் ஒரு வருஷம்தான். அதுவரை

யார்கிட்டேயும் சண்டைக்குப் போயிடாதே. இது நம்ம ஊர் இல்லை... பொறுமையா இரு..." சூர்யா சொன்னதைக் கேட்டு, அர்ஜுன் சரி என்றான்.

அதன்படியே அர்ஜுனும் நடந்து கொண்டான். ஜூலியைப் பார்த்தால் எப்போதும் போல் ஹாய் என்று சொல்லிவிட்டு நகர்ந்துவிடுவான். ஜூலியும் அதன் பிறகு அர்ஜுனைத் தொந்தரவு செய்யவில்லை, அவளுக்கு வேறு ஒரு பாய் ப்ரெண்ட் கிடைத்துவிட்டான்.

ரஞ்சனாவிற்கு ஏழாம் மாதம் வளைகாப்புச் செய்ய ஆதி விடவில்லை. 'அவ்வளவு நாள் ரஞ்சனாவை விட்டுப் பிரிந்து இருக்க முடியாது...' என்று சொன்னதால், ஒன்பதாம் மாதம் வளைகாப்பு வைத்தனர்.

திருச்சியில் இருந்து ரஞ்சனாவின் பெற்றோர் உறவினர்களுடன் வந்து வளையல் போட்டு ரஞ்சனாவை அழைத்துச் செல்ல வந்திருந்தனர்.

வீட்டிலிலேயே விசேஷத்திற்கு ஏற்பாடு செய்திருந்ததால், ஹாலில் வைத்து வளையல் போட்டனர். ஆதி, அர்ஜுன் பார்பதற்காக ஹாலில் இருந்த பெரிய டி.வி.யில் ஸ்கைப் போட்டு, அவனுக்கு நிகழ்ச்சியை நேரடியாக ஒளிபரப்பினான். அர்ஜுன் அங்கிருந்து லேப்டாப்பில் பார்த்துக் கொண்டிருந்தான்.

வித்யா, அர்ஜுன் இல்லையே என்று கவலைப் பட்டவர், இப்போது அர்ஜுனும் லேப்டாப்பில் பார்ப்பதால் மகிழ்ச்சியோடு இருந்தார்.

விசேஷம் முடிந்ததும், அர்ஜுன் பிறகு பேசுவதாகச் சொல்லித் தொடர்பைத் துண்டித்து விட்டான். மீரா, வித்யாவிற்கு உதவி செய்து கொண்டிருந்தாள். விருந்தினர் எல்லோரும் சாப்பிட்டதும் கடைசிப் பந்தியில் வீட்டு ஆட்கள் உட்கார்ந்து சாப்பிடும் போது... மீராவும் அவர்களோடு சாப்பிட்டாள்.

அர்ஜுனின் பெரியம்மா காயத்ரி, "ஏன் மீரா உங்க அம்மா வரலை...?" என்று கேட்க... மீரா பதில் சொல்லும் முன் முந்திக்கொண்ட சஞ்சனா,

"அது அவங்க அம்மா இல்லை, சித்தி. அவங்க அப்பாவும், அம்மாவும் டைவர்ஸ் பண்ணி வேற கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க. உங்களுக்குத் தெரியாதா?" என்று சத்தமாக அங்கிருக்கும் எல்லோருக்கும் கேட்கும்படி சொல்ல... அதைக் கேட்ட அங்கிருந்த எல்லோரும் அதிர்ந்தனர்.

மீரா, தன்னுடைய சொந்த வாழ்கையைப் பற்றி வெளி ஆட்கள் யாரும் பேசுவதை விரும்பாதவள். அவளுக்குத் தன்னை யாரும் பரிதாபமாகப் பார்ப்பது கூடப் பிடிக்காது. அப்படி நினைப்பவளை இன்று அர்ஜுனின் சொந்தக்காரர்கள் முன்பு சஞ்சனா அவளுடைய சொந்த விஷயத்தைப் பற்றிப் பேசியதும், அவளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

சாப்பிட முடியாமல் மீரா குனிந்து இலையையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு, 'நீங்க என்ன நினைச்சா என்ன...?' என்று எழுந்து செல்ல முடிய வில்லை.

அவள் வேறு இடமாக இருந்தால், அப்படித்தான் செய்திருப்பாள். ஆனால், அது அர்ஜுனின் வீடு... அவளால் அப்படிச் செல்ல முடியாது.

ஆரு, மீராவின் கையைப் பிடித்து அழுத்த... மீரா கஷ்டப்பட்டுத்தான் இயல்பாக இருப்பது போல் காட்டிக் கொண்டாள்.

வித்யா, ரஞ்சனாவை பார்க்க... அவள் தலை குனிந்தாள். ஆதிக்குப் புரிந்துவிட்டது, ரஞ்சனாதான் சஞ்சனாவிடம் மீராவைப் பற்றிச் சொல்லி இருக்கிறாள் என்று. ரஞ்சனாவும் சஞ்சனா எல்லோரின் முன்பும் இப்படிப் பேசுவாள் என்று எதிர்பார்க்காததால்... அவளுக்கும் என்ன செய்வது என்று தெரியவில்லை.

வித்யா நிலைமையைச் சரியாக்க எண்ணி, "சீக்கிரம் சாப்பிடுங்க, ரஞ்சனா நல்ல நேரத்தில அவங்க வீட்டுக்குக் கிளம்பணும்..." என்று சொல்ல... எல்லோரும் சாப்பிட ஆரம்பித்தனர். மீரா அடிக்கடி தண்ணீரைக் குடித்து உணவை விழுங்கினாள்.

சாப்பிட்டதும் ஆதி கடைக்குக் கிளம்ப... ரஞ்சனா விற்கு அதிர்ச்சியாக இருந்தது. அவள் பிரசவத்திற்கு அம்மா வீட்டிற்குச் செல்கிறாள் என்று ஒரு வாரமாக ஆதி, ரஞ்சனாவின் பின்னாடியே சுற்றிக் கொண்டிருந்தான். அப்படிப்பட்டவன், தான் ஊருக்குக் கிளம்பும் நேரம் கடைக்குச் செல்கிறேன் என்று சொன்னதும், அவளுக்கு அழுகை வர, "என் மேல கோபமா...? அத்தைதான் என்கிட்டே மீராவைப் பத்திச் சொன்னாங்க..." என்றாள்.

"அம்மா உன்கிட்ட சொன்னாங்க, சரி. ஆனா... நீ ஏன் அதை உன் தங்கைகிட்டே சொன்ன...? அவ பாரு, எல்லார் முன்னாடியும் எப்படிப் பேசிட்டா. அவளுக்கு அறிவே இல்லையா...? எதை? எப்போ? எங்க பேசுறதுன்னு தெரியாதா...?" ஆதி கோபமாகக் கேட்க... ரஞ்சனா மௌனமாக நின்றாள்.

அங்கே கணேசனும் வித்யாவைத் திட்டிக் கொண்டுதானிருந்தார். "உன்னை யாரு ரஞ்சனாகிட்ட மீராவைப் பத்திச் சொல்லச் சொன்னது...? பாரு, உன்னாலதான் இன்னைக்கு மீரா எல்லார் முன்னாடியும் பேச்சு கேட்க வேண்டியதாப் போயிடுச்சு..." என்றார்.

வித்யா, மீராவைப் பற்றிக் குறைவாகச் சொல்ல வேண்டும் என்று சொல்லவில்லை. மீராவைப் பற்றிப் பெருமையாகத்தான் சொன்னார். அவங்க அம்மா அவளை வளர்க்கலைன்னாலும்... எப்படி யாரும் ஒரு குறையும் சொல்ல முடியாதபடி திறமைசாலியா இருக்கிறா பாரு என்று அவர் பெருமையாகத்தான் ரஞ்சனாவிடம் சொன்னார். அதுவும் அவள் இந்த வீட்டு மருமகள் என்று தான் சொன்னார். ஆனால், இப்படி ஆகும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

ஆதி, ரஞ்சனாவின் மீது கோபமாக இருப்பதும், கணேசன், வித்யாவைத் திட்டியதும் மீராவிற்குத் தெரியும். அவளுக்குத் தன்னால் அவர்களுக்குள் பிரச்சினை வருவது பிடிக்கவில்லை. அதனால் வித்யாவிடம் சொல்லிக்கொண்டு வீட்டுக்குக் கிளம்பிவிட்டாள்.

வித்யாவும் மீரா இங்கிருந்தால் எல்லோரும் அவளையே பார்ப்பார்கள் என்று நினைத்து, மீரா வீட்டுக்குப் போகிறேன் என்றதும், சரி என்றார்.

எல்லோர் முன்பும் மீராவின் பெற்றோரைப் பற்றிப் பேசினால், அவள் பதிலுக்கு ஏதாவது சொல்வாள், இல்லை கோபப்பட்டு அந்த இடத்தை விட்டுச் செல் வாள்.

அப்படி அவள் செய்தால் இந்த வீட்டில் உள்ளவர்களுக்கு அவளைப் பிடிக்காமல் போய் விடும் என்று சஞ்சனா நினைக்க... ஆனால், அங்கே அப்படி எதுவும் நடக்கவில்லை.

எல்லோரும் அவளைத்தான் ஏதோ புழுவைப் பார்ப்பது போல் பார்த்தனர்.

அதுவும், ஆருவும் அவள் பெரியம்மாவும் பார்க்கும் பார்வையில் நெருப்புப் பறந்தது.

சீக்கிரம் இங்கிருந்து சென்றால் போதும் என்று இருந்தது சஞ்சனாவிற்கு.

ரஞ்சனாவின் கண்ணீரைப் பார்த்ததும் ஆதி சற்று இளகினான். 'பிரசவத்திற்காக ஊருக்குப் போகும் போது பிரச்சினை வேண்டாம், திரும்பி வந்ததும் பேசிக் கொள்வோம்...' என்று நினைத்து, ரஞ்சனாவிடம் சமாதானமாகப் பேசி அவளை வழி அனுப்பினான்.

மீரா வீட்டிற்குச் சென்றபோது, அவளுக்கு அங்கே இன்னொரு அதிர்ச்சி காத்திருந்தது.

23

மீரா வீட்டிற்கு வந்த போது... அங்கே அவள் அப்பாவின் காரும் அதோடு வேறு ஒரு காரும் நிற்பதைப் பார்த்து, 'யார் வந்திருப்பாங்க...?' என்று யோசித்துக் கொண்டே உள்ளே சென்றாள். சாதாரணமாக இந்த நேரத்தில் ராம்நாத் வீட்டில் இருக்க மாட்டார்.

மீரா உள்ளே சென்று பார்த்தபோது... ஹாலில் அவளுடைய அப்பாவும், சித்தி மீனாட்சியும் ஒரு சோபாவில் அமர்ந்திருக்க... எதிரே இருந்த சோபாவில் ஒரு ஆணும், பெண்ணும் அமர்ந்திருந்தனர். மீராவிற்கு அவர்களின் பின்புறத் தோற்றம்தான் தெரிந்தது, அதனால் யார் என்று பார்க்க முடியவில்லை.

'சரி... யாராவது தெரிஞ்சவங்களா இருப்பாங்க...' என்று நினைத்தவள், அவள் அறைக்குச் செல்ல மாடிப்படியில் கால் வைக்க...

அப்போது மீராவைப் பார்த்த ராம்நாத், "மீரா, இங்கே வா..." என்று கூப்பிட... மீராவிற்கு இப்போது இருக்கும் மனநிலையில் யாரையும் பார்க்கவே இஷ்டம் இல்லை. ஆனால், அவளது அப்பா அழைப்பதால் வேறு வழி இல்லாமல் சென்றாள்.

அவள் சோபாவின் அருகே சென்றதும் அதில் உட்கார்ந்து இருந்த பெண்மணி எழுந்து, "மீரா..." என்று அழைத்து அவளை அணைத்துக் கொள்ள...

மீராவிற்கு, 'யார் இது...? எதுக்கு நம்மைக் கட்டிப் பிடிக்கிறாங்க...?' என்று நினைத்தவள், ராம்நாத்தையும்,

மீனாட்சியையும் பார்க்க... ராம்நாத் சங்கடமான பார்வை பார்க்க... மீனாட்சி கிண்டலாகப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தாள். மீரா விலகி அந்தப் பெண்மணியின் முகம் பார்த்தவள், அதிர்ந்தாள்.

ஏன் என்றால், அந்தப் பெண்மணி வேறு யாரும் இல்லை. அவளைப் பத்து மாதம் சுமந்து பெற்று, பின் விட்டுவிட்டுச் சென்ற அவளுடைய அம்மா... ஷ்யாமளா தான் அது. வயது ஆக ஆக... ஷ்யமளாவிற்கு இளமை திரும்புகிறது என்று நினைப்பு போல... ஒரு லாங் ஸ்கர்ட்டும், டாப்பும் அணிந்து, தலை முடியை விரித்துப் போட்டுக் கொண்டு வந்திருந்தாள்.

"மீரா, எப்படிடா இருக்க? உன்னைப் பார்த்து எவ்வளவு வருஷம் ஆகிடுச்சு? என் பொண்ணு எவ்வளவு அழகா இருக்கா...?" ஷ்யாமளா பேசிக்கொண்டே செல்ல... அதை மற்ற எல்லோரும் பார்த்துக் கொண்டி ருந்தனர்.

மீரா, ஷ்யமளாவிடம் இருந்து விலக... ஷ்யாமளா, மீராவை அவள் உட்கார்ந்து இருந்த சோபாவில் உட்காரக் கை காட்டினாள். ஆனால், மீரா அதைக் கவனிக்காதது போல் எதிரில் இருந்த ஒற்றைச் சோபாவில் சென்று அமர்ந்தாள்.

ஷ்யாமளாவிற்கு மீரா அவள் அருகில் உட்காராமல் எதிரில் சென்று உட்கார்ந்தது ஏமாற்றமாக இருந்தது. அதோடு மீரா அவளை அம்மா என்று அழைக்கவும் இல்லை. அவளை எதுவும் விசாரிக்கவும் இல்லை என்று

நினைத்தவள், அதை ஒதுக்கி... மீராவிடம் சகஜமாகப் பேச ஆரம்பித்தாள்.

தன் அருகில் அமர்ந்திருந்த இளைஞனைக் காட்டி "இவரு வம்ஷி... லண்டன்ல பிசினஸ் பண்றார். எங்களோட குடும்ப நண்பர்..." ஷ்யாமளா அறிமுகம் செய்ய... மீரா அவனை வெறுமையாக ஒரு பார்வை பார்த்தாள்.

"உன்கிட்ட தனியா பேசணும் மீரா... வெளிய எங்காவது போகலாமா...?" ஷ்யாமளா கேட்க...

மீராவிற்கு அவள் அம்மாவைப் பற்றி நன்றாகத் தெரியும். இத்தனை நாள் தன்னைத் திரும்பியும் பார்க்காத அம்மா... இரண்டு மூன்று முறை வந்து கடமைக்கு மட்டும் தன்னை வந்து பார்த்தவள், இப்போது வலிய வீடு தேடி வந்திருக்கிறாள் என்றால்... அதற்கு ஏதோ காரணம் இருக்கும் என்று அவள் உள் மனது சொல்ல... மீரா சுதாரித்துக் கொண்டாள்.

"பரவாயில்லை, உங்களுக்கு என்ன சொல்ல ணுமோ... அதை நீங்க இங்கேயே சொல்லுங்க..." என மீரா அழுத்தமாகச் சொல்லிவிட்டு, அவள் அமர்ந்து இருந்த சோபாவில் நன்றாகச் சாய்ந்து அமர்ந்து கால் மேல் கால் போட்டுக் கொண்டாள்.

ஷ்யாமளாவிற்கு, இது தன் மகள் மீராவா என்று ஆச்சரியமாக இருந்தது. இதற்கு முன் பார்த்த

மீராவிற்கும் இப்போது பார்க்கும் மீராவிற்கும் நன்றாக வித்தியாசம் தெரிந்தது.

மீரா எப்போதும் ஷ்யாமளாவிடம் நன்றாகப் பேச மாட்டாள், போன் செய்தாலும் கேட்டதுக்கு மட்டும் பதில் சொல்லிவிட்டு வைத்துவிடுவாள். நேரில் பார்க்கும் போதும் அமைதியாக இருப்பாள். ஆனால், இப்போது மீராவிடம் இருக்கும் நிமிர்வு ஷ்யாமளாவிற்குப் புதிது.

ஷ்யாமளாவிற்குத் தான் நினைத்த காரியம் நடக்க வேண்டும். அதனால் பொறுத்துப் போக முடிவு செய்தாள்.

"மீரா, நீ இப்போ கடைசி வருஷம் படிக்கிற... உனக்கு அடுத்த வருஷம் கல்யாணம் பண்ணலாம்னு நினைக்கிறேன். அதனால நான் உனக்கு வம்ஷியைப் பார்க்கலாம்னு அவரையும் கையோட அழைச்சிட்டு வந்தேன். வம்ஷி அங்கே பெரிய பிசினஸ்மேன், ரொம்ப வசதியானவங்க, நீ வம்ஷியைக் கல்யாணம் பண்ணிக் கிட்டா... அங்க ராணி மாதிரி இருக்கலாம்."

தன் தாய் சொன்னதைக் கேட்டு, மீராவிற்குப் பத்திக் கொண்டு வந்தது. "எனக்கு மாப்பிள்ளை பார்க்க நீங்க யாரு...?" என்று அவள் பட்டென்று கேட்க...

ஷ்யாமளா அதிர்ந்தவள், "என்ன மீரா இப்படிப் பேசுற...? நான் உன்னோட அம்மா. எனக்கு உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்க உரிமை இல்லையா...?" என அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்க...

மீரா மற்ற நாளாக இருந்தால் எப்படிப் பேசி இருப்பாளோ...? ஆனால், இன்று ஏற்கெனவே சஞ்சனா எல்லோர் முன்பும் தன்னைக் கேலி செய்து பேசியது, அவள் மனதில் இருந்த ரணத்தை மேலும் கீறி விட்ட தால் ஏற்பட்ட ஆத்திரத்தை... அதற்குக் காரணமான ஷ்யாமளாவிடம் வெளிப்படையாகக் காட்டினாள். அதோடு அர்ஜுன் இடத்தில் வேறு ஒருவனை அவள் அம்மா அழைத்து வந்தது வேறு... எரியும் தீயில் எண்ணெய் ஊற்றியது போல் ஆனது.

"இல்லை... நீங்க, நாங்க வேண்டாம்னு போயிட்டீங்க... உங்களுக்கு உங்களோட ஆசை, சந்தோசம்தான் முக்கியம். நீங்க என்னையும், அப்பாவையும் பத்திக் கவலைப்படாம, உங்க ஆசை தான் பெரிசுன்னு போனீங்க. இப்ப எதுக்குப் புதுக் காரணம் சொல்லிட்டு வர்றீங்க? எனக்குக் கல்யாணம் பண்ணி வைக்க என்னோட அப்பா, அம்மா இருக்காங்க. அவங்களுக்குத் தெரியும், எனக்கு எப்ப கல்யாணம் பண்ணணும்னு...?" என்று ராம்நாத்தையும், மீனாட்சியையும் காண்பித்தவள், "நீங்க எப்பவும் போல உங்க குடும்பத்தை மட்டும் பாருங்க..." மீரா குத்தலாகச் சொல்ல...

"மீரா, நான் உன்னோட அம்மா... நீயும் என்னோட குடும்பத்தில் ஒருத்தி..." என்றாள் ஷ்யாமளா.

"ஓ...! அப்படியா...? இது எப்போதுல இருந்து...? நீங்க ஒரு அம்மாவா எனக்கு என்ன செஞ்சீங்க? நான்

குழந்தையா இருக்கும் போது என்னைப் பார்த்துக் கிட்டீங்களா, இல்லை எனக்குப் பாசமா ஒரு நாளாவது சோறு ஊட்டி இருப்பீங்களா...? இல்லை... எதுவும் இல்லை. என்னை எல்லார்கிட்டேயும் நல்லா பேச்சு வாங்க வச்சீங்க... உங்களால எல்லோரும் என்கிட்டே உங்க அம்மா, உங்க அப்பாவை டைவர்ஸ் பண்ணிட்டு வேற கல்யாணம் பண்ணிக்கிட்டாங்களாமே அப்படின்னு நக்கலா பேசிச் சிரிச்சு இருக்காங்க."

"அது என்னோட தனிப்பட்ட விஷயம். அதைப் பத்தி யாரும் என்ன பேசினாலும் எனக்குக் கவலை இல்லை..." ஷ்யாமளா எடுத்தெறிந்து பேச...

"உங்களுக்குக் கவலை இல்லாம இருக்கலாம்... ஆனா அதனால கஷ்டப்பட்டது நான்தான். நான் என்ன பாவம் செஞ்சேன்? எனக்கு ஏன் எல்லோரையும் மாதிரி என்னோட அம்மா, அப்பாவோட இல்லை. எல்லாக் குழந்தைகளும் தனக்கு ஏதாவது வேணும்னா அவங்க அம்மாகிட்டதான் முதல்ல சொல்வாங்க... எனக்கும் அப்படித்தானே இருந்திருக்கும். நான் எவ்வளவு தவிச்சிருப்பேன்? உங்க வாழ்க்கைதான் முக்கியம்னு நினைச்ச நீங்க, என்னை ஏன் பெத்தீங்க...?" என்று மீரா தன் இயல்பையும் மீறிக் கத்த.....

அப்போது அங்கே வந்த வருண், மீரா பேசியதைக் கேட்டதும், அவனுக்கு அழுகையாக வந்தது. அவன் வேகமாகச் சென்று மீராவை அணைத்தவன், "உனக்கு நான் இருக்கேன்கா... நீ வாக்கா..." என்று மீராவைப் பிடித்து இழுக்க... மீரா ஆவேசமாக எழுந்து நின்றாள்.

மீரா பேசியதைக் கேட்ட ராம்நாத்திற்கு மனம் குற்ற உணர்வில் தவித்தது. தானும், 'மீராவை அவள் சித்தி கொடுமை செய்வாளோ என்று தள்ளித்தானே வைத்திருந்தோம். அவள் பிஞ்சு மனம் என்ன பாடு பட்டதோ...? நானாவது மறு கல்யாணம் செய்யாமல் மீராவோடு இருந்திருந்தால் அவளை நன்றாகப் பார்த்துக் கொண்டிருந்திருக்கலாம்...' என்று காலம் கடந்து நினைத் தார்.

"மீரா, உனக்கு எதுக்கு இவ்வளவு ஆத்திரம் வருது? நான் எனக்குப் பிடிச்ச வாழ்க்கையைத் தேடிப் போனேன். அது தப்பா...?"

"வீடு இல்லாம ரோட்ல குடிசை போட்டு இருக்கிற வங்களைப் போய்ப் பாருங்க. அவங்க புருஷன் குடிச்சிட்டு வந்து அடிச்சாலும், மிதிச்சாலும் அவங்க புருஷனோடதான் இருக்காங்க. ஆனா நீங்க... உங்க ளுக்குப் பிடிச்ச வாழ்க்கை அமையலைன்னு, நல்லா இருந்த வாழ்க்கையைத் தூக்கிப் போட்டுட்டுப் போனீங்க...

"நாட்ல பாதிப் பேர் அவங்களுக்குப் பிடிச்ச வாழ்க்கையை விட... அவங்களுக்குக் கிடைச்ச வாழ்க்கையைத்தான் வாழுறாங்க. அவங்க எல்லாம் மனுஷங்க இல்லையா...? அப்படி வாழ முடியாத நீங்க எதுக்குக் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க? குழந்தை பெத்துகிட்டீங்க? நீங்க முதல்லேயே ஒழுங்கா முடிவு எடுத்திருந்தா... நான் பிறந்து இருக்க மாட்டேன், மத்தவங் களுக்குப் பாரமாவும் இருந்திருக்க மாட்டேன்."

மீரா கடைசி வரியை மீனாட்சியைப் பார்த்துச் சொன்னவள், தொடர்ந்து, "என்னோட வாழ்கையில தலையிடுறது இதுவே கடைசி முறையா இருக்கட்டும்..." என்று ஷ்யாமளாவை எச்சரித்துவிட்டு, அவள் அறைக்குச் செல்ல... வருணும் அவளோடு சென்றான்.

மீரா சென்றதும் ராம்நாத் எழுந்து நின்றவர், ஷ்யாமளாவிடம், "நீ தயவு செஞ்சு வெளிய போ, என் பொண்ணு இதுவரை பட்ட கஷ்டமே போதும். உன்னால நானும் முட்டாள்தனமா நடந்துக்கிட்டேன். அவளுக்கு மாப்பிள்ளை பார்க்கும் தகுதி நமக்கு இல்லை, அவ வாழ்க்கையை அவளே முடிவு பண்ணட்டும்..." என்றார்.

"உங்களுக்குத் தகுதி இல்லைன்னு சொல்லுங்க, எனக்கு இல்லைன்னு நீங்க சொல்லாதீங்க. என் பொண்ணுக்கு ஒரு நல்ல சம்பந்தம் வரும்போது என்னால அதை விட முடியாது. அவ இன்னைக்கு ஏதோ என் மேல இருக்கிற கோபத்துல பேசுறா... அவ கோபம் குறையட்டும், நான் திரும்ப வரேன்..." என்று சொல்லி விட்டு ஷ்யாமளா சென்றாள்.

மீரா தன் அறைக்கு வந்தவள், நேராகக் குளியல் அறைக்குச் சென்று ஷவரின் அடியில் நின்றாள். அவள் உச்சந் தலையில் இருந்த கோபம் இறங்கியதும்தான் வேறு உடை மாற்றி வெளியே வந்தாள்.

வெளியே வந்து தலையைத் துவட்டியவள், நேராகச் சென்று கட்டிலில் படுத்து, விட்டத்தையே பார்த்துக் கொண்டு இருந்தாள்.

வருணும் அங்கேதான் இருந்தான். மீரா அதை உணரக்கூட இல்லை. சிறிது நேரத்தில், இன்று ஏற்பட்ட அதிக மன உளைச்சலில் அவள் அப்படியே தூங்க, வருண் என்ன செய்வது என்று தெரியாமல் அங்கேயே இருந்தான்.

அப்போது மீராவின் செல் அடித்தது. மீராவின் தூக்கம் கலைந்து விடப் போகிறது என்று வேகமாகச் சென்று வருண் போனை எடுத்தான்.

வருண், 'ஹலோ...' என்று சொல்வதற்குள், அந்தப் பக்கம் இருந்த அர்ஜுன், "மீரா, ஏன் இன்னைக்கு ஸ்கைப்புக்கு வரலை? இப்ப வர்றியா...?" எனக் கேட்க...

"மீரா அக்கா தூங்குறா..." வருண் சொல்ல...

"ஹாய் வருண், எப்படி இருக்க...? நான் அர்ஜுன், மீராவுக்கு உடம்பு சரி இல்லையா...? அவ சாயங்காலம் தூங்க மாட்டாளே...?" என அர்ஜுன் கவலைப்பட...

வருணுக்கு என்ன சொல்வது என்று தெரிய வில்லை. "இல்ல, நல்லாத்தான் இருக்கா..." என்று மென்று முழுங்க... அர்ஜுனுக்குச் சந்தேகமாக இருந்தது.

'ஒரு வேளை அவள் சித்தி எதுவும் சொல்லி இருப்பாங்களோ...?' என்று நினைத்தவன், "சரி வருண்... அவ தூங்கட்டும், நான் கொஞ்சம் நேரம் கழிச்சுப் பேசுறேன்..." என்றான்.

அதே போல் அர்ஜுன் ஒரு மணி நேரம் கழித்துப் போன் செய்த போதும், மீரா தூங்கிக் கொண்டுதான் இருந்தாள். அர்ஜுன் டென்ஷன் ஆகிவிட்டான்.

"வருண், உங்க அக்கா நெத்தியில கை வைச்சுப் பாரு, சுடுதான்னு..." அவன் சொல்ல, வருணும் சென்று மீராவின் நெற்றியில் கைவைத்துப் பார்த்தவன், "இல்லை, நார்மலாத்தான் இருக்கு..." என்றான்.

அர்ஜுனுக்கு ஒரே குழப்பம். 'மீராவுக்கு என்ன ஆச்சு? ஏன் இந்த நேரம் தூங்குறா...? எப்போதும் இந்த நேரத்திற்கு மீராதான் பேச மிகவும் ஆவலாகக் காத்திருப்பாள். அர்ஜுனும், மீராவும் மாலை ஆறு மணி போல்தான் வழக்கமாக ஸ்கைப்பில் பேசுவார்கள். அப்போது அர்ஜுனுக்கு இரவு பத்தரை மணி ஆகும். ஒரு மணி நேரம் பேசிவிட்டு அர்ஜுன் படுக்கச் செல்வான், மீரா படிக்க உட்காருவாள். ஆனால், இன்று மீரா இந்த நேரத்திற்குத் தூங்குகிறாள்.'

"வருண், உனக்கு நிச்சயமா தெரியுமா...? அவளுக்கு உடம்பு நல்லா இருக்குன்னு. அவ இந்த நேரம் தூங்க மாட்டா... அதுதான் கேட்கிறேன்..." என்றான் அர்ஜுன் தவிப்பாக.

வருணுக்கு அர்ஜுனின் தவிப்புப் புரிந்தது.

அவனுக்குத் தெரியும் மீராவும், அர்ஜுனும் நண்பர்கள் என்று.

"மீரா அக்காவோட அம்மா இன்னைக்கு வந்தாங்க. அவங்களோட மீரா அக்கா சண்டை போட்டாங்க. அது தான் டென்ஷனா இருந்தாங்க... அப்படியே தூங்கிட் டாங்க..." என்றான்.

அர்ஜுனுக்கு இப்போது புரிந்தது. 'மீரா உடல் நலமில்லாமலோ அல்லது அசதியிலோ தூங்கவில்லை, இன்று ஏற்பட்ட அதிக மன உளைச்சலில் தூங்குகிறாள் என்று. அதனால் தான் தன்னிடம் பேசும் நேரம் என்பதையும் மறந்து தூங்குகிறாள் என்றும் புரிந்தது. ஆனால் அவள் அம்மாவோடு சண்டை போடும் அளவிற்கு என்ன பிரச்சனை என்றுதான் புரியவில்லை. சரி, எதுவாக இருந்தாலும் அதை மீராவிடமே கேட் போம்...' என்று நினைத்தான்.

"வருண், உங்க அக்கா தூங்கட்டும், ஆனா... அவ ஒன்பது மணி வரை எந்திரிக்கலைன்னா... நீயே அவளை எழுப்பிச் சாப்பிடச் சொல்லு. சரியா...?" அர்ஜுன் சொல்ல.... வருண் சரி என்று போனை வைத்தான்.

இரவு உணவு சாப்பிட ராம்நாத்தும், மீனாட்சியும் சென்று டைனிங் டேபிளில் அமர... பரிமாற வந்த பெண், "இன்னும் மீராவும், வருணும் சாப்பிட வரவில்லை..." என்றதும்... ராம்நாத், மீராவின் அறைக்குச் செல்ல... அவர் பின்னே மீனாட்சியும் சென்றாள்.

மீராவின் அறைக்கதவைத் தட்டிவிட்டு ராம்நாத் உள்ளே செல்ல... அங்கே வருண் சோபாவில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தான். மீரா உள் அறையில் தூங்கிக் கொண்டிருந்தாள்.

ராம்நாத் சென்று மீராவின் தலையைக் கோத... மீரா கண் விழித்துப் பார்த்தாள். ராம்நாத், "மணி எட்டரை ஆகுது மீரா, சாப்பிட வா..." என்றதும்,

மீரா, "எனக்கு வேண்டாம்..." என்று மறுபக்கம் திரும்பிப் படுக்க... வருண், "எனக்கும் வேண்டாம்..." என்றான். மீரா சிறிது நேரம் கண் மூடிப் படுத்திருந்தவள், மெதுவாகக் கண் திறந்து பார்க்க.... அப்போதும் எல்லோரும் அவள் அறையில்தான் இருந்தனர்.

மீனாட்சியைப் பார்த்ததும்... மீரா, 'இதுக்கு வேற அப்புறமா பாட்டு கேட்கணும்...' என்று நினைத்தவள், வேகமாக எழுந்து சாப்பிடச் செல்ல... எல்லோரும் அவள் பின்னே சென்றனர்.

"இன்னைக்கு என்ன புதுசா அக்கறை?" மீரா முனகிக் கொண்டே தட்டில் உணவு பரிமாறிக் கொண்டு சாப்பிட அமர்ந்தாள். வேகமாக இரண்டு சப்பாத்தியை முழுங்கி விட்டு, அவள் அறைக்குச் சென்று செல்லை எடுத்து, அர்ஜுனிடம் இருந்து மிஸ்ட் கால் வந்திருக்கிறதா என்று பார்த்தாள். அப்படி எதுவும் இல்லை.

அவளுக்கு வருண் போன் எடுத்துப் பேசியது தெரியாது. 'அவனுக்கு இப்போது நேரம் நள்ளிரவையும் தாண்டி இருக்கும். நான்தான் இன்றைக்கு நடந்த பிரச்சனையில் போன் பண்ணலை... அர்ஜுனும் ஏன் பண்ணலை?' என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே... அர்ஜுனே போன் செய்தான்.

"ஹாய் அர்ஜுன், இன்னும் தூங்கலையா...?"

"நீதான் இன்னைக்கு என்னைத் தூங்க விடக் கூடாதுன்னு கங்கணம் கட்டிக்கிட்டு இருக்கியே... அப்புறம்

எங்க நான் தூங்குறது? கும்பகர்ணி... எவ்வளவு நேரம்டி தூங்குவ...?"

"ஏய்... உங்களுக்கு எப்படி நான் தூங்கினது தெரியும்...?"

"ம்ம்... வெத்தலையில மை போட்டுப் பார்த்தேன். வருண் சொன்னான். சரி, சாப்பிட்டியா...?"

"ம்ம்... இப்பதான் சாப்பிட்டேன்."

"என்ன ஆச்சு? ஏன் இன்னைக்கு அன்டைம்ல தூங்கி இருக்க...?"

"அது ஒண்ணும் இல்லை... தலைக்குக் குளிச்சேனா... அதுதான் துக்கம் வந்துடுச்சு..."

"ஓ...! அப்படியா...? சரி, மீரா நீ தூங்கு. உனக்கு என்கிட்டே எப்ப உண்மை சொல்லணுமோ அப்ப சொல்லு. bye..." என்று அர்ஜுன் போனை வைத்து விட்டான். மீரா உடனே அவனைத் திரும்ப அழைத்தாள்.

"அர்ஜுன், அம்மா வந்திருந்தாங்க... அதுதான் மூட் அவுட்."

"மூட் அவுட் சரி, ஆனா... நீ டென்ஷன் ஆகுற அளவு என்ன நடந்தது...?"

"அவங்க மட்டும் வரலை, கூட ஒரு லண்டன் மாப்பிள்ளையை அழைச்சிட்டு வந்தாங்க... இத்தனை நாள் என் மேல எந்த அக்கறையும் காட்டாதவங்க, இப்ப எனக்குக் கல்யாணம் பண்ணி வைக்க நினைக்கிறது

தான் ஆச்சர்யமா இருக்கு. அதுதான் கோபத்தில நல்லா கேட்டுட்டேன்..." மீரா தான் பேசிய அனைத்தையும் சொன்னாள்.

மீரா சொன்னதைக் கேட்ட அர்ஜுன், "மீரா, அவங்க உன்னோட அம்மா, அந்த உரிமையில உனக்கு மாப்பிள்ளை பார்த்திருப்பாங்க... நீ உனக்கு இஷ்டம் இல்லைன்னு சொல்லிட்டு அமைதியா இருக்க வேண்டியதுதானே..." என்றான்.

"உங்களுக்கு அவங்களைப் பத்தி தெரியாது அர்ஜுன். அவங்க ஏதாவது யோசிச்சா சுயநலமாத்தான் யோசிப்பாங்க. அவங்க என் மேல உள்ள அக்கறையில் வந்திருக்க மாட்டங்க. அந்த மாப்பிள்ளையை நான் கல்யாணம் பண்ணிக்கிட்டா... அதுனால அவங்களுக்கு ஏதாவது லாபம் இருக்கும், அதுக்குத்தான் வந்திருப் பாங்க. அதனாலதான் இத்தனை நாள் என் மனசுக்குள்ள இருந்தது எல்லாத்தையும் சேர்த்து வச்சுக் கொட்டிட்டேன், தப்பா அர்ஜுன்...?"

"இல்லைடா, நீ செஞ்சது தப்பில்லை. இத்தனை வருஷம் அவங்களால நீ எவ்வளவு கஷ்டப்பட்டிருப்ப... நான் அதுக்காக ஃபீல் பண்ணலை... நீ டென்ஷன் ஆகி உடம்பை வருத்திக்கிற பார்த்தியா... அதுதான் எனக்குக் கவலை. போதும், நீ அவங்களை நல்லா கேட்டுட்ட... இனி இது மாதிரி டென்ஷன் ஆகாத... இன்னும் ஒன்பது மாசம்தான்... நான் வந்திடுறேன், நான் வந்த பிறகு பார்த்துக்கலாம்... சரியா...?"

"சரி, அர்ஜுன்."

"அப்புறம் இன்னைக்கு வளைகாப்பு முடிஞ்சு அண்ணி கிளம்பினதும்தான் நீ வந்தியா...?"

மீராவுக்கு அப்போதுதான் சஞ்சனா பேசியது ஞாபகம் வந்தது. ஆனால், அவள் அதைப் பற்றிக் கவலைப்படும் நிலையில் இப்போது இல்லை. அவள் சொன்ன விஷயம் என்றைக்கு இருந்தாலும் எல்லோருக்கும் தெரியப் போகும் விஷயம்தான். அதிலும் தன் பெற்றோர் செய்ததற்குத் தான் என்ன செய்ய முடியும்? இதைப் பெரிதாக்கி அர்ஜுனிடம் சொன்னால், அவன் அவர்களிடம் சண்டைக்குச் செல்வான் என்று மீரா அர்ஜுனிடம் சஞ்சனா பேசியது பற்றி எதுவும் பேசாமல் வேறு விஷயங்களுக்குத் தாவ... அர்ஜுனும், மீராவின் டென்ஷன் குறைக்க... அவளோடு இணைந்து கலகலப்பாகப் பேச... இருவரும் விடிய விடிய ஸ்வீட் நத்திங்ஸ் பேசிக்கொண்டிருந்தனர்.

அர்ஜுனும், மீராவும் நினைப்பது போல், ஷ்யாமளா இதோடு மீராவை விட்டு விலகிச் செல்வாளா...?

24

ஷ்யாமளா மறு நாள் மீராவைச் சந்திக்க இந்த முறை வீட்டிற்குச் செல்லாமல், அவள் கல்லூரி செல்லும் வழியில் காத்திருக்க... மீரா காரை நிறுத்தாமல் சென்று விட்டாள்.

மற்றொரு சமயம் மீராவும், கீர்த்தனாவும் ஷாப்பிங் மால் சென்றிருந்தபோது, அங்கே வம்ஷி எதிரில் வந்தவன், மீராவிற்கு ஹாய் சொல்ல... மீராவிற்கு அவன் யார் என்றே தெரியவில்லை. பக்கத்தில் இருந்த கீர்த்தனா, "யாருடி...?" என்று கேட்க... மீரா, "தெரியலை..." என்று தோளைக் குலுக்கிவிட்டுச் சென்றாள்.

மீராவிற்கு இது கல்லூரியில் கடைசி வருடம் என்பதால்... பத்து நாட்கள் டெல்லிக்குச் சுற்றுலா அழைத்துச் சென்றனர். மீராவும், ஷ்யாமளாவிடம் இருந்து தப்பித்தால் போதும் என்று சுற்றுலாவிற்குச் சென்று விட்டாள்.

ஷ்யாமளா சென்னையில் ஒரு பெரிய ஹோட்டலில் தான் தங்கி இருந்தாள். அதே ஹோட்டலில் பக்கத்து அறையில்தான் வம்ஷியும் இருந்தான். ஷ்யாமளாவும், வம்ஷியும் ஹோட்டல் லானில் அமர்ந்து மாலை காபி அருந்திக் கொண்டே பேசினார்கள்.

"உன் பொண்ணு உன்னை மாதிரி இல்லை ஷ்யாமளா..."

"ஆமாம், அவ அவங்க அப்பா மாதிரி."

"எனக்கு என்னமோ நாம நினைக்கிறது நடக்கும்னு தோணலை..."

"ஏன் அப்படிச் சொல்ற வம்ஷி? மீரா என்கிட்டே பேசினது வச்சுச் சொல்றியா? அவளுக்கு என் மேல கோபம், நான் ரொம்ப வருஷம் அவகிட்ட இருந்து விலகி

இருந்துட்டேன் அதனால தான். நான் அவகிட்ட கொஞ்சம் நெருக்கமாப் பழக ஆரம்பிச்சுட்டா அவ மாறிடுவா...”

“எனக்கு என்னமோ அப்படித் தோணலை. அவ என்னைத் திரும்பிக் கூடப் பார்க்கலை. உன் மேல கோபம் சரி, ஆனா... என்னை நீ அவளுக்குப் பார்த்திருக்கிற மாப்பிள்ளைன்னு சொல்லியும், அவ என்னைப் பார்க்கலை. அதுக்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்க முடியும்.”

“என்ன காரணம் வம்ஷி? நீ சொல்றது எனக்குப் புரியலை...”

“அவ மனசுல வேற யாரோ இருக்காங்கன்னுதான் நான் நினைக்கிறேன்.”

“ச்சே... ச்சே... அப்படியெல்லாம் இருக்காது வம்ஷி. நீயா ஏதாவது கற்பனை பண்ணாத... அவ டெல்லியில இருந்து திரும்பி வரட்டும், நான் அவகிட்ட பேசுறேன்.”

“ஓ.கே. பேசு, ஆனா... அவ இஷ்டப்பட்டுத்தான் என்னைக் கல்யாணம் பண்ணிக்கணும். அவளை நீ போர்ஸ் பண்ணக் கூடாது, புரியுதா...? நான் நாளைக்குக் காலையில லண்டன் கிளம்புறேன்.”

“ம்ம்... ஓ.கே. நீ கிளம்பு, நான் பார்த்துக்கிறேன்.”

வம்ஷி அவன் அறைக்குச் சென்றதும், ஷ்யாமளா தன் கடந்த காலத்தை நினைத்துப் பார்த்தாள்.

ஷ்யாமளா மனோஜைத் திருமணம் செய்து லண்டன் சென்ற போது... அவளுக்கு ஏதோ சொர்க்க லோகத்திற்கே வந்த மாதிரிதான் இருந்தது. ஆனால், வருடங்கள் செல்லச் செல்ல... அலுப்புதான் தோன்றியது. என்னதான் லண்டனில் இருந்தாலும், அவள் கணவன் மனோஜ் கை நிறையச் சம்பாதித்தாலும், ஷ்யாமளாவிற்கு இருக்கும் பேராசை முன்பு அதெல்லாம் தூசு தான்.

ஷ்யாமளாவிற்கு இரண்டு பையன்கள். இருவருமே இப்போது பெரிய க்ரேட் படிப்பதால், ஷ்யாமளாவைத் தேடுவதில்லை. மனோஜ் எப்போதும் வேலை வேலை என்று அலைய... ஷ்யாமளாவிற்கு வாழ்க்கை போர் அடிக்க ஆரம்பித்தது. அப்போதுதான் ஒரு நண்பரின் மூலம் வம்ஷியின் நட்பு ஏற்பட்டது.

வம்ஷி, லண்டனில் இருக்கும் மிகப் பெரும் பணக்காரர்களில் ஒருவன். அவர்கள் குடும்பம் அங்கே ஐந்து தலைமுறைகளாக இருக்கின்றனர். அவர்களுடையது பெரிய குடும்பம். அவர்களுடன் பழக ஆரம்பித்ததும், ஷ்யாமளாவிற்கு லண்டனில் உயர்மட்ட நண்பர்கள் கிடைத்தார்கள். அவர்களுடன் பார்ட்டி, அவுட்டிங் என்று வாழ்க்கை திரும்பச் சுவாரசியமானது.

அப்படிப்பட்ட நேரத்தில்தான் ஒரு நாள் வம்ஷி ஷ்யாமளாவை ஒரு பார்ட்டிக்கு அழைத்துச் செல்ல... அவள் வீட்டிற்கு வந்திருந்தான். அப்போது டி.வி.யில் தமிழ் சேனல் ஓடிக்கொண்டிருந்தது. ஷ்யாமளா உடை மாற்ற உள்ளே செல்ல... வம்ஷி ஹாலில் அமர்ந்து

டி.வி.யில் ஓடிக்கொண்டிருந்த பரத நாட்டியத்தை மெய் மறந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

ஷ்யாமளா உடை மாற்றிக் கொண்டு வந்தவள், வம்ஷி தன்னை மறந்து டி.வி.யைப் பார்ப்பதைக் கவனித்து, அவனை உலுக்க... கனவு லோகத்தில் இருந்து இறங்கியவன், "என்ன ஒரு அழகு, இந்தப் பொண்ணு மட்டும் எனக்கு மனைவியா வந்தா, நான் என்னோட எல்லாச் சொத்தையும் அவளுக்கே கொடுத்துடுவேன்..." என்றான்.

"உண்மையாத்தான் சொல்றியா வம்ஷி...? நான் அந்தப் பொண்ண உனக்குக் காட்டினா... எனக்கு என்ன தருவ...?" ஷ்யாமளா கேட்க...

வம்ஷி, ஷ்யாமளாவைப் பார்த்து முறைத்தவன், "சும்மா விளையாடாதே, உனக்கு அந்தப் பெண்ணைத் தெரியுமா என்ன...?" என்று நம்பாமல் கேட்க...

"தெரியும், நான் அவளை உனக்குக் கல்யாணம் செஞ்சு வச்சா... நீ ஆரம்பிக்கப் போற புது பிசினஸ்ல, என்னோட கணவரையும் பார்ட்னரா சேர்த்துக்கணும்... சரியா...?" ஷ்யாமளா பேரம் பேச... வம்ஷிக்கு இன்னும் நம்பிக்கை வரவில்லை.

அதனால் அவன் சந்தேகமாகத் தலையாட்ட, "கவலைப்படாதே, அவ என்னோட பொண்ணுதான்..." என்றாள் ஷ்யாமளா வாயெல்லாம் பல்லாக.

வம்ஷி, அவளை நம்பாமல் பார்க்க... தன்னுடைய கடந்த காலத்தைப் பற்றிச் சொல்லி, முன்பு எடுத்த மீராவின் போட்டோவையும் கொண்டு வந்து ஷ்யாமளா காண்பிக்க... வம்ஷியின் முகம் மலர்ந்தது.

"ரியலி, இப்பவும் என்னால நம்ப முடியலை. இந்தத் தேவதை உன்னோட பொண்ணா...?" என்று அவன் ஆச்சரியப்பட...

"இன்னும் எத்தனை தடவை கேட்ப வம்ஷி? அவ என்னோட பொண்ணுதான். அதோட அவ உனக்குத் தான். இப்ப சந்தோஷமா...? நீ நான் சொன்னதை மறந்திடக் கூடாது."

ஷ்யாமளா அவள் காரியத்தில் கண்ணாக இருந்தாள்.

வம்ஷிக்கு சந்தோஷத்தைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. ஷ்யாமளாவின் கையைப் பிடித்துக் குலுக்கியவன், "கண்டிப்பா... உன்னோட கணவரை பார்ட்னரா சேர்த்துக்கிறேன். நீ ஒரு பைசா தர வேண்டாம்..." என்றான்.

ஷ்யாமளாவிற்கு உலகையே வென்ற மகிழ்ச்சி உண்டானது. பின்னே... வம்ஷியின் பிசினஸ் பார்ட்னர் என்றால் சும்மாவா...? இனி தானும் லண்டனில் இருக்கும் மிகப்பெரிய பணக்காரர்களில் ஒருத்தி என்று கனவு கண்டவள், தன் மகளுக்கு என்று ஒரு கனவு இருக்கும், ஆசை இருக்கும் என்பதை நினைக்க மறந்தாள்.

இவள் சொன்னதும் மீரா, வம்ஷியைத் திருமணம் செய்யச் சம்மதித்து விடுவாள் என்ற நம்பிக்கையில் வம்ஷியையும் அழைத்துக் கொண்டு சென்னை வந்தாள். ஆனால்... 'இந்த மீரா பிடி கொடுத்தே பேச மாட்டேங்கிறா... என்ன செய்வது...?' என்று யோசித்தவள், 'சரி... மீரா டூர்ல இருந்து திரும்பி வரட்டும், பார்ப்போம்...' என்று எழுந்து அவள் அறைக்குச் சென்றாள். வம்ஷி மறுநாள் லண்டன் செல்ல... ஷ்யாமளாவும் தன் பெற்றோர் இருக்கும் ஊருக்குச் சென்றாள்.

மீரா டெல்லியில் இருந்து வந்ததும், ஷ்யாமளா அவளைக் கல்லூரியில் சென்று பார்க்க... மீராவும் வேறு வழியில்லாமல் வந்தாள். "என்ன மீரா? எதுக்கு நீ இப்போ என்னை அவாய்ட் பண்ற...?" ஷ்யாமளா கேட்க...

"உங்களுக்குத் தெரியாதா...? நீங்க எதுக்கு என் மேல திடீர்னு அக்கறை காட்றீங்க? அதுதான் எனக்குப் புரியலை..." என்றாள் மீரா.

"இதுல புரியாம போறதுக்கு என்ன இருக்கு? வம்ஷி அங்கே லண்டன்ல இருக்கிற பெரிய பணக்காரன். அவங்க அங்கே அஞ்சு தலைமுறையா கொடி கட்டிப் பறக்கிறாங்க. நீ அவனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா... நீயும், நானும் பக்கத்துல இருக்கலாம்... நாம இவ்வளவு வருஷம் பிரிஞ்சு இருந்துட்டோம், இனி சேர்ந்து இருக்கலாம்னுதான்..."

ஷ்யாமளா தன் மகளோடு சேர்ந்திருக்க ஆசைப் படுவது போல் பேச... மீரா மௌனமாக ஷ்யாமளா வையே பார்த்தாள்.

அவள் பார்வை தன்னைத் துளைப்பதை உணர்ந்த ஷ்யாமளா, "என்ன அப்படிப் பார்க்கிற...?" என்று கேட்க...

"உங்களுக்கு வம்ஷி எவ்வளவு பணம் தரேன்னு சொன்னார்...?" என்று மீரா நேரடியாகக் கேட்கவும், ஷ்யாமளாவின் முகம் வெளுத்தது.

"என் பொண்ணுக்கு பெரிய இடத்தில கல்யாணம் பண்ணணும்னு ஆசைதானே தவிர, இதுல எனக்கு வேற என்ன லாபம் இருக்கப் போகுது...?" ஷ்யாமளா சமாளிக்க....

மீரா வாய்க்குள் புன்னகைத்தவள், "என்னைக் கேட்டா... அது உங்களுக்குத்தான் தெரியும்..." என்றவள் தொடர்ந்து, "உங்க அக்கறைக்கு ரொம்ப நன்றி. எனக்குக் கல்யாணம் பண்ணி வெளிநாட்டுக்கு வர்ற ஐடியா இல்லை. அதனால இதை இதோட விட்டுடுங்க. இனிமே என்னைக் காலேஜ்ல வந்து தொந்தரவு பண்ணாதீங்க..." என்று சொல்லிவிட்டு வேகமாக அங்கிருந்து சென்றாள்.

ஷ்யாமளா, தான் நினைத்து வந்த காரியம் நடக்காமல் போன ஆத்திரத்தில் கோபமாகச் சென்றவள், மறு நாளே லண்டனுக்கும் கிளம்பிச் சென்றாள். ஒரு வாரம் வரை ஷ்யாமளா வரவில்லை என்றதும், மீரா அவள் லண்டனுக்குச் சென்றிருப்பாள் என்று நிம்மதி அடைந்தாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. மீரா வளைகாப்பிற்கு அர்ஜுனின் வீட்டிற்குச் சென்றதுதான்... அதன் பிறகு

இன்னும் செல்லவில்லை. டெல்லியில் இருந்து அர்ஜுனின் வீட்டினருக்கு வாங்கி வந்த பரிசுப் பொருட்களை எடுத்துக் கொண்டு அங்கே சென்றாள்.

"வா மீரா, என்ன இந்தப் பக்கம் ஆளையே காணோம்...? எங்க மேல கோபமா...?" வித்யா கேட்க...

"இல்லை ஆன்ட்டி, அப்படி எல்லாம் எதுவும் இல்லை. நான் காலேஜ் டூருக்கு டெல்லி போய் இருந்தேன். அதுதான் வரலை. ஆருகிட்ட சொல்லிட்டுத் தான் போனேன்..." என்று சொல்லி, மீரா அவள் வாங்கி வந்த பரிசுப் பொருட்களைக் கொடுக்க... வித்யா அதை ஆர்வமாக வாங்கிப் பார்த்தார்.

மீரா வாசலில் போடும் தோரணம், குங்குமச் சிமிழ், ஹேண்ட் பேக் மற்றும் சில ஷோ கேஸ் பொம்மைகள் என்று அழகான வேலைப்பாடுகள் நிறைந்த பொருட் களை வாங்கி வந்திருந்தாள். வித்யா எல்லாவற்றையும் ரசித்துப் பார்த்தவர், "ரொம்ப அழகா இருக்கு மீரா, நல்லா செலக்ட் பண்ணி இருக்கே..." என்றார்.

"எனக்கு என்னடி வாங்கிட்டு வந்தே...?" ஆரு கேட்க... "உனக்கு ஒரு ஹேண்ட் பேக், இன்னொண்ணு ஆன்ட்டிக்கு அப்புறம் இன்னொண்ணு ரஞ்சனா அக்காவுக்கு..." என்றாள் மீரா. அவள் சொன்னதைக் கேட்டுக் கொண்டே உள்ளே வந்தான் ஆதி.

அன்று சஞ்சனா பேசியதை மீரா, அர்ஜுனிடம் சொல்லவில்லை என்று ஆதிக்குத் தெரியும். அர்ஜுனுக்குத் தெரிந்திருந்தால் இந்நேரம் தன்னிடம்

கேட்டிருப்பான். அவன் கேட்கவில்லை என்பதிலிருந்தே மீரா சொல்லவில்லை என்பதைத் தெரிந்து கொண்டான்.

வித்யா சமையல் அறைக்குச் சென்றதும், "சாரி மீரா, ரஞ்சனா ஏதோ எதேச்சையாத்தான் சஞ்சனாகிட்ட சொல்லி இருக்கா... உன்னைப் பத்தித் தப்பா சொல்ல ணும்னு சொல்லலை..." ஆதி சொல்ல...

"தெரியும் அத்தான், ரஞ்சனா அக்கா என்னைப் பத்தி தப்பா நினைச்சுச் சொல்லி இருக்க மாட்டாங்கன்னு எனக்கும் தெரியும்..." என்றாள் மீரா. அதைக் கேட்டதும் ஆதியின் முகம் மலர்ந்தது.

"இனிமே சஞ்சனா உன்னைப் பத்திப் பேசாம நான் பார்த்துக்கிறேன்..." என்றான்.

மீரா சரி என்று தலையாட்டிவிட்டு உள்ளே சென்றாள். ஆதிக்கு இப்போதுதான் நிம்மதியாக இருந் தது.

வித்யா கொடுத்த ஜூஸைக் குடித்ததும் மீராவும், ஆருவும் மாடிக்குச் சென்று அர்ஜுனை ஸ்கைப்பில் அழைக்க... அர்ஜுன், மீராவையும், ஆருவையும் சேர்ந்து பார்த்ததும், ரொம்பச் சந்தோஷப்பட்டான்.

"ஹாய் செல்லம்ஸ்... ரெண்டு பேரும் இன்னைக்குச் சேர்ந்து வந்திருக்கீங்க...?" என அர்ஜுன் சொன்னதைக் கேட்ட சூர்யாவும், ஆருவைப் பார்க்கும் ஆவலில் அர்ஜுனின் அருகே வந்து அமர்ந்தான்.

"இன்னைக்குத்தான் உன் ஆளுக்கு எங்களை எல்லாம் ஞாபகம் வந்திருக்கு. மேடம் கோபம்

குறைஞ்சிடுச்சு போல... நான் எத்தனை தடவை போன் பண்ணேன், வரவேயில்லை. நான் யாருக்குன்னு சப்போர்ட் பண்றது, நீயே சொல்லு. அண்ணி வேற பிரசவத்துக்குப் போகும்போது... என்ன சொல்றது...?" என ஆரு படபடவென்று பொரிய... அர்ஜுனுக்கு ஒன்றும் புரியவில்லை. மீரா, ஆருவின் கையைப் பிடித்துக் கிள்ளியதும்தான் ஆரு நிறுத்தினாள்.

"என்ன சொல்ற ஆரு...? மீராவுக்கு என்ன கோபம்...?" அர்ஜுன் புரியாமல் கேட்க... மீரா, ஆருவைப் பார்த்து முறைத்தாள். அப்போதுதான் ஆருவுக்குப் புரிந்தது, அர்ஜுனிடம் மீரா எதையும் சொல்லவில்லை என்று.

'ஏதோ உளறிட்டா போலிருக்கே... இப்ப இவன் ஆட ஆரம்பிப்பானே...' என்று நினைத்த சூர்யா, "மீரா, டெல்லி டூர் எப்படி இருந்துச்சு? எங்கே எல்லாம் போனீங்க?" என்று பேச்சை மாற்ற...

மீரா வாயைத் திறக்கும் முன், "முதல்ல நீ வளைகாப்பு அன்னைக்கு என்ன நடந்துச்சு சொல்லு...?" என்று அர்ஜுன் கேட்டான்.

"ஒண்ணும் பெரிய விஷயம் இல்லை அர்ஜுன், நான் அப்புறம் உங்களுக்குச் சொல்றேன்." மீரா சொன்னதும் அர்ஜுனும் இப்போது அவள் தன் வீட்டில் இருக்கிறாள் என்று பேசாமல் இருந்தான். மீரா, சூர்யாவிடம், "நிறைய இடம் பார்த்தோம் சூர்யா... சிம்லா கூடப் போனோம்..." என்றாள்.

"அப்படியா...? நான் கூட இங்க நிறையப் பார்த்திட்டேன்... ஆனா, ஒண்ணு கூட செட்டாகலை..." சூர்யா கவலையாகச் சொல்ல...

'என்ன செட்டாகலை...?' ஆருவும், மீராவும் ஒருவரை ஒருவர் புரியாமல் பார்க்க...

"புரியலையா... அவனுக்குக் கேர்ள் பிரெண்ட் செட் ஆகலையாம்... அதைத்தான் அந்த லட்சணமா சொல்றான்..." அர்ஜுன் சொன்னதும், மீரா சிரிக்க... ஆரு, சூர்யாவை முறைத்தாள்.

"உங்களுக்கே கொஞ்சம் ஓவரா தெரியலை, கேர்ள் ப்ரெண்ட்... அதுவும் உங்களுக்கு... ரொம்பத் தேவை..." ஆரு நக்கலாகச் சொல்ல...

"ஏன், எனக்கு என்ன குறைச்சல்...? எனக்குக் கேர்ள் ப்ரெண்ட் இருக்கக் கூடாதா...? நான் ஆஸ்திரேலியாவுல ஒரு கேர்ள் ப்ரெண்ட்டாவது பிடிச்சிட்டுதான் இந்தியா வருவேன்."

"நீங்க எதுக்கு ஆஸ்திரேலியா போனீங்க...? படிக்கவா... இல்லை, கேர்ள் ப்ரெண்ட் பிடிக்கவா...'?' ஆரு கேட்க...

"படிக்கத்தான் வந்தேன். அப்படியே வந்த இடத்தில ஒரு பொண்ணு பார்த்திட்டா, எங்க அப்பா அம்மாவுக்கு வேலை மிச்சம் இல்லை. அதோட இங்க இருக்கிற பொண்ணுங்க எல்லாம் என்ன கலரு தெரியுமா...? நம்ம ஊரு பொண்ணுங்க எல்லாம் இந்தப் பொண்ணுங்க கிட்ட கூட நிக்க முடியாது." சூர்யா வீண் ஜம்பம் பேச...

"இருங்க... உங்க அம்மாட்ட போட்டுக் கொடுக்கி றேன்... உங்க பையன் படிக்கப் போன இடத்தில பொண்ணு தேடுறாருன்னு..." ஆரு மிரட்ட...

"ரொம்பத் தேங்க்ஸ். நானே எப்படிச் சொல்றதுன்னு நினைச்சேன், நீ சொல்லிட்டா எனக்கு ஒரு வேலை மிச்சம். நீயே சொல்லிடு." சூர்யா சரமாரியாக ஆருவைத் தாக்க....

ஆருவிற்கு என்ன சொல்வது என்று தெரிய வில்லை. ஆனால் ரொம்பக் கோபம் வந்தது. அதனால் என்ன பேசுகிறோம் என்று தெரியாமல், "போடா லூசு... உன்னை எல்லாம் ரெண்டு கண்ணும் இல்லாத பொண்ணுதான் லவ் பண்ணும்..." என்றாள்.

சூர்யா சிரிப்பை அடக்கிக் கொண்டு, "ரொம்பத் தேங்க்ஸ்..." என்று சொல்ல...

"ஆரு... என்ன பேசுற நீ, உனக்குக் கொஞ்சமாவது அறிவு இருக்கா...? வர வர உனக்கு வாய் அதிகமாகிட்டே போகுது..." அர்ஜுன் அவளை அதட்ட... ஆருவுக்குக் கண்ணில் அருவி கொட்ட ஆரம்பித்தது.

"நீ ஏன்டா டென்ஷன் ஆகுற? நாங்க ரெண்டு பேரும் பேசுறோம், நான் உன்னைப் பஞ்சாயத்துக்குக் கூப்பிட்டேனா...?" சூர்யா, ஆருவுக்குப் பரிந்து பேச...

"நீ சும்மா இருடா..." என்ற அர்ஜுன், "ஆரு... சூர்யாகிட்ட சாரி கேளு..." எனச் சொல்ல... ஆரு முடியாது என்று எழுந்து சென்றாள்.

ஆருவுக்கு இப்போதுதான் பல்பு எரிய ஆரம்பித் திருக்கிறது என்று மீராவிற்கும் சூர்யாவிற்கும் புரிந்தது. அதனால் இருவர் முகமும் புன்னகையில் விரிந்தது. ஆனால் அது புரியாத அர்ஜுன், 'இவ என்ன இப்படிச் சொல்லிட்டுப் போறா...?' என்று நினைத்தான்.

"சரி, நான் வீட்டுக்குக் கிளம்புறேன்." மீரா சொல்ல... அர்ஜுனும், சூர்யாவும் அவளுக்கு bye சொல்லித் தொடர்பைத் துண்டித்தனர்.

மீரா அவள் வீட்டிற்கு வந்து, அவள் அறைக்குள் நுழைந்துதான் இருப்பாள். அதற்குள் அர்ஜுன் செல்லில் அழைத்துவிட்டான். மீரா எதிர்பார்த்ததுதான். 'இப்ப இவனை எப்படிச் சமாளிக்கிறது?' யோசித்துக் கொண்டே சென்று போனை எடுத்தாள்.

25

"அர்ஜுன், இப்பதான் வந்தேன். டிரஸ் மாத்திட்டு கால் பண்றேன்." மீரா சொல்ல... அர்ஜுன் சரி என்று போனை வைத்தான்.

அர்ஜுன், மீராவுடன் பேச ஆரம்பித்தால் எப்படியும் இன்னும் ஒரு மணி நேரத்திற்கு வரமாட்டான்... அதற்குள் நாமும் ஆருவுடன் பேசி விடுவோம் என்று நினைத்த சூர்யா, ஹாலில் அமர்ந்து அர்ஜுனின் மொபைலில் இருந்து சுட்ட ஆருவின் எண்ணிற்கு அழைக்க... அதற்குள் அர்ஜுன் அறையில் இருந்து வெளியே வந்துவிட்டான்.

அர்ஜுனை எதிர்பார்க்காத சூர்யா, தொடர்பைத் துண்டித்துவிட்டு, "என்னடா, மீராவோட பேசலை...?" என்று கேட்க...

"இன்னும் கொஞ்ச நேரம் கழிச்சு, அவளே போன் பண்றேன்னு சொன்னா..." என்றான்.

சூர்யா, "சரி, நீ பேசு. நான் வெளியே வாக்கிங் போயிட்டு வரேன்..." என்று சொல்லிவிட்டு வெளியே சென்றான்.

அங்கே ஆரு அவள் செல் அடித்ததும், 'யார்...?' என்று எடுத்துப் பார்க்க... அது சூர்யாவின் எண். அர்ஜுன் எதற்கும் சூர்யாவின் நம்பரையும் அவர்கள் வீட்டில் எல்லோரிடமும் கொடுத்து வைத்திருந்தான். ஒரு வேளை அவனைத் தொடர்பு கொள்ள முடியவில்லை என்றால், சூர்யாவின் மூலம் தொடர்பு கொள்ள.

ஆரு, 'இப்போ இவன் எதுக்குப் போன் பண்றான்?' என்று நினைக்கும் போதே போன் கட்டாகிவிட்டது. 'இப்போது என்ன செய்வது? எதுக்குப் போன் பண்ணாங்க? அர்ஜுனுக்கு அழைத்துக் கேட்போமா...?' என்று நினைக்கும் போதே, திரும்பச் சூர்யா அழைத்து விட்டான்.

ஆரு வேகமாகப் போனை எடுத்து "ஹலோ..." என்றதும்,

"ஆரு தானே...?" சூர்யா கிசுகிசுப்பாகக் கேட்க...

ஆரு, "ஆமாம்..." என்றாள்.

"நான் சூ...சூர்யா..." என்று சொல்ல வருவதற்குள்,

"தெரியும்... நீங்க சூர்யா, உங்க நம்பர் என்கிட்டே இருக்கே..." ஆரு அசால்ட்டாகச் சொல்ல...

"இருக்கா...? அப்புறம் ஏன் இவ்வளவு நாள் நீ எனக்குப் போன் பண்ணலை...?" சூர்யா காட்டமாகக் கேட்க...

"நான் எதுக்கு உங்களுக்குப் போன் பண்ணனும்?" என்றாள் ஆரு.

"ஸ்... ஹப்பா... இப்பவே கண்ணைக் கட்டுதே. நீ உரிமையா உங்க அண்ணனுக்கு என்னைச் சமைக்கச் சொல்லுவ, நான் அதுக்குச் சரின்னு சொல்லணும். நான் கேர்ள் ப்ரெண்ட் பிடிச்சா... அதுக்கும் சண்டைக்கு வந்து போடா லூசுன்னு திட்டுவ... நான் அதையும் வாங்கிக்கணும். ஆனா... எனக்குப் போன் பண்ணிப் பேச மட்டும் காரணம் கேட்ப... எல்லாம் நேரம். உனக்கு நிஜமாவே தெரியாது."

"தெரியாது..."

"சரி, நான் இங்கே கேர்ள் ப்ரெண்ட் பிடிப்பேன்னு சொன்னா உனக்கு ஏன் கோபம் வருது...?"

"இல்லையே... அப்படியெல்லாம் எதுவும் இல்லையே..."

"சரி, அப்ப நான் இங்கே கேர்ள் ப்ரெண்ட் பார்த்துக்கிடட்டுமா...?" சூர்யா கேட்க...

"ஒதை வாங்குவீங்க..." என்றாள் ஆரு.

"ஆரு, விளையாடினது போதும்., எனக்கு உன் னைப் பிடிச்சிருக்கு, உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா...?" சூர்யா நேரடியாகக் கேட்டுவிட...

"அர்ஜுனுக்குத் தெரிஞ்சா... வீட்ல ஒத்துக்கு வாங்களா...?" ஆரு இழுக்க...

"நான் கேட்டதுக்கு முதல்ல பதில் சொல்லு... பிடிச்சிருக்கா, இல்லையா...? எந்த வீட்ல தங்கச்சி லவ் பண்றேன்னு சொன்னா அண்ணன் ஒத்துப்பான்? அதே மாதிரி வீட்ல இருக்கிறவங்க கிட்ட நாமதான் பேசிப் புரிய வைக்கணும்."

"அப்ப அர்ஜுன் ஒத்துக்க மாட்டானா...? அவன் மட்டும் லவ் பண்றான்..." என்றாள் ஆரு கவலையாக.

"தெரியலை ஆரு, உனக்கு இஷ்டமா இல் லையா...? நீ முதல்ல சொல்லு..."

"எங்க அம்மாவை நினைச்சா எனக்குப் பயமா இருக்கே, நம்ம கல்யாணம் நடக்குமா...?" என்று ஆரு கேட்டதிலேயே சூர்யாவிற்கு அவள் விருப்பம் புரிந்து விட்டது.

"நடக்கும், நாமதான் இப்ப சொந்தக்காரங்க ஆகிட்டோமே... அதனால பிரச்சினை இருக்காது..." என்றான் சூர்யா.

"அர்ஜுன் தப்பா நினைச்சிட்டான்னா என்ன பண்றது...?" ஆரு கேட்க...

"நானும் அதை நினைச்சுத்தான் இத்தனை நாள் உன்கிட்ட சொல்லலை, ஆனா... அர்ஜுனை மீரா பார்த்துக்குவா..." சூர்யா நம்பிக்கையோடு சொல்ல...

"மீராவுக்குத் தெரியுமா...?" ஆரு ஆச்சரியப்பட...

"ம்ம்... தெரியும்..." என்றான் சூர்யா.

"அப்ப சரி... எனக்கு ஓ.கே..." என்று ஆரு தைரிய மாகச் சொல்ல...

"என்ன ஓ.கே...? எதுக்கு ஓ.கே...? விளக்கமா சொல்லு..." என்று சூர்யா அவளை வம்பு இழுக்க...

"நீங்க எனக்குக் காலம் பூரா சமைச்சுப் போட... எனக்கு ஓ.கே..." என்றாள் ஆரு சந்தோஷமாக. சூர்யா முகத்திலும் புன்னகை மலர்ந்தது.

"அடிங்க... மரியாதையா 'ஐ லவ் யூ' சொல்லு..." அவன் மிரட்ட...

"நீங்க ஃபர்ஸ்ட் சொல்லுங்க." ஆரு வெட்கப்பட்டுக் கொண்டே சொல்ல...

"ஐ லவ் யூ ஆராதனா..." என்று சொல்லி சூர்யா போனில் முத்தம் கொடுக்க...

ஆருவும் "ஐ லவ் யூ சூர்யா..." என்றாள் கிசு கிசுப்பாக.

"எனக்கு உன்னை இப்பவே பார்க்கணும் போல இருக்கே..." சூர்யா சொல்ல...

ஆரு "எனக்கும்தான்..." என்றாள்.

இங்கே ஒரு ஜோடி கொஞ்சிக் கொண்டிருக்க... அங்கே ஒரு ஜோடி சண்டை போட்டுக் கொண்டிருந்தது.

"இவ்வளவு நடந்திருக்கு, நீ என்கிட்டே ஒண்ணுமே சொல்லை... இரு, நான் அந்தச் சஞ்சனாவை உண்டு இல்லைன்னு ஆக்கலை... என் பேரு அர்ஜுன் இல்லை..."

"பாருங்க, பாருங்க... எப்படிக் கோபம் வருது. அன்னைக்கும் இப்படித்தான் சஞ்சனாவைக் கத்துனீங்க. அதனால யாருக்குக் கஷ்டம், ஆதி அத்தானுக்குத்தான். நீங்க இப்பவும் அது மாதிரி ஏதாவது பண்ணா எவ்வளவு பெரிய பிரச்சனை ஆகும்."

"என்ன பிரச்சனை ஆகும் மீரா...?"

"என்ன அர்ஜுன் தெரியாத மாதிரி கேட்கிறீங்க? சஞ்சனாகிட்ட சொன்னது ரஞ்சனா அக்கா. ரஞ்சனா அக்காகிட்ட சொன்னது வித்யா ஆன்ட்டி. இப்ப நீங்க போய் ஏதாவது பேசினா, எல்லோருக்கும் மனசுக் கஷ்டம் ஆகும். அதனால இதை இதோட விட்டுடுங்க..."

"அதெல்லாம் விட முடியாது. நான் கேட்பேன்."

"நல்லாக் கேளுங்க... எனக்கு என்ன? என்னைக் காவது நம்ம விஷயம் அவங்களுக்குத் தெரியும் போது, நான் சொல்லித்தான் நீங்க கேட்டதா வித்யா ஆன்ட்டியும், ரஞ்சனா அக்காவும் நினைப்பாங்க. அப்புறம் எங்களுக்குள்ளதான் பிரச்சனை வரும். எனக்குப் பிறந்த வீட்லதான் யார் கூடேயும் சேர்ந்து இருக்கக்

கொடுப்பினை இல்லை... புகுந்த வீட்லேயும் அப்படியே இருக்கட்டும்." மீராவின் குரலில் அழுகை எட்டிப் பார்க்க...

"எப்படியோ... ஏதாவது சொல்லி, நீ நினைச்சதை சாதிச்சிடுற..." என்றான் அர்ஜுன் எரிச்சலாக.

"அப்படி இல்லை அர்ஜுன். குடும்பத்தில பெண்களுக்குள்ள பிரச்சினை வந்தா... அதை அவங்களே சரி பண்ணிக்கணும். அதை விட்டுட்டு அதுக்குள்ள ஆண்களை இழுத்தா... நீங்க ஏதாவது பேசி பிரச்சினை பெரிசாகிடும். நாங்க இன்னைக்கு அடிச்சுக்குவோம், நாளைக்குச் சேர்ந்துக்குவோம். அதுக்குத்தான்... வேற ஒண்ணும் இல்லை."

அர்ஜுன், மீராவையே பார்த்தான். இந்தச் சின்ன வயதில் அவளுக்கு இருக்கும் தெளிவைப் பார்த்து வியந்தான்.

சூர்யா வீட்டில் இல்லை என்று இருவரும் ஸ்கைப்பில்தான் பேசிக்கொண்டிருந்தனர். மீரா நைட் பாண்ட்டும், டாப்பும் போட்டிருந்தாள்.

மீரா, அர்ஜுனைப் பார்க்க... அவன், அவளை ரசனையோடு பார்த்து ரசிக்க... மீராவிற்கு வெட்கமாக இருந்தது. அவள் ஒரு தலையணையை எடுத்துத் தன் மேல் போட்டுக் கொண்டாள். இதற்கு முன் மீரா அர்ஜுனோடு பேசும் போது, இரவு உடையில் இருந்தது இல்லை. இன்று போனில்தானே பேசப் போகிறோம் என்று இரவு உடை அணிந்தாள்.

ஆனால், சூர்யா இல்லை என்று அர்ஜுன் ஸ்கைப்பில் அழைக்க... அவளும் அவசரத்தில் உடை மாற்றாமல் இருந்தாள்.

"மீரா... நீ நம்ம ஃபர்ஸ்ட் நைட்டுக்கு, என்ன டிரஸ் போட்டுப்ப...? அன்னைக்குப் போட்டிருந்தியே அந்தச் சாண்டல் கலர்ல மரூன் பார்டர் புடவை கட்டிப்பியா... இல்லை, மடிசார் கட்டிப்பியா...? இல்லை, இன்னைக்குப் போட்டிருக்க டிரஸ் போட்டிருப்பியா...?" அர்ஜுன் கேட்க...

"மடிசாரா...? யாரவது ஃபர்ஸ்ட் நைட்டுக்குப் போய் ஒன்பது கஜம் மடிசார் புடவை கட்டிப்பாங்களா...?" மீரா வாயைப் பிளந்தாள்.

அவன்தான் லூசுத்தனமாகக் கேட்கிறான் என்றால், இவளும் வாயை விட...

அர்ஜுன் ஆவலாக, "அப்ப என்ன போட்டுப்ப...?" என்றான் முகத்தில் விரிந்த புன்னகையுடன்.

"இங்க கல்யாணமே எப்படி நடக்கப் போகுதுன்னு தெரியலை... இதுல இப்ப ஃபர்ஸ்ட் நைட் பத்தி ரொம்ப முக்கியம்." மீரா சலிக்க...

அர்ஜுன் கண் சிமிட்டி, "எனக்கு ரொம்ப முக்கியம் மீரா..." என்றான்.

"சும்மா இருங்க அர்ஜுன், வேற ஏதாவது பேசுங்க..." மீரா சொல்ல...

"முதல்ல ஆருவுக்கு இந்த வருஷம் கல்யாணம் பண்ணிடணும். அப்பத்தான் நாம் அடுத்த வருஷமாவது கல்யாணம் பண்ணிக்க முடியும்..." என்றான் அர்ஜுன்.

இப்படியே இரண்டு ஜோடிகளும் காதல், சண்டை, கெஞ்சல், கொஞ்சல் என்று நாட்களை ஓட்டினர்.

அங்கே ரஞ்சனாவிடம் சஞ்சனா, "ரஞ்சு... நம்ம அம்மா, அப்பா பாவம் இல்லை..." என்று ஆரம்பிக்க... ரஞ்சனா, எதற்கு என்று அவளைப் புரியாமல் பார்க்க...

"இல்லை, நாம ரெண்டு பேரும் பொண்ணுங்க. நானும் கல்யாணம் ஆகி வேற வீட்டுக்குப் போயிட்டா... அப்பா, அம்மாவை யார் பார்த்துப்பா?" என்று பாவமாக முகத்தை வைத்துக் கொண்டு சஞ்சனா கேட்க... ரஞ்சனாவிற்கும் அதை நினைத்துக் கவலைதான்.

"ஆதி நம்ம அம்மா, அப்பாவைப் பார்த்துக்கி றேன்னு சொல்லி இருக்கார்."

"எத்தனை நாளுக்கு நீங்க பார்க்க முடியும் ரஞ்சு. அதுவும் நீங்க சென்னையில கடை வச்சிருக்கீங்க. எனக்கும் கல்யாணம் ஆகிட்டா... என் வீட்டுக்காரரும், உன் வீட்டுக்காரரும் யார் பார்த்துக்கிறதுன்னு சண்டை போடுவாங்க... இது தேவையா...?"

"இப்ப என்னதான்டி சொல்ல வர்ற...? சுத்தி வளைக்காம சொல்லு."

"நானும், நீயும் வேற வேற வீட்ல இருந்தாத் தான் இந்தத் தொல்லை. நீயும், நானும் ஒரே வீட்ல

இருந்தா...? நாம ரெண்டு பேரும் மாத்தி மாத்தி அம்மா, அப்பாவைப் பார்த்துக்கலாம். யாரு பார்த்துக்கிறதுன்னு சண்டையும் வராது. அவங்க அண்ணன், தம்பிக்குள்ள விட்டுக் கொடுத்துக்குவாங்க..." என்று சஞ்சனா மெதுவாகச் சொல்ல...

"அப்படினா... நீ என்ன சொல்ல வர...? அர்ஜுனை நீ கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்றியா...?" ரஞ்சனா கேட்க...

"நீ எதுக்கு இப்படி வாயைப் பிளக்குற...? நீ நினைச்சா முடியும். ரஞ்சு ப்ளீஸ்..." சஞ்சனா கெஞ்ச... ரஞ்சனாவுக்கு அவள் தங்கையைப் பார்க்கவும் பாவமாக இருந்தது.

"சஞ்சனா... நீ உன் மனசுல எந்த ஆசையும் வளர்த்துக்காதே. ஆனா... நான் உன்னை அர்ஜுனுக்குக் கல்யாணம் பண்ணி வைக்க முடியுமான்னு பார்க்கி றேன்..." என்றாள்.

சஞ்சனாவுக்கு அவள் சொன்னதே போதும். அதனால் அவள் சந்தோஷத்துடன் சரி என்றாள்.

சஞ்சனா சொன்னதையே நினைத்துக் கொண்டு இரவு படுத்திருந்த ரஞ்சனாவிற்குப் பிரசவ வலி எடுத்தது. ஆதியும், வித்யாவும் உடனே கிளம்பி வந்தனர். ரஞ்சனாவுக்கு மறு நாள் மதியம் அழகான பெண் குழந்தை பிறந்தது. வீட்டிற்கு முதலில் மகாலட்சுமி பிறந்திருக்கிறாள் என்று எல்லோரும் ஆசையாகக்

கொண்டாடினார். அர்ஜுன் அங்கே ஆஸ்திரேலியாவில் வீடே அதிரும்படி குதித்துக் கொண்டிருந்தான்.

ரஞ்சனா மூன்று நாள் கழித்து ஹாஸ்பிடலில் இருந்து வீட்டிற்கு வந்ததும், "நான் இன்னைக்குச் சென்னைக்குக் கிளம்புறேன். 30ஆம் நாள் வந்து குழந்தைக்குப் பேர் வச்சிட்டு உங்களை என்னோட அழைச்சிட்டுப் போறேன்." ஆதி சொல்ல...

"அதுக்குள்ளேயா...?" ரஞ்சனா கேட்க...

"நீ அதுவரை இங்க இருந்தா போதும். இன்னொரு விஷயம், இனி உன் தங்கை உன்னை அங்கே பார்க்க வந்தா... வாயை மூடிட்டு இருக்கணும். அனாவசியமா மத்தவங்க விஷயத்தில தலையிடக் கூடாது. அப்புறம் மத்தவங்க அவளை ஏதாவது சொன்னா... நான் எதுவும் கேட்க மாட்டேன். நீயும் நம்ம வீட்டு விஷயத்தை அவகிட்ட உளறாதே..." என்றான் ஆதி.

"நான் எங்க நம்ம வீட்டு விஷயத்தைச் சொன்னேன்...?" ரஞ்சனா புரியாமல் பார்க்க...

"உனக்கு மீரா நம்ம வீட்டு ஆள் இல்லைன்னு தெரியுமா...?" என்று கேட்ட ஆதி எழுந்து சென்று விட்டான். ரஞ்சனாவுக்குத் தலையைச் சுற்றியது. 'அப்ப மீரா யாரு...?' என்று குழம்பினாள்.

அவளது குழப்பத்திற்கு விடை... 30ஆம் நாள் அவர்களது மகளுக்கு ஐஸ்வர்யா என்று பெயர் வைத்து, சென்னைக்கு வந்ததும் தெரிந்தது.

26

ஆதி, அர்ஜுனுக்கு ஐஸ்வர்யாவின் போட்டோவை அனுப்பி இருந்தான்.

ரோஸ் கலரில் பொம்மை மாதிரி இருந்த குழந்தையைப் பார்க்கப் பார்க்க, அர்ஜுனுக்குக் குழந்தையை அள்ளிக் கொஞ்சும் ஆசை வந்தது. அவன் இந்தியா வரும்போது குழந்தை வளர்ந்திருப்பாள் என்று நினைத்தான்.

குழந்தை பிறந்து முப்பதாம் நாள் அன்று திருச்சியில் ரஞ்சனா வீட்டில் வைத்துப் புண்ணியாதானம் மற்றும் குழந்தைக்குப் பெயர் வைக்கும் நிகழ்ச்சியை உறவினர்களை அழைத்து விமரிசையாகச் செய்தனர். அதற்கு ஆதி வீட்டில் இருந்து அர்ஜுனைத் தவிர மற்ற அனைவரும் சென்றனர்.

மதுரையில் இருந்து வித்யாவின் அக்கா காயத்ரி மட்டும் வந்திருந்தார்.

வித்யா அவர்கள் வீட்டிலும் குழந்தையைத் தொட்டிலில் போடும் விழா வைத்திருப்பதால், வேறு உறவினர்களை அழைத்துச் செல்லவில்லை.

விழா முடிந்ததும் ரஞ்சனாவின் பெற்றோர், ரஞ்சனாவை மூன்று மாதம் சென்று அனுப்புகிறோம் என்று சொன்னதற்கு ஆதி ஒத்துக்கொள்ளவில்லை.

"இல்லை.... அங்கதான் அம்மா இருக்காங்களே... அவங்க பார்த்துப்பாங்க. என்னால கம்பெனியையும், கடையையும் போட்டுட்டு அடிக்கடி இங்கே வர முடியாது.

எனக்கு என் பொண்ணு வளர்வதைப் பக்கத்தில் இருந்து பார்க்கணும்." ஆதி உறுதியாகச் சொல்லி விட, அதை மறுத்து யாராலும் பேச முடியவில்லை.

"நான் பார்த்துக்கிறேன், வேலைக்கு இன்னொரு ஆள் போட்டிருக்கேன். ரஞ்சனா மூணு மாசம் வரை எந்த வேலையும் செய்யாம நான் பார்த்துக்கிறேன். கவலைப் படாதீங்க..." என்றார் வித்யா. ரஞ்சனாவின் பெற்றோரும் வேறு வழியில்லாமல் ஒத்துக்கொண்டனர்.

மதிய உணவைச் சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு எல்லோரும் கிளம்பினர். ஆதி காரை ஓட்ட... கணேசன், ஆதியின் அருகே அமர்ந்துகொள்ள... ரஞ்சனாவும், வித்யாவும் குழந்தையோடு காரின் பின் சீட்டில் ஏறினர். ஆரு கடைசிச் சீட்டில் அமர்ந்து கொண்டாள். குழந்தை பால் குடிக்க... காரை வழியில் அங்கங்கே நிறுத்தி நிறுத்தி வந்ததால், வீடு வந்து சேரும் போது இரவு பத்து மணி ஆகிவிட்டது.

அடிக்கடி வித்யா மாடி ஏறி வர முடியாது என்று ரஞ்சனா குழந்தையோடு கீழே இருந்த அறையில் தங்கிக் கொண்டாள். வீட்டு வேலைக்கு இன்னொரு பெண்ணை வித்யா வைத்துக் கொண்டதால்... குழந்தையைப் பார்த்துக் கொள்ளும் வேலையை வித்யாவும், ரஞ்சனாவும் செய்தனர்.

மீரா மறுநாள் கல்லூரியில் இருந்து குழந்தையைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையில் நேராக அர்ஜுனின் வீட்டிற்குத்தான் வந்தாள். வந்தவள், ஆருவின் அறைக்குச்

சென்று முகம், கை, கால் கழுவி விட்டுத்தான் குழந்தையைச் சென்று தூக்கினாள்.

மீரா, ரஞ்சனாவிடம் நலம் விசாரிக்க... ரஞ்சனாவும் மீராவை விசாரித்தாள். மீராவைப் பார்த்ததும்தான் ரஞ்சனாவுக்கு ஆதி சொன்னது ஞாபகம் வந்தது. அன்றிரவு ஆதியிடம் அதைப் பற்றிப் பேச வேண்டும் என்று நினைத்தாள்.

அர்ஜுனும் குழந்தையைப் பார்க்க வேண்டும் என்று ஸ்கைப்பில் வந்தான். ஆருவும், மீராவும் போட்டி போட்டுக் கொண்டு குழந்தையைத் தூக்குகிறேன் என்று குழந்தையை நசுக்க... வித்யா இருவரிடமும் இருந்து குழந்தையை வாங்கி, அவர் மடியில் வைத்துக் கொண்டு அர்ஜுனிடம் பேசினார்.

குழந்தையிடம், "அங்க பாருங்க, உங்க அர்ஜுன் சித்தப்பா..." என்று அவர் சொல்ல...

"நான் வர்றதுக்குள்ள வளர்ந்திடுவா இல்லம்மா... இந்தக் குட்டி கை, கால் எல்லாம் பெரிசாகிடும்..." என்றான் அர்ஜுன் ஏக்கமாக.

"ரொம்ப எல்லாம் பெரிசாகி இருக்க மாட்டா... ஏழு மாசம்தான் ஆகி இருக்கும். உங்க அண்ணன் தான் சொல்லச் சொல்ல கேட்காம, முப்பது நாள் லேயே குழந்தையை அலைய வச்சிட்டான். நான் உன் பொண்டாட்டியைக் குழந்தை பிறந்து ஆறு மாசம் கழிச்சு தான் கூப்பிடுவேன்." வித்யா வேண்டுமென்றே சொன் னார்.

"என்னது... ஆறு மாசமா...? ஏன்மா இந்தக் கொலைவெறி உங்களுக்கு...?" அர்ஜுன் அலற...

"சும்மா சொன்னேன்டா... நான் உனக்குப் பொண்ணு சென்னையிலேயே பார்க்கிறேன். நீயும் உன் பொண்டாட்டி பிரசவத்துக்குப் போகும்போது... கூடவே போ..." என அர்ஜுனை வித்யா சமாதானம் செய்ய...

"நான்தான் என் பொண்டாட்டியை பிரசவத்துக்கு அவங்க அப்பா வீட்டுக்கு அனுப்பவே மாட்டேனே... அதனால அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்." அர்ஜுன் தான் அவரின் பிள்ளை என்பதை நிரூபித்தான். அவர்கள் இருவரும் பேசுவதைக் கேட்டு ரஞ்சனா, ஆரு சிரிக்க... மீரா முகம் சிவந்தாள்.

"வர்ற ஞாயிற்றுக்கிழமை, நம்ம வீட்ல சொந்தக் காரங்களைக் கூப்பிட்டு குழந்தையைத் தொட்டிலில் போடலாம்னு நினைத்திருக்கோம்..." வித்யா சொல்ல...

"அப்படியா, சரிம்மா..." என்று கேட்டுக்கொண்ட அர்ஜுன், எதையோ யோசிக்க ஆரம்பித்தான்.

இரவு ஐஸ்வர்யா தூங்காமல் முழித்துக் கொண்டு இருப்பதால்... ரஞ்சனாவிற்கு ஆதியிடம் மீராவைப் பற்றிப் பேச வேண்டும் என்று நினைத்தது சுத்தமாக நினைவு இல்லை.

இரண்டு நாள் கழித்து அர்ஜுன், ரஞ்சனாவை செல்லில் அழைத்தான். அவன் அழைத்த போது வித்யா மதிய தூக்கத்தில் இருந்தார். வீட்டில் வேறு யாரும் இல்லை.

அர்ஜுன் குழந்தை பிறந்த அன்று போனில் ரஞ்சனாவிடம் பேசி நலம் விசாரித்ததுதான். அதன் பிறகு இன்றுதான் அழைக்கிறான். ரஞ்சனாவிடம் நலம் விசாரித்தவன், சிறிது நேரம் குழந்தையைப் பற்றிப் பேசிவிட்டு, "அப்புறம் ஜஷுவோட சித்தி எப்படி இருக்காங்க?" என்று கேட்டதும், ரஞ்சனாவிற்குச் சந்தோஷம் தாங்கவில்லை.

'அர்ஜுனுக்குச் சஞ்சனாவைப் பிடித்திருக்கு... அது தான் அவளைப் பற்றிக் கேட்கிறான்...' என்று நினைத்து, ரஞ்சனா பெருமையாக, "அவளுக்கு என்ன, சூப்பரா இருக்கா. திருச்சியில் இருந்து குழந்தையை அடிக்கடி பார்க்க வர முடியலைன்னுதான் கவலை. இந்த வாரம் ஃபங்ஷன்க்கு வரா..." என்றாள்.

"அண்ணி, உங்களுக்குச் சஞ்சனா மட்டும்தான் தங்கையா...?" அர்ஜுன் புதிர் போட... ரஞ்சனா புரியாமல் முழித்தவள், "பின்ன வேற யாரு...?" அவள் கேட்க...

"ஹா... ஹா... இன்னும் நீங்க வளரணும் அண்ணி. உங்க கூடப் பிறந்தா மட்டும்தான் உங்களுக்குத் தங்கச்சியா...? நான் கட்டிக்கப் போற பொண்ணும் உங்களுக்குத் தங்கச்சிதான்." அர்ஜுன் சிரித்துக் கொண்டே சொல்ல... ரஞ்சனா அதிர்ந்தாள். அவளுக்கு இப்போது ஆதி சொன்னதன் அர்த்தம் நன்றாகப் புரிந்தது.

ரஞ்சனா அதிர்ச்சியில் உறைந்து போய் இருக்க... அது தெரியாத அர்ஜுன், "என்ன அண்ணி... நம்ப

முடியலையா...? மீராவைத்தான் அண்ணி நான் லவ் பண்றேன். என்னோட செலக்ஷன் எப்படி? சுமாரா... ஓ.கே.வா...? இல்லை, சூப்பரா...?" என்று ஆர்வமாகக் கேட்க... ரஞ்சனாவும் தன்னைச் சமாளித்துக் கொண்டு மீராவைப் பற்றி நினைக்க... அவளுக்கு, "சூப்பர்..." என்று தான் வாயில் வந்தது.

அர்ஜுனுக்கு வாயெல்லாம் பல்லுதான். "தேங்க்ஸ் அண்ணி, இன்னும் அம்மாவுக்குத் தெரியாது. நீங்கதான் அண்ணி அம்மாகிட்ட பேசி... எங்க கல்யாணத்துக்குச் சம்மதம் வாங்கித் தரணும். ஆரு கல்யாணம் முடிஞ்சதும் அம்மாகிட்ட பேசலாம்."

"சரி அர்ஜுன்..." என்ற ரஞ்சனாவின் குரலில் சுரத்தே இல்லை.

"சரி அண்ணி... உங்க உடம்பைப் பார்த்துக் கோங்க, அப்படியே என்னோட ஜஷு செல்லத்தை நல்லா கவனிச்சிக்கோங்க, bye..." என்று சொல்லி அர்ஜுன் போனை வைத்துவிட்டான்.

அர்ஜுனுக்கு அன்று போல் சஞ்சனா, மீராவை எதுவும் பேசிவிடக்கூடாது என்றுதான் ரஞ்சனாவிடம் தான் மீராவை காதலிப்பதைச் சொன்னான். இனி ரஞ்சனா தன் தங்கையைக் கண்டித்து வைப்பாள் என்று நினைத்தான்.

ரஞ்சனா, அப்படியே சிலை போல் அமர்ந்து விட்டாள். மதிய உணவிற்கு வீட்டுக்கு வந்த ஆதி, குழந்தை தூங்குவாள் என்று காலிங் பெல் அடிக்காமல் தன்னிடம் இருந்த சாவியால் கதவைத் திறந்து கொண்டு

வந்தவன், நேராகக் குழந்தையைச் சென்று பார்க்க... அது அவன் நினைத்த மாதிரியே தூங்கிக் கொண்டு இருந்தது.

சிறிது நேரம் நின்று குழந்தையைப் பார்த்தவன், ரஞ்சனா அருகில் வந்து அவள் தோளைத் தொட... ரஞ்சனா திடுக்கிட்டு எழுந்தாள்.

"நான்தான் ரஞ்சனா... வா, சாப்பிடுவோம்." ஆதி அவளை அழைத்துக் கொண்டு சாப்பிடச் சென்றான். சாப்பிடும் போது ரஞ்சனா ஏதோ யோசனையிலேயே இருப்பதைப் பார்த்தவன், சாப்பிட்டுவிட்டு அவர்கள் அறைக்கு வந்ததும் ரஞ்சனாவிடம் விசாரிக்க...

"நீங்க அன்னைக்கு மீராவும் இந்த வீட்டு ஆளுங்கிற மாதிரி ஏதோ சொன்னீங்க... அது எந்த அர்த்ததுல சொன்னீங்கன்னு எனக்கு இன்னைக்குத்தான் புரிஞ்சுது..." என்றாள்.

"என்ன புரிஞ்சுது உனக்கு...? புரியுற மாதிரி சொல்லு."

"மீராதான் இந்த வீட்டோட ரெண்டாவது மருமகளா வரப் போறான்னு புரிஞ்சுது, போதுமா...?" ரஞ்சனா எரிச்சலோடு சொல்ல...

"இதுல நீ எரிச்சல் பட என்ன இருக்கு...?" ஆதி கோபமாகக் கேட்க...

"இல்ல... இதெல்லாம் நம்ம வீட்டுக்கு ஒத்து வருமான்னு... அதுதான் யோசிச்சேன்." ரஞ்சனா சமாளித்தாள்.

"அர்ஜுனுக்கு நாம தேடினாலும் மீரா மாதிரி ஒரு பொண்ணு கிடைக்காது. அவனா தேர்ந்தெடுத்தாங்கிறது தவிர... வேற என்ன குற்றம் சொல்ல முடியும்...? நீயே சொல்லு..." ஆதி கேட்க...

"மீரா நல்ல பொண்ணுதான். ஆனா... அவங்க அம்மா அப்பா..." என்று ரஞ்சனா அடுத்த தூண்டிலைப் போட...

"அவங்க அம்மா அப்பாவுக்கு என்ன? அவங்க தனிப்பட்ட வாழ்க்கையைப் பத்தி நாம ஏன் கவலைப் படணும்? அவங்களுக்குள்ள ஒத்து வரலை, அதனால பிரிஞ்சு வேற கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க. இதுல என்ன தப்பு? அவங்க அப்பா மீராவை நல்லாத்தான் வளர்த்திருக்கார்..." என்று ஆதி சொல்ல... ரஞ்சனாவால் ஆமாம்... ஆமாம்... என்று மண்டையைத்தான் ஆட்ட முடிந்தது.

"உனக்கு எப்படி ரஞ்சனா... அர்ஜுன், மீரா பற்றித் தெரியும்?"

ரஞ்சனா இன்று மதியம் அர்ஜுன் போன் செய்து பேசியது பற்றிச் சொல்ல... ஆதியின் முகம் மலர்ந்தது.

"பார்த்தியா...? அவன் உன்னைத்தான் அம்மாவிடம் பேசச் சொல்லி இருக்கான். அவன் மனசுல உன் மேல நல்ல எண்ணம் இருக்கிறதுனாலதான், உன்னிடம் நம்பிக்கையா சொல்லி இருக்கான். நீ அவன் நம்பிக்கையைக் காப்பாத்தணும் ரஞ்சனா..." என்று சொல்லிவிட்டு

ஆதி கடைக்குக் கிளம்ப, ரஞ்சனாதான் இப்போது புகுந்த வீட்டிற்காகப் பார்ப்பதா... இல்லை, பிறந்த வீட்டிற்காகப் பார்ப்பதா என்று குழம்பினாள்.

மறுநாள் மாலை குழந்தையோடு அனைவரும் அஷ்டலக்ஷ்மி கோவிலுக்குச் செல்ல... மீராவையும் உடன் அழைத்துச் சென்றனர். கோவிலில் கணேசன், மீராவுடன் பிரியமாகப் பேசிக் கொண்டிருந்தார். ஆதி, ஆரு இருவருமே மீராவுடன் பாசமாகப் பழகினார்கள்.

ரஞ்சனாவுக்கு இப்போது நன்றாகப் புரிந்தது. மீரா, அர்ஜுனைத் திருமணம் செய்து அவர்கள் வீட்டிற்கு மருமகளாக வரப்போகிறாள் என்று தெரிந்துதான், அவளிடம் பிரியமாக இருக்கிறார்களே தவிர, தான் நினைத்தது போல் பரிதாபத்தினால் இல்லையென்று.

மீரா இந்தக் குடும்பத்திற்கு மருமகளாக வருவதில் எல்லோருக்கும் விருப்பம், அத்தையும் ஒத்துக்கொள்வார். அதோடு மிகவும் முக்கியமானது அர்ஜுன், மீராவை விரும்புகிறான். அதனால் இனி தன் தங்கை இந்தக் குடும்பத்திற்கு மருமகளாக வர முடியாது. அவள் மனதில் தேவை இல்லாத ஆசையை வளர விடக்கூடாது என்று ரஞ்சனா நினைத்தாள்.

ஞாயிறு அன்று குழந்தையைத் தொட்டிலில் போடும் விழாவிற்கு, ரஞ்சனாவின் குடும்பத்தினர் வந்திருந் தனர். அதோடு வித்யா அங்கிருந்த நெருங்கிய உறவினர் களையும், நண்பர்களையும் அழைத்திருந்தார்.

வித்யாவின் அக்கா குடும்பத்துடன் வந்திருந்தார். வளைகாப்பு அன்று போல் இன்றும் அர்ஜுன் ஸ்கைப்பில் விழாவைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

குழந்தையைத் தொட்டிலில் போட்டுவிட்டு, வந்திருந்த விருந்தினர்கள் எல்லோரும் உணவருந்தச் செல்லும் வரை மீரா வரவில்லை.

"ஏன் மீரா இன்னும் வரலை?" வித்யா கேட்க... சஞ்சனா, 'நாம அன்னைக்குப் பேசுனதுனாலதான் வரலை போல...' என்று சந்தோஷப்பட... மீரா அப்போது சரியாக உள்ளே நுழைந்தாள்.

"ஏன் மீரா லேட்டு?" வித்யா கேட்க,

"ம்ம்.. உங்க பிள்ளையாலதான். நான் கிளம்பும் போது போன் பண்ணி, ஒரு பெரிய லிஸ்ட்டே கொடுத்தா..." என்று சொன்ன மீரா... டி.வி.யைப் பார்த்து முறைக்க... அர்ஜுன் வாய்விட்டுச் சிரித்தவன்,

"சாரி மீரா... நீ நல்லா பார்த்து வாங்குவ இல்லை, அதனாலதான்..." என்றான்.

மீரா ஒரு பெரிய பை கையில் வைத்திருந்தவள், தொட்டில் அருகே சென்று அங்கு நின்றிருந்த காயத்ரியிடம், "ஆன்ட்டி, அர்ஜுன் குழந்தைக்கு டிரஸ் வாங்கச் சொன்னாங்க, வாங்கி இருக்கேன். இப்ப போடலாமா...?" என்று கேட்க...

காயத்ரி, "பேஷா போடலாமே..." என்றவர், குழந்தையைத் தூக்கிக் கொண்டு கீழே அமர்ந்தார். மீரா

ஒவ்வொன்றாக எடுத்துக் கொடுக்க... காயத்திரி குழந்தைக்குப் போட்டு விட்டார்.

எல்லோரும் வழக்கமாகப் பெண் குழந்தைகளுக்குப் பேபி பிங்க் நிறத்தில்தான் அதிகம் வாங்குவார்கள். ஆனால் மீரா, அடர் சிவப்பு நிறத்தில் உடை, தொப்பி, ஷு எல்லாம் வாங்கி இருந்தாள்.

உயர்ந்த தரத்தில் துணி மிருதுவாக இருந்தது. அதோடு மீரா ஒரு ப்ரேஸ்லெட்டும் வாங்கி இருந்தாள். மீரா அதை வித்யாவிடம் சென்று கொடுத்தாள். வித்யா, அர்ஜுனைப் பார்க்க... "என் சார்புல, நீங்க போடுங்கம்மா..." அர்ஜுன் சொல்ல.... வித்யா சென்று குழந்தையின் கையில் போட்டு விட்டவர், பிறகு விருந்தினரைக் கவனிக்கச் சென்று விட்டார்.

மீரா குழந்தையைத் தூக்கிக் கொண்டு டி.வி. அருகில் சென்றவள், அர்ஜுனுக்குக் குழந்தையை அருகில் காட்ட...

"ஏற்கெனவே நீங்க ரொம்ப அழகு பேபி, இன்னைக்கு இந்த டிரஸ்ல சூப்பரா கலக்குறீங்க..." அர்ஜுன் குழந்தையிடம் சொல்ல... மீரா குழந்தையின் கையைத் தூக்கிக் காட்டி,

"அர்ஜுன், ப்ரேஸ்லெட் நல்லா இருக்கா...? உங்களுக்குப் பிடிச்சிருக்கா...?" என்று கேட்க...

"உன் செலக்ஷன், சொல்லவா வேண்டும் மீரா, சூப்பர்..." என்றான் அர்ஜுன்.

இதுவரை மீராவை ஆருவின் தோழி என்றே நினைத்திருந்த சஞ்சனா... அர்ஜுன், மீராவின் நெருக்கத்தைப் பார்த்துப் பொறாமையில் பொசுங்கி விட்டாள். சஞ்சனா விடுவிடுவென்று மீராவின் அருகே வந்தவள், குழந்தையைப் பிடுங்க... குழந்தை அழ ஆரம்பித்தது.

அதைப் பார்த்த ரஞ்சனா, "சஞ்சனா, குழந்தையை மீராகிட்ட கொடு..." என்று அதட்ட... சஞ்சனா, மீராவிடமே குழந்தையைத் திரும்பக் கொடுத்துவிட்டுச் சென்றாள். ஒரு நிமிடம் அர்ஜுனுக்கும், மீராவிற்கும் என்ன நடந்தது என்றே புரியவில்லை.

குழந்தை விடாமல் அழ... மீரா சென்று ரஞ்சனாவிடம் குழந்தையைக் கொடுக்க... ரஞ்சனா குழந்தையை அறைக்குள் தூக்கிச் சென்றாள்.

அர்ஜுன், 'தான் மட்டும் இன்று நேரில் இருந்திருந்தால்... சஞ்சனாவின் கன்னம் பழுத்திருக்கும்...' என்று நினைத்தவன், பிறகு பேசுவதாகச் சொல்லித் தொடர்பைத் துண்டித்தான்.

ரஞ்சனா அறையில் அமர்ந்து குழந்தையைச் சமாதானம் செய்ய... சஞ்சனா உள்ளே வந்தாள். ரஞ்சனா அவளைப் பார்த்து முறைக்க... "இப்ப நீ எதுக்கு என்னைப் பார்த்து முறைக்கிற...?" எனச் சஞ்சனா கோபப்பட...

"உன்னோட கோபத்தைக் காட்ட என் குழந்தை தான் கிடைச்சுதா...? இந்தக் குழந்தைக்கு ஒரு மாசம் தான் முடிஞ்சிருக்கு. உனக்கு அதாவது ஞாபகம்

இருக்கா...? வெடுக்குன்னு பிடிச்சு இழுக்கிற... இதை மட்டும் உங்க அத்தான் பார்த்திருக்கணும்...” ரஞ்சனா சொல்ல....

“அவ யாரு உரிமையா எல்லாம் பண்ண...?” சஞ்சனா கேட்க....

“அது உனக்குத் தேவை இல்லாதது. இது நம்ம வீடு இல்லை... இங்க வந்தா ஒழுங்கா இருக்கணும். மீரா இந்த வீட்ல ஒருத்தி மாதிரி... அதனால போன தடவை மாதிரி ஏதாவது பேசாதே சொல்லிட்டேன்.” ரஞ்சனா அழுத்தம் திருத்தமாகச் சொல்ல... சஞ்சனா முறைத்துக் கொண்டு அமர்ந்து இருந்தாள்.

குழந்தை பால் குடிக்காமல் அழ... ரஞ்சனாவிற்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அவள் வித்யாவை அழைக்க... வித்யா வந்து என்னவென்று கேட்க... ரஞ்சனா குழந்தை பால் குடிக்காமல் அழுவதாகச் சொல்ல... வித்யா குழந்தையின் உடைகளை அவிழ்த்து எறும்பு ஏதும் கடித்திருக்கிறதா என்று பார்க்க... அப்படி எதுவும் இல்லை. குழந்தை எதற்கு அழுகிறது என்று அவருக்கும் தெரியவில்லை. குழந்தையின் அழுகை குரல் கேட்டு மீராவும், ஆருவும் அங்கே வந்தனர்.

வித்யாவின் அக்கா காயத்ரி வந்து குழந்தையைக் கையில் வாங்கிப் பார்த்தவர், “எங்கேயாவது சுளுக்கி இருக்கும், அதுதான் குழந்தை இப்படி அழுது...” என்று சொல்ல...

“அத்தை, சீக்கிரமா இவ அப்பா வர்றதுக்குள்ள ஏதாவது பண்ணுங்க, அவர் வந்தா என்னைத்தான் திட்டுவார்” ரஞ்சனா தன் கணவனை நினைத்துப் பயப்பட... காயத்ரி தேங்காய் எண்ணெய்யைக் கையில் தொட்டு, குழந்தைக்கு உருவிவிட ஆரம்பித்தார்.

குழந்தை இன்னும் சத்தமாக அழ... அதைப் பார்த்து ரஞ்சனா தவிக்க... மீராவிற்குக் கண்ணெல்லாம் கலங்கி விட்டது. குழந்தையின் சத்தம் கேட்டு ஆதியும் வந்துவிட்டான்.

ஆனால், அதற்குள் காயத்ரி குழந்தையை ரஞ்சனாவிடம் கொடுத்தவர், “இப்ப பால் கொடு...” என்றார்.

ரஞ்சனா குழந்தையைத் தூக்கிக் கொண்டு வேறு அறைக்குச் சென்றாள். ஆதி, “என்ன ஆச்சு...?” என்று கேட்க...

காயத்ரி, “குழந்தைன்னா அழத்தான்டா செய்யும், உலகத்துலேயே இவனுங்கதான் அதிசயமா புள்ளை பெத்த மாதிரி... போய் உன் வேலையைப் பாரு...” என்று சொல்ல... ஆதிக்கு ஏன் பெரியம்மா தன்னைத் திட்டுகிறார் என்றே புரியவில்லை.

ரஞ்சனா குழந்தைக்குப் பால் கொடுக்க... குழந்தையும் அழுகையை நிறுத்திப் பால் குடித்தது. சிறிது நேரத்தில் குழந்தை தூங்க, ரஞ்சனா குழந்தையை மெத்தையில் படுக்க வைத்துவிட்டுப் புடவை மாற்றச் சென்றாள். ரஞ்சனா திரும்பி வந்து பார்க்கும் போது, மீரா

குழந்தையின் அருகில் அமர்ந்து கொண்டு குழந்தை யுடன் பேசிக்கொண்டிருந்தாள்.

"சாரிடா செல்லம்... எல்லாம் சித்தியாலதான்... பாப்பாவுக்கு ரொம்ப வலிச்சிடுச்சா...? சாரி..." அவள் பேசுவதைக் கேட்டு ரஞ்சனாவிற்குச் சிரிப்பு வந்தது.

மீரா, ரஞ்சனாவைப் பார்த்ததும், "சாரி அக்கா..." என்று சொல்ல...

ரஞ்சனா, "நீ என்ன பண்ண, சஞ்சனா இழுத்ததுனாலதான்... நல்ல வேளை சரி ஆகிடுச்சு..." என்றாள்.

ரஞ்சனா, மீராவின் அருகே அமர்ந்தவள், "அப்புறம் என்னோட கொழுந்தனார் என்ன சொல்றார்? எப்ப ஊருக்கு வர்றாராம்?" என்று கேட்க...

மீரா, ரஞ்சனாவை ஆச்சரியமாகப் பார்த்தவள், "அர்ஜுனையா சொல்றீங்க...?" என்று கேட்க...

"பின்ன... வேற யாரு எனக்குக் கொழுந்தனாரு, அவரு தான்..." என்றாள் ரஞ்சனா.

மீராவிற்குத் தங்கள் விஷயம் ரஞ்சனாவிற்குத் தெரியும் என்பது தெரியாது. அதனால் அவள், "என்னைக் கேட்டா... எனக்கு எப்படித் தெரியும்?" என்று சொல்ல...

"ஹே... சும்மா ரீல் விடாத. நீ என்னோட கொழுந்தனை சைட் அடிக்கலை...?" ரஞ்சனா, மீராவை வம்பு இழுக்க...

"ஐயோ, நானா...? ஆமா... இவங்க கொழுந்தனாரு பெரிய மன்மதன். அவரை நாங்க சைட் அடிச்சிட் டாலும்..." மீரா அலுத்துக் கொள்ள... அப்போது சரியாக அர்ஜுன், மீராவை செல்லில் அழைத்தான்.

மீரா, ரஞ்சனாவைப் பார்த்து அசடு வழிந்து கொண்டு போனை எடுக்க... அர்ஜுன் அவளிடம், "அங்க ஒண்ணும் பிரச்சினை இல்லையே...?" என்று கேட்க...

மீரா, "இல்லை..." என்றாள்.

மீராவிடம் இருந்து போனை வாங்கிய ரஞ்சனா, "அர்ஜுன், நீ என்னவோ மீராவைப் பற்றிச் சொன்ன... ஆனா மீரா அப்படி எதுவும் இல்லைன்னு சொல்றா... அப்ப உனக்கு வேற நல்ல பொண்ணு பார்ப்போமா...?" என்று சிரித்துக் கொண்டே கேட்க...

"அப்படியா அண்ணி சொன்னா, ஹப்பா... அவளே சொல்லிட்டா, நீங்க வேற பொண்ணு பாருங்க..." என்றான் அர்ஜுன் பதிலுக்கு....

மீரா, ரஞ்சனாவின் அருகே நெருங்கி அமர்ந்து, அவள் காதை போன் அருகில் வைத்து அர்ஜுன் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தவள், வேகமாகப் போனை வாங்கி, "ஓ... உங்களுக்கு அப்படி வேற நினைப்பிருக்கா...? இருங்க, இனிமே நான் உங்களோட பேச மாட்டேன்..." என்று மிரட்ட...

"ஹே ...சும்மாடா மீரா. நீ ஏன் அண்ணிகிட்ட அப்படிச் சொன்ன?" அர்ஜுன் கேட்க...

"அவங்ககிட்ட நீங்க சொன்னது, எனக்கு எப்படித் தெரியும். நீங்க என்கிட்டே சொன்னீங்களா... நான் ஒரு பயத்துல சொன்னேன்..." என்றாள் மீரா.

ரஞ்சனா, மீராவிடம் இருந்து போனை வாங்கி, "என்ன அர்ஜுன்... மீராவுக்கு இப்படிப் பயப்படுற? அவ பேச மாட்டேன்னு சொன்னதும் சரண்டர் ஆகிட்டே..." என்று கேலி செய்ய...

"நான் ஆதியோட தம்பி அண்ணி... பின்ன வேற எப்படி இருப்பேன். குழந்தையைச் சாக்கு சொல்லி ஆதி உங்களை இங்க ஒரு மாசத்திலேயே அழைச்சிட்டு வரலியா...?" அர்ஜுன் பதிலுக்கு ரஞ்சனாவை வார...

"அப்பா சாமி, என்னை ஆள விடு, தெரியாம கேட்டுட்டேன்." ரஞ்சனா போனை மீராவிடம் கொடுக்க... அர்ஜுன் அவளிடம் இரவு போன் செய்வதாகச் சொல்லி வைத்தான்.

அந்த அறையில் வேறு யாரும் இல்லாததால் ரஞ்சனாவும், மீராவும் ஃப்ரீயாகப் பேசிக்கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் ஆருவும் வந்து அவர்களோடு சேர்ந்து கொண்டாள். மூவரும் சேர்ந்து அரட்டை அடித்துப் பின் ஒன்றாகவே சாப்பிடச் சென்றனர். அவர்கள் மூவரும் சேர்ந்து சாப்பிடுவதைப் பார்த்து சஞ்சனா எரிச்சல் பட்டாள்.

வந்திருந்த உறவினர்கள் சிறிது நேரத்தில் வீட்டுக்குக் கிளம்பிவிட... மீராவும் அனைவரிடமும்

விடைபெற்றுச் சென்றாள். அர்ஜுனின் பெரியம்மா காயத்ரி மட்டும் வித்யாவிற்கு உதவுவதற்காக அங்கேயே தங்கினார்.

ரஞ்சனாவின் பெற்றோர் இரவு ரயிலில்தான் ஊருக்குக் கிளம்புகின்றனர். அதனால் ரஞ்சனா அவள் பெற்றோர் இருந்த அறைக்குச் சென்று பேசிக் கொண்டிருந்தாள்.

அப்போது அவளின் அப்பா சேதுபதி, "ரஞ்சனா, உன்னோட தங்கச்சியை உங்க மாமா பையனுக்குக் கேட்கிறாங்க. அவங்களுக்கு மூணுமே பசங்கதான். அதனால அவங்க முதல் பையனுக்கு நம்ம சஞ்சனாவைக் கல்யாணம் பண்ணி நம்ம வீட்லேயே வேணும்னாலும் வச்சுக்கோங்க, இல்லன்னா நம்ம வீட்டுக்குப் பக்கத்திலேயே வீடு பார்த்து வச்சிக்கிறதுன்னாலும் வச்சிக்கச் சொல்றாங்க..." என்றவர் தொடர்ந்து,

"பையன் நல்ல பையன், நல்லாப் படிச்சிருக்கான். திருச்சியில வேலைய மாத்திகிட்டா வேலைக்கும் போயிட்டு, அப்படியே ஃப்ரீயா இருக்கும் நேரத்தில் நம்ம பிசினஸும் பார்த்துக்கலாம். நீ என்ன சொல்ற...?" என்று அவர் தன் பெரிய மகளின் அபிப்ராயத்தைக் கேட்க...

"இதுல நான் சொல்ல என்னப்பா இருக்கு. நல்ல சம்பந்தம் விட்டுடாதீங்க. நான்தான் சென்னையில இருக்கேன். சஞ்சனாவாவது உங்க பக்கத்தில இருக்கட்டும். நானும் அடிக்கடி வந்து உங்களைப் பார்த்துக்கிறேன்..." ரஞ்சனா சொல்ல... சஞ்சனா கொதித்து விட்டாள்.

"ஆமா, நீ மட்டும் சென்னையில இருப்ப... நான் திருச்சியில கிடந்து சாகணும். நான் மட்டும் அம்மா, அப்பாவைப் பார்த்துக்கணும். நீ உன் புருஷனோட ஜாலியா இருக்கணும்." சஞ்சனா ஆத்திரத்தில் கத்த... ரஞ்சனா எழுந்து சென்று வேகமாகக் கதவை மூடினாள். வித்யாவும், காயத்ரியும் கீழ் அறையில் தூங்குகின்றனர். நல்லவேளை வீட்டில் வேறு யாரும் இல்லை. இவர்கள் மாடியில் இருந்த அறையில் இருந்தனர்.

சஞ்சனாவின் அம்மா வந்தனா, "இப்ப எதுக்குடி கத்துற...? நீ ஒண்ணும் எங்களைப் பார்த்துக்க வேண்டாம். பையன் நல்ல பையன். அவன் இப்ப சென்னையிலதான் வேலை பார்க்கிறான். நீ வேணா இங்கேயே இருந்துக்கோ. உங்க மாமா எனக்காகத்தான் உங்களைத் திருச்சியில வச்சுக்கச் சொல்றாங்க. மத்தபடி அவங்களுக்கு நம்ம சொத்து போய்த்தான் நிறைய ணும்னு இல்லை..." என்றார்.

"எனக்கு அவனைப் பிடிக்கலை..." சஞ்சனா எடுத்தெறிந்து பேச...

அவளின் அம்மா, "இங்க பாரு... மரியாதையா பேசு. உன்னோட குணத்துக்கு நாங்க வெளிய சம்பந்தம் பண்ண முடியுமா...? போன பத்து நாள்ல திரும்பி வந்திடுவ. அதே என் அண்ணன் பையன்னா, எங்க ளுக்காகப் பார்ப்பான்..." என்று எடுத்துச் சொன்னார்.

"அம்மா சொல்றதும் சரிதானே சஞ்சனா..." என ரஞ்சனா சொல்ல...

சஞ்சனா, ரஞ்சனாவைப் பார்த்து, "நீயெல்லாம் எனக்கு அக்காவா? உன்னைப் போய் நம்பினேனே... என் புத்தியை செருப்பால அடிச்சிக்கணும்..." என்றாள்.

ரஞ்சனாவிற்குக் கோபம் வந்துவிட்டது.

"நீ மட்டும் ஆசைப்பட்டா போதுமா? எங்க வீட்ல இருக்கிறவங்க விருப்பம் தெரிய வேண்டாமா...? அதோட முக்கியமா அர்ஜுனுக்கு உன்னைப் பிடிக்க வேண் டாமா...? சும்மா நீ நினைச்சதை சாதிக்கணும்னு நினைச்சா, அதுக்கு நான்தான் ஆளா...?" என்றாள்.

இவர்கள் இருவரும் சண்டை பிடிப்பதைப் பார்த்து, சேதுபதியும், வந்தனாவும் என்ன விஷயம் என்று கேட்க... சஞ்சனா தன்னிடம் சொன்னது அத்தனையும் ரஞ்சனா சொல்ல...

வந்தனா, சஞ்சனாவைப் பார்த்து முறைத்தவர், "எங்க மேல ரொம்ப அக்கறை மாதிரி எதுக்கு இந்த வேஷம்? நீயா உனக்கு மாப்பிள்ளை பார்க்கிற அளவுக்கு வந்திட்ட... இருந்தாலும் உனக்கு இவ்வளவு திமிர் இருக்கக் கூடாது..." என்று அவளைத் திட்ட...

சேதுபதி எதையோ யோசித்தவர், "அவ மனசுல இப்படி ஒரு எண்ணம் இருக்கும் போது... நாம அதுக்கு முயற்சி செஞ்சு பார்க்கிறது ஒண்ணும் தப்பு இல்லை. நாளை அவ நம்மைக் குறை சொல்லக் கூடாது. அவ அதையே மனசுல நினைச்சிட்டு இருந்தா.... அவ வேற இடத்தில கல்யாணம் பண்ணினாலும் நிம்மதியா இருக்க

மாட்டா... அதனால் நான் இன்னைக்கு ஊருக்குப் போறதுக்கு முன்னாடி சம்பந்திகிட்ட பேசுறேன்...” என்றார்.

அவள் அப்பா சொன்னதைக் கேட்டதும் சஞ்சனாவின் முகம் மலர்ந்தது. ரஞ்சனாவிற்கு அவள் அப்பா கேட்பதால் எதுவும் மாறிவிடப் போவது இல்லை என்று தெரியும். இருந்தாலும் அவர்கள் ஆசைக்குக் கேட்டுப் பார்க்கட்டும், சஞ்சனாவும் நேரடியாக அவர்களின் மறுப்பைக் கேட்டு விட்டால், பிறகு அமைதியாகி விடுவாள் என்று நினைத்தாள். அதனால் அவள் அப்பா சொன்னதுக்குச் சரி என்றாள்... இதனால், தான் ஆதியின் வெறுப்பைப் பெறப் போவது தெரியாமல்.

ஆரு வெளியே சென்றுவிட்டு வந்தவள், நேராக அவள் அறைக்குச் சென்று சூர்யாவை செல்லில் அழைத்தாள். ‘இன்று முழுவதும் அவனுடன் பேச முடியவில்லை, இப்போதாவது பேசுவோம்...’ என்று நினைத்து அழைத்தாள்.

அங்கே சூர்யா குளித்துக் கொண்டிருந்தான். இன்றைக்கு வீடு முழுவதும் சுத்தம் செய்ததால் திரும்பக் குளிக்கச் சென்றவன், செல்லை ரூமில் வைத்திருந்தான். அர்ஜுன், சூர்யாவின் மொபைல் சத்தம் கேட்டு உள்ளே சென்றவன், ‘யார் அழைப்பது...?’ என்று செல்லைக் கையில் எடுத்துப் பார்த்தான்.

மொபைலில் ஹனி காலிங் என்று வந்தது. ‘யார் அது ஹனி...? நமக்குத் தெரியாத ஹனி...? மாப்பிள்ளை யார்கிட்டேயோ மாட்டிக்கிட்டானோ...?’ என்று

நினைத்தவன், புன்னகையுடன் போனை ஆன் செய்து காதில் வைக்க...

அந்தப் பக்கம் ஆரு, “ஹாய் சூர்யா, சாரிப்பா... காலையில இருந்து பேசவே முடியலை. இப்பத்தான் ரிலேடிவ்ஸ் எல்லாம் போனாங்க, அப்புறம் என்ன பண்றீங்க? இன்னைக்கு என்ன சமையல் பண்ணீங்க?” என்று அவள் பேசிக்கொண்டே செல்ல...

அர்ஜுனுக்கு இது ஆருவின் குரல் என்று நன்றாகத் தெரிந்தது. ஆனால், நம்பத்தான் முடியவில்லை. அந்தப் பக்கம் ஆரு, “சூர்யா... என்ன பேசவே மாட்டேங்கிறீங்க?” என்று கேட்க... அர்ஜுனால் அதிர்ச்சியில் இருந்து வெளியே வர முடியவில்லை. ஆரு மீண்டும், மீண்டும், “ஹலோ சூர்யா, கேட்குதா... கேட்குதா...?” என்று கேட்டதும்,

அர்ஜுன் கோபத்தை அடக்கி, “சூர்யா குளிக்கிறான், நீங்க அப்புறம் பேசுங்க மேடம்...” என்று சொல்லிவிட்டுப் போனை வைத்தான். அர்ஜுனின் குரல் கேட்டு ஆரு உறைந்து நின்றாள்.

27

சூர்யா குளியல் அறையில் இருந்து வெளியே வந்ததும், தன் செல்லைத்தான் முதலில் எடுத்துப் பார்த்தான். அவன் குளியல் அறையில் இருந்தபோது அவனுக்கு செல் அடிக்கும் சத்தம் கேட்டது. அதனால் ஆரு அழைத்திருப்பாளோ என்று ஆர்வமாக வந்து

எடுத்துப் பார்த்தான். ஆனால், அதில் எதுவும் மிஸ்டு கால் இல்லாததால் குழம்பியவன்... அப்போதுதான் அர்ஜுனைத் தேட... அவன் வீட்டிலேயே இல்லை.

'சரி, எங்கோ வெளியே போய் இருக்கிறான்...' என்று நினைத்த சூர்யா, ஆருவுடன் பேசுவோம் என்று அவளை அழைத்தான்.

ஆரு போனை எடுத்தவள், "சூர்யா..." என்று அழ ஆரம்பிக்க... சூர்யாவிற்கு எதற்கு அழுகிறாள் என்று ஒன்றும் புரியவில்லை. சூர்யா, "என்ன ஆச்சு ஆரு...?" என்று பதற... ஆரு அழுதாளே தவிர ஒன்றும் சொல்லவில்லை.

"காரணத்தைச் சொல்லிட்டு அழு ஆரு. நீ இப்படி அழுதா நான் என்னன்னு நினைக்கிறது...?" சூர்யா கோபப்பட... ஆரு அதற்கும் அழுதவள், "அர்ஜுன்... அர்ஜுன்..." என்று மட்டும் திரும்பத் திரும்பச் சொல்ல...

"அர்ஜுன் உன்னைத் திட்டினானா...?" என்று சூர்யா கேட்க...

"இல்ல... நான் உங்களுக்குப் போன் பண்ணேன், அர்ஜுன்தான் போனை எடுத்தான். அது தெரியாம நான் பேச... அவனுக்கு நம்ம விஷயம் தெரிஞ்சிடுச்சு... எனக்குப் பயமா இருக்கு..." என்று ஆரு மீண்டும் அழுதாள்.

அப்போதுதான் சூர்யாவிற்குப் புரிந்தது. அவன் குளியல் அறையில் இருந்தபோது செல் அடித்தது நிஜம் தான். அர்ஜுன்தான் எடுத்திருக்கிறான், கண்டிப்பாக ஹனி

என்ற பெயரையும் பார்த்திருப்பான் என்று புரிந்தது. ஆனால், இனி என்ன செய்வது என்றுதான் தெரிய வில்லை.

'தான் முதலிலேயே தங்கள் விஷயத்தை அர்ஜுனிடம் சொல்லி இருக்க வேண்டும். அவனுக்குக் கண்டிப்பாக அதிர்ச்சியாக இருந்திருக்கும்...' என்று நினைத்தவன், அதையே ஆருவிடம் சொல்லி, "நீ அவனுக்குப் போன் செஞ்சு பேசு... என்னைக்கு இருந்தாலும் அவனுக்குத் தெரியப் போற விஷயம்தான். அதனால அழாம பேசு, நானும் அவன்கிட்ட பேசுறேன்..." என்று சொல்லி போனை வைத்தான்.

ஆருவுக்குப் பயமாக இருந்ததால்... அவள் அர்ஜுனை அழைக்கவில்லை. சூர்யா, அர்ஜுனுக்காகக் காத்திருக்க...

அர்ஜுன் இரவு நேரம் கழித்து வந்தவன், சூர்யாவை நிமிர்ந்தும் பார்க்கவில்லை. நேராகச் சென்று படுத்து விட்டான்.

சூர்யா சாப்பிட அழைக்க... அர்ஜுன் வெளியே சாப்பிட்டு விட்டதாகச் சொல்லித் திரும்பிப் படுத்துக் கொண்டான். சூர்யா, அர்ஜுன் இப்படி நடந்து கொள்வான் என்று எதிர்பார்க்கவில்லை.

ஏன் இன்று அர்ஜுன் தன்னை அழைக்கவில்லை என்று நினைத்த மீரா, அவளே அவனை அழைக்க... "மீரா, நான் ரொம்ப டயர்டா இருக்கேன், நாளைக்குப் பேசுறேன்."

அர்ஜுன் சொல்ல... மீராவும் சரி என்றாள். அவளுக்கு எதுவோ சரி இல்லை என்று புரிந்தது, அர்ஜுன் இதுவரை இப்படிப் பேசியது இல்லை.

ரஞ்சனாவின் பெற்றோர் ஊருக்குச் செல்வ தால் கணேசனும், ஆதியும் கடையில் இருந்து சீக்கிரம் வீட்டுக்கு வந்தனர். எல்லோரும் சேர்ந்து இரவு உணவு அருந்திவிட்டு ஹாலில் அமர்ந்து பேசும்போது, ரஞ்சனாவின் அப்பா கணேசனிடம் மெதுவாக, "நாங்க சஞ்சனா இந்த வருஷம் படிப்பை முடிச்சதும் கல்யாணம் பண்ணிடலாம்னு பார்க்கிறோம். உங்க வீட்லேயும் கல்யாண வயசுல ஒரு மாப்பிள்ளை இருப்பதால்... எதுக்கும் உங்ககிட்ட ஒரு வார்த்தை சொல்லிடலாம்னு..." என்று அவர் இழுக்க...

அவர் சொன்னதைக் கேட்ட கணேசன் குடும்பத்தினர் அதிர்ந்தனர்.

ஆதி, ரஞ்சனாவை முறைக்க... ஆரு, 'என்ன ஆகப் போகுதோ...?' என்று டென்ஷனாக இருந்தாள்.

"நாங்க அர்ஜுனுக்குக் கல்யாணம் பண்ண எப்படியும் மூணு வருஷமாவது ஆகும். முதல்ல ஆரு வுக்குப் பண்ணிட்டு, ரெண்டு வருஷம் கழிச்சுத்தான் அவனைப் பற்றி யோசிக்கணும். அதனால நீங்க காத்திருக்க வேண்டாம்."

கணேசன் நாசுக்காகத் தங்கள் விருப்ப மின்மையைச் சொல்ல... சஞ்சனாவின் முகம் வாடி விட்டது.

அதைக் கவனித்த அவளின் அப்பா, "இல்லை, சஞ்சனாவை அர்ஜுனுக்குச் செய்ய உங்களுக்கு விருப்பம் என்றால், நாங்க காத்திருக்கோம்..." என்றார்.

இதுக்கு மேலே எப்படி மறுப்பைச் சொல்றது என்று எரிச்சல் அடைந்த கணேசன், வித்யாவைப் பார்க்க... அவரின் பார்வையைப் புரிந்த வித்யா, "அர்ஜுனும், சஞ்சனாவும் ஒரே வருஷம் பிறந்திருக்காங்க. ரெண்டு பேருக்கும் பதினொரு மாசம்தான் வித்யாசம். கல்யாணம் பண்ண குறைஞ்சது ரெண்டு வருஷம் வித்தியாசம் இருந்தாத்தான் நல்லா இருக்கும்..." என்றார்.

இப்போது சஞ்சனாவின் அப்பாவால் எதுவும் பேச முடியாமல் போய் விட்டது. "நீங்க சொல்றது சரிதான். சஞ்சனாவை என் சம்சாரத்தோட அண்ணன் வீட்ல கேட்கிறாங்க..." என்று சொல்ல...

கணேசனும், வித்யாவும் சேர்ந்து, "நல்லது, நீங்க அங்கேயே செய்யுங்க..." என்று முடித்துவிட்டனர்.

சஞ்சனாவின் பெற்றோருக்கு இப்போது நன்றாகப் புரிந்துவிட்டது. அர்ஜுனுக்குச் சஞ்சனாவை செய்ய அவர்களுக்குத் துளியும் விருப்பம் இல்லை என்று. சஞ்சனாவின் முகத்தைப் பார்த்து ஆருவுக்குச் சிரிப்பு வர... அதை அவள் கஷ்டப்பட்டு அடக்குவதைப் பார்த்து சஞ்சனாவுக்கு ஆத்திரம் வந்தது.

'நானும் பார்க்கிறேன், உங்க அண்ணனுக்கு எந்த உலக அழகி வரான்னு...' என்று மனதில் நினைத்தவள், வேகமாக அறைக்குள் சென்று பெட்டியை எடுத்துக்

கொண்டு வெளியே வந்து தன் பெற்றோரை அழைக்க... அவர்கள் இன்னும் நேரம் இருக்கிறது என்று சொல்லியும் கேட்காமல், அவர்களை இழுத்துக் கொண்டு சென்றாள். அவர்களும் சஞ்சனா செய்த கலாட்டவில், சரியாக விடை பெறாமலே கிளம்பிச் சென்றனர்.

சஞ்சனாவின் நடவடிக்கையைப் பார்த்த கணேசனும், வித்யாவும்... 'நல்ல வேளை... ரஞ்சனா இந்தப் பெண்ணைப் போல் இல்லை...' என்று நிம்மதி அடைந்தனர்.

ஆதி தங்கள் அறைக்கு வந்தபோது... ரஞ்சனா குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தாள். அவள் கண்கள் கண்ணீரால் நிறைந்து இருந்தன.

அதைப் பார்த்த ஆதிக்குக் கோபம் வர, "நீ இப்ப எதுக்கு அழற...? உனக்குத்தான் அர்ஜுன், மீராவை லவ் பண்றான்னு தெரியும் இல்ல... அப்புறம் எதுக்கு உங்க அப்பாவை சஞ்சனாவுக்கு அர்ஜுனை மாப்பிள்ளை கேட்க விட்ட, உனக்குத் தெரியாதுன்னு சொல்லாதே..." என்றான்.

"அத்தைக்கு இன்னும் அர்ஜுன் - மீரா விஷயம் தெரியாது. எங்க வீட்ல சொன்னா... அவங்க காதுக்குப் போயிடும்னுதான் சொல்லலை... அவங்களே நேர்ல பேசிக்கட்டும்னு நினைச்சேன். இது ஒரு தப்பா...? நீங்க ஏன் என்னை எப்பவும் அர்ஜுன் - மீராவை நான்தான் பிரிக்கப் போற வில்லி மாதிரியே பேசுறீங்களோ தெரியலை.

"எனக்கு என் தங்கை இந்த வீட்டுக்கு மருமகளா வரணும்னு ஆசைதான், இல்லைன்னு சொல்லலை. ஆனா... அர்ஜுனுக்கு மீராவைத்தான் பிடிச்சிருக்குன்னு தெரிஞ்சதுக்கு அப்புறம் நான் என்னை மாத்திக்கிட்டேன்..." என்றாள் ரஞ்சனா.

"முழு மனசோட நீயே ஏத்துக்கிட்டதுக்கு அப்புறம், எதுக்கு அழற?" ஆதி கேட்க...

"அது எங்க அப்பா, அம்மாவை நினைச்சு. சஞ்சனா தனக்கு ஒண்ணு கிடைச்சிட்டா எப்படிச் சந்தோஷத்துல தலை, கால் புரியாம ஆடுவாளோ... அதே மாதிரி அவ நினைச்சது நடக்கலைன்னாலும், எல்லாரையும் ரொம்ப வேதனைப்படுத்துவா... இனி அவங்களை என்ன பாடு படுத்தப் போறாளோ...? அதை நினைச்சுத்தான் கவலைப் பட்டேன், போதுமா...?"

சொல்லிவிட்டு ரஞ்சனா மேலும் அழுதாள்.

ஆதி சென்று ரஞ்சனாவை அணைத்தவன், அவள் முதுகை வருடி... "சாரிடி, தெரியாமப் பேசிட்டேன். உங்க அம்மா அப்பாவை நாம பார்த்துக்கலாம்னு நான் ஏற்கெனவே சொல்லி இருக்கேன். நீ வீணா மனசைப் போட்டுக் குழப்பிக்காதே... சஞ்சனா கல்யாணம் முடியட்டும், அவ எப்படி இருக்கான்னு பார்த்துட்டு முடிவு எடுக்கலாம்."

ஆதி, ரஞ்சனாவைத் தேற்ற... ரஞ்சனாவும் சமாதானம் அடைந்தாள்.

ரஞ்சனாவின் மடியில் இருந்த ஐஷு, அது பாட்டுக்குப் பால் குடித்துக் கொண்டிருந்தது.

அதைப் பார்த்ததும் ஆதிக்குச் சிரிப்பு வர, "இங்க பாரு... அப்பாவும், அம்மாவும் சண்டை போட்டாலும்... கண்டுக்காம ஒண்ணு இங்க அதோட வேலையைக் கரெக்டா பண்ணுது..." என்றவன், தொடர்ந்து, "ஐஷு மேடம்... நாளைக்கும் கொஞ்சம் மிச்சம் வைங்க..." என்று குழந்தையைக் கிண்டல் செய்ய...

"குழந்தையைப் பார்த்து கண்ணு வைக்காதீங்க..." என்று ரஞ்சனா சிணுங்கினாள்.

மறுநாள் காலை எழுந்த அர்ஜுன், எப்போதும் போல் சூர்யாவுடன் பேசினான்.

அவன் சூர்யாவிடம் அவர்கள் காதல் விஷயம் தெரிந்த மாதிரியே காட்டிக் கொள்ளாமல், கிளம்பிக் கல்லூரிக்குச் செல்ல, சூர்யாவுக்கு, இப்போது என்ன செய்வது என்று புரியவில்லை.

அன்றும் அர்ஜுனாக மீராவை அழைக்கவில்லை. மீராதான் அர்ஜுனை அழைத்தாள்.

"என்ன ஆச்சு அர்ஜுன்? என்கிட்டே சொல்ல மாட்டீங்களா...?" மீரா மெதுவாகக் கேட்க...

"சூர்யாவும், ஆருவும் லவ் பண்றாங்க... உனக்குத் தெரியுமா?" என்று அர்ஜுன் பதிலுக்குக் கேட்க...

மீரா, "அப்படியா...?" என்று சந்தோஷப்பட்டவள், "எனக்கு ஆதி அத்தான் கல்யாணத்தில இருந்தே சூர்யா மேல டவுட்தான்..." என்றாள்.

"ஆரு உன் கிட்ட இதைப் பத்தி எதுவும் சொல்ல லையா...?"

"ம்ம்... இல்லை, ஆனா நான் அவங்க பேசிக்கிட்டதை வச்சு இதை எதிர்பார்த்தேன். நீங்க ஏன் அர்ஜுன் இதுக்குப் போய் டல்லா இருக்கீங்க...?"

"நான் உன்னை லவ் பண்றேன்னு உன்கிட்ட சொல்றதுக்கு முன்னாடி ஆதிகிட்டேயும், ஆருகிட்டேயும் தான் சொன்னேன். ஆனா ஆரு..." என்று அர்ஜுன் சொல்லிக்கொண்டு இருக்கும் போதே, மீரா குறுக்கிட்டு,

"அர்ஜுன்... நீங்க வேற டைப், ஆரு வேற டைப். அவளுக்கு உங்ககிட்ட சொல்ல பயமா இருந் திருக்கலாம்..." என்றாள்.

"நானும் அதேதான் மீரா சொல்றேன். ஆரு என்ன தான் வாய் பேசினாலும், அம்மா ஒரு அதட்டு அதட்டினா பயந்து அவங்க பேச்சைத்தான் கேட்பா... அவ அவளோட லவ்ல உறுதியா இருப்பாளா...? இவளால சூர்யாதான் பாதிக்கப்படுவான், அதுதான் எனக்குக் கவலையா இருக்கு..." என்றான் அர்ஜுன்.

அர்ஜுன் சொல்வது உண்மை என்பதால்... சிறிது நேரம் யோசித்த மீரா, "நீங்க சொன்னா உங்க அம்மா கேட்க மாட்டாங்களா அர்ஜுன்...?" என்று கேட்க...

"ம்ம்... தெரியலை மீரா,.. என்ன சொல்வாங்கன்னு. ஆனா... நம்ம விஷயம் தெரிஞ்சா... நம்மைப் பார்த்து தான் ஆரு கெட்டுப் போயிட்டான்னு கண்டிப்பா சொல் வாங்க..." என்றான் அர்ஜுன் யோசனையாக.

"இப்ப என்ன அர்ஜுன் பண்றது...?" என்று மீரா கவலைப்பட...

"சரி, அதை அப்புறம் பார்ப்போம். நீ இப்ப எனக்குச் சமையல் சொல்லித் தரணுமே..." என்றான் அர்ஜுன் சிரித்துக் கொண்டே.

"நீங்க எதுக்குச் சமைக்கணும்? அதுதான் சூர்யா அண்ணன் பண்ணுவாங்களே..." என்றாள் மீரா.

"இத்தனை நாள் அவன் என்னோட ப்ரெண்ட் மட்டும்தான், இனி வீட்டு மாப்பிள்ளையும் கூட. அவனை மட்டும் எப்படி வேலை வாங்குறது? நானும் செய்ய வேண்டாமா...? அவன் வெளியே போய் இருக்கான். அவன் வர்றதுக்குள்ள சமைக்கிற மாதிரி ஏதாவது சொல்லு...."

"நீங்க சொல்றது சரிதான். நான் உங்களுக்குச் சமையல் சொல்லித் தரேன். நீங்க இன்னைக்குப் பெப்பர் சிக்கன் பண்ணுங்க, ரொம்ப ஈஸி..."

மீரா உற்சாகமாகச் சொல்ல...

"ஏய்... நீ ஐயர் வீட்டுப் பொண்ணுதானே, எனக்கே சந்தேகமா இருக்கு..." என்றான் அர்ஜுன்.

அவன் சொன்னதைக் கேட்டுச் சிரித்த மீரா, "நான் டி.வி.ல பார்த்த ரெசிபிதான் சொல்லப் போறேன், நானா சாப்பிடப் போறேன்...?" என்றாள்.

"யாருக்குத் தெரியும், உங்க அப்பாவுக்குத் தெரியாம, உள்ள தள்றியோ என்னவோ..." அர்ஜுன், மீராவைக் கிண்டல் செய்ய... அதற்கு மீரா பதில் கொடுக்க... என்று இருவரும் ஒருவரை ஒருவர் கிண்டல் செய்து பேசினர்.

பின் இருவரும் ஸ்கைப்பில் வர... சமையல் மேடையில் லேப்டாப்பை வைத்து விட்டு, மீரா சொல்லச் சொல்ல... அர்ஜுன் பெப்பர் சிக்கன், ரசம் மற்றும் சாதம் செய்தான்.

அர்ஜுன் சமையல் முடிக்கும் போது அங்கே வந்த சூர்யா, 'தான் செய்ததைச் சாப்பிடப் பிடிக்காமல்தான், அர்ஜுன் இப்படிச் செய்கிறான்...' என்று நினைத்து, "அர்ஜுன், எனக்கு என்னடா குறை? நான் உன் தங்கையை நல்லாப் பார்த்துக்க மாட்டேனா...? நீ ஏன்டா இப்படிப் பண்ற?" என்று சண்டைக்குச் செல்ல... அவன் சொன்னதைக் கேட்டு அர்ஜுன் விழுந்து விழுந்து சிரிக்க... மீராவும் அடக்க முடியாமல் சிரித்தாள்.

சூர்யாவின் கோபம் எல்லை மீற... அவன் சென்று அர்ஜுனின் சட்டையைப் பிடிக்க... "சூர்யா, ஏன் இப்படிப் பண்றீங்க...?" மீரா சத்தமாகக் கேட்க...

"பின்ன... இவன் மட்டும் லவ் பண்றான், ஆனா நாங்க லவ் பண்ணா தப்பா...?" சூர்யா கோபப்பட...

"அர்ஜுன் அப்படிச் சொன்னாங்களா சூர்யா...? நீங்களும், ஆருவும் லவ் பண்றதை அவங்ககிட்ட நீங்க சொன்னீங்களா...? அவங்களுக்காகத் தெரியும் போது, கொஞ்சம் ஷாக்கா இருக்கும்தானே...?"

மீரா சொல்ல, சூர்யா மௌனமாக இருந்தான்.

"அவங்க உங்க சமையலைச் சாப்பிடக் கூடாதுன்னு இன்னைக்குச் சமைக்கலை. நீங்க இனி அவங்க வீட்டு மாப்பிள்ளை, உங்களை மட்டும் வேலை செய்ய விடுறது தப்புன்னுதான் அவங்க இன்னைக்குச் சமையல் செஞ்சாங்க..." மீரா அர்ஜுனுக்காகப் பரிந்து பேச...

சூர்யா சென்று அர்ஜுனை அணைத்துக் கொண்டவன், "சாரி அர்ஜுன், ரெண்டு நாளா நீ பண்ண டென்ஷன்ல தப்பா நினைச்சிட்டேன்..." என மன்னிப்புக் கேட்க....

"பரவாயில்லை, விடுடா. நான் உன்னை டென்ஷன் பண்ணது உண்மைதானே.." என்றான் அர்ஜுன்.

"போதும், ரெண்டு பேரும் பாசத்துல பொங்கினது. போய் நல்லா சிக்கனை வெட்டுங்க."

மீரா சிரித்துக் கொண்டே சொல்ல...

"இன்னைக்குச் சிக்கனா...?" என்று சூர்யா வாயைப் பிளக்க...

"மீராதான் எப்படிச் செய்யணும்னு சொல்லித் தந்தா..." அர்ஜுன் சொல்ல...

சூர்யா சென்று சிறிது சிக்கனை எடுத்து வாயில் போட்டுப் பார்த்தவன், "ம்ம்... சூப்பர் மாமி, கலக்கறேள்...." என்று மீராவைக் கிண்டல் செய்ய...

"ரெண்டு பேரும் போய்ச் சாப்பிடுங்க..." என்று சொல்லி மீரா தொடர்பைத் துண்டித்தாள்.

அர்ஜுன், சூர்யாவோடு சகஜமாக இருந்தாலும், அவனாக ஆருவை அழைத்துப் பேசவில்லை. அதேபோல் ஆருவும் பயந்து கொண்டு அர்ஜுனை அழைக்கவில்லை. அர்ஜுன், வித்யாவிடம் மட்டும் செல்லில் பேசிவிட்டு வைத்தான்.

மூன்று நாள் பொறுத்த ஆரு, நான்காவது நாள் அர்ஜுனை அழைக்க... அவன் எடுத்து, "சொல்லு ஆரு..." என்றதும்,

"நீ ஏன்டா என்கிட்டே பேசமாட்டேங்கிற...? நீ மட்டும் லவ் பண்ற, நான் லவ் பண்ணா தப்பா...? உனக்குப் பிடிக்கலைன்னா நான் வேணா சூர்யாகிட்ட வேண்டாம்னு சொல்லிடவா...?" என்று உளற... அர்ஜுனுக்குக் கோபம் தலைக்கு ஏறியது.

"இதோ... இதுக்குத்தான், நீ லவ் பண்றேன்னு தெரிஞ்சதும் நான் பயந்தேன். நான் ரெண்டு நாள் பேசலைன்னதும், நீ சூர்யாகிட்ட வேண்டாம்னு சொல்வியா...? அப்ப அம்மாவுக்குத் தெரிஞ்சு அவங்க உன்கிட்ட பேசாம இருந்தா... நீ உடனே சூர்யாவைத் திரும்பியும் பார்க்க மாட்ட... அப்படித்தானே...? உனக்குக்

காதல்னா விளையாட்டாப் போயிடுச்சு இல்லை..” அவன் ஆருவைத் திட்ட...

“இப்ப என்னதான் அர்ஜுன் என்னைப் பண்ணச் சொல்ற...?” ஆரு கேட்க....

“அது உனக்குத்தான் தெரியணும். லவ் பண்ணத் தெரிஞ்சிது இல்ல... லவ் பண்ணவனைக் கல்யாணம் பண்ணவும் தெரியணும்.” அர்ஜுன் சொல்ல...

“அப்ப நீ எனக்கு ஹெல்ப் பண்ண மாட்ட... சரி போ, நானே பார்த்துக்கிறேன். உன்னோட தயவு இல்லாம நான் சூர்யாவைக் கல்யாணம் பண்ணிக் காட்றேன்...” என ஆரு, அர்ஜுனுக்குச் சவால் விட்டுப் போனை வைத்தாள்.

அர்ஜுனுக்கு ஆருவின் மீது கோபம் இல்லை. ஆனால் தைரியமாகக் காதலிக்கத் தெரிந்தது போல்... அதை வீட்டில் சொல்லிக் கல்யாணம் செய்து கொள்ளவும் தெரிய வேண்டும் என்று நினைத்தான்.

என்னதான் அவர்களுக்குத் தான் துணை நின்றாலும், அம்மா, ஆருவிடம் கேட்கும் போது... பயத்தில் அவள் மாற்றிச் சொல்லிவிட்டால், எல்லாம் வீணாகிவிடும். ஏற்கெனவே வித்யாவிற்குக் காதல் மீது அவ்வளவு நம்பிக்கை இல்லை. அதனால் முதல் அடியை அவளே எடுத்து வைக்கட்டும், நாம் அடுத்துப் பார்த்துக் கொள்வோம் என்று நினைத்தவன், அதன் பிறகு அவளிடம் சூர்யாவைப் பற்றியோ, அவர்கள் காதல்

பற்றியோ பேசவில்லை. பொதுவாகப் பேசிவிட்டு வைத்துவிடுவான்.

இப்போது அர்ஜுனும், சூர்யாவும் கல்லூரியில் ப்ராஜெக்ட் செய்து கொண்டிருந்ததால், அவர்களுக்கு முன்பு மாதிரி நேரமும் இல்லை. மீராவுக்கும் கல்லூரி ப்ராஜெக்ட் ஆரம்பிக்கப் போகிறது. அதனால் தினமும் இரவு சிறிது நேரம் செல்லில் பேசிவிட்டு, வாரத்தில் ஒரு முறைதான் ஸ்கைப்பில் பார்த்துக் கொண்டனர்.

அர்ஜுன், ஆரு இடையே நடந்த வாக்குவாதம் சூர்யாவிற்கோ, மீராவுக்கோ தெரியாது.

28

எட்டு மாதங்களுக்குப் பிறகு...

சென்னை விமான நிலையம். சிங்கப்பூரில் இருந்து வந்து தரை இறங்கிய விமானத்திலிருந்து அர்ஜுனும், சூர்யாவும் முகம் கொள்ளாப் புன்னகையுடன் வெளியே வந்தனர். அவர்கள் இருவர் முகத்திலும் நல்லபடியாகப் படிப்பை முடித்து, தாய் நாட்டிற்குத் திரும்பி வந்துவிட்டோம் என்ற சந்தோஷம் இருந்தது.

அர்ஜுன் ஓடி வந்து வித்யாவைத் தூக்கிச் சுற்றினான். “டேய்... கீழ விடுடா, பயமா இருக்கு.”

வித்யா சொன்னதும்தான் கீழே இறக்கி விட்டான். அடுத்து தன் தந்தையை அனைத்துக் கொண்டு நலம்

விசாரித்தவனை, ஆதி வந்து இறுக அணைத்துக் கொண்டான்.

அர்ஜுன், ரஞ்சனாவைப் பார்த்து, "எப்படி இருக்கீங்க அண்ணி...?" என்று கேட்டுக் கொண்டே... அவளிடம் இருந்த ஜஷுவை வாங்கித் தூக்கிப் போட்டுப் பிடிக்க... அது தன் பொக்கை வாய் காட்டி அழகாகச் சிரித்தது. அதில் மயங்கிய அர்ஜுன், "செல்லக் குட்டி, எப்படிடா இருக்கீங்க? பாப்பாவைப் பார்க்க எவ்வளவு நாள் ஆகிடுச்சு, பாப்பா வளர்ந்திட்டாங்க..." என்று கொஞ்சிக் கொண்டிருந்தான்.

அர்ஜுன், ஐஸ்வர்யாவைக் கொஞ்சுவதைப் பார்த்து அனைவரும் ரசிக்க... ஆருவிற்கு ஆத்திரமாக வந்தது. அர்ஜுன் வந்ததில் இருந்து தன்னைக் கண்டு கொள்ளவில்லை என்று அவளுக்குக் கோபம். ஆரு ஒரு கண்ணை அர்ஜுன் மீதும், ஒரு கண்ணைச் சூர்யா மீதும் வைத்திருந்தாள். அதே போல் சூர்யாவும் அவன் வீட்டு ஆட்களுடன் பேசிக்கொண்டிருந்தாலும், பார்வை அடிக்கடி ஆருவை வருடிவிட்டே சென்றது.

சிறிது நேரம் பொறுத்துப் பார்த்த ஆரு, அவளே அர்ஜுனின் அருகில் சென்று... அவன் தோளைத் தட்ட... அர்ஜுன் திரும்பிப் பார்த்தவன், அங்கே ஆரு கண் கலங்கி நிற்பதைப் பார்த்ததும், அவளைத் தோளோடு சேர்த்து அணைத்து ஜஷுவிடம், "நம்ம வீட்ல உனக்கு முன்னாடி ஒரு பேபி இருக்கு, அது யாருன்னு தெரியுமா? உன்னோட அத்தைதான் அது. இன்னும் உங்க அத்தை

பேபிதான்..." என்று கிண்டல் செய்ய... ஆருவின் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

இந்த இரண்டு வருடத்தில் அர்ஜுனின் குடும்பத்திற்கும், சூர்யாவின் குடும்பத்திற்கும் இடையே நெருங்கிய நட்பு ஏற்பட்டிருந்தது. அர்ஜுன், சூர்யாவின் வரவேற்புப் படலம் முடிந்ததும், இரண்டு குடும்பமும் தங்கள் வீட்டிற்குக் கிளம்பினர்.

நீங்கள் எல்லோரும் ஆவலாக எதிர்பார்க்கும் மீரா இப்போது சென்னையில் இல்லை.

அர்ஜுன் வீட்டிற்கு வந்ததும் குளித்தவன், பின் எல்லோரோடும் சேர்ந்து பேசி அரட்டை அடித்துக் கொண்டு சாப்பிட்டான். சாப்பிட்டதும்... "கொஞ்சம் வெளியே போயிட்டு வரேன்மா..." என்று கிளம்பி வெளியே சென்றான்.

அர்ஜுன் சென்றது பெசன்ட் நகர் பீச்சுக்கு. 'இங்கு மீராவோடு எத்தனை தடவை வந்திருக்கோம்...?' என்று நினைத்துப் பார்த்தவனின் மனம் மீராவிற்காக ஏங்கியது.

மீராவுக்குக் கல்லூரி கேம்பஸில், பெங்களூரில் இருக்கும் ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் வேலை கிடைக்க... மீரா அங்கே சென்று விட்டாள். அவள் சித்தி யிடம், 'படித்து முடிக்கும் வரை மட்டும்தான் இந்த வீட்டில் இருப்பேன், பின் வேலை கிடைத்ததும் சென்று விடு வேன்...' என்று சொன்னதற்கு ஏற்ப... வெளியூரில் வேலை வாங்கிக் கொண்டு சென்றுவிட்டாள்.

மீனாட்சி முன்பு மாதிரி அவளிடம் வெறுப்பைக் காட்டவில்லை என்றாலும், மீராவிற்குத் தான் அந்த வீட்டில் வேண்டாத விருந்தாளி என்ற எண்ணம் போகவில்லை.

அவளது தந்தை தடுத்ததைக் கூட அவள் பொருட்படுத்தவில்லை.

"உனக்கு இந்த வீட்ல இருக்க விருப்பம் இல்லைன்னு எனக்குத் தெரியும் மீரா. உனக்கு மாப்பிள்ளை பார்ப்போமா, ஒரு நல்ல டாக்டர் வரன் வந்திருக்கு..." ராம்நாத் ஆர்வமாகக் கேட்க...

"வேண்டாம், இன்னும் ரெண்டு வருஷம் போகட்டும், பார்க்கலாம்..." என்றாள் மீரா எங்கோ பார்த்துக் கொண்டு.

"மீரா, உனக்கு யாரையாவது பிடிச்சிருந்தா தைரியமா சொல்லு." ராம்நாத் சொல்ல...

மீராவும் இதைவிட்டால் வேறு நல்ல சந்தர்ப்பம் கிடைக்காது என்று நினைத்தவள், "எனக்கு அர்ஜுனைப் பிடிச்சிருக்கு, நான் அர்ஜுனை விரும்புறேன்..." என்றாள்.

"அர்ஜுனா...? நல்ல பையன்தான், குடும்பமும் நல்ல குடும்பம். ஆனா... நம்மவங்க இல்லை..." ராம்நாத் இழுக்க... மீரா அவரைப் பார்த்து முறைத்தாள்.

அவளின் பார்வையின் அர்த்தத்தை உணர்ந்த ராம்நாத், "நான் காதலுக்கு எதிரி இல்லை மீரா... நான் என்னோட அம்மாவுக்குச் சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கேன், உனக்குப் பிடிச்ச வாழ்க்கையை

ஏற்படுத்தித் தர்றதா... அதோட எனக்கும் அர்ஜுனைப் பிடிச்சிருக்கு. நான் அவங்க வீட்ல பேசட்டுமா...?" என்றார்.

"இப்ப வேண்டாம்... அர்ஜுனோட தங்கைக்குக் கல்யாணம் பண்ணணும். அர்ஜுனோட அப்பாவுக்கு ஓ.கே.தான், ஆனா... அவங்க அம்மாவுக்குத் தெரிஞ்சா என்ன சொல்வாங்களோ...?"

மீரா கவலையாகச் சொல்ல...

"அவங்க அப்பாவுக்கு ஓ.கே.ன்னா... அப்புறம் என்ன, உன்னை மாதிரி ஒரு மருமகள் கிடைக்க அவங்க கொடுத்து வச்சிருக்கணும் மீரா..." என்றார் ராம்நாத் பெருமையாக.

மீரா முகத்தில் சந்தோஷம் இல்லை, அவள் மௌனமாக இருந்தாள்.

மீராவின் முகத்தைப் பார்த்த ராம்நாத், "கவலைப்படாதே மீரா... அவங்க உன்னைக் கண்டிப்பா வேண்டாம்னு சொல்ல மாட்டாங்க. அவங்க அம்மா வேண்டாம்னு சொன்னாலும், நான் உங்களுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன்..." என்றார்.

"அதுக்கு அர்ஜுன் ஒத்துக்கமாட்டாங்க... ஏன்... நானுமே ஒத்துக்க மாட்டேன். வித்யா ஆன்ட்டி முழு மனசா என்னை ஏத்துக்காம, நான் அவங்க வீட்டுக்கு மருமகளாப் போறது... எப்பவும் நடக்காது..." என்றாள் மீரா உறுதியாக.

"எதுக்கு மீரா இந்தப் பிடிவாதம்... வீட்ல இருக்கிற எல்லோரும் லவ் மேரேஜுக்கு ஒத்துக்கணும்னா நடக்கிற காரியமா....?"

"வித்யா ஆன்ட்டிக்கு விருப்பம் இல்லாம, நாங்க கல்யாணம் செஞ்சிக்கிட்டா... கடைசி வரை நாங்க ஒரே குடும்பமா சேர்ந்திருக்க முடியாமலே போயிடும். எனக்குப் பிறந்த வீட்ல அமையாத குடும்ப வாழ்க்கை, புகுந்த வீட்லேயாவது அமையணும். அதனால் அவங்க முழு மனசோட சம்மதிக்க, நான் எத்தனை வருஷம் வேணும் னாலும் காத்திருப்பேன்."

பிறந்த வீட்ல அமையாத குடும்ப வாழ்க்கை என்ற மீராவின் வார்த்தை, ராம்நாத்தைக் கூர் வாள் போல் ஆழமாகத் தாக்கியது. சிறிது நேரம் அங்கே கனத்த அமைதி நிலவியது.

"சரி, உன்னோட இஷ்டப்படியே நடக்கட்டும். நீ சொல்லும் போது நான் அவங்க வீட்ல பேசுறேன்..." என்று சொல்லிவிட்டு ராம்நாத், மீராவின் அறையில் இருந்து வெளியே சென்றார்.

வருண் தடுத்தும் மீரா கேட்கவில்லை. மாதம் இருமுறை வந்து சென்னையில் தங்குகிறேன் என்று சொன்னதும்தான் வருண் அவளைப் போக விட்டான். மீராவின் அப்பா அவளை வெளியே தங்க அனுமதிக்கவில்லை. அவள் அலுவலகத்திற்கு அருகில் இருந்த ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில் அவளுக்கு என்று இரு படுக்கை அறைகளைக் கொண்ட ப்ளாட்

வாங்கிக் கொடுத்துவிட்டார். அதில் மீராவுடன் கீர்த்தனாவும் தங்கிக் கொண்டாள். அவளுக்கும் பெங்களூரில்தான் வேலை. அதனால் இருவரும் ஒருவருக்கொருவர் துணையாக இருந்தனர்.

"இத்தனை நாள் ஏதோ எனக்கு உரிமை இல்லாத இடத்தில இருக்கிற மாதிரி இருந்தேன் அர்ஜுன். இனியும் யாருக்கும் பாரமா இருக்க விரும்பலை. இனிமேலாவது சுயமரியாதையோட வாழ ஆசைப்படுறேன். ப்ளீஸ்... என்னைப் புரிஞ்சிக்கோங்க." மீரா சொல்ல... அர்ஜுனும் அவளின் மனதை அறிந்ததால்... அவள் பெங்களூர் செல்லச் சரி என்றான்.

மீரா இப்போதுதான் புதிதாக வேலைக்குச் சேர்ந்திருப்பதால்... விடுமுறை எடுக்க முடியாது. அதனால் சனி, ஞாயிறு விடுமுறைக்குச் சென்னைக்கு வருவதாகச் சொல்லி இருந்தாள். சென்னைக்கு வந்த பின்னும் மீராவைப் பார்க்க முடியவில்லை என்ற ஏக்கம் அர்ஜுனுக்கு இருந்தது. 'இன்னும் நாலு நாள் இருக்கு அவளைப் பார்க்க...' என்று நினைத்துக் கொண்டே எழுந்து வீட்டிற்குச் சென்றான்.

சூர்யா, ஆருவைத் தனியாகச் சந்திக்க ஆசைப்பட்டான். ஆனால் ஆரு அவனுடன் தனியாக வெளியே செல்லப் பயந்தாள். "போனில் மட்டும் நல்லா வாய் பேசுற, நேர்ல வர்றதுக்கு இவ்வளவு தயங்குற...?"

"வரேன் சூர்யா... அப்புறம் வரேன்..." என்று சொல்லி ஆரு அவனை ஏமாற்றிக் கொண்டிருந்தாள்.

அன்று வெள்ளிக்கிழமை. மீரா காலையில் வீட்டில் இருந்து அலுவலகம் கிளம்பும் போதே... இரவு அங்கிருந்தே ரயில் நிலையம் சென்றுவிடுவது என்று தயாராக வந்திருந்தாள். நேரம் ஆக ஆக அவளுக்கு ஒரே பரபரப்பாக இருந்தது. 'அர்ஜுன் சென்னை வந்து மூன்று நாட்கள் ஆகிவிட்டது. தான் இன்னும் அவனைப் பார்க்கவில்லை...' என்று நினைத்தபோது, அவளுக்கே அவள் மீது கோபம் வந்தது.

அவளுக்கு எப்போது அவனைப் பார்ப்போம் என்று இருந்தது. மதியம் வரை பொறுத்தவள், அதற்கு மேல் முடியாமல்... மாலை ஏதாவது விமானம் இருந்தால் அதில் சென்றுவிடுவோம் என்று நினைத்து, உடம்பு முடியவில்லை... அதனால் தான் வீட்டிற்குக் கிளம்புவதாக மேனேஜருக்கு ஒரு மெயில் அனுப்பியவள், டிராவல் ஏஜென்சிக்குப் போன் செய்து, டிக்கெட்டுக்குச் சொல்லி விட்டு வெளியே வந்தாள்.

அவள் அலுவலக வாயிலில் இருந்த படிக்கட்டில் இறங்கும் போது, அர்ஜுன் படியில் மேலேறிக் கொண்டிருந்தான். மீராவால் நம்பவே முடியவில்லை. 'இது அர்ஜுன்தானா...? நாம் சரியாகத்தான் பார்க் கிறோமா...?' என்று தன் கண்ணைக் கசக்கிப் பார்த்தவள், நிஜம்தான் என்று தெரிந்ததும் சிலையாக நின்றாள்.

அர்ஜுன் மேல் படியின் அருகே வந்ததும்தான் மீராவைப் பார்த்தான்.

அவன் முகம் புன்னகையில் விரிந்தது.

அவளைத் தேடி வரும்போது, அவளே எதிரில் வந்து நின்றால் சொல்லவும் வேண்டுமா... சிறிது நேரம் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டே நின்றனர்.

முதலில் சுயநினைவுக்கு வந்த அர்ஜுன், மீராவின் கை பிடித்து அழைத்துக் கொண்டு படியில் இறங்கினான். அவள் அலுவலகத்தை விட்டுத் தள்ளி வந்ததும், ஒரு இடத்தில் நிறுத்தி, அவளை நன்றாகப் பார்த்தவன், "எப்படி இருக்க மீரா? பெங்களூர் வந்ததும் இளைச்சிட்ட..." என்றான்.

மீரா இன்னும் அதிர்ச்சியில் இருந்து மீளவில்லை. அவள் அர்ஜுனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"போதும் மீரா பார்த்தது. நமக்கு மூணு மணிக்கு ட்ரெயின். இப்ப ஒரு மணி ஆகுது... கிளம்பலாமா...? உன்னோட வீட்டுக்குப் போய் திங்ஸ் எதுவும் எடுக்கணுமா, ஆபீஸ்ல சொல்லணுமா...?" அர்ஜுன் வரிசையாகக் கேள்விகளாகக் கேட்க...

"இல்லை, வேண்டாம். நாம போகலாம்..." என்றாள் மீரா.

அர்ஜுன் அந்த வழியாக வந்த ஒரு ஆட்டோவை நிறுத்தி, ரயில்வே ஸ்டேஷன் வருமா என்று கேட்க... ஆட்டோ டிரைவர் வருவதாகச் சொல்ல... இருவரும் ஆட்டோவில் ஏறினர்.

ஆட்டோவில் ஏறியதும்தான் மீரா தெளிந்தாள்.

"அர்ஜுன், நீங்க எப்படி இங்க? நீங்க வரேன்னு சொல்லவே இல்லை, நானும் உங்களைப் பார்க்கத்தான் ஆபீஸ் லீவ் போட்டுட்டு வந்தேன்."

"எனக்கு அங்கே இருக்கவே முடியலை மீரா, அது தான் விடியற்காலை ட்ரெயின் ஏறி வந்துட்டேன்."

மீரா அவன் தோளில் சாய்ந்து கொண்டாள். அர்ஜுன், அவள் தோளைச் சுற்றிக் கை போட்டு அணைத்துக் கொண்டான். இருவரும் ரொம்ப நாள் கழித்து ஒருவரை ஒருவர் நேரில் சந்தித்த மகிழ்ச்சியில், அப்படியே கண்மூடி அந்த நிமிடத்தை மனதிற்குள் ரசித்தனர்.

ஆட்டோ டிரைவர், "ஸ்டேஷன் வந்துவிட்டது..." என்று சொன்னதும்தான் இருவரும் விலகி ஆட்டோவில் இருந்து இறங்கினர். இன்னும் ரெயிலுக்கு நேரம் இருந்ததால், இருவரும் அங்கிருந்த உணவகத்தில் சென்று மதிய உணவு அருந்திவிட்டு, பின் அங்கிருந்த கடைகளைச் சுற்றி வந்து, ரெயிலுக்கு நேரம் ஆனதும் சென்று ரெயிலில் ஏறினர்.

அது ஏசி சேர் கார் கோச். பஸ் சீட் போலவே வரிசையாக இருக்கும். ரெயில் பயணம் முழுவதும் இருவரும் அருகருகே அமர்ந்து, ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து கதை பேசிக்கொண்டே வந்தனர். இருவருக்கும் ஆறு மணி நேரம் போனதே தெரியவில்லை. சென்ட்ரல் ரெயில் நிலையம் வந்ததும், இருவரும் இறங்கி டாக்ஸி

பிடித்து, முதலில் மீரா வீட்டுக்குச் சென்று அவளைப் பத்திரமாக விட்டுவிட்டு, பின் அர்ஜுன் அவன் வீட்டிற்குச் சென்றான்.

இரவு பத்து மணிக்கு வீட்டுக்கு வந்த அர்ஜுனைப் பார்த்து வித்யா, "எங்கடா போயிட்டு வர? காலையில இருந்து ஆளைக் காணோம்..." என்று கேட்க...

"ப்ரெண்ட்ஸோட வெளிய போய் இருந்தேன்மா..." அர்ஜுன் சொல்லிவிட்டு அவன் அறைக்குச் சென்றான்.

அர்ஜுனின் குரல் கேட்டதும், அங்கே அவர்கள் அறையில் இருந்த ஐஷு, துள்ளிக் கொண்டு அர்ஜுனைத் தேடி வந்தாள்.

ஐஷுவைப் பார்த்ததும் அர்ஜுன், "செல்லம், உங்க டேங்க் ஃபில் பண்ணிட்டீங்களா... நாம நம்ம ரூமுக்குப் போகலாமா...?" என்று கொஞ்ச... ஐஷு சந்தோஷமாகச் சிரித்தது.

அர்ஜுன் வந்ததில் இருந்து ஐஷு, அர்ஜுனோடு தான் ஒட்டிக்கொண்டு இருக்கிறாள்.

பின்னே... வீட்டுக்குத் தெரியாமல் ஐஷுவை வெளியே தூக்கிச் சென்று ஐஸ்கிரீம், சாக்லேட் எல்லாவற்றையும் குழந்தைக்குச் சுவைக்கப் பழக்கப் படுத்தி இருந்தான். அதோடு இரவு அவள் எவ்வளவு நேரம் ஆட்டம் போட்டாலும், அவளைத் தூங்க வைக்காமல்... அவளோடு சேர்ந்து ஆட்டம் போடும் சித்தப்பாவை ஐஷுவுக்கு ரொம்பப் பிடிப்பதில் ஆச்சரியம் என்ன?

அர்ஜுன், ஐஷுவோடு அவன் அறைக்குச் செல்ல... அவன் பின்னே ஆதியும், ரஞ்சனாவும் உள்ளே சென்றனர்.

"அர்ஜுன், பெங்களூர்ல ரொம்பக் குளிராமே... அப்படியா...?" ரஞ்சனா கேட்க...

"அவனைப் போய்க் கேட்கிறே, அவனுக்கு எப்படித் தெரியும்?" ஆதி சொல்ல...

"உங்களுக்குத்தான் தெரியாது, அர்ஜுனுக்குத் தெரியும். காலையில பெங்களூர் போயிட்டு, நைட் திரும்பி வர்றவங்களுக்குத் தெரியாதா... அங்கே குளிருதா, இல்லையான்னு...?" ரஞ்சனாவும், ஆதியும் அர்ஜுனை ஜாடை பேச... ஐஷுவோடு விளையாடினாலும் காதை இவர்கள் பக்கம் வைத்திருந்த அர்ஜுன் முகத்தில் அடக்கப்பட்ட சிரிப்பு இருந்தது.

மறுநாள் காலை உணவிற்கே வீட்டுக்கு வந்த மீராவைப் பார்த்ததும் எல்லோரும் மகிழ்ந்தனர். "நீ இங்கே இல்லாம நல்லாவே இல்லை மீரா, நீ இங்கேயே வேலை பார்த்தா என்ன?" வித்யா சொல்ல... மீரா புன்னகைத்தாள்.

"சிரிச்சே சமாளி..." ஆரு சொல்ல... அர்ஜுனிடம் இருந்த ஐஷுவை மீரா அழைக்க... அது வர மாட்டேன் என்று தலை ஆட்டியது.

"பார்த்தியா போன வாரம் வரை என்னோட செல்லம்தானே நீ... இப்ப உங்க சித்தப்பா வந்ததும் கட்சி மாறிட்டே..."

மீரா சொல்ல... அதைக் கேட்டு எல்லோரும் சிரித்தனர். ரொம்ப நாள் கழித்து அந்த வீட்டில் எல்லோரும் சேர்ந்து மகிழ்ச்சியாக இருந்தனர்.

மாடியில் ரஞ்சனாவின் அறையில் குழந்தையோடு மீரா விளையாடிக் கொண்டிருக்கும் போது உள்ளே வந்த அர்ஜுன்... ஐஸ்க்கு ஒரு முத்தம் கொடுத்தவன், மீராவுக்கும் ஒரு முத்தம் கொடுக்க... மீரா, அர்ஜுனைப் பார்த்து முறைத்தாள்.

"பெங்களூர் வரை வந்தும், ஒரு முத்தம் கூடக் கொடுக்கலை..." என்ற அர்ஜுன் தொடர்ந்து குழந்தைக்கும், மீராவிற்கும் மாறி மாறி முத்தம் கொடுக்க...

"ஐஷு இன்னும் பேச ஆரம்பிக்கலைன்னு தைரியம்..." மீரா சொல்ல... அர்ஜுன், மீராவைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

"அர்ஜுன், இன்னைக்கு வெளிய போவோமா? நான் இன்னும் கொஞ்ச நேரத்தில கிளம்பி பெசன்ட் நகர் பீச்சுக்கு வரேன், நீங்களும் அங்கே வந்திடுங்க. நாம எங்கேயாவது போய் லஞ்ச் சாப்பிட்டிட்டு, அப்படியே படத்துக்குப் போகலாம்." மீரா சொல்ல... அர்ஜுன் சரி என்றான்.

அர்ஜுன் பைக்கில் பெசன்ட் நகர் பீச்சில் சென்று இறங்கிய போது... மீரா அவள் காரின் வெளியே நின்று கொண்டிருந்தாள். அர்ஜுன் வண்டியை நிறுத்தி விட்டு அவள் அருகில் வந்ததும், "மாயாஜால் போலாம்

அர்ஜுன், மூணு மணி ஷோவுக்கு புக் பண்ணி யிருக்கேன். அங்கேயே போய்ச் சாப்பிடலாம்..." என்றவள், அர்ஜுனிடம் கார் சாவியைக் கொடுக்க... அவன் சரி என்று வாங்கிக் கொண்டு காரில் ஏற... மீரா பின்னால் ஏறினாள்.

அர்ஜுன், 'இவ ஏன் பின்னாடி உட்கார்ரா?' என்று நினைக்கும் போதே... முன் சீட்டில் அமர்ந்திருந்த சூர்யாவைப் பார்த்தான். சூர்யா, அர்ஜுனைப் பார்த்து, "ஹாய்..." என்று சொல்ல... அர்ஜுன் திரும்பி மீராவைப் பார்க்க... அப்போதுதான் அவள் அருகில் இருந்த ஆருவைப் பார்த்தான். பார்த்ததும் காரில் ஏறாமல் இறங்கிவிட்டான். அவனோடு எல்லோரும் காரில் இருந்து இறங்கினர்.

அர்ஜுன், சூர்யாவைப் பார்த்து, "நீ இங்க என்னடா பண்ற? ரெண்டு வருஷம் ஆஸ்திரேலியால உன்னோட தான குப்பை கொட்டினேன். இங்கேயுமா...?" என்று கேட்க... அர்ஜுனின் அருகில் வந்த சூர்யா,

"எனக்கு மட்டும் உன் கூடச் சுத்தணும்னு ஆசையா...? உன் தங்கச்சி என் கூடத் தனியா எங்கே யும் வர மாட்டேன்றாளே, நான் என்ன பண்றது...?" என்று அவன் பதிலுக்குக் கேட்க...

"அது உன்னோட பாடு, நீ வா மீரா..." அர்ஜுன், மீராவின் கையைப் பிடித்து இழுக்க...

"உன் தங்கச்சி மட்டும் என் கூட வர மாட்டேன்றா.... அப்ப என் தங்கச்சியையும் உன் கூட அனுப்ப முடியாது."

மீராவின் மற்றொரு கையைப் பிடித்துச் சூர்யா இழுக்க...

"இவ உன் தங்கச்சியா? எப்ப இருந்து...?"

அர்ஜுன் கேட்க... "அது ரொம்ப நாளாவே தங்கச்சி தான். ஆனா... இன்னைக்குக் காலையில தான் தத்தெடுத்தேன்..." என்ற சூர்யா,

மீராவிடம், "அண்ணன் சொல்றேன், கண்டவனோட போகாதே..." என்று அவளின் கையை இழுக்க...

"ரெண்டு பேரும் என் கையை விடுறீங்களா...? எனக்கு வலிக்குது." மீரா வலியில் முகம் சுளிக்க... இருவரும் வேகமாக அவள் கையை விட்டனர்.

"சரி, வந்து தொலை. ஆனா... இன்னைக்குத்தான் லாஸ்ட்..." என்று சொல்லி அர்ஜுன் காரில் ஏற... சூர்யாவும் சென்று ஏறினான்.

ஆரு, மீராவிடம், "அர்ஜுனுக்குப் பிடிக்கலை போல, நான் வேணா வீட்டுக்குப் போகட்டுமா...?" என்று கேட்க...

"சும்மா வா ஆரு... உன்னோட அண்ணன்தானே. அர்ஜுன் அப்படித்தான் பேசுவாங்க... ஆனா... எதுவும் நினைக்க மாட்டாங்க. வா..." என்று ஆருவைத் தேற்றி மீரா காரில் ஏற்றினாள்.

எல்லோரும் மாயாஜால் சென்று இறங்கியதும், நேராக ஒரு ஹோட்டலுக்குச் சாப்பிடச் சென்றனர். அர்ஜுன், ஆருவின் அருகே சென்று அமர... "பனை

மரத்துக்குக் கீழ உட்கார்ந்து பாலைக் குடிச்சாலும், இந்த உலகம் கள்ளுன்னுதான் சொல்லும். நீ உன் தங்கச்சி பக்கத்தில உட்கார்ந்தாலும், உங்களைப் பார்க்கிறவங்க தப்பாதான் நினைப்பாங்க. அதனால நீ போய் மீரா பக்கத்தில உட்காரு...” சூர்யா சொல்ல...

அர்ஜுன், சூர்யாவைப் பார்த்து முறைத்துக் கொண்டே, “வா மீரா... நாம வேற டேபிளுக்குப் போவோம்...” என்று அழைக்க...

அவளும் ஆருவிடம், “நீங்க ஃப்ரீயா பேசிக்கிட்டே சாப்பிடுங்க...” என்று சொல்லிவிட்டு எழுந்து சென்றாள்.

அர்ஜுனும், மீராவும் சென்றதும்... சூர்யா, ஆருவிடம், “ஹப்பா...உன் கூட வெளிய வரணும்னு, நான் என்னென்ன வேலை எல்லாம் பார்க்க வேண்டியது இருக்கு. இதுக்கு நான் கூப்பிடும் போதே... நீ ஒழுங்கா வந்திருக்கலாம்...” என்றான்.

சூர்யாவும், ஆருவும் மெதுவான குரலில் பேசிக்கொண்டே சாப்பிட, அங்கே அர்ஜுன் டென்ஷனாக இருந்தான்.

அர்ஜுனால் எப்போதும் இருப்பது போல் இருக்க முடியவில்லை. “இதெல்லாம் உன்னால...” என்று அவன் மீராவைப் பார்த்து முறைக்க...

“நான் என்ன பண்ணேன் அர்ஜுன்? சூர்யா தான் காலையில போன் பண்ணி ஆருவை வெளிய அழைச்சிட்டு வர முடியுமான்னு கேட்டாங்க. பாவம்

அர்ஜுன், அவங்களும் நம்மள மாதிரி தானே, உங்களுக்கு ஏன் கோபம் வருது...?” மீரா புரியாமல் கேட்க...

“எனக்கு ஆரு, சூர்யாவை லவ் பண்றது பிடிக்காம இல்லை, பிடிச்சிருக்கு. சூர்யாவே என் தங்கச்சிக்குக் கணவனா வர்றது சந்தோசம்தான். ஆனா... ஏனோ ஃப்ரீயா இருக்க முடியலை. இப்ப உனக்கு ஒரு அக்காவோ, தங்கச்சியோ இருந்து... அவங்களை அவங்க லவரோட பார்த்தா உனக்கு எப்படி இருக்கும்? உனக்குப் புரியுதா மீரா...? அவங்க கல்யாணம் நிச்சயம் ஆகிற வரை எனக்கு நிம்மதியா இருக்க முடியாது...” என்றான் அர்ஜுன்.

“முதல்ல அவங்க கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யுங்க அர்ஜுன்...” என்ற மீரா தொடர்ந்து, “எங்க அப்பாவும் இப்ப உங்க நிலையிலதான் அர்ஜுன் இருக்கார். அவருக்கும் நம்ம விஷயம் தெரியும், அவரும் இப்ப நீங்க நினைக்கிற மாதிரிதான் நினைப்பார்...” என்றாள் மெதுவாக.

“ஆரு, சூர்யா கல்யாணம் நிச்சயம் ஆனதும், நான் கண்டிப்பா எங்க அம்மாகிட்ட பேசுறேன் மீரா. அம்மா முதல்ல மறுத்தாலும், நான் சொன்னாப் புரிஞ்சிப் பாங்க...” என்றான் அர்ஜுன் உறுதியாக.

மீராவுடன் மனசுவிட்டுப் பேசியதும், அர்ஜுன் சாதாரணமாக இருந்தான். பின் இருவரும் உணவு வரவழைத்துச் சாப்பிட்டனர். மீரா சொன்னதைக்

கேட்காமல் அர்ஜுன் அவனுக்கும் சைவ உணவுதான் சொன்னான்.

இருவரும் சாப்பிட்டதும் சூர்யா, ஆருவோடு சேர்ந்து சினிமா பார்க்கச் சென்றனர். இப்போது அர்ஜுன்... சூர்யா, ஆருவோடு கலகலப்பாகப் பேசினான். நான்கு பேரும் சினிமா பார்த்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினர்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மதியம் போல்... மீரா, அர்ஜுனின் வீட்டிற்கு வந்து மாலை வரை எல்லோருடனும் பேசிக்கொண்டு இருந்துவிட்டுச் சென்றாள். அன்று இரவு மீரா பெங்களூர் கிளம்புவதால், அர்ஜுன் அவளைத் தன் பைக்கில் அழைத்துக் கொண்டு சென்ட்ரல் ஸ்டேஷன் சென்று ரெயிலில் ஏற்றிவிட்டவன், ரெயில் கிளம்பும் வரை மீராவுடன் பேசிக் கொண்டிருந்தான். ரெயில் கிளம்பியதும் இருவர் மனமுமே பிரிவை நினைத்துத் தவித்தது. இருவரும் சேர்ந்து இருக்கும் காலம் எப்போது வருமோ...?

29

சஞ்சனாவிற்கு அவளது மாமன் மகன் தினேஷுடன் திருமணம் நிச்சயமாகி இருந்தது. அர்ஜுன் ஒரு மாதம் சென்றுதான் வேலையில் சேர்வதால், அவன் கடையையும், கார்மெண்ட்ஸ் கம்பெனியையும் கணேசனோடு பார்த்துக் கொண்டான். அதனால் ஆதியால் அடிக்கடி திருச்சிக்குச் சென்று வர முடிந்தது.

கல்யாணத் தேதி நெருங்கியதும் ஆதி நான்கு நாட்கள் முன்பே திருமண வேலைகள் பார்க்க அவன் மாமனார் வீட்டிற்குச் சென்றுவிட்டான். ஆதி அந்தக் குடும்பத்திற்கு மூத்த மருமகனாக, அவன் கடமையைச் சரி வர செய்தான். அதில் ரஞ்சனாவிற்கு மிகவும் பெருமை.

அன்று அர்ஜுனின் வீட்டில் இருந்து வந்த பிறகு, சில மாதங்கள் சஞ்சனா ஆடிக்கொண்டுதான் இருந்தாள். எப்போதும் அர்ஜுன் வீட்டினரைப் பற்றித் தாறுமாறாகப் பேசினாள். ஒரு நாள் அவளது அம்மா வந்தனா, "அவங்க நம்ம வீட்ல ஒரு பொண்ணு எடுத்தா... இன்னொரு பொண்ணும் இங்கேயே எடுக்கணும்னு எந்தக் கட்டாயமும் இல்லை. அது அவங்க விருப்பம். நீ அவங்களைக் குற்றம் சொல்லியே, உனக்கு வர்ற நல்ல வரனை எல்லாம் தட்டிக் கழிக்கப் போறியா...?" என்று கேட்க...

"நான் எதுக்கு என் வாழ்க்கையை வீணாக்கணும். நான் தினேஷைக் கல்யாணம் செஞ்சுக்கிறேன். ஆனா என்னோட கல்யாணம், ரஞ்சனா கல்யாணத்தை விடக் கிராண்டா நடக்கணும்." சஞ்சனா அதிகாரமாகத் திருமணத்திற்குச் சம்மதம் சொன்னாள்.

சஞ்சனா சம்மதம் சொன்னதும், உடனடியாக அவளது பெற்றோர் தினேஷ் வீட்டில் பேசித் திருமண நாளைக் குறித்து விட்டனர். திரும்பி வேதாளம் முருங்கை மரம் ஏறும் முன் திருமணத்தை நடத்தி விட நினைத்தனர்.

அர்ஜுனைத் தவிர மற்ற அனைவரும் சஞ்சனா வின் திருமணத்தில் கலந்து கொண்டனர். அர்ஜுன் இந்தியா வந்த பிறகுதான், சஞ்சனாவிற்கு அவனை மாப்பிள்ளை கேட்டதை வித்யா அவனிடம் சொன்னார்.

அர்ஜுன், 'ஹப்பா... தப்பிச்சேன்டா சாமி...' என்று நினைத்தவன்... தான் திருமணத்திற்கு வந்தால், அவர்களுக்குச் சங்கடமாக இருக்கும். அதோடு கடையை மற்றும் கம்பெனியைப் பார்த்துக் கொள்வதும் சிரமம் என்று கூறி, அவன் சஞ்சனாவின் திருமணத்திற்குச் செல்லவில்லை.

திருமணத்திற்குப் பத்து நாட்கள் முன்பே ரஞ்சனா தன் பெற்றோர் வீட்டிற்குச் சென்று விட்டாள். ஆதியும் முன்பே சென்று விட்டான். கணேசன், வித்யா மற்றும் ஆரு திருமணத்திற்கு முன் தினம் திருச்சிக்குச் சென்றனர்.

சஞ்சனாவின் பெற்றோர் அவர்களை நல்ல படியாக வரவேற்றனர். ஆனால், சஞ்சனா அவர்களை வந்து வாங்க என்று கேட்கவும் இல்லை, பேசவும் இல்லை. அவள் அறையிலேயே இருந்து கொண்டாள். அதை யாரும் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

இருந்தாலும் ஆதிக்கு அது பிடிக்கவில்லை. அவன் தனது குடும்பத்தினரை ஒரு பெரிய ஹோட்டலில் சென்று தங்க வைத்தான்.

அவர்களும் விசேஷ நேரத்தில் மட்டும் வந்து கலந்து கொண்டனர். திருமணம் நல்லபடியாக முடிந்தது.

சஞ்சனாவின் பெற்றோர் சஞ்சனாவையும், தினேஷையும் சென்னையிலேயே இருக்கச் சொல்லி விட்டனர். இப்போது வேலையை மாற்றிக் கொண்டு இங்கே வரவேண்டாம், சில வருடங்கள் சென்று பார்த்துக் கொள்வோம் என்றனர்.

"நீங்களும் சென்னைக்கே வந்துடுறீங்களா மாமா... நம்ம வீட்டுப் பக்கத்திலேயே வீடு பார்த்திடுவோம்." ஆதி தன் மாமனாரிடம் கேட்க...

"இப்போது எங்களுக்கு உடல் ஆரோக்கியமாக இருக்கிறது ஆதி. அதோடு திருச்சி எங்களுக்குப் பழகிய ஊர். அதனால் சில வருடங்கள் கழித்துப் பார்த்துக் கொள்வோம்..." என்றார் அவர். சரி என்று ஆதியும் ஏற்றுக் கொண்டான்.

சஞ்சனாவின் திருமணம் முடிந்தும் ஆதியும், ரஞ்சனாவும் அங்கேயே தங்க... மற்றவர்கள் அன்றே சென்னைக்குத் திரும்பி விட்டனர். ஆதியும், ரஞ்சனாவும் இரு தினங்கள் திருச்சியில் தங்கி விருந்து முடிந்து, சஞ்சனா தன் புகுந்த வீட்டிற்குக் கிளம்பிச் சென்றதும் இவர்களும் ஊர் திரும்பினர்.

சஞ்சனா திருமணம் முடிந்து வந்ததில் இருந்து வித்யா எதையோ யோசித்துக் கொண்டே இருந்தவர், அன்று இரவு எல்லோரும் சேர்ந்து அமர்ந்து உண்ணும் போது... "ஆருவுக்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிக் கணும். இப்பவே நாம லேட். இவ ஏதோ கோர்ஸ் முடிக்கணும்னு சொன்னா... அதுவும் இப்ப

முடிஞ்சிடுச்சு...” என்று ஆருவின் திருமணப் பேச்சை அவர் ஆரம்பிக்க...

வித்யா சொன்னதைக் கேட்ட வீட்டினர் எல்லோரும் மகிழ, ஆருவிற்குத்தான் சோறு தொண்டைக்குள் இறங்கவில்லை. அவள் சாப்பிட முடியாமல், ஆனால்... சாப்பிடுவது போல் நடித்துக் கொண்டிருந்தாள். அர்ஜுன் அவளைத்தான் ஜாடையாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

“நாம நாளைக்கே ஆதிக்கு சொல்லிவச்ச புரோக்கர்கிட்ட, ஆருவுக்கும் பதிஞ்சு வச்சிடலாம். இன்னும் ஆறு மாசத்துக்குள்ள கல்யாணத்தை முடிச்சிடணும்.” வித்யா பேசிக் கொண்டே செல்ல..

“சொல்லு ஆரு... உனக்கு எந்த மாதிரி மாப் பிள்ளை வேணும்...? வேலைக்குப் போறவரா...? இல்லை, பிசினஸ் பார்க்கிறவரா பார்ப்போமா...” கணேசன் சிரித்துக் கொண்டே கேட்க.... ஆரு சொல்லத் தயங்கினாள்.

“எந்த வேலை பார்த்தாலும், அதோட நம்ம ஆரு சொல்ற வேலையையும் தட்டாம செய்றவரா இருக்கணும். இல்ல ஆரு...?” ஆதி அவளை வம்பு இழுக்க...

அதைக் கேட்டு அர்ஜுன் தவிர மற்றவர்கள் சிரித்தனர். ஆரு, ‘ஈ...’ என்று இளித்துச் சமாளித்தாள். அவளுக்கு அழுகையாக வந்தது.

எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டே... ‘ஆருவின் கல்யாணத்திற்கு என்ன வாங்குவது...? எந்த மண்டபத்தில்

திருமணம் வைப்பது...?’ என்று எல்லாம் பேசப் பேச... ஆருவுக்கு மனதில் பயம் வந்தது.

அவள் அர்ஜுனைப் பார்க்க.... அவன் அமைதி யாகச் சாப்பிட்டான். ‘பாரு... எப்படிக் கல்லு மாதிரி இருக்கான்...?’ என்று ஆரு, அர்ஜுனை மனதிற்குள் திட்டிக் கொண்டிருந்தாள்.

ஒரு வழியாக எல்லோரும் சாப்பிட்டு முடித்து எழுந்து கொள்ளும்போது... அதுவரை அமைதியாக இருந்த அர்ஜுன், “முதல்ல ஆருகிட்ட அவளுக்கு விருப்பமான்னு கேளுங்க...” என்றான்.

“நாம முதல்ல மாப்பிள்ளை பார்க்கணும், அப்புறம் அவகிட்ட போட்டோ காமிச்சி பிடிச்சிருக்கான்னு கேட்கணும். நீ ஏன் இப்பவே கேட்கச் சொல்ற...?” வித்யா புரியாமல் கேட்க... அர்ஜுன், ஆருவைப் பார்த்தான். ஆரு தலை நிமிரவே இல்லை.

“நீங்க பார்க்கிற மாப்பிள்ளை அவளுக்குப் பிடிச்சிருக்கான்னு கேட்கச் சொல்லலை... அவளுக்கு வேற யார் மேலாவது விருப்பம் இருக்கான்னுதான் கேட்கச் சொல்றேன்...” என்றான் அர்ஜுன் அழுத்தமாக.

அவன் சொன்னதைக் கேட்ட அனைவரும் திடுக்கிட்டனர். ‘இன்னைக்கு மாட்டிக்கப் போறோம்...’ என்று நினைத்த ஆருவின் முகம் வெளிறிவிட்டது.

“நீ இப்ப என்ன சொல்ல வர...? ஆரு யாரையா வது லவ் பண்றாளான்னு கேட்கச் சொல்றியா...? எனக்கு

ஆருவைப் பத்தி நல்லாத் தெரியும். வெளியே போகக் கூட அண்ணன்களைத் துணைக்குக் கூப்பிடுறவளுக்கு, காதலிக்கத் தைரியம் இருக்குமா...? அவ அப்படி எல்லாம் பண்ண மாட்டா..." என்ற வித்யா, ஆருவின் பக்கம் திரும்பி, "நீ யாரையும் லவ் பண்ணலைதானே ஆரு...?" என்று அதட்டிக் கேட்க...

வித்யாவின் கோபத்தைப் பார்த்து ஆரு அரண்டு விட்டாள். அவள் பயத்தில், "இல்லை..." என்று சொல்ல... வித்யா நிம்மதியாக மூச்சு விட்டார். அர்ஜுன், ஆருவை பார்த்துப் முறைக்க, அவள் குனிந்த தலையுடன், அவள் அறைக்குச் சென்றாள்.

அன்று இரவு வீட்டுத் தோட்டத்தில் கணேசன், ஆதி, அர்ஜுன் மட்டும்தான் அமர்ந்து இருந்தனர். ரஞ்சனா, ஐஷுவைத் தூங்க வைக்கச் சென்றுவிட, வித்யா டி.வி. பார்த்துக் கொண்டிருந்தார்.

கணேசனுக்கும், ஆதிக்கும் ஏதோ சரி இல்லை என்று புரிந்தது. ஆருவின் முகமே சரி இல்லை, அதோடு அர்ஜுனும் கோபமாக இருப்பதிலேயே ஏதோ விஷயம் இருக்கிறது என்று இருவருக்கும் புரிந்தது.

"ஆராதனா யாரை அர்ஜுன் லவ் பண்றா...?" கணேசன் நேரடியாகக் கேட்க,

"என்னோட ப்ரெண்ட் சூர்யாவைப்பா..." என்றான் அர்ஜுன். யாரோ, எவரோ என்று பயந்து கொண்டிருந்த கணேசன், ஆதி இருவரின் முகத்திலும் இருந்த தவிப்பு

மறைந்து, சூர்யாவின் பெயரைக் கேட்டதும் நிம்மதி வந்தது.

என்னதான் தங்களின் பிள்ளைகள் காதலை ஆதரிக்கும் பெற்றோராக இருந்தாலும், அவர்கள் நல்ல துணையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கவலை எல்லாப் பெற்றோருக்கும் இருக்கும்.

"நல்லவேளை சூர்யாவை லவ் பண்றா... தெரியாத பையன்னா அம்மா ஒத்துக்கமாட்டாங்க. ஆரு லவ் பண்றதை நாளைக்கு அம்மாகிட்ட சொல்லிடுவோமா...?" ஆதி கேட்க...

"வேண்டாம்... வீணா அம்மாவுக்கும், ஆருவுக்கும் நடுவுல சண்டை வரும். அம்மா கேட்கும்போது வேற ஆரு யாரையும் லவ் பண்ணலைன்னு சொல்லிட்டா. இனிமே சொன்னா அம்மா கோபப்படுவாங்க, இவ அழுவா. அதோட எல்லோருக்கும் மனசு கஷ்டம்." அர்ஜுன் சொல்ல...

"சொல்லித்தானே ஆகணும்..." என்றார் கணேசன்.

"வேண்டாம். நாம... ஆரு, சூர்யாவை லவ் பண்ணறதை அம்மாகிட்ட சொல்லாம, அவளோட கல்யாணத்தை முடிக்கணும்..." என்றான் அர்ஜுன்.

"இதெல்லாம் நடக்கிற காரியமா...? அம்மா கண்டு பிடிச்சிடுவாங்க..." ஆதி சொல்ல...

"நான் பார்த்துக்கிறேன், அதுக்கு ஒரு ஆள் இருக்கு..." என்றான் அர்ஜுன் நம்பிக்கையாக.

கணேசன், ஆதி இருவரிடமும், அவர்களுக்குத் தெரிந்த விஷயத்தை வேறு யாரிடமும் சொல்ல வேண்டாம்... அதே போல் ஆருவிடமும் கேட்க வேண்டாம் என்று சொல்லிவிட்டு, அர்ஜுன் மாடிக்குச் சென்று ஆருவின் அறைக் கதவைத் திறந்து பார்க்க... ஆரு கட்டிலில் படுத்து அழுது கொண்டிருந்தாள். அர்ஜுன் மெதுவாக அவள் அறைக் கதவை மூடிவிட்டு அவன் அறைக்குச் சென்றான்.

அவன் அறைக்கு வந்த அர்ஜுன், தன் பெரியம்மாவை செல்லில் அழைத்தான்.

"டேய் அர்ஜுன்... எப்படிடா இருக்க? உன்னை வந்து பார்க்க வரணும்னு நினைச்சேன், முடியவே இல்லை. இந்த வாரம் அங்க வரேன்..." என்று சொன்ன காயத்ரி, "ஆமாம், நீ எதுக்குப் போன் பண்ண...?" என்று கேட்க...

"ஹப்பா... இப்பவாவது கேட்டீங்களே... எனக்கு உங்க மூலமா ஒரு காரியம் நடக்கணும்..." அர்ஜுன் சொல்ல...

"நீயும், மீராவும் லவ் பண்றதை, நான் உங்க அம்மாகிட்ட சொல்லணுமா...?" பெரியம்மா ஆர்வமாகக் கேட்க...

"அதை நான் சொல்லிக்கிறேன்... நீங்க, ஆரு லவ் பண்றா... அதை வந்து சொல்லுங்க..." என்று அர்ஜுன் குண்டைத் தூக்கிப் போட்டான்.

"என்னது...? ஆரு லவ் பண்றாளா...? நான், உன்னோட விஷயம் தெரிஞ்சாலே, உங்க அம்மா என்ன ஆடப்போறாளோன்னு பயந்திட்டு இருக்கேன்... இதுல ஆரு வேற லவ் பண்றாளா...? இதெல்லாம் நடக்காது, நீ அவளை வேற வேலை பார்க்கச் சொல்லு..." காயத்ரி புலம்ப...

"அம்மாவுக்கு ஆரு லவ் பண்றது தெரியாம, நாமளே அதை அரேஞ்ச் மேரேஜ் மாதிரி கொண்டு வந்துடலாம்." அர்ஜுன் ஐடியா கொடுக்க...

"இது நடக்கிற காரியமாடா...?"

"எல்லாம் நாம நினைச்சா நடக்கும். அவ லவ் பண்றது என்னோட ப்ரெண்ட் சூர்யாவைத்தான், அன்னைக்கு ஆதி கல்யாணத்தில நீங்க அவங்க அப்பா, அம்மாவை கூடப் பார்த்தீங்களே... அவங்கதான்." அர்ஜுன் விளக்க...

"அவங்களா...? ஆமாம் என்னோட வீட்டுக்காரருக்குத் தங்கச்சி முறை... இருந்தாலும் உங்க அம்மா ஒத்துக் கணுமே..." காயத்ரி தயங்க...

"எல்லாம் நீங்க சொல்ற விதத்துல சொன்னா, அவங்க ஒத்துப்பாங்க. நான் உங்களை ரயில்வே ஸ்டேஷனுக்குக் கூப்பிட வரும்போது... என்ன பேசணும்னு சொல்லித் தரேன். நீங்க அது மாதிரியே பேசுங்க, அம்மா ஒத்துப்பாங்க."

"சரிடா... நீ என்னவோ சொல்ற, செஞ்சு பார்க்கலாம்..." என்று பெரியம்மா, அர்ஜுனின் திட்டத்துக்கு ஒத்துக்கொண்டார்.

சஞ்சனா, தினேஷ் திருமணம் முடிந்து ஒரு வாரம் கழித்து... அவர்களைச் சென்னையில் தனிக்குடித்தனம் வைக்க, இருவரின் பெற்றோரும் தனிக்குடித்தனத்திற்குத் தேவையான சாமான்களுடன் சென்னையில் வந்து இறங்கினர்.

சென்னையில் தினேஷ் அவன் அலுவலகத்துக்குப் பக்கத்தில் இருந்த ஓ.எம்.ஆர். ரோட்டில் உள்ள அபார்ட் மென்ட்டில் ஒரு வீடு வாடைகைக்கு எடுத்திருந்தான்.

ரஞ்சனா வெளியில் செல்வது போல் உடை அணிந்து கிளம்பிக் கொண்டிருப்பதைப் பார்த்து ஆதி, "எங்க போற...?" என்று கேட்க...

"என்ன தெரியாத மாதிரி கேட்கிறீங்க... இன்னைக்குச் சஞ்சனா வீடு பால் காய்ச்சுறாங்க இல்ல... அதுக்குத்தான் ரெடி ஆகிறேன்." என்று தலைவாரிக் கொண்டே ரஞ்சனா சொல்ல...

"நாம போகப் போறது இல்லை..." என்றான் ஆதி.

ரஞ்சனா திடுக்கிட்டவள், "ஏன்...?" என்று புரியாமல் கேட்க...

"கல்யாணத்துக்கு வந்த எங்க அப்பா, அம்மாவை அவ வாங்கன்னு கேட்டாளா...? அப்புறம் நாம எப்படி அவங்க வீட்டுக்குப் போக முடியும்...?" என்று ஆதி கேட்டான்.

"உங்களுக்குத்தான் அவளைப் பத்தி தெரியும் இல்ல... எங்க அம்மா, அப்பாவுக்காகப் பாருங்க."

"நீ உங்க அப்பா, அம்மா வீட்டுக்குத் திருச்சிக்குப் போயிட்டு வா... அதே மாதிரி அத்தை, மாமாவும் இங்க வந்து தாராளமா எத்தனை நாள் வேணாலும் தங்கட்டும். ஏன், சஞ்சனா கூட வரட்டும். என்னோட அம்மா, அப்பா அவகிட்ட ஒழுங்காத்தான் நடந்துப்பாங்க. ஆனா நாம அவ வீட்டுக்குப் போறது மட்டும் வேண்டாம்..." என்றான் ஆதி உறுதியாக.

ரஞ்சனாவின் கண்ணெல்லாம் கலங்கிவிட்டது. அவள் சென்று மெத்தையில் சோகமாக அமர... ஆதி அவள் அருகில் சென்று, அவளைத் தோளோடு சேர்த்து அணைத்தவன், "நாம கொஞ்சநாள் அவ வீட்டுப் பக்கம் போகாம இருந்தாத்தான், அவளுக்குத் தான் செஞ்சது தப்புன்னு புரியும். இனியும் அவ சின்னப் பொண்ணு இல்லை. அவ தான் செஞ்சது தப்புன்னு உணர்ந்து அவளே உன்னைக் கூப்பிடட்டும், அப்புறம் நாம அவ வீட்டுக்குப் போகலாம்..." என்றான்.

ரஞ்சனாவுக்கும் அவன் சொல்வது சரி என்று தெரிந்தாலும், மனது கேட்கவில்லை. ஆனால் ஆதி இவ்வவளவு உறுதியாகச் சொல்லும் போது, தான் அதை மீறுவது நன்றாக இருக்காது... தனக்கும் இந்த வீட்டின் மருமகளாகச் சில கடமைகள் இருக்கிறது. தன் புகுந்த வீட்டினரை சஞ்சனா மரியாதைக் குறைவாக நடத்தியது தவறுதான் என்பதை உணர்ந்ததால், அவளே தன் பெற்றோரை அழைத்து, ஐஷுவுக்குக் கல்யாணத்துல அலைஞ்சது உடம்புக்குச் சேரலை... அதனால் தாங்கள்

இன்னொரு நாள் வருவதாகச் சொல்லிப் போனை வைத்தாள்.

ஆதி நினைப்பது போல் சஞ்சனா தன் தவறை உணர்வாளா...?

அர்ஜுன் நினைப்பது போல் ஆருவின் திருமணம் நடக்குமா...?

30

ரஞ்சனா குழந்தைக்கு முடிய வில்லை... அதனால் தான் சஞ்சனா வீட்டிற்கு வரவில்லை என்று சொன்னதை, அவள் அம்மா வந்தனா நம்பவில்லை.

அவர் சஞ்சனாவிடம் தனிமையில், "பாரு, நீ யோசிக்காம அறிவுகெட்டத்தனமா பண்ற விஷயம், உங்க அக்காவைத்தான் பாதிக்குது. அன்னைக்கு வீட்டுக்கு வந்த அவங்க மாமனார், மாமியாரை நீ வாங்கன்னு கேட்கலை... அதனால தான் இன்னைக்கு அவங்க உங்க அக்காவை அனுபலைன்னு நான் நினைக்கிறன். உங்க அக்கா வரணும்னு நினைச்சிருந்தா, குழந்தையை அவ மாமியார்கிட்ட விட்டுட்டு வந்திருக்கலாம்..." என்றார்.

"வரலைன்னா போறா..." என்று சஞ்சனா அலட்சியமாகத் தோளைக் குலுக்கி விட்டுச் சென்றாள்.

அவளுக்கு அதனால் ஏற்படப் போகும் பின் விளைவுகளைப் பற்றித் தெரியவில்லை.

சஞ்சனாவின் பெற்றோர் மறு நாள் ரஞ்சனா வீட்டுக்குக் கிளம்ப, அவர்களுடன் தினேஷின் பெற்றோ ரும் கிளம்பினார்கள். அவர்கள் கிராமத்து மனிதர்கள், அவர்களுக்கு வீட்டில் முடங்கிக் கிடப்பது பிடிக்கவில்லை. அதனால் அவர்களும் ரஞ்சனா வீட்டைப் பார்த்துவிட்டு வருவோம் என்று நினைத்தனர்.

அவர்கள் தினேஷையும், சஞ்சனாவையும் கூட அவர்களுடன் அழைத்தனர். ஆனால், சஞ்சனா தலை வலிக்கிறது என்று சொன்னதால், "சரி, நீங்கள் இருவரும் வீட்டில் இருங்கள்..." என்று சொல்லிவிட்டு மற்றவர்கள் சென்றனர்.

அவர்கள் வெளியே சென்றதும் தினேஷ் சென்று சஞ்சனாவை அணைக்க... அவளும் அவனை அணைத்தாள். மாலை வரை இருவரும் தங்கள் உலகில் இருந்தனர்.

"தலை வலிக்குதுன்னு சொன்ன, ஆனா உன்னைப் பார்த்தா அப்படித் தெரியலையே...! நாம தனியா இருக்கணும்னு அப்படிச் சொன்னியா... இல்லை, உனக்கு உங்க அக்கா வீட்டுக்குப் போக இஷ்டம் இல்லையா...?"

தினேஷ் சிரித்துக் கொண்டே கேட்க...

சஞ்சனா அதிர்ச்சி அடைந்தாள். ஆனால், அதை அவள் முகத்தில் காட்டாமல் மறைத்தவள், "இல்லை, இன்னொரு நாள் போலாமேன்னு நினச்சேன்..." என்று சொல்லிச் சமாளிக்க...

"சரி, இன்னொரு நாள் போகலாம்..." என்று சொல்லிவிட்டுத் தினேஷ் குளியல் அறைக்குச் சென்றான்.

தினேஷின் பெற்றோருக்கு, ரஞ்சனா வீட்டினரை மிகவும் பிடித்து விட்டது. ரஞ்சனா வீட்டில், அவர்கள் அனைவரையும் நன்றாகக் கவனித்தனர். அதோடு விருந்து சாப்பாடும் செய்து அசத்தினர். கிளம்புபோது, "சஞ்சனாவையும், தினேஷையும் பார்த்துக்கோங்க... அவங்களுக்கு நீங்கதான் பக்கத்தில இருக்கீங்க..." என்று இருவரின் பெற்றோரும் சொல்ல...

"நாங்க பார்த்துக்கிறோம், நீங்க கவலைப்படாம ஊருக்குப் போங்க..." என்று சொல்லி வித்யா அவர்களை அனுப்பி வைத்தார்.

அர்ஜுனும், சூர்யாவும் வேலைக்குச் செல்ல ஆரம்பித்து இருந்தனர். மீரா, இரு வாரத்திற்கு ஒரு முறை சென்னை வந்து, இரண்டு நாட்கள் தங்கி விட்டுச் சென்றாள். அவளுக்குப் பெங்களூர் இப்போது ஓரளவு பழகிவிட்டது. அர்ஜுன் அருகில் இல்லையே என்று குறை தவிர வேறொரு கஷ்டமும் இல்லை.

ஆரு, தன் வீட்டினரிடம் எப்படியாவது தான் சூர்யாவை விரும்புவதைச் சொல்லிவிட வேண்டும் என்று நினைத்தாள். ஆனால், அவளுக்குச் சொல்லத்தான் தைரியம் வரவில்லை. ஆதியிடமாவது சொல்லிவிட வேண்டும் என்று செல்பவள், சிறிது நேரம் கழித்துச் சொல்லாமலே வருவாள். அவளின் தவிப்பை ஆதி,

அர்ஜுன் இருவருமே கவனித்துக் கொண்டுதான் இருந்தனர். அவள் என்னதான் செய்கிறாள் பார்ப்போம் என்று அமைதியாக இருந்தனர்.

ஆரு, சூர்யாவிடமும் சரியாகப் பேசுவதில்லை, சூர்யா இப்போதுதான் புதிதாக வேலைக்குச் சேர்ந்திருப்பதால்... அவன் கவனம் வேலையில்தான் இருந்தது. அதனால் அவன் ஆரு சரியாகப் பேசாததைப் பற்றிப் பெரியதாக நினைக்கவில்லை.

அந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை மதுரையில் இருந்து வந்து இறங்கிய பெரியம்மாவை அழைக்க... அர்ஜுன் ரயில்வே ஸ்டேஷன் சென்று இருந்தான்.

ஸ்டேஷனில் இருந்த கடையில், இரண்டு காபி வாங்கிக் கொண்டு இருவரும் அங்கிருந்த பெஞ்சில் சென்று அமர்ந்தனர். அர்ஜுன் காபியைக் குடித்துக் கொண்டே தன் பெரியம்மாவிடம் எந்த மாதிரிப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுக்க... பெரியம்மாவும் பத்தாம் வகுப்பு மாணவி போல் அவன் சொன்னதுக்கு எல்லாம் தலையைத் தலையை ஆட்டினார்.

"பெரியம்மா, சொதப்பிட மாட்டீங்களே..."

"மாட்டேன்னுதான் நினைக்கிறேன். ஆனாலும் கொஞ்சம் பயமா இருக்கு... சின்னப் பசங்க பேச்சைக் கேட்டு எதுவும் தப்பு நடந்திடக் கூடாது. கல்யாணம் ஒண்ணும் விளையாட்டு இல்லை அர்ஜுன்."

"அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். சூர்யா ரொம்ப நல்லவன், அவன் என் தங்கையை நல்லாப் பார்த்துப்பான்." அர்ஜுன் உறுதியாகச் சொல்ல... பெரியம்மா, ஆமாம் என்று தலை அசைத்தார். இருவரும் எழுந்து வீடு நோக்கிச் சென்றனர்.

வித்யா இரண்டு நாட்கள் கழித்து, அவரே தன் சகோதரியிடம் ஆரு திருமணத்தைப் பற்றிப் பேச்செடுத் தார். "அக்கா... ஆருவுக்கும் இந்த வருஷம் கல்யாணம் பண்ணிடலாம்னு இருக்கோம்."

வித்யா எப்போது இந்தப் பேச்சை எடுப்பார் என்று காத்திருந்த காயத்ரி, "இப்பவெல்லாம் தெரியாத இடத்தில சம்பந்தம் பண்ணவே பயமா இருக்கு. அதுவும் பொண்ணை வெளியே கொடுக்கணும்னா ரொம்பப் பார்த்து, நல்லா விசாரிச்சுதான் கொடுக்கணும்..." என்றார்.

"ஆமாம், அது என்னவோ உண்மைதான்..." என்று வித்யாவும் ஒத்துகொண்டார்.

"எனக்குத் தெரிஞ்ச ஒரு இடத்தில மணமேடை வரை வந்து கல்யாணம் நின்னுடுச்சு. அப்புறம் இன்னொரு இடத்தில வெளிநாட்டு மாப்பிள்ளைன்னு கட்டிக் கொடுத்தாங்க... அவன் என்ன பண்ணான் தெரியுமா? ஏற்கெனவே அங்க ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணி இருக்கான். அவன் வீட்ல இது தெரியாம, இந்தியா வந்தவனுக்கு இவங்க ஒரு கல்யாணம் பண்ணி வைக்க, இப்ப பெரிய தகராறு ஆகி கோர்ட்டுக்கும், வீட்டுக்கும் அலையறாங்க. அப்புறம்

எனக்குத் தெரிஞ்ச ஒரு பொண்ணு, கல்யாணம் பண்ணிப் போன ஒரே மாசத்தில வீட்டுக்கு வந்துடுச்சு. ஏன் வந்தேன்னு கேட்டா... சொல்லவே மாட்டேங்குது..." என்று பெரியம்மா அடித்து விட....

"என்னக்கா, இப்படிக் குண்டைத் தூக்கிப் போடுற. எனக்கு இப்பவே வயித்தைக் கலக்குது. ஆருவுக்கு ஒரு நல்ல இடம் அமையணுமேன்னு நானே பயந்திட்டு இருக்கேன்..." என்றார் வித்யா கவலையாக.

"நான் உண்மையைத்தான் சொல்றேன் வித்யா. நாட்ல இப்ப இப்படித்தான் நிறைய நடக்குது. நீ ஆருவை எதுக்கும் தெரிஞ்ச இடத்தில செய்யறதே நல்லது. தெரியாத இடத்தில பொண்ணைக் கொடுக்கிறது ரொம்ப ரிஸ்க்."

காயத்ரி சொன்னதைக் கேட்ட வித்யா யோசித்தார். அவர் யோசிக்கட்டும் என்று நினைத்த காயத்ரி, அங்கி ருந்து எழுந்து சென்றார்.

ஆரு தன் அம்மாவும், பெரியம்மாவும் தன் கல்யாணத்தைப் பற்றிப் பேசுவதைக் கேட்டவள், இதற்கு மேலும் தாமதித்தால் நல்லது இல்லை என்பதை உணர்ந்து, வேகமாகத் தன் அறைக்குச் சென்று மீராவை அழைத்தாள்.

"மீரா, எங்க வீட்ல எனக்கு மாப்பிள்ளை பார்க்கிறாங்க..." என்று ஆரம்பித்து, வீட்டில் நடந்த அத்தனையும் சொன்னவள், "மீரா, எனக்கு வீட்ல

சொல்லத் தைரியம் இல்லை. நீதான் அர்ஜுன்கிட்ட சொல்லி ஏதாவது பண்ணச் சொல்லணும், அவன் என் மேல கோபமா இருக்கான். அவன் நினைச்சா என்னையும், சூர்யாவையும் சேர்த்து வைக்க முடியும். ப்ளீஸ்... தயவு செஞ்சு எனக்கு ஹெல்ப் பண்ணச் சொல்லு மீரா. நீ சொன்னா கண்டிப்பா செய்வான்."

"நான் அர்ஜுன்கிட்டே சொல்லலைன்னாலும் அவங்க கண்டிப்பா ஏதாவது பண்ணுவாங்க ஆரு. கவலைப்படாதே... அவங்க ஏதாவது முயற்சி பண்ணிட்டு தான் இருப்பாங்க. அவங்க நீ லவ் பண்றேன்னு தெரிஞ்ச போதே இப்படித்தான் ஆகும்னு சொன்னாங்க, நீயும் அவங்க எதிர்பார்த்த மாதிரிதான் நடந்து இருக்க."

"நான் எல்லாம் லவ் பண்ணி இருக்கவே கூடாது. சூர்யாவுக்குத் தெரிஞ்சா ரொம்ப வருத்தப்படுவாங்க..." என்ற ஆரு அழுதாள்.

"விடு ஆரு, நீ எப்பவும் உன் குடும்பத்தைச் சார்ந்தே இருப்ப... அப்படி இருக்கும்போது சட்டுன்னு அவங்களுக்கு எதிரா நடந்துக்க வராதுதான். உன்னை அர்ஜுன் கண்டிப்பா விட்டுக் கொடுக்க மாட்டாங்க, அதனால சூர்யாவுக்கு நீ அப்படிச் சொன்னது தெரியாது."

"இருந்தாலும் எனக்கே மனச்சாட்சின்னு ஒண்ணு இருக்கே... அது என்னை நிம்மதியா இருக்கவிடாது. ஆமாம், அர்ஜுன் எதுவும் உன்கிட்ட இதைப் பத்தி சொல்லலையா?"

"இல்லை, சொல்லலை..."

"உன்கிட்ட சொல்லாம இருந்தது, உனக்குக் கோபம் வரலை..."

"ஏன் வரணும்? அர்ஜுன் அவங்களைப் பத்தியா மறைச்சாங்க, இல்லையே...! அவங்களுக்கு என்கிட்டே எது சொல்லணுமோ அதைக் கண்டிப்பா சொல்வாங்க. உன்னை அவங்க என்கிட்டே கூட விட்டுக்கொடுக்க மாட்டங்க ஆரு..." என்றாள் மீரா தெளிவாக.

"இப்ப நான் என்ன பண்ணட்டும் மீரா...?"

"இரு, நான் எதுக்கும் அர்ஜுன்கிட்ட பேசிட்டு உனக்குப் போன் பண்றேன்..." என்று சொல்லிவிட்டு வைத்த மீரா, அர்ஜுனை அழைத்தாள்.

"என்னடி பொண்டாட்டி... ஆபீஸ் நேரத்தில போன் பண்ணி இருக்க...? என்னைப் பார்க்காம இருக்க முடியலையா...?"

"ஆமாம்னு சொன்னா என்ன பண்ணுவீங்க...? உடனே இங்கே வந்துடுவீங்களா...?"

"வர்றதைப் பத்தி ஒண்ணும் இல்லை... அம்மாகிட்ட நான் மீராவை லவ் பண்றேன், கல்யாணம் பண்ணி வைங்கன்னு சொல்றதுக்குப் பதிலா... அம்மா உங்களுக்குப் பேரன் வரப்போறான், அதனால எங்களுக்குச் சீக்கிரம் கல்யாணம் பண்ணி வைங்கன்னு சொல்ற நிலைமை வந்துட்டா..."

அர்ஜுன் சொன்னது முதலில் மீராவுக்குப் புரியவில்லை, அவன் சொன்னதைத் திரும்ப மனதிற்குள் சொல்லிப் பார்த்ததும், அவள் முகம் சிவந்தது. அவள் அமைதியாக இருந்தாள்.

"என்ன மேடம் சத்தத்தைக் காணோம்... நான் பெங்களூர் வரட்டுமா...?" அர்ஜுன், மீராவை வம்பு இழுக்க...

"ஒத வாங்கப் போறீங்க, பேச்சைப் பாரு... நீங்க ஒண்ணும் இங்க வந்திட வேண்டாம்..." என்றாள் மீரா.

"நிஜமாத்தான் சொல்றியா...? சரி, விடு... நம்ம அதிர்ஷ்டம் அவ்வளவுதான். ஆமாம், எதுக்குப் போன் பண்ண...?"

"ஆரு விஷயம் என்ன ஆச்சு...? வீட்ல பேச லையா...?" மீரா கேட்க...

"பெரியம்மாவை ஊர்ல இருந்து வர வச்சிருக் கேன்... அவங்க சூர்யாவுக்குச் சொந்தம்தானே...? அதனால அவங்க மூலமா அரேஞ்ச் மேரேஜ் மாதிரி கொண்டு வரப் போறேன். இதனால அம்மா மனசு கஷ்டப்படாது இல்ல... நாமளும் லவ் மேரேஜ், ஆருவும் லவ் மேரேஜ்னா அம்மா ரொம்ப ஃபீல் பண்ணுவாங்க... அதனாலதான்..." என்றான்.

மீராவுக்கு அவனின் நிலை புரிந்தது. "சரி... சூர்யா அண்ணன்கிட்ட பேசுங்க, நைட் கூப்பிடுறேன், bye..." என்று போனை வைத்தவள், ஆருவை அழைத்து...

அவளிடம் விஷயத்தைச் சொல்லி, "தைரியமா இரு, அர்ஜுன் பார்த்துப்பாங்க..." என்றாள்.

மேலும் இரண்டு நாட்கள் சென்ற பிறகு... வித்யா காயத்திரியிடம், "எனக்கும் நீ சொல்றது சரின்னுதான் தோணுதுக்கா... நானும் இவர்கிட்ட நீ சொன்ன மாதிரியே தெரிஞ்ச இடத்தில ஏதாவது மாப்பிள்ளை இருக்கான்னு பார்க்கச் சொல்லி இருக்கேன். நீயும் உனக்குத் தெரிஞ்ச இடத்தில மாப்பிள்ளை இருந்தா சொல்லு..." என்றார்.

"என் வீட்டுக்காரருக்குத் தூரத்துச் சொந்தம் தங்கச்சி முறை, இங்கே சென்னையிலதான் இருக்காங்க. அவங்களை நான் ஆதி வரவேற்புல பார்த்தேன். அவங்க பையன் கூட நம்ம அர்ஜுன் ப்ரெண்ட்தான், அவன் பேரு ஆர்யாவோ, சூர்யாவோ..." காயத்திரி தெரியாதது போல் இழுக்க...

"சூர்யாதான் அவன் பேரு. அவங்க நமக்குச் சொந்தமா...? இது எனக்கு இப்ப நீ சொல்லித்தான் தெரியும்." வித்யா சொல்ல...

"அவங்க குடும்பம் நல்ல குடும்பம்னா, நீ அங்கேயே ஆருவைச் செய்யலாமே..." என்றார் காயத்திரி.

"குடும்பம் நல்ல குடும்பம்தான், பையனும் ஆருவுக்குப் பொருத்தமா இருப்பான். ஆனா அவனுக்கும் அர்ஜுன் வயசுதான் இருக்கும். அவங்க வீட்ல இவ்வளவு சீக்கிரம் கல்யாணம் பண்ணுவாங்களான்னு தெரிய லையே..." வித்யா யோசிக்க...

"அர்ஜுன் வயசுன்னா இப்ப இருப்பத்தஞ்சு வயசு நடக்குமே... இன்னும் ஆறு மாசம் கழிச்சு வேணா கல்யாணம் வச்சுப்போம்." காயத்ரி யோசனை சொல்ல...

வித்யா, "சரி, பார்ப்போம்..." என்றார்.

அன்று இரவு எல்லோரும் சேர்ந்து அமர்ந்து சாப்பிடும் போது... வித்யா, தன் அக்கா சொன்னதைச் சொல்லி, "ஆருவுக்கு வேணா சூர்யாவைப் பார்ப் போமா...?" என்றவர், அர்ஜுனிடம், "நீ என்னடா சொல்ற? உன்னோட ப்ரெண்ட்தானே சூர்யா... அவனுக்கு நம்ம ஆருவைக் கல்யாணம் செய்யலாமா...? சொல்லு..." என்று கேட்டார்.

ஆருவுக்குத் தன் அம்மா சொன்னதைக் கேட்டதும் முகம் நொடியில் தாமரையாக மலர்ந்தது. அர்ஜுன், அவளை ஓரக்கண்ணில் பார்த்துக் கொண்டே உடனே பதில் சொல்லாமல் யோசிக்க... ஆரு அவனையே தவிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"என்னடா இவ்வளவு யோசிக்கிற? அந்தப் பையன் வேண்டாமா...?" வித்யா கேட்க... ஆருவின் முகம் வாடிவிட்டது. அவளுக்கு எதையாவது தூக்கி அர்ஜுனின் மண்டையில் போட்டு விடலாமா என்று நினைக்கும் அளவிற்கு ஆத்திரம். கணேசனும், ஆதியும் அங்கே நடப்பதை சுவாரசியமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"இருங்க அம்மா, யோசிக்க விடுங்க. தங்கச்சியா... நட்பான்னு யோசிக்கிறேன். தங்கச்சிக்காக நட்புக்குத் துரோகம் செய்ய முடியாது இல்ல... சூர்யா நல்லவன்,

திறமையானவன், ரொம்பச் சாது. பாவம், அவன் தலையிலே இவளைக் கட்டப் பார்க்கிறீங்களே... அது தான் என்ன பண்றது...?" என்று அர்ஜுன், தலையில் தட்டி யோசிப்பது போல் நடிக்க...

அவன் சொன்னதைக் கேட்ட வித்யா சிரித்துக் கொண்டே அர்ஜுனின் தலையில் கொட்டி, "வாலு... எல்லாத்திலேயும் விளையாட்டுத்தான்..." என்றவர், மற்றவர்களைப் பார்த்து, "அப்ப சூர்யாவையே ஆருவுக் குப் பார்க்கலாமா...?" என்று கேட்க... எல்லோரும் சந்தோஷமாகச் சரி என்றனர்.

ஆருவிற்கு நம்பவே முடியவில்லை. நடப்ப தெல்லாம் கனவு போல் இருந்தது. அன்று இரவு எல்லோரும் சென்று படுத்ததும் அர்ஜுனின் அறைக்கு வந்தவள், "அர்ஜுன், ரொம்பத் தேங்க்ஸ்... நீ எனக்கு ஹெல்ப் செய்ய மாட்டேன்னு நினைச்சேன்... நீ மட்டும் இல்லைன்னா என்னுடைய நிலைமை...?" என்று சொல்லி அழ...

அர்ஜுன், அவள் கண்ணீரைத் துடைத்து, "சூ... முதல்ல இப்படி எதுக்கெடுத்தாலும் அழறதை நிறுத்து. சூர்யாங்கிறதுனால ஈஸியா முடிஞ்சது, இல்லைன்னா கஷ்டம்தான்..." என்றவன், "ஐஷு உன்னையே பார்க்கிறா பாரு..." என்று சொல்ல...

ஆரு அங்கு கட்டிலில் அமர்ந்து அவர்களையே பார்த்துக் கொண்டிருந்த ஐஷுவைத் தூக்கிக் கொஞ்ச... அது அழகாகச் சிரித்தது. ஆரு அவள் அறைக்குச்

சென்றதும், அர்ஜுன் கட்டிலில் படுத்து... ஜஷுவைத் தூக்கித் தன் வயிற்றில் உட்கார வைத்தவன், "உங்க சித்திகிட்ட பேசுவோமாடா செல்லம்...?" என்று சொல்லிக்கொண்டே மீராவை அழைத்தான்.

மறுநாள் அலுவலக இடைவேளையில் சூர்யாவை சந்தித்த அர்ஜுன், "லவ் மட்டும் பண்ற, கல்யாணத்துக்கு ஒரு முயற்சியும் செய்ற வழியைக் காணோம்..." என்று கேட்க...

"இப்ப என்னடா அவசரம்? இப்ப தானே வேலையில சேர்ந்திருக்கேன்... இன்னும் ரெண்டு வருஷம் போகட்டும்." சூர்யா லகுவாகச் சொல்ல...,

"அப்படியா சரி... ஆருவுக்கு எங்க வீட்ல மாப்பிள்ளை பார்க்கிறாங்க. நீ பொறுமையா ரெண்டு வருஷம் கழிச்சு வா... அநேகமா அவளுக்குக் குழந்தை இருக்கும்..." என்றான் அர்ஜுன் நக்கலாக.

"என்னடா சொல்ற? ஆருவுக்கு மாப்பிள்ளை பார்க்கிறங்களா...?" என்று சூர்யா அலற... அர்ஜுன் "ஆமாம்..." என்றான்.

"டேய், இப்ப என்னடா பண்றது? நான் எங்க வீட்ல சொல்லி, உங்க வீட்ல வந்து பேசச் சொல்லவா...?" சூர்யா கேட்க...

'ஹப்பா... இவனாவது தைரியமா இருக்கானே...' என்று நினைத்த அர்ஜுன், "எங்க வீட்ல ஆரு கல்யாணப் பேச்சை ஆரம்பிச்சதும், நான் எங்க பெரியம்மா மூலமா...

உன்னை ஆருவுக்குப் பார்க்கலாம்னு சொல்லச் சொன்னேன். அதுக்கு எங்க வீட்லேயும் சரின்னு சொல்லிட்டாங்க. அதனால நீ உங்க வீட்ல மட்டும் பார்த்துக்க. அப்புறம் ஒரு விஷயம், மறந்திடாத..., எங்க வீட்ல உங்க லவ் மேட்டர் தெரியாது... இது அரேஞ்ட் மேரேஜ்தான்..." என்றான்.

சூர்யா, அர்ஜுனின் கையைப் பிடித்துக் கொண்டு, "மச்சான், எங்களுக்காக நீ எவ்வளவு வேலை பார்த் திருக்க... ரொம்பத் தேங்க்ஸ்டா. ஆமாம், ஆரு ஏன் மாப்பிள்ளை பார்க்கிற விஷயத்தை என்னிடம் சொல் லலை...?" என்றான் யோசனையாக.

"மாப்பிள்ளை பார்த்ததும்தான் அவகிட்ட சொல்ல லாம்னு இருந்தாங்க. அவளுக்கு நேத்துதான் தெரியும்..." என்று சொல்லி அர்ஜுன் சமாளிக்க... சூர்யாவும் அதை நம்பி விட்டான்.

31

சூர்யா, அவனுடை'ய அக்கா மதுவிற்கு அழைத்துத் தாள் ஆருவை காதலிப்பதாகச் சொல்ல...

"நான் இதை எதிர்பார்த்தேன். நீ ஆஸ்திரேலியால இருந்துதான் யாரையாவது தள்ளிட்டு வருவேன்னு நினைச்சேன், பரவாயில்லை, நம்ம ஊரு பொண்ணு தான். அதுவும் ஆராதனாவை எனக்கு ரொம்பப் பிடிக்கும்..." என்றாள்.

"மது, நீதான் அம்மா, அப்பாகிட்ட எப்படியாவது பேசிச் சம்மதம் வாங்கணும். ஆருவோட பெரியம்மா நமக்குச் சொந்தம்தான். ஆரு வீட்ல அர்ஜுன் தவிர மத்தவங்களுக்கு, நாங்க லவ் பண்றது தெரியாது. அதனால அரேஞ்ட் மேரேஜ் மாதிரிதான் கொண்டு போகணும். நீ இதையும் அம்மா, அப்பாகிட்ட சொல்லிடு."

"நீ கவலைப்படாதே சூர்யா, நான் இன்னைக்கு நம்ம வீட்ல பேசுறேன். மறுக்கக் காரணம் எதுவும் பெரிசா இல்லை, அதனால ஒத்துக்குவாங்கன்னுதான் நினைக்கிறேன்." மது சொல்ல... சூர்யாவும் தன் பெற்றோர் தங்கள் காதலை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கடவுளைப் பிரார்த்தித்தான்.

மதுவும் சொன்னது போல் அன்றே தன் பெற்றோரிடம் சூர்யா, ஆருவை விரும்புவதைச் சொன்னாள். சூர்யாவின் அம்மா அவனைப் பார்த்து, "நீயே உனக்குப் பொண்ணு பார்த்துக்கிற அளவு வளர்ந்திட்ட, நாங்கெல்லாம் உனக்குத் தேவை இல்லை..." என்றார் வருத்தமாக.

"அம்மா, ப்ளீஸ்... நான் பிளான் பண்ணி லவ் மேரேஜ்தான் பண்ணிக்கணும்னு நினைக்கலை. எனக்கு ஆராதனாவைப் பிடிச்சிருக்கு. அவ எனக்கு மனைவியா வரணும்னு ஆசை. ஆனால்... உங்களுக்கு விருப்பம் இல்லைன்னா... வேண்டாம், இதோட விட்டுடுங்க. ஆனா... என்னை வேறு யாரையும் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி வற்புறுத்தக் கூடாது." சூர்யா உறுதியாகச் சொல்ல...

"இதை ஒண்ணு சொல்லி நல்லா பயமுறுத்துங் கடா... உங்களுக்குக் காலேஜ்ல இதெல்லாம்தான் சொல்லித் தராங்களா... பெத்தவங்களை எப்படிக் கார்னர் பண்றதுன்னு..." அவன் அம்மா கேட்க... சூர்யா இதற்கு மேல் என்ன சொல்வது என்று தெரியாமல், அவரைப் பரிதாபமாகப் பார்த்தான்.

"போதும்... அவனைப் போட்டு ஏன் படுத்துற? நல்ல பொண்ணாத்தான பார்த்திருக்கான். உனக்குப் பொண்ணு தேடுற வேலை மிச்சம். இந்தக் காலத்தில பொண்ணு கிடைக்கிறதே கஷ்டமா இருக்கு, அவன் உனக்கு நோகாம ஒரு நல்ல பொண்ணா பார்த் திருக்கான், சரின்னு சொல்லிட்டுப் போவியா... அதை விட்டுட்டு உன்னோட கெத்தக் காட்ற நேரமா இது...?" சூர்யாவின் அப்பா கேட்க...

சூர்யாவின் அம்மா, "நீங்களும் அவனோட சேர்ந்துட்டீங்களா... இனி உருப்பட்ட மாதிரி தான்..." என்று அலுத்துக் கொண்டார்.

சூர்யா சென்று அவன் அம்மாவின் அருகே அமர்ந்தவன், "அம்மா, உங்களுக்கு நிஜமா ஆராதனா வைப் பிடிக்கலையா? அவ ரொம்ப நல்ல பொண்ணும்மா..." என்றான் தவிப்பாக.

மகனின் தவிப்பை உணர்ந்த அவன் அம்மா, "தன்னோட பையனுக்குத் தான் பெண் பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்கணும்னு... எல்லா அம்மாவுக்கும் ஆசை இருக்கும்... அதனால நான்

அப்படிப் பேசினேன். எனக்கு ஆராதனாவைப் பிடிச் சிருக்கு, கவலைப்படாதே...” என்றவர், “நாம அவங்க வீட்ல எப்படிப் பேசுறது?” என்று கேட்க... சூர்யாவின் முகம் மலர்ந்தது.

“ரொம்பத் தேங்க்ஸ்மா...” என்றவன் தொடர்ந்து, “அர்ஜுன் இன்னைக்குச் சாயங்காலம் அவங்க பெரியம்மாவோட நம்ம வீட்டுக்கு வரேன்னு சொல்லி இருக்கான். அவங்க வந்ததும் எப்படின்னு பேசி முடிவு பண்ணிக்கலாம்...” என்றான்.

சூர்யா சொன்னது போலவே அர்ஜுன் மாலை நான்கு மணிக்குத் தன் பெரியம்மாவை அழைத்துக் கொண்டு அவர்கள் வீட்டுக்கு வந்தான். டிபன், காபி சாப்பிட்டதும் காயத்திரியே பேச்சை ஆரம்பித்தார்.

“உங்களுக்கு விஷயம் தெரிஞ்சிருக்கும், பசங்க ஆசைப்படறாங்க, அதுவும் நாம ஒருத்தருக்கு ஒருத்தர் சொந்தம் வேற... எனக்கு உங்க பையன்னு தெரிஞ்சதும் ரொம்பச் சந்தோஷம்... அதுதான் நானே நேர்ல வந்தேன்.”

“எங்களுக்கும் உங்க குடும்பம்னு தெரிஞ்சதும் சந்தோஷம்தான், இருந்தாலும் பொண்ணு வீட்ல இவங்க காதல் தெரியாது போலிருக்கே...” என்று சூர்யாவின் அப்பா இழுக்க...

“ஆதி வரவேற்புல உங்க பையன்தான் சூர்யான்னு தெரிஞ்சதும், ஆருவுக்குச் சூர்யாவைக் கல்யாணம் செஞ்சா நல்லா இருக்குமேன்னு நான் அப்பவே

நினைச்சேன். அதனால நாம இதைக் காதல் கல்யாணமா பார்க்காம, நாம பார்த்து செஞ்சு வைக்கிற கல்யாண மாவே நினைச்சுப்போம்.”

“என்னோட தங்கை வீட்ல என் பேச்சைத் தட்ட மாட்டங்க. நான் சூர்யாவுக்கு ஆருவைச் செய்யலாம்னு சொன்னதும், அவங்களுக்கு ரொம்பச் சந்தோசம்...” என்று காயத்திரி ஒரு பெரிய ஐஸ் கட்டியைத் தூக்கி சூர்யாவின் பெற்றோர் தலையில் வைக்க... அவர்களும் அதில் உருகி, பெரியம்மா சொன்னதுக்குச் சந்தோஷப்பட்டனர்.

“நீங்க எப்ப எங்க வீட்டுக்குப் பெண் பார்க்க வர்றீங்க?” காயத்திரி கேட்க...

“சூர்யா இப்பதான் வேலையில சேர்ந்திருக்கான், அதுக்குள்ள கல்யாணமான்னுதான் யோசிக்கிறோம்...” சூர்யாவின் அம்மா சொல்ல...

“நீங்க சொல்றதும் கரெக்ட்தான். ஆனா நல்ல விஷயத்தைத் தள்ளிப் போட வேண்டாம். அடுத்த வாரம் ஞாயிற்றுக்கிழமை நாள் நல்லா இருக்கு, நீங்க அன்னைக்குப் பொண்ணு பார்க்க வாங்க. நாம நமக்குள்ள பேசி உறுதி பண்ணிக்கலாம். நமக்கும் மண்டபம் கிடைக்கணும், கல்யாணம்னா ஏகப்பட்ட வேலை இருக்கே. எப்படியும் கல்யாணம் வைக்க ஆறு மாசமோ, இல்லை எட்டு மாசமோ ஆகிடும்.” காயத்திரி சொல்ல...

சூர்யாவின் பெற்றோரும், “ஆமாம், சரிதான்...” என்றனர்.

அர்ஜுனும், பெரியம்மாவும் வெற்றிகரமாக சூர்யா, ஆரு திருமணத்தைப் பற்றிப் பேசிவிட்டு வெளியே வந்ததும், அர்ஜுன் தன் பெரியம்மாவை வண்டியில் வைத்து அழைத்துக் கொண்டு அவர்கள் வீட்டுக்குச் செல்லாமல், மீரா வீட்டுக்குச் சென்றான்.

அன்று சனிக்கிழமை, மீரா பெங்களூரில் இருந்து வந்து இருந்தாள். அவர்கள் வருவது மீராவுக்குத் தெரியாது. வீட்டில் வேறு யாரும் இல்லை. எல்லோரும் வெளியே சென்று இருந்தனர். வீட்டில் வேலை செய்யும் பெண், மீராவை இண்டர்காமில் அழைத்து, அர்ஜுன் வந்திருப்பதாகச் சொல்ல... மீரா துள்ளிக் குதித்துக் கீழே இறங்கி வந்தாள்.

மீரா, காயத்திரியைப் பார்த்ததும் உற்சாகமாகி, "அத்தை, வாங்க... வாங்க..." என்று அவரைச் சந்தோஷமாக வரவேற்றுக் கட்டிக் கொண்டவள், அவரிடம் பாச மழை பொழிய... அர்ஜுன், அவள் தன்னைக் கண்டு கொள்ளவில்லை என்ற கடுப்பில் இருந்தான்.

மீரா, அர்ஜுனுக்குப் பிடித்த ரசமலாய்யும், முந்திரிப் பக்கோடாவும் கொண்டு வந்து இருவருக்கும் கொடுத்த வள். "அத்தை, நீங்க இருந்து நைட் சாப்பிட்டுட்டுத்தான் போகணும்..." என்றாள்.

"ஏற்கெனவே சூர்யா வீட்ல டிபன் சாப்பிட்டோம் மீரா... இப்ப நீ வேற ஸ்நாக்ஸ் கொடுத்திருக்க. இனி நைட் ஒண்ணும் சாப்பிட முடியாது. எனக்கு உங்க வீட்ல

போடற பில்டர் காபி பிடிக்கும், அது வேணா கொடு..." காயத்திரி சொல்ல... மீரா வேலை செய்யும் பெண்ணை அழைத்து, இரண்டு பில்டர் காபி கொண்டு வரச் சொன்னாள்.

அர்ஜுன் தனக்குக் காபி வேண்டாம் என்றான். மீரா, "சரி, ஒரு காபி கொண்டு வா..." என்று அந்தப் பெண்ணை அனுப்பிவிட்டுக் காயத்திரியிடம் பேச... அவரும் சூர்யா வீட்டில் நடந்ததைச் சொல்ல... அதைக் கேட்ட மீராவிற்கு மிகவும் சந்தோஷம்.

வேலை செய்யும் பெண் காபியைக் கொண்டு வந்து மீராவிடம் கொடுக்க... அவள் காயத்திரிக்குக் கொடுத்துவிட்டு அர்ஜுனைத் தேடினாள். அர்ஜுன் வெளியே தோட்டத்தில் நின்று கொண்டிருந்தான். மீரா, காயத்திரிக்கு டி.வி. போட்டுவிட்டு, "பார்த்திட்டு இருங்க அத்தை, இதோ வரேன்..." என்று அர்ஜுனிடம் சென்ற வள், அவனை அழைத்துக் கொண்டு தள்ளிச் சென்றாள்.

அர்ஜுன் எதற்கு என்று புரியாமல் பார்க்க... மீரா தோட்டத்தின் உள்ளே சென்றதும், அர்ஜுனை இறுக அணைத்துக் கொண்டாள். அர்ஜுன், மீராவின் முகத்தை நிமிர்த்தி, "என்ன மேடம்... இவ்வளவு நேரம் கண்டுக்காம இருந்தீங்க, இப்ப திடீர்னு கட்டிப் பிடிக்கிறீங்க...?" என்றவன், லேசாக மீராவின் நெற்றியில் முட்ட... மீராவிற்குக் கண்ணெல்லாம் கலங்கி விட்டது.

"என்னடா மீரா...? என்ன ஆச்சு...? ஏன் கண்ணெல்லாம் கலங்குது...?"

"அர்ஜுன், நம்ம கல்யாணமும் நல்லபடியா நடக்கும் இல்ல..."

"அதுல உனக்கு என்ன சந்தேகம்? கண்டிப்பா நடக்கும்."

"அர்ஜுன், நாம வித்யா ஆன்ட்டி முழு மனசோட ஒத்துக்கிற வரை... அது எவ்வளவு நாள் ஆனாலும் காத்திருக்கணும். அவங்க சம்மதம் இல்லாம, நாம கல்யாணம் பண்ணிக்கக் கூடாது." மீரா கண்ணீரோடு சொல்ல...

"கண்டிப்பா மீரா, அம்மா சம்மதத்தோடதான் நம்ம கல்யாணம் நடக்கும். நீ ஏன் இதுக்கு இவ்வளவு கவலைப்படுற...? நான் பார்த்துக்கிறேன்..." என்றவன், அவள் கண்ணீரைத் துடைத்து, அவள் இதழில் லேசாக முத்தமிட்டு, "வா, போகலாம்..." என்று அவளை அழைத்துக் கொண்டு உள்ளே வந்தான்.

உள்ளே வந்த மீராவைப் பார்த்துக் காயத்திரி, "அழுதியா என்ன...? கண்ணெல்லாம் கலங்கி இருக்கு..." என்று கேட்க...

"அவளுக்கு அம்மா எங்க கல்யாணத்துக்கு ஒத்துக்க மாட்டாங்களோன்னு பயம்..." என்றான் அர்ஜுன்.

"இதுல பயப்பட என்ன இருக்கு?" என்றதும், அர்ஜுன், மீரா இருவரின் முகமும் மலர்ந்தது. அவர்கள் இருவரின் முகத்தைப் பார்த்த காயத்திரி,

"இதுல என்ன சந்தேகம்? கண்டிப்பா வித்யா உங்க கல்யாணத்துக்கு ஒத்துக்க மாட்டா..." என்றார் சாதாரண

மாக. அர்ஜுன் அவனின் பெரியம்மாவைப் பார்த்து முறைக்க...

"என்னடா லுக்கு...? கண்டிப்பா உங்க அம்மா ஒத்துக்கமாட்டா. அதுக்காக நீ அப்படியே விட்டுடவா போற, அப்புறம் எதுக்கு ஃபீலிங்ஸ்? எதுவுமே உடனே கிடைச்சுட்டா அதோட அருமை தெரியாது. போராடுங்க... கண்டிப்பா நினைத்ததைச் சாதிக்கலாம்..." என்றார் உறுதியாக.

அவர் சொன்னதைக் கேட்ட அர்ஜுன், மீரா இருவருக்கும் மனதில் நம்பிக்கை வந்தது. பெரியம்மா பேசுவதைக் கேட்டுக் கொண்டே உள்ளே வந்த மீராவின் அப்பா, "நீங்க சொல்றது ரொம்பச் சரிம்மா..." என்றார்.

மீராவின் அப்பாவையும், சித்தியையும் பார்த்துக் காயத்திரியும், அர்ஜுனும் எழுந்து நிற்க... ராம்நாத், காயத்திரியைப் பார்த்து, "வாங்கம்மா, உட்காருங்க..." என்றவர், அர்ஜுனிடம், "எப்படி இருக்க அர்ஜுன்? நானே உன்னைப் பார்க்கணும்னு நினைச்சேன்..." என்றார்.

"நான் நல்லா இருக்கேன் அங்கிள்... நீங்க எப்படி இருக்கீங்க?" அர்ஜுன் கேட்க...

ராம்நாத், அர்ஜுனின் அருகில் வந்து அவனைத் தோளோடு சேர்த்து அணைத்து, "நானும் நல்லா இருக்கேன்..." என்றவர், மீனாட்சியைப் பார்க்க, அவள், அவர்களைப் பார்த்து, "நைட் சாப்பிட்டுட்டுத்தான் போக ணும்... நான் டிபன் ரெடி பண்ணச் சொல்றேன்..." என்றாள்.

"இப்பதான் மீரா ஸ்நாக்ஸ் கொடுத்தா... அதுவே போதும். இன்னொரு நாள் வரும் போது சாப்பிடுறோம்." காயத்ரி சொல்ல... மீனாட்சியும் சரி என்று அவர்களோடு அங்கேயே அமர்ந்தாள்.

ராம்நாத், அர்ஜுனிடம் தனியாகப் பேச வேண்டும் என்று அவனை அழைத்துக் கொண்டு அவரது அலுவலக அறைக்குச் செல்ல... காயத்திரியும், மீனாட்சியும் ஒருவருக்கொருவர் நலம் விசாரித்துக் கொண்டனர். ராம்நாத்தும், அர்ஜுனும் என்ன பேசப் போகிறார்களோ என்று மீரா டென்ஷனாக இருந்தாள்.

"அர்ஜுன், மீரா என்கிட்டே உன்னை விரும்புறேன்னு சொன்னா... ஒரு அப்பாவா முதல்ல எனக்குக் கொஞ்சம் ஷாக்தான். ஆனா, எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு... என் பொண்ணு அவளாத் தேர்ந்தெடுத்தாலும் நல்ல மாப்பிள்ளையாத்தான் தேர்ந்தெடுத்திருக்கா... எனக்கு இந்த ஜாதி நம்பிக்கை எல்லாம் கிடையாது. யாரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் அங்கே அன்பும், ஒருத்தருக்கொருத்தர் விட்டுக் கொடுக்கிறதும்தான் ரொம்ப முக்கியம். அது இல்லைன்னா எந்தக் கல்யாணமும் வெற்றி பெறாது. இதுக்கு நானே உதாரணம். அதனால நான் அவ விருப்பத்தை மறுக்கலை..." என்ற ராம்நாத் தொடர்ந்து,

"மீராவுக்கு உங்க குடும்பத்தோட நல்ல ஒட்டுதல் இருக்கு... அவ உங்க வீட்டுக்கு மருமகளா வந்தா சந்தோஷமா இருப்பா... எனக்குத் தெரியும். நானும் ஒரு

அப்பாவா எதிர்பார்க்கிறது அதுதான். உனக்கே தெரியும், என் பெண்ணை நானோ... இல்லை, அவ அம்மாவோ, சீராட்டி வளர்க்கலை. அவளுக்கு அந்த ஏக்கம் மனசுல இருக்கும்.

"அதனால உன் கூட மட்டும் இல்லாம, உன் குடும்பத்தோடவும் சேர்ந்து இருக்கணும்னு ஆசைப்படுறா. அவ ஆசை நியாயமானதுதான். அதனாலதான் நான் உங்க கல்யாண விஷயத்தில தலையிடலை. நீயும், மீராவும் எப்ப உங்க வீட்ல பேசச் சொல்றீங்களோ, நான் அப்ப வந்து பேசுறேன்..." என்றார்.

அர்ஜுன் அவர் கைப்பிடித்து அழுத்தி, "தேங்க்ஸ் மாமா, நான் உங்க நம்பிக்கையைக் கண்டிப்பா காப்பாத்துவேன். என் தங்கைக்குக் கல்யாண ஏற்பாடு செஞ்சுக்கிட்டு இருக்கோம்... நான் நேரம் பார்த்து அம்மாகிட்ட பேசுறேன். அம்மாவுக்குக் காதல் திருமணம் மேல அவ்வளவு நம்பிக்கை இல்லை... ஆனா சொன்னாப் புரிஞ்சிப்பாங்க. அதுவும் மீரான்னு தெரிஞ்சா மறுக்க மாட்டாங்கன்னுதான் நினைக்கிறேன்..." என்றான் புன்னகையுடன்.

"அப்படி நடந்தா எனக்கும் சந்தோஷம்தான்..." என்ற ராம்நாத், அர்ஜுனிடம் அவன் வேலையைப் பற்றி விசாரிக்க... அர்ஜுனும் அவருக்குப் பதில் சொன்னான். இருவரும் சிறிது நேரம் கழித்து வெளியே வர... மீரா அவர்கள் இருவரின் முகத்தையும் ஆர்வமாகப் பார்க்க... இருவரின் முகத்திலும் புன்னகை இருந்தது. 'ஹப்பா...'

என்று நிம்மதியானவள், அவர்கள் இருவரையும் பார்த்துச் சந்தோஷமாகச் சிரித்தாள்.

அர்ஜுன், அவன் பெரியம்மாவோடு வீட்டுக்குள் நுழைந்ததும், அவர்களுக்காக ஆவலுடன் காத்திருந்த வித்யா, "ரெண்டு பேரும் எங்கே போனீங்க? உங்க ளுக்காக எவ்வளவு நேரம் காத்திருக்கிறது? அவங்க வீட்ல என்ன சொன்னாங்க...?" என்று கேள்விகளாக அடுக்க...

"நானும், அர்ஜுனும் சூர்யா வீட்ல இருந்து அப்படியே மீரா வீட்டுக்குப் போனோம். அவ வீடு அங்கே தானே இருக்கு. அதுதான் லேட். சூர்யாவோட அம்மா, அப்பா ரெண்டு பேருக்கும் நம்ம குடும்பத்தோட சம்பந்தம் பண்ண ரொம்ப இஷ்டம்... அவங்க சரின்னு சொல்லிட்டாங்க. அடுத்த ஞாயிற்றுக்கிழமை பெண் பார்க்க வராங்க." விளக்கமாகக் காயத்திரி சொல்ல... வித்யா நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

இவர்கள் பேசுவதை மறைந்து நின்று கேட்டுக் கொண்டிருந்த ஆருவுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. அவள் துள்ளிக் குதித்துத் தன் அறைக்குச் சென்றாள்.

அன்று இரவு குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்து அமர்ந்து ஆராதனாவைப் பெண் பார்க்க வருவதைப் பற்றி மகிழ்ச்சியுடன் பேசினார்கள்.

அர்ஜுனின் வீடு... சூர்யா, ஆராதனாவைப் பெண் பார்க்க வரும் நன்னாளுக்காகத் தயாராகியது.

மறு நாள் அர்ஜுன், மீராவை அழைத்துக் கொண்டு ஆருவுக்கும், சூர்யாவுக்கும் பரிசுப் பொருள் வாங்க ஷாப்பிங் சென்றான்.

இரவு அவளை ரெயில் நிலையம் அழைத்துக் கொண்டு சென்றவன், அங்கே அவளோடு அமர்ந்து பேசிக்கொண்டிருந்தான்.

"அடுத்த வாரம் ஆருவைப் பெண் பார்க்க வர்றதுனால... என்னையும் வரச் சொல்லி ஆருவும், வித்யா ஆன்ட்டியும் சொல்லி இருக்காங்க. இன்னும் அஞ்சு நாள்தான் இருக்கு, உங்களைப் பார்க்க..." என்றாள் மீரா மகிழ்ச்சியுடன்.

அர்ஜுனுக்கு அவளை நினைத்து வருத்தமாக இருந்தது.

மீராவுக்கு இப்பொது மீனாட்சியினால் தொல்லை என்று எதுவும் இல்லை என்றாலும், சிறு வயதில் ஏற்பட்ட காயம் இன்னும் அவள் மனதில் ஆறவில்லை. அதனால் அவளால் முழு மனதோடு அவள் வீட்டில் தங்க முடியவில்லை. அதே நேரத்தில் அவளால் தன்னைப் பிரிந்தும் இருக்க முடியவில்லை என்பதும் அர்ஜுனுக்குப் புரிந்தது.

'மனதிற்குள் தவித்துக் கொண்டு வெளியில் சிரிக்கும் மீராவின் துயரைத் துடைக்கவாவது தங்களுக் குச் சீக்கிரம் திருமணம் நடந்தால் நன்றாக இருக்கும்...' என்று அர்ஜுன் நினைத்தான். அர்ஜுன் நினைப்பது நடக்குமா...?

32

ஞாயிற்றுக்கிழமை மாலை நான்கு மணிக்கு அர்ஜுனின் வீடே பரபரப்பாக இருந்தது. மீரா, ஆருவை அழகாக அலங்கரித்துக் கொண்டு இருந்தாள். வித்யா, காயத்ரி மற்றும் ரஞ்சனா மூவரும் சேர்ந்து மாலை சிற்றுண்டி தயார் செய்து கொண்டிருந்தனர். கணேசனும், ஆதியும் ஏற்கெனவே கடையில் இருந்து வந்து விட்டனர், இன்னும் அர்ஜுன் மட்டும்தான் வரவில்லை.

சரியாக மாலை ஐந்து மணிக்குச் சூர்யா, தன் குடும்பத்தினர் மற்றும் நெருங்கிய உறவினர்களுடன் உள்ளே நுழைந்தான்.

அப்போதுதான் அர்ஜுனும் வந்தான். வந்தவர் களை வாசல் வரை சென்று வரவேற்ற கணேசன் தம்பதியர், அவர்களை உள்ளே அழைத்து வந்து அமர வைத்தனர்.

வந்தவர்களுக்கு ரஞ்சனா டிபன் கொண்டு வந்து கொடுக்க... அதை எல்லோரும் எடுத்துக் கொண்டனர். சூர்யாவின் அக்கா மதுவும் தன் குடும்பத்தோடு வந்தி ருந்தாள். அவளின் கணவன் ஸ்ரீதரோடு ஆதி பேசிக்கொண்டிருக்க... கணேசன், சூர்யாவின் அப்பா வோடு பேசிக்கொண்டிருந்தார். இப்படி அங்கிருந்த எல்லோரும் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டிருக்க, சூர்யா, 'இவங்க ஆருவைக் கண்ணிலேயே காட்டா மாட்டாங்க போலிருக்கே...' என்று நொந்தபடி அமர்ந்து இருந்தான்.

அப்போது அவன் பக்கத்தில் வந்து அமர்ந்த அர்ஜுன், "அப்புறம், மாப்பிள்ளை ஏன் டல்லா இருக்க...?" என்று கேட்க...

"டேய், நாங்க இங்க பொண்ணு பார்க்கத்தான வந்திருக்கோம்... ஆனா... டிபன் சாப்பிட வந்த மாதிரி எல்லோரும் அதிலேயே கவனமா இருக்காங்களே..." சூர்யா வருத்தமாகச் சொல்ல...

"ஏன் ஆரு, இங்கே வந்தாத்தான் உனக்கு டிபன் இறங்குமா? இல்லைன்னா இறங்காதா?" அர்ஜுன் பதிலுக்குக் கிண்டலடிக்க...

"நான் பொண்ணு பார்க்கத்தான் வந்தேன்... எனக்கு டிபன் வேண்டாம்." சூர்யா பல்லைக் கடிக்க...

அர்ஜுனின் மடியில் இருந்த ஜஷுவோடு விளை யாடிக் கொண்டிருந்த ப்ரீத்தி, தன் அம்மா மதுவிடம் திரும்பி, "அம்மா... மாமா பொண்ணுதான் பார்க்க வந்தாங்களாம்... அவங்களுக்கு டிபன் வேண்டாமாம்..." என்று சத்தமாகச் சொல்ல... ஹாலில் இருந்த அனை வரும் அதைக் கேட்டுச் சிரித்தனர்.

சூர்யா அசடு வழிய... அர்ஜுன் சிரிப்பை அடக்கிக் கொண்டு அமர்ந்து இருந்தான். அர்ஜுனின் பெரியம்மா ரஞ்சனாவிடம், "நீ போய் ஆராதனாவை அழைச்சிட்டு வா..." என்று சொல்ல... ரஞ்சனாவும் ஆருவை அழைக்கச் சென்றாள்.

"இந்தச் சின்னப் பிசாசு இருந்ததைக் கவனிக்காம சொல்லிட்டேன்..." என்ற சூர்யா தொடர்ந்து, "ஆமா...

இந்தக் குட்டி எப்படி? இது முன்னாடியாவது தைரியமாகப் பேசலாமா...?" என்று ஜஷுவைக் காட்டி அவன் கேட்க...

"மேடம் இன்னும் பேச ஆரம்பிக்கலை... பேச ஆரம்பிச்சாத்தான் தெரியும்..." என்று அர்ஜுன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே... அங்கே ஆருவை அழைத்துக் கொண்டு ரஞ்சனாவும், அவர்களோடு மீராவும் வந்தாள். சூர்யா, ஆருவைப் பார்க்க... அர்ஜுன், மீராவைப் பார்த்தான்.

ஆரு எல்லோருக்கும் பொதுவாக ஒரு நமஸ்காரம் செய்துவிட்டு, சோபாவில் சூர்யாவின் அம்மா அருகே சென்று அமர்ந்தாள். மீரா சற்றுத் தள்ளிச் சென்று ஓரமாக நின்று கொண்டு ஹாலில் நடப்பதைக் கவனித்தாள். சூர்யாவின் அம்மா விஜயாவும், மதுவும் ஆருவிடம் ஏதோ கேட்க, அவள் அதற்குப் பதில் சொல்லிக்கொண்டிருந்தாள்.

மீராவுக்கு அர்ஜுன் தன்னையே பார்ப்பது தெரிந்து தான் இருந்தது. ஆனால், அவனைக் கண்டு கொள்ளா மல் இருந்தாள். மீரா இள மஞ்சள் நிறத்தில் காட்டன் புடவை கட்டி இருந்தாள். ஆனால், அதிலேயே பார்க்க மிகவும் அழகாக இருந்தாள். கழுத்தில் அர்ஜுன் அவள் பிறந்த நாளுக்கு என்று கொடுத்த செயின் மட்டும்தான் இருந்தது. மீரா இதுவரை அந்தச் செயினைக் கழட்டியதே இல்லை... அது அர்ஜுனுக்கும் தெரியும்.

மீரா, சுற்றி எல்லோரையும் ஒருமுறை பார்த்து விட்டு, அர்ஜுன் இருக்கும் பக்கம் திரும்பி, "போதும்

பார்த்தது..." என்று வாயசைத்து முறைக்க, அர்ஜுன் சிரித்துக் கொண்டே அவன் பார்வையை அவள் மேலிருந்து திருப்பினான்.

சூர்யாவின் பெற்றோர் ஏற்கெனவே ஆருவைப் பார்த்து இருந்தாலும், இன்று முறைப்படி பார்த்ததும் அவர்களுக்கு மனதில் இருந்த சிறு சஞ்சலமும் மறைந்து அவளை ரொம்பவே பிடித்தது. அதே போல் கணேசன் தம்பதியருக்கு, சூர்யாவின் குடும்பம் ஏற்கெனவே பழக்கம் என்றாலும், இதுவரை நண்பர்களாக இருந்தவர்கள், இப்போது உறவினர்கள் என்னும்போது எப்படி இருப்பார்களோ என்று நினைத்திருந்தவர்களுக்கும், இன்று அவர்கள் நடந்து கொண்ட முறையில் மனதிற்குச் சந்தோஷமாக இருந்தது.

காயத்திரி பொதுவாக இரு குடும்பத்தினரிடமும், "உங்களுக்குப் பிடிச்சிருக்கா...? மேற்கொண்டு பேசலாமா...?" என்று கேட்க...

இரு குடும்பமுமே ஒருவரை ஒருவர் பற்றி ஏற்கெனவே விசாரித்துத் தெரிந்து கொண்டிருந்தனர். அதனால் முழு மனதுடன் இந்தத் திருமணத்திற்குச் சம்மதித்தனர். அதன்படி திருமணத்தை இன்னும் ஆறு மாதத்திற்குள் வரும் முகூர்த்தம் பார்த்து வைப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

விஜயா மெதுவாக மதுவின் காதில் ஏதோ சொல்ல... அவள் வெளியே சென்று காரில் இருந்து ஒரு கவரைக் கொண்டு வந்தாள். அதிலிருந்த தாம்பாளத்தை

வெளியில் எடுத்து வைத்து, அதில் புடவை, பூ மற்றும் கற்கள் பதித்த ஒரு நெக்லஸ் வைத்து ஆருவிடம் கொடுத்தார். அதைப் பார்த்து எல்லோரும் மகிழ்ந்தனர். மது, ஆருவை அழைத்துக் கொண்டு புடவை மாற்றச் சென்றாள்.

வித்யா டென்ஷனாகச் சமையல் அறைக்குள் செல்ல... அதைப் பார்த்த ஆதி, அர்ஜுன் இருவரும் அவர் பின்னே உள்ளே சென்றனர்.

"ஏன்மா டென்ஷனா இருக்கீங்க...?" ஆதி கேட்க...

"அவங்க நம்ம பொண்ணுக்கு நகை எல்லாம் போடுறாங்க, நாம பதிலுக்கு மாப்பிள்ளைக்கு ஒண்ணும் போடலைன்னா நல்லா இருக்குமா...?" வித்யா புலம்ப...

"மாப்பிள்ளைக்கு என்ன போடணும்? பேசாம அவனையே போட்டுடலாமா...?" அர்ஜுன் கேட்க...

"டேய்..." வித்யா பல்லைக் கடிக்க... அர்ஜுன், தன் பாக்கெட்டில் இருந்து ஒரு டப்பாவை எடுத்துத் திறந்து காண்பித்தான்.

அதில் ஒரே மாதிரி இரண்டு மோதிரம் இருந்தது. அதைப் பார்த்ததும் வித்யா, "நீயா அர்ஜுன் வாங்கின, சமத்துடா நீ..." என்று அவன் கன்னத்தைக் கிள்ளிக் கொஞ்சினார். அர்ஜுன் மோதிரத்தை ஆதியிடம் கொடுத்து, "நீயே கொடு ஆதி..." என்றான்.

மது, ஆருவுக்குப் புடவை மட்டும் கட்டி அழைத்து வந்தவள், நகையை அவள் அம்மாவையே போடச்

சொன்னாள். விஜயா, ஆராதனாவின் தலையில் பூ வைத்து, நகையைக் கழுத்தில் போட்டுவிட... அர்ஜுன் வீடியோ கேமராவில் எல்லாவற்றையும் படம் எடுத்தான். சூர்யா, ஆரு இருவருமே புன்னகையுடன் அடிக்கடி ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

ஆதி, அர்ஜுன் கொடுத்த மோதிரத்தை இருவருக்கும் கொடுத்து மாற்றிக் கொள்ளச் சொல்ல... அது எல்லோருக்கும் ஆனந்த அதிர்ச்சியாக இருந்தது. சூர்யாவும், ஆராதனாவும் மகிழ்ச்சியுடன் மோதிரம் மாற்றிக் கொண்டனர். பிறகு எல்லோரும் அவரவர் ஜோடியுடன் சேர்ந்து சூர்யா, ஆருவுடன் நின்று போட்டோ எடுக்க... அர்ஜுன் மட்டும் எடுக்கவில்லை.

கணேசன் தம்பதியர் சூர்யாவின் குடும்பத்தினரிடம், "அதுதான் கல்யாணம் உறுதியாகி விட்டதே... அதனால் இரவு உணவு சாப்பிட்டுவிட்டே செல்ல வேண்டும்..." என்று அன்பாகக் கேட்டுக் கொண்டதால்... அவர்களும் சரி என்றனர்.

பெரியவர்கள் எல்லோரும் கீழே அமர்ந்து பேச... இளையவர்கள் மாடிக்குச் சென்றனர். அங்கே ஆரு, சூர்யாவோடு சேர்ந்து அர்ஜுனும், மீராவும் போட்டோ எடுத்துக் கொண்டனர். பிறகு எல்லோரும் சேர்ந்து அமர்ந்து சூர்யா, ஆருவைக் கிண்டல் செய்து ஓட்டினர்.

சூர்யா, மதுவிடம், "மீரா பெங்களூர்லதான் இருக்கா... அங்கதான் வேலை பார்க்கிறா..." என்று சொல்ல...

"அப்படியா...? ஏன் மீரா எங்க வீட்டுக்கு வரலை. அடுத்த வீக்எண்ட் கண்டிப்பா எங்க வீட்டுக்கு வரணும்.." மது அழைக்க... அவள் கணவன் ஸ்ரீதரும், "வீட்டுக்கு வாங்க மீரா..." என்றான்.

சிறிது நேரம் கழித்துக் கீழே இருந்து வித்யா ஆதியையும், ரஞ்சனாவையும் அழைக்க... அவர்கள் இருவரும் கீழே இறங்கிச் சென்றனர். அங்கே சஞ்சனா தன் கணவனோடு வந்து ஹாலில் அமர்ந்து இருந்தாள். அவளைப் பார்த்ததும் ரஞ்சனா வேகமாக அவளருகில் சென்று, "சஞ்சு எப்படி இருக்க? நீ வரேன்னு சொல்லவே இல்லை..." என்று சந்தோஷமாக விசாரித்தவள், தினேஷையும் வரவேற்கத் தவறவில்லை.

"நாங்க ரொம்ப நாளாவே வரணும்னு நினைச்சோம் அண்ணி. இன்னைக்குப் பீச்சுக்கு வந்தோமா... அப்படியா நீங்க வீட்ல இருந்தா இங்கே வரலாம்னு ஆதி அண்ணனுக்குப் போன் பண்ணோம். அவரும் வீட்லதான் இருக்கோம், வாங்கன்னு சொன்னார். அதுதான் பார்த்திட்டுப் போகலாம்னு வந்தோம்..." என்றான் தினேஷ்.

ரஞ்சனா, ஆதியை ஆச்சரியமாகப் பார்க்க... அவன், "அவங்களுக்குச் சாப்பிட ஏதாவது கொண்டு வா..." என்றான். ரஞ்சனா உள்ளே சென்று அவர்களுக்கு ஸ்நாக்ஸ் கொண்டு வந்து கொடுத்தாள்.

மாடி ஹாலில் சூர்யா, ஆருவோடு... மதுவும் அவள் கணவரும் அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தனர். மீராவும்,

அர்ஜுனும் அவர்கள் பேசுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். அர்ஜுன் மெதுவாக மீராவை ஜாடை காட்டித் தனியே அழைக்க... அவள் வர மாட்டேன் என்றாள்.

"மீரா... கொஞ்சம் குடிக்கத் தண்ணி கொண்டு வர்றியா...?" அர்ஜுன் சத்தமாகக் கேட்க... மீரா அவனைப் பார்த்து முறைத்துக் கொண்டே கீழே சென்றாள். கீழே சஞ்சனா, தன் கணவருடன் வந்திருப்பதைப் பார்த்தாள். அவர்கள் மற்றவர்களோடு பேசிக் கொண்டிருந்தனர்.

மீரா தண்ணீர் எடுத்துக் கொண்டு மேலே வந்தவள், அங்கே அர்ஜுனைத் தேட... அவன் அங்கு இல்லை. எங்கு போனான் என்று சுற்றிப் பார்த்தவள், அவன் பால்கனியில் நிற்பதைப் பார்த்து அங்கு சென்று, தண்ணீரை அவன் பக்கம் நீட்ட... தண்ணீரோடு சேர்ந்து மீராவின் கை பற்றி இழுத்து மறைவாகச் சென்றான். மீரா வேகமாக அவனிடம் இருந்து விலகினாள்.

"விடுங்க அர்ஜுன்... யாராவது வரப்போறாங்க..." மீரா பயப்பட...

"ச்சு... யாரும் வர மாட்டாங்க, வா..." என்றவன், மறுபடியும் மீராவைப் பிடித்து அருகே இழுத்தான். மீரா அவன் அருகே சென்று நின்றாள்.

அர்ஜுன், பால்கனி விளக்கைப் போடவில்லை, அதனால் அந்த இடம் இருட்டாக இருந்தது. அர்ஜுன் மெதுவான குரலில், "அழகா இருக்க மீரா..." என்றவன்,

அவள் எதிர்பார்க்காத நேரம், புடவை கட்டி இருந்ததால், பளீரென்று தெரிந்த அவள் இடையைப் பிடித்து அழுத்த... மீரா துள்ளினாள்.

மேலும் முன்னேறத் துடித்த கையையும், மனதையும் அடக்கி அர்ஜுன் மெதுவாக அவன் கையை எடுத்ததும்... மீரா, "நான் கிளம்புறேன் அர்ஜுன்..." என்றாள்.

"ஏன் மீரா அதுக்குள்ள கிளம்புற? மணி ஏழுதானே ஆகுது... உனக்குப் பதினொரு மணிக்குத்தானே ட்ரெயின்."

"கீழே போனபோது... சஞ்சனா அவ ஹஸ் பெண்ட்டொட வந்திருக்கிறதைப் பார்த்தேன்... அதுதான் கிளம்பலாம்னு..." என்றதும்,

"சரி மீரா, நீ கிளம்பு, இன்னைக்கு நான்தான் கடையை மூடப் போகணும். அதனால நீ இன்னைக்குக் கார்ல ஸ்டேஷன் போயிடு." அர்ஜுன் சொல்ல... மீரா சரி என்றாள்.

சூர்யாவிடம் வந்த அர்ஜுன், "நான் கடைக்குக் கிளம்புறேன்டா. அண்ணியோட தங்கச்சி வந்திருக்காங்க, அதனால ஆதி இங்கே இருக்கணும்..." என்றான். சூர்யாவும் நிலைமையை உணர்ந்து சரி என்றான்.

இரவு உணவுக்கு வெளியே ஒரு பெரிய ஓட்டலில் சாப்பாடுக்குச் சொல்லி இருந்தனர். வித்யா மற்ற வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரிடம்

வந்த மீரா, "வீட்டுக்குக் கிளம்புறேன் ஆன்ட்டி..." என்று சொல்ல...

வித்யா, "நைட் சாப்பிட்டுட்டுப் போ மீரா..." என்றார்.

"இல்லை ஆன்ட்டி, இன்னைக்கு நைட் பெங்களூர் கிளம்புறேன். அதனால வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டுக் கிறேன்..." என்று விடைபெற்றுச் சென்றாள்.

மீரா கிளம்பியதும், அர்ஜுன் அவன் அப்பாவிடம், "நீங்களும், ஆதியும் வீட்ல இருங்க. நான் கடைக்குப் போய்ப் பார்த்துகிறேன்..." என்று சொல்ல... அவரும் சரி என்றார்.

அர்ஜுன், தினேஷிடம் மட்டும் "போயிட்டு வரேன்..." என்றவன், சஞ்சனா என்று ஒருத்தி அங்கிருப்பதே தெரியாதது போல், அவளைக் கண்டுகொள்ளாமல் சென்றான்.

எட்டு மணி ஆனதும் முதலில் சூர்யா வீட்டினரைச் சாப்பிட அழைத்து... வித்யாவும், காயத்திரியும் உணவு பரிமாறினார்கள். சூர்யா பிறகு சாப்பிடுகிறேன் என்று சொன்னதால் மற்றவர்களுக்குப் பரிமாறினார்கள்.

வித்யா, ரஞ்சனாவிடம், "நீ போய் உன் தங்கையோட பேசிட்டு இரு, நாங்க பார்த்துக்கிறோம்..." என்று சொல்ல... ரஞ்சனா, சஞ்சனாவை அழைத்துக் கொண்டு அவள் அறைக்குச் சென்றாள்.

ஆதி, சூர்யா, தினேஷ் ஹாலில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.

அவள் அறைக்கு வந்ததும், "இன்னைக்கு ஆரு வைப் பெண் பார்க்க வந்தாங்க... உனக்குச் சூர்யாவைத் தெரியும் இல்லை... அர்ஜுனோட ப்ரெண்ட், அவர்தான் மாப்பிள்ளை." ரஞ்சனா சொல்ல... சஞ்சனா ஒன்றும் பேசாமல் உர்ரென்று இருந்தாள்.

"ஏன்டி உம்முன்னு இருக்க...? நீ இன்னைக்கு வருவேன்னு நான் சத்தியமா எதிர்பார்க்கலை."

"நானா எங்கே வந்தேன்? நான் கட்டி இருக்கேனே ஒருத்தர், அவர்தான் என்னை இழுத்திட்டு வந்தார். ஏன் உங்க அக்கா நம்ம வீட்டுக்கு வர மாட்டேன்றாங்க...? நீ ஏன் உங்க அக்கா வீட்டுக்குப் போகலாம்னு சொல்ல மாட்டேங்கிறன்னு ஒரே இம்சை, அதனால வேற வழி இல்லாமல் வந்தேன்." சஞ்சனா கோபமாகச் சொல்ல...

'இவ இன்னும் திருந்தலை...' என்று நினைத்த ரஞ்சனா, "சரி, அதை விடு. அப்புறம் சென்னையில வேற எந்த இடமெல்லாம் போனீங்க...? எல்லா இடமும் சுத்திப் பார்த்துட்டீங்களா...?" என்று கேட்க... சஞ்சனாவும் கொஞ்சம் மலை இறங்கிப் பதில் சொன்னாள். ஜஷுவும் அவர்களோடு இருக்க... அவளோடு இருவரும் விளையாடிக் கொண்டு இருந்தனர்.

கீழே சூர்யா வீட்டினர் சாப்பிட்டதும்... வித்யா, சஞ்சனாவை சாப்பிட அழைத்தார். சஞ்சனா, தினேஷோடு, சூர்யாவும், ஆருவும் சாப்பிட அமர்ந்தனர். அவர்களோடு ஆதியும் சாப்பிட அமர்ந்தான். வித்யா, ரஞ்சனாவை, "நீயும் உன் தங்கையோட உட்கார்ந்து

சாப்பிடு..." என்றவர், தினேஷிடம், "ஒரு நாள் ஞாயிற்றுக் கிழமை முழு நாளும், எங்க வீட்டுக்கு வந்து இருக்கணும்..." என்றார்.

"கண்டிப்பா வரோம் சித்தி, நீங்களும் எங்க வீட்டுக்கு வாங்க. நீங்க யாரும் இன்னும் எங்க வீட்டுக்கு வரவே இல்லை." தினேஷ் உரிமையாக அழைக்க...

அவன் பேசுவதில் இருந்தே அவன் உண்மையான பாசத்தில் அழைக்கிறான் என்பதை உணர்ந்த வித்யா, "கண்டிப்பா அடுத்த வாரம் உங்க வீட்டுக்கு வரோம்..." என்றவர் தொடர்ந்து, "கொஞ்ச நாளா ஆருவுக்கு மாப்பிள்ளை பார்க்கிற வேலை இருந்ததாலதான் வர முடியலை, அவ கல்யாணம் முடிஞ்சிட்டா... அடுத்து அர்ஜுனுக்குப் பார்க்கணும்..." என்றார்.

"அர்ஜுனுக்கு இன்னும் கல்யாணம் ஆகலையா...? அப்ப கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி, ஒருத்தங்க கைல தண்ணி எடுத்துக்கிட்டு மாடிக்குப் போனாங்களே... அவங்க அர்ஜுன் வைஃப் இல்லையா... நான் அவங்க தான் அர்ஜுன் வைஃப்-னு நினைச்சேன்."

தினேஷ் மீராவைச் சொல்ல... அது அர்ஜுன், மீரா காதலைத் தெரிந்தவர்கள் அனைவர் முகத்திலும் புன்னகையை வரவழைத்தது.

ஆதியும், சூர்யாவும் சிரிப்பை அடக்கிச் சாப்பிடுவது போல் நடிக்க, ஆரு என்ன முயன்றும் சிரிப்பை அடக்க முடியாமல், எழுந்து உள்ளே சென்றாள். தினேஷ், அவளை ஆச்சர்யமாகப் பார்க்க...

"எதுக்கு இப்ப உனக்குக் கெக்க பிக்கன்னு சிரிப்பு வருது...?" என்று அவளை அதட்டிய வித்யா, தினேஷைப் பார்த்து,

"அவ மீரா, எங்க அர்ஜுனோடு காலேஜ்லதான் படிச்சா... அவனுக்கு ஜூனியர். அதோட ஆருவோட ப்ரெண்ட், ரொம்ப நல்ல பொண்ணு. மத்தபடி வேறெதுவும் இல்லை. ரொம்ப வசதியான வீட்டுப் பொண்ணு, அவங்க நம்ம ஆளுங்க இல்லை..." என்றும் சேர்த்துச் சொல்ல... அதைக் கேட்டு சற்று முன் புன்னகையுடன் இருந்த அனைவர் முகத்திலும் இருந்த சிரிப்பு மறைந்தது.

அதைக் கவனித்த தினேஷ், 'இல்லை, இவங்க நினைப்பது போல் இல்லை... அர்ஜுனுக்கும், மீராவுக்கும் கண்டிப்பாகச் சம்பந்தம் இருக்கிறது...' என்றே அவன் உள் மனம் சொல்லியது. அதன் பிறகு யாரும் அங்கு பேசவில்லை. எல்லோரும் அமைதியாகச் சாப்பிட்டு எழுந்தனர்.

33

சூர்யா வீட்டுக்குக் கிளம்பும் முன் ஆருவுடன் தனியாகப் பேசிக்கொண் டிருந்தான். ஆரு முகம் வாடியிருப்பதைப் பார்த்து, "உங்க அம்மா சொன்னதை நினைச்சு ஃபீல் பண்றியா ஆரு...? அர்ஜுன், மீரா கல்யாணம் நல்லபடியா நடக்கும். நாங்க இத்தனை பேர் இருக்கோம், மீராவை விட்டுக் கொடுத்திடுவோமா...?" என்றதும், அதைக் கேட்டு ஆருவின் முகம் மலர்ந்தது.

சூர்யாவின் குடும்பம் கிளம்பிச் சென்றதும்... தினேஷும் கிளம்புவதாகச் சொல்ல, வித்யா, "கொஞ்ச நேரம் இருங்க, போகலாம்..." என்றார். அவர் எதற்குச் சொல்கிறார் என்று புரியாமல் தினேஷும், சஞ்சனாவும் ஒருவரை ஒருவர் பார்க்க... சிறிது நேரத்தில் கடையில் இருந்து ஒரு பையன் வந்து ஒரு கவரைக் கொடுத்து விட்டுச் சென்றான்.

வித்யா அந்தக் கவருடன் அவருடைய அறைக்குச் சென்றவர், அர்ஜுன் கடையில் இருந்து தினேஷுக்காகக் கொடுத்து விட்ட உடையோடு, வீட்டில் இருந்த ஒரு புதுப் பட்டுப் புடவையைத் தட்டில் வைத்துக் கொண்டு வந்து தினேஷ், சஞ்சனா இருவரிடமும் கொடுக்க... முதலில் வாங்க மறுத்த இருவரும், "புதுசா கல்யாணம் ஆகி வர்றவங்களுக்கு, நாங்க செய்ற முறைதான்... வாங்கிக் கோங்க..." என்று சொன்னதும், இருவரும் வாங்கிக் கொண்டனர்.

தினேஷும், சஞ்சனாவும் அவர்கள் வீட்டுக்கு வந்ததும், "இன்னைக்கு அவங்க வீட்ல முக்கியமான விசேஷம் இருந்தும், நான் போன் பண்ணிக் கேட்ட போது உன்னோட அத்தான் ஒண்ணுமே சொல்லாம, வாங்க... நாங்க ஃப்ரீயாதான் இருக்கோம்னு சொன்னார். தெரிஞ்சிருந்தா... இன்னொரு நாள் போய் இருக்கலாம். அவங்க வீட்ல எல்லோரும் நல்ல மாதிரி." தினேஷ் சொல்ல... சஞ்சனா அமைதியாக அவள் போட்டிருந்த நகைகளைக் கழட்டிக் கொண்டிருந்தாள்.

"எனக்கு அவங்க வீட்டைப் பத்தி அவ்வளவா தெரியாது. நான் அந்தப் பொண்ணு மீராவைப் பார்த்து நிஜமா அர்ஜுனோட பொண்டாட்டின்னுதான் நினைச்சேன். எனக்கு அவங்களைப் பார்க்கும் போது அப்படித்தான் தோணுச்சு." தினேஷ் சொல்ல...

இப்போது மட்டும் சஞ்சனா வேகமாக, "ஏதாவது உளறாதீங்க. அதுதான் அவங்க புருஷன், பொண்டாட்டி இல்லைன்னு இப்ப தெரிஞ்சிடுச்சுல்ல, திரும்ப எதுக்கு அதையே சொல்றீங்க...?" என்றாள் கடுப்பாக.

அவளுக்கு அர்ஜுன், மீரா இருவரையும் சேர்த்து வைத்துப் பேசுவது சுத்தமாகப் பிடிக்கவில்லை. சஞ்சனாவுக்கு, அர்ஜுன் அவளைக் கண்டு கொள்ளவே இல்லை என்ற ஆத்திரம் வேறு. 'எவ்வளவு திமிர் அவனுக்கு...?' என்று மனதில் கறுவிக்கொண்டு இருந்தாள்.

தினேஷ், சஞ்சனாவையே பார்க்க... அவள் முகத்தில் கோபம் வெளிப்படையாகத் தெரிந்தது. "ஆமாம்... தெரியாமத்தான் கேட்கிறேன். அவங்களைச் சொன்னா... உனக்கு ஏன் கோபம் வருது...?"

"பின்னே சம்பந்தம் இல்லாதவங்களை... சம்பந்தப் படுத்திப் பேசினா கோபம் வராதா...?"

"அர்ஜுன், மீராவைச் சம்பந்தப்படுத்திப் பேசினா... சம்பந்தம் இல்லாத உனக்கு ஏன் கோபம் வருதுன்னு தான் புரியலை..." என்று தினேஷ் ஒரு மாதிரி கேட்க...

"எனக்கு என்ன வந்துச்சு? நீங்க யாரைப் பற்றியும் பேசுங்க..." என்று எழுந்து சஞ்சனா வெளியே செல்லப் பார்த்தாள்.

அவளைத் தடுத்த தினேஷ், "கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் கோபப்பட்ட, இப்ப எனக்கு என்ன வந்துச்சுன்னு சொல்ற... கூடப் பிறந்த அக்காவைப் பார்க்க நான் வலுக்கட்டாயமா இழுத்துட்டுப் போக வேண்டியதா இருக்கு... அவங்களும் இங்க வர மாட் டேன்றாங்க. எனக்கு ஒண்ணும் புரியலை..." என்றான் யோசனையாக.

தினேஷின் பேச்சைக் கேட்டுச் சுதாரித்த சஞ்சனா, "இல்லை, நமக்கு எதுக்கு அவங்க விஷயம்? அதுதான் சொன்னேன். அக்கா நாம பால் காய்ச்சும் போது வரலை இல்லையா... அதனாலதான் அவங்க வீட்டுக்குப் போக யோசிச்சேன்..." எனச் சஞ்சனா சமாதானமாகச் சொல்ல... அவனும் மேற்கொண்டு எதுவும் பேசாமல், அந்த இடத்தை விட்டுச் சென்றான்.

தினேஷ் அங்கிருந்து சென்றதும், "ஹப்பா..." என்று நிம்மதிப் பெருமூச்சு விட்ட சஞ்சனா, 'இனி அவனிடம் பார்த்துப் பேச வேண்டும்...' என்றும் நினைத்தாள். மறுநாள் தினேஷ் அலுவலகம் சென்றதும், அவளே ரஞ்சனாவை செல்லில் அழைத்தாள்.

"ஹலோ சஞ்சு... சொல்லு, எப்படி இருக்கே?"

"நேத்துதானே பார்த்தோம்... அப்புறம் என்ன எப்படி இருக்கே...?"

"இல்லை, திடீர்னு போன் பண்ணதும், என்ன கேட்கிறதுன்னு தெரியாம..." என்று இழுத்த ரஞ்சனா... "சரி சொல்லு... எதுக்குப் போன் பண்ண...?" என்றாள்.

"என்னோட வீட்டுக்காரர், ஏன் உங்க அக்கா வீட்ல இருந்து யாரும் நம்ம வீட்டுக்கு வர மாட்டேன்றாங்கன்னு கேட்டு ஒரே இம்சை பண்றார். நீயும் வேணும்னே என்னைப் பழி வாங்கத்தானே அப்படிப் பண்ற...?" என்றாள் சஞ்சனா கடுப்பாக.

"நான் என்ன பண்ணேன் சஞ்சு, நீயா ஏதாவது சொல்லாதே..."

"சும்மா சொல்லாதே, எனக்குத் தெரியும்... நான் கல்யாணத்துக்கு வந்த உன்னோட மாமனார், மாமி யாரோட பேசலைன்னுதானே இப்படிப் பண்றீங்க...?" சஞ்சனா குற்றம் சாட்ட...

"ஆமாம். நீ பண்ணது தப்புதானே... அவங்க என்னோட புகுந்த வீட்டுக்காரங்க. நீ அவங்களுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுத்திருக் கணுமா... வேண்டாமா...? அவங்க எல்லாம் நல்ல மாதிரி... அதனால அவங்க பெரிசா எடுத்துக்கலை. இல்லை... இதே வேறவங்களா இருந்தா... அதையே பெரிய பிரச்சினை ஆக்கி, என்னையும் கல்யாணத்துக்கு இருக்க விடாம இழுத்திட்டு வந்திருப்பாங்க." ரஞ்சனா எடுத்துச் சொல்ல... சஞ்சனா விசும்ப ஆரம்பித்தாள்.

"சஞ்சு, அழாதே, இப்ப என்ன ஆச்சு அத னாலே...?"

"இன்னும் என்ன ஆகணும்? என் வீட்டுக்காரர் சந்தேகப்பட மாட்டாரா...? எல்லோரும் சேர்ந்து என்

வாழ்க்கையைக் கெடுக்கப் பார்க்கிறீங்க..." எனச் சஞ்சனா மேலும் அழ...

"பெரிய வார்த்தை எல்லாம் பேசாதே சஞ்சனா, நாங்க இந்த வாரம் கண்டிப்பா உங்க வீட்டுக்கு வரோம். எங்க யாருக்கும் உன் வாழ்க்கையைக் கெடுக்கணும்னு எண்ணம் இல்லை. சரியா...? அழாதே, வை..." என்று ரஞ்சனா போனை வைத்தாள்.

'கடைசி வரை நான் செஞ்சது தப்புன்னு இந்தச் சஞ்சனா வாய்ல இருந்து வரலியே...' என்று நினைத்தவள், அன்று இரவு ஆதியிடமும் அதைச் சொல்ல மறக்கவில்லை.

"நம்மால அவ வாழ்க்கை கெட வேண்டாம். நாம இந்த வாரம் அவ வீட்டுக்குப் போயிட்டு வந்திடலாம். ஆனா அவகிட்ட நம்ம குடும்ப விஷயம் எதையும் சொல்லாதே." ஆதி சொல்ல... ரஞ்சனாவும் சரி என்றாள்.

அந்த வார ஞாயிற்றுக்கிழமை மாலை ஏழு மணி போல்... ரஞ்சனா, ஆதி, வித்யா மற்றும் ஜஷு... சஞ்சனா வீட்டிற்குச் சென்றனர். தினேஷுக்கு எந்தச் சந்தேகமும் வரக்கூடாது என்று சஞ்சனா அவர்களை விழுந்து, விழுந்து கவனித்தாள்.

சஞ்சனாவிற்கு இன்னும் அவ்வளவாகச் சமைக்கத் தெரியாததால்... இரவு உணவிற்கு அவர்களை அழைத்துக் கொண்டு தினேஷ் ஹோட்டலுக்குச் சென்றான். தினேஷ் அவர்களை நன்றாக உபசரித்தவன், அதோடு ஜஷுவை அழைத்துக் கொண்டு கடைக்குச் சென்று, அவளுக்குப்

பொம்மை வாங்கிக் கொடுத்தான். அன்றைய நாள் நல்லபடியாகச் சென்றது.

சூர்யா - ஆரு திருமணத்திற்கு ஆறு மாதம் கழித்து இருந்த முகூர்த்த நாளில் தான் மண்டபம் கிடைத்தது. அதோடு கல்யாணத்திற்கு முன் தினம் நிச்சயம் வைத்துக் கொள்ளலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. திருமண வேலைகள் வேகமாக நடந்து கொண்டு இருந்தன.

ஒரு நாள் அர்ஜுனைச் சந்தித்த மீரா... அவனிடம், "ஆருவின் திருமணம் முடிந்ததும், வித்யாவிடம் தங்கள் காதல் விஷயத்தைப் பற்றிப் பேசலாம்..." என்றாள்.

"ஏன் மீரா அவ்வளவு நாள் தள்ளிப் போடணும்?"

"வித்யா ஆன்ட்டிக்கு நம்ம விஷயம் தெரிஞ்சா கண்டிப்பா டென்ஷன் ஆவாங்க. அவங்க நிம்மதியா ஆரு கல்யாண வேலைகள் செய்யட்டும் அர்ஜுன்." மீரா சொல்ல... அர்ஜுனும் சரி என்றான்.

நாட்கள் வேகமாகச் சென்றன. ஆரு திருமணத் திற்கு இன்னும் பதினைந்து நாட்கள்தான் இருந்தன. அந்த வாரம் சென்னைக்கு வந்த மீராவை அழைத்துக் கொண்டு அர்ஜுன் ஷாப்பிங் சென்றான்.

"ஆருவுக்கா வாங்கப் போறோம்...? என்ன வாங்கப் போறோம்...?" மீரா கேள்விகளாகக் கேட்க... அர்ஜுன் எதற்கும் பதில் சொல்லவில்லை.

அர்ஜுன் அவளை அழைத்துக் கொண்டு ஒரு பெரிய பட்டுப் புடவைக் கடைக்குச் சென்று புடவைகள் பார்க்க... மீராவும் அவனோடு சேர்ந்து பார்த்தாள். அர்ஜுன், மீராவின் மீது ஒவ்வொரு சேலைகளாக வைத்துப் பார்த்தவன், அடர் நீல நிறத்தில் உடலெல்லாம் வெள்ளி ஜரிகைகளால் கொடிபோல வேலைப்பாடு செய்து இருந்த அழகான சேலையைத் தேர்ந்தெடுத்தான்.

மீராவிடம் அர்ஜுன், "பிடிச்சிருக்கா...?" எனக் கேட்க...

"முதல்ல யாருக்குன்னு சொல்லுங்க... அப்பதான் சொல்வேன்." மீரா சினுங்க...

"உன் மேல தானே போட்டுப் பார்த்தேன், அப்ப தெரியலையா...? உனக்குத்தான்..." என்றான்.

"எனக்கா...? எனக்கு எதுக்கு அர்ஜுன் இப்ப? ஆருவுக்கு வாங்கலையா...?"

"புடவை நல்லா இருக்கா, இல்லையா...? அதை மட்டும் சொல்லு." அர்ஜுன் கேட்க...

மீரா, "நல்லா இருக்கு..." என்றாள்.

அர்ஜுன் பணம் கொடுத்துப் புடவையை வாங்கிக் கொண்டு மீராவுடன் வெளியே வந்தவன், "நீ இதை ஆரு கல்யாணத்துக்குக் கட்டிக்கோ..." என்று கொடுக்க... மீராவும் சந்தோஷமாக வாங்கிக்கொண்டாள்.

இருவரும் மதிய உணவை ஒரு ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு, மாலில் சுற்றிக் கொண்டிருந்தனர்.

அப்போது அர்ஜுன் ஒரு கடையின் டிஸ்ப்ளேவில் இருந்த ஒரு அழகான இரவு உடையைப் பார்த்தான். ஆலிவ் பச்சையில், கழுத்தைச் சுற்றிச் சின்னச்சின்ன ரோஜாப் பூக்கள்... ரோஸ் நிற நூலினால் அழகாக எம்ப்ராய்டிங் செய்த ஸ்லீவ்லெஸ் நைட்டி. அர்ஜுன் சென்று அதையும் மீராவுக்கு வாங்க...

"ஐயோ... என்ன பண்றீங்க? நான் இதெல்லாம் போட மாட்டேன்."

"சரி, நீ இப்போ போட வேண்டாம், நம்ம கல்யாணத்துக்கு அப்புறம் போடு."

"அதுக்கு எதுக்கு இப்பவே வாங்கறீங்க? அப்ப வாங்கிக்கலாம்."

"என்ன, விளையாடுறியா...? அப்ப இந்த டிரஸ் கிடைக்கலைன்னா என்ன பண்றது? எனக்கு இந்த டிரஸ் ரொம்பப் பிடிச்சிருக்கு, அதனால இப்பவே வாங்கிக்கலாம்..." என அர்ஜுன் அந்த உடையை வாங்க... மீரா தலையில் அடித்துக் கொண்டாள்.

மீராவும், அர்ஜுனும் கடையில் வழக்காடிக் கொண்டிருந்த போதிலிருந்து... அவர்களையே எதிரி லிருந்த கடையில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த தினேஷ், பக்கத்தில் நின்று மும்முரமாகச் சுடிதார் பார்த்துக் கொண்டிருந்த சஞ்சனாவிடம் திரும்பி, "நான் நினைச்சது சரிதான்..." என்று சொல்ல... சஞ்சனா, அவனைப் புரியாமல் பார்த்தாள்.

தினேஷ், சஞ்சனாவிடம் எதிரில் இருந்த கடையைக் காட்ட... அந்தக் கடைக்குள் இருந்த அர்ஜுனையும், மீராவையும் பார்த்ததும் சஞ்சனா திகைத்தாள். அர்ஜுன், மீராவோடு வெளியே வந்தவன், அவள் தோளில் கைபோட்டு... காதின் அருகே குனிந்து ஏதோ ரகசியம் பேசிக்கொண்டே சென்றதைப் பார்த்த சஞ்சனாவிற்குப் பொறாமையாக இருந்தது.

"நல்ல ஜோடிப் பொருத்தம் இல்லை..." தினேஷ் சொல்ல...

சஞ்சனா, "ஆமாம்..." என்று தலை அசைத்தாள்.

"அன்னைக்கு நான் இவங்களைப் பத்திச் சொன்னதும், வித்யா சித்தி தவிர மத்தவங்க முகத்தில் எல்லாம் சந்தோஷம் வெளிப்படையாவே தெரிஞ்சது. அவங்களுக்கு மட்டும்தான் இவங்க விஷயம் தெரியாதுன்னு நினைக்கிறன்..." என்ற தினேஷ், "சரி, நீ டிரஸ் பாரு..." என்றான்.

சஞ்சனாவிற்கு இப்போது டிரஸ் வாங்கும் மூட் இல்லை. அதனால், "எனக்கு இங்க எதுவும் பிடிக்கலை, வாங்க வீட்டுக்குப் போகலாம்..." எனச் சொல்ல... தினேஷும் சரி என்றான்.

சஞ்சனா கடையில் இருந்து வெளியே வந்ததும் தினேஷிடம், "ரஞ்சனா அக்கா வீட்டுக்குப் போகலாமா...?" என்று ஆர்வமாகக் கேட்க...

அவளைத் திரும்பிக் கவனமாகப் பார்த்த தினேஷ்,

"எதுக்கு? அர்ஜுன், மீரா பத்திச் சொல்லவா...?" என்று நேரடியாகக் கேட்க...

திகைத்த சஞ்சனா சமாளித்துக் கொண்டு, "இல்லை, சும்மாதான். இங்க இருந்து அவங்க வீடு கிட்டதானே... அதனாலதான்..." என்றாள்.

"சரி, போகலாம். ஆனா... ஒண்ணு நல்லா ஞாபகம் வச்சுக்கோ... நம்மால அவங்க குடும்பத்தில எந்தப் பிரச்சினையும் வரக் கூடாது, சொல்லிட்டேன்."

தினேஷ் எச்சரிக்கை செய்ய... சரி என்று தலை ஆட்டிய சஞ்சனா, 'ச்சே... இனி எப்படி இவங்க விஷயத்தை வித்யா அத்தைகிட்ட சொல்றது?' என்று சிந்தித்தபடி தினேஷ் பின்னால் சென்றாள்.

தினேஷும், சஞ்சனாவும் ரஞ்சனா வீட்டிற்குச் சென்றபோது... அங்கே வித்யாவும், கணேசனும் பத்திரிகை கொடுக்க வெளியே கிளம்பிக் கொண்டு இருந்தனர். இவர்களைப் பார்த்ததும் வரவேற்றவர்கள், ரஞ்சனாவைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு வெளியே சென்றனர்.

தினேஷ் ஹாலில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருக்க... ரஞ்சனா அவர்களுக்குக் கொடுக்க ஜூஸ் எடுக்க உள்ளே சென்றாள்.

அவள் பின்னே உள்ளே சென்ற சஞ்சனா மெதுவான குரலில், "அக்கா, உனக்கு ஒரு விஷயம் தெரியுமா...? இன்னைக்கு அர்ஜுனையும், மீராவையும்

ஒரு மால்ல பார்த்தேன். ரெண்டு பேரும் ரொம்ப க்ளோஸா இருந்தாங்க. ரெண்டு பேரும் லவ் பண்றாங்க போலிருக்கு..." என்று ரகசியமாகச் சொல்ல...

ரஞ்சனா, "அப்படியா...?" என்றவள், அவள் பாட்டுக்கு ஜூஸ் தயார் செய்ய...

"என்னக்கா எவ்வளவு பெரிய விஷயம் சொல்லி இருக்கேன். நீ அப்படியான்னு சாதாரணமாக் கேட்கிற...?"

"இப்ப அதுக்கு என்ன பண்ணச் சொல்ற சஞ்சனா...?"

"அத்தைகிட்ட சொல்ல வேண்டாமா... அப்பதானே அவங்க உஷாரா இருப்பாங்க..." சஞ்சனா விளக்க...

"ஒண்ணும் தேவை இல்லை, அர்ஜுனே அத்தைகிட்ட சொல்லிப்பான். காதலிக்கிறவங்களுக்கு வீட்ல சொல்லத் தெரியாதா என்ன? இங்க பாரு, நீ இந்த விஷயத்தில தலையிடாதே. அது அவங்க அம்மா, பையன் பிரச்சினை. அவங்களே பார்த்துக்கட்டும். நீ ஏதாவது சொன்னா... அப்புறம் என் தலைதான் உருளும். இந்த விஷயம் எங்க வீட்ல அத்தையைத் தவிர எல்லோருக்கும் தெரியும்." ரஞ்சனா பட்டென்று சொல்லிவிட்டு ஜூஸோடு வெளியே சென்றாள்.

ரஞ்சனா கொண்டு வந்து கொடுத்த ஜூஸை இருவரும் அருந்திக் கொண்டிருந்தபோது, அங்கே சூர்யா வந்தான். ஆருவிடம் பேசுவதற்காக வந்தவன், ஹாலில் அமர்ந்திருந்த தினேஷைப் பார்த்ததும் அவனோடு

பேசிக்கொண்டிருந்தான். ரஞ்சனா திரும்ப ஜூஸ் போட உள்ளே செல்ல... ஆருவும் வந்து அவர்களோடு பேசிக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தில் மீரா அங்கு வர, அவளைப் பார்த்ததும், "அண்ணி... மீரா வந்திருக்கா. அவளுக்கும் ஜூஸ்." ஆரு குரல் கொடுக்க... ரஞ்சனா கையில் மூன்று க்ளாஸ் ஜூஸ் கொண்டு வந்தாள்.

"எதுக்கு அண்ணி மூணு க்ளாஸ்..." ஆரு கேட்க...

"இரு, தெரியும்..." என்று மட்டும் ரஞ்சனா சொல்ல... அவள் எதிர்பார்த்தது போல் ஐந்து நிமிடம் சென்று அர்ஜுன் வந்தான். அர்ஜுனைப் பார்த்ததும் எல்லோரும் சிரிக்க... மீரா தெரியாதது போல் ஜூஸ் குடித்துக் கொண்டிருந்தாள்.

அர்ஜுன், தினேஷைப் பார்த்து, "வாங்க..." என்றவன், சென்று சூர்யாவின் அருகே அமர... ரஞ்சனா அவனுக்கும் ஜூஸ் கொடுத்தாள்.

"எப்படி அண்ணி நான் வரேன்னு தெரியும், ஜூஸ் எல்லாம் போட்டு ரெடியா வச்சிருக்கீங்க...? வர வர நீங்க பெரிய ஆளா ஆகிட்டு வர்றீங்க அண்ணி." அர்ஜுன் ரஞ்சனாவை வார...

ரஞ்சனா பதிலுக்கு, "உனக்கு அண்ணியா இருக்கேனே அர்ஜுன், இது கூடவா தெரியாது..." என்றாள்.

"அப்படியா சொல்றீங்க அண்ணி...? என்னால நீங்க பெரிய ஆளா ஆனா எனக்குச் சந்தோஷம்..."

என்றவன், அப்போதுதான் மீராவைப் பார்ப்பது போல் பார்த்து, "ஹாய் மீரா, உங்களை நான் பார்க்கவே இல்லை, எப்படி இருக்கீங்க...?" என்று வேண்டுமென்றே மீராவை வம்பு இழுக்க... மீராவுக்குக் குடித்துக் கொண்டிருந்த ஜூஸ் புரை ஏறியது.

மீராவின் தலையைத் தட்டிய ஆரு, "இங்க பாரு... என்னோட ப்ரெண்ட்டை வம்பு இழுக்கிற வேலை எல்லாம் வேண்டாம்." அர்ஜுனை எச்சரிக்க... தினேஷே ஒரு நிமிடம் குழம்பிவிட்டான். 'நாம இன்னைக்கு மால்ல அர்ஜுனையும், மீராவையும்தான் பார்த்தோமா...?' என்று.

அவன் முகத்தைப் பார்த்த சூர்யா, "என்ன ஆச்சு தினேஷ்...?" என்று கேட்க...

தினேஷ், அர்ஜுனைப் பார்த்துக் கொண்டே, "நாங்க இன்னைக்கு மாலுக்குப் போய் இருந்தோம்..." என்று மொட்டையாகச் சொல்ல... சூர்யாவுக்குப் புரியவில்லை. ஆனால், அர்ஜுனுக்குப் புரிந்துவிட்டது.

அவன் உடனே ஒரு மாலின் பெயரைச் சொல்லி, "இந்த மாலா...?" என்று கேட்க...

தினேஷ், "ஆமாம்..." என்றான்.

"நானும், மீராவும் கூட இன்னைக்கு அங்க போயிருந்தோம்..." என அர்ஜுன் சாதாரணமாகச் சொன்னான்.

தினேஷ், மீராவின் முகத்தைப் பார்க்க... அவளும் சாதாரணமாக இருந்தாள்.

தினேஷுக்கு... அர்ஜுனோ, மீராவோ தங்கள் காதலை யாருக்கும் மறைக்க நினைக்கவில்லை என்று நன்றாகவே புரிந்தது.

அப்போது சூர்யா, "டேய் அர்ஜுன்...! நான் பொண்ணு பார்க்க வந்த அன்னைக்கு, தினேஷ், மீராவைப் பார்த்திட்டு, அவளை உன்னோட பொண்டாட்டின்னு சொன்னார்..." என்று சொல்ல...

"அப்படியா...? இந்தக் கதை எப்ப நடந்துச்சு? எனக்குத் தெரியாதே... விளக்கமாச் சொல்லு..."

அர்ஜுன் கேட்க... சூர்யாவும் சொன்னான்.

அர்ஜுன் எழுந்து சென்று தினேஷின் கையைப் பிடித்துக் குலுக்கியவன், "நீங்க பெரிய ஞானி சார், பின்னாடி நடக்கிறதை முன்னாடியே சொல்றீங்க பார்த்தீங்களா..." என்றான்.

"எதுக்கு சார்னு சொல்ற அர்ஜுன், சும்மா தினேஷ்னே கூப்பிடு."

"சரி தினேஷ், நீங்க ரொம்ப கிரேட்..." அர்ஜுன் புகழ... அங்கே சூர்யாவும், தினேஷும் சேர்ந்து அர்ஜுனை ஓட்டினர்.

அவர்கள் ஒருவரை ஒருவர் மாற்றி, மாற்றிக் கிண்டல் செய்ய... அதைப் பார்த்து மீரா, ஆரு, ரஞ்சனா சிரித்துக் கொண்டிருந்தனர்.

சஞ்சனா மட்டும் குழப்பத்தில் இருந்தாள்.

34

அன்று ஆரம்பித்த அர்ஜுன், சூர்யா மற்றும் தினேஷின் ரகளை... ஆருவின் கல்யாணம் வரை தொடர்ந்தது. தினேஷையும், சஞ்சனாவையும் அன்று இரவு ரஞ்சனா அங்கேயே தங்கச் சொல்ல... அவர்களும் தங்கினர்.

மறுநாள் காலையில் எழுந்த சஞ்சனா வாந்தி எடுக்க... விசாரித்ததில் அவள் கர்ப்பமாக இருப்பது தெரிந்தது. தினேஷைக் கையில் பிடிக்க முடியவில்லை. அவன் எல்லோருக்கும் இனிப்புக் கொடுத்துத் தன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டான்.

சஞ்சனா கர்ப்பமாக இருப்பதால், ஆருவின் திருமணத்திற்காக வரும் அவள் பெற்றோருடன் திருச்சி செல்வதாக இருந்தது. வித்யா அதுவரை அவளை இங்கேயே தங்கச் சொன்னார்.

"எதுக்கு உங்களுக்குச் சிரமம்...? இங்கே எல்லோரும் கல்யாண வேலையிலே பிஸியா இருப்பீங்க... நான் அவளை எங்க வீட்ல வச்சுப் பார்த்துக்கிறேன்." தினேஷ் சொன்னதற்கு வித்யா ஒத்துக்கொள்ளவில்லை.

"நாங்க இவ்வளவு பேர் இருக்கோம், அப்புறம் என்ன? இந்த மாதிரி நேரத்தில அவளால வேலை பார்க்க முடியாது. அதுவும் அவ ரொம்ப வாந்தி எடுக்கிறா... பத்து நாள்தானே... இங்கேயே ரெண்டு பேரும் இருங்க." வித்யா முடிவாகச் சொல்ல...

தினேஷால் அதற்கு மேல் மறுக்க முடியவில்லை.

தினேஷ் அங்கேயே தங்கியதால்... அர்ஜுன், சூர்யா மற்றும் ஆதியோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. தினேஷ் அவர்களோடு திருமண வேலை களைப் பகிர்ந்து கொண்டான்.

ரஞ்சனா, சஞ்சனாவை அழைத்துக் கொண்டு டாக்டரிடம் சென்று வந்தாள். ஆதி, சஞ்சனாவுக்காக நிறையப் பழங்கள் வாங்கி வந்து வீட்டில் போட்டான். வித்யாவும் எவ்வளவு வேலை இருந்தாலும், சஞ்சனாவிற்கு என்று வாய்க்கு ருசியாகச் சமைத்துக் கொடுத்தார். ஆரு முன்பு மாதிரி இல்லாமல், இப்போது சஞ்சனாவிடம் நன்றாகப் பேசினாள்.

சஞ்சனாவும் தாய்மை அடைந்ததில் இருந்து சிறிது மாறித்தான் இருந்தாள். அவளுடைய சிந்தனை முழுவதும் இப்போது பிறக்கப் போகும் குழந்தையின் மீது இருந்தது. அதனால் அவளுக்குள் சில நல்ல மாற்றங்கள் ஏற்படத்தான் செய்தது. அதோடு தினேஷ் அவளைத் தாங்குவதும், அவளுக்காக ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் செய்வதைப் பார்த்ததும், அவளுக்குத் தன் கணவனின் மேல் அன்பு பெருகியது.

அர்ஜுனும் மீராவும் சஞ்சனாவிடம் இருந்து இப்போதும் விலகித்தான் இருந்தனர். அவர்களுக்குச் சஞ்சனா முன்பு மாதிரி ஏதாவது பேசி, அதற்குத் தாங்களும் பதில் பேசி... குடும்பத்தில் தேவை இல்லாத பிரச்சினை எதற்கு என்று நினைத்தனர். ஆனால் இருவருமே தினேஷிடம் நன்றாகப் பழகினர்.

திருமண நாள் நெருங்கியதும் வீட்டில் உறவினர் கள் வருகை அதிகமாகியது. அர்ஜுனின் பெரியம்மாவும் வந்து இறங்கி விட்டார். அர்ஜுன், அவன் அம்மா எடுத்தது போக... அவனே அவன் பெரியம்மாவுக்கு ஒரு பட்டுப் புடவை எடுத்துக் கொடுத்தான்.

"எதுக்குடா இப்ப, உன் கல்யாணத்துக்கு வாங்கி இருக்கலாம் இல்ல." காயத்ரி சொல்ல...

"அப்ப இன்னும் கிராண்டா எடுப்போம் பெரியம்மா..." என்றான் அர்ஜுன்.

மீரா, ஆருவின் கல்யாணத்திற்கு வியாழன் அன்றே வந்து விட்டாள். வீட்டிற்கு ஆள் அழைத்துக் கையில் மெஹந்தி போட்டுக் கொண்டனர். ஆரு, ரஞ்சனா, மீரா, சஞ்சனா மற்றும் வீட்டிற்கு வந்த உறவினர் என்று எல்லோரும் மெஹந்தி போட்டுக் கொண்டு வீட்டை ஒரு வழியாக்கினர்.

எல்லோரும் மதிய உணவிற்குப் பிறகே மெஹந்தி போட்டுக் கொண்டதால்... மாடியில் ஆளுக்கு ஒரு மூலையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். சஞ்சனா, மெஹந்தி வைத்ததும் படுக்கச் சென்றுவிட்டாள். வித்யா எங்கோ வெளியில் சென்றுவிட்டு வந்தவர் முகமே வாடி இருந்தது.

ஆருவின் அறைக்கு வந்தவர், எல்லோரிடமும் எரிந்து விழுந்தார். "இது ஏன் இங்க இருக்கு? இது ஏன் அங்க இருக்கு? எதுவும் இந்த வீட்ல வச்ச இடத்தில இருக்காது..." என்று எல்லோரையும் போட்டுப் படுத்தியவர்.

"இப்படி எல்லாரும் கைல மெஹந்தி வச்சிக்கிட்டு உட்கார்ந்துட்டா... யாரு வீட்டு வேலை பார்க்கிறது...?" என்று கோபமாகக் கேட்க... ரஞ்சனா, ஆரு, மீரா மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அவர்களுக்கு அவரின் கோபத்திற்கான காரணம் புரியவில்லை.

ரஞ்சனா, "என்னோட கை நல்லா காய்ஞ்சுடுச்சு..." என்றவள், வேகமாகச் சென்று கையைக் கழுவிவிட்டு... அனைவருக்கும் மாலை காபி போட கீழே சென்றாள்.

"நீ போய்ப் பார்லர்ல வச்சிட்டு வந்திருந்தா... உன்னோட முடிஞ்சிருக்கும். இப்ப பாரு ஆளாளுக்கு வச்சு வீடே எந்த நிலைமைல இருக்குன்னு... இப்ப நீயா வீட்டை சுத்தம் பண்ணுவ...?" வித்யா ஆரு மேலும் எரிந்து விழ... ஆருவுக்குக் கண்ணெல்லாம் கலங்கி விட்டது.

'அம்மா ஏன் இப்படிப் பேசுறாங்க? ஏற்கெனவே எல்லோரும் சேர்ந்து இன்னைக்கு வைக்கிறதாத்தானே பேசி இருந்தோம்...' என்று மனதில் நினைத்தவளுக்கு, அதை வெளியே சொல்லத் தைரியம்தான் இல்லை.

வித்யா எவ்வளவுக்கு எவ்வளவு நல்லவரோ... அதே போல் கோபம் வந்துவிட்டால், யார் என்றும் பாராமல் கோபத்தைக் காட்டிவிடுவார்.

மீரா, ஆருவின் அருகே அமர்ந்து, மெஹந்தி போட்ட அவள் கைகளில் சர்க்கரைத் தண்ணீர் வைத்துக்

கொண்டிருந்தாள். வித்யா, மீராவையும் விடவில்லை, அவளையும் பார்த்து முறைத்து விட்டுத்தான் சென்றார்.

"இன்னைக்கு மட்டும் கைல தண்ணி படாம வச்சுக்கோ... அப்பதான் மெஹந்தி டார்க்கா பிடிக்கும். நைட் கை, கால்ல எண்ணெய் தேச்சுட்டுப் படு."

மீரா சொல்ல... ஆருவும் அவள் சொன்னதற் கெல்லாம் சரி என்று மண்டையை ஆட்டியவள், "மீரா, அம்மா ஏன் கோபமா இருக்காங்க? ஒரு வேளை அம்மாவுக்கு எங்க விஷயம் தெரிஞ்சிடுச்சோ..." எனக் கேட்க... மீரா தெரியவில்லை என்று உதட்டைச் சுளித்தாள்.

மீரா, ஆருவை ரெஸ்ட் எடுக்கச் சொல்லிவிட்டுக் கீழே சென்று ரஞ்சனாவுக்கு உதவினாள். அப்போது அங்கே வந்த வித்யா, ரஞ்சனாவிடம், "நீ போ, நான் பார்த்துக்கிறேன்..." என்று சொல்ல...

"ஏன் அத்தை...? நான் பார்த்துக்கிறேன், நீங்க போய் ரெஸ்ட் எடுங்க..." என்றாள் ரஞ்சனா.

"இனி ரெஸ்ட் எடுத்து என்ன பண்ணப் போறேன்? யாருக்கும் பாரமா இல்லாம சீக்கிரமாப் போய்ச் சேர்ந்தா போதும்." வித்யா புலம்ப... அதைக் கேட்டு மீராவும், ரஞ்சனாவும் திடுக்கிட்டனர்.

"ஏன் அத்தை, இன்னைக்கு ஒரு மாதிரி பேசு றீங்க...? யாரு என்ன செஞ்சா...?" ரஞ்சனா கேட்க... வித்யா பதில் சொல்லாமல் வெளியே சென்றுவிட்டார்.

மீராவுக்கு, 'அங்கே இருப்பதா...? இல்லை, போவதா...?' என்று ஒன்றும் புரியவில்லை. எல்லோருக்கும் மாலை காபி கொடுத்ததும், ரஞ்சனா இரவுக்குச் சமைக்க... மீரா அவளுக்கு உதவிக் கொண்டிருந்தாள்.

வித்யா, அவர் அறையில் சென்று படுத்து விட்டார். மீராவும் வேலை முடிந்ததும் ரஞ்சனாவிடம் சொல்லிக் கொண்டு கிளம்பிவிட்டாள். இரவு ரஞ்சனாவும், பெரியம்மாவும் சேர்ந்து, வந்திருந்த உறவினர்களுக்குப் பரிமாறினார்கள். ரஞ்சனாவும் சரி, மீராவும் சரி, இன்று வித்யா நடந்து கொண்டதைப் பற்றி ஆதியிடமோ, அர்ஜுனிடமோ மூச்சு விடவில்லை.

வித்யா மறுநாள் சற்றுத் தெளிந்து இருந்தார். ஆனால், முன்பு மாதிரி கலகலப்பாக இருக்கவில்லை, ஏன் சற்று அழுத்தமாக இருந்தார் என்று கூடச் சொல்லலாம். அது வீட்டு ஆண்களுக்குத் தெரிய வில்லை. அவர்கள் அனைவரும் கல்யாண வேலை களில் பிஸியாக இருந்ததால், வித்யாவைக் கவனிக்க வில்லை. ஆனால், வீட்டில் இருந்த ரஞ்சனாவுக்கும், ஆருவுக்கும் புரிந்தது.

ரஞ்சனா, 'ஆதியிடம் சொன்னால்... எங்கே தன்னை மாமியார் பற்றிக் குறை சொல்வதாக நினைத்து விடுவானோ...' என்று சொல்லத் தயங்கினாள்.

ஆரு, 'அம்மாவுக்குத் தங்கள் காதல் தெரிந்து விட்டதோ...? அதனால்தான் கோபமாக இருக்கிறார் களோ...?' என்று நினைத்துப் பயந்து கொண்டிருந்தாள்.

மீரா எப்பவும் போல் வந்து போய்க் கொண்டிருந்தாள். அவளிடமும் வித்யா சரியாக முகம் கொடுத்துப் பேச வில்லை. அவளும், 'ஏன் இப்படி இருக்காங்க...?' என்று குழம்பிப் போய்த்தான் இருந்தாள்.

திருமணத்திற்கு முன் தினம் மாலை நான்கு மணிக்கே... வீட்டு ஆட்கள் முன்னிலையில் நிச்சயம் செய்து விட்டு, அனைவரும் மாலை வரவேற்புக்குத் தயார் ஆகினர். மீரா, ஆருவுடனே இருந்தாள். பார்லரில் இருந்து ஆள் வந்து ஆருவிற்கு அலங்காரம் செய்தனர். மீராவும் அந்த அறையிலேயே தலைவாரி, புடவை மாற்றிக் கொண்டாள். வரவேற்பு நல்லபடியாக முடிந்தது.

அன்று இரவு ஆருவும், மீராவும் ஒரே அறையில் தங்கினர். அப்போது ஆரு, "ஏன் மீரா அம்மா டல்லாவே இருக்காங்க? என் மேல கோபமா இருக்காங்களா...? என்னால சந்தோஷமாவே இருக்க முடியலை..." என்று சொல்லி வருந்த...

"நீ இத்தனை வருஷம் அவங்களோட இருந்துட்ட இல்லையா, இனி வேற வீட்டுக்குப் போயிடுவ... அதை நினைச்சு வந்த வருத்தமா இருக்கும். எல்லாம் சரி ஆகிடும், கவலைப்படாதே..." என்று ஆருவை மீரா தேற்ற... ஆருவும் சரி என்று தூங்கினாள்.

மறு நாள் காலை சீக்கிரம் எழுந்து ஆரு தயார் ஆக... மீரா அவளுக்கு உதவிக் கொண்டிருந்தாள். மணப்பெண் அலங்காரத்தில் ஆரு ஜொலிக்க... மீரா, அர்ஜுன் வாங்கிக் கொடுத்த புடவையில் இருந்த வெள்ளி

ஜரிகைக்குப் பொருத்தமாக, வைர நெக்லஸ் மற்றும் பெரிய வைரக் காதணியும் போட்டிருந்தாள். மீரா மிகவும் அழகாக இருந்தாள் என்று சொல்லவும் வேண்டுமா...?

வித்யா அவர்கள் இருந்த அறைக்குள் வந்த போது... ஆரு, மீராவிடம் அவள் வைர நெக்லஸ் பற்றிப் புகழ்ந்து கொண்டிருந்தாள். "அழகா இருக்கு மீரா... எனக்கு எங்க அம்மா ஒரு சின்ன வைரக் கம்மல் வாங்கினாங்க, அதுவே அறுபது ஆயிரம் ஆகிடுச்சு. இது பெருசா இருக்கே... ரொம்ப விலையா இருக்கும் இல்ல... நீ என்னம்மா, பணக்காரி... எங்க அப்பா தங்கத்துல எனக்கு நகை போட்டா... உங்க அப்பா உனக்கு வைரத்துல போடுவாரு..."

அவள் கிண்டல் செய்ய... அவள் சொல்வதைப் புன்னகையுடன் கேட்ட மீரா, "நீ வேணா இதைப் போட்டுக்கோ, நான் உன்னோட தங்க நெக்லஸ் போட்டுக்கிறேன்..." என்றாள்.

"அதெல்லாம் வேண்டாம். அவங்கவங்களுக்கு உரியதைத்தான் போட்டுக்கணும்." வித்யா சொல்ல... ஆருவும், மீராவும் அப்போதுதான் அவரைக் கவனித் தனர்.

ஆருவின் அருகே வந்த வித்யா, அவள் கன்னத்தை வழித்து, "அழகா இருக்கடா ராஜாத்தி..." என்று அவள் நெற்றியில் முத்தமிட... ஆரு அவள் அம்மாவைக் கட்டிக் கொண்டவள்,

"நாலு நாளா என்னைப் போட்டு டென்ஷன் பண்ணிட்டீங்க... ஏன்மா அப்படி இருந்தீங்க...,?" என்று கொஞ்சலாகக் கேட்க...

"நீ எங்களை விட்டு வேற வீட்டுக்குப் போற இல்ல, அதனாலதான்..." என்றார்.

"மீராவும் அப்படித்தான் சொன்னா..." என்று சொல்லி ஆரு, மீராவைப் பார்த்துச் சிரிக்க... மீராவும் புன்னகைத்தாள்.

வித்யா, "சரி, சீக்கிரம் ரெடியாகு..." என்று சொல்லி விட்டுச் சென்றார்.

ஆரு சந்தோஷமாக மணமேடைக்குச் சென்றாள். ஆருவை சூர்யாவின் அருகே உட்கார வைத்துவிட்டு, மீராவும், ரஞ்சனாவும் அவளுக்குப் பின்னே நின்றனர்.

ஆதி வந்து ரஞ்சனாவின் அருகே நிற்க, அர்ஜுன் வந்து மீராவின் அருகே நின்றான். மீரா, அர்ஜுனைப் பார்த்துப் புன்னகைக்க... "இந்தப் புடவை வாங்கும் போது இருந்ததை விட... இப்ப நீ கட்டியதும்தான் ரொம்ப அழகா இருக்கு மீரா..." அர்ஜுன் உருகினான்.

ரஞ்சனா, அவள் திருமணப் புடவை கட்டி இருந்தாள். அதைப் பார்த்த ஆதி, "நம்ம கல்யாணத்து அன்னைக்குப் பார்த்த மாதிரியே இருக்க ரஞ்சு..." என்று வழிய...

சூர்யா, ஆருவிடம், "கைல பேப்பர் இல்ல...?" என்று சொல்ல... ஆரு, 'எதுக்கு...?' என்று புரியாமல் பார்க்க...

"உன் ரெண்டு அண்ணனுங்க பேசுற வசனத்தை நோட் பண்ணி வச்சிக்கிட்டா... அப்புறமா யூஸ் பண்ணிக்கலாம், அதுக்குத்தான். ஒருத்தருக்குக் கல்யாணம் ஆகி குழந்தை இருக்கு, இன்னொருத்தனுக்கு இன்னும் கல்யாணமே ஆகலை... ஆனா இவங்க பண்ற ரொமான்ஸ் தாங்க முடியலை..."

சூர்யா புலம்ப... அதைக் கேட்டு ஆதியும், அர்ஜுனும் ஒரே நேரத்தில், "பொறாமை..." என்று சொல்ல... மூன்று ஜோடியும் சிரித்தது.

அதை மேடையின் கீழே நின்று கொண்டிருந்த தினேஷ், தனது செல்லில் படம் எடுத்தான்.

ஐயர், முகூர்த்தத்துக்கு டைம் ஆகிடுச்சு, பெரியவங்களை எல்லாம் மேடைக்கு வரச் சொல்லுங்க..." என்றதும், இருவரின் பெற்றோரும் மேடைக்கு வந்தனர். அப்போது வித்யாவிடம் இருந்த ஜஷு இறங்கி நடந்து வந்தது. பட்டுப் பாவாடை அணிந்து, தலையில் இருந்த குடுமியில் பூ வைத்து, நகை எல்லாம் போட்டு... அழகாக இருந்தது.

அர்ஜுன், ஜஷுவைத் தூக்கிக் கொண்டவன், "உங்க சித்தியை விட, நீதான்டா சூப்பரா இருக்க..." என்று சொல்ல...

"அம்மாவுக்கும், பொண்ணுக்கும் சண்டை மூட்டி விடப் பார்க்கிறீங்களா...? அது நடக்காது. என்னோட பொண்ணுதான் அழகு."

மீரா, ஜஷுவை வாங்கிக் கொஞ்ச, அதை ஆதியும், ரஞ்சனாவும் சிரித்தபடி பார்த்துக் கொண்டிருந்தனர்.

திருமணச் சடங்குகள் ஆரம்பித்ததும், எல்லோரும் அதைக் கவனிக்க... குறித்த முகூர்த்தத்தில் சூர்யா, ஆராதனாவின் கழுத்தில் தாலி அணிவித்துத் தன் மனைவியாக உலகுக்கு அறிவித்தான். திருமணத்திற்கு வந்த எல்லோரும் அட்சதை தூவி மணமக்களை வாழ்த்தினர்.

மற்ற சடங்குகள் எல்லாம் முடிந்ததும், மணமக்களுக்கு விளையாடல் ஏற்பாடு செய்திருந்தனர். சூர்யா, ஆருவுக்கு எல்லாவற்றிலும் விட்டுக் கொடுத்து, அவளை ஜெயிக்க வைக்க... "டேய் ஒண்ணுத்திலேயாவது ஜெயிடா, மானம் போகுது." அர்ஜுன், அவன் காதில் குனிந்து சொன்னான்.

பதிலுக்குச் சூர்யா, "இந்த விளையாட்டுல ஜெயிக்கிறதா முக்கியம், வாழ்க்கையில ஜெயிக்கணும். இன்னைக்கு ஆரு மூட் அவுட் ஆனா... நைட் எனக்குத் தான் கஷ்டம்..." என்று சொல்லிக் கண்ணடிக்க...

"டேய், என்கிட்டே போய் இப்படிப் பேசுற...? நான் அவளோட அண்ணன்டா..."

அர்ஜுன் பாவமாகச் சொல்ல... "நீதானே கேட்ட..." என்ற சூர்யா, ஆருவுடன் விளையாடுவதில் மும்முர மானான்.

அர்ஜுன், 'எனக்கு ரொம்பத் தேவை...' என்று நினைத்தவன், மீராவைப் பார்க்க...

அவள் ஆர்வமாக விளையாட்டை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

அர்ஜுனுக்கு மீராவைத் தனியே சந்திக்க வேண்டும் என்று ஆசை.

ஆனால்... இவ்வளவு பேர் இருக்கும் போது, முடியாது என்று பெருமூச்சு விட்டான்.

ஆராதனா, சூர்யாவுடன் புகுந்த வீட்டிற்குச் செல்லும்போது ஒரே அழுகை. வித்யாவும் அழுதார். அர்ஜுன் சென்று தன் அம்மாவைத் தேற்ற... அவர் அவனை மெதுவாக விலக்கிவிட்டுத் தள்ளிச் சென்று நின்றார்.

அதை அர்ஜுன் உணரவில்லை... அவன் ஆருவைச் சமாதானம் செய்து கொண்டிருந்தான். ஆனால், அதை மீரா கவனித்தாள்.

அவள் மனதில் தங்களைப் பற்றி வித்யாவிற்குத் தெரிந்துவிட்டதோ என்று தோன்றியது.

'அதனால்தான் இப்படி இருக்கிறாரோ...?' என்று நினைத்தவள், அதை அன்றே அர்ஜுனிடம் சொல்லி இருந்தால்... பின்னாடி வரப்போகும் பெரிய துன்பத்தைத் தவிர்த்திருக்கலாம்.

'தங்கையின் கல்யாண வேலையில் இருப்பவனை... ஏதாவது சொல்லிக் குழப்ப வேண்டாம். பிறகு பார்த்துக் கொள்ளலாம்...' என்று நினைத்தாள், வரப்போவது தெரியாமல்.

35

ஆராதனா, அவள் புகுந்த வீட்டிற்குச் சென்ற போது... அவளுடன் ஆதி, ரஞ்சனா மற்றும் அவளின் பெரியம்மா, பெரியப்பா சென்றனர். அவர்கள் சென்றதும் மண்டபத்தைக் காலி செய்யும் பொருட்டு, வந்திருந்த பரிசுப் பொருட்களை எல்லாம் வேனில் அடுக்கிக் கொண்டிருந்தனர். மீரா, அவளும், ஆராதனாவும் தங்கியிருந்த அறையில் எல்லாவற்றையும் எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள்.

அப்போது உள்ளே வந்த அர்ஜுன், "மீரா.. எல்லாம் எடுத்துக்கிட்டியா...?" என்று கேட்க...

"எடுத்தாச்சு அர்ஜுன், இது ஆருவோடது..." என்று மீரா ஒரு பெரிய பையை அவனிடம் கொடுத்தாள்.

அர்ஜுன் அந்தப் பையோடு வெளியே செல்ல முயல... மீரா மெதுவாக, "அர்ஜுன்..." என்று அழைத்தாள்.

அர்ஜுன் நின்று திரும்பிப் பார்க்க... மீரா அவனை வா என்பது போல் தலை அசைக்க... அர்ஜுன் பையைக் கதவின் அருகே வைத்துவிட்டு அவளருகில் வந்தான்.

மீரா வேகமாகச் சென்று அர்ஜுனின் மார்பில் சாய்ந்து கொள்ள... அர்ஜுன் அவளை இறுக அணைத்துக் கொண்டான். இருவரும் சில நொடிகள் அப்படியே இருந்தனர். அர்ஜுன் அவளை நிமிர்த்தி, அவள் முகம் பார்த்தவன், "தலை கலைஞ்சு, கண் மை எல்லாம்

வழிஞ்சு இருந்தாலும்... பார்க்க அழகா இருக்கடி ராட்சஸி...” என்று சொல்லி, அவள் இதழில் அழுத்தமாக முத்தம் பதித்துவிட்டு விலகிச் சென்றான்.

அர்ஜுன், ஆருவின் பையோடு வாசலுக்குச் செல்ல... மீரா, அவள் பையோடு அவன் பின்னே சென்றாள். இவர்கள் வாசலுக்கு வரும் போது... வித்யா வெளியில் நின்று கொண்டிருந்தார்.

“உங்களுக்கு அந்த வண்டியில இடம் இல்லை யாம்மா...?” என்ற அர்ஜுன், “வாங்க, நான் உங்களைப் பைக்ல கொண்டு போய் விடுறேன்...” என்றான்.

“நான் ஆன்ட்டியை வீட்ல விட்டுட்டு, அப்படியே எங்க வீட்டுக்குப் போறேன்.” மீரா சொல்ல... வித்யாவும் மீராவுடன் செல்கிறேன் என்றார்.

அவர்கள் கடையில் வேலை செய்பவர்கள் எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அதோடு கணேசனுக்கும், அர்ஜுனுக்கும் இன்னும் மண்டபத்தில் வேலை இருந்ததால், அவர்கள் அங்கேயே இருந்தனர்.

மீரா... இத்தனை நாள் கோபமாக இருந்த வித்யா தன்னோடு வருவதாகச் சொன்னதும், மகிழ்ச்சியுடன் அவரை அழைத்துக் கொண்டு தன் காருக்குச் சென்றாள். அர்ஜுன், ஆருவின் பையைக் கொண்டு வந்து, காரின் பின் சீட்டில் வைக்க,.. வித்யா முன் பக்கம் மீராவின் அருகே சென்று அமர்ந்தார். மீரா, அர்ஜுனைப் பார்த்து புன்னகைத்துவிட்டுக் காரை எடுத்தாள்.

மீரா காரை ஓட்டிக் கொண்டிருக்க... வித்யா அமைதியாக வந்தார். மீரா, ‘ஏன் ஆன்ட்டி இப்படி இருக்காங்க...?’ என்று நினைத்துக் கொண்டே காரை ஓட்டினாள். கார் பெசன்ட் நகர் பீச் வழியாகச் சென்ற போது... வித்யா, மீராவிடம் காரை அங்கே நிறுத்தும்படி சொன்னார்.

மணி அப்போது மூன்று. ‘இந்த நேரத்தில்... அதுவும் வெயிலில்... எதற்கு...?’ என்று புரியாமல் மீரா காரை நிறுத்த... வித்யா இறங்கி கடலை நோக்கிச் சென்றார். மீராவும் அவர் பின்னே சென்றாள்.

அவளுக்கு இப்போது அவர் தன்னிடம் ஏதோ பேசப் போகிறார் என்று நன்றாகப் புரிந்தது. இருவரும் கடல் அலையைப் பார்த்தபடி... கரையோரமாக நின்றனர். சிறிது நேரம் சென்று வித்யாவே பேச்சை ஆரம்பித்தார்.

“உனக்கு அர்ஜுனை எப்போது இருந்து தெரியும்...?”

வித்யாவின் கேள்வியில் திடுக்கிட்ட மீரா, சமாளித்துக் கொண்டு, “நான் காலேஜ் சேர்ந்த ஒரு வாரத்தி லேயே தெரியும்...” என்றாள்.

“அவனுக்கு உன்னை அப்பவே தெரியுமா...?” வித்யா ஆச்சரியமாகக் கேட்க...

“இல்லை... அவங்களுக்கு என்னை, நான் செகண்ட் இயர் படிக்கும் போதுதான் தெரியும்.”

“அர்ஜுனா உன்கிட்ட வந்து பேசினானா...?” வித்யா அடுத்த கேள்வியைக் கேட்க...

மீரா, இல்லை என்று தலை அசைத்தாள்.

"அப்ப அவனா உன்னைத் தேடி வரலை இல்லையா...?" வித்யா சொல்ல... மீரா அவர் சொன்னதைக் கேட்டு அதிர்ந்தாள்.

அவளது முகத்தைப் பார்த்த வித்யா, "நான் நேரடியாவே விஷயத்துக்கு வரேன்..." என்றவர்,

"எங்க குடும்பத்துக்கு இந்தக் காதல் கல்யாணம் எல்லாம் ஒத்து வராது மீரா. எனக்குத் தெரியும் நீயும், அர்ஜுனும் விரும்பறது. கல்யாணம் வெறும் ரெண்டு பேரை மட்டும் சேர்த்து வைக்கிறது இல்லை... ரெண்டு குடும்பம், அவங்க உறவுகள் எல்லாம் சேர்றதுதான். நாம ரெண்டு பேர் குடும்பமும் வேற வேற இனத்தைச் சேர்ந்தவங்க. உங்களுக்கு ஒரு வழக்கம் இருக்கும், எங்களுக்கு வேற மாதிரி இருக்கும்."

"ஆன்ட்டி, என்னால உங்களுக்கு எந்தப் பிரச்சினையும் வராது. நான் அர்ஜுனுக்காக இதைக் கூடச் செய்ய மாட்டேனா...? கல்யாணத்துக்கு அப்புறம் நான் உங்க வழக்கத்தையே பாலோ பண்றேன்."

"நீ இப்ப இப்படித்தான் மீரா சொல்வ... ஆனா ஏதோ ஒரு நாள்னா அட்ஜஸ்ட் பண்ண முடியும், வாழ்க்கை முழுக்க முடியுமா...? அதோட நீ வசதியான வீட்டுப் பொண்ணு, நீ எப்படி எங்க வீட்ல வந்து இருப்ப? நாங்களும் வசதியானவங்கதான்... இல்லைன்னு சொல்லலை. ஆனா... உங்களவுக்கு இல்லை.

"இன்னைக்குக் காலையில கல்யாண மண்டபத்தில நடந்தது, உனக்கே தெரியும். ஆரு உன்னோட வைர நெக்லஸ் பார்த்து ஆசைப்பட்டா... நீ எங்க வீட்டுக்கு மருமகளா வந்து இந்த மாதிரி வைர நகைகள் போடும் போது... அது ஆருவுக்கும், ரஞ்சனாவுக்கும் ஆசையைத் தூண்டாதா...? அதனால வீணா குடும்பத்துக்குள்ளே பிரச்சினை வரும். அதனால நாங்க எங்களுக்கு ஏத்த இடத்தில சம்பந்தம் பண்றதுதான் நல்லது..." என்றார் முடிவாக.

"ஆன்ட்டி, இது ரொம்பச் சின்ன விஷயம். நான் எங்க அப்பாகிட்ட எனக்கு வைர நகைகள் வேண்டாம்னு சொல்லிடுறேன்."

மீரா சொல்ல... அவளையே சிறிது நேரம் பார்த்த வித்யா, "மீரா, உனக்கே உங்க அம்மாவைப் பத்தித் தெரியும்... நீயும் உங்க அம்மா மாதிரி நாளைக்குச் செய்ய மாட்டேன்னு என்ன நிச்சயம்? எங்களுக்கு இந்த டைவர்ஸ் எல்லாம் பெரிய விஷயம். வேண்டாம், விட்டுடு..." என்றார்.

அவர் சொன்னதைக் கேட்டு அதிர்ந்த மீரா,

"எங்க அம்மா அப்படிப் பண்ணா... நானும் அப்படித்தான் இருப்பேன்னு எந்தக் கட்டாயமும் இல்லை. நான் அர்ஜுனைப் பிடிச்சு வச்சிருக்கலை, விட்டுட. அர்ஜுன் என்னோட உயிர்... அவங்களுக்கும் நான் அப்படித்தான்..." என்றாள் உறுதியாக.

வித்யா, மீராவிடம் இந்த நிமிர்வை எதிர்பார்க்க வில்லை, அவர் சொன்னால் மீரா கேட்டு விலகி விடுவாள் என்று நினைத்தார்.

"நீ சொல்ற... 'நீயே என் உயிர்' எல்லாம் சினிமா வுக்குத்தான் ஒத்து வரும், வாழ்க்கைக்கு இல்லை. நீங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் பார்க்காம, பேசாம இருந்தா... இந்தக் காதல் எல்லாம் காணாமப் போயிடும்..." என்றார் வித்யா நக்கலாக.

"நானும், அர்ஜுனும் ஒருத்தரை ஒருத்தர் சந்திக்காம இருக்கோம், அப்பவும் நாங்க மாறாம இருந்தா... நீங்க ஒத்துப்பீங்களா எங்க காதல் உண்மையானதுன்னு..." மீரா சவால் விட...

"அப்ப நீ அர்ஜுனை மறக்க மாட்ட...? மீரா, நீ ரொம்ப நல்ல பொண்ணு, நான் இல்லைன்னு சொல்லலை. ஆனா... எங்க குடும்பத்துக்கு நீ ஒத்து வர மாட்டேன்னுதான் சொல்றேன். புரிஞ்சிக்கோ, நீயும் எனக்கு ஆரு மாதிரிதான். நீ வேற யாரையாவது கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோஷமா இரு."

"ஆன்ட்டி, என்னை அர்ஜுனை விட்டு விலகுன்னு கேட்க உங்களுக்கு உரிமை இருக்கு. ஆனா நான் வேற யாரையோ கல்யாணம் பண்ணிக்கணும்னு சொல்ல உங்களுக்கு உரிமை இல்லை. அதோட, அர்ஜுனை என்னால மறக்க முடியாது."

"இப்ப நீ முடிவா என்ன சொல்ற மீரா? அர்ஜுனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு, எங்க

குடும்பத்தைப் பிரிக்கப் போற... அதுதானே...?" வித்யா வீம்பாகக் கேட்க... அது மீராவின் மனதைக் காயப்படுத்தியது.

"இல்லை....நான் உங்க குடும்பத்தைப் பிரிக்க மாட்டேன். அதே நேரத்தில அர்ஜுனையும் மறக்க மாட்டேன். நானா அவங்களைத் தேடியும் வர மாட்டேன். உங்களால முடிஞ்சா உங்க பையன் மனசை மாத்தி வேற பொண்ணுக்குக் கல்யாணம் செஞ்சு வைங்க... அதை நான் தடுக்கவும் மாட்டேன்."

"முடியாதுன்னு நினைக்கிறியா...? அர்ஜுன் என் பேச்சை மீற மாட்டான். என் சம்மதம் இல்லாம உன்னைக் கல்யாணமும் செய்ய மாட்டான்."

"உங்க சம்மதம் இல்லாம நானும் அர்ஜுனைக் கல்யாணம் செஞ்சுப்பேன்னு சொல்லலை. எங்க கல்யாணம் உங்க சம்மதத்தோடதான் நடக்கும். முடிஞ்சா... உங்க பையனுக்கு வேற பொண்ணோட கல்யாணம் செஞ்சு வைங்கன்னுதான் சொல்றேன்..." என்ற மீரா, திரும்பிக் காரை நோக்கி நடக்க... வித்யாவும் அவள் பின்னே சென்றார்.

காரின் அருகே வந்ததும் வித்யா, "நான் ஆட்டோல போய்க்கிறேன்..." என்று சொல்லி ஆட்டோவை அழைக்க... மீரா காரின் பின்புறம் இருந்த ஆருவின் பையை எடுத்துக் கொடுத்தாள்.

வித்யா ஆட்டோவில் ஏறிச் சென்றுவிட்டார்.

மீரா வீட்டுக்குச் செல்லாமல் அங்கிருக்கும் அஷ்டலக்ஷ்மி கோவிலுக்குச் சென்றாள். எல்லாச் சந்நிதியிலும் நின்று வணங்கியவள், அன்று அர்ஜுன் அவள் கழுத்தில் செயின் போட்டு விட்ட இடத்திற்குச் சென்று அமர்ந்தாள். அதுவரை அடக்கி வைத்திருந்த அழுகை வர... 'நான் என்ன தப்பு செஞ்சேன்? என்னை ஏன் வேண்டாம்னு சொல்லிட்டாங்க...?' என்று நினைத்து அழுதாள்.

மீரா சிறிது நேரம் அழுதவள்... பின் கண்ணைத் துடைத்துக் கொண்டு, தன் கழுத்தில் இருந்த செயினைக் கையில் பிடித்துக் கொண்டு... 'அன்னைக்கு அர்ஜுன் இங்க வச்சுதான் என் கழுத்தில இந்தச் செயின் போட்டாங்க. என்னைப் பொறுத்தவரை எனக்கும், அர்ஜுனுக்கும் அன்னைக்கே கல்யாணம் ஆகிடுச்சு, உங்க சந்நிதியிலதான் எங்க கல்யாணம் நடந்தது. இனி நடக்கும் கல்யாணம் ஊருக்காகத்தான். நீங்கதான் எங்களைச் சேர்த்து வைக்கணும் அம்மா...' என்று மனதார வேண்டியவள், எழுந்து கொள்ள... கோவில் அர்ச்சகர் அவளிடம் பூவையும், குங்குமத்தையும் கொண்டு வந்து கொடுத்தார்.

மீரா குங்குமத்தை நெற்றியில் இட்டுக் கொண்டவள், பூவையும் தலையில் வைத்துக் கொண்டு சந்நிதியில் விழுந்து கும்பிட்டு, 'நீயே துதி. உன்னைத் தான் நம்பியிருக்கேன்...' என்று மனதில் சொல்லிக் கொண்டு எழுந்தாள்.

அவள் நம்பும் தெய்வம் அவளைக் கண்டிப்பாகக் காப்பாற்றும்.

ஆதியும் ரஞ்சனாவும், சூர்யா, ஆருவுடன் அவர்கள் வீட்டிற்குச் சென்றவர்கள்... புதுமணத் தம்பதியர் பாலும், பழமும் சாப்பிட்டதும்... எல்லோரிடமும் சொல்லிக்கொண்டு கிளம்பினார்கள்.

ரஞ்சனாவிற்கு வீட்டில் வேலை இருந்தது. சூர்யா, ஆரு முதலிரவுக்கு அறையைத் தயார் செய்ய வேண்டும். அதோடு இன்று அவள் பெற்றோரும் சஞ்சனாவை அழைத்துக் கொண்டு ஊருக்குக் கிளம்புகிறார்கள். அவர்களையும் வழி அனுப்ப வேண்டும். அதனால் ஆருவுக்குத் துணைக்குப் பெரியம்மாவை வைத்துவிட்டு ஆதியோடு வீட்டிற்குக் கிளம்பினாள்.

ஆதி, ரஞ்சனாவை வீட்டில் வந்து விட்டவன், அர்ஜுனை அழைத்து, "மண்டபத்தில் வேலை முடிந்து விட்டதா...?" என்று கேட்க...

அர்ஜுன், "இல்லை, இப்பதான் மளிகை சாமான் மிஞ்சினது எல்லாம் பேக் பண்ணிட்டு இருக்காங்க..." என்றான்.

"அம்மா எங்கே?" ஆதி கேட்க...

"அம்மா.. மீராவோட அப்பவே வந்தாங்களே, இன்னுமா வரலை...? என்றான்.

"மீராவோடதானே வராங்க... வர வழியில டிராபிக்கோ என்னவோ...?" என்றவன், "சரி, நானும் அங்கே வரேன்..." என்று போனை வைத்தான்.

ஆதி, ரஞ்சனாவிடம், "அம்மா மீராவோட வர்றாங்களாம, நீ வேலையைப் பாரு..." என்று சொல்லிவிட்டுச் சென்றான். அவன் வெளியே சென்றதும், ரஞ்சனா வீட்டுக்குள் செல்லத் திரும்ப... அப்போது வீட்டு வாசலில் ஆட்டோ வந்து நிற்கும் சத்தம் கேட்டது. ரஞ்சனா, யார் என்று எட்டிப் பார்க்க.... வித்யாதான் ஆட்டோவில் இருந்து இறங்கினார்.

'மீராவோட வருவாங்கன்னு சொன்னார், இவங்க தனியா ஆட்டோவில் வர்றாங்க...?' என்று குழம்பிய ரஞ்சனா, வித்யாவின் முகத்தைப் பார்க்க... அவர் முகம் நான்கு நாட்கள் முன்பிருந்தது போல் கடுகடுவென்று இருந்தது.

ரஞ்சனா, 'ஐயோ தெய்வமே...! இவங்ககிட்ட இருந்து என்னைக் காப்பாற்று...' என்று மனதிற்குள் வேண்டியவள், வேகமாக வீட்டிற்குள் சென்று, தன் அம்மாவிடம் ஜஷுவைக் கொடுத்துவிட்டு... "அம்மா... நான் போய் ஆராதனா ரூமை ரெடி பண்றேன்... நீங்க என்னோட மாமியார் கேட்டா சொல்லிடுங்க..." என்று சொல்லிவிட்டு வேகமாக மாடிக்குச் சென்றாள்.

மீரா வீட்டுக்கு வந்தவள், அன்றிரவு ஏழு மணிக்கு இருந்த விமானத்திற்கு டிக்கெட் முன் பதிவு செய்து விட்டு, பெங்களூர் செல்லக் கிளம்பிக் கொண்டிருந்தாள். அப்போது அர்ஜுன், மீராவை செல்லில் அழைத்தான்.

"மீரா... நீயும், அம்மாவும் வீட்டுக்குப் போக லேட் ஆகிடுச்சா..."

அர்ஜுன் கேட்டதற்கு, மீரா வேறெதுவும் சொல்லாமல்... "ஆமாம்..." என்று மட்டும் சொன்னாள்.

"நீயும், அம்மாவும் நிறைய நகை வேற போட்டிருந்தீங்களா... ஆதி இன்னும் வரலைன்னு சொன்னதும் பயந்திட்டேன்..." என்றவன், "சரி போனை வச்சிடுறேன்..." என்று சொல்ல...

"அர்ஜுன், நான் இன்னைக்கே ப்ளைட்ல பெங்களூர் கிளம்புறேன். நாளைக்கு ஆபீஸ்ல முக்கியமான வேலை இருக்கு... நைட் போயிட்டா... ஈஸியா இருக்கும்."

மீரா சொல்ல... அர்ஜுனும் சரி என்றான். அவள் தனியே ட்ரெயினில் செல்வதற்கு, விமானத்தில் செல்வது மேல் என்று நினைத்தவன், "பார்த்துப் போ..." என்று சொல்லிவிட்டு வைத்தான்.

ரஞ்சனா அவள் அறைக்குச் சென்று புடவை மாற்றிவிட்டு, ஆருவின் அறைக்குச் சென்றவள், அவள் அறையை ஒழுங்குபடுத்தி, கட்டிலில் புது மெத்தை விரிப்பை விரித்து... ரூமில் சிறிது ரூம் பிரெஷ்னரையும் அடித்துவிட்டு, அறைக்கதவைச் சாத்திவிட்டு வெளியே வர... அவள் செல் அடித்தது. ரஞ்சனா, 'அழைப்பது யார்?' என்று பார்க்க... அழைத்தது மீரா. ரஞ்சனா அவள் அறைக்குச் சென்று போனை ஆன் செய்தாள்.

"ரஞ்சனா அக்கா, அத்தை வீட்டுக்கு வந்துட்டாங்களா...?"

"வந்துட்டாங்க மீரா... உன் கூடத்தானே மீரா மண்டபத்தில இருந்து கிளம்பினாங்க... அப்புறம் ஏன் ஆட்டோவுல அவங்க மட்டும் தனியா வந்தாங்க?" ரஞ்சனா கேட்க...

"அவங்களுக்கு எங்க விஷயம் தெரிஞ்சிடுச்சுக்கா... வழியில நிறுத்தி என்னை விசாரிச்சாங்க... அர்ஜுனை விட்டு விலகச் சொல்லி என்னைக் கேட்டாங்க. நான் முடியாதுன்னு சொன்னதும், கோபமா கிளம்பிட்டாங்க..." என்றாள் மீரா.

"அப்படியா...? இப்ப என்ன பண்றது? அர்ஜுனுக்குத் தெரியுமா...?"

"இல்லை... நான் எதுவும் சொல்லலை. சொல்லப் போறதும் இல்லை. இனி அவங்க பாடு, அவங்க மகன் பாடு... நான் சொன்னா அவங்க அர்ஜுனை நான் தூண்டி விடுறதா நினைப்பாங்க. அதனால அவங்களே சொல்லிக்கட்டும்."

ரஞ்சனாவுக்கும் மீரா சொல்வதுதான் சரி என்று பட, "ஆமா... அத்தைகிட்ட யார் சொல்லி இருப்பா?" என்றாள் யோசனையாக.

"யார் சொன்னா என்னக்கா? தெரிஞ்சிடுச்சு, அவ்வளவுதான்..." என்றாள் மீரர் அலுப்பாக.

"மீரா, நான் வேணா... அர்ஜுனோட அண்ணாகிட்ட இதைச் சொல்லட்டா...?" ரஞ்சனா கேட்க...

"வேண்டாம் ரஞ்சனாக்கா... இப்ப எல்லோரும் ஆரு கல்யாண சந்தோஷத்தில இருக்காங்க... இப்ப எதுவும்

சொல்ல வேண்டாம். கொஞ்ச நாள் போகட்டும், பார்க்கலாம்..." எனச் சொல்லி மீரா போனை வைக்க...

ரஞ்சனா மனதிற்குள், 'மீராவை விட நல்ல பொண்ணு இந்தக் குடும்பத்துக்கு மருமகளாக் கிடைப் பாளா...? எதுக்கு இந்த அத்தை வீண் பிடிவாதம் பிடிக்கிறாங்க?' என்று நினைத்துக் கொண்டே கீழே இறங்கிச் சென்றாள்.

ரஞ்சனா கீழே சென்ற போது... வித்யா, அவளின் அம்மாவோடு சாதாரணமாகப் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்து நிம்மதியடைந்தாள். ரஞ்சனாவைப் பார்த்ததும் அவள் அம்மா புன்னகையுடன், "வேலையை முடிச் சிட்டியா...?" என்று கேட்க...

ரஞ்சனா, "முடிச்சிட்டேன்மா..." என்றாள்.

"ரஞ்சு... நானும், அப்பாவும் இங்கிருந்து சஞ்சனா வீட்டுக்குப் போயிட்டு... அப்படியே அவளை அழைச்சிட்டு ஊருக்குப் போறோம்..." என்றார்.

ஏற்கெனவே மண்டபத்தில் இருந்து தினேஷ், தன் பெற்றோரையும், சஞ்சனாவையும் அழைத்துக் கொண்டு, அவன் வீட்டிற்குச் சென்றிருந்தான். அதனால் ரஞ்சனாவும் சரி என்றாள்.

சிறிது நேரத்தில் அவர்கள் கிளம்பிச் சென்றனர். அவர்கள் சென்றதும் ரஞ்சனா, வித்யாவிடம், "நைட்டுக்கு என்ன சமைக்க, அத்தை...?" என்று கேட்க...

"நீ சப்பாத்தியும், பன்னீரும் செஞ்சிடு... நான் இட்லியும் சாம்பாரும் செய்றேன்..." என்றார். அதன்படி

ரஞ்சனா சப்பாத்திக்கு மாவு பிசைந்து வைத்துவிட்டு, பன்னீர் செய்தாள். வித்யாவும் அமைதியாகச் சாம்பார் வைத்துக் கொண்டிருந்தார். அவர்கள் சமையலை முடிக்கவும், கணேசன் தன் மகன்களோடு வீட்டிற்குள் வரவும் சரியாக இருந்தது.

அவர்கள் எல்லோருக்கும் ரஞ்சனா டீ போட்டுக் கொண்டு வந்து கொடுத்தாள். வித்யா... சூர்யாவும், ஆருவும் வரும் போது எடுக்க ஆரத்தி கரைத்துக் கொண்டிருந்தார். வித்யாவின் கை, வேலை செய் தாலும்... பார்வை அர்ஜுன் மேல்தான் இருந்தது.

சூர்யாவும், ஆருவும் வந்ததும் அவர்களுக்கு ஆர்ப்பாட்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது. எல்லோரும் ஹாலில் அமர்ந்து பேசிக்கொண்டிருக்க... எட்டு மணி ஆனதும் முதலில் சூர்யாவையும், ஆருவையும் சாப்பிட வைத்தனர். பிறகு ரஞ்சனா, ஆருவை அழைத்துக் கொண்டு தன் அறைக்குச் சென்றவள், அவளைக் குளிக்கச் சொல்லிவிட்டு... அவளுக்கு இரவுக்கு உடுத்த புடவை எடுத்து வைத்தாள்.

பெரியம்மா மற்றவர்களைப் பார்த்து, "நீங்களும் சீக்கிரம் சாப்பிட்டுட்டுப் படுங்க. எல்லோருக்கும் இன் னைக்கு அலுப்பா இருக்கும்..." என்றவர், சூர்யாவிடம், "நீயும் போய் ஆரு ரூம்ல குளிப்பா... உனக்கும் கசகசன்னு இருக்கும்..." என்றதும் சூர்யா எழுந்து மேலே சென்றான்.

சூர்யா, ஆருவின் அறைக்கதவைத் திறக்க... உள்ளே இருந்து இதமான நறுமணம் வந்தது.

அறையில் ஒரு டேபிளில் பழங்கள், இனிப்புகள் இருந்தன. மெத்தையில் மல்லிகைப் பூ தூவப்பட்டு இருந்தது. சூர்யாவிற்கு அதைப் பார்த்ததும் சினிமாவில் வரும் முதலிரவுக் காட்சிதான் ஞாபகத்திற்கு வந்தது. அதை நினைத்து அவன் சிரித்துக் கொண்டான்.

சூர்யா அங்கே ஓரமாக இருந்த அவன் பையைத் திறந்து, அதில் இருந்த துண்டை எடுத்துக் கொண்டு குளிக்கச் சென்றான். அவன் குளித்து முடித்து வந்து உடை மாற்றவும், ஆரு அந்த அறைக்குள் வரவும் சரியாக இருந்தது. ஆரு வேகமாகச் சென்று பால் டம்ளரை டேபிளில் வைத்து விட்டுக் கட்டிலில் அமர்ந்து கொண்டாள்.

"நீ சினிமா எல்லாம் பார்க்க மாட்டியா ஆரு...? அதுல முதலிரவுக் காட்சி பார்த்தது இல்லை... பொண்ணு மெதுவா அடிமேல அடி வச்சு, வெட்கப்பட்டுக்கிட்டே நடந்து வந்து, பாலை மாப்பிள்ளை கைல கொடுத்திட்டு, கால்ல விழுந்து கும்பிடும். ஆனா... நீ என்னடான்னா நேரா வந்து கட்டில்ல உட்கார்ற..." சூர்யா ஆருவை வம்பு இழுக்க...

"அது சினிமாவுலதான் அப்படி நடக்கும்." ஆரு அலட்சியமாகச் சொல்ல...

"அப்படியா...? அப்படின்னா எதுக்கு இந்த ரூமை அலங்காரம் பண்ணி இருக்காங்க?" சூர்யா கேட்க...

"நீங்க விடிய விடியப் பேசினாலும்... நான் உங்க கால்ல விழப் போறது இல்லை..." என்றவள், "எனக்குத் தூக்கம் வருது..." என்று ஆரு கொட்டாவி விட...

சூர்யா, அவளைத் தாவிச் சென்று அணைத்தான். "அது எப்படி நீ தூங்குறேன்னு நான் பார்க்கிறேன்..." என்றவன், அவன் இதழால் அவள் மேனியில் கதை எழுத... அங்கே ஒரு அழகான தாம்பத்தியம் உதயமானது.

ஒரு ஜோடி இங்கே சந்தோஷக் கடலில் நீந்திக் கொண்டிருக்க... அங்கே இன்னொரு ஜோடி தங்களுக்கு எப்போது காலம் வரும் என்று நினைத்து ஏங்கிக் கொண்டிருந்தது.

36

மறுநாள் சூர்யாவும், ஆருவும் இருந்ததால், அர்ஜுன் வேலைக்குச் செல்லவில்லை. எல்லோரும் சேர்ந்து கோவிலுக்குச் சென்றுவிட்டு வந்து மதியம் வீட்டில் தடபுடலாக விருந்து ஏற்பாடு செய்தனர். சூர்யாவின் பெற்றோரும், அக்கா குடும்பத்தினரும் விருந்தில் கலந்து கொண்டனர். விருந்து நல்லபடியாக முடிந்தது. எல்லோரும் ஹாலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

அர்ஜுன், சூர்யாவிடம், "எனக்கும் உனக்கும் ஒரே வயசுதான். ஆனா... உனக்குக் கல்யாணம் ஆகி ஹனிமூனுக்கு எல்லாம் போற... நான் என் ஆளைக் கூடப் பார்க்க முடியாம இருக்கேன்..." என அவன் புலம்ப...

"அதுக்கெல்லாம் என்னை மாதிரி மச்சம் வேணும்டா..." சூர்யா தன் சட்டைக் காலரைப் பெருமையாகத் தூக்கி விட்டுக்கொண்டான்.

'அர்ஜுன் மட்டும் இல்லைன்னா கல்யாணமே நடந்திருக்காது... இதுல இவன் பந்தாவைப் பாரு...' ஆதி மனதில் நினைத்தவன், அதை வெளியில் சொல்லாமல்... "ஆமாம், உங்களுக்கு ரொம்பப் பெரிய மச்சம் இருக்கு..." என்றான் கிண்டலாக.

அவன் சொன்ன தோரணையை வைத்து சூர்யா, ஆதியிடம், "நீங்க என்னை வச்சு எதுவும் காமெடி கீமடி பண்ணலையே..." எனச் சந்தேகமாகக் கேட்க...

"நீங்க எங்க வீட்டு மாப்பிள்ளை... உங்களைப் போய்க் கிண்டல் பண்ணுவேனா...? எங்க ஆரு கிடைக்க நீங்க கொடுத்து வச்சிருக்கணும், அதுக்குத்தான் அப்படிச் சொன்னேன்." ஆதி சமாளிக்க... சூர்யாவும் அவன் சொன்னதை நம்பிவிட்டான்.

பெரியவர்கள் ஒரு பக்கம் அமர்ந்திருக்க... இளையவர்கள் ஒரு பக்கம் இருந்தனர். வித்யா, அர்ஜுனையே கவனித்துக் கொண்டிருந்தார். அர்ஜுன் இயல்பாக இருப்பதில் இருந்தே... அவனிடம் மீரா எதையும் சொல்லவில்லை என்று புரிந்து கொண்டார். அவரால் மனதிற்குள் மீராவை மெச்சாமல் இருக்க முடியவில்லை. இந்த நிலையிலும் அவள் பதட்டப் படாமல் இருப்பது, அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

மாலை நான்கு மணி போல் சூர்யாவுடன் ஆரு அவள் புகுந்த வீட்டிற்குக் கிளம்பினாள். மறுநாள் அவர்கள் அங்கிருந்து ஒரு வாரம் ஹனிமூன் செல்வதாக இருந்தது. இன்றும் ஆருவும், வித்யாவும் அழுதார்கள்.

அவர்கள் இருவரையும் மற்றவர்கள் சமாதானம் செய்தனர். ஆரு சென்றவுடன் வீடே வெறிச்சென்று இருப்பதாக அவள் இரண்டு அண்ணன்களும் நினைத்தனர். அர்ஜுன், அவன் அம்மாவின் அருகே அமர்ந்து அவரைத் தேற்றினான்.

"அவளும் இதே ஊர்தானேம்மா... அதுவும் நம்ம வீட்ல இருந்து ரொம்ப கிட்ட. நீங்க பார்க்கணும்னு நினைச்சா... அடுத்த அஞ்சு நிமிஷத்துல பார்க்கலாம். அவ ஹனிமூன் போயிட்டு வந்ததும், அவளை இங்க வந்து நாலு நாள் இருக்கச் சொல்வோம், கவலைப் படாதீங்க."

வித்யாவும் சரி என்பதாகத் தலையசைத்தவர், எழுந்து உள்ளே சென்று அவர் அறையில் படுத்தார்.

அர்ஜுன், மீராவை அழைத்து, ஆரு இன்று அவள் புகுந்த வீடு சென்றதைப் பற்றி... நாளை அவர்கள் ஹனிமூன் செல்வது பற்றி... என்று எல்லாவற்றையும் அவளிடம் சொன்னவன், "அம்மாதான் மீரா பாவம், ரொம்ப டல் ஆகிட்டாங்க. அம்மா கொஞ்சம் தேறியதும், நான் நம்ம விஷயம் பேசுறேன்..." என்று சொல்ல...

'நம்ம விஷயம் தெரிஞ்சதுனாலதான், அவங்க அப்படி இருக்காங்க....' என்று மனதில் நினைத்த மீரா, அதை அர்ஜுனிடம் சொல்லவில்லை.

"சரி அர்ஜுன்..." என்றவள் தொடர்ந்து, "இன்னொரு விஷயம் அர்ஜுன், எனக்கு இப்ப ட்ரெய்னிங் போகுது, நான் காலையில போனா... வர நைட் ஆகும், என்னால

ரொம்ப போன் பேச முடியாது. கொஞ்ச நாள் சென்னைக்கும் வர முடியாது..." என்றாள்.

"இது ரொம்ப ஓவர் மீரா... அதெல்லாம் என்னால ஒத்துக்க முடியாது." அர்ஜுன் அவளிடம் சண்டைக்குச் செல்ல...

"நீங்க மட்டும் படிக்க ஆஸ்திரேலியா போய் ரெண்டு வருஷம் என்னைக் காயவிடலை...? இப்ப எனக்கு ஒண்ணுன்னா, நீங்க அட்ஜஸ்ட் பண்ண மாட்டீங்களா...?" மீரா சோகமாகக் கேட்க...

"சரிம்மா... தாயே...! அட்ஜஸ்ட் பண்றேன். ஆனா... ரொம்ப நாள் தாங்காது, சீக்கிரம் வரப்பாரு..." என்று சொல்லிவிட்டு அர்ஜுன் போனை வைத்தான்.

மீரா, வித்யாவிடம் சொன்னது போல் அவளாக அர்ஜுனைத் தொடர்பு கொள்ளவோ... இல்லை நேரில் சந்திக்கவோ முயலவில்லை. அர்ஜுனாக அவளை அழைத்தால்... தவிர்க்கவும் இல்லை. அவனோடு சிறிது நேரம் பேசிவிட்டு வைத்தாள். ஆருவும் அவளோடு போன் செய்து பேசினாள், ரஞ்சனாவும் யாருக்கும் தெரியாமல் மீராவை அடிக்கடி விசாரித்துக் கொண்டாள்.

சூர்யாவும், ஆருவும் ஹனிமூன் முடிந்து சென்னைக்கு வந்தார்கள். சூர்யா இவ்வளவு சீக்கிரம் குழந்தை வேண்டாம் என்று நினைத்ததால்... ஆரு மேலே எம்.ஃபில்., படிக்க ஆசைப்பட்டாள். அவள் புகுந்த வீட்டினரும், 'சூர்யா வேலைக்குச் சென்றால்... திரும்ப இரவாகும். அதுவரை அவளுக்கும் போர் அடிக்கும்...'

என்று அவள் படிக்கச் சம்மதித்தனர். ஆரு சந்தோஷமாகக் கல்லூரி சென்று வந்தாள்.

காலையில் தன் மாமியாருக்குச் சமையலில் உதவுவது, பின் சூர்யாவோடு கல்லூரிக்குச் செல்வது, மதியம் தன் அம்மா வீட்டிற்குச் சென்று அம்மாவோடும், அண்ணியோடும் அரட்டை அடித்துக் கொண்டு சாப்பிடுவது... பிறகு மாலை திரும்பத் தன் வீட்டிற்குச் சென்று மாமியாருக்கு இரவு சமையலில் உதவுவது, இரவு உணவு எல்லோரோடும் சேர்ந்து அருந்திவிட்டு, அவர்கள் அறையில் சூர்யாவுடன் சேர்ந்து கொட்டம் அடிப்பது என்று அவள் நாட்கள் சந்தோஷமாகக் கழிந்தன.

அர்ஜுனுக்கும் ஆரு கல்யாணத்தின் போது அதிக நாள் விடுமுறை எடுத்திருந்ததால்... வேலை அதிகமாக இருந்தது. அதோடு கடையிலும் வரிசையாகப் பண்டிகை நாட்கள் வருவதால் கூட்டம் நிரம்பி வழிந்தது. ஆபீஸ், கடை என்று அலைந்து கொண்டிருந்தான். அதனால் மீரா சென்னைக்கு வராமல் இருப்பதைப் பெரியதாக எடுத்து கொள்ளவில்லை. அவளுக்கும் வேலை இருக்கும் என்று நினைத்தான். இப்படியே இரண்டு மாதங்கள் சென்று விட்டன.

அன்று வெள்ளிக்கிழமை. வித்யா, ரஞ்சனாவையும், ஜஷுவையும் அழைத்துக் கொண்டு கோவிலுக்குச் சென்றார். சாமி கும்பிட்டுவிட்டுத் திரும்பி வரும்போது, கோவில் வாசலில் எதிரே வந்த அவர் சொந்தக்காரர் ஒருவரைப் பார்த்து வித்யா, "சரோஜா..." என்று கூப்பிட...

அவரும், "வித்யா, எப்படி இருக்க? உனக்கு என்ன பொண்ணுக்கும், பையனுக்கும் நல்லபடியா கல்யாணம் பண்ணிட்டே..." என்றவர், வித்யாவை அழைத்துக் கொண்டு கோவில் உள்ளே சென்று அமர்ந்தார். ரஞ்சனாவும் அவர்களோடு சென்றாள்.

"ஆமாம். இருந்தாலும்... அர்ஜுனுக்கும் ஒரு நல்ல இடத்தில பொண்ணு அமையணுமே..." வித்யா இழுக்க...

"நீ அர்ஜுனுக்கு இப்ப பொண்ணு பார்க்கிறியா? நான் ஆரு கல்யாணத்தில அவனைப் பார்த்தேன். எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. என்னோட பொண்ணு வைஷ்ணவி, அர்ஜுனுக்குப் பொருத்தமா இருப்பா... இந்த வருஷம்தான் பி.இ., முடிச்சிருக்கா. உங்களுக்கு இஷ்டம்னா அவளோட ஜாதகம் தரேன்." சரோஜா சொல்ல... வித்யா, "நானும் வைஷ்ணவியைப் பார்த்திருக்கேன். சரி, ஜாதகம் கொடு பார்ப்போம்..." என்றார்.

"நான் ஜாதகத்தை இன்னைக்கே என் பையன்கிட்ட கொடுத்து அனுப்புறேன். இன்னைக்கு வெள்ளிக்கிழமை, நல்ல நாள்..." சரோஜா சொல்ல... வித்யாவும் சரி என்றார்.

இவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த ரஞ்சனாவிற்கு ஆத்திரமாக வந்தது. அவள் வித்யாவிடம், "வீட்டுக்குப் போகலாமா...?" என்று கேட்டுக் கொண்டே ஜஷுவை தூக்கி கொண்டு எழுந்து வெளியே சென்றாள்.

அவள் பின்னே சரோஜாவும் வித்யாவும் எழுந்து வெளியே வந்தனர். "என்ன, உன்னோட மூத்த மருமக

படக்குன்னு எழுந்து போயிட்டா... என்னோட பொண்ணு உங்க வீட்டுக்கு மருமகளா வர்றது அவளுக்குப் பிடிக்கலை போலையே...” சரோஜா போட்டுக் கொடுக்க,

“அப்படி எல்லாம் இல்லை, நைட்டுக்கு இனி போய்த்தான் சமைக்கணும்... அதனாலதான்.” வித்யா சமாளிக்க...

‘அடக்கடவுளே...! இந்த அம்மா இப்பவே இப்படிப் பேசுதே... இவங்க பொண்ணு மட்டும் அர்ஜுனைக் கல்யாணம் பண்ணி வந்தா... என்னைத் திருச்சிக்கே அனுப்பிடுங்க போலிருக்கே...” என்று ரஞ்சனா நினைத்துக் கொண்டாள்.

ரஞ்சனா மறுநாள் மீராவை அழைத்து, கோவிலில் நடந்ததைச் சொல்லி, “மீரா... நீ இதுக்கு மேலேயும் அர்ஜுன்கிட்ட சொல்லாம இருக்கிறது எனக்கு நல்லதாப் படலை...” என்றதும்,

“அவங்க எப்படியும் அர்ஜுன்கிட்ட உனக்குப் பொண்ணு பார்த்திருக்கேன்னு சொல்லித்தானே ஆகணும். இல்லை, அர்ஜுனைக் கையைக் காலைக் கட்டிக் கல்யாண மண்டபத்துக்குத் தூக்கிட்டுப் போவாங்களா...? இருங்கக்கா... அவங்களே அர்ஜுன்கிட்ட சொல்லட்டும்...” என்றாள் மீரா.

“என்னவோ போ... எனக்குத்தான் பயமா இருக்கு. அந்தப் பொண்ணோட அம்மா இப்பவே என்னைப் பார்த்துப் பொறாமை பிடிச்சவன்னு சொல்லிடுச்சு.”

“உங்களைப் பத்தி அவங்களுக்கு என்னக்கா தெரியும்? நீங்க வருத்தப்படாதீங்க.”

“மீரா... நீயும் நம்ம வீட்டுக்கு வந்துட்டா... நாம ஜாலியா இருக்கலாம். அது எப்பத்தான் நடக்குமோ...?” ரஞ்சனா சோகமாக இழுக்க...

“நடக்கும் ரஞ்சனாக்கா, கவலைப்படாதீங்க...” என்ற மீரா போனை வைத்தாள்.

அர்ஜுன் தன் அம்மாவிடம் பேசும் சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தான். அவனும் வித்யா, ஆருவின் பிரிவிற்காகத்தான் வருத்தத்தில் இருக்கிறார் என்று முதலில் நினைத்தான். ஆனால்... ‘அவர் ஆருவைத் தினமும் சந்திக்கிறார். ஆனாலும் அவரிடம் முன்பிருந்த கலகலப்பு இப்போது இல்லை. எதனால்...?’ என்று யோசித்தவனுக்கு, ஆரு கல்யாணத்தின் போது என்றில்லை... அதற்கு முன்பே அம்மா சரி இல்லை என்பது அவன் ஞாபகத்திற்கு வந்தது.

‘இப்போதும் அப்படித்தான் இருக்கிறார். அப்படியென்றால் காரணம் ஆருவின் திருமணம் இல்லையா...? வேறு எதுவாக இருக்கும்...?’ என்று யோசித்தான். அவனுக்கு எதுவோ சரி இல்லை என்று புரிந்தது. மறுநாள் என்ன ஆனாலும் சரி, அம்மாவிடம் பேசிவிடுவது என்று நினைத்துக் கொண்டே தூங்கினான்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. அர்ஜுன் காலை ஒன்பது மணி போல் கீழே இறங்கி வரும்போது வித்யா வீட்டில் இல்லை. அர்ஜுன் இன்று தன் அம்மாவுடன்

பேசும் முடிவில் இருந்ததால் ரஞ்சனாவிடம், "அண்ணி, எங்கே அம்மாவைக் காணோம்...?" என்று கேட்க...

"தெரியலை அர்ஜுன், காலையிலேயே எங்கேயோ கிளம்பிப் போனாங்க, சொல்லிட்டுப் போகலை..." ரஞ்சனா சொல்ல...

அப்போது அவர் அறையில் இருந்து வெளியே வந்த கணேசன், "கட்டின புருஷன், என்கிட்டேயே உங்க அம்மா சொல்லிட்டுப் போகலை... உங்க அண்ணி கிட்டேயா சொல்லி இருக்கப் போறா..." என்றார்.

"அப்படி எங்கப்பா அம்மா போய் இருப்பாங்க?" அர்ஜுன் கேட்க...

"வர வர... அவ நடவடிக்கையே ஒண்ணும் புரிய மாட்டேங்குது..." என்று புலம்பியபடி கணேசன் சாப்பிட அமர... அவரோடு ஆதியும், அர்ஜுனும் சாப்பிட அமர்ந்தனர். ரஞ்சனா அவர்களுக்குப் பரிமாறினாள்.

அர்ஜுன், ஐஷுவுக்கு ஊட்டி விட்டுக் கொண்டே தானும் சாப்பிட்டான். ஐஷு, அர்ஜுனிடம் மட்டும்தான் ஒழுங்காகச் சாப்பிடும். அதனால் அர்ஜுன்தான் காலையிலும், இரவிலும் ஊட்டுவான். மதியம் மட்டும் ரஞ்சனா ஊட்டுவாள். அதற்கே ஐஷு அவளை ஒரு வழி ஆக்கிவிடுவாள்.

இவர்கள் எல்லோரும் சாப்பிடும்போது வித்யா வந்தார். வந்தவர் முகத்தில் சந்தோஷம் வெளிப்படை யாகத் தெரிந்தது. அவரும் இவர்களோடு அமர்ந்து

சாப்பிட்டார். சாப்பிட்டதும் எல்லோரும் சென்று ஹாலில் அமர்ந்தனர்.

"எங்க போன? வெளியே போனா... சொல்லிட்டுப் போக மாட்டியா...?" கணேசன் கேட்க...

வித்யா, "எல்லாம் நல்ல விஷயம்தான்..." என்றவர், கோவில் திருநீறைக் கணேசனுக்கும், ஆதிக்கும் கொடுத்தவர், அர்ஜுனுக்கு அவரே நெற்றியில் வைத்து விட்டார்.

"நம்ம சரோஜா இருக்காங்க இல்ல... அவங்க பொண்ணு வைஷ்ணவியோட ஜாதகத்தை அர்ஜுனுக்குப் பொருந்துதான்னு பார்க்கச் சொல்லிக் கொடுத்தாங்க. அதை எடுத்திட்டுதான் ஜோதிடர் வீட்டுக்குப் போனேன். ரொம்பப் பொருத்தமா இருக்காம். அதுதான் அப்படியே கோவிலுக்குப் போயிட்டு வந்தேன்."

வித்யா சொன்னதைக் கேட்டு எல்லோரும் அதிர்ச்சியில் இருக்க... "எங்க யார்கிட்டேயும் சொல்லாம அர்ஜுனுக்கு இப்ப பெண் பார்க்க என்ன அவசரம்...?" கணேசன் கேட்க... வித்யா மௌனமாக இருந்தார்.

அர்ஜுன், தன் அம்மாவையே பார்த்தவன், "அம்மாவுக்கு நான் காதலிக்கிறது தெரிஞ்சிடுச்சு இல்லம்மா... அதனாலதான் எனக்கு வேக வேகமா பொண்ணு பார்க்கிறாங்க. எனக்கு இத்தனை நாள், நீங்க ஏன் ஒரு மாதிரி இருந்தீங்கன்னு புரியாம இருந்தது, இப்ப புரிஞ்சிடுச்சு..." என்றான்.

கணேசன், அர்ஜுனிடம், "அம்மாவுக்கு நீ யாரை விரும்புறேன்னு தெரிஞ்சிருக்காது. அதோட எல்லா அம்மாக்களுக்கும், தங்கள் பிள்ளைகள் காதலிக்கிறது தெரிஞ்சா... முதல்ல பயம்தான் வரும். அதனால அம்மா பதட்டத்துல உனக்குப் பொண்ணு பார்த்திருப்பா..." என்றவர், வித்யாவைப் பார்த்து, "அவன் விரும்புற பொண்ணு யார் தெரியுமா...? நம்ம மீராதான். மீரா மாதிரி ஒரு நல்ல பொண்ணு, நம் குடும்பத்துக்கு வந்தா... அது நமக்குச் சந்தோஷம்தானே வித்யா...?" ஆர்வத்துடன் அவர் கேட்க....

"எனக்கு அது மீரான்னு தெரியும்..." என்ற வித்யா தொடர்ந்து, "மீரா நல்ல பொண்ணுதான், நான் இல்லன்னு சொல்லலை. ஆனா... அவ நம்ம குடும்பத்துக்கு ஒத்து வரமாட்டா. அவங்க வசதிக்கும், நம்ம வசதிக்கும் ஏணி வச்சாலும் எட்டாது. அதோட நம்ம இனத்தில இருக்கிற பொண்ணைத்தான் அர்ஜுனுக்குப் பார்க்கணும். அவனை வெளியில செஞ்சா... நம்ம சொந்தகாரங்களுக்குப் பதில் சொல்லி மாளாது. அதோட நாம ஏற்கெனவே ரெண்டு சம்பந்தம் பண்ணி இருக்கோம், அவங்களுக்கு நாம என்ன பதில் சொல்றது? இதனால ஆரு வாழ்க்கை பாதிக்கிறதையோ, இல்லை... ஆதி வாழ்க்கை பாதிக்கிறதையோ... நான் விரும்பலை..." என்றார்.

"நீ மீரா மேலே ஏதாவது குறை இருந்தா சொல்லு... அதை விட்டுட்டு அவள் வேற இனம்,

வசதியானவ... இதெல்லாம் ஒரு காரணமா...? நீ பார்க்கிற மருமகள் மட்டும் வந்து இந்தக் குடும்பத்தோட ஒத்து வாழ்வான்னு உனக்குத் தெரியுமா...? தெரியாம நீயா ஏதாவது பேசக் கூடாது." கணேசன் சொல்ல...

"ரஞ்சனா வீட்லேயும், ஆரு வீட்லேயும் நாம பேசினா கேட்டுக்கப் போறாங்க... இதுல பெரிசா பேசவோ... இல்லை, கவலைப்படவோ என்ன இருக்கும்மா?" ஆதி கேட்க...

"ஓ...! உங்க எல்லோருக்கும் இந்த விஷயம் முன்னாடியே தெரியுமா...? நீங்க எல்லோரும் இதுல கூட்டு... என்கிட்டே சொல்லணும்னு உங்க யாருக்கும் தோணலை இல்லையா...?" என்ற வித்யா, "உங்க இஷ்டத்துக்கு என்ன பண்ணனுமோ பண்ணிக்கோங்க..." என்று சொல்ல...

அது வரை அமைதியாக இருந்த அர்ஜுன், "மீரா கிட்டேயும் இப்படித்தான் பேசினீங்களாம்மா...? அதனால தான் அவ ஆரு கல்யாணம் முடிஞ்சு பெங்களூர் போனவ.... இன்னும் சென்னைக்கு வரலை இல்லையா...?" என்று கேட்க...

"ஏன் என்கிட்டே கேட்கிற? அவகிட்டே கேளு... எங்க அம்மா உன்னை மிரட்டினாங்களான்னு அவ கிட்ட கேட்க வேண்டியதுதானே..." என்று வித்யா கோபமாகச் சொல்ல...

"நீங்க அவளை மிரட்டி இருக்க மாட்டீங்க, அவளை என்னை விட்டு விலகிப் போகச் சொல்லி இருப்பீங்க... சரியா...?" அர்ஜுன் சொல்ல...

"ஆமாம்டா... அப்படித்தான் சொன்னேன். உன்னால எங்க குடும்பத்தில பிரச்சினை வரும், நீ விலகிடு. நான் எங்க குடும்பத்துக்கு ஏத்த இடத்தில என் பையனுக்குப் பொண்ணு பார்த்துக்கிறேன்னு சொன்னேன் தான், அதுக்கு என்ன இப்ப...?"

"வித்யா... நீயா எப்படி எல்லா முடிவையும் எடுப்பே...? என்கிட்டே பேசிட்டு மீராகிட்ட பேசி இருக்கலாமே... பாவம் மீரா, அதனாலதான் இங்க வர்றது இல்லையா...? இப்ப உனக்குச் சந்தோஷமா...?" கணேசன் கோபமாகக் கேட்க...

"இங்க பாருங்க, சும்மா உங்களுக்குத் தெரிஞ்ச மாதிரி பேசாதீங்க. நானும், மீரா நான் சொன்னா கேட்டுப்பான்னுதான் நினைச்சேன். ஆனா... அவ என்ன சொன்னா தெரியுமா...? என்னால அர்ஜுனை விட்டு விலக முடியாது, நீங்க முடிஞ்சா உங்க பையனுக்கு வேற பொண்ணு பார்த்துக் கல்யாணம் பண்ணி வைங்கன்னு சொல்லிட்டுப் போயிட்டா..." என்றார் கடுப்பாக.

"ஹா... ஹா... ஹா..." என்று சத்தமாகச் சிரித்த கணேசன், "மீரா அப்படியா சொன்னா, நான் கூடப் பயந்த சுபாவம்னு நினைச்சேன். உனக்கு எல்லாம் இப்படிச் சரிக்கு சரி பேசுற ஆள்தான் கரெக்ட்." அவரின் பேச்சு வித்யாவின் கோபத்தை மேலும் தூண்டியது.

"இப்பவே என்ன பேச்சுப் பேசுறா...? இன்னும் இந்த வீட்டுக்கு மருமகளா வந்தா அவ்வளவுதான். எனக்கு நீங்க சொல்றது எல்லாம் சரியாப் படலை, நாம

நமக்கு ஏத்த இடத்தில செய்யறதுதான் நல்லது, அவளும் அவங்க அம்மா மாதிரி பிடிக்லைன்னு போனா என்ன செய்வீங்க...?"

வித்யா சொன்னதைக் கேட்ட அர்ஜுன், "அம்மா..." என்று கத்தினான்.

அர்ஜுன் போட்ட சத்தத்தில் எல்லோரும் ஒரு நிமிடம் அரண்டு விட்டனர். அர்ஜுன் நேராக வித்யாவைப் பார்த்து, "இதையும் மீராகிட்ட சொன்னீங்களா...?" என்று கேட்க... வித்யா, "ஆமாம்..." என்றார். அவர் சொன்னதைக் கேட்டு அர்ஜுன் மிகுந்த வேதனை அடைந்தான்.

"அம்மா... மீரா முதல் தடவை அவங்க அம்மா, அப்பா டைவர்ஸ் பண்ணதுனால அவ எவ்வளவு கஷ்டப்பட்டான்னு சொன்னபோது, நான் அவகிட்ட, 'உனக்குப் பிறந்த வீட்ல கிடைக்காத பாசமும், அன்பும் உன்னோட புகுந்த வீட்ல கிடைக்கும். உனக்கு நானும், என்னோட குடும்பமும் இருக்கோம்'னு நம்பிக்கையா சொன்னேன். ஆனா நீங்க, நான் அவளுக்குக் கொடுத்த நம்பிக்கையையே இப்படி உடைச்சிட்டு வந்திருக்கீங்க..." என்ற அர்ஜுன், தொடர்ந்து...

"அவங்க அம்மாவும், அப்பாவும் அவங்களுக்குள்ள ஒத்து வராததுனால கௌரவமா விலகி, வேற வாழ்க்கை அமைச்சிக்கிட்டாங்க. அது அவங்க விருப்பம். அவங்க பண்ண ஒரே தப்பு மீராவைக் கவனிக்காம விட்டதுதான். அவ அன்புக்காகவும், பாசத்துக்காகவும் எவ்வளவு

ஏங்குறா தெரியுமா...? அவ எதிர்பார்க்கிறது எல்லாம் குடும்பமா சேர்ந்து வாழுற வாழ்க்கையைத்தான். அவ அதுக்காக அவ சொத்தையே தூக்கிப் போட்டுட்டு வர்றதுன்னாலும் வருவா..." என்றான்.

"மீராவோட அம்மாவும் முதல்ல அவங்க அப்பாவைக் பிடிச்சுத்தான் கல்யாணம் பண்ணி இருக்காங்க. அப்புறம் அவங்க எதிர்பார்த்த மாதிரியான வாழ்க்கையை அவர் கொடுக்க முடியலைன்னதும்தான் அவர்கிட்ட இருந்து விலகி இருக்காங்க. அது மாதிரி இன்னைக்குச் சந்தோஷமா நம்ம வீட்டுக்கு வர்ற மீராவுக்கு, கொஞ்ச நாள் ஆனதும், நாம நமக்கு ஏத்த மாதிரி பெரிய இடத்தில கல்யாணம் பண்ணி இருக்க லாமேன்னு ஒரு எண்ணம் அவளுக்கு வராதுன்னு என்ன நிச்சயம்...? ஆரம்பத்தில எல்லாமே நல்லாத்தான் அர்ஜுன் இருக்கும், வாழ்க்கையை வாழ்ந்து பார்க்கும் போது தான் உண்மை புரியும்." வித்யா சொல்ல...

"அம்மா, நீங்க ஒண்ணை மறந்துடாதீங்க... நாங்க ரெண்டு பேரும் காதலிக்கிறோம். அவ என்னை விரும்பி வர்றா... அவளுக்கு நம்ம குடும்பத்தைப் பத்தி நல்லாத் தெரியும். நம்ம குடும்பத்துக்குக் கல்யாணம் பண்ணி வந்தா... இங்க என்ன மாதிரியான வாழ்க்கை இருக்கும்னு அவளுக்கு நல்லா தெரியும். அப்படி இருக்கும் போது இதுல அவளுக்கு ஏமாற்றம் வரவோ... இல்லைன்னா பிடிக்காமப் போகவோ என்ன இருக்கு...?" அர்ஜுன் பதிலுக்குக் கேட்க...

"இன்னைக்கு இருக்கிற காதலர்களை நானும்தான் பார்க்கிறேன். இன்னைக்குக் காதல், நாளைக்கு மோதல். காதலிக்கும் போது தெரியும் நல்ல விஷயம் எல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம் தப்பாத்தான் தெரியுது. அஞ்சு வருஷம், பத்து வருஷம் காதலிக்கிறவங்க கூடக் கல்யாணம் பண்ண ரெண்டு மாசத்தில கோர்ட் வாசல்ல டைவர்ஸுக்காக நிக்கிறாங்க. அப்புறம் எதை நம்பி காதலை ஆதரிக்கச் சொல்ற...?" என்றவர், தொடர்ந்து...

"இப்ப நம்ம ஆதிக்கு நாங்கதான் பார்த்துக் கல்யாணம் பண்ணி வச்சோம். அவங்க சந்தோஷமா இல்லையா...? ஆருவுக்கும் நாங்கதான் மாப்பிள்ளை பார்த்தோம்... அவங்களும் நல்லா இருக்காங்க. நாளைக்கு அவங்களுக்குள்ள ஒரு பிரச்சினைன்னாலும் நாம கேட்க முடியும். இதே உனக்கும், மீராவுக்கும் நாளைக்குப் பிரச்சினை வந்தா... அவங்க அப்பாகிட்ட போய் நாம பேச முடியுமா...?" வித்யா விளக்கமாகச் சொல்ல...

"நீங்க சொல்ற மாதிரி நாட்ல நடக்கத்தான்மா செய்யுது, நான் இல்லைன்னு சொல்லலை. காதலிக்கும் போது இருக்கும் உறுதி, நிறையக் காதலர்களுக்குக் கல்யாணத்துக்கு அப்புறம் இல்லை. காதலிக்கும் போது யாரைப் பத்தியும் கவலைப்படாதவங்க, கல்யாணத் துக்கு அப்புறம் அவங்க சொன்னாங்க, இவங்க சொன்னாங்கன்னு அவங்க வாழ்க்கையை அவங்களே கெடுத்துக்கிறாங்க. இதுல சிலர் காதல் கல்யாணம் பண்ணிக்கிட்டு மத்தவங்களுக்குக் காதல் கல்யாணம்

பண்ணாதீங்கன்னு வேற அட்வைஸ் பண்றாங்க, ஏதோ அவங்க மட்டும்தான் கஷ்டப்படுற மாதிரி. எல்லோர் வாழ்க்கையிலும்தான் பிரச்சினை இருக்கும். எனக்கும் இதெல்லாம் தெரியும்.

"ஆனா... அம்மா, நிறையப் பெத்தவங்க பார்த்துச் செய்து வைக்கிற கல்யாணம் கூடத் தோல்வியில முடியுது. அதுக்காக நாட்ல கல்யாணமே நடக்காமலா இருக்கு...? காதல் கல்யாணமா இருந்தாலும், பெத்தவங்க பார்த்துச் செய்யற கல்யாணமா இருந்தாலும்... அங்க கல்யாணம் பண்ணிக்கிற ஆணும், பெண்ணும் ஒருத் தருக்கு ஒருத்தர் விட்டுக் கொடுத்து அன்பா இருந்துட்டா பிரச்சினை வராதும்மா...

"உங்களுக்கு மீராவை நாலு வருஷமாத் தெரி யும். அவ குணம், நடத்தை எல்லாம் தெரியும். நானும் அவளைப் பார்த்ததும் உடனே காதல்ல விழுந் துடலை... அவ வசதியானவ, நம்ம குடும்பத்துக்கு ஒத்து வருவாளான்னு, நானும் யோசிக்கத்தான் செஞ்சேன். ஆனா... அதையும் மீறி அவ கண்ணில் உண்மையான காதல் தெரிஞ்சுதும்மா... என் மனசு சொல்லுச்சு, இவ உன்னுடையவள்னு. அதனாலதான் காதலைச் சொன் னேன். ப்ளீஸ், புரிஞ்சிக்கோங்கம்மா..." அர்ஜுன் எடுத்துச் சொல்ல...

"நீ சொல்றதெல்லாம் கேட்கும்போது நல்லாத் தான் அர்ஜுன் இருக்கு. மீரா ரொம்ப ரொம்ப நல்ல பொண்ணு... எல்லாம் சரிதான். ஆனா... எப்பவோ ஒரு

தடவை சந்திக்கிறதுக்கும், எப்பவும் கூட இருக்கிறதுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு. என் மனசுல இன்னும் நம்பிக்கை வரலை. ஆனா... உங்க எல்லோருக்கும் இஷ்டம் இருக்கும்போது... எனக்காக நீ மீராவைக் கல்யாணம் பண்ணிக்காம இருக்க வேண்டாம். நீங்க கல்யாணம் பண்ணிக்கோங்க, அவளும் நமக்காக எதையும் இழக்க வேண்டாம். அதனால நீங்க தனிக் குடித்தனம் போங்க." வித்யா முடிவாகச் சொல்ல... அதைக் கேட்டு எல்லோரும் அதிர்ந்தனர்.

அர்ஜுன், தன் அம்மாவின் காலடியில் அமர்ந்து, அவர் கைகள் இரண்டையும் தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டு, அவர் கண்ணைப் பார்த்து, "அம்மா, இதை விட நீங்க ஒரு பெரிய தண்டனை எங்களுக்குக் கொடுக்கவே முடியாது. உங்களை விட்டு விலகி இருக்கணும்னா எங்களுக்கு அப்படி ஒரு கல்யாணம் தேவை இல்லை. நானும், மீராவும் விலகி இருந்தாலும் ஒருத்தரை, ஒருத்தர் நினைச்சிட்டே வாழ்ந்துடுவோம். நீங்க சொல்ற மாதிரி குடும்பத்தில இருந்து பிரிய, மீரா ஒரு நாளும் சம்மதிக்க மாட்டா...

"அவளுக்கு மட்டும் நீங்க இப்படிச் சொன்னது தெரிஞ்சா... என்னை விட்டு நிரந்தரமாப் பிரிவாளே தவிர... நீங்க சொல்ற மாதிரி நடக்காது. இப்ப ஒண்ணும் அவசரம் இல்லைம்மா. நீங்க நல்லா யோசிச்சு முடிவு எடுங்க... ஆனா ஒண்ணு மட்டும் உறுதி. உங்க சம்மதத்தோட, நாம எல்லாம் ஒரே குடும்பமா இருக்

கிறதுன்னா மட்டும்தான் எங்க கல்யாணம்...” எனச் சொல்லிவிட்டு அர்ஜுன் எழுந்து வெளியே சென்றான்.

அவனைத் தொடர்ந்து ஆதியும், கணேசனும் கடைக்குக் கிளம்பினார்கள். ரஞ்சனா, சமையல் அறைக்குச் சென்றாள். எல்லோரும் வித்யா யோசித்து முடிவு எடுக்கட்டும் என்று நினைத்தனர். வித்யா நல்ல முடிவை எடுப்பாரா...?

37

அர்ஜுன் நேராகப் பெசன்ட் நகர் பீச்சில் இருக்கும் அஷ்டலக்ஷ்மி கோவி லுக்குத்தான் சென்றான். அவனும் அன்று மீரா செய்தது போல்... மற்ற சந்நிதியில் சென்று சாமி கும்பிட்டவன், அன்று மீராவுக்குச் செயின் போட்டு விட்ட இடத்திற்கு வந்து அமர்ந்து கண் மூடி வேண்டினான்.

‘நான் அன்னைக்கு மீரா கழுத்தில செயின் போடும்போது, அவ இன்னையில் இருந்து என்னோட மனைவி, இனி நடக்கும் கல்யாணம் ஊருக்காகத்தான் என்று நினைத்துத்தான் போட்டேன். எங்க அம்மா மனசு நல்லபடியா மாறி... எங்களைச் சீக்கிரம் சேர்த்து வைக் கணும்...’ என்று வேண்டிக் கொண்டான்.

அன்று இரவு அர்ஜுன், மீராவை செல்லில் அழைத்து, “என்ன மீரா... சென்னைக்கு வந்து ரெண்டு மாசம் ஆகப் போகுது, எப்பதான் வருவே?” என்று வேண்டுமென்றே தெரியாதது போல் கேட்க...

ரஞ்சனா, அர்ஜுனுக்கு விஷயம் தெரிந்து விட்டதால்... அவன் பார்த்துக் கொள்வான் என்று நினைத்து, அவள் மீராவிடம் எதுவும் சொல்லவில்லை. அதனால் மீராவிற்கு வீட்டில் நடந்தது எதுவும் தெரியாது. அதனால், “வரேன் அர்ஜுன், இங்கே ஆபீஸ்ல ஒரே வேலை... நகரவே முடியலை. சனி, ஞாயிறு கூட வேலை இருக்கு...” மீரா சமாளிக்க,

“இன்னும் எத்தனை நாள் இதே காரணம் சொல்வ மீரா... வேறெதாவது புதுசா சொல்லு...” அர்ஜுன் சொல்ல... மீரா மௌனமாக இருந்தாள்.

“எனக்கு எல்லாம் தெரியும் மீரா... அம்மா பேசினதை நீ ஏன் என்கிட்டே மறைச்சே...?”

மீரா பெருமூச்சு விட்டவள், “அப்ப எல்லோரும் ஆரு கல்யாண வேலையில் இருந்தீங்க... இதை வேற சொல்லி எதுக்கு மூட் அவுட் பண்ணணும்...? அதோட நான் சொல்றதை விட அத்தையே சொல்லட்டும்னு நினைச்சேன்...” என்றாள்.

“நல்லா நினைச்ச போ... அம்மா உன்னை ரொம்பப் பேசிட்டாங்களா...?” அர்ஜுன் வருத்தமாகக் கேட்க...

“இல்லை... அதெல்லாம் எதுவும் இல்லை.”

“நீ ஆமாம்னாலும் இல்லைன்னுதானேடி சொல்லுவ...” அர்ஜுன் கடுப்பாகப் பேச....

“எந்த அம்மா தன் பையன் லவ் பண்றான்னு தெரிஞ்சா... வரவேற்புக் கொடுப்பாங்க, கோபப்படத்தான்

செய்வாங்க. இது கூட இல்லைன்னா எப்படி? நாம முன்னாடியே இதை எதிர்பார்க்கத்தானே செய்தோம். இனி அவங்க மனசை எப்படி மாத்தணும்னுதான் பார்க்கணும்...” என்றாள் மீரா.

“உண்மைதான்...” என்றவன், வீட்டில் வித்யாவோடு நடந்த வாக்குவாதத்தைச் சொன்னான். ஆனால், வித்யா அவர்களைத் திருமணம் முடித்துத் தனிக்குடித்தனம் போகச் சொன்னதை மட்டும் சொல்லவில்லை. அவனுக்குத் தெரியும், தன்னால் ஒரு குடும்பம் பிரிகிறது என்று தெரிந்தால் மீரா தாங்கமாட்டாள் என்று. அதனால்... “அம்மாவுக்கு நாம கல்யாணம் செஞ்சிக்கிறது பிடிக்காம இல்லை மீரா... அவங்களுக்கு உன்னைப் பிடிச்சுத்தான் இருக்கு. இருந்தாலும்... ஏதோ தடுக்குது. அது என்னன்னு பார்த்து சரி பண்ணிட்டா... அம்மா சந்தோஷமா நம்ம கல்யாணத்துக்கு ஒத்துப்பாங்க...” என்றான்.

“சரி அர்ஜுன். ஆனா... நாம இந்த இடைப்பட்ட காலத்தில... அவங்க மனசு கஷ்டப்படாம பார்த்துக்கலாம்.” மீரா சொல்ல... அர்ஜுனுக்கு அவள் என்ன சொல்ல வருகிறாள் என்று புரிந்தது.

“நாம நேர்ல சந்திக்கக் கூடாது... அதுதானே சொல்ல வர்ற...? சரி மீரா...” என்று போனை வைத்தான்.

அங்கே ஆதியும், ரஞ்சனாவும் அவர்கள் அறையில், ‘யார் இவர்கள் விஷயத்தை அம்மாவிடம் சொல்லி இருப்பார்கள்?’ என்று குழம்பிக் கொண்டிருக்க...

ரஞ்சனா இந்த விஷயம் சஞ்சனாவிற்கும், தினேஷுக்கும் தெரியும் என்று வாய் விட... உடனே ஆதி பிடித்துக் கொண்டான்.

“அப்ப சஞ்சனாதான் அம்மாகிட்ட சொல்லி இருப்பா... உன் தங்கச்சிக்கு எதுக்கு இந்தக் கேவலமான புத்தி...?” என ஆதி சண்டைக்குச் செல்ல.... ரஞ்சனாவிற்குக் கோபம் வந்து விட்டது.

உடனே அவள், “எதுக்கு என்னோட தங்கச்சியைத் திட்டுறீங்க? அவதான் சொன்னான்னு உங்களுக்குத் தெரியுமா...?” என்று பதிலுக்குச் சண்டைக்குச் செல்ல...

“அவ புத்தி தெரிஞ்சதுதானே...? அதுவும் அப்ப அவ நம்ம வீட்லதானே இருந்தா...” ஆதி எகிற... ரஞ்சனாவுக்குமே சஞ்சனா மேல் சந்தேகம் இருந்ததால்... இப்போதைக்கு அடக்கி வாசிப்போம் என்று அமைதியாகச் சென்று படுத்துவிட்டாள்.

மறுவாரம் ஞாயிறு மதியம் ஆரு, சூர்யாவோடு அவள் பிறந்த வீட்டிற்கு வந்த போது, வித்யா அவர்களுக்கு உணவு பரிமாறிக் கொண்டே, “நீயும் தானே உங்க சின்ன அண்ணனோட கூட்டு. நான் மீராவை உன்னோட சினேகிதின்னுதான் தாங்குறேன்னு நினைச்சேன். இப்ப தானே தெரியுது, அவளை உங்க அண்ணனோட ஜோடி சேர்த்திருக்கேன்னு. உனக்குச் சோறே போடக் கூடாது. ஆனா... கல்யாணம் ஆகி வேற வீட்டுக்குப் போயிட்ட, இனி நீ அந்த வீட்டுப் பொண்ணு... அதுதான் போடறேன்.” அவர் கோபமாகச் சொல்ல...

ஆருவிற்குத் தட்டில் விதவிதமாகச் சாப்பிட வைத்து விட்டு, திட்டும் அம்மாவை என்ன செய்வது என்று தெரியவில்லை. ரோஷமாகச் சாப்பிடாமல் எழுந்து செல்லவும் மனம் இல்லை. அவள் தட்டைப் பார்ப்பதும், அம்மாவைப் பார்ப்பதுமாக இருந்தாள்.

அவள் காதருகில் குனிந்து சூர்யா, "இதுக்கெல்லாம் ஃபீல் பண்ணக் கூடாது... உங்க அம்மாதானே திட்றாங்க. அதெல்லாம் கண்டுக்காத... நீ பாட்டுக்கு உள்ள தள்ளு..." என அவன் சொல்ல... ஆருவும் சாப்பிட ஆரம்பித்தாள்.

வித்யா சமையல் அறைக்குள் சென்றதும், ஆதி, "உனக்கு ஒரு விஷயம் தெரியுமா ஆரு, அன்னைக்கு அம்மா அர்ஜுன்கிட்ட... நம்ம ஆருவுக்கு நாம மாப்பிள்ளை பார்த்துத்தான் கல்யாணம் பண்ணோம்னு சொன்னாங்க. அப்படியா...?" என்று கேட்க... ஆருவுக்குப் புரை ஏறியது.

அவள், 'இன்னைக்கு என்னை எல்லோரும் சாப்பிட விடக் கூடாதுன்னு முடிவோட இருக்கீங்க போலிருக்கு, இது தெரியாம வந்து மாட்டிக்கிட்டோம். ஏற்கெனவே அர்ஜுன் விஷயம் தெரிஞ்சு கோபமா இருக்கிற அம்மா... என்னோட விஷயம் தெரிஞ்சா... பத்திரகாளியாவே மாறிடுவாங்க. சீக்கிரம் இங்கிருந்து எஸ்கேப் ஆகணும்...' என்று நினைத்தாள். அவள் முழிப்பதைப் பார்த்து ஆதிக்குச் சிரிப்பாக வந்தது.

அப்போது அர்ஜுன் வந்து அவர்களோடு சாப்பிட அமர்ந்தான். அவனுக்கு ரஞ்சனாதான் பரிமாறினாள்.

வித்யா, அர்ஜுனைப் பார்த்ததும், அவரது அறைக்குள் சென்றுவிட்டார். அர்ஜுனின் முகம் வாடிவிட்டது. அதைக் கவனித்த ஆரு, அர்ஜுனின் அருகே சென்று அமர்ந்து அவன் தோள் சாய்ந்து, "சீக்கிரம் சரி ஆகிடும் அர்ஜுன், நான் வேணா அம்மாகிட்ட பேசவா...?" என்று கேட்க...

அர்ஜுன், வேண்டாம் என்று தலை அசைத்தவன், "நீ எனக்கு ஒரு ஹெல்ப் பண்ணணும்..." என்றான்.

ஆரு, என்ன என்பது போல் அவனைப் பார்க்க... "நீயும், சூர்யாவும் பெங்களூர் போய் மீராவைப் பார்த்திட்டு வரணும். எனக்காக இதைச் செய்வியா ஆரு...?" என்று கேட்க...

"கண்டிப்பா அர்ஜுன். நாங்களே அங்க போக ணும்னுதான் இருந்தோம். எங்களை மது அண்ணி ரொம்ப நாளா கூப்பிடுறாங்க, அதைச் சாக்கா வச்சு போய் மீராவோட ரெண்டு நாள் இருந்திட்டு வரேன்..." என்றாள் ஆரு.

"நீயும் எங்களோட வாயேன் அர்ஜுன்." சூர்யா சொல்ல...

"இல்லை, வேண்டாம்... நீங்க போய்ப் பார்த்திட்டு வாங்க..." என்றான் அர்ஜுன்.

அர்ஜுன் கேட்டுக் கொண்டபடி சூர்யாவும், ஆருவும் மறு வாரம் பெங்களூர் கிளம்பிச் சென்றனர். மூன்று நாட்கள் அங்கே தங்கியவர்கள், முதல் நாளே மீராவை அவள் வீட்டில் சென்று சந்தித்து... அர்ஜுன், மீராவுக்காக

நிறையப் பொருட்கள் வாங்கிக் கொடுத்திருந்தான், அதையெல்லாம் அவளிடம் கொடுத்துவிட்டு, தங்களுடன் அவளையும் அழைத்துக் கொண்டு மது வீட்டிற்குச் சென்றனர்.

அங்கே மது வீட்டில் அனைவரும் சேர்ந்து ஊர் சுற்றுவதும், இரவில் அரட்டை அடிப்பதுமாக நன்றாகப் பொழுதைக் கழித்தனர்.

மூன்று நாட்கள் சென்று ஊருக்குக் கிளம்பும் போது... சூர்யா, மீராவிடம், "நாங்க இனி மாசம் ஒரு தடவை வந்து உன்னைப் பார்க்கிறோம் மீரா. கவலைப் படாதே... சீக்கிரம் சரி ஆகிடும்..." என்று சொல்லிவிட்டு வந்தான்.

இங்கு அர்ஜுனின் வீட்டிலும் கணேசன், ஆதி, ரஞ்சனா என்று ஒருவர் மாற்றி ஒருவர் வித்யாவின் மனசை மாற்ற முயற்சி செய்து கொண்டுதான் இருந் தனர். அர்ஜுன் மட்டும் அமைதியாக இருந்தான்.

இப்படியே ஆறு மாதங்கள் சென்றபோது... அர்ஜுன், சூர்யா வேலை செய்யும் அலுவலகத்தில் ஒரு மூன்று மாதம் மட்டும் சூர்யாவை ஆஸ்திரேலியா சென்று வரச் சொன்னார்கள்.

ஆரு, சூர்யாவை விட்டு இருக்க முடியாது என்று அழுது கரைய...

அவனுக்குப் பதில் அர்ஜுன் ஆஸ்திரேலியா செல்லும் முடிவை எடுத்தான்.

அர்ஜுன், மீராவிடம்... தான் சூர்யாவிற்குப் பதில் ஆஸ்திரேலியா செல்லப் போவதாகச் சொல்ல... அவளும், "பார்த்துப் போயிட்டு வாங்க அர்ஜுன்..." என்றாள்.

"நான் உனக்காகவும்தான் மீரா போறேன். நான் இங்க இருக்கிறதுனாலதானே நீ சென்னைக்கு வரமாட்டே... நான் ஆஸ்திரேலியா போயிட்டா நீ வருவே இல்லை..." அர்ஜுன் சொல்ல...

மீராவிற்கு இத்தனை நாள் அர்ஜுனிடம் அழுது விடக்கூடாது என்ற கட்டுப்பாடு எல்லாம் மீறி அழுகை வந்தது. அவள் அழ... அர்ஜுன் துடித்து விட்டான்.

"மீரா... நாம கல்யாணம் பண்ணிக்கலாம்டா. அம்மா நம்மளை கல்யாணம் பண்ணிக்கத்தான் சொன்னாங்க, ஆனா.. அவங்க முழு மனசா சொல்ல லைன்னு எனக்குத் தெரியும். அதனால... அவங்க முழு மனசோட ஒத்துக்கிட்டதும் செஞ்சிக்கலாம்னு நினைச் சேன். நாம கல்யாணம் பண்ணிக்கிட்டு அம்மாவோட மனசை மாத்தலாம், சரியாடா...? எனக்கு நீ தனியா இருக்கிறது மனதுக்குக் கஷ்டமா இருக்கு..." அர்ஜுன் சொல்ல...

"வேண்டாம் அர்ஜுன், வித்யா அத்தை கண்டிப்பா ஒத்துக்குவாங்க... எனக்கு நம்பிக்கை இருக்கு. வெயிட் பண்ணலாம் அர்ஜுன், ப்ளீஸ்..." என்றாள் மீரா.

"எனக்குத் தெரியும், நீ இப்படித்தான் சொல் வேன்னு. சரி, பார்ப்போம். வச்சிடுறேன்..." என்று சொல்லிவிட்டு அர்ஜுன் போனை வைத்தான்.

அவனுக்கு எப்போது தன் அம்மா தங்கள் திருமணத்திற்குச் சரி என்று சொல்வார்கள் என்று இருந்தது. ஒரு பக்கம் மீரா தனியாகப் பெங்களூரில் இருக்கிறாள். அவளோடு இருந்த கீர்த்தனாவிற்குத் திருமணமாகி அமெரிக்கா சென்றுவிட்டாள்.

இன்னொரு பக்கம் மீராவின் அப்பா வேறு அடிக்கடி போன் செய்து, 'எப்ப கல்யாணத்தை வச்சிக்கலாம்? மீரா சென்னைக்கே வர மாட்டேன்றா, ஏன்?' என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். ஆஸ்திரேலியா சென்று வந்ததும், அம்மாவிடம் பேசி முடிவு எடுத்து விட வேண்டும் என்று நினைத்தபடி ஆஸ்திரேலியா செல்ல... பெட்டியில் எடுத்து வைத்தான்.

அர்ஜுன் அடுத்த ஒரு வாரத்தில் ஆஸ்திரேலியா கிளம்பினான். கிளம்பும் முன் வித்யாவிடம் சென்று, "போயிட்டு வரேன்மா..." என்று சொல்லும் போதே... அவன் கண்கள் கலங்கின. வித்யா மௌனமாக இருந்தார். ஆதி, சூர்யா மற்றும் ஆரு, அர்ஜுனோடு விமான நிலையத்துக்குச் சென்றனர்.

அர்ஜுன் வீட்டில் இருந்து கிளம்பியதும், "வித்யா, நீ ரொம்பப் பண்ற... உனக்கு உன்னோட பையன் உன் சம்பந்தம் இல்லாம கல்யாணம் பண்ண மாட்டான்கிற திமிர். அவனையும், மீராவையும் நீ எவ்வளவு கஷ்டப்படுத்துற... தோளுக்கு மேல வளர்ந்த பையன் எப்படிக் கண் கலங்கிட்டுப் போறான் பாரு. இனியும் உன்னோட சம்மதத்துக்காக நான் காத்திருக்க மாட்டேன்.

அவன் ஆஸ்திரேலியால இருந்து வரட்டும், நான் அவங்க கல்யாணத்தை நடத்தப் போறேன். நீ என்ன அவனை வீட்டை விட்டுப் போகச் சொல்றது, என் பையன் என்னோடதான் இருப்பான்..." என்று கணேசன் முடிவாகச் சொல்லிவிட்டுச் சென்றார்.

அர்ஜுன், ஆஸ்திரேலியா சென்றதும் மீரா சென்னைக்கு வந்தாள். அவள் இங்கே வந்து எட்டு மாதம் ஆகி இருந்தது. அதனால் வருணுக்கு மீரா மீது கோபம். அவன் அவளுடன் பேசாமல் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு இருந்தான்.

மீராவிற்கு அவனைப் பார்த்ததும் மிகவும் சந்தோஷமாக இருந்தது. வருண் இப்போது கல்லூரி முதலாம் ஆண்டில் இருந்தான். குழந்தைத்தனம் போய், அவன் முகத்தில் மீசை அரும்ப ஆரம்பித்து இருந்தது. மீரா, வருணின் பின்னாலேயே திரிந்து மன்னிப்புக் கேட்டதும்தான் வருண் மலை இறங்கினான்.

வருண் இத்தனை நாள் மீரா வராமல் இருந்ததற்குக் காரணம் கேட்க... மீரா இப்போது அவன் சின்னப் பிள்ளை இல்லை என்பதால்... அவனிடம் மனம் திறந்து எல்லாவற்றையும் சொன்னாள். அவளுக்கும் அவள் மனதில் இருப்பதை யாரிடமாவது சொன்னால் தான் நிம்மதியாக இருக்கும் என்று தோன்றியது.

மீரா சொன்னதை எல்லாம் கேட்கும் போது வருணுக்கு, 'இப்படிக் கூட ஒருவரைக் காதலிக்க

முடியுமா...?' என்று தோன்றியது. அவள் அர்ஜுன் மேல் உயிரையே வைத்திருந்தும், அவன் அம்மாவிற்காக அவனைப் பார்க்காமல் இருக்கிறாள் என்று தெரிந்த போது, அவனுக்கு மீரா மீது மரியாதை வந்தது. அதே நேரத்தில் அர்ஜுன் குடும்பத்தார் மீது கோபமும் வந்தது.

'எங்க அக்காவுக்கு என்ன குறைச்சல்? அவளுக்கு இருக்கும் அழகுக்கும், அறிவுக்கும் அவளுக்கு எப்பேர்ப் பட்ட வாழ்க்கை அமையும்? அவளைப் போய் எப்படி அர்ஜுனின் அம்மா வேண்டாம்னு சொல்லலாம்...?' என்று நினைத்தான்.

"அக்கா, போதும்... நீ அவங்களுக்காகப் பார்த்தது. இனி நீ பெங்களூர் போக வேண்டாம். இங்கேயே இரு... அர்ஜுன் ஆஸ்திரேலியால இருந்து வரட்டும், ரெண்டுல ஒண்ணு பார்க்கலாம்."

"என்னடா, திடீர்னு வேலைக்குப் போகாதேன்னு சொல்ற...?" மீரா புரியாமல் கேட்க...

"இத்தனை நாள் நீயே எல்லா முடிவும் எடுத்தது போதும். இனி நாங்க சொல்றதையும் கொஞ்சம் கேளு..." என்றான் வருண்.

மீராவுக்கும் அந்த வேலை பிடிக்கவில்லை. அவ ளுக்கு ஏனோ அந்த வேலையில் மனம் ஒன்றவில்லை.

இயந்திரத்தனமாக வேலை பார்ப்பது போல் தோன்றியது. அதோடு அவள் செய்து கொண்டிருந்த ப்ராஜெக்ட்டும் முடிந்துவிட்டது. இனி அடுத்த வாரத்தில்

இருந்து புது ப்ராஜெக்ட்தான். அதனால் அவளும் தான் வேலையை விடப் போவதாக மெயில் அனுப்பினாள். அதை அர்ஜுனிடம் சொன்னபோது, அவன் மிகவும் சந்தோஷப்பட்டான்.

'ஹப்பா... இனி தனியாக இருக்க மாட்டாள்...' என்ற நிம்மதி அவனுக்கு.

சஞ்சனாவிற்கு ஆண் குழந்தை பிறந்திருந்தது. அவளையும், குழந்தையையும் பார்க்க ரஞ்சனா சென்றாள்.

ஒரு வாரம் அங்கே தங்கி இருந்தவள், மெதுவாகச் சஞ்சனாவிடம்... அவள் வித்யாவிடம் அர்ஜுன், மீரா பற்றிச் சொன்னாளா என்று விசாரிக்க... சஞ்சனா அழுது விட்டாள்.

"ரஞ்சுக்கா ப்ளீஸ்... என்னை நம்பு. நான் எதுவும் அவங்ககிட்ட சொல்லலை. நீயே என்னைப் பத்தி இப்படி நினைக்கிறேன்னா... மத்தவங்களும் என்னைத் தப்பாத் தானே நினைச்சிட்டு இருப்பாங்க..."

"இல்லை சஞ்சு, யாரும் அப்படி நினைக்கலை, எனக்குத் தான் சந்தேகம். அதுதான் அப்படிக் கேட்டுட் டேன், சாரி." ரஞ்சனா சொல்ல...

சஞ்சனா, "விடுக்கா... நான் முன்னாடி அப்படித் தானே இருந்தேன்..." என்று சாதாரணமாகச் சொன்னாள். தன் தங்கையின் மாற்றத்தைப் பார்த்து மகிழ்ந்த ரஞ்சனா, அவளைக் கட்டிக் கொண்டாள். சஞ்சனாவும், தினேஷும்

இனி திருச்சியிலேயே இருப்பது என்று முடிவு செய்திருந்தனர். அது எல்லோருக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

அர்ஜுன், ஆஸ்திரேலியா சென்று ஒரு மாதம் ஆகியிருந்தது. மீராவும் கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் பெங்களூரில் இருந்ததால்... இப்போது அவள் வீட்டில் சென்னையில் இருப்பது மனதுக்குச் சந்தோஷமாக இருந்தது. அவளும் வருணும் சேர்ந்து ஷட்டில் விளையாடுவது, ஒன்றாகச் சினிமாவுக்குச் செல்வது என்று சந்தோஷமாகப் பொழுதைப் போக்கினர். மீரா, தன் பரத நாட்டிய வகுப்பிற்குத் திரும்பிச் செல்ல ஆரம்பித்தாள்.

மீனாட்சியும் இப்போது மீராவுடன் நன்றாகப் பழகினார்.

மீராவும் இப்போதுதான் தன் சொந்த வீட்டில் இருப்பது போல் உணர்ந்தாள்.

அர்ஜுனும், மீராவும் போனில் பேசிக் கொள்வார்களே தவிர... ஸ்கைப்பில் கூடப் பார்ப்பது இல்லை. இருவருக்கும் தங்களின் வருத்தத்தை மற்றவர்களுக்குக் காட்ட விருப்பம் இல்லை. அதனால் பேச்சோடு முடித்துக் கொள்வார்கள்.

ஒரு நாள் ஆருவும், ரஞ்சனாவும் வித்யாவிடம் ஷாப்பிங் செல்வதாகச் சொல்லிவிட்டு, மீராவை வெளியில் சந்தித்தனர். ஜஷுவை வித்யாவிடம் விட்டு வந்ததால்... மூவரும் ஜாலியாக ஊர் சுற்றிவிட்டு ஒரு ஹோட்டலுக்குச் சாப்பிடச் சென்றனர்.

அப்போது பேச்சு வாக்கில் ரஞ்சனா, "இன்னும் எத்தனை நாள் நீயும், அர்ஜுனும் இப்படியே இருக்கப் போறீங்க மீரா...? அத்தைதான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கத்தானே சொல்றாங்க. ஆனா... ஒரே வீட்ல இருக்கக் கூடாது... தனியா போகச் சொல்றாங்க. பேசாம நீங்க அவங்க சொல்லும்போதே கல்யாணம் பண்ணிக்கோங்க. அப்புறம் கொஞ்சம், கொஞ்சமா அவங்க மனசை மாத்தி, நம்ம வீட்டுக்கு வந்துடுங்க. அர்ஜுன் ஊருக்குப் போன அன்னைக்கு மாமாவும் அத்தையைத் திட்டிட்டாங்க..." என்று வீட்டில் நடந்த அனைத்தையும் விவரமாகச் சொல்ல... மீரா அதைக் கேட்டு அதிர்ந்தாள். ஆனால்... ரஞ்சனாவிடமும், ஆருவிடமும் எதையும் காட்டிக்கொள்ளவில்லை. பேசாமல் சாப்பிட்டாள்.

மீரா வீட்டுக்கு வரும் வழியெல்லாம்... 'தன்னால் அர்ஜுனின் வீட்டில் பிரச்சினை வருகிறதே...' என்று வருத்தப்பட்டுக் கொண்டே வந்தாள். வீட்டுக்குள் சென்ற போது அங்கே அவளது அம்மா ஷ்யாமளா அவளுக்காகக் காத்திருந்தாள்.

அவளைப் பார்த்ததும் மீராவிற்கு எரிச்சல்தான் வந்தது. 'இந்தத் தடவை எதற்கு வந்திருக்காரோ...?' என்று நினைத்துக் கொண்டே அவர் எதிரில் சென்று அமர்ந்தாள்.

ஷ்யாமளா பொதுவான நல விசாரிப்புகளுக்குப் பிறகு, "மீரா... நான் சொல்றதை இப்பவாவது கேளு.

உங்க அப்பா உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிற மாதிரி தெரியலை. நீ அவரை நம்பிட்டு இருந்தா... காலமெல்லாம் இப்படியே இருக்க வேண்டியதுதான்..." என்று பேச... மீராவிற்குச் சுள்ளென்று கோபம் வந்தது.

"உங்களுக்குத் தேவை இல்லாத விஷயம் எல்லாம் நீங்க பேச வேண்டாம். எதுக்கு வந்தீங்களோ அதை மட்டும் சொல்லிட்டுப் போங்க..." என்றாள் கடுப்பாக.

"நான் உன்னோட அம்மா... எனக்கு உன் கல்யாண விஷயத்தைப் பத்திப் பேச உரிமை இல்லையா...? நான் அதுக்குத்தான் இப்ப லண்டன்ல இருந்து வந்தேன். வம்ஷி இன்னும் உன்னை விரும்புறான், இப்பவும் நீ ஓ.கே. சொன்னா... கல்யாணம் பண்ணிக்கத் தயாரா இருக்கான். சரின்னு சொல்லு மீரா... அப்புறம் நீ ராணி மாதிரி வாழலாம்." ஷ்யாமளா ஆர்வ மாகக் கேட்க...

"முதல்ல இங்க இருந்து போங்க, எனக்கு யாரை, எப்ப கல்யாணம் பண்ணிக்கணும்னு தெரியும். நீங்க என் விஷயத்துல தலையிடாதீங்க..." மீரா கோபமாகச் சொல்ல...

"நீ இன்னும் அந்த அர்ஜுன் உன்னைக் கல்யா ணம் பண்ணிப்பான்னு நம்பிக்கையில இருக்கியா...? அது நடக்காது. நான் அர்ஜுனோட அம்மாகிட்ட விளக்கமாப் பேசிட்டேன். உங்களை மாதிரி சாதாரணக் குடும்பத்தில எல்லாம் என் பொண்ணு மீரா வந்து வாழ மாட்டா... அப்படியே வந்தாலும், அவளுக்கு உங்க வீட்டுல

இருக்க முடியாது. அவளும் என்னை மாதிரிதான் போகப் போறான்னு சொன்னேனே..." ஷ்யாமளா பெருமையாகச் சொல்ல... அது மீராவிற்கு உச்ச கட்ட அதிர்ச்சியாக இருந்தது.

"நான் உனக்கு என்ன பாவம் செஞ்சேன்? என்னைப் பெத்திட்டு ஏன் இந்தப் பாடுபடுத்தற...? முதல்ல என்னை ஆறு வயசில தவிக்க விட்டுட்டு... உன்னோட சந்தோஷம்தான் பெருசுன்னு போன. இப்ப என்னோட வாழ்க்கையையே இப்படிக் கெடுத்து வச்சிருக்கியே. இதுக்கு நீ என்னைப் பெறாமலே இருந்திருக்கலாமே... இப்படி என்னைக் கொஞ்சம் கொஞ்சமா கொல்றதுக்கு... என்னை மொத்தமா கொன்னுடு..." என்று கதறிய மீரா, சென்று ஷ்யாமளாவின் கைகளை எடுத்துத் தன் கழுத் தில் வைத்து அழுத்த...

வருண் வேகமாக ஓடி வந்து அவளைப் பிடித்து இழுத்து அனைத்துக் கொண்டான்.

"அக்கா விடுக்கா... டென்ஷன் ஆகாதே... அமைதியா இரு..." என்று வருண் தேற்ற... மீனாட்சி மீராவிற்குக் குடிக்க நீர் கொண்டு வந்து கொடுத்தவள், ஷ்யாமளாவைப் பார்த்து, "நீங்க மீராவை அவங்க அப்பா பொறுப்பிலே விட்டுட்டுப் போயிட்டீங்க... இப்ப ஏன் வந்து தொந்தரவு கொடுக்கிறீங்க? அவ மேஜர்... அவளுக்கு யாரைக் கல்யாணம் பண்ணிக்க விருப்பமோ அவங்களைக் கல்யாணம் பண்ணிக்க அவளுக்கு உரிமை இருக்கு. இதிலெல்லாம் நீங்க தலையிடுறது நல்லா யில்லை...

"அர்ஜுனோட அம்மாட்ட போய் இப்படிப் பேசி இருக்கீங்களே... நாளைக்கு மீரா போய் அந்த வீட்ல வாழணுமே... அவளுக்கு அவங்களைப் பார்க்க சங்கடமா இருக்காதா... உங்களுக்கு நீங்க பண்ணது தப்புன்னு தோணலை...?" என அவர் கேட்க, ஷ்யாமளா தலை குனிந்தாள்.

"இனி நீங்க எங்க அக்கா வாழ்க்கையில தலையிட்டீங்க... நான் மனுஷனாவே இருக்க மாட்டேன். உங்க மேல போலீஸ் கம்ப்ளைன்ட் கொடுத்துடுவேன்." வருண் மிரட்ட.... ஷ்யாமளா அமைதியாக வெளியே சென்றாள்.

ஷ்யாமளா போன வருடம் இந்தியாவிற்கு வந்த போது அர்ஜுனையும், மீராவையும் ஒரு மாலில் பார்த்தாள். இருவரின் நெருக்கமே காதலர்கள் என்று காட்டிக் கொடுத்தது. 'இதனால்தான் மீரா வம்ஷியை வேண்டாம் என்று சொல்கிறாள்...' என்று நினைத்து வித்யாவிடம் சென்று போட்டுக் கொடுத்தாள்.

மீரா இன்னும் அழுது கொண்டிருக்க... அப்போது ராம்நாத் அங்கே வந்தார், அவரை மீனாட்சிதான் போன் செய்து அழைத்திருந்தாள். மீனாட்சி நடந்ததையெல்லாம் ராம்நாத்திடம் சொல்ல... அவர், "இதுக்கு முதல்ல முடிவு கட்டணும்..." என்றவர், உடனே கிளம்பி... ஷ்யாமளாவின் பெற்றோரைச் சந்திக்கச் சென்றார்.

மீரா அவள் அறையில் விடிய விடிய அழுதவள், விடிந்த போது ஒரு முடிவுக்கு வந்திருந்தாள். பெற்ற தன்

தாய்க்கே தன் மேல் அக்கறை இல்லாத போது, வித்யா தன்னை வேண்டாம் என்று சொல்வதில் தவறு எதுவும் இல்லை. தன்னால் அவர்கள் குடும்பம் பிரியவும் வேண்டாம். அவர்கள் குடும்பத்தில் பிரச்சினையும் வேண்டாம். அதனால் தான் எங்காவது சென்று விடலாம் என்று உணர்ச்சி வேகத்தில் (அர்ஜுன் பயந்த மாதிரியே) முடிவு எடுத்தாள்.

38

ராம்நாத் சென்று ஷ்யாமளாவின் பெற்றோரிடம் அனைத்தையும் சொல்லி நியாயம் கேட்க... "நீங்க போங்க, இனி அவள் மீரா விஷயத்தில் தலையிடாமல் நாங்க பார்த்துக் கொள்கிறோம்..." என்று சொல்லி அவரை அவர்கள் அனுப்பி வைத்தனர்.

வீடு திரும்பிய ராம்நாத், வருணை விட்டு மீராவை அழைத்து வரச் சொல்லி... "மீரா, நானும் மீனாட்சியும் போய் அர்ஜுன் வீட்ல பேசுறோம். உன் அம்மா கண்டிப்பா இது மட்டும் சொல்லி இருக்க மாட்டா... அவங்களுக்குக் கோபம் வர்ற மாதிரி வேறையும் கண்டிப்பா பேசி இருப்பா... அதுக்கும் மன்னிப்பு கேட்டுட்டு, உங்க கல்யாண விஷயம் பேசிட்டு வரோம்..." என்றார்.

"வேண்டாம்பா... இனி பேசி எதுவும் ஆகப் போறதில்லை. விட்டுடுங்க. எனக்கு அவங்க குடும்பத்தில வாழ கொடுப்பினை இல்லை. நான்தான் நடுவில

வந்தேன், நானே இப்ப விலகிக்கிறேன்." மீரா சொல்ல... ராம்நாத் அதற்ற எதோ மறுத்து சொல்ல வர...

வருண் அவரைத் தடுத்து, "அக்கா சொல்றது தான்பா கரெக்ட்..." என்றவன், மீராவிடம், "அக்கா... நீயே என்ன பண்ணலாம்னு முடிவு பண்ணு, எங்களுக்கு எதுனாலும் ஓ.கே..." என்றான்.

மீரா அவள் அறைக்குச் சென்றதும் ராம்நாத் வருணைப் பார்த்து, "அவதான் ஏதோ விரக்தியில பேசுறான்னா... நீயும் அவளோட சேர்ந்துட்டுப் பேசுற..." என்றதும்,

"அப்பா, மீரா அக்காவைப் பார்த்தா உங்களுக்குப் புரியலையா... அவ ஏதோ முடிவு எடுத்திட்டா... நீங்க அவளுக்கு எதிராப் பேசினா... அவ நம்மிடமும் எதுவும் சொல்லமாட்டா... அவ பாட்டுக்கு எங்கேயாவது சொல் லாமப் போயிட்டா... என்ன பண்ணுவீங்க? அதனால அவளை அவ போக்குலேயே விடுங்க. அவ இப்ப ரொம்ப மனசு உடைஞ்சு போய் இருக்கா... அவளுக்கு நாம இப்ப ரொம்ப சப்போர்ட்டா இருக்கணும். நம்ம அக்கா அவங்களுக்கு வேணும்னா... இனி அர்ஜுன் வீட்ல இருந்து வந்து பேசட்டும். நம்ம மீரா ஒண்ணும் யாருக்கும் குறைச்சல் இல்லை..." வருண் சொல்ல...

அவன் சொன்ன, 'மீரா எங்காவது சொல்லாமல் போய் விட்டால்...?' என்ற வார்த்தை ராம்நாத்திற்குமே அச்சத்தைத் தந்தது. 'மீரா இப்போது உணர்ச்சி வசப்பட்டிருக்கும் நேரத்தில் தவறான முடிவு எதுவும்

எடுத்துவிட்டால்...' என்று பயந்தார். அதனால் அவள் போக்கிலேயே போக முடிவு செய்தார்.

தன் மகள் படும் பாட்டை நினைத்து அவருக்குக் கவலையாக இருந்தது. 'தன் மகள் மட்டும் காதலிக்க வில்லை என்றால்... இந்நேரம் அவளுக்கு நல்ல இடத்தில் திருமணமாகி இருக்கும். இப்படிக் காதலித்து விட்டுக் கஷ்டப்படுகிறாளே...' என்று நினைத்து வருந்தி னார்.

"என்னம்மா முடிவு பண்ணி இருக்க...?" மறுநாள் ராம்நாத் கேட்க... மீராவிற்கு எதுவும் தெரியவில்லை. "நான் வேணா ஏதாவது வெளிநாட்டுக்குப் போய் வேலை பார்க்கட்டுமா...?" என்றாள்.

'மீராவின் மனதில் இருந்த குழப்பமெல்லாம் நீங்கி, தெளிவு பெற வேண்டும் என்றால்... அவள் சிறிது நாள் இந்தச் சூழ்நிலையிலிருந்து முற்றிலும் வேறுபட்ட இடத் திற்குச் சென்றால்தான், அவள் மனதிற்கு ஆறுதலாக இருக்கும்.

ஆனால், அவளை வெளிநாட்டுக்கு அனுப்பவும் அவருக்கு விருப்பம் இல்லை. என்ன செய்வது...?' என்று ராம்நாத் யோசித்தார்.

"எனக்குத் தெரிஞ்சவங்க பெங்களூர்ல இருக்கிற ஒரு பெரிய கான்வென்ட் ஸ்கூல்ல மதரா இருக்காங்க... நான் அவங்ககிட்ட சொல்லி உனக்கு அங்கே வேலை வாங்கித் தரேன், நீ கொஞ்ச நாள் டீச்சரா வேலை பார்க்கிறியா...?" ராம்நாத் கேட்க... மீராவும் சரி என்றாள்.

அவள் அங்கே செல்வது யாருக்கும் தெரியவேண்டாம் என்று கேட்டுக் கொண்டாள்.

அன்றே ராம்நாத் அந்த மதரிடம் பேசி, மீராவின் வேலைக்கு ஏற்பாடு செய்தார். அவர்கள் பள்ளியில் பரத நாட்டியம் சொல்லிக் கொடுக்கத்தான் ஆள் இல்லை என்று அந்த வேலைக்கு அவளை எடுத்துக் கொண்டனர். அதோடு மீராவுக்கும் பரதம் ஆடுவது மிகவும் பிடித்தமானது, அதை மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் போது, அவள் மனதிற்கும் உற்சாகத்தைத் தரும் என்று நினைத்தார்.

ராம்நாத்தே நேரில் சென்று மீராவை அந்தப் பள்ளியில் விட்டு வர அவளுடன் கிளம்பினார். ராம்நாத்தும், மீராவும் மதர் இருந்த அறைக்குள் செல்ல... மீராவைப் பார்த்ததும் மதருக்கு மிகவும் பிடித்து விட்டது. அவளுடைய சான்றிதழ்களை வாங்கிப் பார்த்தவர், "ரொம்பச் சின்ன வயசுலேயே பரதம் கத்துக்கிட்டு இருக்கியே... நல்லது, இன்னைக்கே வேலைக்குச் சேர்ந்திடு..." என்றார். அந்தப் பள்ளியில் இருக்கும் விடுதியிலேயே அவளைத் தங்கிக் கொள்ள அனுமதித்தார்.

ராம்நாத் சென்றதும், மீரா அங்கிருந்த அலுவலகத்தில் அவளைப் பற்றிய விபரங்களை... அவர்கள் கொடுத்த ஃபார்மில் எழுதிக் கொடுத்துவிட்டு, அவளுக்குக் கொடுத்த அறைக்குச் சென்றாள். அவள் அதில் தன்னைத் திருமதி என்றும், தன் கணவரின் பெயர் அர்ஜுன் என்றும் எழுதி இருந்தாள்.

இரண்டு நாட்களாக மீராவின் மொபைல் சுவிட்ச் ஆப் என்று வந்ததும், அர்ஜுன் குழம்பிப் போய் ஆருவுக்கு அழைத்துக் கேட்டான். "இரண்டு நாட்களுக்கு முன்பு... தானும், ரஞ்சனாவும் மீராவோடு சேர்ந்து வெளியே போனோமே..." என்று ஆரு சொல்ல... 'சரி, வேற ஏதாவது காரணம் இருக்கும்...' என்று நினைத்துப் பொறுமையாக இன்னும் ஒரு நாள் காத்திருந்தான்.

மறுநாளும் சுவிட்ச் ஆப் என்று வர, அதற்கு மேல் பொறுக்க முடியாமல்... மீராவின் வீட்டு எண்ணுக்கு அழைத்தான்.

மீனாட்சி எடுத்து, "யார்...?' என்று கேட்க...

"நான் அர்ஜுன் பேசுறேன், மீராவோடு பேசணும்..." என்றான்.

மீனாட்சி, அர்ஜுனிடம் இப்போது என்ன சொல்வது என்று தெரியாமல் விழித்தார். அவரிடம் இருந்து போனை வாங்கி வருண் பேசினான்.

"யார் பேசுறது...?"

"வருண், நான் அர்ஜுன் பேசுறேன். எப்படி இருக்க...?"

"நல்லா இருக்கேன் அர்ஜுன், நீங்க எப்படி இருக்கீங்க...?" என வருண், அர்ஜுனை நலம் விசாரிக்க...

"நான் நல்லா இருக்கேன், மூணு நாளா... மீராவோட போன் சுவிட்ச் ஆப்னு வருது. அதனால

தான் வீட்டு லைனுக்குக் கால் பண்ணேன். கொஞ்சம் மீராவைக் கூப்பிடேன்."

"அவ இப்ப வீட்ல இல்லை..."

"வெளிய போய் இருக்காளா...? சரி, நான் அப்புறம் கால் பண்றேன்..." என்று அர்ஜுன் போன் தொடர்பைத் துண்டிக்கச் செல்ல...

"இல்லை, அவ வெளியூர்ல இருக்கா..." என்றான்.

அதிர்ந்த அர்ஜுன், "வெளியூர் போய் இருக்காளா... எதுக்கு...?" என்று கேட்க...

"அவளுக்கு அங்க வேலை கிடைச்சிருக்கு, அதனால போய் இருக்கா." வருண் அலட்சியமாகப் பதில் சொல்ல....

அர்ஜுனுக்கு ஏதோ சரி இல்லை என்று நன்றாகப் புரிந்தது. "எந்த ஊரு...? என்ன வேலை...?"

"அதை நாங்க யார்கிட்டேயும் சொல்றதா இல்லை... மீரா அக்காவை உங்க அம்மா விலகச் சொல்லிக் கேட்டாங்க, மீரா அக்காவும் இப்ப விலகிட்டாங்க. அவ்வளவுதான். இனி நீங்க யாரும் அவங்க விஷயத்தில தலையிட வேண்டாம்." வருண் கறாராகப் பேச... அர்ஜுனுக்குக் கண் மண் தெரியாத கோபம் வந்தது.

"வருண், நீ யார்கிட்டே பேசுறேன்னு தெரியுதா...? ஒழுங்காச் சொல்லு, மீரா எங்கே...? அவளுக்கு எதுவும் பிரச்சனையா...?"

வருணுக்கே அர்ஜுனின் நிலையைப் பார்க்கக் கஷ்டமாக இருந்தது. "இல்லை... அவ நல்லா இருக்கா... பயப்பட ஒண்ணும் இல்லை... வெளியூர்ல வேலைக்குப் போறா..." என்றான் தணிவாகவே.

"சரி, எங்க இருக்கா...? நம்பர் கொடு... நான் அவகிட்ட பேசிக்கிறேன்." அர்ஜுன் மீண்டும் கேட்க...

"அர்ஜுன்... நீங்க உங்க வேலை முடிச்சிட்டு ஆஸ்திரேலியாவுல இருந்து வந்ததும், உங்க அம்மா வோட வந்து எங்க அக்காவைப் பொண்ணு கேளுங்க... அப்புறம் நாங்க அவளைப் பத்தி விவரம் தர்றோம். மத்தபடி தயவு செஞ்சு தொந்தரவு பண்ணாதீங்க..." எனப் பெரிய மனிதன் தோரணையில் வருண் பேச....

"நீ இப்ப எனக்கு மீராவைப் பத்தி சொல்ல லைன்னா... நான் இப்பவே கிளம்பி சென்னை வந்து, போலீஸ்ல என்னோட காதலியை எங்கேயோ மறைச்சு வச்சிருக்காங்கன்னு கம்ப்ளைன்ட் பண்ணுவேன், பரவா யில்லையா...?" அர்ஜுன் மிரட்ட...

பதிலுக்கு வருண், "எங்க அப்பா யாருன்னு தெரியும் இல்ல... நீங்க போலீஸ் கம்பளைன்ட் கொடுத்தா... எங்களுக்கும் என்ன பண்ணணும்னு தெரி யும், அதனால சும்மா பயம் காட்ட வேண்டாம்..." என்றான் திமிராக.

இவர்கள் இருவரும் சண்டை பிடித்துக் கொண்டி ருக்கும் போது, அர்ஜுனுக்கு ரொம்ப நேரமாக வேறொரு அழைப்பு வந்து கொண்டிருந்தது. அர்ஜுன் எரிச்சலோடு

யார்? என்று பார்க்க... அழைத்தது மீரா. அர்ஜுனின் டென்ஷன் எல்லாம் சட்டென்று வடிய... முகத்தில் புன்னகை வந்தது.

"சரி, நான் அப்புறம் பேசுறேன்."

"என்ன, பயந்துட்டீங்களா...?" வருண் கிண்டலாகக் கேட்க... 'இந்தப் பொடியன் பேசுறது எல்லாம் நாம கேட்க வேண்டியதா இருக்கே...' என்று நினைத்த அர்ஜுன்,

"ம்ம்... உன் அக்கா பாசமலர்தான் போன் பண்றாங்க... அதுக்குத்தான்..." என்றதும்,

"மீராக்காவா...? ச்சே... எத்தனை தடவை படிச்சுப் படிச்சு சொன்னேன், நல்லாத் தேடட்டும்னு..." வருண் சொல்லிக் கொண்டிருக்கும் போதே... அர்ஜுன் போனை வைத்துவிட்டான்.

அர்ஜுன், மீராவின் அழைப்பை எடுக்க... "அர்ஜுன்...." என மீரா விசும்பினாள். அர்ஜுன் மௌனமாக இருந்தான்.

"சாரி அர்ஜுன், ரொம்ப டென்ஷன் ஆகிட்டீங்களா...?"

"அதுக்குத்தானே இப்படிப் பண்ண...?" அர்ஜுன் சொன்னதும், இப்போது மீரா மௌனமாக இருந்தாள்.

"சரி, இப்பவாவது சொல்லு, எங்க இருக்க...?" அர்ஜுன் கேட்க...

மீரா, "வேண்டாம் அர்ஜுன், நான் விலகினது, விலகினதாகவே இருக்கட்டும்..." என்றாள்.

அர்ஜுன் மனசுக்குள், 'அதுதான் பார்த்தேனே, நீ விலகின லட்சணத்தை...' என்று நினைத்தவன், "அப்ப இப்ப எதுக்குடி போன் பண்ண...?" என்றான் கடுப்பாக.

"நான் திடீர்னு காணோம்னா... நீங்க பயந்து கவலைப்படுவீங்கல்ல... அதனால நான் பத்திரமா இருக்கேன்னு சொல்லத்தான் போன் பண்ணேன்."

அர்ஜுனுக்கு மீராவை நினைத்து அழுவதா இல்லை சிரிப்பதா என்று தெரியவில்லை. "ரொம்பத்தான் அக்கறை, அப்படி அக்கறை இருக்கிறவ கல்யாணத்துக்கு ஒத்துக்க வேண்டியதுதானே... அதை விட்டுட்டு எதுக்கு இப்ப எங்கேயோ போய் இருக்க? இப்ப என்னதான் உன்னோட முடிவு மீரா?" என்றான்.

"வேண்டாம் அர்ஜுன், என்னை எதுவும் கேட்காதீங்க. நாம சேர இன்னும் நேரம் வரலை... அது வருமான்னு தெரியலை. என்னால எல்லோருக்கும் கஷ்டம். எனக்கு இந்தக் குடும்ப வாழ்க்கை எல்லாம் சரிவராதுன்னு என்னோட தலையில எழுதி இருக்கோ என்னவோ... சும்மா இருந்த உங்களை நான்தான் முதல்ல பார்க்க வைச்சேன். இப்ப நான் உங்க வாழ்க்கையையும் சேர்த்துக் கெடுத்துட்டு இருக்கேன்."

இதைச் சொல்லும் போதே மீரா அழுதாள். அர்ஜுனுக்கு அவள் அழுவது வேதனையாக இருந்தது.

அவள் பேசியதை எல்லாம் பொறுமையாகக் கேட்ட அர்ஜுன், "எங்க அம்மா நம்ம கல்யாணத்துக்கு முழு மனசா ஒத்துக்க மாட்டேன்றாங்க... நாம கல்யாணம்

பண்ணிக்கிட்டு அம்மாவைச் சமாதானம் செய்யலாம்னா... நீ ஒத்துக்க மாட்டேன்ற. என்னை என்னதான்டி செய்யச் சொல்ற...?" என்றான் வருத்தமாக.

"என்னை விட்டுடுங்க அர்ஜுன், நீங்க உங்க அம்மா சொல்ற பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கோங்க..." மீரா தன் மனதைக் கல்லாக்கிக் கொண்டு சொல்ல...

"இதுக்கு நீ என்னைக் கொன்னிருக்கலாம் மீரா..." என்ற அர்ஜுன் அதற்கு மேல் பேச முடியாமல், "சரி, நான் போனை வச்சிடுறேன்..." என்றான்.

"அர்ஜுன்... நான் சொல்றதைப் புரிஞ்சிக்கோங்க..." மீரா ஏதோ சொல்ல வர...

அவளைத் தடுத்த அர்ஜுன், "மீரா, நீ ஒண்ணு புரிஞ்சிக்கோ... நீதான் என்னை முதல்ல உன்னைப் பார்க்க வச்சாலும்... எனக்கு உன்னைப் பிடிச்சதுனால தான் விரும்பினேன். எனக்கும் ஒரு மனசு இருக்கு... அதுல ஆசை, காதல் எல்லாம் இருக்கு. நீயும், என்னோட அம்மாவும் உங்க இஷ்டப்படி எல்லாம் என்னை ஆட்டி வைக்க முடியாது. இனி நீங்க ரெண்டு பேரும் இழுக்கிற பக்கம் எல்லாம், நான் வர்றதா இல்லை. ரெண்டு பேரும் என்னை ஆளை விடுங்க..." என்றவன், போனை வைத்து விட்டான்.

அர்ஜுனுக்கு மீராவைப் பற்றி நன்றாகத் தெரியும், அர்ஜுனின் பக்கத்தில் வேறொரு பெண் வந்து சாதாரணமாக நின்றாலே... அவள் முகம் மாறிவிடும். அப்படிப்பட்டவள் இன்று அர்ஜுனை வேறொரு

பெண்ணைத் திருமணம் செய்யச் சொல்கிறாள் என்றால்... வேறெதுவோ அவள் மனம் நோகும்படி நடந்திருக்கிறது என்று. ஆனால்... என்ன என்றுதான் அவனுக்குத் தெரியவில்லை.

அர்ஜுன், 'இனி அம்மாவுக்கும், மீராவுக்கும் அதிர்ச்சி வைத்தியம்தான் செய்யவேண்டும்...' என்று நினைக்க... மீரா அவனுக்கே அதிர்ச்சி கொடுப்பாள் என்று அப்போது அவனுக்குத் தெரியவில்லை.

அதன் பிறகு அர்ஜுன், மீராவைத் தொடர்பு கொள்ளவில்லை. மீராவும் அர்ஜுனை அழைக்கவில்லை. இப்படியே நாட்கள் சென்றன. அர்ஜுன் மூன்று மாதங்கள் சென்ற பிறகும் இந்தியா வரவில்லை.

ஒரு நாள் ஆருவுடன் அர்ஜுனின் வீட்டுக்கு வந்த சூர்யா, "அர்ஜுன் இனி ஆஸ்திரேலியாவிலே இருந்து வேலை பார்க்கப் போறதா... எங்க ஆபீஸ்ல சொல்றாங்க. அர்ஜுன்தான் கேட்டு வாங்கி இருக்கான்..." என்று சொன்னதும், அதைக் கேட்டு எல்லோரும் அதிர்ந்தனர்.

"அர்ஜுன் ஆஸ்திரேலியாவுல இருந்து வந்ததும், மீரா வீட்ல போய்ப் பேசலாம்னு இருந்தா... இவன் ஏன் இப்படிப் பண்றான்...?" கணேசன் சொல்ல... மற்றவர்கள் முகத்திலும் குழப்பம்தான்.

கணேசன், ஆருவிடம், "மீராவுக்குப் போன் போட்டு ஏதாவது தெரியுமான்னு கேளு..." எனச் சொல்ல... ஆருவும் மீராவின் செல்லுக்கு அழைக்க... அது சுவிட்ச் ஆப் என்று வந்தது.

"நீ இதுக்கு முன்னாடி எப்ப மீராவிடம் பேசின...?" ஆதி கேட்க... ஆரு தலை குனிந்தாள். ஆருவிற்குக் கல்லூரியில் ப்ராஜெக்ட் நடந்து கொண்டிருந்ததால், அவள் அதில் பிஸியாக இருந்தாள். அதனால் அவள் மீராவை அழைக்கவில்லை.

"நான் பேசி ரொம்ப நாள் ஆகுது ஆதி அண்ணா..." என்றதும், கணேசன், அர்ஜுனை செல்லில் அழைத்தார்.

அர்ஜுன் ஆஸ்திரேலியா சென்ற இந்த மூன்று மாதத்தில் அவனாக யாரையும் அழைத்துப் பேசவில்லை. ஆனால், யாராவது அவனை அழைத்தால்... எடுத்துப் பேசினான். முன்பிருந்த கலகலப்பு அவனிடம் இல்லை. கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டு வைத்து விடுவான். இப்போது கணேசன் அழைத்ததும் அர்ஜுன் எடுத்தான்.

"சொல்லுங்கப்பா..."

"அர்ஜுன், நீ எப்ப இங்க வர்ற...? இந்நேரம் உன்னோட வேலை முடிஞ்சிருக்கணுமே..." ஒன்றும் தெரியாதது போல் கணேசன் கேட்க,

"இல்லப்பா... நான் இனி அங்க வர்றதா இல்லை. ஆஸ்திரேலியாவிலேதான் இருக்கப் போறேன்..." என்றான் அர்ஜுன் உறுதியாக.

"என்ன சொல்ற அர்ஜுன், நீ வேலை பார்த்தது எல்லாம் போதும். உடனே கிளம்பி இங்க வா."

சிறிது நேரம் மௌனமாக இருந்த அர்ஜுன், "நான் எதுக்குப்பா அங்கே வரணும்? இனி எனக்கு அங்கே என்ன இருக்கு? நான் என்னப்பா தப்பு செஞ்சேன்? எனக்குப் பிடிச்ச பொண்ணை விரும்பினேன். அவளையே கல்யாணம் பண்ணிக்க நினைச்சேன், இது தப்பா...?

"அவளை உங்க எல்லோருக்கும் நல்லாத் தெரியும், அவ நல்ல பொண்ணுன்னும் தெரியும். இருந்தும், அவளை ஏத்துக்க அம்மாவுக்கு இஷ்டம் இல்லை. அம்மா சம்மதம் இல்லாம கல்யாணம் பண்ணிக்க அவளுக்கு விருப்பம் இல்லை. அதனால அவள் என்னைவிட்டு விலகிப் போயிட்டாப்பா... இனி நான் அங்கே வந்து என்ன பண்ணப் போறேன்? உங்களுக்கு ஆதியும், ஆருவும் இருக்காங்க. நீங்க அவங்களோட சந்தோஷமா இருங்க..." என்றான் விரக்தியாக.

கணேசன், அர்ஜுனின் பேச்சை எல்லோரும் கேட்கட்டும் என்று ஸ்பீக்கரில்தான் போட்டு இருந்தார். அதனால் அவன் பேசியதைக் கேட்ட அனைவரும் அதிர்ந்தனர்.

கணேசனிடம் இருந்து போனை வாங்கிய ஆதி, "அர்ஜுன், என்ன சொல்ற? மீரா விலகிப் போயிட்டான்னா... புரியலை... என்ன ஆச்சு, விவரமா சொல்லு..." எனக் கேட்க,

அர்ஜுன் இரண்டு மாதத்திற்கு முன்பு நடந்ததைச் சொன்னான்.

ஆதியிடம் இருந்து போனை வாங்கிய சூர்யா, "ஏன்டா இதை இத்தனை நாளா எங்ககிட்ட சொல்லலை...? இப்ப மீரா எங்கே...?" எனக் கேட்க...

"சொன்னா... நீங்க எல்லோரும் அம்மாவை போர்ஸ் பண்ணுவீங்க... அது வேண்டாம்னு நினைச்சேன். மீரா... அம்மா தன்னை முழு மனசா அவங்க மருமகளா ஏத்துக்கணும்னுதான் ஆசைப்பட்டா... இப்ப அவ எங்கே இருக்கான்னு சத்தியமா எனக்குத் தெரியாது. ஆனா... எங்கே இருந்தாலும், அது எத்தனை வருஷம் ஆனாலும், அவ என்னோட மீராவாத்தான் இருப்பா... எனக்கு அது தெரியும்..." என்ற அர்ஜுன், போனை வைத்து விட்டான்.

அர்ஜுன் பேசியதைக் கேட்ட அனைவரும் அதிர்ச்சியில் சிலையாகச் சிறிது நேரம் நின்று விட்டனர். வித்யா சத்தமாக அழுதார். எல்லோரும் அப்போதுதான் நிலைமையை உணர்ந்து வேகமாக அவரிடம் சென்றனர்.

"நான் இப்படி நடக்கும்னு நினைக்கலையே... அர்ஜுன் வந்து என்கிட்டே பேசுவான்னு நினைச்சேனே... அவன் இப்படி என்னை மொத்தமா ஒதுக்கி வைப்பான்னு நினைக்கலையே..." வித்யா அழுது புலம்ப...

"இப்ப அழுது என்ன பிரோஜனம்...?" கணேசன் கேட்க...

"உங்களுக்குத் தெரியுமா... மீராவோட அம்மா நம்ம குடும்பத்தைப் பத்தி எவ்வளவு மோசமாப்

பேசினாங்க தெரியுமா...? நம்ம அர்ஜுன் அவ பணத்துக் காகத்தான், அவளை விரும்புறதா சொன்னாங்க... மீரா இப்ப கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்தாலும், கொஞ்ச நாள்ல அவ செஞ்சது தப்புன்னு உணர்ந்து அர்ஜுனை விட்டுப் பிரிஞ்சு போயிடுவான்னு எல்லாம் சொன்னாங்க. அதைக் கேட்ட எனக்கு எப்படி இருந்திருக்கும்?" வித்யா ஆவேசமாகச் சொல்ல...

"அவங்க சொன்னா உனக்கு எங்கே போச்சு புத்தி?" கணேசன் கடுப்பாகக் கேட்க...

"மீராவோட அம்மாவைப் பத்தி எனக்குத் தெரியாதா...? நான் அவங்க சொல்லி மாறுவேனா...? அவங்க நினைச்சது தப்புன்னு புரிய வைக்கணும்னுதான் நினைச்சேன். அர்ஜுனும், மீராவும் உண்மையாத் தான் விரும்புறாங்கன்னு அவங்களுக்கு மட்டும் இல்லை. எனக்கும் உறுதிப்படுத்திக்கத்தான், பிடிவாதமா எதிர்த்தேன்.

"அவங்க ரெண்டு பேரும் அவங்க காதல்ல எவ்வளவு உறுதியா இருக்காங்கன்னு தெரிஞ்சிக்கத் தான் கோபமா இருக்கிற மாதிரி நடிச்சேன். எந்தப் பொருளும் ஈஸியா கிடைச்சிட்டா அதோட அருமை தெரியாது. அதனாலதான் அவங்க காதலின் ஆழத்தை சோதிக்க நினைச்சேன். ஆனா... மீரா இப்படிப் பண்ணுவான்னோ, அர்ஜுன் இப்படி மனசு வெறுத்துப் போவான்னோ எதிர்பார்க்கலை..." என்றார் வித்யா வருத்தமாக.

அவர் சொன்னதைக் கேட்டு எல்லோரின் மனதுமே நெகிழ்ந்திருந்தது. வித்யா... அர்ஜுனும், மீராவும் தன்னிடம் வந்து மீண்டும், மீண்டும் பேசிப் புரியவைக்க முயலுவார்கள் என்றுதான் எதிர்பார்த்தார். ஆனால், இப்படி ஆகும் என்று அவரும் எதிர்பார்க்க வில்லை. எல்லோரும் இப்போது என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தனர்.

மீரா கடைசியாக ஆருவோடும், ரஞ்சனாவோடும் வெளியே சென்றாள் என்று தெரிந்ததும் ஆதியும், சூர்யாவும் அவர்களை விசாரிக்க...

அவர்களும் அன்று நடந்ததைச் சொல்ல... அதைக் கேட்ட ஆதி, ரஞ்சனாவைப் போட்டுக் கிழி கிழி என்று கிழித்துக் கொண்டிருந்தான்.

"உன்னை யாரு அம்மா சொன்னதை மீராகிட்ட சொல்லச் சொன்னது...? அர்ஜுன் அன்னைக்கே சொன்னான்ல... இது மட்டும் மீராவுக்குத் தெரிஞ்சா அவ என்னை விட்டு நிரந்தரமாப் பிரிவான்னு. அப்புறம் நீ எதுக்குச் சொன்ன...?"

"நான் அது நினைவு இல்லாம, தெரியாமத்தான் சொன்னேன்."

"அதெப்படி தெரியாமச் சொல்வ...? உனக்கும் உன்னோட தங்கையோட புத்தி வந்துடுச்சா...?" ஆதி ஏற்கெனவே நொந்திருந்த ரஞ்சனாவை மேலும் நோகடிக்க, அவள் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

அவளைப் பார்த்து ஜஷுவும் அழுதது.

மற்றொரு பக்கம் சூர்யா, ஆராதனாவிடம், "ஒழுங்கா நான் போய் இருப்பேன் ஆஸ்திரேலியாவுக்கு. அதை நீ அழுது கெடுத்த... உங்க அண்ணன் என் ஆபீஸ்ல வேலை செய்யலைன்னா நான்தான் கண்டிப்பா போய் இருக்கணும்... அப்ப நீ என்ன செஞ்சிருப்ப? உன் பேச்சைக் கேட்டு, நான் போகாம அவனை அனுப் பினேன் பாரு... என்னைச் சொல்லணும். ஏற்கெனவே பிரிஞ்சி இருந்தாங்க, அர்ஜுன் இங்கேயே இருந்திருந்தா, மீரா அவனை விட்டுப் போய் இருக்க மாட்டா... அர்ஜுன்தான் நம்ம கல்யாணம் நடக்கவே காரணம். ஆனா... உனக்கு மீரா கூடப் பேசக் கூட டைம் இல்லை..." என அவன் ஆருவைத் திட்ட... ஆருவும் அழுது கொண்டிருந்தாள்.

வீடே போர்க்களம் போல் இருந்தது. மூன்று பெண்களும் ஆளுக்கு ஒரு பக்கம் அழுது கொண்டிருந்தனர். கணேசன் எல்லோரையும் பார்த்து, "முதல்ல அழுகையை நிறுத்துங்க... இப்ப ஒண்ணும் ஆகிடலை... எல்லாத்தையும் சரி பண்ணிடலாம். நான் போய் மீராவோட அப்பாவைப் பார்த்துப் பேசுறேன். அவருக்கு மீரா எங்கே இருக்கான்னு கண்டிப்பா தெரிஞ்சிருக்கும்..." என்று நம்பிக்கையாகச் சொல்லிவிட்டு மீரா வீட்டிற்குச் செல்ல... அங்கே அவருக்கு ஏமாற்றம் தான் மிஞ்சியது.

ராம்நாத் ஒரு மாதம் வெளிநாடு சென்றிருந்தார். அவரோடு மீனாட்சியும் சென்றிருக்க... வருணும் இவர்கள்

சென்ற நேரம் வீட்டில் இல்லை. கணேசன், வருணுக்கு விவரம் தெரியும் என்று நினைக்கவும் இல்லை.

மறுநாள் கணேசன், ராமநாத் அலுவலகத்திற்குச் சென்று மானேஜரைப் பார்த்து, ராம்நாத் பற்றி விசாரிக்க... ராம்நாத் இன்னும் ஒரு வாரத்தில் வந்து விடுவார் என்றார்.

கணேசனும், 'இன்னும் ஒரு வாரம்தானே... நேரில் வந்ததுமே பேசுவோம்...' என்று நினைத்து, 'சரி, அவர் வந்ததும் வந்து பார்க்கிறேன்...' என்று சொல்லிவிட்டு வந்தார். ஆனால், ராம்நாத் சென்ற இடத்தில் திடீரென்று ஏற்பட்ட புயலால்... விமானச் சேவை ரத்து செய்யப் பட்டது. அதனால் அவர் பயணம் மேலும் ஒரு வாரம் தாமதமாகியது.

சூர்யாவும், ஆதியும் மீராவைத் தேடிக்கொண்டு தான் இருந்தனர். ஆனால், அவர்களால் அவள் எங்கே இருக்கிறாள் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. முதலில் மீராவைப் பார்த்து அவளைச் சமாதானம் செய்து அழைத்து வந்த பின், அர்ஜுனுக்குச் சொல்வோம் என்று நினைத்தனர்.

ஏற்கெனவே நொந்திருக்கும் அர்ஜுன், இப்போது இருக்கும் மனநிலையில் எதையும் சொன்னால் கண்டிப் பாக நம்பமாட்டான் என்று அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும்.

வித்யாவோ மிகுந்த குற்ற உணர்வில் இருந்தார். அவர் தன்னால்தான் இப்படி ஆனது என்று நினைத்து

நினைத்தே தன் உடம்பைக் கெடுத்துக் கொண்டார். ஹாஸ்பிடல் வரவும் மறுத்து விட்டார். அவரைப் பார்க்க ஆதி வீட்டிற்கே மருத்துவரை அழைத்து வந்தான். வீட்டில் எல்லோரும் கவலையாக இருந்தனர்.

இப்படியே இரண்டு வாரங்கள் செல்ல... மீராவின் அப்பா அன்றுதான் ஊரில் இருந்து வருகிறார். கணேசன் அவரை மாலையில் சென்று சந்திப்பதாக இருந்தது. மாலை கணேசன், மீராவின் வீட்டிற்குக் கிளம்பிக் கொண்டிருந்த போதுதான், மீரா கடத்தப்பட்ட செய்தியை டி.வி.யில் பார்த்துவிட்டு எல்லோரும் அதிர்ந்தனர். வித்யா அந்தச் செய்தியைப் பார்த்துவிட்டு மயங்கி விழுந்தார்.

வித்யாவை மருத்துவமனையில் கொண்டு சேர்த்தனர். ஏற்கெனவே உடல் நிலை சரி இல்லாமல் இருந்தவர், அதோடு அதிர்ச்சியான விஷயம் கேள்விப்பட்டதால்... மயங்கி இருப்பதாகவும், பயப்பட எதுவும் இல்லை என்றும் சொன்ன டாக்டர், எதற்கும் அவர் ஒரு நாள் மருத்துவமனையில் இருக்கட்டும் என்றார்.

கணேசன், ஆதியை வித்யாவுக்குத் துணைக்கு வைத்துவிட்டு, சூர்யாவை அழைத்துக் கொண்டு ராம்நாத்தைப் பார்க்கச் சென்றார்.

ஆனால், அவர் சென்ற நேரம் ராம்நாத் வீட்டில் இல்லை. அவர் காவல்துறை உயர் அதிகாரிகளைப் பார்க்கச் சென்றிருந்தார். வீட்டில் மீனாட்சியும், வருணும் இருந்தனர்.

அவர்களிடம் கணேசன் எல்லாவற்றையும் சொல்ல... மீனாட்சி, 'இதெல்லாம் படணும்னு இருக்கு போல... அதனாலதான் இப்படியெல்லாம் நடக்குது..." என்றவர், மீராவின் அம்மா வந்த அன்று வீட்டில் நடந்ததைச் சொல்லி, "மீரா அன்னைக்குத்தான் ரொம்ப மனசு ஒடிஞ்சு போயிட்டா... அவளை அவ இஷ்டத்திற்கு விடுவதைத் தவிர வேற வழி இல்லை. அதனாலதான் அவங்க அப்பாவே கொண்டு போய் அவளை அங்கே சேர்த்து விட்டாங்க. ஆனா... இப்படி நடக்கும்னு யாருமே எதிர்பார்க்கலை..." என்றார் கவலையாக.

சிறிது நேரம் கழித்து வந்த ராம்நாத்திடம் கணேசன் விசாரிக்க... அவரும் காவல்துறை அதிகாரிகள் மற்றும் முக்கிய மந்திரிகளைச் சந்தித்துப் பேசி இருப்பதாகவும். அவர்களும் எல்லோரையும் பத்திரமாக மீட்போம் என்று சொல்லி இருப்பதாகச் சொல்ல... கணேசன், "நடந்த குழப்பத்துக்கு எல்லாம் நாங்களும் ஒரு வகையில் காரணம்..." என்றவர்... வித்யா, மீராவிடம் அப்படி நடந்து கொண்டதற்கான காரணத்தைச் சொல்ல...

ராம்நாத், "எனக்குத் தெரியும்..." என்றவர், தானும் மீராவுடைய தாத்தா, பாட்டியிடம் மீராவின் அம்மாவைப் பற்றி சொல்லி எச்சரித்திருப்பதாகச் சொன்னார்.

ராம்நாத், தான் இப்போது பெங்களூர் கிளம்புவ தாகச் சொல்ல... கணேசன், "நீங்க முன்னாடி போங்க... நாங்க வித்யாவின் உடல் நிலையைப் பார்த்துக் கிளம்பி வரோம்..." என்றார். ராம்நாத்தும் சரி என்று பெங்களூர் செல்லத் தயார் ஆனார்.

மீரா வீட்டில் இருந்து கணேசனும், சூர்யாவும் நேராக வித்யா இருந்த ஹாஸ்பிடல் சென்றனர். வித்யா தூக்கத்தில் இருந்தார். அவரருகே ஆதியும், ஆருவும் இருந்தனர்.

அப்போதுதான் சூர்யா, அர்ஜுனை அழைத்து மீரா கடத்தப்பட்டதைச் சொன்னான்.

அர்ஜுனுக்கு ஏற்கெனவே மீரா கடத்தப்பட்டது அதிர்ச்சியாக இருக்கும், இதில் அவன் அம்மாவும் உடம்பு சரி இல்லாமல் இருக்கிறார் என்று தெரிந்தால்... மேலும் கவலைப்படுவான் என்று நினைத்து சூர்யா, அர்ஜுனிடம் அதைச் சொல்லவில்லை.

கணேசன் முதலில் சூர்யாவையும், ஆதியையும் பெங்களூர் கிளம்பச் சொல்ல... சூர்யாதான், "ஆதி இங்கு இருக்கட்டும், நான் ஆருவைக் கூட்டிட்டுப் போறேன்..." என்று ஆருவுடன் காரில் பெங்களூர் கிளம்பினான்.

மறுநாள் காலை சீக்கிரமே வித்யாவை அழைத்துக் கொண்டு வீடு வந்தனர். அப்போதுதான் அர்ஜுன், ஆதியை அழைத்து நியூஸ் சேனல் பார்க்கச் சொன் னான்.

அவன் சொன்னபடியே பார்த்த அனைவரும் அதில் திருமதி மீரா அர்ஜுன் என்றதும் முதலில் அதிர்ந்தாலும், பின் மீராதான் அவ்வாறு கொடுத்திருப்பாள் என்று புரிந்து கொண்டனர். திருமணம் ஆகாமலே... அர்ஜுனைக் கணவனாக நினைத்து வாழும் மீராவின் காதலை நினைத்துப் பெருமைப்பட்டனர்.

வித்யா, மீரா இப்போது இருக்கும் நிலையை நினைத்துக் கவலைப்பட்டவர், "நாமும் பெங்களூர் போவோம். எனக்கு மீராவைப் பார்க்கணும்..." என்று பிடிவாதம் பிடிக்க... வேறு வழியில்லாமல் கணேசன், வித்யாவை அழைத்துக் கொண்டு பெங்களூர் கிளம்பினார்.

அவருடன் ஆதியும், ரஞ்சனாவும் சென்றனர்.

அங்கே மீரா பஸ் ஜன்னலில் தலை சாய்த்து அமர்ந்திருந்தாள். 'இனி இங்கிருந்து நல்லபடியாகச் சென்று அர்ஜுனைப் பார்ப்போமா...?' என்று நினைத்ததும் அவளுக்கு அழுகை வந்தது. அவளுக்கு நம்பிக்கையே இல்லை... அர்ஜுனைச் திரும்பச் சந்திப்போம் என்று. 'அர்ஜுனைத் தவிக்க விட்டதால்தான் தனக்கு இந்த நிலை...' என்று நினைத்து வருந்தியவள், 'அர்ஜுனுக் காகவாவது தான் நல்லபடியாக இங்கிருந்து திரும்பிச் செல்ல வேண்டும்!' என்று கடவுளை வேண்டிக் கொண் டாள்.

அர்ஜுனும் வழியெல்லாம் மீராவின் நினைவாகவே வந்தவன், 'கடவுளே... மீராவும் மத்தவங்களும் எந்தப் பாதிப்பும் இல்லாம நல்லபடியா திரும்ப வந்திடணும்...' என்று வேண்டிக் கொண்டே வந்தான்.

அவனிருந்த விமானம் பெங்களூரை நெருங்கி விட்டதாகவும், இன்னும் சற்று நேரத்தில் தரை இறங்கும் என்றும் அறிவிப்புக் கேட்டது.

மீராவிற்கு அந்தப் பள்ளியில் வேலை பார்ப்பது மிகவும் பிடித்திருந்தது. காலை ஒன்பது மணிக்கு ஆரம்பிக்கும் பள்ளி, மாலை ஐந்து மணி வரை இருக்கும். மீராவிற்கு ஒரு நாளைக்கு ஆறு வகுப்புகள் இருக்கும்.

ஓய்வு நேரத்தில் பள்ளியில் நடைபெறும் விழாக் களுக்கு, மாணவிகளைத் தயார் செய்வது அவள் பொறுப்பு. அதனால் அதற்குத் திட்டமிடுதல், மாணவி களுக்குப் பயிற்சி கொடுப்பது என்று நேரம் சென்று விடும்.

மாலை ஐந்தில் இருந்து ஆறு மணி வரை மாணவிகள் விளையாடும் நேரம். மீராவும் அவர்களோடு சேர்ந்து விளையாடுவாள்.

பின்பு அவள் அறைக்கு வந்து குளித்து, உடை மாற்றிச் சாப்பிடச் செல்பவள், சாப்பிட்டதும் இரவு எட்டு மணிக்கெல்லாம் அவள் அறையில் சென்று படுத்து விடுவாள். ஆனால், தூக்கம் தான் வராது.

கையில் செல்லை வைத்துக் கொண்டு, அதில் இருக்கும் அர்ஜுனின் படங்களை எல்லாம் ஒவ்வொன் றாகப் பார்த்துக் கொண்டிருப்பாள். அர்ஜுனை அழைக்க எழும் ஆவலை... அவனோடு பேசினால், எங்கே, 'உன்னை விட்டு இருக்க முடியவில்லை... அதனால் திருமணம் செய்து கொள்வோம்...' என்று சொல்லி விடுவோமோ என்ற பயத்திலேயே அடக்கினாள்.

சிறிது நாட்களிலேயே அர்ஜுனைப் பிரிந்து இருப்பது எல்லாம் சாத்தியம் இல்லை என்று அவளுக்குப் புரிந்துவிட்டது. அர்ஜுனாலும் தன்னை விட்டு இருக்க முடியாது. அதனால் 'ஆஸ்திரேலியாவில் இருந்து வந்ததும், எப்படியும் தன்னைத் தேடி வந்துவிடுவான்...' என்று நினைத்திருந்தவள், அவன் இரண்டு மாதத்திற்கு மேலாகியும் வரவில்லை என்றதும் மனதில் பயம் வந்தது.

'அர்ஜுன் தன்னை நிஜமாகவே வெறுத்து விட்டானா...? இனி தன்னைத் தேடி வரமாட்டானா...?' என்று மனம் தவிக்க ஆரம்பித்தது. அந்த நேரத்தில்தான் பள்ளியில் ஒவ்வொரு வகுப்பாகச் சுற்றுலா அழைத்துச் சென்றனர். இவளையும் ஒன்பதாம் வகுப்பு மாணவிகளுடன் சென்று வரச் சொன்னார்கள்.

முன் தினம் காலை பள்ளியில் இருந்து சுற்றுலா வந்தவர்கள், ஒரு நீர்வீழ்ச்சிக்குச் சென்றனர். மாலை ஆனதும் அங்கிருந்து கிளம்பி அனைவரும் சென்று பஸ்சில் ஏற... அப்போது நாட்டுத் துப்பாக்கியுடன் வந்த நான்கு பேர், இவர்கள் பஸ்சில் ஏறி, டிரைவரை மிரட்டி... முன்னால் சென்ற ஜீப்பைப் பின் தொடரச் சொல்ல... டிரைவரும் வேறு வழியில்லாமல், அவர்கள் சொன்னபடி செய்ய... எல்லோரையும் கடத்திக் கொண்டு காட்டிற்குள் சென்றனர்.

இவர்கள் அனைவரையும் அவர்கள் வந்த பஸ்சிலேயே இருக்கச் சொல்லிவிட்டு, பஸ்ஸைச் சுற்றிப் பத்துப் பேர் காவல் இருந்தனர்.

பயந்த பிள்ளைகளுக்குத் தைரியம் சொல்லி... அவர்கள் சாப்பிடக் கொடுத்த ராகிக் கூழைக் குடித்து... எப்படியோ இரவை ஓட்டி விட்டனர். இப்போது விடிந்து இவ்வளவு நேரமாகியும் அவர்களை விடாமல் பிடித்து வைத்திருந்தனர். அவர்கள் பேசுவதில் இருந்து... அவர்கள் கூட்டாளியைப் போலீஸ் பிடித்து வைத்திருக்கிறது என்றும், அவனை விட்டதும்... இவர்களையும் விட்டுவிடுவார்கள் என்றும் புரிந்தது.

'போலீஸ் எப்ப அவனை விடுறது...? இவங்க எப்ப நம்மை விடுறது...?' என்று நினைத்து மீரா பெருமூச்சு விட... அப்போது தூரத்தில் நிறைய ஆட்கள் வந்தனர். அவர்களைப் பார்த்ததும் பஸ்சில் இருந்த அனைவரும் இன்னும் பயப்பட.... அருகில் வந்ததும் பார்க்க, அவர்கள் அனைவரும் கிராமத்து மனிதர்கள் போல் தோன்றியது.

அதிலிருந்த பெரியவர் ஒருவர், "உங்க கூட்டாளியை விட... இவங்களை நீங்க பிடித்து வைத்திருப்பது என்ன நியாயம்?" என்று கேட்க...

அதற்குக் கடத்தல் கும்பலில் இருந்த ஒருவன், "உங்களுக்கு இது தேவை இல்லாத விஷயம். நீங்க தலையிடாதீங்க..." என்றான்.

"நீங்க செய்ற காரியத்தால... பாதிக்கப்படப்போறது நாங்கதான். நீங்க காட்டுக்குள்ள இருப்பீங்க... ஊருக்குள்ள இருக்கிற எங்களைத்தான் போலீஸ் பிடிப்பாங்க. எங்களைத்தான் நீங்க எங்கன்னு கேட்டுக் கொடுமைப் படுத்துவாங்க..." என்றவர் தொடர்ந்து,

"இந்தப் பிள்ளைங்களோட பெத்தவங்க எல்லாம் கதறி அழுகிறதைப் பார்க்க முடியலை... மரியாதையா விட்டுடுங்க..." என்றவர் முன்னேறிச் செல்ல...

"அவங்க எங்க ஆளை விடட்டும், நாங்களும் இவங்களை விட்டுடுறோம். எப்படியும் இன்னைக்கு அவனை விட்டுடுவாங்க..." என்று கடத்தல்காரர்களில் இருந்த மற்றொருவன் சொல்ல...

"போலீஸ் இப்ப அவனை விட்டாலும், அப்புறம் எல்லோரையும் வேட்டையாடிப் பிடிச்சுக் கொல்லுவாங்க, அது தேவையா...? வேண்டாம். அதுக்கு நாமளே அனுப்பிட்டா... உயிராவது மிஞ்சும்..." என்ற அந்தப் பெரியவரும் அவரோடு வந்த மற்றவர்களும் சென்று அந்தக் கடத்தல்காரர்களிடம் இருந்து துப்பாக்கியைப் பறிக்க முயல...

முதலில் மோதிய கடத்தல்காரர்களும், 'கிராமத்து மக்களைப் பகைத்துக் கொண்டால்... தங்களுக்குத்தான் கஷ்டம்...' என்று அங்கிருந்து அவர்களைத் திட்டிக் கொண்டே சென்றனர்.

மீரா மற்றும் அவளோடு இருந்தவர்களால், நடந்ததை இன்னும் நம்ப முடியவில்லை. அந்தக் கிராமத்து மனிதர்கள் அவர்களிடம் நடந்த தவறுக்கு மன்னிப்புக் கேட்டு... "அவனுங்க எல்லாம் தீவிரவாதீங்க இல்லைங்க... அரசாங்கமும், அதிகாரிகளும் பண்ற கொடுமை தாங்காம அப்படி ஆகிட்டானுங்க. எங்களுக்கு நாங்க வாழவும், எங்க புள்ள, குட்டிங்க படிக்கவும் வழி

காட்டினா போதும்..." என்றவர்கள், டிரைவருக்கு வழிகாட்ட என்று இரு ஆட்களையும் அவர்களுடன் அனுப்பினர்.

காட்டின் எல்லைப் பகுதிக்கு வந்ததும், அந்த இருவரும் பஸ்சில் இருந்து இறங்கிக் கொண்டு இவர்களை வழி அனுப்பினர். பஸ்சில் இருந்த மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மிகவும் மகிழ்ச்சி. தங்களைக் காப்பாற்றப் போலீஸ்தான் வரும் என்று நினைத்திருந்தவர்களுக்கு... சாதாரணக் கிராமத்து மனிதர்களின் துணிச்சலையும், மனித நேயத்தையும் பார்த்து ஆச்சரியப்பட்டனர். காட்டில் இருந்து வெளியே வந்ததும் சற்றுத் தூரத்தில் போலீசும், மாணவர்களின் பெற்றோரும் நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

மாணவிகள் தங்கள் பெற்றோரைப் பார்த்ததும் உற்சாகக் குரல் எழுப்பினர். பஸ் நின்றதும் மாணவிகள் வேகமாக இறங்கித் தங்கள் பெற்றோரைத் தேடி ஓட... மீரா அவர்களைப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டே நடந்து வந்தாள். அப்போது அவளை யாரோ வந்து வேகமாக அணைத்து, "மீரா..." என்று அழைக்க... மீரா குனிந்து பார்த்தவள், தன்னை அணைத்தவரைப் பார்த்து நம்ப முடியாமல் நின்றாள்.

வித்யா, அவளைக் கட்டிபிடித்துக் கொண்டு அழ... மீராவும் அழுதாள். வித்யா நடுங்கும் தன் கைகளால் மீராவின் முகத்தைப் பற்றியவர், "உனக்கு ஒண்ணும் ஆகலையில்ல மீரா... உன்னை எதுவும் அவங்க அடித்து, கொடுமை எதுவும் பண்ணலைதானே...?" என்று கேட்க...

மீரா அதுவரை நம்ப முடியாத ஆச்சரியத்தில் இருந்தவள், "இல்லை ஆன்ட்டி, அவங்க எங்களைக் கடத்திட்டுத்தான் போனாங்க, மத்தபடி எங்க நிழலையும் அவங்க தொடலை..." என்றாள்.

"எல்லாம் என்னாலதான். நீயும் ,அர்ஜுனும் உண்மையாத்தான் ஒருத்தரை ஒருத்தர் விரும்புறீங்களான்னு தெரிஞ்சிக்கத்தான், கோபமா இருந்த மாதிரி நடிச்சேன். கடைசியில அது உன்னை இப்படி ஆபத்துல கொண்டு வந்து விடும்னு எதிர் பார்க்கலை. கைல கிடைச்ச வைரத்தை நானே தொலைக்கப் பார்த்தேன்." வித்யா வருத்தப்பட...

அவர் சொன்னதைக் கேட்டு மகிழ்ந்த மீரா, "பரவாயில்லை ஆன்ட்டி விடுங்க, ஃபீல் பண்ணாதீங்க, அதுதான் நான் நல்லபடியா வந்துட்டேன் இல்லை..." என்றவள், வித்யாவின் கண்களைத் துடைத்துவிட்டாள்.

இவர்கள் இருவரும் பேசுவதைச் சற்றுத் தள்ளி நின்று பார்த்துக் கொண்டிருந்த மற்றவர்கள் அருகில் வந்தனர். மீரா, ராம்நாத்தைப் பார்த்ததும், ஓடிச் சென்று அவரை அணைத்துக் கொண்டாள்.

அவரருகில் இருந்த வருண், மீராவைக் கட்டிப் பிடித்து அழ... மீராவும் அழுதாள். மீனாட்சியும் கண் கலங்கினார்.

அவர்களுக்கு அடுத்து ரஞ்சனாவும், ஆருவும் மீராவிடம் சென்று, "எங்களாலதான் நீ அர்ஜுனை விட்டுப் போனியா...?" என்று கேட்க...

மீராவிற்கு அர்ஜுன் ஞாபகம் வந்துவிட்டது. அவள், "எனக்கு அர்ஜுனை இப்ப பார்க்கணும்..." என்று அழ... ஆதியும், சூர்யாவும் அவரவர் மனைவியைப் பார்த்து முறைத்தனர்.

'இவளுங்க வாயைத் தொறந்தாலே பிரச்சினை தான்...' என்று நினைத்தவர்கள், "அர்ஜுன் வந்துகிட்டு இருக்கான், இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்து விடுவான்..." என்றார்கள்.

"அர்ஜுன் வர்றாங்களா...? நிஜமாவா...? எப்ப வர்றாங்க...? எங்க வருவாங்க...?" மீரா கேள்வி மேல் கேள்விகளாகக் கேட்க...

"அம்மா தாயே...! நீ போய் ஆக வேண்டிய வேலையைப் பாரு. அர்ஜுன் வந்ததும், அவன்கிட்ட உன் எல்லாக் கேள்வியையும் கேளு... நாங்க நேத்து நைட்ல இருந்து சாப்பிடலை... முதல்ல சாப்பிடணும்."

சூர்யா சொல்ல... மீராவும், 'சரி, அர்ஜுன் நேர்ல வரட்டும்... பேசிக்குவோம்...' என்று அமைதியாக இருந்தாள்.

அவளுக்கு, அவன் எப்போது கிளம்பினான் என்று தெரியாததால்... அவன் எப்போது வருவான் என்றும் தெரியவில்லை.

மதியம் இரண்டு மணிக்கு அர்ஜுனின் விமானம் பெங்களூரில் வந்து தரை இறங்கியது. அர்ஜுன் விமானம் நின்றதும் சூர்யாவைத்தான் முதலில்

அழைத்தான். சூர்யா வேறு எதுவும் சொல்லாமல் முதலில், "மீரா பத்திரமா வந்தாச்சு..." என்று மட்டும் சொல்ல... அர்ஜுன் அப்படியே தன் கைகளில் முகம் புதைத்து, சிறிது நேரம் உட்கார்ந்துவிட்டான். சூர்யாவும் நிலைமையைப் புரிந்து கொண்டு அர்ஜுன் பேசக் காத்திருந்தான்.

அர்ஜுன் முகத்தை அழுந்தத் துடைத்து, நன்றாக முச்சை இழுத்து விட்டு, தன் மனதை அமைதிப் படுத்திக்கொண்டு பேச ஆரம்பித்தான். "இப்ப எங்க இருக்கீங்க சூர்யா?"

"இன்னும் எல்லோரும் அங்கதான் இருக்கோம். மீரா இப்பதான் வந்தா... வந்து அஞ்சு நிமிஷம்தான் ஆகுது. இன்னும் இங்க பார்மாலிட்டீஸ் முடியலை. நீ ஏர்போர்ட்ல இருந்து வெளியே வந்துட்டியா அர்ஜுன்...?"

"இல்லை, இப்பதான் ப்ளைட் இறங்கி இருக்கு."

"சரி, நீ வெளிய வந்துட்டு போன் பண்ணு. நாங்க இருக்கிறது ஒரு பக்கம், ஏர்போர்ட் இருக்கிறது ஒரு பக்கம். எங்க மீட் பண்ணலாம்னு சொல்றேன். நாங்களும் இங்கிருந்து கிளம்ப நேரம் ஆகும்." சூர்யா சொல்ல...

அர்ஜுனும் சரி என்று போனை வைத்து விட்டான். அவனுக்கு இப்போது வேறெதுவும் கேட்கத் தெம்பும் இல்லை. 'பிறகு பார்த்துக் கொள்வோம்...' என்று நினைத் தான்.

எல்லாப் பிள்ளைகளின் பெற்றோரும் அங்கு இருந்ததால்... அவர்களை எல்லாம் சரி பார்த்து

அவர்களுடன் அனுப்பிவிட்டு, ஆசிரியர்களும் அங்கிருந்த அதிகாரிகளிடமும், பள்ளி நிர்வாகியிடமும் சொல்லிவிட்டுக் கிளம்பினர். மீராவும் கிளம்பினாள்.

ராம்நாத் வழியெல்லாம் மீராவிடம் நடந்ததைப் பற்றி விசாரித்துக் கொண்டே வந்தார். வழியில் இருந்த ஓட்டலில் சூர்யா காரை நிறுத்த, மற்றவர்களும் நிறுத்தி இறங்கினர்.

அப்போது மணி மூன்று. எல்லோரும் நல்ல பசியில் இருந்ததால், அந்த நேரத்திற்கு என்ன சாப்பாடு இருந்ததோ அதை வாங்கி வேக வேகமாகச் சாப்பிட்டனர்.

மீராவுக்கு அர்ஜுன் வருகிறான் என்ற சந்தோஷத் தில் பசிக்கவே இல்லை. பெயருக்கு ஒரு வாய் சாப்பிடு வதும், பின் தன் கையில் இருக்கும் செல்லில் நேரம் பார்ப்பதுமாக இருந்தாள். அவள் முகத்தில் எப்போதும் ஒரு புன்னகை இருந்தது. அதை எல்லோரும் பார்த்தும், பார்க்காதது போல் இருந்தனர். அவர்களுக்குத் தெரியும், அது அர்ஜுன் வரப்போகிறான் என்பதால் என்று.

"மீரா, நீ அடிக்கடி டைம் பார்த்தா மட்டும் டைம் வேகமாப் போகுமா என்ன? ஒழுங்கா சாப்பிடு..." சூர்யா சொன்னதும், மீரா சிரித்துக் கொண்டே சாப்பிட்டாள்.

அர்ஜுன் பெங்களூர் வந்ததைச் சூர்யா யாரிடமும் சொல்லவில்லை. அவன் அர்ஜுனுக்கும், மீராவுக்கும் ஒரு ஸ்வீட் சர்ப்ரைஸ் கொடுக்க நினைத்தான். சாப்பிடும் போது ஆதியிடம் மட்டும் மெதுவாகத் தனது திட்டத்தைச்

சொன்னான். ஆதியும் புன்னகையுடன் சரி என்றவன், நிமிர்ந்து ரஞ்சனாவைப் பார்க்க, அவள் அவனைப் பார்த்து முறைத்தாள்.

'அய்யய்யோ... அர்ஜுன், மீராவைச் சேர்த்து வைக்கிற ஆர்வத்துல... நம்ம ஆளை ரொம்ப நோகடிச்சிட்டோமோ... இப்படி நீயே உனக்கு ஆப்பு வச்சிகிட்டியே... இப்ப என்ன செஞ்சு மாரி ஆத்தாவை மலை ஏத்துறது...?' என்று ஆதி மைன்ட் வாய்ஸில் பேசிக்கொண்டிருந்தான்.

ஆருவும் சூர்யாவைப் பார்த்து, 'இருங்க, உங்களை அப்புறம் பார்த்துக்கிறேன்...' என்று ஜாடை காட்ட... அதைப் பார்த்த சூர்யாவும் உஷார் ஆனான்.

அர்ஜுன் பார்மாலிட்டீஸ் முடிந்து வந்த போது, விமான நிலையத்தில் இருந்த டி.வி.யில் மாணவிகள் பத்திரமாக வந்த செய்திதான் ஓடிக்கொண்டிருந்தது. அதில் மாணவிகளைப் பெற்றோர் கட்டிப்பிடித்துக் கொண்டு அழுவதைக் காட்டினர். அப்போது வித்யாவும், மீராவும் கட்டிப்பிடித்துக் கொண்டு அழுவதும் வந்தது. அதைப் பார்த்ததும் அர்ஜுனுக்கும் கண்கள் கலங்கின.

'ஒரு நாளில் என்னவெல்லாம் நடந்துவிட்டது...' என்று நினைத்தவன், தன்னைச் சமன்படுத்த அங்கேயே அமர்ந்தான். சிறிது நேரம் அந்தச் செய்தியே திரும்பத் திரும்ப வந்தது. அர்ஜுன் தன் அம்மாவையும், மீராவையும் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டி ருந்தான். 'அம்மாவே மீராவைப் பார்க்க வந்திட்டாங்க,

அப்ப இனி பிரச்சினை இருக்காது...' என்று நினைத்தவன் மனது, சந்தோஷமும் நிம்மதியும் அடைந்தது.

சாப்பிட்டதும் எங்கு செல்வது என்று எல்லோரும் யோசிக்கும் போது, "எல்லோரும் இங்கே இருக்க வேண்டாம். மணி இப்ப மூணுதான் ஆகுது... அதனால இப்ப கிளம்பினா நைட் பத்து மணிக்குள்ள சென்னை போயிடலாம்... யாரெல்லாம் வரீங்க...?" ராம்நாத் கேட்க...

யாருக்குமே அர்ஜுனைப் பார்க்காமல் கிளம்ப மனம் இல்லை. கணேசன் மட்டும் தான் வருவதாகச் சொல்ல... சூர்யா மற்றவர்களைத் தன் அக்கா மது வீட்டுக்கு அழைத்துக் கொண்டு செல்வதாகச் சொன்னான். ராம்நாத்தின் காரில் டிரைவர் வண்டி ஓட்ட... அவரோடு கணேசன், மீனாட்சி மற்றும் வருண் சென்றனர்.

சூர்யா, அர்ஜுனுக்குப் போன் செய்து... "நாங்க எல்லோரும் மீராவோட அபார்ட்மென்ட்டுக்குத்தான் வரோம். ஆனா... இங்க இருந்து நாங்க வர நேரம் ஆகும். அதனால நீ இன்னும் கொஞ்ச நேரம் ஏர்போர்ட்ல இருந்து ரிலாக்ஸ் பண்ணிட்டு, மெதுவாக் கிளம்பு..." என்று சொல்ல...

அர்ஜுன் மேலும் எதோ கேட்க வர... "அர்ஜுன், ரொம்ப டயர்டா இருக்கு, எதுனாலும் நேர்ல பேசலாம், ப்ளீஸ்..." சூர்யா சொல்ல... அர்ஜுனும் "சரி, நேரில் பேசுவோம்..." என்று போனை வைத்துவிட்டான்.

சூர்யா எல்லோரையும் அழைத்துக் கொண்டு தன் காரில் கிளம்பினான். அவர்கள் பெங்களூரை விட்டுத் தள்ளி இருந்தனர். பெங்களூருக்குள் நுழையவே இரண்டு மணி நேரம் ஆனது.

"என்னோட அக்கா வீட்ல எல்லோரும் தங்க முடியாது... இப்ப என்ன செய்றது...?" சூர்யா யோசிப்பது போல் நடிக்க... மீரா வேகமாக, "என்னோட அபார்ட்மென்ட்டுக்குப் போகலாம்..." என்றாள். சூர்யாவும் சரி என்றான்.

மீரா இன்னும் அந்த வீட்டைக் காலி செய்ய வில்லை. வாரத்திற்கு ஒரு முறை ஏஜென்சி ஆட்கள் வந்து, வீட்டைச் சுத்தம் செய்துவிட்டுச் செல்வார்கள்.

மீரா போகும் வழியில், தான் வேலை பார்த்த பள்ளியின் ஹாஸ்டல் சென்று, வேகமாகக் குளித்து, உடை மாற்றிவிட்டு, அவளுக்குத் தேவையான பொருட் களும், வீட்டுச் சாவியையும் எடுத்து கொண்டாள்.

மீரா இல்லாத போது சூர்யா, வித்யாவிடம் தன் திட்டத்தைச் சொல்ல... அவர் சிரித்துக் கொண்டே சரி என்றார்.

சூர்யா நேராக மீராவின் அபார்ட்மென்ட் சென்றவன், மீரா இறங்கியதும், "நீ போய் ரெஸ்ட் எடு மீரா, நாங்க நைட் அர்ஜுன் வந்ததும், வரோம்..." என்றான்.

அவன் சொன்னதைக் கேட்டு மீரா முகம் வாடிவிட்டது. தன்னை மட்டும் ஏன் இறக்கிவிட்டான்?

என்று அவளுக்குப் புரியவில்லை. மீரா யோசித்துக் கொண்டிருக்கும் போதே... சூர்யா, வேகமாகக் காரைக் கிளப்பிக் கொண்டு சென்று விட்டான். மீராவிற்கு அழுகையாக வந்தது. அவள் திரும்பி தன் வீட்டை நோக்கிச் சென்றாள்.

அர்ஜுன், சூர்யா சொன்னபடி ஏர்போர்ட்டிலேயே முகம் கழுவித் தயாராகி, அங்கேயே உணவு வாங்கிச் சாப்பிட்டான். அதுவே ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகிவிட்டது. பின் அங்கிருந்து டாக்ஸியில் கிளம்பி மீராவின் அப்பார்ட்மென்ட்டுக்கு வர.... வழியெல்லாம் ஒரே டிராபிக். அர்ஜுன் சீட்டில் சாய்ந்து நன்றாகத் தூங்கிக் கொண்டே வந்தான்.

பெங்களூரில் ஏர்போர்ட் சிட்டியைவிட்டுத் தள்ளி இருப்பதால்... அவன் கோரமங்களா வந்து சேர, இரண்டு மணி நேரம் ஆகிவிட்டது.

"சார்.. நீங்க சொன்ன அட்ரஸ் வந்திடுச்சு..." என்று டிரைவர் எழுப்பியதும்தான் அர்ஜுன் எழுந்தான்.

மீரா வீட்டுக்குள் வந்தவள், நேராகச் சென்று சோபாவில் உட்கார்ந்து அழுதாள். அப்போது யாரோ காலிங் பெல் அடித்தனர். மீரா எரிச்சலோடு சென்று கதவைத் திறக்க... அங்கே அர்ஜுன் நின்று கொண் டிருந்தான். மீராவிற்கு ஒரு நிமிடம் ஒன்றுமே புரிய வில்லை.

அர்ஜுனைப் பார்த்ததும் அவனைத் தாவிச் சென்று அணைத்துக் கொண்டாள்.

அர்ஜுன் அவளை அப்படியே தள்ளிக் கொண்டு உள்ளே வந்து, கதவைச் சாத்திவிட்டு... பார்வையால் வீட்டைச் சுற்றிப் பார்த்தவன், "வீட்ல வேற யாரும் இல்லையா மீரா...?" என்று கேட்டான்.

மீரா இல்லை என்று தலையசைக்க... அர்ஜுன், மீராவின் முகத்தை நிமிர்த்தி, "எல்லோரும் எங்கே?" என்றான் ஆவலாக.

"என்னை மட்டும் தனியா விட்டுட்டு... அவங்க எல்லோரும் மது அக்கா வீட்டுக்குப் போயிட்டாங்க." மீரா சொல்ல... அர்ஜுன் முகம் புன்னகையில் விரிந்தது..

"அப்போ நாம ரெண்டு பேர் மட்டும்தான் இருக்கோமா...?" என்றவன், மீராவை அப்படியே தூக்கிச் சுற்ற... மீராவிற்கு, அப்போதுதான் சூர்யா எதற்குத் தன்னைத் தனியே விட்டுச் சென்றான் என்று புரிந்தது. அவள் சந்தோஷமாக அர்ஜுனின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

அர்ஜுன், மீராவை இறக்கி விட்டவன் அவளோடு சென்று சோபாவில் அமர்ந்து, அவள் முகத்தைத் தன் பக்கம் திருப்பி, அவள் கண்களைப் பார்த்து, "ரொம்பப் பயந்துட்டியாடா...?" என்று கேட்டதும்... மீராவிற்குக் கண்கள் கலங்க ஆரம்பித்தன.

மீரா, அர்ஜுனின் மார்பில் முகத்தைப் பதித்து, "ரொம்ப... உங்களைத் திரும்பிப் பார்க்கவே முடியாதோன்னு நினைச்சேன்..." என்றாள். அதைச் சொல்லும்போதே அவள் குரல் நடுங்கியது.

அர்ஜுன், மீராவை இறுகி அணைத்தவன், "வேண்டாம்டா... இனி அதை நினைக்காதே. சாரி, நானே ஞாபகப்படுத்திட்டேன்..." என்றவன், அவள் நெற்றியில் மென்மையாக முத்தமிட்டான். மீரா, அவன் கன்னத்தில் முத்தமிட்டாள். அடுத்து அர்ஜுனும் அவள் கன்னத்தில் முத்தமிட... மீரா, அர்ஜுனின் இதழைப் பார்த்தவள், முத்தமிடாமல் விலக, அர்ஜுன், "உனக்கு இதே வேலையாப் போச்சு" என்றவன், அவளை அருகில் இழுத்து... அவள் இதழில் அழுந்த முத்தமிட்டான்.

சிறிது நேரம் சென்ற பிறகும் அர்ஜுனின் முத்தம் நிற்காமல் தொடர... மீரா, அவனை விட்டு விலகப் பார்க்க... அர்ஜுன், அவளை விலக விடவில்லை. சிறிது நேரம் கழித்து அர்ஜுனாக விலக... மீராவிற்கு மூச்சு வாங்கியது.

அர்ஜுன், மீராவைப் பார்த்துச் சிரித்தவன், "நீ இப்ப திருமதி மீராதானே...? நான் என்ன வேணா பண்ண லாமா...?" என்று குறும்புப் புன்னகையுடன் கேட்க... மீரா அர்ஜுனைப் பார்த்துப் பொய்யாக முறைக்க... "சும்மா சொன்னேன்... உன்னோட வீட்டை எனக்குச் சுற்றிக் காட்ட மாட்டியா மீரா...?" என்றதும்... மீரா, அர்ஜுனை அழைத்துக் கொண்டு சென்று வீட்டைச் சுற்றிக் காட்டினாள்.

வீட்டைச் சுற்றிப் பார்த்ததும் அர்ஜுன் பால்கனியில் நின்று சூர்யாவை அழைத்தான்.

"எங்கேடா இருக்க...?"

"மது வீட்டுக்குப் போலாம்னு பார்த்தேன். ஆனா ஒரே டிராபிக்... எப்படிப் போயிட்டுத் திரும்பி வரப் போறோமோ தெரியலை..."

"நீ அங்கே போக வேண்டாம், திரும்பி இங்கேயே வா... எனக்கு அம்மாவைப் பார்க்கணும்." சூர்யாவும் சரி என்று போனை வைத்தவன், காரைத் திருப்பிக் கொண்டு மீரா அபார்ட்மென்ட்டுக்கே சென்றான்.

அர்ஜுன், "நான் அவங்க வர்றதுக்குள்ள குளிச்சிட்டு வந்துடுறேன்..." என்று குளிக்கச் செல்ல... மீரா, அவர்கள் வருவதற்குள் வீட்டைப் பெருக்கிவிட்டு, அவர்கள் அபார்ட்மென்ட்டில் இருந்த கடையில் சென்று தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு வந்தவள், பாலைக் காய்ச்சிக் கொண்டிருக்கும் போது காலிங் பெல் அடித்தது.

மீரா கதவைத் திறக்கச் செல்ல... அர்ஜுனும் குளித்து உடை மாற்றிக்கொண்டு வந்தான். இருவரும் சென்று கதவைத் திறக்க... வெளியில் நின்ற வித்யா, அவர்கள் இருவரையும் சேர்ந்து பார்த்ததும் மிகவும் சந்தோஷப்பட்டார்.

வித்யா உள்ளே வந்ததும்... அர்ஜுன், தன் அம்மாவை அணைத்துக் கொண்டான். அதை மீரா முகத்தில் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அர்ஜுன், அவனது மற்றொரு கையால் மீராவை அருகில் இழுத்து, அவளையும் சேர்த்து அணைத்துக் கொண்ட வனின் கண்கள் கலங்க... அதைப் பார்த்து மற்றவர் களும் கண் கலங்கினர்.

சிறிது நேரம் சென்று அர்ஜுன் அவர்களை விட்டு விலக... அவனிடம் ஜஷு, "சித்தப்பா..." என்று பாய்ந்தது. அர்ஜுன் தன் மகளைக் கொஞ்ச... மீரா சமையல் அறைக்குச் சென்று, ஒரு அடுப்பில் பால் காய்ச்சிக் கொண்டே ஒரு பக்கம் குக்கரில் சாதம் வைத்தாள்.

அவளுக்குத் தெரியும் ஜஷுவுக்குப் பசிக்கும் என்று. எல்லோருக்கும் சாப்பிட பிஸ்கட், மிக்சர் எல்லாம் ஒரு தட்டில் வைத்துக் கொண்டு போய்க் கொடுத்தவள், பிறகு எல்லோருக்கும் காபியும் போட்டுக் கொடுத்தாள்.

ஆதிக்கும், சூர்யாவுக்கும் தங்கள் மனைவிமார் களைச் சமாதானப்படுத்தும் மிக முக்கியமான வேலை இருந்ததால்... முதலில் ஆதி மெதுவாக வித்யாவிடம், "அம்மா... நாம ப்ளைட்ல தானே வந்தோம், அதனால அலுப்பாவே இல்லை... நான் ரஞ்சனாவோட வெளியே போயிட்டு வரட்டுமா...?" என்று கேட்க... ரஞ்சனா அவனை ஆச்சரியமாகப் பார்க்க...

"போயிட்டு வாங்க, ஜஷு என்னோட இருக்கட்டும்..." என்றார் வித்யா.

ரஞ்சனா சென்று கிளம்ப... அதற்குள் ஆதி, அர்ஜுனைத் தனியே அழைத்துச் சென்று... கடந்த இரண்டு வாரமாக வீட்டில் நடந்த அனைத்தையும் சொல்லி... வித்யாவுக்கு உடம்பு சரி இல்லாமல் போனதையும் சொன்னான்.

அதைக் கேட்டு அர்ஜுன் முகம் மாறினான்.

அவன் தோளில் தட்டிக் கொடுத்த ஆதி, "இப்ப ஒண்ணும் பிரச்சினை இல்லை... அம்மா நல்லா இருக்காங்க..." என்றவன், ரஞ்சனா தயார் ஆனதும், அவளை அழைத்துக் கொண்டு வெளியே சென்றான்.

அடுத்து குளித்துவிட்டு வந்த சூர்யா... "மீரா, பசிக்குது..." என்றதும்... மீரா, சூர்யாவுக்கும், ஆருவுக்கும் ஹோட்டலில் இருந்து வந்த உணவுகளைப் பரிமாற... அதைச் சாப்பிட்டதும் சூர்யா, "நைட் கார் ஓட்டினது டயர்டா இருக்கு... நான் தூங்கப் போறேன்..." என்றவன், அர்ஜுனைப் பார்த்து, "காலையில அஞ்சு மணிக்கெல்லாம் கிளம்பணும், நீங்களும் சீக்கிரம் தூங்குங்க..." என்று சொல்லிவிட்டு ஆருவையும் அழைத்துக் கொண்டு அங்கிருந்த படுக்கை அறைக்குச் சென்று கதவைப் பூட்டிக் கொண்டான்.

அவன் உள்ளே காதல் செய்கிறானா... அல்லது ஆருவின் காலில் விழுகிறானா என்று அவனுக்கு மட்டும் தான் தெரியும்.

ஐஷுவுக்கு வித்யா பால் சாதம் ஊட்ட... அது சமத்தாகச் சாப்பிட்டு விட்டுத் தூங்கியது. அர்ஜுன், ஐஷுவைத் தூக்கிக் கொண்டு மீராவின் படுக்கை அறைக்குச் சென்றவன், அங்கே அவளைப் படுக்க வைத்துவிட்டு, "அம்மா...! இங்க வாங்களேன்..." என்று வித்யாவை அழைத்தான்.

வித்யா அந்த அறைக்குள் இப்போதுதான் வருகிறார். வித்யா உள்ளே வந்ததும், அர்ஜுன் அங்கே

இருந்த சுவரைக் காட்ட... அதைப் பார்த்த வித்யாவின் முகம் ஆச்சரியத்தில் மலர்ந்தது.

அந்தச் சுவரில் அர்ஜுன் கிரிக்கெட் விளையாடுவது போல் ஒரு பெரிய போட்டோ இருந்தது. அடுத்து அர்ஜுனும், மீராவும் ஆதியின் திருமணத்தில் சேர்ந்து எடுத்துக் கொண்ட போட்டோவும், அதற்கு அடுத்து ஆரு திருமணத்தில் எடுத்துக் கொண்ட படம் என்று அந்தச் சுவர் முழுவதும் புகைப்படங்களை மீரா மாட்டி வைத்திருந்தாள்.

அதைப் பார்த்ததும் வித்யா, 'இவ்வளவு ஆசையா, பாசமா இருக்கும் பெண்ணைக் கஷ்டப்படுத்திடோமே...' என்று கண் கலங்க... அவரின் எண்ணத்தை உணர்ந்த அர்ஜுன், "வருத்தப்படாதீங்கம்மா... நானும், மீராவும் எவ்வளவு தடைகள் வந்திருந்தாலும், அதைத் தாண்டிச் சேர்ந்திருப்போம்.

"எங்கள் பிரிவு வெறும் உடலுக்குத்தானே தவிர... மனதுக்கு இல்லை. எனக்குத் தெரியும் உங்களுக்கு மீராவைப் பிடிக்கும்னு... நீங்க ஏதோ ஒரு காரணத் திற்காகத்தான் மீராவை வேண்டாம்னு சொல்றீங்கன்னு தெரிஞ்சதுனாலதான், மீரா விலகுறேன்னு சொன்னதும் அமைதியா இருந்தேன்.

"எனக்குத் தெரியும்... அந்த விஷயம் உங்களுக்குத் தெரியும் போது, நீங்க கண்டிப்பா எங்களைச் சேர்த்து வைப்பீங்கன்னு. எல்லாம் நல்லபடியா முடிஞ்சிருக்கும், மீரா மட்டும் கடத்தப்படலைன்னா. நடுவுல மீரா கடத்தல் வந்து எல்லோரையும் ஒரு வழி ஆக்கிடுச்சு."

அர்ஜுன், வித்யாவின் மனதில் இருந்த குற்ற உணர்வை அவருக்கும் தெரியாமல்... அவர் மன திலிருந்து நீக்க...

அர்ஜுனும் மீராவும் எந்த நிலையிலும் பிரிந்திருக்க மாட்டார்கள் என்ற உண்மை புரிந்ததும், வித்யாவின் மனதில் இருந்த கலக்கம் மறைந்து, சந்தோஷம் வந்தது. அவர் மனதிற்குள், 'சீக்கிரம் அர்ஜுனுக்கும், மீராவுக்கும் திருமணம் செய்துவிட வேண்டும்...' என்று நினைத்தவர், சாப்பிட்டுவிட்டு ஜஷுவுடன் சென்று படுத்துக் கொண்டார்.

அர்ஜுனும் மீராவும் சாப்பிட்டதும், பால்கனியில் சென்று நிற்க... மீரா வானத்தில் இருந்து முழு வெள்ளி நிலவை ஆசையாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அர்ஜுன், அவன் அருகில் இருந்த பெண் நிலவை ஆசையாகப் பார்த்தான்.

அர்ஜுன் மெதுவாக மீராவின் பின்புறம் சென்று நின்று, அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்தவன், அவள் தோளில் தன் முகத்தை வைத்து, நிலவைப் பார்த்துக் கொண்டே... "மீரா.. அந்த நிலவைவிட, நீ தான்டி அழகா இருக்கே..." என்றவன், அவள் கன்னத்தில் முத்தமிட... மீராவின் முகம் தாமரையாக மலர்ந்து சிவந்தது. உண்மையான காதலர்களைக் கண்ட ஆனந்தத்தில், அன்று நிலவும் அதிகப் பிரகாசமாகத் தான் இருந்தது.

40

இரண்டு வாரங்கள் கழித்து...

அன்று அர்ஜுன், மீரா திருமண நிச்சயதார்த்தம். மீராவின் வீடு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஹாலின் நடுவில் அர்ஜுன் வீட்டினர் கொண்டு வந்திருந்த இருப்பத்தியொரு தாம்பாளத் தட்டுக்கள் நிறையச் சீர்வரிசைப் பொருட்கள் வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன.

அதைச் சுற்றி அர்ஜுனின் வீட்டினரும், முக்கிய மான சொந்தங்களும் அமர்ந்து இருந்தனர். அதே போல் ராம்நாத்தின் முக்கியமான உறவினர்களும், நண்பர்களும் வந்திருந்தனர்.

பெரியவர்கள் அனைவரும் திருமணத் தேதி பற்றிப் பேச... "ஆறு மாசம் கழிச்சு வைங்க, நான் திரும்ப ஆஸ்திரேலியா போகணும்." அர்ஜுன் ஒரு குண்டைத் தூக்கிப் போட... அதைக் கேட்டு எல்லோரும் அதிர்ந்தனர். கீழே இருந்த அறையில் இருந்த மீராவின் முகம் வாடிவிட்டது.

"என்ன அர்ஜுன் இப்படிச் சொல்ற...? நீ திரும்ப ஆஸ்திரேலியா போகணுமா...?" வித்யா சந்தேகமாகக் கேட்க...

"ஆமாம்மா... திடீர்னுதானே கிளம்பி வந்தேன். அங்கே இன்னும் வேலை முடிச்சுக் கொடுக்கலை... ஆஸ்திரேலியா போயிட்டு வந்ததும், கல்யாணத்தை வச்சுக்கலாம்."

அர்ஜுன் சொல்ல... எல்லோரும் அவனை ஒரு மாதிரி பார்த்தனர்.

"சரி கல்யாணத் தேதி அப்புறம் முடிவு பண்ணிப் போம். இப்ப நிச்சயம் பண்ணிடலாம்..." என்றார் ராம்நாத்.

அர்ஜுனின் அருகில் அமர்ந்திருந்த சூர்யா மெதுவாக, "எதுக்குடா இப்ப இப்படி ஒரு ரீல் சுத்துற...? நீ வேலைய விட்டுட்டதானே...? அப்புறம் ஏன் அப்படிச் சொன்னே...?" எனப் புரியாமல் கேட்க...

"நான் வேலையை விட்டது இன்னும் யாருக்கும் தெரியாது. என்னை மாமியாரும், மருமகளும் சேர்ந்து என்ன பாடு படுத்தினாங்க. கொஞ்ச நேரம் ரெண்டு பேரும் டென்ஷன் ஆகட்டும்." அர்ஜுன் புன்னகையுடன் சொல்ல...

சூர்யாவும் சிரித்துக் கொண்டே, "அப்படியா...? சரி..." என்றான்.

ஆதி, சூர்யாவைப் பார்த்து, 'என்ன இப்படிச் சொல்றான்...?' என்று ஜாடையாகக் கேட்க... சூர்யா, 'பொய் சொல்றான்...' என்று பதிலுக்கு ஜாடை காட்டினான்.

ஆதி, 'அப்படியா விஷயம்...' என்று நினைத்தவன், வித்யாவின் காதில் சென்று ஏதோ சொல்ல... அவர், "சரி, நான் பார்த்துக்கிறேன்..." என்றார்.

வித்யா, மீராவை அழைத்து, அவர்கள் வாங்கி வந்த புடவையைக் கொடுத்து உடுத்திக் கொண்டு வரச் சொன்னார்.

மீரா, அர்ஜுனைப் பார்த்து முறைத்துக் கொண்டே... புடவையை வாங்கிக் கொண்டு சென்றாள். அர்ஜுனுக்கு அவள் எதற்குக் கோபமாக இருக்கிறாள் என்று தெரியுமென்பதால், புன்னகையுடன் அவள் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தான். வருண் வந்து, அர்ஜுனுக்கு அவர்கள் வாங்கி இருந்த உடையைக் கொடுக்க... அர்ஜுனும் உடை மாற்றச் சென்றான்.

நிச்சயப் பத்திரிகை வாசிக்கப்பட்டு, இரு வீட்டினரும் வெற்றிலை பாக்கு மாற்றிக் கொண்டதும். முதலில் அர்ஜுனை ஒரு சேரில் அமர வைத்து, ராம்நாத் அர்ஜுனுக்கு மாலை போட... வருண், அர்ஜுனுக்குச் செயினும், ப்ரேஸ்லெட்டும் போட்டு சந்தனம், குங்குமம் இட்டுவிட்டான்.

சற்று நேரம் கழித்து மீரா அழகான ரோஜா வண்ண நிறத்தில், உடலெல்லாம் தங்க ஜரிகைகளால் நெய்யப்பட்ட புடவை அணிந்து, கழுத்தில் அடர் ரோஜா மாலை அசைந்தாட எழிலாக நடந்து வந்தாள். அர்ஜுன் தன்னை மறந்து, சுற்றி இருந்தவர்களை மறந்து மீராவையே பார்த்துக் கொண்டிருந்தான். மீரா சென்று அவளுக்குப் போடப்பட்டிருந்த மனையில் அமர்ந்தாள்.

வித்யா, மீராவிற்கு அவர்கள் வாங்கி இருந்த ஆரத்தைப் போட்டுவிட்டு நலங்கு வைக்க... அவருக்கு அடுத்து மீராவின் பாட்டி, அவள் மாமி, மீனாட்சி, பெரியம்மா, ரஞ்சனா, ஆரு என்று வரிசையாகப்

பெண்கள் வந்து மீராவிற்கு நலங்கு வைத்தனர். ஏற்கெனவே அழகான மீரா... இன்று இன்னும் அழகாக இருந்தாள்.

அவள் இதழில் எப்போதும் புன்னகை இருந்தது. அர்ஜுன் அவளை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

நலங்கு வைத்து முடித்ததும், அர்ஜுனையும், மீராவையும் சேர்ந்து நிற்க வைக்க... அர்ஜுன், மீரா இருவரும் மோதிரம் மாற்றிக் கொண்டனர். அர்ஜுனுக்கு, நிச்சயமே ஏதோ கல்யாணம் போல்தான் இருந்தது. 'தாலி ஒண்ணுதான் பாக்கி, அதையும் இன்னைக்கே கட்டி இருக்கலாமோ...?' என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

பெங்களூரில் இருந்து வந்த பிறகு இரு வீட்டாரும் பேசி நிச்சயத்துக்கு ஏற்பாடு செய்தனர். "நாங்க ஆதிக்கும், ஆருவுக்கும் எங்க முறைப்படி கல்யாணம் பண்ணிப் பார்த்திட்டோம். அதனால அர்ஜுன், மீரா கல்யாணம் உங்க முறைப்படியே நடக்கட்டும். அதில் எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை..." என்று வித்யா முழு மனதாகச் சொல்லிவிட்டார். அதனால் மீராவின் குடும்ப வழக்கப்படி நிச்சயம் நடந்தது.

முதலில் மண்டபத்தில்தான் நிச்சயம் வைப்பதாக இருந்தது. ஆனால், அவர்கள் வீடு கட்டிய பிறகு வரும் முதல் விசேஷம், அதுவும் வீடே மண்டபம் போல்தான் இருக்கும் என்பதால்... ராம்நாத் தங்கள் வீட்டிலேயே நிச்சயத்தை வைத்தார். வெளியே தோட்டத்தில் ஷாமியானா போட்டு அங்கே மதிய விருந்து பரிமாறினர்.

மீராவின் அம்மா வரவில்லை. ஆனால், அவளின் தாத்தா, பாட்டி மற்றும் தாய் மாமன் குடும்பத்துடன் வந்திருந்தனர். மீனாட்சியின் பக்க உறவினர்கள் அனைவரும் வந்திருந்தனர்.

அதே போல் அர்ஜுனின் வீட்டில் அவர்கள் நெருங்கிய உறவினர்களும், நண்பர்களும். ரஞ்சனாவின் பெற்றோரும், அவர்களோடு சஞ்சனா, தினேஷ் மற்றும் அவர்களின் குட்டிப் பையன் வினித்தும் வந்திருந்தனர். சஞ்சனா எல்லோரோடும் கலகலப்பாகப் பழகினாள். நிச்சயம் முடிந்ததும் உறவினர்கள் அனைவரும் சாப்பிடச் சென்றனர்.

மீரா, அர்ஜுன் வீட்டினரை அழைத்துக் கொண்டு அவளது அறைக்குச் சென்றாள். அர்ஜுன், மீராவையே பார்த்துக் கொண்டிருந்தான். அதைக் கவனித்த வித்யா "ம்ம்... என்ன பண்றது? நான் இன்னும் மூணு மாசத்துல கல்யாணத்தை முடிச்சிடலாம்னு நினைச்சேன். ஆனா... அர்ஜுன் ஆஸ்திரேலியா போகணுமாமே... ஆரு வேற கர்ப்பமா இருக்கா.. இவன் ஆஸ்திரேலியால இருந்து வரும் போது... அவளுக்கு ஏழு மாசம் நடக்கும்... நான் அவளைப் பார்ப்பேனா... இவன் கல்யாண வேலை பார்ப்பேனா... அதனால பேசாம கல்யாணத்தை ஒரு வருஷம் கழிச்சு வைக்க வேண்டியதுதான்..." என்று வேண்டுமென்றே சொல்ல...

அர்ஜுனின் பெரியம்மா காயத்திரியும், "ஆமாம்... ஆரு பிரசவம் முடிஞ்சே கல்யாணத்தை வை..." என்றார்.

அவர்கள் பேசுவதைக் கேட்ட அர்ஜுன், மீரா இருவரின் முகமும் மாறியது. அதுவும் அர்ஜுன் முகம் போன போக்கைப் பார்த்து, வந்த சிரிப்பை சூர்யாவும் ஆதியும் அடக்கிக் கொண்டு இருந்தனர்.

"ஏன்மா உங்களுக்கு இந்தக் கொலைவெறி...?" அர்ஜுன், வித்யாவைப் பார்த்துக் கேட்க...

"நீதானேடா ஆஸ்திரேலியா போகப் போறேன்னு சொன்ன... நீ ஆறு மாசம் இல்ல... ஒரு வருஷம் கழிச்சு பொறுமையா வா..." வித்யா அக்கறை இல்லாதவர் போல் சொல்ல... அதைக் கேட்ட அர்ஜுன் டென்ஷன் ஆகிவிட்டான்.

"அம்மா, நான் ஆஸ்திரேலியா எல்லாம் போகலை... இங்க இருந்தே வேலை பார்க்கிறேன். நீங்க சீக்கிரம் கல்யாணத்தை வைங்க."

"அதெல்லாம் வேண்டாம். நீ ஆஸ்திரேலியா போயிட்டே வா... ஆருவுக்குக் குழந்தை பிறந்த பிறகே, உங்க கல்யாணத்தை வச்சுப்போம். அப்பதான் எனக்கு வேலை பார்க்க ஈஸியா இருக்கும்..." வித்யா பிடி கொடுக்காமல் பேச...

அர்ஜுன் எழுந்து வித்யாவின் காலில் சாஷ்டாங்கமாக விழுந்தவன், "அம்மா...! தெய்வமே...! தெரியாம உங்ககிட்ட வாயை விட்டுட்டேன். நான் ஆஸ்திரேலியா வெல்லாம் போக முடியாது. ஏன்னா, நான் வேலையை விட்டுட்டேன். சும்மா உங்ககிட்ட பந்தாக்காக அப்படிச் சொன்னேன். நான் உங்ககிட்ட என்னோட கெத்தக் காட்ட

நினைச்சது தப்புதான், மன்னிச்சிடுங்க. என்னை இப்படிப் பழி வாங்காதீங்கம்மா, ப்ளீஸ்..." என்றான்.

வித்யா வந்த சிரிப்பை அடக்கியவர், "அப்படி வா வழிக்கு. வெட்டிப் பந்தா காட்ற வேலையெல்லாம் இன்னையோட விட்டுட்டு... இப்ப எழுந்துக்கோ..." என்றவர், "மீராவோட அப்பா சொன்ன தேதியிலேயே கல்யாணத்தை வச்சுடுவோம். அன்னைக்கு மண்டபமும் இருக்காம்..." என்று ஒரு பெரிய மண்டபத்தின் பெயரைச் சொன்னார்.

அர்ஜுன், 'அவ்வளவு பெரிய மண்டபமா...?' என்று யோசிக்க... கணேசன், "நாமும் பாதிப் பணம் கொடுத்திடுவோம்..." என்றார்.

எல்லோரும் சாப்பிடச் செல்ல... அர்ஜுன் மீரா இருவரிடமும், "நீங்க ரெண்டு பேரும் தனியா பேசிட்டு, பத்து நிமிஷத்துல சாப்பிட வாங்க..." என வித்யா சொல்ல...

"வெறும் பத்து நிமிஷமா...?" அர்ஜுன் இழுக்க...

வித்யா அவனைப் பார்த்து முறைத்தவர், "நீ ஒண்ணும் பேச வேண்டாம். எங்களோட சாப்பிட வா..." என்றார்.

அர்ஜுன் வேகமாக, "இல்லையில்லை... பத்து நிமிஷம் தாராளமாப் போதும்..." என்றவன், அவர்கள் சென்றதும் அறைக் கதவைச் சாத்திவிட்டு மீராவிடம் சென்றான்.

மீரா, ஜன்னல் அருகில் நின்று கொண்டிருந்தாள். அர்ஜுன் அவளருகில் சென்று, அவள் கண்களோடு கண்கள் கலந்து, "இந்த அலங்காரத்தில ரொம்ப அழக்கா இருக்க மீரா..." என்றவன், அவளைத் தன்னிடம் இழுக்க...

"வேண்டாம் அர்ஜுன், என் நெத்தியில, கன்னத்தில இருக்கிற சந்தனம், குங்குமம் எல்லாம் உங்க மேல ஒட்டும்." மீரா சொல்ல...

"அப்ப ஒண்ணும் பண்ண முடியாதா...?" அர்ஜுன் ஏக்கமாகக் கேட்க... மீரா சிரித்துக் கொண்டே "ஆமாம்..." என்றாள்.

அர்ஜுன், மீராவை அழைத்துக் கொண்டு சென்று அங்கிருந்த சோபாவில், அவளோடு நெருங்கி அமர்ந்தவன், "இன்னைக்கு நான் ரொம்ப ரொம்பச் சந்தோஷமா இருக்கேன் மீரா..." என்று சொல்ல...

மீரா, "நானும்தான்..." என்றவள் தொடர்ந்து, "என்னால இன்னும் நம்ப முடியலை. நிஜமாவே நமக்கு நிச்சயம் ஆகிடுச்சா...?" என்று கேட்க...

அர்ஜுன் அவள் இடையில் நறுக்கென்று கிள்ள... மீரா வலியில் துள்ளினாள்.

அர்ஜுன், "சாரி மீரா, லேசா கிள்ளணும்னுதான் நினைச்சேன், தெரியாம நறுக்குன்னு கிள்ளிட்டேன்..." என்றவன், இதுதான் சாக்கு என்ற அவள் இடையை வருடி விட...

மீரா அவனைப் பார்த்து முறைத்துக் கொண்டே, "போதும், கையை எடுக்கிறீங்களா...?" என்று கேட்க... அர்ஜுன், மீராவை எழுப்பித் தன் முன்னே நிற்க வைத்தவன், அவள் எதற்கு என்று யோசிக்கும் முன்பே... அவள் சேலையை லேசாக விலக்கி, அவள் வயிற்றில் அழுத்தமாக முத்தமிட்டிருந்தான்.

மீராவிற்குத் தலை முதல் கால் வரை ஏதோ ஜிவ்வென்று இருக்க... அவள் சமாளித்துக் கொண்டு அர்ஜுனைப் பார்த்து முறைக்க... அவன் அழகாகச் சிரித்தான். மீராவிற்கு அவனிடம் கோபத்தைக் காட்ட முடியவில்லை. அவள் தன் முகத்தில் தோன்றும் புன்னகையைக் கஷ்டப்பட்டு அடக்கி, "என்னதிது...?" என்று மிரட்டலாகக் கேட்க...

அர்ஜுன், "இன்னைக்கு ஸ்பெஷல் டேதானே... அதுதான் ஸ்பெஷல் முத்தம்..." என்று சொல்ல...

மீரா, "முத்தம் கொடுக்கிற இடத்தைப் பாரு...?" என்று முனகிக் கொண்டே அவள் புடவையை இழுத்து விட்டவள், அர்ஜுனைப் பார்க்க...

அவன் அவளைப் பார்த்துக் கண் சிமிட்டி, "இன்னொண்ணு வேணுமா...?" என்று கேட்க...

மீரா, "அடங்க மாட்டீங்களா நீங்க...? தனியா இருந்தா... இப்படித்தான் ஏதாவது செய்வீங்க, வாங்க கீழே போகலாம்..." என்று அவன் கை பிடித்து இழுத்துக் கொண்டு சென்றாள்.

அர்ஜுன், "இன்னும் எத்தனை நாள் மேடம் தப்பிப்பீங்க? என்னோட நீங்க தனியா இருந்துதானே ஆகணும்..." என்று சொல்லியபடி அவளுடன் செல்ல... மீரா முகம் சிவந்தாள்.

மூன்று மாதம்தான் திருமணத்திற்கு இருந்தது. அதனால் எல்லோரும் கல்யாண வேலையில் பிஸியாக இருந்தனர். மீராவிற்குத் தேவையான நகைகள், புடவைகள் எல்லாம் மீனாட்சியும், மீராவும் சேர்ந்து தேர்வு செய்தனர். ராம்நாத்திற்குப் பண பலமும், ஆள் பலமும் இருந்ததால்.... அவர் இருந்த இடத்தில் இருந்து காரியம் சாதித்தார்.

மீரா, "எனக்கு வைர நகைகள் வேண்டாம்..." என்று சொல்ல... மீனாட்சி அவளை ஆச்சரியமாகப் பார்த்தவர்.

"மீரா... நம்ம கல்யாணத்துல வைர நகைகள் போடத்தான் வேணும். நீ ஏன் வேண்டாம்னு சொல்ற...?" என்று கேட்க...

மீரா, வித்யா சொன்னதைச் சொல்லாமல் மௌனமாக இருந்தாள்.

மீனாட்சி, அவள் ஏதோ காரணமாகத்தான் சொல்கிறாள் என்பதை உணர்ந்தவர், "சரி... உனக்கு இப்போ போட்டுக்க இஷ்டம் இல்லைன்னா... உன்னோட லாக்கர்ல பத்திரமா வை. உனக்கு எப்போ தேவையோ அப்போ எடுத்துக்கோ... உனக்கு முறைப்படி நாங்க செய்யறதை, நீ வேண்டாம்னு சொல்லாதே..." என்று சொல்ல... மீராவும் சரி என்றாள்.

ராம்நாத் ஒருநாள் காலை மீராவின் அறைக்கு வந்து அவளிடம் சில பத்திரங்களைக் கொடுக்க... அதை மீரா வாங்கிப் படித்துப் பார்க்க... அது அவளுக்கான சொத்துப் பத்திரங்கள். மீராவிற்கு அவர் தனது தொழில், வீடு இன்னும் பல சொத்துக்களில் பங்கைக் கொடுத் திருந்தார்.

மீரா, "எதுக்குப்பா இதெல்லாம்?" என்று கேட்க...

"நீ இந்த வீட்டுக்கு எப்பவும் உரிமையோட வந்து போகணும் மீரா... நான் உன்னோட சித்திக்கும் தனியாப் பங்கு கொடுத்திருக்கேன். அதனால அவள் என்ன சொல்வாளோன்னு கவலைப்படாதே..." என்றார்.

"அர்ஜுன் வீட்ல இதையெல்லாம் எதிர்பார்க்க மாட்டங்க..." என்று மீரா சொல்ல...

"தெரியும்டா... இருந்தாலும், நான் உனக்குச் செய்யறதைச் செய்யணும் இல்ல... உனக்கு வேறேதுவும் வேணும்னா கேளு..." என்று ராம்நாத் சொல்ல... மீரா முகம் மாறினாள்.

அவள் முகத்தில் தெரிந்த வேதனையைப் பார்த்த ராம்நாத், "உங்க அம்மா நிச்சயத்துக்கு வரலைன்னு ஃபீல் பண்றியா மீரா...?" என்று கேட்க... மீரா மௌனமாக இருந்தாள். அவள் கண்கள் கலங்கின.

மீரா தன் அழுகையை விழுங்கிக் கொண்டு, "அம்மா வந்தாலும் விருந்தாளி மாதிரி தானப்பா வருவாங்க. அதுக்கு அவங்க வராமலே இருக்கட்டும்.

அவங்க யாரோ மாதிரி இருக்கிறதைப் பார்த்தா எனக்குக் கஷ்டமா இருக்கும்...” என்றாள்.

ராம்நாத்திற்கு அவள் வேதனை புரிந்தது. அவர் அமைதியாக அங்கிருந்து சென்றார்.

ஆரு கர்ப்பமாக இருப்பதால்... அவள் வீடு... அவள் அம்மா வீடு என்று மாறி மாறி இருந்தாள். அப்படி ஒரு நாள் அவள் அம்மா வீட்டில் இருக்கும் போது... அவளைப் பார்க்க சூர்யாவின் அம்மா வந்திருந்தார்.

எல்லோரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கும் போது, பேச்சு மீராவைப் பற்றி வர... சூர்யாவின் அம்மா, “நீங்க லவ் மேரேஜ்னு நினைச்சுக் கவலைப்படாதீங்க... அதெல்லாம் இப்ப லவ் மேரேஜ் சாதாரணமா ஆகிடுச்சு... நாம பார்த்துக் கல்யாணம் பண்ணாகூட, முன்ன பின்ன தெரியாத குடும்பத்திலதான் செய்வோம். அவங்களே விரும்பிக் கல்யாணம் பண்ணிக்கும்போது, அவங்களுக்கு ஒருத்தரைப் பற்றி ஒருத்தருக்கு நல்லா தெரியும். நான் கூட எங்க சூர்யா லவ் பண்ணும்போது பயந்தேன். ஆனா ஆரு ரொம்ப நல்ல பொண்ணு...” என்று ஒரு ஃப்ளோவில் சொல்ல...

ஆரு - சூர்யாவின் காதல் விஷயம் தெரியாத வித்யாவும், ரஞ்சனாவும் அதிர்ந்தனர். வித்யா, ஆருவைப் பார்த்து முறைக்க... ஆருவிற்கு வயிறெல்லாம் கலங்கியது. அவள் பயப்படுவதைப் பார்த்த வித்யா, அவள் கர்ப்பமாக இருக்கிறாள் என்று அமைதியாக இருந்தார்.

சூர்யாவின் அம்மா சென்ற பிறகு... ரஞ்சனா, “ஆரு, நீயா லவ் பண்ண...? என்னால நம்பவே முடியலை...” என்று கேட்க...

அர்ஜுன், “பாருங்க அண்ணி... நம்மை எல்லாம் எப்படி ஏமாத்தியிருக்கா...” என்று அவனுக்கும் எதுவும் தெரியாதது போல் நடிக்க... ஆதி, இவர்கள் பேசுவதை சுவாரசியமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

அர்ஜுன், வித்யாவைப் பார்த்து, “என்னம்மா பேசாம இருக்கீங்க... நல்லாத் திட்டுங்க...” என்று ஆருவை போட்டுக் கொடுக்க... ஆரு, அர்ஜுனைப் பார்த்து முறைக்க... வித்யா சமையல் அறைக்குச் சென்று கையில் தயிர் கடையும் மத்தோடு வந்தவர், அதால் அர்ஜுனைப் போட்டு மொத்த...

“என்னம்மா... அவ லவ் பண்ணதுக்கு என்னைப் போட்டு அடிக்கிறீங்க...?” அர்ஜுன் புரியாமல் கேட்க...

“நடிக்காதே நீ... அவ லவ் பண்ணது உனக்குத் தெரியாது...? எல்லாம் உன்னோட வேலைதானே. இதுல உனக்குக் கூட்டு, உங்க பெரியம்மா. இரு, அவ வரட்டும், அவளுக்கு இருக்கு...” என்றவர் தொடர்ந்து, “உன்னோட தங்கச்சி லவ் பண்ணதை மறைச்சு, அவளுக்குக் கல்யாணம் பண்ண நீ... எப்படிடா மீரா விலகுறேன்னு சொன்னதுக்கு அப்புறமும் பேசாம இருந்த...?” என்று வித்யா சந்தேகமாகக் கேட்க...

“நான் எங்கே பேசாம இருந்தேன்...? நீங்களே மீரா காணாமப் போனது தெரிஞ்சு வருவீங்கன்னு

நினைச்சேன். இந்த ஆருவும், சூர்யாவும் அவங்களா ஏதாவது செய்வாங்கன்னு பார்த்தா... மீரா காணாம போனதே இதுங்களுக்குத் தெரியலை. அப்புறம் நான்தான் என்னோட ஆபீஸ்ல வேலை செய்றவர் மூலமா... நான் ஆஸ்திரேலியாவுலேயே இருக்கப் போறதா... சூர்யாகிட்ட சொல்ல வச்சேன்..." என்ற அர்ஜுன் தொடர்ந்து,

"ஆனா... நான் ஒண்ணு நினைச்சா... நடந்தது வேற. என்னாலதான் மீராவுக்கும் கஷ்டம், உங்களுக்கும் உடம்பு முடியாமப் போச்சு. இல்லம்மா...?" என்று அர்ஜுன் வருத்தப்பட...

வித்யா, அர்ஜுனின் அருகில் சென்று அவனைத் தன் மேல் சாய்த்துக் கொண்டு, அவன் தலையைக் கோதியவர், "இல்லைடா கண்ணா... இதெல்லாம் நடக்கணும்னு இருந்திருக்கு. சரி, விடு. இப்பதான் கல்யாணம் நடக்கப் போகுது இல்ல... இன்னும் ஒரு வாரம்தான் இருக்கு, அந்த வேலையைப் பார்ப்போம்..." என்றவர் மகிழ்ச்சியுடன் உள்ளே சென்றார்.

ஆரு, அவள் அம்மாவிடம் மன்னிப்புக் கேட்க... "உங்க பெரியம்மாவும், அண்ணனும் தில்லாலங்கடி வேலை பார்த்து உனக்குக் கல்யாணம் பண்ணாலும், சூர்யா மாதிரி ஒரு நல்ல மாப்பிள்ளை கிடைச்சதால உங்களைச் சும்மா விடுறேன்..." என்று சொல்ல...

ஆரு, சந்தோஷமாக அவள் அம்மாவைக் கட்டிக் கொண்டாள்.

அதிகாலை வேளை... இருள் விலகி, கதிரவன் உதயமாகும் அழகான காலைப் பொழுது. சென்னை நகரத்தில் இருக்கும் அந்தப் பெரிய மண்டப வாசலில் பச்சரிசி மாவில் பெரிய கோலம் வரைந்து, அதில் அழகாகக் காவி இட்டு, மண்டபம் முழுவதும் தோரணங்கள் தொங்க... சொந்த பந்தங்கள் இங்கும் அங்கும் நடக்க... அந்தக் கல்யாண மண்டபமே களை கட்டியது.

பட்டு வேஷ்டி, சட்டையில் அர்ஜுன், தன் சொந்த பந்தம் மற்றும் உற்றார் உறவினருடன் மண்டபத்தின் அருகில் இருந்த பிள்ளையார் கோவிலில் இருந்து ஊர்வலமாக நடந்து வர... அவனை எதிர்கொண்ட வருண், அர்ஜுனுக்கு மாலை அணிவித்து, அவன் கரம் பற்றி அழைத்துச் செல்ல... அவர்களோடு மற்றவர்களும் சென்றனர்.

அர்ஜுன் வந்து வாசலில் நின்றதும், உள்ளே இருந்து கையில் மல்லிகை மாலையுடன், நீல நிறப் பட்டுப் புடவையில்... அழகுப் பதுமையாக நடந்து வந்த மீரா... அர்ஜுனின் கழுத்தில் மாலையிட... அர்ஜுன் முகம் முழுவதும் புன்னகையுடன் அவளையே பார்த்திருந்தான்.

சூர்யா, அர்ஜுன் கையில் மாலையைக் கொடுத்து மீராவிற்குப் போடச் சொல்ல... வருணும், மீராவின் தாய் மாமனும் மீராவைத் தூக்கிக் கொள்ள...

அர்ஜுன் கஷ்டப்பட்டு மீராவின் கழுத்தில் எட்டி மாலை அணிவித்தான்.

அடுத்து சூர்யாவும், ஆதியும் அர்ஜுனைத் தூக்கிக் கொள்ள... மீராவிற்கு அர்ஜுனின் கழுத்தில் மாலை போட முடியவில்லை. அதைக் கண்டு எல்லோரும் சிரித்தனர். வருணும், அவள் மாமாவும் திரும்ப மீராவைத் தூக்கிக்கொள்ள... மீரா, அர்ஜுனின் கழுத்தில் மாலை அணிவித்தாள்.

பின் அர்ஜுனும், மீராவும் ஒருவர் கையை ஒருவர் பற்றிக் கொண்டே நடந்து சென்று, மலர்களால் அலங்கரித்து இருந்த ஊஞ்சலில் அமர்ந்தனர். இருவரின் வீட்டுப் பெண்கள் வந்து அவர்களுக்குப் பாலும், பழமும் கொடுத்து, செந்நிற சாத உருண்டையால் இருவருக்கும் சுற்றிப் போட்ட பின், இருவரும் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட மணமேடைக்குச் சென்றனர்.

மீராவின் வீட்டு வழக்கப்படி திருமணம் நடப்பது என்று முடிவானதும், அர்ஜுன் அவளிடம், "கல்யாணத்துல நான் சட்டை போட்டுக்காம இருக்க மாட்டேன். அப்புறம் உங்க அப்பா எனக்குப் பாத பூஜை செய்யுறது வேண்டாம். உங்க அப்பாவும், எங்க அப்பா மாதிரிதான். அவர் எனக்குச் செஞ்சா கஷ்டமா இருக்கும். அதே போல என் பொண்டாட்டிக்கு முஹூர்த்தப் புடவையும், தாலியும் நான்தான் வாங்குவேன். கல்யாண செலவுல பாதியை நாங்க கொடுத்துடுவோம்..." என்று உறுதியாகச் சொல்லிவிட... மீரா அதை ராம்நாத்திடம் சொல்ல... அவரும் சரி என்றார். அதனால் இரு குடும்பத்துக்கும் ஏற்ற வகையிலேயே சடங்கு, சம்பிரதாயங்கள் நடந்தன.

மணமேடைக்கு வந்து சில சடங்குகள் செய்ததும்... அர்ஜுன், மீராவுக்கு முஹூர்த்தப் புடவை கொடுக்க... மீரா அதைக் கட்டிக் கொள்ளச் சென்றாள். அவளோடு ரஞ்சனாவும், ஆருவும் சென்றனர். இங்கே அர்ஜுன் மணமேடையில் அமர்ந்து, ஐயர் சொன்ன மந்திரங்களைத் திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தான்.

மீரா தங்க நிறத்தில், மரூன் ஜரிகையால் நெய்யப்பட்ட புடவையில், நிறையத் தங்க நகைகள் அணிந்து, தலையில் மலர் அலங்காரத்துடன் ஜடை வைத்து, மணமகளுக்குரிய இலக்கணத்துடன் மண மேடைக்கு வந்தவள், முதலில் நமஸ்காரம் செய்துவிட்டு, அர்ஜுனின் அருகில் அமர்ந்தாள்.

அர்ஜுனும், மீராவும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டனர். இருவருக்குமே இனிய படபடப்பு இருந்தது. அவர்களுக்குப் பின்னே ஆதி, ரஞ்சனா, ஆரு, சூர்யா, தினேஷ், சஞ்சனா நின்றனர். ஜஷு, பட்டுப் பாவடையில் அர்ஜுனின் பக்கத்தில் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. வித்யா, முகத்தில் புன்னகையுடன் கணேசன் அருகில் நின்று கொண்டிருந்தார்.

மந்திரங்கள் முழங்க, கெட்டி மேளம் ஒலிக்க... அர்ஜுன் கையில் தாலியை எடுத்தவன், அதை மீராவின் கழுத்திற்குக் கொண்டு செல்ல... ரஞ்சனா அவனுக்கு வசதியாக மீராவின் ஜடையைத் தூக்கிப் பிடித்துக் கொள்ள... அர்ஜுன் பொறுமையாக இரண்டு முடிச்சுக்

களைப் போட்டதும், மூன்றாவது முடிச்சை ஆராதனா போட்டுவிட்டாள்.

அடுத்து அர்ஜுன் ஒரு தங்கச் செயினையும் மீராவிற்குப் போட்டுவிட்டான். எல்லோரும் அட்சதை தூவி மணமக்களை வாழ்த்தினர்.

மீராவிற்குக் கண்கள் கலங்கின. அப்போது அவளை யாரோ மீரா என்று அழைக்கத் திரும்பிப் பார்த்தவள், அவளுக்குப் பக்கத்தில் ஷ்யாமளாவைப் பார்த்ததும் திகைத்தவள், "அம்மா..." என்று ஆவலாக அழைக்க...

ஷ்யாமளா மீராவின் அருகே அமர்ந்து, அவள் முகத்தைப் பற்றி, நெற்றியில் முத்தமிட்டு, "அழகா இருக்கடா செல்லம். அழக்கூடாது... சந்தோஷமா இரு... உனக்குப் பிடிச்ச வாழ்க்கை கிடைச்சிருக்கு... எனக்கு ரொம்பச் சந்தோஷம். நான் செஞ்சது தப்பு, சாரிடா..." என்றவள்,

அர்ஜுனிடம் வாழ்த்துச் சொல்லி, "மீராவை நல்லாப் பார்த்துக்கோங்க." என்று சொல்ல...

அவன், "கண்டிப்பா அத்தை..." என்றான்.

மீரா இதைத்தான் எதிர்பார்த்தாள். சுற்றி ஆயிரம் பேர் இருந்தாலும், திருமணமாகியவுடன் பெண்களுக்கு இத்தனை நாள் இருந்த வீட்டை விட்டுச் செல்லப் போகிறோம் என்று வருத்தம் தோன்றும். அப்போது அவர்களைத் தேற்ற அவர்கள் பெற்ற தாயால்தான் முடியும்.

மீரா இப்போது சந்தோஷமாக மற்ற சடங்குளைச் செய்தாள்.

எல்லோரும் ராம்நாத்திடம் வாழ்த்துச் சொல்ல...

மீனாட்சி அங்கிருந்த பெண்களுக்குத் தாம்பூலம் கொடுத்தார்.

ஷ்யாமளா, மீராவை வாழ்த்திவிட்டு அங்கிருந்து வேகமாகச் சென்று விட்டாள். அவளுக்குத் தன் மகளின் திருமணத்தைப் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருந்தது, அதனால்தான் வந்தாள். ஆனால், அங்கே ஏதோ விருந்தினர் போல் அமர்ந்திருக்க வேண்டிய தன் நிலையை எண்ணி நொந்தாள். 'அதற்குக் காரணம் நீயே தான்...' என்று அவளது மனச்சாட்சி சுட... தான் செய்த தவறுகளை நினைத்து வருந்தியபடி அங்கிருந்து சென்றாள்.

அர்ஜுனும், மீராவும் மற்ற சடங்குகளை நல்லபடியாக முடித்துத் தங்கள் பெற்றோரிடம் சென்று ஆசிர்வாதம் வாங்கினர். பின் அனைவரோடும் சென்று காலை டிபன் சாப்பிட்டுவிட்டு, சொந்தபந்தகளுடன் நின்று போட்டோ எடுத்தனர். இருவர் மனமும் சந்தோஷத்தில் நிறைந்து இருந்தது.

மாலை அதே மண்டபத்தில் அவர்கள் திருமண வரவேற்பு சிறப்பாக நடந்தது. அதில் ராம்நாத் மற்றும் கணேசனின் தொழில் துறை நண்பர்கள் அனைவரும் வந்து கலந்து கொண்டதால்... மண்டபமே நிரம்பி வழிந்தது.

மீரா, அளவான... அதே சமயம் அழகான அலங்காரத்தில் இருக்க, அவள் பக்கத்தில் அர்ஜுன் சூட்டில் கம்பீரமாக நின்றான். வரவேற்பு முடிய இரவு பதினொரு மணி ஆகிவிட்டது.

மணமக்கள் மீராவின் வீட்டிற்குச் சென்றனர். அவர்களுடன் ரஞ்சனா, ஆதி மற்றும் சூர்யா சென்றனர். அப்போதே ரொம்ப நேரமாகி விட்டதால்... ரஞ்சனா மீராவை, "இதே அலங்காரத்தில் போ மீரா... வேற வழியில்லை. இப்ப வேற அலங்காரம் பண்ணா, ரொம்ப நேரம் ஆகிடும்..." என்று சொல்ல... மீராவும் சரி என்றாள்.

சூர்யா, அர்ஜுனிடம், "டேய் பாஸ் பண்ணிடு வியா...? இல்லை ஏதாவது டிப்ஸ் வேணுமா...?" என்று சீண்ட...

அர்ஜுன், சூர்யாவைப் பார்த்து முறைத்தவன், "அதெல்லாம் நாங்க பாஸ் பண்ணிடுவோம், நீ முதல்ல இடத்தைக் காலி பண்ணு..." என்ற சொல்ல...

சூர்யா, "இனிமே எங்களைக் கழட்டி விட்டுடுவியே..." என்று முனகிக் கொண்டே சென்றான்.

அர்ஜுனும், மீராவும் அவர்கள் அறைக்குச் சென்ற போது... இருவருமே மிகவும் களைத்து இருந்தனர். விடியற்காலையில் எழுந்தது... பின் திருமணம் முடிந்து மதியம் அர்ஜுன் வீட்டிற்குச் சென்று, அங்கு செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்தது. அங்கே சிறிது நேரம் தான் ஓய்வு எடுக்க முடிந்தது. மாலை வரவேற்புக்குத்

தயார் ஆகத்தான் நேரம் சரியாக இருந்தது. அதனால் இருவர் கண்களிலும் தூக்கம் நிரம்பி வழிந்தது.

அர்ஜுன் அங்கிருந்த சோபாவில் மீராவோடு அமர்ந்தவன், அவளைத் தன்னோடு சேர்த்து அனைத்துக் கொண்டு அமைதியாக அமர்ந்திருந்தான். அவன் மனதில் மீராவை முதல் நாள் பார்த்த தினத்தில் இருந்து நினைத்துப் பார்த்தான். அவன் மனதில் விரும்பின பெண்ணைத் திருமணம் செய்து கொண்டோம் என்ற சந்தோஷமும், இனி அவளோடு நல்லபடியாக வாழ்ந்து, தங்கள் காதலை மற்றவர்களுக்குக் காட்டவேண்டும் என்ற உறுதியும் பிறந்தது.

அர்ஜுன், மீராவின் நெற்றியில் இதழ் ஒற்றி, "நான் போய்க் குளிச்சிட்டு வரேன்..." என்று செல்ல... மீரா எழுந்து அவள் தலை அலங்காரத்தைக் கலைத்தாள். அதற்கே ரொம்ப நேரமாகிவிட்டது. பின் தன் நகைகள் எல்லாம் கழட்டிப் பத்திரமாக வைத்தாள். அர்ஜுன் குளியல் அறையில் இருந்து வெளியில் வந்ததும், மீரா உள்ளே சென்றாள்.

மீரா குளித்து முடித்து உடை மாற்றும் அறையிலேயே நின்று தலை வாரி, லேசாக ஒப்பனை செய்து கொண்டு வந்து பார்க்க... அர்ஜுன் கட்டிலில் படுத்து அசந்து தூங்கிக் கொண்டிருந்தான். மீராவிற்கு அர்ஜுன் தன்னிடம், 'நீ முதல் ராத்திரி அன்னைக்கு மடிசார் கட்டிப்பியா...? புடவை கட்டிப்பியா...? இல்லை நைட் டிரஸ் போட்டுப்பியா...?' என்று கேட்டதுதான் ஞாபகத்திற்கு வந்தது.

'என்னெல்லாம் பேசிட்டு கடைசியில நல்லாத் தூங்கிறதைப் பாரு...' என்று மனதிற்குள் திட்டினாள். இந்த நாளுக்காக அவன் எவ்வளவு ஆவலாகக் காத்திருந்தான் என்று அவளுக்குத் தெரியும். 'ரொம்ப அலுப்பு, அது தான் தூங்குறாங்க...' என்று நினைத்தவள், அர்ஜுனின் தூக்கத்தைக் கலைக்காமல் கவனமாகச் சென்று, அவன் அருகில் படுத்துக் கொண்டாள். சிறிது நேரத்தில் அவளும் தூங்கிவிட்டாள்.

அர்ஜுன் குளிர் எடுத்ததால் தூக்கத்தில் இருந்து விழித்தான். முதலில் அவனுக்கு இது எந்த இடம் என்றே புரியவில்லை. சுற்றிப் பார்க்க, விடிவிளக்கின் ஒளியில், மீரா அருகில் தூங்குவதைப் பார்த்தான். 'ச்சே...! நேத்து மீராவுக்காக வெயிட் பண்ணும்போது, அப்படியே தூங்கிட்டோம் போல... மீரா என்னைப் பத்தி என்ன நினைச்சிருப்பா...?' என்று நொந்தவன், மீராவைப் பார்க்க... அவள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள்.

அர்ஜுன் நேரம் என்ன என்று தன் செல்லை எடுத்துப் பார்க்க, மணி அதிகாலை நான்கு. எழுந்து சென்று முகம் கழுவி வந்தவன், 'மீராவை எழுப்புவோமா, வேண்டாமா...?' என்று மனதிற்குள் பட்டிமன்றம் நடத்த... கடைசியில் ஆசைதான் வென்றது.

மெதுவாக மீராவின் அருகே சென்று நெருங்கிப் படுத்தவன், அவளைச் சிறிது நேரம் ரசித்தான். மீரா, அன்று அர்ஜுன் வாங்கிக் கொடுத்திருந்த ஸ்லீவ்லெஸ் நைட்டி அணிந்து இருந்தாள். கழுத்தில் அவன் கட்டிய

மஞ்சள் தாலியும், அவன் போட்டு விட்ட செயினும் மட்டும் இருந்தது.

அர்ஜுன் மெதுவாக மருதாணி போட்டிருந்த அவள் கைகளை வருடியவன், அவள் நெற்றியில் அழுத்தமாக முத்தம் வைத்தான். பின் அடுத்த முத்தம் மீராவின் கண்களில் பதித்தவன், அடுத்து அவள் கன்னத்திற்குத் தாவ... மீராவின் கருவிழிகள் உருண்டன. ஆனால், அவள் கண்களைத் திறக்கவில்லை.

மீரா எழுந்துவிட்டாள் என்பதை உணர்ந்த அர்ஜுன், அவளை அணைத்து அவள் இதழ்களைச் சிறை செய்ய... மீரா அப்போதும் கண் மூடியே படுத்து இருந்தாள். அர்ஜுன் நிமிர்ந்து அவள் முகத்தைப் பார்த்தவன், அவள் முகத்தில் வந்து விழுந்த முடியை ஒதுக்கிக் கொண்டே "இந்தப் பொண்ணு தூங்கும் போது, என்ன வேணா பண்ணலாம் போலிருக்கே... ஒண்ணும் தெரியாது போல... என்ஜாய் அர்ஜுன்..." என்று சொல்லிக் கொண்டே மீராவின் உடையில் கை வைக்க... மீரா, அவனின் கையைத் தட்டிவிட்டவள், எழுந்து அமர்ந்தாள்.

"ஏன்டி, புருஷன் கடமையை மறந்து தூங்குறான், அவனை எழுப்பி விடுவோம்னு இல்லாம... நல்லதாப் போச்சுன்னு படுத்துத் தூங்குற... உன்னை என்ன பண்றது...?"

"நீங்க உங்க வேலையைச் சரியாப் பண்ணாம தூங்கினா... அதுக்கு நானா பொறுப்பு...?" மீரா,

அர்ஜுனைச் சீண்ட... அதற்குமேல் அர்ஜுன் சும்மா இருப்பானா...? அவன் மீராவின் மேல் பாய... அவர்கள் இல்லறம் நல்லபடியாகத் துவங்கியது.

மூன்று வருடங்கள் கழித்து....

"டேய் ராஜு, ரிஷி... எங்கடா இருக்கீங்க...? ஒழுங்கா வந்து சாப்பிடுங்க... ஏன்டா இப்படி என்னை ஓட விடுறீங்க...? உங்க அப்பனை மாதிரி ஒரு பிள்ளை பிறந்தாலே தாங்க முடியாது. இதுல உங்க அம்மா... உங்க ரெண்டு பேரைப் பெத்துட்டு, உங்க அப்பாவோட போய்க் கடையை நிமிர்த்தப் போயிடுறா... உங்களோட நான் இப்படி ஓட வேண்டியதா இருக்கே..." என வித்யா புலம்ப...

அவர் குரலைக் கேட்டு வந்த ரஞ்சனா, "கொடுங்க அத்தை, நான் சாப்பாடு கொடுக்கிறேன்..." என்றவள், "ராஜு, ரிஷி... ஒழுங்கா வந்து சாப்பிட்டா... பெரியம்மா இன்னைக்கு உங்களைக் கேம்ஸ் விளையாட மால் கூட்டிட்டுப் போவேன்..." என்றதும், ஒரே மாதிரி இருந்த இரு ஆண் குழந்தைகள் ஓடி வந்தது.

ரஞ்சனா அவர்களுக்கு உணவூட்ட... ஒழுங்காகச் சாப்பிட்டவர்கள், "பெரியம்மா... தம்பிப் பாப்பா எப்ப வரும்...?" என்று கேட்டுக் கொண்டே மேடிட்டிருந்த அவள் வயிற்றை வருட...

ரஞ்சனா சிரித்தவள், "உங்களுக்கு எப்ப பாரு இதே கேள்விதானாடா...? வரும், சீக்கிரம் வந்து உங்களோட

விளையாடும்..." என்று சொல்ல... அப்போது அர்ஜுனும், மீராவும் உள்ளே நுழைந்தனர்.

அவர்களைப் பார்த்ததும் ராஜுவும், ரிஷியும் அவர்களிடம் ஓட... மீரா அவர்களிடம், "ஒழுங்காச் சாப்பிட்டீங்களா... இல்ல, இன்னைக்கும் பாட்டியை ஓட வச்சீங்களா...?" என்று கேட்க...

"நாங்க சமத்தா சாப்பிட்டோம்மா..." என்று இருவரும் ஒரே குரலில் சொல்ல... அதைக் கேட்ட வித்யாவும், ரஞ்சனாவும் சிரித்தனர்.

சூர்யாவும், ஆருவும் அவர்கள் பெண் ஸ்ரீயுடன் வந்திருந்தனர். அன்று இரவு எல்லோரும் சேர்ந்து உணவு அருந்தும் போது, "என்னைத்தான் ரெண்டு பேரும் ஓட வைப்பானுங்க. ஆனா... அதே அவங்க பெரியம்மா சொன்னா மட்டும் கேட்பானுங்க..." என்றார் வித்யா பெருமையாக.

அதற்கு அர்ஜுன், "மீரா, அவங்க ரெண்டு பேர் கிட்டேயும், பெரியம்மா வயித்துக்குள்ள பாப்பா இருக்கு, அதனால அவங்களை ஓட வைக்கவோ, கத்த வைக்கவோ கூடாது. அப்பத்தான் பாப்பா வெளியே வந்ததும், உங்களோட விளையாடும். இல்லைன்னா... இவங்க கெட்ட பசங்கன்னு உங்களோட சேராதுன்னு சொல்லி வச்சிருக்காம்மா... அதனாலதான்..." என்றான்.

அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த ஐஷு, "பாட்டி, பேசாம நீங்களும் உங்க வயித்துக் குள்ள பாப்பா இருக்குன்னு சொல்லிடுங்க, இவங்க

உங்ககிட்டேயும் சேட்டை பண்ண மாட்டங்க...” என்று அறிவாக யோசனை சொல்ல... அதைக் கேட்ட அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர். சூர்யா இருந்ததால் வித்யா எழுந்து உள்ளே ஓடி விட்டார்.

ரஞ்சனா சிரிக்க முடியாமல் சிரிப்பதைப் பார்த்த ஆதி, “ரஞ்சு, போதும் நிறுத்து. நீ சிரிக்கிறதைப் பார்த்தா இன்னைக்கே குழந்தை பிறந்திடும் போல இருக்கு...” என்றான்.

அன்று இரவு அர்ஜுன் அவர்கள் அறையில் கட்டிலில் படுத்திருக்க... அப்போது வேகமாக ஓடி வந்த ராஜுவும், ரிஷியும் அவன் வயிற்றில் உட்கார்ந்து குதிக்க... அர்ஜுன், “அம்மா...” என்று அலறியவன், “டேய் பசங்களா... அந்த இடத்திலேதான்டா கிட்னி இருக்கு... அதைச் சட்னி ஆக்கிடாதீங்கடா...” என்றவன், “இப்ப உங்களுக்கு என்னடா வேண்டும்...?” என்று கேட்க...

“எங்களை நாளைக்கு வெளிய கூட்டிட்டுப் போங்க...” என்று ராஜுவும், ரிஷியும் சேர்ந்து சொல்ல...

“வெளியேதானே... கூட்டிட்டுப் போறேன். அதுக்கு ஏன்டா இந்தக் குதி குதிக்கிறீங்க? இப்படி உங்க அம்மா வயித்தில குதிச்சிடாதீங்க.... அவளுக்குப் போட்ட தையல் பிரிஞ்சிடும். என் பொண்டாட்டி பாவம்...” அர்ஜுன் சோகமாகச் சொல்ல...

“நீங்க கூட்டிட்டுப் போனா குதிக்க மாட்டோம், இல்லைன்னா அம்மா வயித்துல குதிச்சிடுவோம்...” என்று இருவரும் மிரட்ட...

“எல்லாம் நேரம்...” என்றவன், “சரி, போங்க... போய் உங்க ஜஷு அக்காவோட படுங்க...” என்றதும். ராஜுவும், ரிஷியும் எழுந்து கீழே அவர்கள் அறைக்குச் சென்றனர்.

அவர்கள் சென்றதும் மீரா வந்து அர்ஜுனின் அருகே அமர... அர்ஜுன், அவளை இழுத்துத் தன் மடியில் போட்டுக் கொண்டவன். “ஏன்டி, அமைதியா ஒரு பிள்ளை பெறச் சொன்னா... இப்படி ரெண்டு தீவிரவாதிகளைப் பெத்து விட்டிருக்க...?” என்று சீண்ட...

“யாரு... என் பசங்க தீவிரவாதீங்களா...? அவங்க வீரம் விளைஞ்ச மண்ணுல பொறந்தவங்க... அப்படித் தான் வீரமா இருப்பாங்க...” மீரா பெருமையாகச் சொல்ல...

அவளைப் பார்த்துச் சிரித்த அர்ஜுன், “உன் பையனுங்களை விட்டுக் கொடுக்க மாட்டியே... மீரா, எதுக்கும் பசங்ககிட்ட ஜாக்கிரதையா இருந்துக்கோ... வயித்துல குதிச்சிடப் போறாங்க...” என்று எச்சரிக்க...

“இந்தப் பயம் அன்னைக்கு இருந்திருக்கணும், விடியற்காலையில பாஞ்சா... இப்படித்தான் பிள்ளை பொறக்கும்...” என்று மீரா, அர்ஜுனை வம்பிழுக்க...

மீராவின் உதடுகளை வருடியபடி, “ம்ம்... இந்த வாய் இருக்கு பாரு... வாய். அர்ஜுன் அவுட்னு கத்தி என்னைத் திரும்பிப் பார்க்க வச்சது... அன்னைக்கு விழுந்தவன்தான், இன்னும் எழுந்திரிக்கலை...” என்ற

அர்ஜுன், குனிந்து மீராவின் இதழில் முத்தமிட...அவளும் அவன் கழுத்தை ஆனந்தமாகக் கட்டிக் கொண்டாள்.

அந்த வார ஞாயிற்றுக்கிழமை அர்ஜுனும், மீராவும் ராஜு, ரிஷியை அழைத்துக் கொண்டு அவர்கள் முதன் முதலில் சென்ற ரிசார்ட்டுக்குச் சென்றனர். ராஜு, ரிஷி இருவரும் பீச் மணலில் விளையாட... அர்ஜுனும், மீராவும் அவர்களை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ராஜுவும், ரிஷியும் முக ஜாடையில் அர்ஜுனைப் போல் இருந்தாலும், நிறத்தில் மீராவைப் போல்... நல்ல வெள்ளையாக இருந்தனர்.

சிறிது நேரம் விளையாடிக் களைத்தவர்கள் எழுந்து வந்து... ராஜு, அர்ஜுனின் மடியிலும்... ரிஷி, மீராவின் மடியிலும் அமர... பெற்றவர்கள் இருவரும் தங்கள் பிள்ளைகளைச் சிறிது நேரம் கட்டிக் கொண்டு கொஞ்சினர்.

மீரா முதன் முதலில் அவளும், அர்ஜுனும் இந்த இடத்திற்கு வந்த போது... அவள் மடியில் வந்து அமர்ந்த குழந்தையை நினைத்துப் பார்த்தாள். அன்று தனக்கும், அர்ஜுனுக்கும் இப்படி ஒரு குழந்தை கிடைக்குமா என்று நினைத்தோமே... இன்று கடவுள் தங்களுக்கு என்று இரண்டு குழந்தைகளைக் கொடுத்திருப்பதை நினைத்து மகிழ்ந்தாள்.

அர்ஜுனுக்கு அவள் என்ன நினைக்கிறாள் என்று தெரியும் என்பதால்... அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

மீரா, அர்ஜுனைக் காதலாகப் பார்த்தாள். 'இதெல் லாம் இவனால் அல்லவா...? அவன் தனக்காக என்ன வெல்லாம் செய்தான்...? அவன் அம்மாவோடு போராடி, தன்னைக் கைப்பிடித்து, பின் தான் கர்ப்பம் அடைந்த போது... அவள் அம்மா அருகில் இல்லாத குறை தெரியாமல்... தன்னைத் தாங்கி, இரு குழந்தைகளைப் பெற்றபோது... அவளையும், குழந்தைகளையும் கண்ணைப் போல் பார்த்துக் கொண்டானே... இவன் கிடைக்கத் தான் என்ன தவம் செய்தோமோ...?' என்று நினைத்தவள், அதை அப்படியே அர்ஜுனிடம் சொல்ல...

"நான் சொல்ல வேண்டியதை நீ சொல்ற... நீ கிடைக்க நான்தான் மீரா கொடுத்து வைத்திருக்கணும்..." என்ற அர்ஜுன், மீராவின் நெற்றியில் லேசாக முட்டி னான்.

காதலிப்பதும் காதலிக்கப்படுவதும் ஒரு வரம்தான். ஒருவர் மீது ஒருவர் உயிரே வைத்திருக்கும் அந்தக் காதலர்களை இன்று போல் என்றும் வாழ வாழ்த்து வோம்.

உனக்குள் நான் உயிரே!

ரம்யா ராஜன்